
தமிழிலக்கியத்தில் மனிதநேயம்



பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
முனைவர் சு. நிர்மலா தேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழிலக்கியத்தில் மனிதநேயம்

(வெள்ளிக் கருத்தரங்கக் கட்டுரைகள்)

பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி

முனைவர் சூ. நிர்மலா தேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை,

மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்,

தரமணி, சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Tamizhilakkiyatthil Manithaneyam**
Editors	:	Dr. S. Krishnamoorthy Director International Institute of Tamil Studies C.I.T. Campus, Chennai 600 113 Dr. S. Nirmala Devi, Research Assistant International Institute of Tamil Studies C.I.T. Campus, Chennai 600 113
Publisher	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Taramani, Chennai 600 113 Ph: 22542992
Publication No.	:	532
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	*2005,*
Paper used	:	18.6 kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 points
No. of Pages	:	xii + 388
No. of Copies	:	1000
Price	:	Rs.115/- (Rupees One Hundred and Fifteen Only)
Printing	:	Sri Venkateswara Offset 36/19, New Street Chennai - 600 006
Subject	:	Humanisam in Tamil Literature

பதிப்புரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தேசியக் கருத்தரங்குகள், திங்கள் கருத்தரங்குகள், பயிலரங்குகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், ஆய்வாளர் கருத்துரையரங்கங்கள் போன்றவற்றைத் தொடர்ந்து நடத்தித் தமிழ்ப் பணியாற்றி வருகின்றது. இவற்றின் விளைவாகவும் மற்றும் பல்வேறு வழிகளிலும் ஆய்வு நடத்திப் பல நூல்களை வெளியிட்டு வருவதைத் தமிழுலகம் நன்கறியும். இம்முயற்சிகளைத் தொடர்ந்து வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 3 மணி அளவில் நிறுவன ஆராய்ச்சி அலுவலர்கள், முழுநேர ஆய்வு மாணவர்கள், பகுதிநேர ஆய்வு மாணவர்கள் ஆகியோர் கூடியிருந்து ஆய்வு செய்யும் பொருட்டு ஆய்வுக் கருத்தரங்கினை நடத்த முடிவு செய்யப்பெற்றது. இத்தொடர் கருத்தரங்கத்துக்குத் "தமிழ் இலக்கியத்தில் மனிதநேயம்" என்பது பொருண்மையாகத் தெரிவு செய்யப் பெற்றது. இப்பொதுப் பொருண்மையின் கீழ் 2003 ஆம் ஆண்டு (ஜனவரி 3 முதல் டிசம்பர் 26 வரை) நடத்தப்பெற்ற ஓராண்டுக்கான கருத்தரங்கக் கட்டுரைகள் தொகுக்கப் பெற்று நூலாக வெளியிடப் பெறுகின்றன.

'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' என்றும், 'செல்வத்துப் பயனே ஈதல்' என்றும் 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்றும் ஏட்டிலே எழுதி வைத்ததோடு, அன்றாட வாழ்விலும் அவற்றை இயல்பாகக் கடைப்பிடித்த நல்லவர்களை இலக்கிய வரலாறு எடுத்துக்காட்டுகிறது. முன்னோர்கள்

நிகழ்த்திய இத்தகு மனிதநேயப் பெரு வாழ்வு, 'நிழலில் நீளிடைத் தனிமரம் போன்றும்', 'பாலைவனத்துப் பசுஞ்சோலை போன்றும்' மனத்துக்கு இதமளிப்பதாக இருக்கிறது. இன்று மனிதநேயப் பேருணர்வே மனித சமுதாயத்திலிருந்து குடியோடிப் போய்விட்டதோ என்று எண்ணி வேதனைப்படும் அளவுக்கு மனிதர்கள் கல்நெஞ்சக் கடுஞ்செயல்களில் ஈடுபடும் போக்கு மிகுந்து வருகிறது. இத்தகு சூழலை மாற்றும் அருமருந்தாகத் திகழும் மனிதநேய உணர்வை அடிப்படையாகக் கொண்ட கட்டுரைகள் இந்நூலுள் இடம்பெற்றுள்ளன.

இந்நூலுள் 34 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அனைத்துக் கட்டுரைகளும் 'மனித நேயம்' என்ற நூலுள் கோக்கப்பட்ட 34 மணிகளாகத் திகழ்கின்றன. இலக்கியம் கண்டதற்கு இலக்கணமாய் அமைந்த தொல்காப்பியத்தில் காட்டப்பட்டுள்ள மனிதநேயம் முதல் இன்றைய அறிவியல் தமிழில் அடங்கும் கணினித்தமிழில் மனிதநேயம் என்பது வரையிலான கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன. கால வரிசைப்படி கட்டுரைகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழிலக்கியத்தில் மனிதநேயம், மனிதநேயக் கோட்பாடுகள் குறித்து 2 கட்டுரைகளும், சங்க இலக்கியத்தில் மனிதநேயம் குறித்து 5 கட்டுரைகளும், திருக்குறள் (1) திருமந்திரம் (1) சிலப்பதிகாரம் (1) கம்பராமாயணம் (1) ஆகியவற்றில் அடங்கியுள்ள மனித நேயம் குறித்து 4 கட்டுரைகளும், பாரதி படைப்புகளில் மனிதநேயம் குறித்து 2 கட்டுரைகளும், நாமக்கல் கவிஞர் (1) கவிக்கோ அப்துல் ரகுமான் (1) கவிதைகளில் மனிதநேயம் குறித்து 2 கட்டுரைகளும், இயேசு மாகாவியம் (1) அண்ணல் நபி வரலாறு (1) என்ற நூல்களிலுள்ள மனிதநேயம் குறித்து (2) கட்டுரைகளும், நாவல் இலக்கியம் குறித்து 8 கட்டுரைகளும், சிறுகதை பற்றி 6 கட்டுரைகளும் என ஆக மொத்தம் 34 கட்டுரைகள் இந்நூலுள் அடங்கியுள்ளன.

போட்டிகளும் பொறாமைகளும் நிறைந்த இன்றைய உலகில் மனிதநேயம் பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. மனிதநேயமின்றி மனிதவாழ்வு சிறக்காது எனும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வகையில் மனித இனத்தின் இரத்த உறவு, மண உறவுகளிலிருந்து மனித உணர்வுகளான அன்பு, பாசம், இரக்கம், கருணை, விட்டுக்கொடுக்கும் தன்மை போன்ற நற்பண்புகளிலிருந்து முகிழ்த்து, எவ்விதத் தொடர்பும், உறவும் அற்ற மற்றொரு மனிதனை மதித்துச் செலுத்தும் அன்பில் தொடர்ந்து, மனித இனம் கடந்து பிற உயிரினங்கள் மீதும் படர்ந்து, அன்பெனும் குழவி ஈன்ற அருளாகப் பெருகி நிற்பது மனிதநேயம் என்பதைக் கட்டுரைகள் விளக்கி நிற்கின்றன. சங்ககாலம் முதல் இக்காலம் வரை மனித மனத்தில் ஊற்றுக்கண்ணாய் ஊறித் திளைத்திருக்கும் மனித நேய உணர்வால்தான் இன்றைய உலகம் இன்னும் உயிர்ப்போடு இயங்கி வருகிறது என்பதை இலக்கியச் சான்றுகள் வழிக் கட்டுரைகள் புலப்படுத்தி நிற்கின்றன.

இந்நூல் இலக்கிய உணர்வுகள் குறித்து ஆராய்வோருக்கு ஒரு கலங்கரை விளக்கமாகவும், மனிதநேயம் குறித்து ஆராயும் சமூகவியலாருக்கு வழிகாட்டும் நற்றுணையாகவும் தமிழரின் மரபுகள், மாண்புகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், கலை, பண்பாடு, அரசியல் மாற்றங்கள் ஆகியவற்றைக் குறித்த சிந்தனையாளர்களுக்கு நல்விருந்தாகவும் சிறந்துள்ளது.

இந்நூல் மனிதநேயம் குறித்த ஆய்வியல் சிந்தனைகளின் ஒரு தொடக்கமே ஆகும். மனித குலம் வேரோடிருக்கும் வரை இச்சிந்தனை பற்றிப் படர்ந்து செழித்துச் சிறக்கும் என்பதில் ஐயமில்லை. கனன்று கொண்டிருக்கும் தீவிரவாதத்தை அவிக்கும் குளிர்நீராகவும், படமெடுத்தாடும் பிரிவினை வாதப் பாம்பை அடக்கும் மகுடியாகவும் மனிதநேயம் அமைந்துள்ளது. மனித குல ஆக்கங்கள் பலவற்றுக்கு ஆணிவேராக அமையும் மனித நேய

உணர்வு பற்றிப் பேசுவதால் மனித மனத்துக்குள் இருக்கும் மனிதநேய உணர்வைத் தட்டி எழுப்ப முனைவதே இந்நூலாக்கத்தின் நோக்கம். இந்நன்னோக்கம் வெற்றிபெறத் தமிழுலகம் பேராதரவு நல்க வேண்டும் என விரும்புகிறேன்.

தொடர்ந்து நடைபெற்று வந்த வெள்ளிக்கிழமைக் கருத்தரங்குகளுக்குத் தவறாமல் உரிய நேரத்தில் கட்டுரைகளை வழங்கி இந்நிகழ்வை ஊக்குவித்த பேராசிரியர்கள், முழுநேர, பகுதி நேர மாணவர்கள் ஆகியோர்க்கு நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கத்திற்கு அமைப்பாளராகப் பொறுப்பேற்றுத் தொடர்ந்து இக்கருத்தரங்குகள் நடைபெறவும், கருத்தரங்கக் கட்டுரைகள் நூலாக்கம் பெறவும் முனைந்து செயல்பட்ட **முனைவர் சூ. நிர்மலாதேவி** அவர்களுக்கு நன்றியும் பாராட்டுதல்களும் உரியன.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறோம்.

இந்நூலுக்கு ஒளிஅச்சுக்கோப்புச் செய்த திருமதி இரா. வெண்ணிலாவிற்கும், அழகுற அச்சிட்டுத்தந்த ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆப்செட் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

மனிதநேயக் கோட்பாடும் தமிழிலக்கியத்தில் இதன் தாக்கமும்

முனைவர் மு. வளர்மதி
ஆராய்ச்சி உதவியாளர்

மனித மனத்தில் தோன்றுவது மனிதநேயம். விலங்கினங்களிலிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டும் வகையில், 'மக்கள் தாமே ஆறு அறிவுயிரே' (நூ.பா. 9:33) எனத் தொல்காப்பியர் சிறப்பித்துக் கூறுகிறார். 'மன அறிவுடைய மனிதர்கள் ஆறு அறிவுடையவர்'[1] எனும் இக்கருத்தில் மனம் என்பது மையமாக உள்ளது. மனம், நெஞ்சம், உள்ளம், சிந்தை, சித்தம், அகம், இதயம் போன்ற பல சொற்கள் தமிழில் வழங்கப்படுகின்றன.

'மனம் என்ற சொல்லின் அடியாகவே மனிதன் என்ற சொல்லும் தோன்றியிருக்க வேண்டும். மனத்தை உடையவன் 'மனத்தன்' என்றிருந்து பின்பு மனிதன் என்றாகியிருக்கலாம். அதுவே முதல் நீண்டு மானிடன் என்றும் ஆகியிருத்தல் வேண்டும்'[2] என்று குறிப்பிடப்படுகிறது. மனித மனத்துக்கு உரிய பண்புகள் இல்லையெனில் உருவத்தில் மட்டும் மனிதனாகவும், உள்ளத்தில் விலங்கினப் பண்புக்குரியவனாகவும் மதிப்பீடு செய்யப்படுகின்றான்.

'மனிதன் என்னும் சொல் முதன் முதலாகப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான 'இனியவை நாற்பதில்' தான் இடம் பெற்றுள்ளது;

> நில்லாத காட்சி நிறையில் மனிதரைப்
> புல்லா விடுதல் இனிது (இனியவை நாற்பது. 26)

'மானிடன்' என்னும் மற்றோர் சொல்லும் மனிதனைச் சுட்டுவதற்கு வழங்கப்பட்டு வருகிறது. அச்சொல்லும் சங்கநூல்களில் வழங்கப் பெறவில்லை.

> மக்கள் காணீர்! மானிட யாக்கையர் (சிலப்பதிகாரம். 10:225)

என்று சிலப்பதிகாரத்திலேயே அது முதன் முதலாகக் காணப்படுகிறது"[3]

மனிதமனம் நல்ல தன்மைகள், தீய தன்மைகள் என இருவகையான பண்புகளைக் கொண்டது. அன்பு, பாசம், கருணை,

தியாகம் உள்ளிட்ட மனித மனத்தில் பொதிந்துள்ள நல்ல பண்புகள் யாவும் பிறரிடம், பிற உயிர்களிடம் வெளிப்படுத்தப்படும் பொழுது அது நேயமாக அமைகிறது. "மனிதநேயம் என்பது மனத்தின் தன்மையைக் குறிப்பதாகும். அது மனிதனுக்கும் அவனுடைய நடவடிக்கைகள், செயல்திறன், பேரார்வம், நலன்கள் ஆகியவற்றுக்கும் முதன்மை முக்கியத்துவம் அளிப்பதாகும்"[4] தனிமனித நல்வாழ்விற்கு உறுதுணையாக உள்ள இந்த மனிதநேயக் கருத்துகள் காலந்தோறும் வளர்ச்சி பெற்று வந்துள்ளன. தனிமனிதப் பண்புகளையும், நலன்களையும், இருப்பையும் அடிப்படையாகக் கொண்ட இந்த மனிதநேயப் பண்புகள் அகவயக் கோட்பாடாக (subjective theory) அமைகிறது.

ஒரு மனிதன் என்பவன் இப்படி இருக்க வேண்டும், கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறி இப்படி இருக்க வேண்டும் என ஒவ்வொரு மனிதனும் தத்தம் மனத்திற்குள் வகுத்துக் கொண்டு வாழும் பொழுது, அது காலங்காலமாக இருந்து வருகின்ற நிலையில் அது ஒரு கோட்பாடாக உருவாகிறது. இந்த அடிப்படையில் தனிமனித மனத்துக்குள் நிலவி வருகின்ற பண்புக் கூறுகள் அகவயக் கோட்பாடாக அமைகிறது.

ஆதி பொதுமைச் சமுதாய வாழ்க்கை முறை மறைந்து, தனிஉடைமை, அரசு, அதிகாரம், அடிமைவாழ்வு, ஏற்றத்தாழ்வுகள் நிலவிய ஒரு சமுதாயத்தில் மனிதர்கள் வாழவேண்டிய ஒரு காலகட்டம் உருவாகியது. பசி, வறுமை, நோய், பொய், சூது, களவு, ஊழல், ஊதாரித்தனங்கள் எனச் சுற்றி எரியும் பெரு நெருப்புக்கிடையே மனிதர்கள் போராடி வாழ வேண்டிய நெருக்கடி உருவானது.

தனிமனித உரிமைகளும், நலன்களும் நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட பொழுது உலகில் பல நாடுகளில் இதைப்பற்றிய சிந்தனைகள் எழுந்ததால் மனிதநேயம் சமூகம் தழுவிய ஒரு கோட்பாடாக உருவாகியுள்ளது. இதற்குப் பல வரலாற்று நிகழ்வுகள் காரணமாக அமைந்துள்ளன. ஒட்டுமொத்த மனித சமூகத்தின் நலன்களைப் பேணுமாறு மனித இனத்தை முன்னிறுத்தும் சிந்தனைகள் எழுந்துள்ளன. "மனிதநேயம் என்பது மனிதவாழ்வின் மாண்புகளை உணரவும் மனித வாழ்வின் இன்பங்களை நுகரவும் முடியாத வண்ணம் தடுக்கப்பட்டு, இழிவுக்கும் பழிக்கும் ஆளாக்கப்பட்டுக் கிடந்த மனிதனை மீட்டெடுக்கவும், மாண்புறச் செய்யவும் வந்த உயரிய கோட்பாடாகும்"[5]

வலிமை மிக்கவர்களுக்குத்தான் இந்த உலகம் சொந்தமானது என்ற நிலை உருவானபோது, ஏழை எளியவர்களும் வாழத்தகுந்த உலகம் ஒன்று வேண்டுமென்ற ஏக்கமும், போராட்டமும் துவங்கிவிட்டது. இதற்கு முதல் அடி எடுத்து வைத்தவர் 'ஸ்பார்டக்கஸ்' (Spartacus கி. மு. 71) என்ற மல்யுத்தம் செய்யும் ஒரு அடிமை, ரோமானியர் இவரை கைது செய்து அடிமைகளுக்குள் சண்டையிட வைத்து, அதை வேடிக்கை பார்த்து இரசித்த ரோமானிய ஆட்சியாளர்களுக்கு, பிரபுக்களுக்கு, அரசுக்கு எதிராக அதே சிறை அடிமைகளை ஒன்று திரட்டி ஆட்சியாளர்களை வென்று தென் இத்தாலியப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்ட நிகழ்ச்சி மனிதகுல வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அதிகாரமற்ற எளியவர்கள் ஒன்று திரண்டால் வலியவர்கள் ஆகலாம் என்ற சிந்தனை மேலோங்கியது.

தனிமனிதனின் அகவயமாக விளங்கிய மனிதநேயம் சமுதாய அளவில் பொதுமையாக்கப்பட வேண்டும் என்ற போக்கு உருவாகி வளர்ந்து வந்தது. ஏனெனில் தனிமனிதன் ஏதாவதொரு குறிப்பிட்ட இனம், நாடு, மொழி, சமுதாயம் எனச் சார்ந்து வாழ்கிறான். இவை சிந்தனை, செயல்பாடுகளில் ஒன்றுக்கொன்று நேரடியாகத் தொடர்பானவையாகும். ஒட்டுமொத்தச் சமுதாய நலன் எனும் நோக்கில் பொதுமை, சமத்துவம் எனும் அடிப்படையில் மானுடத்துவம் (Humanitarianism)* எனும் கோட்பாடு உருவாகியது. இதில் குறிப்பிடப்படும் தன்மைகள் புறவயக் கோட்பாடாக (Objective theory) அமைகின்றது. மனிதநேயவாதிகளின், கொள்கைகளையும், நடைமுறைகளையும் கொண்டு 'மானுடத்துவம்' எனும் கோட்பாடு விளக்கப்பட்டுள்ளது.

"மானுடத்துவக் கொள்கைகள் அல்லது நடைமுறைகள்

1. மனிதனின் செயல்பாடுகள் அனைத்தும் மனித இனத்தின் நலத்தைப் பொறுத்தது என்ற கோட்பாடாகும்.

---

* Humanitarianism

Humanitarian Principles or practices

a. The doctrine that man's obligations are concerned wholly with welfare of the human race.

b. The doctrine that mankind may become perfect without divine aid.

c. Theol, the doctrine that Jesus Christ possessed a human nature only

\- The Random House Dictionary of the English language Random House, Newyork, 1967, p. 691.

2. தெய்வீகத்தின் துணையின்றி மனித இனம் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ள முடியும் என்ற கோட்பாடாகும்.

3. இறையியலில், ஏசு கிறிஸ்துவை மனிதப் பண்பாளராக மட்டுமே கருதுவது என்ற கோட்பாடாகும்"[6]

இத்தகைய ஒரு கோட்பாடு தோன்றுவதற்கு அடிப்படையான வரலாற்று நிகழ்வுகளையும், அதையொட்டிய விளைவுகளையும் இனிக் காணலாம். பிரெஞ்சுப்புரட்சி, தொழிற்புரட்சி, இருத்தலியல் சிந்தனை, மார்க்சியம் ஆகியன மானுடத்துவம் எனும் மனித சமுதாய அளவிலான கோட்பாடு உருவாகக் காரணமாக இருந்தன.

பிரெஞ்சுப்புரட்சி

1789-1799 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி உலக நாடுகளிடையே மிகப் பெரும் விழிப்புணர்வை உருவாக்கியது. தன்னெழுச்சியாக மக்கள் அநீதிகளுக்கு எதிராக நடத்திய இம்மாபெரும் புரட்சியால் பாஸ்டில் சிறைக்கதவுகளும், மன்னர்களின் அரண்மனைகளும் அரியணைகளும் அவர்களின் ஏகபோகச் சொத்துகளும் உரிமைகளும் நொறுங்கின; மத பீடங்களும் மதபோதகர்களின் ஆட்சி அதிகாரங்களும் சரிந்து வீழ்ந்தன; சமுதாயத்தில் வலிமையற்ற, அதிகாரமற்ற, உடைமையற்ற, பலவீனமான எளிய மனிதனும் அரண்மனையில் வாழும் பிரபுக்களைப் போல அவனும் மனிதன்தான்; உழைக்கும் மனிதன், உற்பத்தி செய்யும் மனிதன் சமுதாயத்திற்குத் தேவையானவன்; அவன் மையமானவன் என்ற சிந்தனை இந்த உலகை உலுக்கியது.

தொழிற்புரட்சி

பிரெஞ்சுப் புரட்சியின் தொடர்ச்சியாக 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்தில் பலவிதமான இயந்திரங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. அதனால் ஏற்பட்ட விரைவான தொழில், வணிக வளர்ச்சி, 'தொழிற்புரட்சி' என்ற ஒரு வரலாற்றை உருவாக்கியது. "யந்திரங்கள் மூலம் இயற்கையின் பிரம்மாண்டத்தைக் கட்டி அடக்கி விடலாம் என்ற நம்பிக்கை மனிதனுக்கு ஏற்பட்டது. இயற்கையைத் தனக்கு ஊழியம் செய்யும் ஒரு சக்தியாக மனிதன் எண்ண ஆரம்பித்தான். மனிதனே பூமியின் மையம் என்ற எண்ணம் வலுப்பட்டது. மனித வாழ்க்கையைப் பூரணமாக மனிதனே தீர்மானிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. மனித சக்தி மீது மனிதனுக்கு ஏற்பட்ட முடிவற்ற நம்பிக்கையே தொழிற் புரட்சியின் விளைவு என்று சுருக்கமாகக் கூறலாம்"[7] நம்பிக்கை மிகுந்த இந்த விளைவுகளுக்கு

எதிராக ஏற்பட்ட பின்விளைவுகள் மனிதனுடைய இருப்பைப் பற்றியும் அவனுடைய உணர்வுகள் குறித்தும் கேள்விகளை எழுப்பின.

தொழிற்புரட்சியின் பின் விளைவு

தொழிற்புரட்சி மக்களின் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்தது. கலை, இலக்கியம், கலாச்சாரம், சிந்தனை ஆகிய அனைத்தையும் இது தீவிரமாகப் பாதித்தது. தொழிற்புரட்சி நடைபெற்ற நாடுகளில் அது ஏற்கனவே இருந்த சமூகக் கட்டுமானங்களை அசைத்தது. உழைப்புக்கு மதிப்பில்லை. உழைப்பை ஒரு பொருளாக மட்டும் பார்க்கும் கொள்கை உருவானது. தொழிற்புரட்சி உழைப்பாளிகளை, ஆலைத் தொழிலாளர்களை, உயிருள்ள இயந்திரங்களாகக் கருதித் தொழிற்சாலைகளில் குவித்தது. முன்பு மன்னர்களுக்கும், மதகுருமார்களுக்கும் அடிமைகளாக இருந்தவர்கள் இப்பொழுது இயந்திரங்களின் அடிமைகளாக, முதலாளிகளின் அடிமைகளாக மாறி உழைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் விளைவாக உழைக்கும் வர்க்கத்தின் உழைப்பு அங்கீகரிக்கப்படவில்லை. தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களி லிருந்தும் அந்நியப்பட்டனர். இதையே காரல்மார்க்ஸ் 'அந்நியமாதல்' என விரிவாக ஆராய்ந்துள்ளார். "தொழிலாளியின் உழைப்பு அற்புதமான பொருள்களைப் படைக்கிறது; ஆனால் அது தொழிலாளியின் வறுமையையும் உற்பத்தி செய்கிறது. அது அரண்மனைகளைப் படைக்கிறது; ஆனால் தொழிலாளிகளுக்குச் சேரிகளை உற்பத்தி செய்கிறது. அது அழகைப் படைக்கிறது; ஆனால் தொழிலாளர்களையே இயந்திரங்களாக மாற்றி விடுகிறது. அவன் செய்கின்ற உழைப்பு எவ்வளவு நுட்பமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவன் மூளை அழிகிறது"[8] என்றார் மார்க்ஸ். தொழிற்புரட்சியினால் தொழிலாளர் உலகம் சந்தித்த விளைவுகளைப் பற்றி மற்ற எவரையும் விட மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகிய இருவரும் மிகுதியாக அக்கறை எடுத்துக்கொண்டனர். ஏனெனில் உற்பத்தி மிகுதியால் ஏற்பட்ட வணிக வளர்ச்சியும், அதையொட்டி ஏற்பட்ட முன்னேற்றங்கள் மட்டும் மற்றவர்களால் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டன.

"தொழிற்புரட்சி மனிதனுக்கும் இயற்கைக்குமான உறவை மாற்றி அமைத்தது. மண்ணையும், இயற்கையையும் லாபம் சம்பாதிப்பதற்கான மூலப்பொருளாக மனிதன் பார்க்க ஆரம்பித்தான். இயற்கையைச் சுரண்டுவது உச்ச நிலையை அடைந்தது. இதன் விளைவாக அதுவரை மனிதனை வழிநடத்தியிருந்த பல நுட்பமான மதிப்பீடுகள் அழிந்தன. மனிதன் மேலும் மேலும் அந்நியமான போலி

வாழ்க்கையை நோக்கித் தள்ளப்பட்டான்"[9] இந்த நிலை, வலுவான புதிய முதலாளித்துவச் சமூக அமைப்பை உலகமெங்கும் உருவாக்கியது. சக மனிதர்களான தொழிலாளிகளைக் கூட லாபம் சம்பாதிப்பதற்கான பொருள்களாகவே இந்த முதலாளித்துவச் சமூகம் கருதியது.

பணவலிமை பெற்ற நாடுகள் அண்டை நாடுகளைக் கடுமையாகச் சுரண்டத் தொடங்கின. அய்ரோப்பா முழுமையும் நாடு, தேசியம், அரசு, மக்கள், சனநாயகம், வளர்ச்சி, அறிவு போன்ற பொதுமைப்படுத்தப்பட்ட கருத்தாக்கங்கள் பேசப்பட்டன. தனி மனித நலன் இருப்புப் பண்புகள் யாவும் இப்பொதுமைக் கருத்தாக்கங்களில் கரைந்து போய்க் கொண்டிருந்தன. அப்போது தோன்றிய சமூகக் கோட்பாடுகள், கொள்கைகள் யாவும் அறிவியல் அடிப்படையில் புறவயமாக, தற்சார்பற்றதாக அமைந்திருந்தன. இத்தத்துவங்களில் மனித உணர்ச்சிகள் இல்லை; மனித வாழ்க்கையின் கவலைகள் இல்லை; அறிவு மட்டுமே மையமாகக் கொள்ளப்பட்டது. இத்தகையச் சூழலில் மனித உணர்வுகளை, மனித இருப்புப் பண்புகளை மீட்டெடுக்கும் விதமாக 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மனிதநேயவாதம் தோன்றியது. இந்தச் சிந்தனை மாற்றம் உலகளாவிய மனிதாபிமானம் என்ற கருத்தை உருவாக்கியது. "உலகின் பல பகுதிகள் கண்டறியப்பட்டு அங்கெல்லாம் குடியேற்றம் நிகழ்ந்தது. அறிவு பரஸ்பரம் பகிரப்படுவது அதிகரித்தது. இதன் விளைவாக உலகம் பற்றியும் மானுட இனம் பற்றியும் அதுவரை இருந்த பல குறுகிய கருத்தோட்டங்கள் உடைந்தன. இன்று நாம் பெரிதும் பேசும் 'உலகளாவிய மனிதாபிமானம்' என்ற கருத்து வலுப்பட்டது இக்காலகட்டத்தில் தான்"[10] இந்த வரலாற்றுப் பின்னணியில் இருத்தலியம் (Existentialism) என்னும் சிந்தனைப் போக்கு தோன்றியது.

இருத்தலியம் (Existentialism)

இருத்தலியம் எனும் சிந்தனை 19ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தோன்றியுள்ளது. இதையொட்டி அய்ரோப்பாவில் பல இலக்கியப் படைப்புகள் உருவாயின. "மனிதன் கடவுள் இல்லாத நிலையில் முற்றிலும் சுதந்திரமானவனாக ஆகிவிடுகிறான். வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவனுக்கு முடிவுகளை எடுத்தாக வேண்டிய பெரும் பொறுப்பு ஏற்பட்டு விடுகிறது. இந்நிலையிலிருந்து மீள, அதாவது மகத்தான அச்சத்தை வெல்ல, மனிதன் கடவுள் தேவை என்ற முடிவுக்கு வருகிறான். இந்நிலையில் அவனுக்கு ஒரேயொரு மீளும் வழிதான் உள்ளது.

'நம்பிக்கையின் மூலம் தாண்டுதல்' (Leap of Faith) தன் முன்னால் வாய் பிளந்து நிற்கும் அதல பாதாளத்தை, கண்ணை மூடிக் கொண்டு தாண்டி விடுதல். தாண்டியவர்கள் நிம்மதி பெறுகிறார்கள். ஆனால் அது பொய்யான நிம்மதி. தத்துவத்தில் அதற்கு இடமில்லை. கிர்கேகாரின்* பாதையில் ஹூசோல், கார்ல் ஜாஸ்பேர்ஸ், மர்லிபோண்டி, மார்டின் ஹைடெக்கர் முதலியவர்கள் மனித இருப்பைப் பற்றி மேற்கொண்டு ஆராய்ந்தார்கள். இதன் விளைவாகவே இருத்தலியம் (Existentialism) என்ற புதிய தத்துவ மரபு உருவாகியது"[11]

இந்தத் தத்துவம் 'மனித இருத்தல்'* என்பதை மட்டும் பேசியதால் இந்தத் தத்துவம் குறித்த விமரிசனமும், மனிதனைப் பற்றிய புதிய சிந்தனைகளும் உருவாயின. இருத்தலியல் சிந்தனையாளர் களுக்குள் (Existentialist) இடதுசாரி, வலதுசாரி என்ற இரு அணிகள் தோன்றின. "இடதுசாரியினர் மனித இருத்தல் குறித்த சிந்தனையை முதலாளித்துவத்திற்கு எதிரான விமர்சனமாக மாற்றினர். முதலாளிய சமூகத்தின் அன்றாடத் தனத்தில் கரைந்து அந்நியமாகிக் கிடக்கும் மனிதன் அவர்களால் விமரிசிக்கப்பட்டான். இருத்தல் குறித்த பிரக்ஞை தொழில் சமூகத்தின் கருத்தியல் நிறுவனங்களுக்கு எதிரானதாக அவர்களால் பிரயோகிக்கப்பட்டது. வலதுசாரி இருத்தலியர்கள் முதலாளியம், தொழிலாளியம், விஞ்ஞானங்கள் ஆகியவற்றை விமரிசித்தனர். ஆனால் தனிமனித ஆன்மா குறித்த மதக் கொள்கையை மீட்டெடுக்கவும் செய்தனர். மதங்களின் மறுவாழ்விற்கு அவர்களது இருத்தலியம் பயன்பட்டது. இருத்தலியத் தாக்கத்தால் 'மனிதநேய மார்க்சியம்' என்ற போக்கு உருவாயிற்று"[12]

மனிதநேய மார்க்சியர்கள்

மார்க்சியவாதிகளுள் இருத்தலியத் தத்துவத் தாக்கத்தில் உருவான மனிதநேய மார்க்சியர்கள், காரல் மார்க்ஸ் 1844 இல் எழுதிய கையெழுத்துப் பிரதிகளில் வலியுறுத்திக் கூறிய 'அந்நியமாதல்'

---

* அய்ரோப்பிய அறிவுலகில் வளரத் தொடங்கிய வெறுமை வாதம் கிர்கேகார் என்ற தத்துவ ஆசிரியரின் வழியாகச் சித்தாந்த முழுமை பெற்றது. தருக்கத்தின் அடிப்படையில் கடவுளின் இருப்பை ஆராய்ந்து கடவுள் இல்லை என்ற முடிவுக்கு வருகிறார் கிர்கேகார்"

* எஸ்.வி. ராஜதுரை எழுதிய 'எக்ஸிஸ்டென்ஷலிசம்' என்ற நூலில் விரிவாகவும் தெளிவாகவும் இத்தத்துவப் போக்கின் அடிப்படைகள் கூறப்பட்டுள்ளன.

(Alienation) கருத்தை முன்நிறுத்தினர். உடைமைச் சமூகத்தில் உழைக்கும் மனிதன் தான் ஒரு படைப்பாளி,, ஓர் உற்பத்தியாளன் என்ற மனித சாராம்சத்தை இழந்து தனது உழைப்பிலிருந்தும், உற்பத்திக் கருவிகளிலிருந்தும் உற்பத்தியாகும் பொருள்களிலிருந்தும் தனது சமூகத் தன்மையிலிருந்தும் அந்நியமாகி அவல நிலையில் வாழுகிறான். மதம், பணம், உடலிச்சைகள் என்ற வடிவங்களில் தன்னை இழந்து வீழ்ந்து கிடக்கிறான். இந்த உழைக்கும் மனிதன் தனது சாராம்சத்தை மீட்பதற்கான போராட்டத்தில் கம்யூனிசம் என்ற மார்க்சின் கொள்கையை முன்நிறுத்தினர். உழைக்கும் மனிதன் முதலில் இயற்கையிலிருந்து அந்நியமாகிறான்; பிறகு சமுதாயத்தி லிருந்து, உழைப்பிலிருந்து, பிறகு தன்னிடமிருந்தே அந்நியமாகி விடுகிறான். எதையெல்லாம் அவன் இழந்து தவிக்கிறானோ அதையெல்லாம் கடவுளிடமிருந்து பெற விரும்புகிறான். கடவுள் ஒரு தீர்வு என்று நம்புகிறான். இப்படிப்பட்ட தொழிலாளர் வர்க்கம் குறித்து மிகவும் அக்கறை எடுத்துக் கொண்டது மார்க்சியம். உலகளாவிய நிலையில் உழைக்கும் மனிதனை மையப்படுத்தும் மார்க்சியம் குறித்துப் பெரிதும் பேசப்பட்டது.

"மார்க்சின் சிந்தனை முழுவதிலும் ஊடுருவியுள்ள அக்கறை ஏதோ சில கண்மூடித்தனமான சக்திகளுக்கு முன்னால் மானுடர்கள் சக்தியிழந்து கிடப்பதை உறுதிசெய்வதல்ல. மாறாக உலகை விமர்சன ரீதியில் புரிந்து கொள்வதற்கான உண்மையான சாத்தியப்பாட்டை உறுதி செய்வதும் இப்புரிதலின் மூலமாக இறுதியில் அவர்கள் இவ்வுலகை வெற்றி கொள்வதைச் சாத்தியமாக்குவதுதான். இவ்வகையில் மார்க்சின் சிந்தனை, 'மானுடத்துவ மொழிதான்; 'மானுடத்துவப் பார்வை'தான்; மானுட விமோசனம்' பற்றிய ஒரு 'தரிசனம்' தான். ஆனால் இந்த மானுடத்துவம் தனித்து நிற்கிற தனிநபரை மையமாகக் கொண்ட மானுடத்துவம் அல்ல. மானுட ஜீவி என்பவன்(ள்) ஒரு சமூக ஜீவி என்பதை அடிப்படையாகக் கொண்ட மானுடத்துவம். சுதந்திரமாக ஒன்றிணைந்து செயல்படும் உற்பத்தியாளர்கள் மூலம் மானுட விடுதலையை எதிர்பார்க்கும் மானுடத்துவம்"[13] என விளக்கமளிக்கப்படுகிறது.

மார்க்சியத்தின் இந்த மானுடத்துவப் பரிமாணம் நம்பிக்கை தரவல்லது என்று மார்க்சியர்கள் கருதுகின்றனர். 'மார்க்ஸியம் தோற்றுப் போய்விட்டது' என்று கூறுபவர்களுக்கு எதிராக மார்க்சின் மானுடத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இன்று மார்க்சியர்கள் பிரச்சாரம் செய்கின்றனர். "உலகளவிலும் இந்தியாவிலுமுள்ள அனைத்துவகைப் பிற்போக்குவாதிகளும்

கம்யூனிச, மார்க்ஸிய விரோதப் பிரச்சாரத்தை ஆழமாகியுள்ளனர்; விரிவாக்கியுள்ளனர். ஆயினும் சோவியத் யூனியனிலும் சரி, பிற சோசலிச நாடுகளிலும் சரி, 'மார்க்ஸின் பொருட்டு' எண்ணற்ற மார்க்ஸியர்கள் போராடி வருகின்றனர். அவர்களுக்கு இன்று ஊக்கம் தருவது 'மார்க்ஸியத்தின் மானுடத்துவமே".[14]

மனிதன் என்பவன் மார்க்சின் பார்வையில் வேறுபட்டவன். 'மனிதன் இறைவனால் படைக்கப்பட்டவன் என்று ஒருவர் சொல்லலாம். மனிதன் சிரிக்கத் தெரிந்த பிராணி என்று இன்னொருவர் சொல்லலாம். அறிவு கொண்டவன் மனிதன் என்று சொல்லலாம். ஆயின் மார்க்ஸ் சொல்லுகிறார் உழைக்கத் தெரிந்தவன் மனிதன். மனித சாராம்சம் என்பது அவன் உழைப்பவன் என்பதாகும்.'[15] மனிதர்களின் உழைப்பு என்பது சமூகத்திலும் வரலாற்றிலும் செயல்படும் பொருளின் வடிவம் என்பதை மார்க்ஸ் வலியுறுத்தினார். மார்க்ஸின் மானுடத்துவம் இயங்கியல் பொருள் முதல்வாதம் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. "இன்று பேசப்படும் பற்பல மனிதாபிமானக் (Humanist) கருத்துகள், அடிப்படையில் மார்க்ஸியத்துடன் தொடர்புள்ளவை"[16] இக்கட்டுரையின் முன்பகுதியில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள மானுடத்துவ விதிகள் மார்க்ஸின் இயங்கியல் பொருள் முதல்வாதத் தன்மை உடையதாகும். இத்தகைய விதிமுறைகள் அடங்கிய ஒரு மானுடத்துவக் கோட்பாடு உருவாக மார்க்சியம் அடிப்படையாக அமைந்துள்ளது என்பதற்கு இந்நிகழ்வுகள் முக்கியக் காரணமாகும்.

மார்க்சிய மானுடத்துவம் போர்க்குணம் மிக்கது

சமூகம், பொருளாதாரம், அரசியல், சட்டம், கலை, இலக்கியம், கல்வி, அறிவியல் ஆகிய அனைத்து நிலைகளிலும் மானுடத்துவத்தை நிலைநாட்ட மார்க்சிய அறிவு தேவைப்படுகிறது. பொதுஉடைமைச் சமுதாயத்தில் மானுடத்துவம் செழித்தோங்க மார்க்சின் விஞ்ஞான அணுகுமுறை வழிகாட்டுகிறது. "மானுடத்துவம் மார்க்சியத்தின் ஒட்டுப்பகுதி அல்ல, அது மார்க்சியத்தின் இதயம், அதற்குச் சக்தியும் வாழ்க்கையும் தருகின்ற உள்விசை; மனிதகுலத்தின் மகிழ்ச்சிக்காகப் போராடுகின்ற கோடிக்கணக்கானவர்களின் உலகக் கண்ணோட்டமாக மார்க்சியத்தை ஆக்கியிருப்பது அதுவே"[17] என சோவியத் சமூகவியல் அறிஞர் ஹென்றி வோல்கவ், 'மார்க்ஸ் பிறந்தார்' (Birth of a Genius) எனும் நூலில் சுட்டிக்காட்டுகிறார். ஒவ்வொருவரும் அனைவருக்காக; அனைவரும் ஒவ்வொருவருக்காக வாழும் மானுடத்துவப் பண்பை உருவாக்க மார்க்சியம் போராடச் சொல்கிறது. இது இந்தப் பூமியில் மனித வாழ்வு பற்றிக் கேள்வி எழுப்புகிறது.

"நாம் வாழ்கிற பூமி ஒன்றாக இருந்தாலும் நாம் வாழ்கிற வாழ்க்கை ஒரே மாதிரியாக இல்லை. தனிச்சொத்துரிமையின் கூரிய நகங்கள் மனித இனத்தைக் கூறுகூறாகக் கிழித்துப் போட்டிருக்கின்றன........ மனித உழைப்பின் அருங்கொடைகள் யாவும் மனிதனுக்கு எதிரியாகி விட்டன. அடிமைகள் கட்டிய அரண்மனை களில் அரசர்கள் குடியேறினார்கள். அழகிய ஆடைகளை உருவாக்கும் மனிதர்களுக்கு மானம் காக்கப் போதிய ஆடையில்லை. வீடு கட்டுகிறவர்கள் வீதியிலே உறங்குகிறார்கள். இந்த நிலங்கள் இவனுக்குச் சொந்தம். அந்த ஆலைகள் அவனுக்குச் சொந்தம். அன்னை நிலத்தின் ஒவ்வோர் அங்குலத்தையும் கோடு கிழித்துப் பட்டா செய்து கொண்ட பின் தேசம், தேசம் என்கிறார்களே எதை? தேசம் சிலருக்கு விற்கப்பட்டது. தேசபக்தி மாத்திரமே பலருக்குப் போதிக்கப்பட்டது. தேசத்துக்கு ஆபத்து வரும்போது - தேசம் இல்லாதவர்களுக்கு - அதாவது சொத்து சுகம் இல்லாதவர்களுக்கு தேசபக்தியின் பெயரால் அழைப்பு விடப்பட்டது. யாருடைய சொத்துக்களையோ பாதுகாப்பதற்காகச் சொத்தே இல்லாதவர்கள் யுத்தத்தில் இறங்கினார்கள். யாருடைய சுகத்துக்காகவோ தங்களுடைய உயிரை இழந்தார்கள். இறுதியில் எல்லாம் ஏமாற்றத்தில் முடிகின்றன"[18]. மனித இரத்தம் எவ்வளவு மலிவாய்ப் போனது என்பதால் இது என்ன மனிதநேயம்? என்று கேள்வி எழுப்புகிறது மார்க்சியம். ஆகையால் மார்க்சியத்தின் மானுடத்துவம் என்பது அழுவதல்ல; போராடுவது! கண்ணீரைக் கண்டு இரங்குவதல்ல; கண்ணீரைத் துடைப்பது! சிலுவையைச் சுமப்பதல்ல; வரலாற்றை மாற்றுவது. மார்க்சியத்தின் மானுடத்துவம் போர்க்குணம் மிக்கது. நிலவுகின்ற பொருளாதாரச் சுரண்டல், அரசியல் ஒடுக்குமுறை, சமூக அநீதி ஆகிய மனிதநேய மறுப்பு நடவடிக்கைகளிலிருந்து தங்களையும் உழைக்கும் வர்க்கத்தையும் மற்றும் இந்த நாடு முழுவதையும் விடுவிக்க விரும்பும் மானுடத்துவத்தைப் பேசுவது மார்க்சியம்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலகம் முழுவதும் அந்தந்த மொழிகளில் இந்தப் புரட்சிகர மானுடத்துவம் புதிய பாதைகளை வகுத்தது. வேறு எப்போதும் இல்லாத அளவிற்கு இலக்கியத்தில் இந்தச் சிந்தனை பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. தமிழிலும் இத்தகைய மாற்றம் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவாகியது.

தமிழிலக்கியத்தில் போர்க்குணம் மிக்க மானுடத்துவச் சிந்தனை – (20ஆம் நூற்றாண்டு)

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தின் போது பிற மொழிப் படைப்புகளின் தாக்கத்தால்

தமிழிலக்கியப் போக்குகளில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாகத் தமிழில் நாவல், சிறுகதை, கவிதை ஆகிய பிரிவுகளில் புதிய போக்குகள் உருவாயின. இந்திய விடுதலை என்பதுடன் மனித சமூக விடுதலை என்ற சிந்தனையும் தமிழ்ப் படைப்பாளிகளிடையே வேரூன்றி இருந்தது. இக்காலகட்டத்தில் பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யப் புரட்சிகர இலக்கியங்கள், அரசியல், தத்துவ நூல்கள் ஆகியன அக்காலப் படைப்பாளிகளுக்கு ஒரு பின்னணியை உருவாக்கின. இந்தியா விடுதலை அடைந்தபின் இந்தியாவில் பேதமற்ற, சுதந்திரமான சமத்துவம் மிக்க சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே அன்றைய படைப்பாளிகளின் இலட்சியமாக இருந்தது. புரட்சித்தன்மையுடன் மானுடப் பற்று மிக்க கவிதைகளை வழங்கி மக்களைக் கவர்ந்தவர் மகாகவி பாரதியார். பாரத சமுதாயம் குறித்துப் பாடும் பொழுது,

“முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுஉடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை” (பாரத சமுதாயம்)

. . . .

“இனியொரு விதிசெய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்”[19]

(பாரத சமுதாயம்)

என்று பாரதியார் கோபக்கனலோடு தம் கவிதைகளை வழங்கினார். 20ஆம் நூற்றாண்டுக்கவிதைகளை மார்ச்சிய நோக்கில் ஆய்வு செய்த பேராசிரியர் கோ. தான்யா இதைப் புரட்சிகர மனிதாபிமானப் பண்பாகக் குறிப்பிடுகிறார். இவர் பாரதியாரைப் பற்றிக் குறிப்பிடும் போது, “எந்த ஒரு தனிமனிதன் பட்டினியோடு வாடிச் சாக நேர்ந்தாலும் அந்த ஒரு மனிதனுக்காகத் திரண்டு எழும் ஒற்றுமை உள்ளம் - தேசப்பற்று, ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் அக்கறை கொண்டிருப்பதற்கான பரந்த மனிதாபிமானப் பண்பு வேண்டும் என்று சொன்னவன். இனப்பிரிவினையும், இனப் பற்றையுமே பேசி வந்த நிலைமையை மாற்றியவன். மக்கள் ஒவ்வொருவர் உள்ளுணர்விலும் கலந்து பார்க்கிற மானிடப் பற்று மிகுந்த இக்கவிஞன், இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிஞர்களுள் புரட்சிகர மனிதாபிமானப் பார்வையுடன் சமூக நிலைமைகளைப் பார்க்கப் பழகியவன்”[20] என்று குறிப்பிடுகிறார்.

பறையருக்கும் புலையருக்குமான விடுதலை, பெண் விடுதலை என்பதே இந்த மண்ணின் விடுதலை என்பதும் அப்படி ஒரு சமத்துவத்தைக் காணும் வகையில் சோசலிச ஆட்சி கண்ட ருஷ்யாவை வியந்து பாடியதும் அந்தப் புரட்சியை "ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி" என்று போற்றியதும் இந்த மானுடத்தின் மீது பாரதி கொண்ட அளவிலாத பற்றினை எடுத்துக்காட்டுகின்றது. பாரதி நேரடியான ஒரு மார்க்சியக் கவிஞனாக அடையாளப்படுத்தப் படவில்லை எனினும் பாரதியின் சமத்துவப் பார்வையும், மானுட நோக்கும் மார்க்சியர்களைப் பெரிதும் கவர்ந்தது.

பாரதியைத் தொடர்ந்து பாரதிதாசன் புரட்சி ஒன்றே பொதுஉடைமையைக் கொண்டு வரமுடியும் என்ற நோக்குடனும், தமிழ்த் தேசிய உணர்வுடனும் தமது கவிதைகளை வழங்கினார்; புரட்சிக் கவிஞர் எனப் போற்றப்பட்டார்.

"பாரதி பாட்டில் பற்றிய பொதுஉடைமைத் தீ
என்றன் பாட்டு நெய்யால் வளர்ந்து
கொழுந்து விட்டெரிந்து தொழிலாளியிடத்தும்
உழைப்பாளரிடத்தும் உணர்வில் உணர்ச்சியில்
மலர்ந்து படர்ந்ததை மறுப்பவர் யாரோ"

(புரட்சி, 1.2.50. ப. 55)

என்று தன்னைப் பற்றிக் குறிப்பிடுகிறார் பாரதிதாசன். வர்க்க முரண்பாடும் அரசு அமைப்பும் பாட்டாளிகளின் அவல வாழ்க்கைக்குக் காரணம் என்பதால்,

"ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர்நொ டிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாநீ" என்றார்.

(பாரதிதாசன் கவி. ப. 138)

மார்க்சின் 'உலகப் பாட்டாளிகளே ஒன்றுபடுங்கள்' என்ற சோசலிச முழக்கத்தைச் சொல்லும் வகையில் பாட்டாளி வர்க்கம் உலகமெலாம் பரவி நிற்கும் பெரும் வர்க்கம், இவ்வுலகில் உற்பத்தி செய்யும் யாவும் அவர்களின் குருதியில் உருவானவை; அதனால் 'உலகம் உன்னுடையது' என்றார்.

"எங்கும் பாரடா இப்புவி மக்களைப்
பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய

மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சி கொள்!
அறிவை விரிவுசெய்; அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைந்து கொள்! உன்னைச் சங்கம மாக்கு
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும் பேதமில்லை
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!
புகல்வேன் 'உடைமை மக்களுக்குப் பொது'
புவியை நடத்து பொதுவில் நடத்து"

(பாரதிதாசன் கவி. ப. 124)

என்றார். இந்த மானிட சமுதாயத்தின் மீது பாரதிதாசன் எந்த அளவிற்குப் பற்றுக் கொண்டிருந்தாரோ அந்த அளவிற்கு நிலவும் சுரண்டல் சமுதாயத்தின் மீது கோபம் கொண்டு சீறினார். தமிழ்ச்சூழலில் மார்க்சியம் சொல்லும் பொதுஉடைமைச் சமுதாயத்தை உருவாக்கப் 'போராட்ட அழகியலை' விதைத்த முதல் கவிஞர் பாரதிதாசன். வென்றெடுக்கும் பொதுஉடைமைச் சமுதாயமே மானுடத்துவத்தை நேசிக்கும், வளர்க்கும் என்பதை வலியுறுத்தியவர்.

பாரதிதாசனுக்குச் சமகாலத்தியக் கவிஞரான பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம், மக்கள் கவிஞராகத் திகழ்ந்தவர். சமுதாய உணர்வைத் தூண்டும் கருத்துகளையும் சமூகப் போலிகளை இனங்காட்டும் கருத்துகளையும், போராட்டங்களையும் அதன் இயல்புகளையும், பொதுஉடைமைத் தத்துவம் மற்றும் தன்மான உணர்ச்சி மிக்க கருத்துகளையும் பாடல்களில் வழங்கினார். கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து அரசியல் ஈடுபாட்டுடன் பொது மக்களுக்கான தொண்டில் செயல்படுபவராகச் சிறந்த கவிஞராக விளங்கியவர் ப. ஜீவானந்தம்.

"காலுக்குச் செருப்புமில்லை
கால்வயிற்றுக் கூழுமில்லை
பாழுக் குழைத்தோமடா – என் தோழனே
பசையற்றுப் போனோமடா"[21] என்று வருந்துகிறார் ஜீவா.

'மனிதனைப் பாடுகிறேன்' என மனிதனின் உழைப்பையும் வாழ்க்கையையும், மனிதனின் உயர்வையும் இசைப்பாடல்களாக்கி மக்களிடையே பிரச்சாரப் பணியை மேற்கொண்டவர் மார்க்சியக் கவிஞர் வெ.நா. திருமூர்த்தி. கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளை, தொழிலாளர்களின் நிலையை, திரை இசைப்பாடல் வடிவில் பாடி பெரும் வரவேற்பைப் பெற்றவர் பாவலர் வரதராசன். 'கோடானு

கோடி மக்கள் குறை தீர்க்கப் பெரும் வர்க்கப் போரே வழி' என்று தன் கவிதைகளில் முழங்கியவர் கவிஞர் தணிகைச் செல்வன். கம்யூனிஸ்ட் கட்சியினர் பெருமளவிற்கு பிரச்சாரம் செய்யும் கவிதைகளை வழங்கியவர் இவர். 'மனுசங்கடா நாங்க மனுசங்கடா' என்று ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுப்பவர் கவிஞர் இன்குலாப். இவ்வாறு சுமார் 30க்கும் மேற்பட்ட மார்க்சியக் கவிஞர்கள் அனைவரும் மனிதனுக்கும், மனித உழைப்புக்கும் முதலிடம் கொடுத்துள்ளனர். இந்தக் கவிதைகள் என்ன செய்யும்? உடைமையற்ற, மானுடத்துவம் நிறைந்த ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்ப உதவி செய்யும்.

நாவல் இலக்கியம்

தமிழ் நாவல் இலக்கியத்தை ஆய்வு செய்த க. கைலாசபதி இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பிறகு மக்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களையொட்டி வந்த நாவல் போக்குகளைச் சுட்டிக் காட்டுகிறார். "தனிமனித வாதம், தார்மீகப் பிரச்சினை, பாலுறவுப் பிரச்சினை, உளவியல் அக்கறை முதலியன நகர வாழ்க்கையில் பூதாகரமாய்த் தெரிகின்றன"[22] என்று குறிப்பிடுகிறார். இந்தப் போக்கிலிருந்து மாறுபட்டு நேரடியான மார்க்சியத்தின் இயக்கவியலை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளி வர்க்க நிலையைச் சித்திரிக்கும் சமூக நாவல்கள் 1950க்குப் பிறகு தோன்றியுள்ளன. தொ.மு.சி. ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' (1953), ராஜம் கிருஷ்ணனின் 'குறிஞ்சித்தேன்' (1959), டி. செல்வராஜின் 'மலரும் சருகும்' (ஆக. 1967), 'தேநீர்' (1973), கு. சின்னப்ப பாரதியின் 'தாகம்' (1975), இந்திரா பார்த்தசாரதியின் 'குருதிப்புனல்' (1975), பொன்னீலனின் 'கரிசல்' (1976), பூமணியின் 'பிறகு' (1979) போன்ற நாவல்கள் குறிப்பிடத்தக்கன. பாட்டாளி மக்களின் மனத்தைப் பண்படுத்தி அணிதிரள வைக்கும் ஓர் அரசியல் அறிவினைப் பெறத் தூண்டுவதே இந்நாவல்களின் மானுடப் பார்வையாக உள்ளது.

"நாடு சுதந்திரம் எய்தியதற்குப் பிறகு தமிழ் மக்களின் அகவாழ்விலும் புறவாழ்விலும், சலனங்களும், மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. நமது கிராம வாழ்க்கையும் இந்த நியதிக்கு அப்பாற்பட்டதாக இருக்க முடியாது. இத்தகைய இயக்கவியல் காரணமாகப் பழைய பண்பாடும், சம்பிரதாயங்களும் சிதிலமடைகின்றன. மாற்ற வித்தியாசங்கள் தோன்றுகின்றன. இதனால் நெருக்கடிகளும், சிக்கல்களும் எழுகின்றன. இத்தகைய நெருக்கடிகளின் நடுவிலே இந்த விவஸ்தை கெட்ட இழிநிலைகளை எல்லாம் அழித்தொழிக்கின்ற புதியதோர் சக்தி துளிர்கின்றது. இன்று அச்சக்தி

மறைக்கப்படலாம்; தற்காலிகமாக அழுத்தவும் படலாம். ஆனால் அந்த விஸ்வரூப சக்தியை அழித்துவிட முடியாது"[23] என்று குறிப்பிடுகிறார் எழுத்தாளர் டி. செல்வராஜ். இந்த நம்பிக்கையுடன் மனித சமத்துவத்தைப் படைக்கப் போராடும் சக்திகளாக தற்காலத்தில் தமிழில் பல நாவல் படைப்புகள் உருவாகி வருகின்றன.

சிறுகதைகள்

'தமிழ்ச் சிறுகதை மன்னன்' என்றும், 'சாம்ராட்' என்றும் சிறப்பிக்கப்பட்டவர் புதுமைப்பித்தன். 'ஏகாதிபத்திய அடக்குமுறைக் கருத்துகளைத் திணிக்க முயற்சித்த மிதவாதக் கருத்துக்கும், இடது சாரிக் கருத்துக்கும் இடையே மோதல் இருந்த காலம். தேசிய இயக்கம், சுயமரியாதை மற்றும் பகுத்தறிவு இயக்கம், பொது உடைமை இயக்கம் ஆகியவற்றில் பொதுஉடைமைத் தத்துவக் கருத்துகளே புதுமைப்பித்தனின் அடிமனத்தில் அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. அவை அவருடைய எழுத்துகளிலும் பிரதிபலிக்கின்றன"[24]

புதுமைப்பித்தனின் கூர்மையான சமூக விமர்சனம் எது மனிதத்தன்மை? என்ற கேள்வியை எழுப்பியது. புதுமைப்பித்தன் முரண்பாடுகளின் குவியல் என விமரிசிக்கப்பட்டாலும் சாதாரண மக்களின் வாழ்வைச் சிறுகதைகளாக்கி முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவக் கொடுமைகளை அம்பலப்படுத்தினார் என்பதைத் திறனாய்வாளர்கள் எவரும் மறுக்கவில்லை.

புதுமைப்பித்தனின் சிறுகதைகள் மூலம் அவர் ஒரு கலகக்காரர் என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறார். "எப்படி கலகம் செய்கிறார்? தான் ஒரு கலைஞன் என்ற வகையில்! யதார்த்த வாழ்வில் சுரண்டல் சமுதாயம் சிறைப்படுத்தி வைத்திருக்கும் கலையின் மீதுள்ள கட்டுகளை உடைத்தெறிய, கலைஞன் என்கிற தோரணையில் கலகம் செய்கிறார். அதன் விளைவாகவே, புதிய புதிய கலை வடிவங்களை அவர் தேடிச் சென்றார். அக்கலை வடிவங்களில் வார்த்தெடுக்கப் புதிய புதிய உள்ளடக்கத்திலும் புதுமைப்பித்தன் சாதித்த மாற்றங்கள் இந்தக் கலகத்தின் வெளியீடுகளே. அவரது மனிதத்துவப் பண்பு, அநீதிகளைக் கண்டு வெளிப்படும் உள்ளக் கொதிப்பு, ஆவேசத் துடிப்பு, பிரமைகள் ஒழிந்த பார்வை - இவைதான் புதுமைப்பித்தன்"[25]

வறுமையைக் கண்டும், அநீதியைக் கண்டும் வெகுண்டெழும் உள்ளங்கள் பொது உடைமையைத் தான் ஆதரிக்கும். ஏழை தாழ்ந்து பணிந்துப் போகப் போகப் பணக்காரன் திமிருடன் மேலேறினால் எவ்வளவு ஆத்திரமும் ஆவேசமும் வரும் என்பதற்குச் சான்றாக

விளங்குவது விந்தனின் கதைகள். "மனித உள்ளத்தில் எங்கோ ஓர் மூலையில் செய்வதறியாது உறங்கிக்கிடக்கும் மனிதாபிமானத்திற்கு விரோதமாயிருந்த - இருந்து வருகின்ற மனித மிருகங்கள் மேல் வெறுப்பைக் கக்கி உங்கள் நல்வாழ்வுக்கு வழிதேட முயலும் கதைகளை — எழுத வேண்டும். இதுவே என் எண்ணம்"[26] என்று விந்தன் குறிப்பிடுகிறார்.

தமிழ்ச்சிறுகதைகளை மதிப்பீடு செய்த தமிழ்நாடு முற்போக்குச் சங்க எழுத்தாளரான ச. செந்தில்நாதன் சமுதாய மாற்றத்திற்கு இந்தச் சிறுகதை எழுத்தாளர்களின் பணியைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது "இந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் தமிழ்ச் சமுதாயத்திற்குச் சிறுகதை இலக்கியம் ஆற்றியிருக்கும் பணி மகத்தானது. ஏழை எளியவர்கள் மீது இரக்கத்தை வளர்த்து, மனிதாபிமானத் தத்துவத்தை அது வளர்த்திருக்கிறது. எத்தனை எழுத்தாளர்கள் மனிதாபிமானத் தத்துவத்திற்கு விரோதமாயிருக்கும் தீயசக்திகள் மீது புலிப்பாய்ச்சல் பாய்ந்திருக்கிறார்கள்! புதுமைப்பித்தன் ஊசியால் குத்துவார். விந்தன் வெறுப்பைக் கொதிக்க வைத்து மேலே ஊற்றுவார். ஜெயகாந்தன் விறகை எடுத்துத் தலையில் அடிப்பார்..... கஞ்சி குடிப்பதற்கிலார் அதன் காரணங்கள் எவை என்னும் அறிவுமிலார் என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.[27]

தமிழ் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகள் மூலம் இந்த மானுடப் பார்வையை வழங்கியிருக்கிறார்கள். மானுடத்தைப் போற்றவும் வளர்க்கவும் போராடுவதே வழி என்பதைத் தீர்வாகக் குறிப்பிடுகிறார்கள்.

முடிவுரை

இருப்பவர்களுக்கும் இல்லாதோருக்கும் இடையே நடைபெறும் போராட்டத்தில் நசுக்கப்படும் மானுடத்துவப் பண்பை மீட்டெடுக்கவும், உருவாக்கவும் மனிதநேயவாதிகள் அவரவர்களுக்குக் கிடைத்த தளங்களிலிருந்து போராடுகிறார்கள். இதற்காக ஓவியன் தன் தூரிகையை ஏந்துகிறான், கலைஞன் தன் கலைகள் மூலம் கலகம் செய்கிறான். இலக்கியப் படைப்பாளி தன் படைப்புகளை வழங்குகிறான்.

மனிதநேயம் மிக்க சமுதாயம் உருவாகப் போராடு! போராடும் போதுதான் மனிதன் உருவாகிறான் என இன்றைய தமிழிலக்கியப் போக்குகள் புதிய கருத்தாக்கங்களை உருவாக்கு கின்றன. போரற்ற உலகத்தை உருவாக்கப் போராட வேண்டும் என்ற அடிப்படையில்,

"புதியதோர் உலகம் செய்வோம்
கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"

(பாரதிதா. கவி. பக். 130)

என்றார் புரட்சிக் கவிஞர்.

எங்கே விலங்குகளும் வேதனையும் ஒலிக்கின்றதோ, எங்கே வாழ்க்கை மிதியுண்டு மடிகிறதோ, எங்கே மானுடம் மதிப்பற்றுப் போகிறதோ, எங்கே உழைப்பு உணவின்றிச் சாகின்றதோ அங்கு மார்க்சியம் சொல்லும் மானுடத்துவம் உருவாகும். அங்கு வாழப் போரிடும் மனிதருக்காகப் படைப்புகள் உருவாகும்.

****

குறிப்புகள்

1. தொல்காப்பியம் - தெளிவுரை, ச.வே. சுப்பிரமணியன், மணிவாசகர் நூலகம், மூ.பதி. 1999, ப. 593.
2. தமிழர் கண்ட மனம், கரு. நாகராசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பதி. டிச. 1980, ப.6.
3. Journal of Tamil Studies, (கட்) வள்ளுவர் கண்ட மனிதன், க.த. திருநாவுக்கரசு, Vol.2. டிச. 1972, ப. 84.
4. Humanism: The attitude of mind which attaches primary importance to man and to his faculties, affairs, temporial aspirations and wellbeing - Encyclopaedia Britannica, William Benton Publisher, The University of Chicago, 1972. p. 825.
5. ஆய்வுக்கோவை, முப்பத்தோராம் கருத்தரங்கு, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், (கட்), பாரதியும் மனிதநேயமும், எம்.ஏ. சவேரியார், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, பதி. 2000, ப. 708-709.
6. The Random House Dictionary of the English language, Random House, Newyork, 1967, p. 691.
7. சுபமங்களா, (கட்) இன்றைய இலக்கியக் கொள்கைகள் - ஓர் எளிய அறிமுகம், கே. விஸ்வநாதன், பிப். 1995, ப. 51.
8. மார்க்ஸ் பிறந்தார், ஹென்ரிவோல்கவ், (தமி) நா. தர்மராஜன், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, பதி. 1986, ப. 279.
9. சுபமங்களா, (கட்), இன்றைய இலக்கியக் கொள்கைகள் - ஓர் எளிய அறிமுகம், கே. விஸ்வநாதன், பிப். 1995, ப. 53.
10. மேற்படி, ப. 51.

11. மேற்படி, ப. 54.

12. ஐரோப்பியத் தத்துவங்கள், ந. முத்துமோகன், காவ்யா பதிப்பகம், பதி. டிச. 200, ப. 138.

13. அல்தூஸர் ஓர் அறிமுகம், வ. கீதா, எஸ்.வி. ராஜதுரை சோஸாலுக்ஸம்பர்க், படிப்பு வட்டம், சென்னை - 33, பதி. பிப். 1990.

14. மேற்படி. ப. 6.

15. ஐரோப்பியத் தத்துவங்கள், ந. முத்துமோகன், காவ்யா பதிப்பகம், பதி. டிச. 2000, ப. 114.

16. சுபமங்களா, (கட்) இன்றைய இலக்கியக் கொள்கைகள் - ஓர் எளிய அறிமுகம், கே. விஸ்வநாதன், பிப். 1995, ப. 51.

17. மார்க்ஸ் பிறந்தார், ஹென்றிவோல்கவ், (தமி) நா. தர்மராஜன், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, பதி. 1986, ப. 301.

18. சோவியத் இலக்கியம் பற்றி ஜீவா, ஜீவபாரதி (முன்) இளவேனில், வைரம் வெளியீடு, பதி. 1980, சென்னை-18, ப. 9-10.

19. மகாகவி பாரதியார் கவிதைகள், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், மூன். பதி. நவ. 1998, ப. 28.

20. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம், கோ. தான்யா, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை 1990, ப. 85.

21. மேற்படி, ப. 90.

22. தமிழ் நாவல் இலக்கியம், க. கைலாசபதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், மூ.பதி, 1979, சென்னை-98, ப. 232.

23. மேற்படி, ப. 231.

24. புதுமைப்பித்தன் - பன்னோக்குப் பார்வை, விஜய பாஸ்கரன், தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., சென்னை, பதி. ஜூன் 2001, ப. VII

25. மேற்படி, ப. 48.

26. தமிழ்ச் சிறுகதைகள் ஒரு மதிப்பீடு, ச. செந்தில்நாதன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, இ.ப. ஏப். 1933, ப. 90.

*****

தொல்காப்பியம் - பொருளதிகாரத்தில் மனிதநேயம்

நா. புனிதபொற்கொடி
ஆய்வாளர்

எங்கெங்குக் காணினும் அங்கெல்லாம் மதவெறி, இனவெறி, கட்சி வெறி, போர்வெறி, தான் வாழப் பிறரைக் கெடுக்கின்ற தன்னலப் போக்கு ஆகியன மலிந்து காணப்படுகின்றன. இந்நிலை மாற வேண்டுமெனில் மனிதநேயம் எனும் உயரிய பண்பு மக்களால் போற்றப்பட வேண்டும். தன்னைப் போல் பிறனையும் நேசிக்கின்ற மனப்பக்குவம் வேண்டும். அப்பொழுது உலகில் அமைதி நிலவும். அந்த அமைதிக்கு வழிகாட்டுகின்ற இலக்கணமாக மனிதநேயம் குறித்த கருத்துகளைத் தொல்காப்பியத்தின் வழி நின்று கண்டறிதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆய்வுப்பரப்பு

தொல்காப்பியப் பொருளதிகாரம் இவ்வாய்வுக்கான முதன்மைச் சான்றாகக் கொள்ளப்படுகின்றது. பண்டைய உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோரின் உரைகளும் தொல்காப்பியம் குறித்து வெளி வந்துள்ள பல்வேறு ஆய்வு நூல்களும், கட்டுரைகளும் துணைமைச் சான்றுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் மனிதநேயம் குறித்து வெளிவந்துள்ள நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியனவும் துணைமைச் சான்றுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்வு முறை

இவ்வாய்வுக் கட்டுரை தொல்காப்பியம் - பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள மனிதநேயச் சிந்தனைகளைத் தொகுத்தும் பகுத்தும் முடிவு காணும் முறையில் அமைவதால் விளக்க முறை ஆய்வாக விளங்குகிறது.

முந்தைய ஆய்வுகள்

சாலினி இளந்திரையனின் 'சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள்' என்னும் நூல் இக்களத்தில் முதற்கண் குறிக்கத் தக்கதாகும்[1]. சுந்தர சண்முகனாரின் 'சிலம்போ சிலம்பு' என்ற நூலில் இடம்பெற்றுள்ள கோவலனின் இரக்கம் என்னும் கட்டுரையும் இந்நிலையில் போற்றத்தக்கதாகும்.[2]

> **"புலவர்கள் (கோவூர் கிழார்) மனித நேயத்தை வளர்த்து மரணதண்டனைகளையும் நீக்கும் சிறந்த பணிகளையும் ஆற்றியுள்ளார்."[3]**

என்ற மறக்குணத்து வே. பிரபாகரன் குறிப்பிட்டிருப்பது இவ் ஆய்வு வரிசையில் வரவேற்கத் தக்கதாகும்.

சி. தில்லைநாதனின் 'சங்க இலக்கியமும் மனிதாபிமான சிந்தனைகளும்' என்னும் ஆய்வுக் கட்டுரையும்[4] ச. சிவகாமியின் 'வள்ளுவரில் மனிதநேயம்'[5] என்னும் ஆய்வுக்கட்டுரையும் 'சிலம்பும் மணியமும்' இவ்வரிசையில் சுட்டத்தக்கன.

மங்கையர்க்கரசி மயில்வாகனின் 'பண்டைத் தமிழர் தம் மனிதநேயச் சிந்தனை' என்ற ஆய்வுக்கட்டுரையும்[7] இவ்வரிசையில் எழுந்ததாகும்.

ச. சிவகாமி, 'உயிரிரக்கம்' என்னும் ஆய்வுக் கட்டுரையில்,

> **"மனிதன், மனிதனை மதித்துச் செலுத்தும் அன்பான மனித நேயத்தினின்றும் உயர்ந்த நிலையினதாக உயிரிரக்கம் அமைகின்றது. மனிதநேயம் மனித உயிரிடத்துக் காட்டும் அன்பை மட்டுமே எண்ண, உயிரிரக்கம் மனித உயிர்க்குப் பல்லாற்றானும் துணை நிற்கும் விலங்குகள், தாவரங்களையும் மனித உயிருடன் ஒருங்கிணைத்துக் காண்பதால் 'உயிரிரக்கம்' என்பதே இங்குப் பின்பற்றப்படுகிறது."[8]**

என்று குறிப்பிட்டுள்ளார். இவற்றான் மனித நேயத்தினின்றும் உயிரிரக்கம் உயர்ந்தது என்ற கருத்தை அறியலாம்.

இவ்வாறு மனிதநேயம் குறித்துப் பல்வேறு நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் சுட்டப்பட்டிருப்பினும் 'தொல்காப்பியத்தில் மனிதநேயம்' என்ற தலைப்பில் தனித்த, விரிந்த, வரன்முறையான ஆய்வு எதுவும் மேற்கொள்ளப் பெற்றிலது.

மனிதநேயம் – சொற்பொருள் விளக்கம்

மனிதநேயம் என்ற சொல் மனிதர்களிடையே காணப்படும் நேயத்தைச் சுட்டும். நேயம் என்ற சொல் நேசம் என்றும் வழங்கப்படுகின்றது. நேயம், நேசம் என்ற சொற்களுக்கு "அன்பு"[9] என்று தமிழ்ப் பேரகராதி பொருள் தருகின்றது. நேசம் என்ற சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொற்களாக Love, affection, piety என்பன தரப்பட்டுள்ளன.[10] அன்பு என்பதனைத் தமிழ்ப் பேரகராதி,

"தொடர்புடையார் மாட்டு **உண்டாகும்** பற்று, நேசம், கருணை"[11]

என விளக்குகிறது.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி அன்பு என்பதற்கு,

"ஒருவரின் மனம் நெகிழும்படியாக மற்றொருவர் அவர்மேல் வெளிப்படுத்தும் நேசமும் நட்பும் கலந்த உணர்வு"[12]

எனப் பொருளுரைக்கிறது.

> "மனிதநேயம் என்பது மனிதருக்கு மனிதர் இருக்க வேண்டிய தொடர்புறவு பற்றிய ஒருவிதமான மனநிலை; அந்த மனநிலையினால் தூண்டப்பட்டு நடைபெறும் செயல்நிலை"[13]

என்று சாலினி இளந்திரையன் விளக்கம் அளிக்கின்றார். அவரே,

> "அடிப்படையான மனித உறவு, உணர்வு சார்ந்த மனிதநேயம் என்பது, காலம், இடம் என்னும் பின்னணிகளில் மனிதன் எப்படி எப்படி இயங்க வேண்டும் என்பதற்கான வரையறைகளைக் குறித்தது. அதாவது, தமிழ் வரலாற்றில் சங்க காலத் தமிழர்கள் எந்த எந்த இலக்குகளை முன் வைத்துத் தங்கள் வாழ்க்கையை நடத்தினார்களோ அவைகளைப் பின்புலமாகக் கொண்டு அவர்கள் நடத்தி வைத்த நாகரிகமான செயல்களைக் குறிக்கிறது."[14]

என்று மேலும் விளக்கம் அளிக்கின்றார்.

> "மனிதநேயம் என்பது வெறும் மனிதாபிமானம் (Humanism) மட்டுமன்று; மனிதனுடைய எல்லை யில்லாத, எல்லை காட்ட இயலாத முழுமையான அறிவாற்றலும்; ஆன்மீகச் செல்வமும், மனிதனுடைய பண்புகளும் ஆகிய இவை யனைத்தையும் தன்னுட்கொண்டது"[15]

என்று மங்கையர்க்கரசி மயில்வாகனன் தமது 'பண்டைத் தமிழர்தம் மனிதநேயச் சிந்தனை' என்ற கட்டுரையில் விளக்கம் அளிக்கின்றார்.

பல்வேறு விளக்கங்களின் அடிப்படையில் மனிதநேயம் என்பது அன்பை, இரக்கத்தை வெளிப்படுத்தும் செயல்பாடு என்று பொருள் கொள்ளலாம்.

மனிதநேயம் வெளிப்படும் சூழல்

மனிதநேயம் எப்படி, எப்பொழுது ஏன் தோன்றுகின்றது என்பன போன்ற வினாக்களுக்கு விடையளிப்பதாக இப்பகுதி அமைகின்றது.

1. விருந்தோம்பல்

மனிதநேயத்தை வெளிப்படுத்தும் செயல்பாடுகளில் ஒன்றாக விருந்தோம்பலைச் சுட்டலாம். கற்பு வாழ்வில் இல்லாளுக்குரிய இன்றியமையாத மாண்புகளில் ஒன்றாக விருந்தோம்புதலைத் தொல்காப்பியர் குறிப்பர். இதனை,

> "விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
> பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்"[16]

என்பதனால் அறியலாம். விருந்து எனும் சொல்லுக்குப் புதியது எனப்பொருள் விளக்கம் தருகிறார். 'விருந்து' எனும் சொல் இன்றைய நிலையில் உள்ளது போல் உறவினரையோ, நண்பரையோ குறிக்காமல் அறிமுகமில்லாதவரையே குறித்தது. இதனை,

> "விருந்தே தானும்
> புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"[17]

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம்.

> "முன்பின் அறியாத ஒருவர்பால் அன்பு கொண்டு அவரை உபசரித்தலை இல்லறக் கடமையெனக் கருதிப் பண்டைச் சான்றோர் வாழ்ந்ததற்குக் காரணம் அவர் உள்ளத்தில் மனிதநேயம் எனும் மாண்பு தழைத்திருந்தமையால்தான்"[18]

என்று மங்கையர்க்கரசி மயில்வாகனன் தமது கட்டுரையில் வலியுறுத்துகின்றார்.

> இத்தொல் மரபு 'குடும்ப உறவோடு சமுதாய உறவையும் தோற்றுவித்து உதவும் திட்டப் பாங்குடை நெறியாக எண்ண இயலும்'[19]

என்பர் கருவை பழனிசாமி.

> ''இல்லறம் தன்னலம் சாராத் தன்மையது. தன்னலமுடைய மனிதனைப் பிறர் நலம் பேணும் பெருந்தகையாக மாற்றியது இல்லற மென்னும் நல்லறம்"[20]

என்பார் அ.ச.ஞானசம்பந்தன்.

> "இல்லறத்தின் வாயிலாகக் குமுகாய நேயமும் பற்றும் உடன்வளர விருந்தோம்புதல் ஒரு காரணமாக அமைகிறது"[21]

என்று மு.இளமுருகன் சுட்டுவர். எனவே இல்லறத்தார் விருந்தோம்பலின் மூலம் மனிதநேயத்தை வெளிப்படுத்தினர், மனித உறவையும் சமுதாய உறவையும் வலுப்படுத்திக் கொண்டனர் என்ற கருத்துப்புலனாகும். சிறந்தது பயிற்றலையே வாழ்வின் இலக்கணமாகத் தொல்காப்பியர் சுட்டுவர். சிறந்தது பயிற்றலின் வாயிலாகப் புலப்படும் மனிதநேயத்தை வாழ்வின் இலக்கணம் எனத் தொடரும் பகுதியில் காணலாம்.

வாழ்வின் இலக்கணம்

இருவராகத் தொடங்கிய இல்லறம் தலைவன், தலைவி, மக்கள், சுற்றம் எனப் பல உறுப்பினர்களைக் கொண்ட பெரியதொரு அமைப்பாக வளர்ச்சி அடைகிறது. தலைவனும் தலைவியும் இன்பம் நுகர்ந்து நிறைவு பெற்ற கடைசிக் காலத்தில், வயது முதிர்ந்து சுற்றம் புடைசூழ வாழ்வர். இவ்வாறு மக்களும், சுற்றமும் புடைசூழ வாழும் தலைவனும் தலைவியும் சிறந்ததை அவர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டுவது அறமாகும். இதுவே இல்லற வாழ்வின் பயனாகும் என்பதனை,

> *"காமஞ் சான்ற கடைக்கோட் காலை*
> *ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி*
> *அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
> *சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"*[22]

எனத் தொல்காப்பியர் கற்பியலில் வலியுறுத்துகின்றார்.

சிறந்தது பயிற்றலாவது -'அறத்தின் மேல் மன நிகழ்ச்சி'[23] எனக் கூறுவர் இளம்பூரணர். இதன் மூலம் தலைவனும் தலைவியும் வயது முதிர்ந்த இறுதிக் காலத்தில் அறநெறியைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களாகத் திகழ்ந்தமை விளங்கும். 'சிறந்தது பயிற்றல்' என்ற தொடருக்கு "விருந்தோம்பலாகிய இல்லறக் கடமையை அயராது செய்தல்"[24] என வ.சுப. மாணிக்கம் கூறும் கருத்து ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

"இல்லற இன்பமும் பயனும் குறைவின்றிக் கண்டபின் இறுதிக் காலத்தில் தம் சொல்லாலும் செயலாலும் இந்தச் சமுதாயத்தற்கு நற்பணியாற்றிட வேண்டும் என்பதைச் சிறந்தது பயிற்றலாகிய அறம் எடுத்துரைக்கின்றது"[25] என்பர் முத்துலக்குமி.

"காமஞ் சான்ற வாழ்க்கை, அதன் விளைவாகப் பிறந்த மக்கள், உற்றாரும் உறவினருமாகிய நல்லவர்களின் தொடர்புறவு, அதனால் சிறந்தது பயிற்றலாகிய புதிய வினைப்பாடு என்னும் இவைகளில் வளர்த்துக் காட்டப்படுவதுதான் முறையான மனிதநேயம். இரண்டு பேரின் அன்பு இருவருக்கே உரியது போலத் தோன்றி ஒரு சிலருக்கு

மட்டும் உரியது போல விரிந்து, பிறருக்கு நாம் உதவும் பெருவாழ்வாகப் பின் மலர்வதே இந்த நூற்பாவின் அடிப்படைக் கருத்து. இரண்டே இரண்டு பேருக்காக வாழத் தொடங்கியவர்கள் உலகத்து எல்லோருக்குமாக வாழ வேண்டும் என்னும் கோட்பாட்டை இதன் மூலம் வாழ்க்கை இலக்கணமாக வகுத்துத் தருகிறது தொல்காப்பியம்"[26] என்பர் சாலினி இளந்திரையன்.

தரவுகளின் அடிப்படையில் நோக்கும் பொழுது இல்லறப்பணியோடு சமுதாயப் பணியையும் ஆற்ற வேண்டியது இல்லறத்தார்க்குரிய கடன் என்ற கருத்துப் புலனாகும். தன்பெண்டு, தன்பிள்ளை, தன்வீடு என்ற குறுகிய வட்டத்தோடு நில்லாமல் எல்லோருக்குமாக வாழ வேண்டும் என்ற மனிதநேயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதீடு (பொதுவுடைமை)

வெட்சித் துறைகளுள் "பாதீடு"[27] என்பது பகுத்துக் கொடுத்தல் எனப் பொருள்படும். கவர்ந்து வந்த ஆநிரையினைக் கூறிடுதல் என்றார் இளம்பூரணர். கூறிட்டு வெட்சி வீரர்களுக்கு மட்டுமன்றிப் புள்வாய்ப்புறச் சொல்லிய கணியர்க்கும் ஒற்றர்க்கும் பங்கிட்டுத் தருதல் ஆகும். இதற்கு வேறு விளக்கம் கூறினார் நச்சினார்க்கினியர்.

"பாதீடு - ஈத்தலும் ஈதலும் போல, பாத்தலும் பாதலும் ஒன்றாதலிற் பாதீடாயிற்று"[28]. வேந்தன் ஏவலால் தாம் கொண்ட நிரையை வெட்சி வீரர் பகுத்துக் கொள்ளுதலும், மீட்ட நிரையைக் கரந்தையர் உரியவர்க்கு வழங்குதலும் பாதீடு என்று விரித்துரைத்தார் எனின், பாரதியார் இளம்பூரணர் கருத்தையே தழுவிக் கூறினார்.

பகைப்புலத்துக் கவர்ந்த ஆநிரைகளை அவரவர் வினைக்கேற்பப் பங்கிட்டுக் கொடுத்தலே பாதீடு ஆகும்.

"களவினால் கொண்டு வந்த நிரைகளை, வேந்தனோ, அன்றி அவ்வேந்தனின் தண்டத் தலைவரோ, தமக்கென்று வைத்துக் கொள்வதில்லை. தாம் கவர்ந்து வந்த பொருள் தமக்கே உரிமை யாயினும், சமுதாயத் தருமப்படி மற்றவர்களுக்கும் பகுத்துண்ணும் பொதுவுடைமையாக்குவர். இதனைப் புறத்திணை 3இல் பாதீடு என்பர்."[29] இக்கருத்து பாதீடு என்னும் பொதுவுடைமைச் சிந்தனை பற்றியதாகின்றது.

வேந்தன் ஏவலால் தாம் கொண்ட நிரையைத் தனக்கெனப் பாதுகாத்து வைக்காது பலர்க்கும் பகுத்துக் கொடுத்து மகிழ வேண்டும் என்ற மனித நேயத்தினைப் பாதீடு என்ற துறை வலியுறுத்துகின்றது. போரில் பெற்ற வளத்தைப் பலர்க்கும் பங்கிட்டுக்

கொடுக்கும் அருள் உள்ளமும் படை மறவர்க்கு உண்டு என்பதற்குப் பாதீடு, கொடை முதலிய துறைகள் சான்றாகும்.

ஆற்றுப்படை (பிறர் துன்பம் களைதல்)

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்" (தொல். 1037)

என ஆற்றுப் படையினைத் தொல்காப்பியம் குறிக்கிறது. பரிசில் பெற்ற கலைஞர் அது பெறத் தக்கவரைத் தனக்குப் பரிசில் தந்த புரவலனிடம் செல்லுகின்ற வழியினையும் சென்றால் கிடைக்கக் கூடிய நன்மைகளையும் கூறி நம்பிக்கையூட்டி வழிப்படுத்துவது ஆற்றுப்படையாகும்.

தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற குறிக்கோளுக்கேற்ப, தன்னையொத்த வறுமையில் வாடுகின்ற கலைஞரை அவ்வறுமைத் துன்பத்தினின்றும் நீக்கும் பொருட்டு ஆற்றுப்படுத்துவதன் மூலம் பிறர் துன்பம் களைதல் என்ற மனிதநேயம் புலப்படுகின்றது.

தழிஞ்சி (செய்ந்நன்றியறிதல்)

புறத்திணையின் நிறைவுத் துறையாகிய 'அழிபடை தட்டோர் தழிஞ்சி' என்னும் துறை போர் முடிந்து அவரவர் பாசறைகளுக்குத் திரும்பும் மன்னர்கள் போர்க்களத்திலே விழுப்புண் பட்ட வீரர்கள்பால் அன்பு செலுத்துவதைக் கூறுகிறது.

தழிஞ்சி என்னும் துறைக்கு விளக்கம் தரும் நச்சினார்க்கினியர், 'வென்றும் தோற்றும் மீண்ட வேந்தர், தம் படையாளர், முன்பு போர் செய்துழி, கணையும் வேலும் முதலிய படைகளைத் தம்மிடத்தே தடுத்துக் கொண்டு அழிந்தவர்களைத் தாம் சென்றும் பொருள் கொடுத்தும் வினாவியும் தழுவிக் கோடல்"[30] என்று விரிவாகப் பேசுகிறார்.

"தனக்காகவும் தன்னுடைய வெற்றிக்காகவும் போரிட்டுப் புண்பட்ட மறவர்களைத் தன்னுடைய உடம்பின் ஓர் உறுப்பாகவே கருத வேண்டும் என்னும் மனிதாபிமான உணர்வும் அவர்களை எந்த நிலையிலும் தளரவிடக் கூடாது என்னும் ஆதரவு உணர்வுமே இந்த மணிநெறியின் அடிப்படைகள். தன் படைவீரர்கள் தனக்கு யாதினும் இனியவர்கள் என்று கொள்ளும் பெரிய உள்ளம் ஆகிய மனித உள்ளத்தையே தருணத்துக்கு ஏற்ற தன்னுடைய ஆற்றும் சொற்களால் இங்கே வெளிப்படுத்துகிறான் மன்னவன். தான் உயர்ந்தவன், தன் படை வீரர்கள் தாழ்ந்தவர்கள் என்று எண்ணாத மனிதநேயப்

பேருணர்வின் வெளிப்பாடு இருப்பதால், பாசறையில் மன்னனுக்கு உரியதாக வகுக்கப்பட்ட இந்த மணிநெறி மனிதநேய நெறியாகத் துவங்குகிறது."[31] என்பர் சாலினி இளந்திரையன்.

மாற்றார் விடும் படைக்கருவிகளைத் தம்பால் தடுத்துப் புண்பட்டு வீழ்ந்த வீரரைப் பேணித் தழுவிக்கொள்ளும் பேராண்மையைக் குறிப்பது அத்துறையாகும்[32] என்பர் இளம்பூரணர்.

ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கு (பகைவர்க்கருளுகின்ற மனிதநேயம்)

ஒல்லார் என்பது பகைவரைக் குறிக்கும். அவரைப் பொருந்துதல் என்பது, அவராயினும் அவர் சுற்றமாயினும் தன்னை அடைந்து உயிரும் உடம்பும் போல்வனவற்றை இரந்து நிற்பின், அவற்றை அவர்க்கு உளம் உவந்து கொடுத்தலை இத்துறை குறித்தது என்பர் நச்சினார்க்கினியர். பகைவனால் படுதல் அறிந்தும் தன் கவச குண்டலங்களைக் கொடுத்த கன்னனின் செயலை உதாரணம் காட்டினார் நச்சினார்க்கினியர். இச்செயல் வீரம் பற்றிய கருணையாதலின் வாகை ஆயிற்று என்றார்.

அருளொடு புணர்ந்த அகற்சி (துறவு நெறி)

அகற்சி என்பது இல்லறத்தினின்றும் அகன்று போதலாகிய துறவினைக் குறித்தது. அகலுதல் என்னும் பொழுது நீங்குதல், நீத்தல் என்ற கருத்து வெளிப்படுகிறது. 'அருளொடு பொருந்தின துறவும்' என்று இயம்பினார் இளம்பூரணர். இத்துறவு உலக உயிர்களை ஒப்ப நோக்கும் அருள் உள்ளத்தால் விளைவது.

அருளுடைமை, கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி விழையாமை, கள் உண்ணாமை, துறவு என்பனவற்றைப் பொருந்துதல் என்றார். கொல்லுதல், பொய்த்தல், களவு, புணர்ச்சி, விழைவு, கள் உண்டல் முதலியவை தவிர்க்கத்தக்கவை. தம்மை விட்டு நீங்காத உயர் பண்பு அருள் என்பதால், 'அருளொடு பொருந்திய அகற்சி' என்றார் தொல்காப்பியர். துறவறவியலில் திருவள்ளுவர் வகுத்துக் கூறிய அறங்களையெல்லாம் இத்துறைக்குப் பொருத்திக் காட்டி, இப்பண்புகள் பொருந்திய துறவுதான் மனிதனுக்குப் பெரும் வெற்றியைத்தரும் என்றும் அவ்வெற்றியைச் சுட்டும் இலக்கணக் குறியீடுதான் இத்துறை என்றும் அறிதல் வேண்டும்.......... இதனை அறவெற்றி என்பர் நச்சினார்க்கினியர்.

மனிதநேய மற்றவை

அவிப்பலி

போர் தொடங்குவதற்கு முன் பகைவர் காணும்படியும், உயர்ந்தோர் பாராட்டும்படியும் 'இன்னது செய்யேனாயின் இன்னது

ஆகக் கடவேன்' என்று தான் கூறிய வஞ்சின மொழியை நிலைநாட்டும் பொருட்டுத் தன் உயிரைப் போர்க்களத்தில் வழங்கிய தொன்று தொட்டுவரும், அவிப்பலி, மனிதன் தன் உயிரைத் தானே மாய்த்துக் கொள்கின்ற மனிதநேயமற்ற செயலாகும்.

பகைவர் நாணுதல் என்பது, அவர் அறப்போர் ஆற்றாது வஞ்சனையால் வென்றதால், வீரன் தன் உயிரை அவிப்பலி கொடுத்தானே என்று எண்ணி வெட்கம் அடைதலைச் சுட்டியது என்பர் நச்சினார்க்கினியர். எனினும் இது மனிதநேயமற்றதே.

வெட்சியில் கூறப்பட்டுள்ள ஊர்க்கொலையும், வஞ்சியில் கூறப்பட்டுள்ள எரிபரந்தெடுத்தல் என்னும் துறையும் போரினால் பகைவர் நாட்டுப் பொதுமக்கட்கு ஏற்படும் துன்பத்தை எடுத்துக்காட்டும். பெருமித உணர்வு பொங்கப் பகைவர் நாட்டின் மேல் போர் தொடுத்து, வாகை சூடியபின் வென்ற நாட்டிலுள்ள ஊர்களைத் தீக்கிரையாக்கியும், அங்குள்ள செல்வத்தைக் கொள்ளையடித்தும் தம் வெற்றியை மன்னர்கள் கொண்டாடுவதும் மனித நேயமற்ற செயலாகும்.

உயிரிரக்கம்

கவர்ந்த ஆநிரையினை வருத்தமின்றிக் கொண்டு வருதல் வெட்சித் திணைக்குரிய நோயின்றுய்த்தல் என்ற துறையாகும். கவர்வாரும் மீட்பாரும் ஆநிரையின் நலம் காத்துக் கொண்டு போதலைச் சுட்டும் என்பர் நச்சினார்க்கினியர். போர் புரிவாரிடத்தும் உயிரிரக்கம் உண்டு என்பதை இத்துறை சுட்டியது.

முடிவுரை

இக்கட்டுரையில் தொல்காப்பியத்தில் காணப்படுகின்ற மனிதநேயம், மனிதநேயமற்ற செயல்கள், உயிரிரக்கம் ஆகியவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவ்வாய்வு மேலும் நுணுகி ஆராய்தற்குரியது.

சான்றெண் விளக்கங்கள்

1. சாலினி இளந்திரையன், சங்கத் தமிழரின் மனித நேய மணிநெறிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113, முதற் பதிப்பு, பிப்ரவரி 1995.
2. சுந்தர சண்முகனார், சிலம்போ சிலம்பு, வானதி பதிப்பகம், சென்னை - 17, முதல் பதிப்பு, அக்டோபர் 1992.
3. மறக்குணத்து வே. பிரபாகரன், சங்கத் தமிழ் விருந்து, அழகம்மை பதிப்பகம், சென்னை - 600 085, முதற்பதிப்பு, டிசம்பர் 1999.
4. சி. தில்லைநாதன், சங்க இலக்கியமும் மனிதாபிமான சிந்தனைகளும் - பண்பாட்டுச் சிந்தனைகள், குமரன் புத்தக இல்லம், சென்னை - 26, முதற் பதிப்பு, மார்ச் 2000.

5. ச. சிவகாமி, சிலம்பும் மணீயமும், உலகத் தமிழ்க் கல்வி இயக்ககம், சென்னை - 600 096, முதற்பதிப்பு, 31-12-90.
6. ச. சிவகாமி, தமிழர் வாழ்வியல், மாதவி பதிப்பகம், சென்னை - 14, முதற்பதிப்பு, 5-9-1998.
7. தமிழியல் ஆய்வு, கருத்தரங்கக் கட்டுரைகள் தொகுப்பு, ஞாலத் தமிழ்ப்பண்பாட்டு ஆய்வு மன்றம், தமிழியல் துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625 001.
8. ச. சிவகாமி, சங்கத் தமிழியல், மாதவி பதிப்பகம், சென்னை - 14, முதற்பதிப்பு: 31-12-1999.
9. தமிழ்ப் பேரகராதி, தொகுதி IV பகுதி. I. ப. 2353.
10. மேலது ப. 2353.
11. தமிழ்ப் பேரகராதி, தொகுதி. I, ப. 183.
12. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப. 60.
13. சாலினி இளந்திரையன், சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள், ப. 1.
14. மேலது. ப. 2.
15. மங்கையர்க்கரசி மயில்வாகனன், 'பண்டைத் தமிழர்தம் மனிதநேயச் சிந்தனை' தமிழியல் ஆய்வு, கருத்தரங்கக் கட்டுரைகள் தொகுப்பு, ப. 155-159.
16. தொல். பொருள். இளம். நூ. 150.
17. தொல். பொருள். செய். நூ. 229.
18. மங்கையர்க்கரசி மயில்வாகனன், 'பண்டைத் தமிழர்தம் மனிதநேயச் சிந்தனை, தமிழியல் ஆய்வு, கருத்தரங்கக் கட்டுரைகள் தொகுப்பு ப. 155-159.
19. கருவை. பழனிசாமி, 'விருந்தோம்பல் ஒரு பொருளாதார உத்தி முறை, 12 ஆவது ஆய்வுக் கோவை தொகுதி - 3.
20. ஞானசம்பந்தன், அ.ச. அகமும் புறமும், ப. 23.
21. இளமுருகன். மு., தமிழ்ப் பெருங்காப்பியங்களில் சங்க இலக்கியத்தின் செல்வாக்கு, ப. 146-147.
22. தொல். பொருள். கற். இளம். நூ. 190.
23. தொல். பொருள். இளம். உரை. ப. 322.
24. மாணிக்கம். வ. சுப. தொல்காப்பியக் கடல், ப. 210.
25. முத்துலக்குமி. வே. பண்டைத்தமிழ் இலக்கியங்களில் அறநெறிகள், ப. 57.
26. சாலினி இளந்திரையன், சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள், ப. 9.
27. தொல். பொருள், (உரைவளம்) புறத்திணையியல், பகுதி-1, ஆ. சிவலிங்கனார், ப. 35.
28. மேலது, ப. 37.
29. நாயுடு. அ. கி. தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம், ப. 288.
30. முத்துலக்குமி. வே. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அறநெறிகள், ப. 59.
31. சாலினி இளந்திரையன், சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள். ப. 39.

*****

தமிழிலக்கியங்களில் மனிதநேயம்

இரா. கமலா
ஆய்வாளர்

"எண்ணறிய பிறவிதனில் மானுடப் பிறவிதான்
யாதினும் அரிதரிது காண்
இப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ
எது வருமோ அறிகிலேன்"

சித்தர்கணம் (4–ஆம் பாடல்)

என்றார் தாயுமானவர்.

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பர் ஔவையார். பெறற்கரிய பிறவியில் நாம் செயற்கரிய நல்ல பல செயல்களைச் செய்தல் வேண்டும். அதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது மனிதநேயமே ஆகும். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் அன்புள்ளங்களில் சுரப்பதுதான் மனிதநேயம்.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" (அன்புடைமை (10)

என்பது குறள்.

இவ்வுலகில் வாழும் உயிர்களெல்லாம் அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்கின்றன. அன்பு இல்லை எனில் இவ்வாழ்க்கை வறண்ட பாலைநிலமாகிவிடும். அன்பின் முதிர்ந்த நிலைதான் அருள் என்றும் நேயம் என்றும் அழைக்கப்படுகின்றது. மனிதநேயம் என்பது மனிதன் கொண்டிருக்கும் நேயத்தைக் குறிக்கும். மனிதன் மனிதனிடத்துக் காட்டும் நேயத்தைக் குறிக்கும். மனிதன் மற்ற உயிர்களிடத்துக் காட்டும் நேயத்தையும் குறிக்கும். இத்தகைய மனிதநேயத்தை நம் தமிழ் இலக்கியங்கள் பெரிதும் பேசுகின்றன. புறநானூறு, பதிற்றுப் பத்து, ஆற்றுப்படை நூல்களில் மனிதாபிமானமிக்க செய்திகள், நிகழ்ச்சிகள் பலவற்றைப் பார்க்கிறோம்.

புறநானூறு காட்டும் மனித நேயம்

'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்பர். உண்பது நாழி உடுப்பவை இரண்டே' எனக் கூறுகின்றது புறநானூற்றுப் பாடல் (185,

வரி 5) ஒரு சாண் வயிற்றுக்காக மக்கள் எவ்வாறு உழைக்க வேண்டியிருக்கிறது? எல்லோரும் எக்காலத்தும் செல்வமுடையவராய் வாழ்ந்து விட முடியாது. செல்வம் படைத்தவன் இருந்தால் அங்கு ஏழை என்பவனும் இருத்தல் வேண்டும். ஏழையுடன் கூடப் பிறந்திருப்பது பசி. அத்தகைய பசியை மாற்றுகின்ற மனித நேயமிக்கவரைப் புறநானூற்றில் பார்க்கின்றோம்.

பசியை மாற்றும் உணவுக்கு ஆதாரம் நிலனும் நீருமேயாகும். நிலன்நெறி மருங்கில் நீரைச் சேமித்துப் புகழைச் சேர்த்தல் வேண்டும் என்பதைக் குடபுலவியனார் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்துகிறார். உண்டியினால் அமைந்தது உடல். எனவே உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்பதை மனித நேய உணர்வின் அடிப்படையில் அவர் கூறும் பாடலாவது,

"நீர்இன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" (புறம். 18)

என்பதாம்.

எந்த ஒரு காரணமும் இன்றி யார் மாட்டும் வேண்டுதல், வேண்டாமையின்றிப் பிறப்பது அருளாகும். அன்பின் முதிர்நிலை அருளாகும். அதன்பொருள் நேயமாகும். அருட்செல்வமே செல்வத்துள் செல்வமாகும். மற்றச் செல்வங்களெல்லாம் பூரியார் கண்ணும் உள. மனிதாபிமானம் மிக்கு அருள்நிலை முதிர்ந்த கோவூர்கிழார்தம் பாடல்கள் சிலவற்றைக் காண்போம். கிள்ளிவளவன் தன் பகைவனான மலையமான் குழந்தைகளை யானையின் காலடியில் போட்டுக் கொல்ல முயன்ற போது கோவூர்க்கிழார் அவனுக்கு மனிதாபிமானத்துடன் அறிவுறுத்துகிறார். 'கிள்ளிவளவனே! புறாவின் துயரமேயன்றி, வேறு பிறவற்றின் துயரங்களைக் களைந்தவன் ஆகிய சிபியின் மரபில் வந்தவனே நீ. இவர்களோ கற்றோர்கள் வறுமையுறா வண்ணம், தம் விளைபொருள்களைப் பகுத்துண்ணும் குளிர் நிழல் வாழும் வேளிர் மரபினர். யானையைக் கண்டு அழுகையை மறந்து நிற்கும் சிறார், தம்மைச் சுற்றியிருப்போர் புதியவராக இருப்பதை உணர்ந்து புதியதோர் வருத்தம் உடையார். நான் சொல்லியதைக் கேட்பது உன் விருப்பம்' எனக் கூறும் பாடலாவது,

"நீயே புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை
இவரே, புலனுழுதுண்மார் புன்கண் அஞ்சித்
தமது பகுத்துண்ணும் தண்ணிழல் வாழ்நர்
களிறு கண்டழூஉம் அழாஅல் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கண் நோவுடையர்
கேட்டனை யாயின் நீவேட்டது செய்ம்மே"

புறம். 40 (1-8)வரிகள்.

என்பதாம். இப்பாடலில் இருந்து மனிதநேயத்திற்கான கூறுகள் புலப்படுகின்றன. சோழகுலத்துதித்த சிபிச் சக்கரவர்த்தியின் அன்புள்ளமும் மலையமானும் மற்றையோரும் கல்விகற்ற புலவரின் வறுமையைப் போக்கும் வள்ளன்மை உடையவர்கள் என்பதும் புலனாகின்றன.

கோவூர்க்கிழாரின் அருள் உள்ளத்தை 47ஆவது புறநானூற்றுப் பாடலாலும் தெரிந்து கொள்ளலாம். சோழன் நலங்கிள்ளியிடமிருந்து நெடுங்கிள்ளியிடம் இளந்தத்தன் என்ற புலவர் பரிசில் வேண்டி வந்தார். அவரை ஒற்றன் எனக் கருதி நெடுங்கிள்ளி கொல்ல முயன்றபோது, உண்மையை உரிய நேரத்தில் எடுத்துச் சொல்லி வரிசைக்கு வருந்தும் புலவர் வாழ்க்கை பிறருக்குத் தீது செய்ய அறியாத்து என்பதை,

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்கு பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றமருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே" (புறம். 47 (1-7 வரிகள்)).

எனப் புலப்படுத்துகிறார்.

'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்ற விரிந்த பரந்த மனம் மனிதாபிமானம் மிக்கவர்க்கே அமையும். அருநெல்லிக்கனி தந்து ஔவையை வாழச் செய்த அதியமான் இறந்த ஞான்று அவன் தன் கருணையை, 'சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே' எனப் பாடுகிறார் அவ்வையார். பழுமரம் நாடிச் செல்லும் பறவைகள் போல் வள்ளல்களையும், அரசர்களையும் நாடிச் சென்ற பாவலர்கள்,

இரவலர்கள், பரிசிலர்கள் தம் இல்லாமையைக் களைந்த செய்திகள் புறநானூற்றில் காணக் கிடக்கின்றன.

'இரப்பார்க்கு ஒன்று ஈயாமை அச்சம்' என்பதை நாலடியார் உணர்த்துகிறது. காட்டில் இருந்த போது தன்னைக் காண வந்த புலவருக்குத் தம் தலையைக் கொடுத்துப் பொன்னைப் பெறும்படி மன்றாடிய குமணனின் மனிதநேயம் மறக்கற் பாற்றோ?

சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, அறியாது முரசுக்கட்டில் ஏறிய மோசிகீரனாரைக் கொல்லாது கவரி கொண்டு வீசியது அவன் தன் மனிதாபிமானத்தையன்றோ காட்டுகிறது.

"குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை எண்ணெய்
நுரை முகந்தனை மென்பூஞ் சேக்கை
அறிய தேறிய வென்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉஞ் சாலும் நற்றமிழ் முழுதறிதல்
அதனொடும் அமையா தணுக வந்துநின்
மதனுடைய முழவுத் தோளோச்சித் தண்ணென்
வீசி யோயே" (புறம். 50 (5-13 வரிகள்))

என்ற இப்பாடல் தமிழறிந்ததால் வேந்தன் மனிதநேயத்தில் சிறந்து விளங்குவதையும் எடுத்துக் கூறுகிறதன்றோ!

இறந்தவர் துன்புறாது இன்புறும் வண்ணம் கொடுத்த செல்வக் கடுங்கோ வாழியாதனின் அருட்பண்பினைப் பதிற்றுப் பத்து பகர்கின்றது. அவனைத் தாம் காணச் சென்றதன் காரணத்தைக் கபிலர் கூறும் போது,

"ஈத்த திரங்கான் ஈத்தொறு மகிழான்
ஈத்தொறு மாவள்ளியன் எனநுவலுநின்
நல்லிசைதர வந்திசினே' பதிற்றுப் பத்து 61, (12-14 வரிகள்.)

என்கிறார்.

"இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை
துன்பம் உறாஅ வரின்" (இரவு, (2) (1052))

என்பர் பொய்யிற் புலவர்.

தொலைவில் கூத்தர்கள் வரக்கண்டு ஓடிச்சென்று அவர்களை வரவேற்றுப் பொன்னும் பொருளும், தேரும் கொடுத்துதவிய செல்வக் கடுங்கோ வாழியாதன் சிறப்பைக் கபிலர்,

"அறங்கரைந்து வயங்கிய நாவிற் பிறங்கிய
உரைசால் வேள்வி முடித்த கேள்வி
அந்தணர் அருங்கலம் ஏற்ப நீர்பட்டு
இருஞ்சே றாடிய மணல்மலி முற்றத்துக்
களிறு முனைஇய தாரருந் தகைப்பிற்
புறஞ்சிறை வயிரியர்க் காணின் வல்லே
எஃகுபடை யறுத்த கொய்சுவல் புரவி
அலங்கும் பாண்டி லிழையணிந் தீமென
ஆனாக் கொள்கையை யாதலின்"

பதிற்றுப்பத்து 64, (3–11 வரிகள்)

"வறியார்க்கொன்று ஈவதே ஈகை" எனக் கூறுவது குறளாகும் (221). தம்மை நாடி வந்தோருக்கு உண்டியும், கூறையும், தேரும், அணியும், பொன்னும் பொருளும் கொடுத்துதவிய வள்ளல்கள், அரசர்களைப் பற்றிப் பாடுகின்றன ஆற்றுப்படை நூல்கள். பரிசு பெற்றான் ஒருவன் வழியில் எதிர்ப்படும் வறுமையாளனைப் பரிசில் பெற வள்ளலிடத்து ஆற்றுப் படுத்தும் போது அவன்தன் மனிதநேயமும் அன்புள்ளமும் புலப்படுகின்றன.

திருக்குறளில் காணப்படும் விருந்தோம்பல், இல்வாழ்க்கை, அன்புடைமை, அருளுடைமை போன்ற அதிகாரங்கள் மனிதநேயத்தை வலியுறுத்துவன.

"பகுத்துண்ணும் பண்பு மனிதநேயமுடையார்க்கே"

அமையும்.

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்" (இல்வாழ்க்கை. 4).

எனக் கூறுவது குறளாம். முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து. எனவே முகம் மாறாமல் அன்புடன் விருந்தினரை உபசரிக்க வேண்டும் என வற்புறுத்துகிறது விருந்தோம்பல் என்னும் அதிகாரம். இல்லறத்தில் இருப்பதெல்லாம் விருந்தினரைப் புரப்பதற்கே என வலியுறுத்திக் கூறுகிறார் வள்ளுவர்.

மனிதநேயம் மலர மனத்தில் நன்றியுணர்வு வேண்டும். பொறையுடைமை வேண்டும். இன்சொல் பேசுதல் வேண்டும். எவ்வுயிர்க்கும் இன்னாதவற்றைச் செய்யக் கூடாது. ஒப்புரவாற்ற அறிதல் வேண்டும். இதனை ஆசாரக்கோவை,

"நன்றியறிதல் பொறையுடைமை, இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவாற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத்தாரோடு நட்டல் இவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து" (ஆசாரக்கோவை –1)

என்கிறது. அன்ன சத்திரம் ஆயிரம் கட்டுவதை விடப் புண்ணியம் மிக்கது எழுத்தறிவித்தல். படிப்பார்க்கு வேண்டிய உதவி செய்து வாழ்தல் வேண்டும் என்பதை ஏலாதி அன்றே கூறிவிட்டது.

"ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம்
பேணொடும் எண்ணும் எழுத்துமிவை – மாணொடு
கேட்டெழுதி ஓதிவாழ்வார்க் கீந்தார் இம்மையான்
வேட்டெழுத வாழ்வார் விரிந்து" (ஏலாதி பா. 63).

என்கிறது. படிப்போர்க்கு மனிதநேயத்துடன் வேண்டுவனவற்றைத் தரும் நல்லுள்ளங்களைப் பற்றிய பாடலன்றோ இஃது.

சிலப்பதிகாரம் செப்பும் மனிதநேயம்

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் கோவலனை மனிதாபிமானம் மிக்கவனாகக் காட்டுகிறது. கோவலன் மணிமேகலை பிறந்த ஞான்று, மாதவியுடன் சேர்ந்து வருவோர்க்கெல்லாம் பொன்னும் பொருளும் அளிக்கின்றான். அந்தணன் ஒருவனும் ஆங்குச் சென்றபோது, பாகர்க்கடங்காது மதங்கொண்ட யானை ஒன்று அவனைச் சினத்தால் பற்றிக் கொண்டது. கோவலன் யானையை அடக்கி அதன் கோட்டினின்றும் அந்தணனை மீட்ட செய்தியைச் சிலப்பதிகாரம் அடைக்கலக் காதை வழி அறிகின்றோம்.

பார்ப்பனி ஒருத்தி, வீட்டில் வளர்க்கும் கீரி, தன் குழந்தையைக் கொன்றது எனத் தவறாக உணர்ந்து அதனைக் கொன்று விடுகின்றாள். அவள் கணவன் அவள் கையால் உண்பது பாவம் எனக் கருதி அவளைப் பிரிந்து கங்கையாடச் சென்றான். அவள் தன் பாவம் நீங்க ஓலை ஒன்றில் வாசகம் எழுதித் தந்தான் அவள் கணவன். பீடிகைத் தெருவில், பெருங்குடி வணிகர் மாடமறுகின் மனைதோறும் சென்று கருமக் கழிபலம் கொாண்மின் என அவள் இரந்த போது, கோவலன் அவளை அழைத்து அவள் துன்பம் கேட்டறிந்து அவள் பாவம் போகும் வண்ணம் தானம் செய்தனன்.

"மாதர் தானுற்ற வான்துயர் செப்பி
இப்பொருள் எழுதிய இதழிது வாங்கக்
கைப்பொருள் தந்தென் கடுந்துயர் களைகென

அஞ்சல் உன்றன் அருந்துயர் களைகேன்
நெஞ்சுறு துயரம் நீங்குக என்றாங்கு"
(சிலப். அடைக்கலக்காதை) (65-69)

கானம் போன கணவனை அவளுடன் கூட்டி வைத்து நல்லதோர் கருமம் செய்த கருணைமறவன் கோவலன்

பத்தினி ஒருத்தி படிற்றுரை எய்த, பொய்க்கரி கூறியோன் பூதத்தின் வாய் அகப்படும் போது அவன் தாய் படுதுயர் கண்டு தன்னையே அளிக்க முன் வந்தவன் கோவலன்.

மதுரை செல்லும் கோவலன் கண்ணகியோடு தாமும் சேர்ந்து கொண்டு அவர்கட்குத் துணையாய் நடந்த கவுந்தியடிகளின் கருணை போற்றத்தக்கது. மாதரியிடம் கோவலன் கண்ணகியை ஒப்படைத்த கவுந்தியடிகள், கண்ணகியைத் தாய் போல் பாதுகாக்க வேண்டும் என்பதை இடைக்குல மடந்தை மாதரியிடம் கூறுகின்றார்.

தன் கணவன் கொலையுண்டதை அறிந்த கண்ணகி, கோபக்கனல் பொங்க மதுரை வீதியில் மக்களைப் பார்த்து, இவ்வூரில் தெய்வம் உள்ளதா? அரசன் உள்ளானா? சான்றோர் உள்ளனரா என வினவுகிறாள்.

"ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டு கொல்" (ஊர் சூழ் வரி (55-56))

என்ற வரிகள் சிந்திக்கத் தக்கவை. பிறரால் கைவிடப் பெற்ற, பெற்றோரை இழந்த குழந்தைகளை எடுத்து வளர்க்கும் சான்றோர் அந்நாளில் இருந்ததை இவ்வரிகள் காட்டுகின்றன அன்றோ!

மணிமேகலை

மணிமேகலை சமணத்துறவி ஒருவன்
"காணா உயிர்க்கும் கையற்று ஏங்கி
உண்ணா நோன்போ டுயவல் யானையின்"
(மலர்வனம்புக்காதை (89-90))

வந்ததை உணர்த்துகின்றது. சமணர்கள் எவ்வுயிர்க்கும் ஊறு செய்யாதவர்கள் என்பதை இவ்வரி கூறுகிறது. அழகான கைகளில் அமுத சுரபியை எடுத்துக் கொண்டு, காணார், கேளார், முடவர் இவர்கட்கெல்லாம் அமுது வழங்கி, சிறைக்கூடத்தை அறக்கூடமாக மாற்றும் மணிமேகலையின் அறச்செயல்கள் மனிதநேயத்தையன்றோ காட்டுகிறது.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் மணிமேகலை, இராசமாதேவிக்கு அறிவுறுத்தும் போது,

"மல்லல் மாஞாலத்து வாழ்வா ரென்போர்
அல்லல் மாக்கட் கில்லது நிரப்புநர்
திருந்தேர் எல்வளை செல்லுல கறிந்தோர்
வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தோர்"

(சிறைவிடு காதை. 132–135)

"துன்ப மறுக்கும் துணிபொரு ளுணர்ந்தோர்
மன்பதைக் கெல்லாம் அன்பொழியார்"

(சிறைவிடு காதை. 136–137)

என்று மனிதநேயமிக்கவளாகத் திகழ்கிறாள்.

பெரியபுராணத்துள் வரும் திருத்தொண்டர்களின் பணிவிடைகளும், விருந்தோம்புதலும், பக்தி கலந்த மனிதநேயச் செயல்களாம். இளையான் குடி மாற நாயனார், திருக்குறிப்புத் தொண்டனார் தம் பணிகள் இவற்றிற்குச் சான்று பகரும்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

திருமந்திரமும், (85)

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல்
வேறொன் றறியேன் பராபரமே" *(பராபரக்கண்ணி 221)*

எனக் கூறும் தாயுமானவர் பாடலும்,

மனித உள்ளம் விரிந்து பெருகி அதனுள் புதையுண்டிருக்கும் மனிதநேயத்தையன்றோ உணர்த்துகிறது. எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் நினைக்கும் வித்தகர் தம் திறத்தைத் திருவருட்பா பேசுகிறது.

இராவணன் இராமனுடன் போர்புரிந்த போது, அவன் தனியனாய்ப் போர்க்களத்தில் நின்றுழி இராமன், 'இன்று போய் நாளை வா' எனப் பேசியதை மனிதாபிமான முறையில் கம்பர் காட்டுகிறார்.

ஒருசமயம் நாடெல்லாம் வற்கடத்துள் ஆழ்ந்த பொழுது ஞானசம்பந்தரும், அப்பர் பெருமானும் ஆண்டவனை வேண்டிப் பொருள் பெற்று மக்களுக்கு உதவினர்.

"வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசல் இல்லையே!"

எனப் பாடி ஞானசம்பந்தர் படிக்காசு பெற்றார். (திருஞான சம்பந்தர் - திருவீழிமிழலைப்பதிகம்) முதல் திருமுறை. அவிநாசியில் முதலையுண்ட பாலனை இறைவனைப் பாடிச் சுந்தரர் மீட்டதும் மனிதநேயத்தின் பாற்படும் செய்கையேயன்றோ!

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியார் நாட்டில் எல்லோரும் உணவினைப் பெறவேண்டும், பசியின்றி வாழ வேண்டும் என விரும்பினார். வயிற்றுக்குச் சோறிட்டு அனைவர்க்கும் பலகல்வி தருதல் வேண்டும் எனவும் விரும்பினார். நாட்டில் தனியொருவனுக்கு உணவில்லை எனில் இந்த உலகத்தையே அழித்து விடுவோம் என்றார். இப்பாடல் மனிதநேயத்தின் பால் எழுந்த பாடலன்றோ!

"இனியொரு விதி செய்வோம் அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்" (பாரத சமுதாயம் (2)

என்பதே அப்பாடல். தமிழர் உள்ளத்தால் உயர்ந்தவர்கள். நில்லாத உலகத்தில் நிலைக்கும் அறங்களைச் செய்து வாழ வேண்டும் என வற்புறுத்தினர். மனத்துக்கண் மாசிலனாய் இருந்து, வேண்டாத குணங்களை விடுத்து மனிதநேயத்துடன் வாழ்வதற்குத் தமிழ் இலக்கியங்கள் வழிகாட்டுகின்றன எனலாம்.

*****

நற்றிணையில் மனிதநேயச் சிந்தனைகள்

ஆ. மணவழகன்
ஆய்வாளர்

மனிதநேயம் என்பதை, 'மனிதன் மனிதனை மதித்துச் செலுத்தும் அன்பு'[1] என்ற க்ரியாவின் விளக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு அறிஞர் சிலர் ஆய்வர். இருந்தும், மனிதன் தன்னை ஒத்த பிற மனிதரிடத்துச் செலுத்தும் அன்போடு, மனிதர் அல்லாத பிற உயிர்களிடத்தும் காட்டும் அன்பு, பரிவு, கருணை ஆகியனவும் மனிதநேயமாகவே இவண் கருதப்படுகின்றன.

'தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை'[2] என்று அருளுடைமைக்கு விளக்கம் அளிக்கிறார் பரிமேலழகர். இவர் கூற்றை ஒப்புநோக்கு வழி அருளுடைமையும் இங்கு மனிதநேயமாகவே கொள்ளப்படுகிறது.

'மனிதன், மனிதனை மதித்துச் செலுத்தும் அன்பான மனிதநேயத்தினின்றும் உயர்ந்த நிலையினதாக 'உயிரிரக்கம்' அமைகிறது! மனிதநேயம் மனித உயிரிடத்துக் காட்டும் அன்பை மட்டுமே எண்ண, உயிரிரக்கம் மனித உயிர்க்குப் பல்லாற்றானும் துணைநிற்கும் விலங்குகள், தாவரங்களையும் மனித உயிருடன் ஒருங்கிணைத்துக் காண்பதால் 'உயிரிரக்கம்' என்பதே இங்குப் பின்பற்றப்படுகிறது'.[3] என்று உயிரிரக்கத்தையும், மனிதநேயத்தையும் வேறுபடுத்தி, மனிதநேயத்தினின்று உயிரிரக்கமே சிறந்தது என்று 'சங்கத்தமிழியல்' நூல் முன் வைக்கின்றது.

எனினும் இவண், மனிதநேயம் என்பதை, மனிதனிடத்துக் காட்டும் நேயம் என்று கொள்ளாமல், 'மனிதனிடத்துத் தோன்றும் நேயமாக'க் கொண்டு ஆயப்படுகிறது. மேலும், உயிரிரக்கம், அருளுடைமை போன்றனவும் மனிதநேயத்தின் கூறாகவே கொள்ளப்படுகின்றன.

அன்பு போன்ற குணங்கள் அடிப்படையிலேயே அனைத்து உயிர்களிடத்தும் காணப்படும் ஒன்றாகும். ஓர் உயிர், அதன் இனத்து உயிரிடம் அன்பு கொண்டிருத்தல் இயற்கை. மனிதன் மனிதனை மதித்துச் செலுத்தும் அன்பும் இதன்பாற்படும். பிற உயிர்களிடத் தினின்று மனிதனை வேறுபடுத்திக் காட்டும்.

'ஆறறி வதுவே அவற்றொடு மனனே' (தொல். 1526)

என்ற தொல்காப்பியர் ஆய்வின் வழி இங்குச் சிந்திப்பதே சிறப்பாக அமையும். மனிதனைப் பிற உயிர்களிடத்தினின்று வேறுபடுத்திக் காட்டும் அப்பண்பின் வழி தோன்றும் செயல்களை முன்னிறுத்தியே மனிதநேயக் கூறுகள் வெளிப்படுகின்றன. அன்பு, பண்பு, போன்ற மற்ற செயல்பாடுகள் மனிதநேயத்திற்கு அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன. 'பரிதாபம்' என்பது இரக்கப்படுதலோடு நின்று விடுவது. 'கருணை' என்பது இரக்கப்படுதலோடு, வேண்டுவன செய்வது. ஆயினும், இந்த இரண்டு செயல்களுமே மனிதநேயத்தின் வெளிப்பாடே. எவ்வுயிர் இன்னலுறும் போதும் அவ்வுயிர் தன்னுயிரே போல் எண்ணி இரங்குதல், அவ்வுயிர் நலம் பெற வேண்டுதல், வேண்டியன செய்தல் ஆகிய அனைத்துக் கூறுகளுமே மனிதநேயத்தின்பாற்படுகின்றன. உயிர்களுக்கு ஏற்படும் மறைமுகப் பாதிப்புகளைத் தவிர்த்தல் பொருட்டு, உயிரற்ற பொருள்களிடத்துக் கொள்ளும் நேயமும் இங்கு மனிதநேயமாகவே அமைகின்றது. இதன் அடிப்படையிலேயே இக்கட்டுரை அமைக்கப்படுகிறது.

ஆய்வுக்களம்

இக்கட்டுரை, சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான 'நற்றிணையை' ஆய்வுக்களமாகக் கொண்டுள்ளது.

நோக்கம்

பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் போன்றவற்றில் சிறந்திருந்த பழந்தமிழர், மனிதநேயம் மிக்கவர்களாகவும் வாழ்ந்திருந்தனர் என்பதை, அக்காலத்தில் தோன்றிய இலக்கியமான நற்றிணையைக் கொண்டு நிறுவுதலே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

நற்றிணை

சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகையில் முதலாவதாக வைத்துத் தொகுக்கப்பட்ட சிறப்பினைப் பெற்றது நற்றிணை. நல் + திணை - நற்றிணை என்ற இதன் பெயரே இதன் சிறப்பை உணர்த்தி நிற்கிறது. அக இலக்கியமான நற்றிணை 175 புலவர் பெருமக்களால் எழுதப்பட்ட 400 பாடல்களைத் தன்னகத்தே கொண்டது. 9 அடி இதன் சிற்றெல்லையாகவும், 12 அடி இதன் பேரெல்லையாகவும் அமைகிறது. இதனைத் தொகுத்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவராவார்.

நற்றிணையில் மனிதநேயம்

நற்றிணையில் காணப்படும் மனிதநேயச் சிந்தனைகள், ஆள்பவர்க்கு வேண்டிய மனிதநேயச் சிந்தனை, தனிமனிதர் காட்டும்

மனிதநேயச் சிந்தனை, பொதுவான மனிதநேயச் சிந்தனை என்ற மூன்று பகுதிகளாகக் கொண்டு ஆராயப்படுகின்றன.

அ. ஆள்பவர்க்கு வேண்டிய மனிதநேயம்

தனி மனிதன் தன் நற்குணங்களில் இருந்து மாறுபடுவதால், சமுதாயத்தில் ஏற்படும் பாதிப்புகளை விட, ஓர் அரசு மனிதநேயச் செயல்களினின்று வேறுபடுவதால் ஏற்படும் பாதிப்புகள் மிக அதிகம். இக்கருத்தினை மனத்திற் கொண்டே, இங்கு ஆள்பவர்க்குச் சொல்லப்பட்ட மனிதநேயச் சிந்தனைகள் முதலில் வைக்கப் படுகின்றன.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்'. (குறள். 388)

என்றார் வள்ளுவர். அப்படியாயின் முறையின்றி அரசாளும் மன்னன் இறை நிலைக்கு எதிர் நிலையாகவே கொள்ளப்படுவான் என்பது உட்குறிப்பு. இது போன்ற நல்லாட்சியினை வழங்கும் மன்னனைக் குறிப்பிடும் இடத்து, நற்றிணைப் பாடல் அடிகள்,

'கடன்அறி மன்னர் குடைநிழற் போலப்
பெருந் தண்ணெற்ற மர நிழல்' (நற். 146: 4–5)

என்று குறிப்பிடுகின்றன. உச்சி வெயிலில் நடந்து செல்வோர்க்கு வழியில் தென்பட்ட பெரிய மரத்தின் தண்ணிய நிழல், கடமை அறிந்து ஆட்சி செலுத்தும் மன்னனின் குடை நிழல் போல இருந்தது என்கின்றன இவ்வடிகள்.

'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை' (தொல். 1224)

என்ற உவமை குறித்த தொல்காப்பிய நூற்பா வழி அணுகும்போது, கடனறிந்து ஆட்சி செலுத்தும் மன்னனின் செயல் மிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. அதுவே சிறந்த மனிதநேயச் செயலாகவும் அமைகிறது.

அரசிற்குப் பொருள் ஈட்டும் வழிகளில் ஒன்று 'வரிவிதித்தல்' என்பது. இந்த வரிவிதித்தல், மக்களின் வாழ்க்கையினைக் கணக்கிற் கொண்டு அமையவேண்டுமே அன்றி, அரசிற்கு வரும் வருவாயைக் கணக்கிற் கொண்டு அமைந்து விடுதல் கூடாது. வருவாய் ஒன்றையே நோக்கமாகக் கொண்டால் அது மனிதநேயச் செயலாக அமையாது. மக்களும் நல்வாழ்வு வாழமுடியாது. இக்கருத்தையே, மக்கள், மரம் சாகும்படி அதன் மருந்தைப் பறிக்க மாட்டார்; தம் வலிமை முழுதும்

கெடும்படி உயர்தவமே ஆயினும் செய்யார்; மன்னர் குடிமக்கள் வளம் கெடும்படி வரி வாங்கார் என்று,

> 'மரம்சா மருந்தும் கொள்ளார், மாந்தர்;
> உரம்சாச் செய்யார், உயர்தவம்; வளம்கெடப்
> பொன்னும் கொள்ளார், மன்னர்' (நற். 226: 1–3)

என்ற நற்றிணையின் அடிகள் மனிதநேயத்தோடு சிந்திக்கின்றன.

ஆ. தனிமனிதர் காட்டும் மனிதநேயம்

அரசின் செயல்பாடுகள் வெளிப்படையான தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியவை என்றால், தனிமனிதச் செயல்பாடுகள் சமுதாயத்தில் மறைமுகத் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியவை. ஒரு சமுதாயத்தின் வளமையை, பெருமையைப் பறைசாற்றுவனவாக அமைபவை தனிமனிதச் செயல்பாடுகளும் அவர்தம் பழக்க வழக்கங்களும் எனலாம். இவையே, இலக்கியப் பதிவுகளாகவும் அமைகின்றன. தன்னை முதன்மைப்படுத்தாது, பிற உயிரை முதன்மைப்படுத்தும் போதுதான் ஒருவன் மனிதநேயம் மிக்கவனாக மலர்கிறான். இளம்பெருவழுதி, இவ்வுலகம் அழியாமல் உள்ளதற்கு,

> 'தமக்கென முயலா நோன்தாள்,
> பிறர்க்கென முயலுநர் உண்மை யானே' (புறம். 182: 8–9)

என்று காரணம் கூறுவது இங்குச் சிந்திக்கத் தக்கது. நற்றிணையின் பாடல் ஒன்று பிறர்க்கென வாழும் தலைவனின் பண்பினைக் குறிப்பிடும் போது 'அருள் நெஞ்சம்' கொண்டவன் என்று சிறப்பிக்கிறது.

> 'பிறர்க்குஎன முயலும் பேர்அருள் நெஞ்சமொடு' (நற். 186: 8)

என்பதால், பிறர்க்கென வாழ்பவர் அருள் நெஞ்சம் கொண்டவ ராவார் என்பதும், அதுவே, சிறந்த மனிதநேயம் என்பதும் புலனாகிறது.

தனி மனிதச் செயல்பாடுகளே அன்றி, அவர்தம் ஒழுக்க நெறிகளும் மனிதநேயத்தின் வழி அமைதல் வேண்டும். அதுவே சமுதாய நலனுக்கும் உகந்ததாக அமையும். காதல், வீரம், மானம் என்று வாழ்ந்த ஒரு காலச்சூழலில், காதலின் வழி உடன்போக்கு என்பது வெறுக்கத்தக்க, வேறுபடுத்திப் பார்க்கத்தக்க ஒன்றாகக் கருதப்படாத ஒரு காலச்சூழலில், மனிதநேயத்தின் வழி நின்ற ஒரு தலைவியின் செயல் இங்கு நோக்கத்தக்கது. தலைவி, தலைவனுடன்

உடன்போக்கிற்கு ஆயத்தமாகிறாள். ஒருவர் கண்ணிலும் படாமல் விடியற்காலையில் எழுகிறாள். வெளியில் செல்ல, தன் காற்சிலம்பு ஒலி எழுப்புமே என்றஞ்சி, அதனைக் கழற்றிப் பானையில் வைக்கிறாள். அவ்வேளையில், இச்சிலம்புகளைக் காணும்தோறும் எம் ஆயத்தார் என் நினைவால் வருந்துவார்களே என்றெண்ணி, கண்ணீர் சிந்துகிறாள். உடன்போக்கைத் தவிர்க்கிறாள். இச்செயல் உறவுநிலையால் ஏற்படும் இயல்பான பாசமேயன்றி, எப்படி மனிதநேயமாகும்? எனத் தோன்றினாலும், யாரைப் பற்றியும், எதைப்பற்றியும் கவலைப்படாமல், தன்னலம் ஒன்றையே தன்னகத்தில் கொண்டு மற்றவரைத் தவிக்க விடுவோர் உள்ள இன்றையச் சூழ்நிலையில், பெற்றோர்க்காகத் தன் வாழ்வை இழக்கத் துணிந்த இத்தலைவியின் செயல் மனிதநேயமாகவே இங்குக் கொள்ளப் படுகிறது.

பாடல்,

அரிஅமை சிலம்பு கழீஇ, பல்மாண்

--

நும்மொடு வரவு தான் அயரவும்,
தன்வரைத்து அன்றியும் கலுழ்ந்தன கண்ணே'

(நற். 12:4010)

இத்தகைய செயல் ஒருவகையான வாழ்க்கைத் தியாகம் எனலாம். இதே போன்ற வாழ்க்கைத் தியாகச் செயல்கள் தலைவனிடத்தும் காணப்படுவது சிறப்பான ஒன்றாகும். தலைவனும் தலைவியும் உடன்போக்கு மேற்கொள்கின்றனர். இடையில் தலைவி களைப்புற்றாள். அவள் களைப்பு நீங்க இடைச்சுரத்தில் தங்கவைக்கிறான் தலைவன். அவ்வேளையில் அவ்விடம் கள்வர்கள் ஆயுதங்களுடன் எதிர்ப்படுகின்றனர். அஞ்சாமல் அவர்களை அடித்து விரட்டுகிறான் தலைவன். அதே வேளையில், தலைவியைத் தேடி அவளின் ஆயத்தார் அங்கு வருகின்றனர். ஆனால் தலைவனோ அவர்களை எதிர்கொள்ளாது, எதிர்க்க எண்ணாது, ஒளிந்து கொள்கிறான். தன் வாழ்வினும் தன்னை விரும்பியவளின் சுற்றத்தார் நல்வாழ்வினை எண்ணும் இத்தலைவனின் மனிதநேயப் பண்பு இவ்விடம் வெளிப்படுகிறது. தலைவனின் இச்செயலை,

'கிடின்என இடிக்கும் கோல்நொடி மறவர்
வடி நவில் அம்பின் வினையர் அஞ்சாது
அமரிடை உறுதர, நீக்கிநீர்
எமரிடை உறுதர ஒளித்த காடே' (நற்: 48: 6-9)

என்னும் நற்றிணைத் தோழியின் கூற்றில் காண முடிகிறது. இதே போன்று மற்றொரு தலைவனும் இடைச்சுரத்தில் தலைவியிடம் ஒய்வெடுக்கச் சொல்லி,

'அமர்வரின், அஞ்சேன், பெயர்க்குவென்
நுமர்வரின், மறைகுவென் மாஅ யோளே' (நற். 362: 9-10)

என்று கூறுவதிலிருந்து, கள்வர்கள் வந்தால் அஞ்சாது எதிர்க்க எண்ணும் அவனது ஆண்மையையும், தலைவியின் ஆயத்தார் வந்தால் மறைந்துகொள்ள எண்ணும் அவனது மனிதநேயப் பண்பையும் காண முடிகிறது.

விருந்துவரின் உவக்கும் பண்பு

பழந்தமிழரிடம் காணப்பட்ட ஒப்பற்ற மனிதநேயப் பண்புகளில் ஒன்று விருந்தோம்பலாகும். அதிலும், ஆண்மகன் வீட்டில் இல்லாத காலத்தும், மகளிர், நள்ளிரவில் விருந்து வந்தாலும், இன்முகத்துடன் வரவேற்று, வகையான உணவுகளைச் சமைத்துக் கொடுத்து உபசரித்த பண்பட்ட நேயத்தினைப் பழந்தமிழ் இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. நற்றிணையிலும் இத்தகைய மனிதநேயச் செயல்கள் காணக்கிடைக்கின்றன.

மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே'
(மணி. 11:95-96)

என்று மணிமேகலை உணவு கொடுத்தலின் பெருமையை உலகிற்கு உணர்த்துகிறது. இரவு நேரத்தில் வந்த விருந்திற்கு, இல்லை என்று சொல்லாது, இருப்பதைக் கொடாது, இரவு என்றும் பாராது, நெற்றி வியர்க்க, நெய்விட்டுச் சமைத்த ஊனோடு கலந்த உணவினை வழங்கிய தலைவியை,

'எல்லி வந்த நல்இசை விருந்திற்கு,
கிளர்இழை அரிவை நெய் துழந்து அட்ட
விளர்ஊன் அம்புகை எறிந்த நெற்றி' (நற். 41: 6-8)

என்ற நற்றிணை அடிகள் காட்டுகின்றன.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' (குறள். 322)

என்ற வள்ளுவரின் வாக்கு இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

இதே போல, இரவு நேரத்தில் விருந்து வந்தாலும் உவக்கும் தலைவியை,

'அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்' *(நற். 142: 1)*

என்ற நற்றிணை அடியும், விருந்து வரவேண்டும் என்ற விருப்பத்தினைக் கொண்ட தலைவியை,

'விருந்துஅயர் விருப்பினள் திருந்து இழையோளே
(நற். 361: 1)

என்ற நற்றிணையின் அடியும் காட்டுகின்றன.

தோழி காட்டும் மனிதநேயம்

சங்க இலக்கியங்களின் அகப்பாடல்களில் தோழியின் பங்கு மிகப்பெரியதாக அமைகிறது. தான் வேறு, தலைவி வேறு என்ற நிலையில் நீங்கி,

'நினக்கு யான் உயிர் பகுத்தன்ன மாண்பினேன்'
(நற். 128: 4)

என்ற 'ஒருயிர் ஈருடல்' நிலையினை இவர்களிடத்துக் காண முடிகிறது. தோழியின் எண்ணம், சொல், செயல் அனைத்துமே தலைவியின் நலம் பேணுவதாகவே அமைகின்றன. தோழி, தலைவியின் பால் காட்டும் அன்பு, இரக்கம், கருணை போன்றவை நட்பு என்ற உறவுநிலையால் வந்ததே ஆதலால், அது மனிதநேயமாகுமா? எனத்தோன்றினாலும், உறவுகளுக்குள்ளும் எதிர்பார்ப்புகள் அற்ற நிலையில் மேற்கொள்ளப் படும் நற்செயல்கள் மனிதநேயமாகவே கொள்ளப்படுகின்றன. இந்த வரையறையின் அடிப்படையில் நற்றிணையின் பல பாடல்கள் தோழியை மனிதநேயம் மிக்கவளாகக் காட்டியிருப்பினும், எல்லாவற்றினும் சிறந்ததாக ஒரு காட்சி அமைகிறது. தோழி, தலைவியைத் தலைவனுடன் உடன்போக்கிற்குக் கொண்டு சேர்க்கிறாள். அப்பொழுது தலைவனிடம் 'தலைவி' இளமையாக இருக்கும் இவ்வேளையில் அவளை நீ விரும்புகிறாய். அவள் நலன் பேணுகிறாய். இனி அவளுக்கு உன்னை விட்டால் வேறு துணையில்லை. இப்பொழுது காட்டும் இதே அன்பினை, அவள் நரை கூடி, கிழப்பருவம் எய்தி, உடல் தளர்வுற்ற அவ்வேளையிலும் காட்ட வேண்டும்' என்று வேண்டுகிறாள். இதனை,

'அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்,
பொன்நேர் மேனி மணியின் தாழ்ந்த

நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்,
நீத்தல் ஓம்புமதி' (நற். 10: 1–4)

என்ற நற்றிணை அடிகள் காட்டுகின்றன. அநாதை இல்லங்களும், முதியோர் இல்லங்களும் பெருகிவிட்ட இக்காலத்தில், இதுபோன்ற அரிய சிந்தனைகள் மனிதநேயத்திற்கு வலுவூட்டுவனவாக அமைகின்றன.

எவ்வுயிரும் தன்னுயிரே போலாதல்

எவ்வுயிராயினும் தன்னுயிரே போல எண்ணி இரங்குதலும் மனிதநேயப் பண்பாகவே கொள்ளப்படுகிறது.

'எவ்வுயிர்க் காயினும் இரங்குதல் வேண்டும்'
(மணி. 11:95–96)

என்கிறது மணிமேகலை. எவ்வுயிரும் தன்னுயிரே போல எண்ணி இரங்குதலோடு, எவ்வுயிர்க்கும் தீங்கு நேரா வண்ணம் காத்தலும், தீங்கு நேர்ந்துழி களைதலும் மனிதநேயத்தின் உயர்நிலையாம். இவை போன்ற மனிதநேயப் பண்புகளை நற்றிணையில் காண முடிகிறது. தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள்தேடச் சென்றான். வெகுநாட்கள் பிரிந்திருந்து, வினைமுடிந்து, தலைவியைக் காணும் ஆவலில் தேரில் வந்து கொண்டிருக்கிறான். நெஞ்சத்தின் வேகத்திற்குத் தேர் ஈடுகொடுக்கவில்லையே என்று வருந்துவது மனித இயல்பு. ஆனால், இத்தலைவன் தான் செல்லும் விரைவில், வழியில் திரியும் நண்டுகளுக்கு ஊறு நேர்ந்துவிடக் கூடாதே எண்றெண்ணி, தேரினை மெதுவாகச் செலுத்துகிறான். இது மனிதநேயத்தின் வழி உயிரிரக்கத்திற்கு உதாரணமாக அமைகிறது. இதனை,

'ஆழி மருங்கின் அலவன் ஓம்பி
வலவன் வள்பு ஆய்ந்து ஊர' (நற். 11: 7–8)

என்ற நற்றிணை அடிகள் காட்டுகின்றன.

உடன்பிறந்தாரையே உதறித்தள்ளும் இன்றைய காலச்சூழலில், தான் வளர்த்த புன்னை மரத்தினைத் தன் 'உடன்பிறந்தாளாக' எண்ணும் உயரிய பண்பினை உடைய தலைவியை நற்றிணைப் பாடல் ஒன்று காட்டுகிறது.

'விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி,

நும்மினும் சிறந்தது; நுவ்வைஆகும் என்று,
அன்னை கூறினள், புன்னையது சிறப்பே' (நற். 172: 1–5)

இவ்வடிகளின் மூலம், பழந்தமிழரின் இயற்கையோடு ஒன்றிய வாழ்வினையும், மரம் போன்று அஃறிணை உயிர்களிடத்தும் அன்பு கொண்டு ஒழுகினர் என்பதையும் அறிய முடிகிறது. இப்பண்பு வேறு எச்சமுதாயத்தினின்றும் தமிழர்களை உயர்த்திக் காட்டுவதாக அமைகிறது. 'நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்' என்ற அடியால், பெற்ற மகளை விட வளர்த்த மரத்தினை உயர்வாக எண்ணிய பழந்தமிழரின் பாங்கினைப் பார்க்க முடிகிறது. மரம், செடி, கொடி போன்றவற்றைப் பயன் கருதி வளர்த்தல் என்பது வேறு; பாசம் கருதி வளர்த்தல் என்பது வேறு; பாசத்தைப் பகிர்ந்து வளர்த்த தலைவியை இப்பாடல் காட்டுகிறது.

'ப்ளூ கிராஸ்' போன்ற அமைப்புகளெல்லாம் இன்று அதிகமாகப் பேசப்படுதலும், ஒருபுறம் 'பசுவதைத் தடுப்புச் சட்டம்' இயற்றப்படுதலும்,

கறந்து குடிப்பாய்
கன்றிற்குவிட்ட பாலை;
அது நியாயம்!
இறந்த பசுவின்
தோலுரித்துப் பிழைத்தால். . .
அது அநியாயம்;
இது என்ன நியாயம்?[4]

என்ற குமுறல் மறுபுறம் ஒலித்துக் கொண்டிருக்கும் இன்றைய காலநிலையில், நல்ல எருது நடைதளர்ந்து போனதால் அதனிடத்து வேலை வாங்காது, துன்புறுத்தாது, புல்வெளியில் மேய விட்டுவிட்ட மனிதநேயச் செயலினை நற்றிணைக் காட்டுகிறது.

'நல்எருது நடைவளம் வைத்தென, உழவர்
புல்லுடைக் காவில் தொழில்விட் டாங்கு' (நற். 315: 4-5)

என்ற இவ்வடிகளின் வழி, 'உயிரினங்களைக் காக்கிறோம்' என்ற போலி விளம்பரத்துடன் தங்களை முன்னிலைப்படுத்திக்கொள்ளும் இன்றைய சமூக சேவகர்களைப் (!) போலல்லாமல், பழந்தமிழர், இயற்கையிலே தங்களுள் மனிதநேயச் சிந்தனையைக் கொண்டிருந்தனர் என்பது தெளிவு.

மரங்கள், விலங்குகள் போன்றவற்றின் மீது இரக்கம் கொண்டிருந்ததைப் போலவே பழந்தமிழர் பறவைகளிடத்தும் இரக்கம் கொண்டிருந்தனர். பறவைகளுக்கும் கருணை காட்டினர். நிலத்தில் விளைந்த விளைச்சலை வீட்டில் சேர்க்கும் காலம் வந்தது.

நல்ல வெண்ணெல் விளைந்திருந்தது. அதனை அரிந்து எடுக்க எண்ணிய உழவர்கள் 'தண்ணுமை' என்னும் கருவியை முழக்கி இசையை எழுப்பினர் என்ற குறிப்பினை நற்றிணையின்,

'வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்
பழனப் பல்புள் இரிய' (நற். 350: 1–2)

என்ற அடிகள் தெரிவிக்கின்றன. இதன் மூலம், நெற்பயிரில் சிறு குருவிகள் கூடுகட்டி வாழ்ந்திருக்கும். நெல்லை அரிந்தெடுக்கும் போது அக்குருவிகளுக்குத் தீங்கு நேரிடும். இசையை முழங்கி ஆராவாரம் செய்தால், அக்குருவிகள் தங்கள் கூட்டத்தோடு வேற்றிடம் பெயரும் என்ற மனிதநேயச் சிந்தனையை உணரமுடிகிறது.

இ. பொதுவான மனிதநேயச் சிந்தனை

சமுதாய நோக்கில், பொதுவாக மக்களுக்கு வேண்டுவனவாக ஆங்காங்கே சில மனிதநேயச் சிந்தனைகளை நற்றிணை காட்டுகிறது. அவை பழமொழிகளின் அமைப்பில் காணப்படுகின்றன.

எதிரியாயினும் அவரின் பிரிவும் மனதினைக் கலங்கச் செய்யும் என்பதை,

'பழகிய பகையும் பிரிவின் னாதே' (நற். 108:6)

என்ற அடி காட்டுகிறது. எதிரியாயினும் அவருக்கும் இரக்கங்காட்டும் பழந்தமிழரின் பண்பை இவ்வடி உணர்த்துகிறது. தீயவர் பலர் தண்டிக்கப்படா விட்டாலும், நல்லவர் ஒருவர் தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்பது மனிதநியதி. இந்நியதியைச் சங்கத்தமிழர் நன்கு உணர்ந்திருந்ததாலேயே,

'பழிபிறி தாகல் பண்புமார் அன்றே' (நற். 117:11)

என்று, பாவம் ஒருபுறம், பழி வேறுபுறம் சென்றுவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். அப்படி நேர்ந்துவிடுதல் பண்பும் அல்ல என்பதை உணர்ந்ததோடு உலகிற்கும் உணர்த்தினர். மேலும்,

'தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாமறிந்து உணர்க" (நற். 116: 1–2)

என்பதால், தீமைகள் நடந்துவிட்ட போது, அவசரப்பட்டு ஒரு முடிவிற்கு வந்து தண்டணை வழங்கிவிடுதல் முறையாக அமையாது. உண்மையை ஆய்ந்தறிந்தே, முடிவினைக் கூற வேண்டும் என்பதில் உலகிற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்தனர். நல்லவர் தண்டிக்கப்பட்டு

விடக்கூடாது என்பதில் மனிதநேயத்தோடு சிந்தித்துச் செயல்பட்டுள்ளனர்.

பிறர் உழைப்பில் உயிர் வாழாமல், தன் உழைப்பில், உழைக்க முடியாதவர்களையும் வாழ வைப்பது மிகச் சிறந்த மனிதநேயச் செயலாகும். இதை விட இனிமையான செயல் வேறில்லை என்பதை நற்றிணையின்,

'தமதுசெய் வாழ்க்கையி னினியது உண்டோ?' (நற். 130: 5)

என்ற அடி உணர்த்துகிறது.

சில சமயங்களில் மனிதநேயமற்ற செயல்போல் தோன்றுவனவும், மனிதநேயச் செயலாகவே அமையும். சிலர் தேவையை அறிந்து வேட்டது கொடாமல், வேண்டியதைக் கொடுப்பது இதன்பாற்படும். பிணியுற்றோர், தன் உடலுக்குத் தீங்கானவற்றின் மீதும் வேட்கையுற்றிருப்பது இயற்கை. ஆனால், அவ்வேளையில் அவர்களின் உடல்நலத்திற்கு உகந்ததை அறிந்து கொடுப்பது மருத்துவனின் மனிதநேயப் பண்பாக அமையும். இதனை,

'அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது,
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் போல' (நற். 136: 2-3)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

உண்மைச் செல்வம்

செல்வம் என்பது ஒருவன் சேர்த்து வைத்திருக்கும் பொன்னையோ, பொருளையோ, இனிதாகப் பயணம் செய்ய வைத்திருக்கும் ஊர்திகளையோ, இனியவை செய்யக் காத்திருக்கும் வேலையாட்களையோ பொறுத்து அமைவதில்லை. நல்லவர்களின் செல்வம் என்பது, அவரைச் சேர்ந்தோரின் துன்பங் கண்டு களையும் உயர்ந்த பண்பேயாகும் என்ற இவ்வரிய மனிதநேயச் சிந்தனையை,

'நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்று; தன் செய்வினைப் பயனே,
சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே' (நற். 210: 5-9)

என்ற நற்றிணை அடிகள் உணர்த்துகின்றன.

முடிவு

மனிதநேயம் என்பது, பிறர்க்குச் சிறுதுன்பம் நேர்ந்தபோதும், தன் நலனைக் கருதாது விரைந்து சென்று, அத்துன்பம் களைய முனைவதாகும்.

கண்ணுறு விழுமம் கைபோல் உதவி' (நற். 216:)

என்ற நற்றிணை அடி உரைப்பது போல, கண்ணிற்கு ஏதாவது துன்பம் என்றால், கை சிந்திப்பதில்லை, விரைந்து சென்று துயர் நீக்கும். மனிதநேயம் என்பதும் இதைப் போன்றதே. தனக்கு ஏற்படும் நன்மை, தீமைகளைக் கருதாது, எதிர் இருப்போரின் / இருப்பதின் நன்மை ஒன்றையே கருத்தாகக் கொண்டது. அவர்தம் தீமை களைய முனைவது.

மனிதநேயப் பண்புகள் என்பது, நாம் அரிதின் முயன்று உருவாக்க வேண்டிய ஒன்றல்ல,

'ஆன்றோர் செல்நெறி வழாஅச்
சான்றோன் ஆதல்நற்கு அறிந்தனை தெளிமே' (நற். 233: 8–9)

என்ற அடிகளின் கருத்தைப் போல, நல்லோர் காட்டிய நல்வழிகளில் வாழ்ந்தாலே, மனிதநேயப் பண்புகள் மலர்ந்து மக்களிடையே மணம் பரப்பும் என்பது தெளிவு. வள்ளுவரின்,

'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்' (குறள். 280)

என்ற முடிவினை ஒப்பு நோக்கல் இங்குச் சிறப்பாக அமையும்.

தொகுப்பு

1. அன்பு, இரக்கம், கருணை முதலிய மனிதனின் அடிப்படைப் பண்புகளிலிருந்து தோன்றி வளர்வதே மனிதநேயம்.

2. மனிதன் மனிதனிடத்துச் செலுத்தும் அன்போடு, பிற உயிர்களிடத்தும் காட்டும் அன்பு, இரக்கம், கருணை போன்றவையும் மனிதநேயமாகவே கொள்ளப் படுகின்றன.

3. சில மனிதநேயச் செயல்கள் உறவுநிலை என்ற அடிப்படையில் எழுந்ததாகக் கருதப்படினும், எதிர்ப்பார்ப்புகள் அற்ற நிலையில் செய்யப்படும் இவை

போன்ற செயல்களும் இங்கு மனிதநேயத்தின்பால் வைக்கப்படுகின்றன.

4. எவ்வுயிர்க்கும் மனதால், மொழியால், செயலால் நல்லன ஆற்றுதல் என்னும் உயர்பண்பே மனிதநேயத்தின் முழுமையெனக் கொள்ளப்படுகிறது.

சோதனைக் குழாயில்
சொந்தங்களை உண்டாக்கினோம்!
போதனைகள் கேட்க-கணிப்
பொறிகளைப் படைத்தோம்!
குளோனிங்கால்
கோபுரத்தை அடைந்தோம்!
இணையதளத்தால்
இமயத்தைத் தொட்டோம்!
நாடுவிட்டு நாடு மாறினோம்!
மதம் விட்டு மதம் மாறினோம்!
மனிதனாக இருந்தும்
நாம் மனிதநேயம் மறந்தோம்![5]

என்றிருக்கும் நிலையினை மாற்றி, அல்லன தவிர்த்து, நல்லன செய்து நாம் மனிதநேயம் மலரச் செய்வோம்.

குறிப்புகள்

1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, தமிழ்-தமிழ்-ஆங்கிலம் முதல் பதிப்பு 1992.

2. குறள், அருளுடைமை விளக்கம், பிப்ரவரி 1001, பூம்புகார் பதிப்பகம், சென்னை.

3. ச. சிவகாமி, சங்கத்தமிழியல், மாதவி பதிப்பகம், சென்னை 14.

4. கட்டுரையாளரின் கவிதை வரிகள்

5. கட்டுரையாளரின் கவிதை வரிகள்

****

பதிற்றுப்பத்தில் மனிதநேயக் கூறுகள்

ஆ. மணவழகன்
ஆய்வாளர்

மனிதநேயம் என்பதை, மனிதரிடத்துக் காட்டும் நேயம் என்றும் மனிதரிடத்துத் தோன்றும் நேயம் என்றும் இருவகையான கருத்துகளால் மதிப்பிடுவர். மனிதரிடத்துத் தோன்றி மனிதரிடத்தும் மனிதரல்லாத பிற உயிர்களிடத்தும் காட்டப்படும் நேயத்தையே மனிதநேயம் எனக்கொள்ளல் பொருந்தும். அன்பு, கருணை, பரிவு, பாசம், அருள், நேயம், இரக்கம் என்பன ஒன்றுபோலவே தோன்றிடினும், பார், கவனி, நோக்கு என்பனவற்றிற்கு உள்ளது போன்ற நுணுக்கமான வேறுபாட்டை இவற்றிலும் உணரலாம்.

நேயம் என்பதற்குப் பொருத்தமான சொற்களாக அருள், கருணை என்பனவற்றைச் சுட்டலாம் என்றாலும், கருணை என்பதையே ஏற்றதாகக் கருத வாய்ப்புள்ளது. காரணம் அருள் என்பதற்குப் பல பொருள்கள் இருந்தாலும் முதன்மைப் பொருளாகக் கடவுள் பக்தருக்குப் பாவிக்கும் அருளே கொள்ளப்படுகிறது. 'அருள் பாவித்தார்' என்பது இதன் பயன்பாட்டுத் தொடராக உள்ளது. கருணை என்பதற்கு 'உயிர்களுக்கு இரங்கும் பண்பு; துன்பம் முதலியவற்றைத் தீர்க்க வல்ல அருள்'[1] எனப் பொருள் கொள்ளப்படுவதால் இப்பொருத்தம் சரியானதாக இருப்பதை உணரலாம். மேலும், இரக்கம் என்பனவற்றிற்குச் சொல்லப்படும் 'பிறர் துன்பம் கண்டு வருந்தும் உணர்வு; பரிவு; மன உருக்கம்;'[2] என்பதும் கருணைக்குக் காட்டப்பட்ட விளக்கத்தினுள் அடங்குதலை அறியலாம். மேலும், அருளுடைமையை விளக்க வந்த பரிமேலழகர் 'தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை'[3] என்கிறார்.

அன்பும் மனிதநேயமும் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றுவதாகவே கொள்ளப்படுகிறது. இவற்றை, அன்பின் வழிப்பட்ட மனிதநேயம், மனிதநேயத்தின் வழிப்பட்ட அன்பு எனக் கொள்ளலாம். இருந்தும் இவற்றில், மனிதநேயத்தின் வழிப்பட்ட அன்பே உயர்வு கருதிச் சிறப்பாக நோக்கப்படுகிறது. இதன் அடிப்படையிலேயே இக்கட்டுரை கொண்டு செல்லப்படுகிறது.

பதிற்றுப்பத்து

பத்துப்பத்து என்ற பொருளமைந்த பதிற்றுப்பத்தானது சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. பத்துச் சேர மன்னர்களைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய பத்துப் பத்துப் பாடல்களின் தொகுதியே பதிற்றுப்பத்து எனப் பெயர்பெற்றது.

சங்க இலக்கியங்கள் யாவற்றிற்கும் இல்லாத சிறப்பு இப்பதிற்றுப்பத்திற்கு உண்டு. சேர அரசர்களைப் பற்றி மட்டுமே உரைக்கும் ஒரு வரலாற்று ஆதாரமாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஒவ்வொரு பத்துப்பாட்டின் இறுதியிலும் பதிகம் என்னும் தலைப்பில் சில அடிகள் செய்யுளாகவும் உரைநடையாகவும் காணப்படுகின்றன. சேர மன்னர்களுடைய நாட்டுவளம், கொடைச் செயல், மக்கள் வாழ்க்கை, படைத்திறன், மனைமாட்சி முதலியவற்றை இந்நூலில் அறியலாம். இதில் முதற்பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. இப்பதிற்றுப்பத்தில் பொதிந்துள்ள மனிதநேயக் கூறுகளை வெளிக்கொணருவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

> 'அன்பு, அருள், ஈவு, இரக்கம்
> இருந்த இடம் தெரியவில்லை! – அவை
> அடிப்படைக் குணங்களென்று
> அறிந்துகொள்ள வழியுமில்லை!
> கணினியோடு பேசுவதே கலாச்சாரம் ஆனது! – மண்ணில்
> காட்டும் நேயமெல்லாம் வெறும் காட்சியென்று ஆனது!
> மனிதராக இருந்தும் மனிதநேயம் மறந்தது!
> இலக்கியத்தில் இருக்குமென்று இடந்தேடலானது!'[4]

மனிதநேயப் பண்புகள்

மனிதநேயச் செயல்கள் வெளிப்பட, மனிதரின் மனத்தில் அடிப்படையிலேயே சில நற்பண்புகள் பெற்றிருப்பதென்பது இன்றியமையாமையாகிறது. பாலையில் பயிர்வளர்வதென்பது பார்த்திராத ஒன்றல்லவா! அடிமனத்தில் இருக்கும் சில நற்குணங்களே அவ்வப்பொழுது மனிதநேயமிக்க மொழிதலுக்கும் தொழிற் படுதலுக்கும் காரணமாக அமைகின்றன. இவ்வகையான பண்புகளைப் பதிற்றுப்பத்து சுட்டிக் காட்டுகிறது.

'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்'[5] என்ற புறவரிகளைப் போல, மனிதநேயத்திற்கு வேண்டிய பண்புகளை விட, வேண்டாத பண்புகளைப் பட்டியலிடுகிறது

பதிற்றுப்பத்து. இதில், மிக்க சினமும், மிக்க காமமும், மிக்க கண்ணோட்டமும், மிக அஞ்சுதலும், வாய்மையுடன் பொருந்தாத பொய் சொல்லுதலும், தொடர்பு கொண்டவரிடம் அளவற்ற அன்புடைமையும் இவை போன்ற பிறவும் அடங்கும் என்கிறது. இதனை,

> ‘சினனே காமம் கழிகண் ணோட்டம்
> அச்சம் பொய்ச்சொ லன்புமிக உடைமை
> தெறல் கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து
> அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்’ (22:1–4)

என்பதன் வழி அறியலாம். இதே போல மனிதநேயத்திற்குத் தேவையான நற்பண்புகளான, நாட்டில் வாழும் மக்கள் தம்முள் மற்றவரைத் துன்புறுத்தாமலும் மற்றவர்க்கு உரியதான தமக்குத் தொடர்பு இல்லாத பொருளை விரும்பாமலும், குற்றம் இல்லாத அறிவு உடையவராய்ச் செம்மை நெறியில் தவறாது, பலர்க்கும் பகுத்துத் தந்து தாமும் உண்டு இனிது வாழ வேண்டும் என்பனவற்றை மொழிகிறது கீழ்க்கண்ட அடிகள்,

> ‘தீதுகே ணிகந்து நன்றுமிகப் புரிந்து
> கடலுங் கானமும் பலபயம் உதவப்
> பிறர்பிறர் நலியாது வேற்றுப்பொருள் வஃகாது
> மையில் அறிவினர் செவ்விதின் நடந்துதம்
> அமர்துணைப் பிரியாது பாத்துண்டு மாக்கள்
> மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய’ (22: 5–10)

இவ்வகையான பண்புகளின் அடிப்படையில் முதல் நிலை மனிதநேய வெளிப்பாடான ‘மொழிதல்’ அமைகிறது. மனிதநேய மொழிதல் என்பதை, இன்சொற்களால் பிறர் மன மகிழ்ச்சியை உண்டாக்குதல்; ஆதரவான சொற்களால் ஆற்றுப்படுத்துதல் எனலாம். இவ்வடிப்படையில், கேட்டார்க்கு இன்பத்தைத் தருதலான சொற்களைப் பேசுபவன் என்பதை,

> நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்’ (55:10–12)

என்ற பதிற்றுப்பத்தின் மொழியில் உணரமுடிகிறது. தாம் பெற்ற இன்பத்தினை எல்லோரும் பெற வேண்டும் என்ற நோக்கில் ஆற்றுப்படுத்தும் பண்பைப் பதிற்றுப்பத்தின் பல பாடல்கள் காட்டுகின்றன. அதில்,

> ‘செண்மோ பாடினி நன்கலம் பெறுகுவை’ (87:1)

என்ற பெருங்குன்றூர்க் கிழார் சொல்லையும்,

'கடனறி மரபில் கைவல் பாண
தென்கடன் முத்தமொடு நன்கலம் பெறுகுவை' (67:3-4)

என்ற காக்கைப் பாடினியார் மொழியையும் சுட்டலாம்.

மனிதநேயச் செயல்கள்

மனிதநேயப் பண்புகளின் வழி, மனிதநேய எண்ணம், மனிதநேய மொழிதல் என்பனவற்றின் உயர்நிலையாக மனிதரிடத்து வெளிப்படுவன மனிதநேயச் செயல்களாக அமைகின்றன.

கொடை

கொடையில் சிறந்த குறுநில மன்னர்களும் பெருநில வேந்தர்க்கும் மேலாகப் போற்றப்பட்ட பாங்கினை இலக்கியங்கள் இனங்காட்டுகின்றன. மன்னர்கள் கொடை மடம் பட்டதையும் சங்கப் புலவர்கள் காட்டியுள்ளனர். பாடிவரும் புலவர்க்குப் பல ஊர்களை உரிமையாக்குவதிலும் ஆடிவரும் கூத்தர்க்குக் கொட்டிக் கொடுப்பதிலும் இரங்கும் இரவலர்க்கு இல்வாழ்க்கைக்குரியவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் இல்லை என்று வருவோர்க்கு இல்லை என்னாது, இன்முகத்தோடு வழங்கியதிலும் சங்க இலக்கிய மன்னர்களும் மக்களும் மனிதநேயத்தில் சிறந்து விளங்கியமையை இலக்கியங்கள் இயம்புகின்றன.

பின்னாளில் உதவுமென்றும் பிள்ளைகளுக்கு ஆகுமென்றும் செல்வம்தன்னைச் சேர்க்காமல், இருப்பதை எல்லோருக்கும் ஈந்து வாழ்ந்த இணையற்ற வாழ்வினைப் பதிற்றுப்பத்தும் பகர்கின்றது. பதிற்றுப்பத்தைப் பொறுத்தவரையில் அது முற்றிலும் போரையும் போரைச் சார்ந்த செய்தியையுமே தன்னுள் கொண்டிராமல், சேரமன்னர்களின் படை மாட்சி, கொடைமாட்சி, பண்புகள், மக்கள் வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், சமுதாய நிலை என்ற அனைத்துக் கூறுகளையும் தாங்கி நிற்கிறது. மேலும், இவற்றில் கொடைப் பண்புகள் பதிற்றுப்பத்தின் சேரமன்னர்கள் அனைவரிடமும் இருந்துள்ளமையை அறிய முடிகிறது. பார்வைக்குச் சில பதங்கள்:

இமயவரம்பன் நெடுசேரலாதனின் கொடைத்தன்மையைக் குமட்டூர்க் கண்ணனார் குறிப்பிடும் இடத்து, சேரலாதன், இம்மண்ணுலகத்தில் வாழும் நிலைபெற்ற உயிர்க்குக் குறைவில்லாமல் தந்து கை ஓய்தல் இல்லாது கொடுக்கும் கொடைத்தன்மையை உடையவன் என்கிறார். இதனை,

மண்ணுடை ஞாலத்து மன்னுயிர்க் கெஞ்சாது
ஈத்துக்கை தண்டாக் கைகடுந் தப்பின்
புரைவயின் புரைவயின் பெரிய நல்கி' (15:35–37)

என்பதில் அறியலாம்.

மனிதனின் எண்ணங்களும், செயல்பாடுகளும் அவன் வாழும் சூழலுக்கு ஏற்பவே அமைகின்றன. இத்தன்மைக்குச் சான்றாய், சேரர் படை வீரர்கள் விளங்கிய செய்தியைக் காணமுடிகிறது. களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைப் பற்றிக் காப்பியாற்றுக்காப்பியனார் குறிப்பிடும் இடத்து, 'நீ பிறர்க்குரியாளனாய் வாழ்வதால் நின் போன்றே நின் படைவீரரும் பிறர்க்கு உரியவராய் வாழ்கின்றனர்' என்கிறார். இதனை,

'பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே
எமக்கில என்னார்நின் மறங்கூறு குழாத்தர்' (39:1–2)

என்ற அடிகளில் குறிப்பிடுகிறார்.

கொடைப்படும் பொழுது எதிர் இருப்போரின் ஏழ்மையைப் பார்க்க வேண்டுமே அல்லாது, கொடுக்கும் பொருளின் உயர்வு கருதுதல் கூடாது. பார்ப்பின் அது மனிதநேயச் செயலாகாது. தன்னலமின்மை என்பதற்கு, கருநெல்லியின் உயர்வு கூறாது அதை ஒளவைக்கு அளித்த அதியனின் செயலைக் குறிப்பிடலாம். இத்தகைய உயர் பண்புகளைப் பதிற்றுப்பத்தும் உணர்த்துகிறது. கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் குறிப்பிடும் இடத்து, கொடுக்கும் பொருள்களை அவை அரியவை என எண்ணாமலும், தனக்கு வேண்டும் என எண்ணாமலும் வழங்கினான் என்கிறார். இதனை,

'அரிய ஒன்னாது ஓம்பாது வீசிக்
கலஞ்செலச் சுரத்தல் அல்லது கனவினும்
களைகென அறியாக் கசடில் நெஞ்சத்து' (44: 4–6)

என்பதில் உணர்த்துகிறார்.

காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் கொடைத்திறனைக் குறிப்பிடும் இடத்து, 'உன் கை இரப்பவர்க்கு ஈவதற்குக் கவியுமே அல்லாது மற்றவர் எவரையும் இரத்தற்கு மலர்தலை அறியாது. இவ்வாறு நின்னைப்பற்றிச் சான்றோர் பலரும் கூறக் கேட்டிருக்கின்றோம்' என்பதை,

'நல்அமர் கடந்தநின் செல்லுறழ் தடக்கை
இரப்போர்க்குக் கவிதல் அல்லதை இரைஇய
மலர்புஅறி யாவெனக் கேட்டிகும் இனியே' *(52: 10–12)*

என்ற அடிகளில் குறிக்கிறார்.

புலவர்கள் மன்னர்களைப் பாடுதல் என்பது வெறும் பரிசிலை நோக்கி மட்டுமல்ல, உண்மையை உலகிற்கு உணர்த்தலும், அவர்களின் நற்செயல்களை ஊக்கப்படுத்தலும் என்பதுமாகும். இவ்வுண்மையைக் கபிலர் செல்வக்கடுங்கோவாழியாதனைப் பாடுதலில் உணரமுடிகிறது. அரசனின் சிறப்பை உயர்வாகவோ, தாழ்வாகவோ உரைக்காமல் உள்ளது உள்ளபடி உரைக்கும் புலவரின் செயலை,

"இரக்கு வாரேன் எஞ்சிக் கூறேன்
ஈத்த திரங்கான் ஈத்தொறு மகிழான்
ஈத்தொறு மாவள் ளியன்என நுவலுநின்
நல்லிசை தர வந் திசினே" *(61:11–14)*

என்ற அடிகள் சுட்டுகின்றன.

இதைப்போன்றே, பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில்கிழார் புகழுமிடத்து, 'முற்பகலில் வந்து இரந்தவர் வறுமை நீங்கி வாழும்படி களிறுகளைத் தந்து, பிற்பகலில் வந்து இரப்பவர்க்கும் ஈவதில் குறையாத குதிரைகளை வரையாமல் அளிக்கும் நினது பாசறை இருப்பைக் கண்டு போவதற்காகத்தான் வந்தேன்' என்கிறார். இதனை,

'இரந்தோர் வாழ நல்கி இரப்போர்க்கு
ஈதல் தண்டா மாசிதறு இருக்கை
கண்டனென் செல்கு வந்தனென்' *(76:6–9)*

என்பதன் வழி அறியலாம்.

மேலும், 'அகன்ற இடத்தையுடைய இவ்வுலகத்தில் நல்ல புகழை நிலை நிறுத்தும் பொருட்டு, வறியவரின் துன்பம் நீங்குமாறு வேண்டியவற்றை நிரம்பக் கொடுக்கும் அறத்தையே ஆராய்தற்கு அமைந்த நெஞ்சையும் அசைந்த நடையையுமுடைய அண்ணல் புகழ் பாடும் புலவர், பாணர் முதலியவர்களை ஆதரிப்பவன்' என்று இளஞ்சேரலிரும்பொறையை,

"நல்லிசை நிலைஇய நனந்தலை உலகத்து
இல்லோர் புன்கண் தீர நல்கும்

நாடல் சான்ற நயனுடை நெஞ்சில்
பாடுநர் புரவலன் ஆடுநடை அண்ணல்' (86: 5-8)

என்ற அடிகளில் போற்றுகிறார் பெருங்குன்றூர்க் கிழார்.

இருப்போர் வழங்கும் கொடையைவிட இல்லார் தாம் இரந்தும் பாடியும் பெற்றதைச் சேமித்து வைக்க வேண்டும் என்றெண்ணாது, பிறர்க்குக் கொடுத்து உதவ வேண்டும் என்றெண்ணுவது மனிதநேயமாக அமைகிறது. இத்தகைய மனிதநேயச் செயலைப் புறநானூற்றின், இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது, வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே![6] என்று குறிப்பிட்ட பெருஞ்சித்திரனார் போல, பதிற்றுப்பத்தின் குமட்டூர்க்கண்ணனாரும் குறிப்பிடுகிறார். இதனை,

'பெற்றது உதவுமின் தப்பின்று பின்னும்
மன்னுயிர் அழிய, யாண்டுபல துளக்கி
மண்ணுடை ஞாலம் புரவெதிர் கொண்ட
தண்ணியல் எழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குவது ஆயினும்
சேரலாதன் பொய்யலன் நசையே" (18:7-12)

என்பதில் அறியலாம். இதில் மன்னரின் மனிதநேயச் சிறப்பும் கொடை பெற்றவரின் மனிதநேயச் சிறப்பும் ஒருங்கே அமைவதைக் காணலாம்.

விருந்தோம்பல்

'மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே'[7] என்கிறது மணிமேகலை. பசி என்று வருவோர்க்கு உணவளித்து உபசரிப்பதன் உன்னதத்தை இவ்வரிகள் உரைக்கின்றன. இப்பண்பு ஒரு சிறந்த மனிதநேயமாகக் கொள்ளப்படுகிறது. விருந்தோம்பல் என்பது சங்க இலக்கியங்கள் யாவற்றிலும் காணப்படும் பண்பாகத் திகழ்கிறது. விதை நெல்லைக் கொண்டும் விருந்தோம்பிய சிறப்புகளுக்கு உரியவர்களாகப் பழந்தமிழர்கள் திகழ்ந்துள்ளனர். இத்தகைய விருந்தோம்பும் மனிதநேயப்பண்பைப் பதிற்றுப்பத்தும் தம் பாடல்கள் பலவற்றில் காட்டுகிறது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் விருந்தோம்பல் பண்பைக் குறிப்பிடும் இடத்து, 'குளிர்ந்த மழை மேகம் நிலையான உயிர்கள் அழியுமாறு பல ஆண்டுகள் பெய்து குளிரச் செய்யும் செயலின் நீங்கி மழை பொழியாது போனாலும் தன்னை

அடைந்தார்க்கு வயிற்றுப் பசித் தீ மிக்க எழுமாறு குறைவாகக் கொடான். பசி நீங்க நிறையக் கொடுப்பவனாதலால் அவனைப் பெற்ற தாய் வயிறு குற்றம் இன்றி விளங்குவாளாக!' என்று குமட்டூர்க் கண்ணனார் போற்றுகிறார். இதனை,

'தண்ணிய எழிலி தலையாது ஆயினும்
வயிறு பசி கூர வீயலன்
வயிறுமா சிலீஇயர், அவன் ஈன்ற தாயே' *(20: 25–28)*

என்பதில் அறியலாம். மேலும் இவரே, துய்ப்பதற்கு இனிய, கிடைப்பதற்கு அரிய பொருள் கிடைப்பினும், அதனைத் தனியே உண்போம் என்னாது, பலரோடும் பகுத்தே உண்பான் என்கிறார் அத்தோடு, பலருக்கும் பகுக்கவே இவன் தொகுக்கிறான் என்கிறார். இதனை,

'இனியவை பெறினே தனித்தனி நுகர்கேம்
தருகென விழையாத் தாவில்நெஞ் சத்து
பகுத்தூண் தொகுத்த ஆண்மைப்
பிறர்க்கென வாழ்தி நீ ஆகலன் மாறே' *(38: 13–16)*

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. 'இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிய எனத் தமியர் உண்டலும் இலரே'-8 என்ற புறநானூற்றுச் சிந்தனை இங்கு நோக்கத்தக்கது.

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனின் விருந்தோம்பல் பண்பைக் குறிப்பிடும் பரணர், 'பெரும, உன்னை நாடி வந்த புலவர்கள் உண்பனவற்றை ஓம்பாது உண்ணச் செய்தனை, அவருடன் அமர்ந்து உண்டனை, இன்பச் சுவை நல்கும் பாணர் கூத்தர் முதலியவர் நிரம்பப் பெறுமாறு நீ நல்ல பொன் அணிகளை எல்லையில்லாது தந்தனை' என்கிறார். இதனை,

'உறுவர் ஆர ஓம்பாது உண்டு
நகைவர் ஆர நன்கலம் சிதறி'

என்ற அடிகள் சுட்டுகின்றன.

விருந்தோம்பல் பண்பைச் சிறப்பாக செய்துவரும்நிலையில், விருந்தினர் வராத வேளையில் மனம் வாடி, அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அழைத்து வரும் மனிதநேயச் செயலையும் காண முடிகிறது. இதனை,

"வாரார் ஆயினும் இரவலர் வேண்டித்
தேரில் தந்தவர்க்கு ஆயுதம் நல்கும்
நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்' *(55:10–12)*

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

பிறர் துன்பம் கண்டு இரங்கல்

எவ்வுயிர் இன்னுலுற்ற போதும் இரங்குதலும், இரங்கலோடு இன்சொற்கள் புரிதலும், இன்சொற்களோடு இயன்ற நன்மைகள் செய்தலும் மனிதநேயத்தின் வெளிப்பாடாகும். அவ்வகையில் பிறர் துன்பங்கண்டு வருந்தி, அத்துன்பத்தின் தீவிரத்தை எடுத்துக்கூறித் தவிர்க்க எண்ணும் புறப்பாடல் புலவனைப் பதிற்றுப்பத்தில் காணமுடிகிறது. இவர்,

'தேர் ஓடுதலால் சேறான வயல்கள் பின்பு ஏர்கள் சென்றுலவி உழுதலை வேண்டா ஆயின. பன்றிகள் கோரைக்கிழங்கைத் தோண்டி எடுத்த கொல்லைகள் கலப்பையால் உழப்படுதலை வேண்டா ஆயின. தயிரைக் கடையும் மத்தின் ஒலி ஒலிக்கும் ஆய்ச்சியர் மனைகள் இனிய வாத்தியங்களின் ஓசை கேட்கப்படா ஆயின. அவ்விடத்தை முன்னம் நன்றாகக் கண்டறிந்தவர் அப்போதிருந்த செழுமையான வளப்பத்தை இப்போது எண்ணுவராயின், நினைக்கின்ற நெஞ்சு நோவத்தக்க வருத்தம் ஏற்படும். நானும் அதை எண்ணி வருந்துகின்றேன்' என்கிறார். இவ்வருத்தத்தை,

> *'தேஎர் பரந்தபுல மேஎர் பரவா*
> *களிறா டியபுல நாஞ்சி லாடா*
> *மத்து உரறியமனை இன்னியம் இமிழா*
> *ஆங்குப், பண்டுநற் கறியுநர் செழுவள நினைப்பின்*
> *நோகோ யானே நோதக வருமே' (26:1–5)*

என்ற அடிகளில் உணரமுடிகிறது. இத்துன்பங்கண்டு வருந்திய இப்புலவரே இதுபோன்ற அழிசெயல்கள் நடக்குமுன்னே தடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், படையோடு செல்லும் அரசனைப் பார்த்து, 'இக்கோட்டை இருக்கும் வழியாகச் செல்லாதே, அது உன் முன்னோர்களெல்லாம் போற்றி பாதுகாத்த கோட்டை உன் வீரர்களால் அழிவு ஏற்பட்டுவிடுதல் கூடாது' என வலியுறுத்துகிறார். மேலும், 'நீ செல்லும் இடம் மிகத் தொலைவு என்றாலும் வேற்றுவழியில் செல்க!' என்கிறார். இதனை,

> *'எயின்முகப் படுத்தல் யாவது வளையினும்*
> *பிறிதாறு செல்மதி' (53:12–13)*

என்பதில் உணரலாம். இதைப்போலப் பிறர் துன்பங்கண்டு வருந்தும் பண்பினைப் பெற்றவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்பதை, 'சேரனின் காதல் மங்கையர் ஊடலால் சினத்துடன் நோக்கும் பார்வையை விட இரவலர் தன்னிடம் குறையிரந்து பசித்துன்பம்

தோன்ற நோக்கும் பார்வை கண்டு மிகவும் அஞ்சுபவன்' என்கிறார் காக்கைப்பாடினியார். இதனை,

> **'ஒண்ணுதல் மகளிர் துனித்த கண்ணினும்**
> **இரவலர் புன்கண் அஞ்சும்'** *(57:13-14)*

என்ற அடிகள் சுட்டுகின்றன.

பிற மனிதநேயச் செயல்கள்

மேலே குறிப்பிட்ட மனிதநேயக் கூறுகளோடு, பெரியோரைப் பேணுதல், உயிர்க்கொலை கூடாது போன்ற மனிதநேயச் செயல்களையும் பதிற்றுப்பத்தில் காணமுடிகிறது.

'பரிசிலை வேண்டி வரும் இரப்பவர் கூட்டத்தில் கொடைச் செயலில் எதையும் என்றும் வரைதலை அறியாய்! பெரியோரைப் பேணிக் கொண்டு சிறியோரையும் புறக்கணியாமல் அருளுகின்றாய்' என்ற அரிசில்கிழாரின் கூற்றால் பெருஞ்சேரல் இரும்பொறையின் மனிதநேயம் புலப்படுகிறது. இதனை,

> **'கொடைபோற் றலையே இரவலர் நடுவண்**
> **பெரியோர்ப் பேணிச் சிறியோரை அளித்தி'** *(79:2-3)*

என்பதில் அறியலாம். இதே கருத்தையே,

> **வணங்கிய சாயல் வணங்கா வாண்மை**
> **இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணி'** *(70:20)*

என்ற அடியும் வலியுறுத்தக் காணலாம்.

முடிவு

மக்களிடம் மனிதநேயம் மலர, மனத்தில் வளர்த்துக்கொள்ள வேண்டிய நற்பண்புகளைப் பட்டியலிடுவதோடு, வேண்டாத பண்புகளையும் விளக்குகிறது பதிற்றுப்பத்து.

பதிற்றுப்பத்தில் மன்னர், மக்கள் என்ற வேறுபாடின்றி எல்லோரிடத்தும் மனிதநேயக் கூறுகளில் ஒன்றான கொடை விளங்கியமையைக் காணமுடிகிறது. அரிதாகக் கிடைத்த ஒன்றாயினும், பரிசில் பெற்ற ஒன்றாயினும் அதன் அருமை கருதாது எல்லோர்க்கும் வழங்க வேண்டும் என்ற மனிதநேயச் சிந்தனை கொண்ட பழந்தமிழர் வாழ்க்கையினைப் பதிற்றுப்பத்து படம்பிடித்துக் காட்டுகிறது.

தம் வீடு தேடி வரும் யாவருக்கும் மட்டுமல்லாது, வறியவர் இருக்கும் இடம் தேடிச்சென்று விருந்தோம்பிய மனிதநேயப் பண்பைப் பதிற்றுப்பத்து பகர்கிறது.

பிறர் துன்பங்கண்டு இரங்குதலோடு, இனியன மொழிதல், இயன்றன ஆற்றல் போன்ற மனிதநேயச் செயல்களைப் பதிற்றுப்பத்து காட்டுகிறது.

ஆற்றுப்படுத்துதலின் அருமையினையும், பெரியோரைப் பேணுதலின் பெருமையினையும், பதிற்றுப்பத்து வழி உணரமுடிகிறது.

இவ்வகையான மனிதநேயக் கூறுகளைத் தன்னுள் கொண்டு, பழந்தமிழரின் மனிதநேயப் பண்பை உலகிற்குப் பறைசாற்றுகிறது பதிற்றுப்பத்து.

குறிப்புகள்

1. *க்ரியா ப. 261.*
2. *க்ரியா, ப. 102.*
3. *குறள், அருளுடைமை விளக்கம்.*
4. *ஆய்வாளர் கவிதை வரிகள்.*
5. *புறநானூறு 195: 6-7*
6. *புறநானூறு 163: 5-7*
7. *மணிமேகலை 11: 95-96*
8. *புறநானூறு 182: 1-3*

******

பண்டைத் தமிழர் போரியலில் மனிதநேயம்

முனைவர் மூ. கருணாநிதி
திட்டப்பணி உதவியாளர்

உலகில் போர் தவிர்க்க முடியாதது என்பது வரலாறு காட்டும் உண்மை. போரொழிப்புப் பற்றி ஒரு புறம் பேசிக்கொண்டிருக்கும்போதே உலகெங்கிலும் ஆங்காங்கே போர்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. ஒரு கணிப்பின்படி "கி.மு. 1496 ஆம் ஆண்டு முதல் கி.பி. 1868 ஆம் ஆண்டு வரையிலான 3364 ஆண்டுகளில் 227 ஆண்டுகளே உலகில் ஏதேனும் ஓரிடத்தில் போர் நிகழாதிருந்த காலமாகும். கி.பி. 1816 முதல் கி.பி. 1965 வரையிலான 150 ஆண்டுகளில் 25 ஆண்டுகளே போரற்ற ஆண்டுகளாம்" (Arthur A. Stein, The Nation at war, P.1) எனவே, அதிகார வர்க்கத்தை ஆட்டிப்படைக்கின்ற, மனித குலத்தை அச்சுறுத்துகின்ற போர் என்றும் ஒழிந்தபாடில்லை. உலக வரலாற்றில் போரை ஒழிக்க வேண்டும் என்று போதித்த சான்றோர்கள் மறைந்தனர்; ஆனால் போர் மறையவில்லை.

மொழி, இனம், நாடு, சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் மாறுபட்ட மக்கள் தத்தம் மொழி, இனம், நாடு, சமயம் ஆகியவற்றை வளர்க்கவோ, பாதுகாக்கவோ போர் செய்ய வேண்டிய நிலை ஏற்படுவது இயற்கை. 'குயின்சி ரைட்' என்பார் தன் போர் பற்றிய ஆய்வு நூலில் (A study of war) போரின் உந்துதல் அல்லது தூண்டுதல்களாக 'உணவு பெறுதல், பாலுணர்வு, நாட்டு எல்லை, வீரச்செயல் வேட்கை, தற்காப்பு, பிறரை அடக்கியாளும் விருப்பம், விடுதலை வேட்கை, சமுதாயச் சூழல்' ஆகியவற்றைக் குறிப்பிட்டு விளக்கியுள்ளார். ஆனால் இன்று போர் ஏற்படுவதற்குரிய காரணங்கள் எத்தனை எத்தனையோ; அவை எண்ணிலடங்கா. எனவே 'உலகில் மக்கள் சமுதாயம் இருக்கும் வரை போரும் இருக்கும். எவ்வளவோ கசப்பான மருந்தை ஏற்றுக் கொள்கிற நாம் இதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்; சகிப்புத் தன்மையுடன் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். இவ்வாறு பொறுத்துக் கொள்வதும்கூட மனித நேயம்தான்.

போரும் மனிதநேயமும்

'போர் என்பது மனித நேயமற்ற செயல்' என்கிறது க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. தற்காலப் போர் நிகழ்வுகளைக் கருத்திற்

கொண்டே இவ்விளக்கம் அமைந்துள்ளது எனலாம். மனித நேயமற்ற போர்ச் செயல்களை, அவலங்களை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே பண்டைத் தமிழர்கள் உணர்ந்துள்ளனர். அதனால்தான் மனிதநேயப் பண்புகளுடன் கூடிய போர் நெறிமுறைகளை வகுத்துக் கொண்டனர். அந்நெறிமுறைகளைத் தமிழ் இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

மனித நேயம் என்பதற்குப் பல்வேறு அறிஞர்களால் காலந்தோறும் பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமாக வலியுறுத்தப்படுவன உயிர்கள் மீது அன்பு செலுத்துதல், பரிவு கலந்த உணர்வுடன் செயல்படல், ஒற்றுமையுடன் வாழ்தல், இரக்கப்படுதல், பகைவனுக்கும் அருள் புரிதல் என்பனவாகும். இத்தகைய மனித நேயக் கூறுகளைப் பண்டைத் தமிழர்கள் தாம் மேற்கொண்ட போர் நெறிமுறைகளிலும் பின்பற்றினர்; இவைகளைப் போர் அறங்களாகவே மதித்துப் போற்றினர். எனவே, பண்டைத் தமிழர்களின் போர் முறைகளில் மனித நேயப் பண்புகளும் இருந்தன என்பது சங்க இலக்கியச் சான்றுகளுடன் இங்கு விளக்கப்படுகின்றது.

நாட்டின் அமைதியும் புலவர்களின் மனித நேயமும்

போரினால் நாடு சீரழிவதைக் கண்ட புலவர்கள் போர் நிகழாதவாறு தடுக்க முற்பட்டனர். இதன் பயனாய் மன்னர்களின் மனத்தை மாற்றி, அவர்களின் பகைமைப் போக்கினை நீக்கி, நாட்டில் அமைதியை நிலைநாட்டப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். இவை புலவர்களின் மனித நேயத்தை வெளிப்படுத்துகின்றன

தம் நாட்டு அரசனுக்கும் பிற நாட்டு அரசனுக்கும் போர் நடைபெறும் நிலையில் புலவர்கள் பகைவர்களுக்குத் தம் அரசனது வலிமையையும் ஆற்றலையும் எடுத்துரைத்துப் பகையரசனின் போர் முயற்சியைக் குன்றச் செய்தனர்.

"ஒரு நாளுக்கு எட்டுத் தேர்களைச் செய்ய வல்ல தச்சன் ஒரு மாத காலம் நன்கு ஆராய்ந்து ஒரு தேர்ச்சக்கரத்தைச் செய்தால் அது எத்தனை வலிமையாக இருக்குமோ அத்துணை வலிமையுடைய வீரன் அதியமான் நெடுமானஞ்சி; ஆதலால் போர்க்களம் புகுவதை நினையாதீர்" (புறம். 87) என்று ஔவையார் அதியமானின் வீரத்தை அவனது பகைவர்க்கு அறிவிக்கின்றார். இவ்வாறே கபிலரும் பாரியின் படைவலிமையைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

"நாற்பெரும் படையைக் கொண்டு எவ்வளவு முயன்றாலும் பாரியின் பறம்பு மலையை அடைதல் அரிது; விறலியர் பின்வரப்

பாடி ஆடிச் சென்றால் தன் நாட்டையும் குன்றுகளையும் கொடுப்பான் பாரி" (புறம்.109) என்று கபிலர் பாடுகின்றார்.

ஔவையார், கபிலர் போன்ற புலவர்கள் இங்ஙனம் தத்தம் வேந்தரது வலிமையைப் பகைவர்க்கு எடுத்துக் கூறியதன் நோக்கம் பகைவர்கள் போரைக் கைவிட வேண்டும் என்பதாகும். நாட்டில் போரின்றி அமைதியை நிலை நாட்ட முயல்வது சீரிய மனித நேயப் பண்பாகும்.

புலவர்கள் தத்தம் மன்னர்களிடமும்கூட அறிவுரை கூறிப் போரைத் தடுத்தனர் என்பதையும் புறநானூற்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன. தன் பிள்ளைகள் இருவரோடு எதிர்த்துப் போர் செய்வதற்கு எழுந்த கோப்பெருஞ்சோழனைச் சமாதானம் செய்து புல்லாற்றூர் எயிற்றியனார் அறிவுறுத்திய திறம் மதி நுட்பம் வாய்ந்தது.

"போருக்கு வந்தவர் நின் பகைவரும் அல்லர்; நீயும் அவர்க்குப் பகைவன் அல்லன். நின்னை எதிர்த்து வரும் நின் மக்கள் தோற்றால் நின் பகைவர் மகிழ நீ பழி கொள்வாய்; ஆதலின் நின் மறம் ஒழிக" (புறம்.213) எனப் புலவர் அறிவுரை கூறிக் கோப்பெருஞ்சோழன் தன் மக்களை எதிர்க்காதவாறு தடுத்த மனித நேயச் செயல் போற்றற்குரியது.

இவ்வாறே சோழன் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் ஏற்படவிருந்த போரைக் கோவூர் கிழார் என்னும் புலவர் மனித நேய உணர்வின் அடிப்படையில் தடுத்து அறிவுறுத்தினார். அதன் விளைவால் அவர்களிருவருக்கும் நடைபெறவிருந்த போர் தவிர்க்கப்பட்டது (புறம்.45).

போர் உண்டாவதற்குரிய காரணங்களுள் ஒன்றாக மகட்கொடை வேந்தர்க்கு மறுத்துரைத்தலைக் குறிப்பிடலாம். இத்தகைய போரும் நிகழாதவாறு புலவர்கள் தடுத்துள்ளனர். இதனை "நிகர்த்து மேல் வந்த வேந்தனொடு முதுகுடி மகட்பாடஞ்சிய மகட்பாற்காஞ்சி" என்று தொல்காப்பியம் (புறத்திணையியல் சூத்திரம்.19) கூறும். தமக்குத் திரை செலுத்தித் தம்கீழ் அரசாண்டு வரும் பெருஞ்சிக்கில் கிழான் என்னும் குறுநில மன்னனின் பேரழகு வாய்ந்த மகளை சோழன் மகட்கொடை வேண்டினான். தன்னுடைய மகளின் பேரழகிற்கும் அறிவிற்கும் சோழன் பொருத்தமானவன் அல்லன் எனக் கருதிச் சிக்கில்கிழான் மகட்கொடை மறுத்தான். போர் மூண்டது; கிழானோ பணிய மறுத்தான்.

பகை கொண்ட இருவரின் இயல்புகளையும் நன்குணர்ந்தவர் புலவர் மதுரை மருதனிள நாகனார். இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மையினைப் பெறாவிட்டால், பொறுமையினைக் கடைபிடிக்காவிட்டால் இவ்வூரே அழிந்துபட நேரிடுமே - ஊர் மக்கள் யாரும் உயிர் வாழ இயலாதே' என்று எண்ணி,

> "நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்
> கடிய கூறும் வேந்தே தந்தையும்
> நெடிய வல்லது பணிந்துமொழி யலனே
> இஃதிவர் படிவ மாயின் வையெயிற்று
> அரிமதர் மழைக்க ணம்மா அரிவை
> மரம்படு சிறுதீப் போல
> அணங்கா யினள்தான் பிறந்த ஊர்க்கே" (புறம் 349)

எனப் புலவருக்குத் தோன்றிய இரக்க உணர்ச்சி மனித நேயத்தினால் தோன்றியது எனலாம்.

தன் நாட்டின் மீது மற்றொரு மன்னர் படையெடுக்க முற்படுங்கால், அந்நாட்டரசன் தூதனுப்பி நாட்டில் அமைதியை நிலைபெறச் செய்ய முயல்வது போர் அறமாகும். அதியமான் நெடுமான் அஞ்சியின் பொருட்டுத் தொண்டமானிடம் ஒளவை தூது சென்றதைப் புறநானூறு தெரிவிக்கிறது (புறம். 95) தூது சென்ற புலவர் தம் தூது பயனற்றுப் போர் மூண்ட பொழுது, இரு வேந்தர்களையும் ஒற்றுமைப்படுத்தும் முயற்சியினையும் மேற்கொண்டார். (புறம். 45)

இவ்வாறு புலவர்கள் போரைத் தடுக்கவும் அதனால் நாட்டில் அமைதி நிலவும் மனிதநேய உணர்வுடன் பாடுபட்டனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

போர்த் தொடக்கமும் மனிதநேயமும்

மன்னர்கள், போர் எச்சரிக்கையின் முதற் செயலாகத் தன் நாட்டுத் தானைத் தலைவனை அழைத்துப் பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவரப் பணிப்பான். இவ்வொழுக்கம் வெட்சி எனப்படும்.

> வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
> ஆதந் தோம்பல் மேவற் றாகும்" (தொல். புறத். 2)

எனத் தொல்காப்பியம் வெட்சியின் இலக்கணம் கூறுகிறது. "ஆநிரை கவர்தலைத் தொடக்கநிலைப் போர்'' என்றும் அறிஞர்கள் குறிக்கின்றனர். (K.S. Thaninayagam; Nature Poetry in Tamil P. 20).

ஆநிரையின் பயன் இன்றி இல்லம் இனிது நடக்காது. மக்களுக்குப் பெரும்பயனைக் கொடுத்துப் பெருவளம் சேர்க்கும் இயல்புடையன ஆநிரைகள். அன்று 'மாடு' என்ற சொல் பொன்னையும் செல்வத்தையும் உணர்த்திற்று. பகைவர் நாட்டுச் செல்வத்தைத் தம் நாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற பொருளாதார நோக்கம் இதில் உண்டு என்றாலும் பகைவர் நாட்டைத் திடீரென்று தாக்குவதை அவர்கள் விரும்பவில்லை; வீரமாகக் கருதவில்லை என்பதில் மனிதநேயப் பண்பும் அடங்கியுள்ளது.

"ஆநிரைகள் தாமே பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல அறியாதன; ஆதலால் அத்தகு ஆநிரைகளைப் போர் தொடங்கு முன் அப்புறப்படுத்துங்கால் அவற்றைக் கவர்ந்து வந்து காத்தல் அறத்தின் பொருட்டு என்றும் கொள்வர்" (பண்டைத் தமிழர் பொருளியல் வாழ்க்கை, ப.251) என்ற கூற்றும் இங்குச் சிந்திக்கத்தக்கது.

இவ்வாறு கைக்கொண்ட ஆநிரைகளை நோயின்றிப் பாதுகாத்தும், இன்புறுத்தியும் கொண்டும் சென்றனர் என்பதைப் புறத்திணையியலின் 'நோய் இன்று உய்த்தல்' என்னும் துறை உணர்த்துகிறது. பகைவர்களிடமிருந்து கவர்ந்த ஆநிரைகளை வீரர்கள் தமக்கென வைத்திராது பலருக்கும் பகிர்ந்து கொடுக்கும் பண்புடையோராக விளங்கினர்.

"மிகப்பல வாயினு மென்னா மெனைத்தும்
வெண்கோ டான்றாக் குழிசியொடு
நாளுரை மத்தொலி கேளா தோனே" (புறம். 257 11-13)

இத்தகைய பண்பும் மனிதநேயத்தின் பால் எழுந்ததே எனலாம். இவ்வாறு ஒரு நாட்டினர் பகைவர்களுடைய ஆநிரைகளைக் கவர்வதும், காத்து ஓம்பலும், பங்கிட்டுக் கொள்வதும் மனித நேயம் ஆகுமா? என்ற ஐயம் எழலாம். சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் மனிதநேயம் வெளிப்படும். ஆநிரைகளைக் கவர்வதில், மீட்பதில் போர் வீரர்கள் அடித்துக் கொண்டார்களேயொழிய, ஒரு நாட்டினுடைய செல்வமாகக் கருதப்பட்ட ஆநிரைகளுக்கு எவ்விதச் சேதாரமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

போர் தொடங்குவதற்கு முன்னால் போர்ச் செய்தியினை முரசறைந்து தெரிவிப்பர். ஆநிரை, பார்ப்பனர், பெண்டிர், பிணியுடையோர், மக்கட் பேறற்றோர் ஆகியோர்களுக்குப் பாதுகாப்பளிக்கப் பட்டது.

"ஆவு மானியர் பார்ப்பன மக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅதீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின் (புறம் 9:1–5)

என நெட்டிமையார் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய பாட்டால், அவன் படையெடுக்கும் முன்னர் ஆநிரை முதலியவைகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு பகைவர்க்கு அறிவித்தான் என்பது தெளிவாகிறது. இது மனித நேய அடிப்படையில் எழுந்த போர் அறமெனலாம்.

இக்காலப்போரில் நடைபெறுவது போன்று திடீரென்று தாக்குதல், மறைந்திருந்து தாக்குதல் போன்ற போர்முறைகளைப் பண்டைத் தமிழர்கள் மேற்கொள்ளவில்லை. பலர் அறிய வஞ்சினம் கூறி, பொது இடத்தில் தம்மொடு ஒப்பாரிடம் மட்டும் போரிடும் அறப்பண்பு வாய்ந்தவர்களாக விளங்கினர்.

என்னைமுன் நில்லன்மின் தெவ்வீர் பலரென்னை
முன்னின்று கல்நின் றவர் (குறள் 771)

என்னும் குறள் சங்க கால வீரர்களின் அறப்பண்பையும், மறப்பண்பையும் ஒரு சேர விளக்குவதாக அமைந்துள்ளது. இதில் மனித நேயமும் வெளிப்படுகிறது.

போர்ப் பாசறையில் மனிதநேயம்

போர் மேற் சென்ற சேரமான் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் படை வீடு அமைத்துத் தங்கியிருக்கையில், விறலியர் பாட்டிசையில் இன்புறலானான். இதனை அறிந்த புலவர் வினையாற்ற விரும்பும் வேந்தர் இன்பங்களைப் பிறர் அறியாமல் துய்க்க வேண்டும் என்பதனை,

"சுடர் நுதன் மடநோக்கின்
வாணகை யிலங் கெயிற்
றமிழ்துபொதி துவர்வா யசைநடை விறலியர்
பாடல்சான்று நீடினை யுறைதலின்
வெள்வே லண்ணன் மெல்லியன் போன்மென
உள்ளுவர் கொல்லோநின் னுணரா தோரே" (பதிற். 51: 19–24)

என அறுவுறுத்துவது குறிப்பிடத்தக்கது. போர்மேற்சென்ற மன்னன் இன்பத்தில் நாட்டம் கொண்டால், பகைவர்கள் அதனையே

வாய்ப்பாகப் பயன்படுத்தி மன்னனை வீழ்த்தி விடுவர்; அப்பொழுது அவனுடைய நாட்டு மக்களும் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகுவர். எனவே மன்னன் இத்தகைய இன்பங்களுக்கு ஆட்படுதல் கூடாது எனப் புலவர் அறிவுறுத்துவதும் மனிதநேயத்தின் பாற்பட்டதாகும்.

போர் விருப்பம் கொண்ட மன்னன் பாசறையில் இரவில் உறக்கம் பெறாமல், முந்தைய நாள் போரில் செஞ்சோற்றுக்கடன் கழிக்கும் வகையில் இறந்து பட்ட வீரரையும், புண்பட்டு வருந்தும் யானைகளையும், புரவிகளையும் நீண்ட நேரம் நினைத்திருந்து பின் உறங்கினான். இது முல்லைப்பாட்டிலும் (25-79) நெடுநல்வாடையிலும் (70-188) காணப்படுகின்றது.

மன்னர்கள் தமது வீரர்களுக்குப் போருணர்வைத் தூண்டக் கூடிய வெற்றறிக்கைகளை மட்டும் விட்டு விட்டு அரண்மனையில் இருந்து கொண்டார்களில்லை; இன்பம் துய்த்தார்களில்லை;. வீரர்களோடு தம்மை இணைத்துக் கொண்டு பாசறையில் அவர்களுக்காகவும் போர்களுக்குத் துணைபுரியும் யானைகளுக்காகவும், குதிரைகளுக்காகவும் இரங்கிய இரக்க உணர்வுகளிலும் படை வீரர்களுக்குக் கூறிய ஆறுதல் மொழிகளிலும் மனித நேய உணர்வு வெளிப்படுகிறது.

போர்க்களத்தில் மனிதநேயம்

பழந்தமிழ் மன்னர்கள் தம்மினும் வலிமை குறைந்தவரோடு போர் செய்வதில்லை. அது தமக்கு அறமாகாது என்றும் அது தமக்கு இழுக்கு என்றும் கருதினர். 'தன்மேல் படைகளை எறிந்தாரையும் எங்கள் அரசன் அவர்கள் தனக்கு நிகராகாமையால் எதிரே சென்று படை எறியமாட்டான் என்று ஆவூர் மூலங்கிழார் உரைக்கின்றார்.

"எறியா றெறிதல் யாவண தெறிந்தோர்
எதிர்சென் றெறிதலுஞ் செல்லானதனால்" (புறம் 301: 8-9)

தம் மன்னன் தனக்கு நிகரான படைபலம் உடையாரையே எதிர்க்கும் பண்புடையவன் என்பதைப் புலவர் இவ்வடிகளில் தெளிவாக உரைக்கின்றார்.

தனக்குத் தோற்றோடியவன் மீது படையை எறியாமல் அவன் முதுகை நகைத்தான் என்பதை ஓரம்போகியாரின் ஒரு புறப்பாடல் (284) கூறுகிறது.

ஆடை நெகிழ விட்டவர்களையும் புல் மேய்வாரைப்போலக் குப்புறப் படுத்திருப்பவர்களையும், ஓடும் நிலையில் விழுந்தோரையும்

படையிழந்தோர்களையும் தனியே அஞ்சியோடியவரையும் கொல்வதில்லை என்று சிறு பஞ்சமூலம் (41) உரைக்கும் கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மேலும்,

> "போர் நெறியெல்லாம் கொலை வெறியேயாம் என்று பேசுதல் சங்ககாலத் தமிழர் பண்பாட்டிற்கு ஒவ்வாததாகும்"
>
> (சங்க காலம், ப.67)

என்ற கூற்றும் சிந்திக்கத்தக்கது.

மேற்கூறியவற்றால் புறமுதுகு காட்டித் தோற்றோடிய பகைவன்மீது அம்பெய்தல் கூடாது என்பது பண்டைத் தமிழரின் போர்ப்பண்பாடு மனிதநேயப் பண்பாடே எனப் போற்றி மகிழலாம்.

மனிதநேயம் காப்பதில் விழிப்புணர்வு

யானைகள் நீர் பருக நீர் நிலைகளுக்கு அழைத்துச் செல்லுங்காலத்து மிகவும் கவனத்துடன் அழைத்துச் செல்ல வேண்டும். அவ்வாறு சிரத்தையின்றி யானைகளை வெறுமனே ஒருவரே நடத்திச் செல்லாமல், யானைகளுக்கு முன் பறை அறைந்து தெருவில் விளையாடும் இளஞ்சிறார்களும், நடமாடும் ஏனையோரும் யானைகளால் யாதோர் இடையூறும் ஏற்படாதிருக்க அழைத்துச் செல்ல வேண்டும் என்றும், இதனை மறவாது அரசர்கள் பாகர்க்கு அறிவித்திருக்க வேண்டும் என்றும் இங்ஙனம் செய்யா வேந்தன் தவறுடையன் என்றும் கபிலர் குறிஞ்சிக்கலியுள் புலப்படுத்தியுள்ளார்.

> நிறைஅழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
> பறைஅறைந் தல்லது செல்லற்க என்னா
> இறையே தவறுடை யான்"

இதனால் பழந்தமிழ் மன்னர்கள் பிற உயிர்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் மனித நேயத்துடன் பாதுகாப்பதற்கு எவ்வளவு விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும்; இருந்திருக்கின்றனர் என்பதும் புலனாகின்றது.

கிள்ளி வளவன் மலையமான் குழந்தைகளை யானையின் முன் இட்டுக் கொல்ல முயன்றான். அப்பொழுது கோவூர் கிழார் அவனைத் தடுத்து மழலைகளின் இயல்பினை எடுத்துக்கூறி அவர்களைக் காத்தது மனிதநேயத்தின் சிகரம் (புறம். 44) எனலாம். இவரே புலவரின் பெருமைகளை எடுத்துக்கூறி நெடுங்கிள்ளியால் கொல்லப்படவிருந்த இளந்தத்தன் என்ற புலவரைக் காப்பாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

மனிதநேய மீறல்கள்

போர் நெறிமுறைகளில் மனித நேயத்தைக் காப்பதில் பல புலவர்கள், சான்றோர்கள்,மன்னர்கள், படை வீரர்கள் எவ்வளவோ விழிப்பாக இருந்து வந்துள்ளனர். ஆயினும் சில வேளைகளில் தங்களையும் மீறிய ஆத்திரத்தால் சிலர் விளைபயிர்களை நாசப்படுத்துவதோடு, ஊர்களுக்குத் தீயிடுவதுமுண்டு. பகைவர் பொருள்களைப் பாழாக்குவது, நன்னீரைச் சேறாக்குவது, நெல் மணிகளைச் சிதைப்பது, அரண்களை அழிப்பது, கோட்டை, கொத்தளங்களைத் தூளாக்குவது போன்ற மனித நேய மீறல்களை, நெஞ்சு பொறுக்காத இழி செயல்களை இன்று போல் அன்றும் செய்திருக்கின்றனர். இவற்றை அக்காலக் கவிஞர்கள் புறப்பாட்டுகளின் வாயிலாக உணர்த்தியிருக்கின்றனர் என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

வேந்தர்களைப் போற்றி அவர்களுக்குப் போரைத் தூண்டும் வகையில் பாடிய புலவர்களுக்கிடையே நாட்டின் அமைதிக்காக, மனிதநேயம் காப்பதற்காகப் பாடிய புலவர்களை வணங்கி மகிழ்வோம்;

> **முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்**
> **நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்** *(நற்.355)*

என்ற மனிதநேயம் மிக்க தமிழ் மரபில் தோன்றி, போர் நெறி முறைகளிலும் மனிதநேயம் காத்த மன்னர்களை, வீரர்களைப் போற்றி மகிழ்வோம்; இதற்கெனத் தனி நடுகல் வைத்துக் கொண்டாடுவோம்.

அன்றும் சரி; இன்றும் சரி மனிதநேயம் காக்கும் பண்புடையவர்களால்தான் பொய்யாமொழிப் புலவரின் பொன்மொழியும் பொய்க்காமலேயே இருக்கிறது.

> **பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்**
> **மண்புக்கு மாய்வது மன்** *(குறள். 996)*

என்பது வள்ளுவர் வாக்கன்றோ.

******

மனிதநேயம் தியாகம்

முனைவர் செ. ஜின் லாறன்ஸ்
பேராசிரியர்

தமிழ் வழக்காற்றில் அண்மைக் காலமுதல் வழங்கி வருகின்ற மனிதநேயம் எனும் சொல் Humanism எனும் ஆங்கிலச்சொல்லுக்கு இணையானது. இதனை வாழ்வியற் களஞ்சியம் மனித இன நலக் கோட்பாடு எனக் குறிப்பிட்டுள்ளது. இதற்கு, "மனித இனத்தின் துன்பங்களையும் துயரங்களையும் குறைத்து, இன்பங்களை அதிகரிப்பதே மனித இன நலக்கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவமாகும். மனித இன நலக்கோட்பாடு (Humanism) ஒரு மதக் கோட்பாடாகவே தோன்றியது... ஆனால், இன்று ஒரு மதக் கோட்பாடாக அன்றி ஒரு சமூகக் கோட்பாடாகவும் கருதப்படுகிறது" (ப.591) என விளக்கமும் அளித்துள்ளது. "The attitude of mind which attaches primary importance to man and to his faculties, affairs, temporal aspirations and well-being" என Encyclopaedia Britanicca (Vol II, p.825) Humanism என்பதற்கு விளக்கமளிக்கிறது. இதற்கு, The Random House Dictionary of the English Language, "Any system or mode of thought or action in which human interest, values and dignity predominate" எனப் பொருள் அளிக்கிறது. "உலகம் போரின்றி வாழவும் உலக மக்களிடையே அன்பு தழைக்கவும், ஏற்றத்தாழ்வுகள் இல்லாதொழிந்து ஒப்புரவு நிலைக்கவும் வழிவகுக்கும் ஓர் உயரிய கோட்பாடே மனிதநேயம்" என இரா. சக்குபாய் குறிப்பிடுகின்றார் (ப.3). இவ்வாறு மனிதநேயம் என்பதற்குப் பல விளக்கங்கள் கிடைக்கின்றன.

மனிதத்தில், அதாவது மனித குண நலன்களில் ஒரு பகுதியினைக் குறிப்பது மனிதநேயம். தற்போது, இதன் செயல்பாடுகளை ஆழ்ந்து நோக்கும்போது, இவ்விளங்கங்கள் இச்சொல்லுக்குரிய முழுமையான கருத்தினை வெளிப்படுத்துவன அல்ல எனத் தோன்றுகிறது. மனித இன நலக்கோட்பாடு எனும்போது அங்கு மனித இனம் மட்டுமே இடம்பெறுகின்றது. பிற விளக்கங்களும், கருத்துகளும் கூட மனித இனம் சார்ந்தனவாகவே அமைந்துள்ளன. மனிதநேயம் மனிதனிடத்தில் தோன்றும் நேயம். ஆனால், இது மனிதனிடம் காட்டும் நேயம் மட்டும் அன்று, பிற உயிரினங்களிடமும்

காட்டப்படும் நேயம் என்றும் கொள்ளல் வேண்டும். அப்பொழுது தான் மனிதநேயத்தின் பொருண்மை முழுமைபெறும்.

மனிதன் தன் அடிமனத்திலிருந்து எழும் அன்பின் வெளிப்பாடுகளான பாசம், பற்று, கருணை, கொடை, பகிர்வு, விட்டுக்கொடுத்தல், தியாகம் போன்றனவற்றைப் பிறரோடு, பிற உயிரினங்களோடு பகிர்ந்து கொள்கின்றான்; செலுத்துகின்றான்; கொடுக்கின்றான். இவ் அன்பு சார்ந்த உணர்வுகள், செயல்கள் அனைத்தையும் உள்ளடக்கியதே மனிதநேயம். பெரும்பான்மையான மனிதநேயச் செயல்கள் மகிழ்ச்சியையும், நிறைவையும் அளிக்கின்றன; சில இழப்பினையும் ஏற்படுத்தும். ஒவ்வொரு மனிதனும் தனக்குரிய, தன்னுள் உள்ள இவ் அன்பு சார்ந்த உணர்வுகளை, செயல்களைப் பிறரோடு, பிற உயிரினங்களோடு பகிர்ந்துகொள்கின்ற நிலையில் மனிதநேயம், "தன்னைத் தான் நேசிப்பதுபோல் பிறரையும், பிற உயிரினங்களையும் நேசித்தல்" என்ற கோட்பாட்டைக் கொண்டதாக அமைகிறது.

ஒருவன் தன்னைத் தான் நேசிப்பதுபோல் பிறரையும் நேசித்தால் அங்கே பகைமை, கோபம், பொறாமை, கொலை, கொள்ளை, ஏமாற்றம், அடிமைத்தனம் போன்ற தீய செயல்கள் நடைபெறாது. ஏனெனில் மனிதநேயம்,

> உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
> இடுக்கண் களைவதாம் நட்பு

போல் நட்புக்கொண்டு துணைநிற்கும்.

> முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான்ஆம்
> இன்சொ லினதே அறம்

போல் இன்சொல் இயம்பும்.

> ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
> ஊதியம் இல்லை உயிர்க்கு

என வறியவர்க்குக் கொடுத்து உதவும்.

> ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
> பேரறி வ்ாளன் திரு

எனப் பொதுமை பேணும்.

> அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
> இகழ்வார்ப் பொறுத்தல் தலை

எனப் பொறுமை காக்கும். இவ்வாறாக மனிதநேயச் செயல்பாடுகள் பரந்து விரிந்து செல்வதற்குரியன.

மனிதநேயச் செயல்கள் மனித இனத்திற்குள் மட்டும் முடங்கிவிடாது, பிற உயிரினங்களிடமும் செல்லும் என்பதனை, பேகன்-மயில், பாரி-முல்லை, மனுநீதிச் சோழன் - பசு, சிபி-புறா, புத்தர் - அன்னப்பறவை, வள்ளலார் - வாடியபயிர் போன்ற இலக்கியச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து, விருப்பு வெறுப்பு களைப் புறந்தள்ளி, ஏற்றத்தாழ்வுகளைக் கருத்தில் கொள்ளாது, ஆண்-பெண், நண்பன்-பகைவன், வேண்டியவர்-வேண்டாதவர், உயர்திணை-அஃறிணை என எவ்வித வேறுபாடு களையும் மனத்தில் கொள்ளாது செயல்படும் மனிதநேய உணர்வுகளில், செயல்களில் முதன்மை பெறுவது தியாகம்.

'பிறருடைய நலனுக்காகத் தன் சொந்த நலனை அல்லது தன்னை இழக்கத் துணியும் செயல்' எனப் பொருள் கூறி, 'நீ செய்த தியாகங்களை நாங்கள் மறக்கவில்லை / நாட்டைக் காப்பதற்காக உயிரையும் தியாகம் செய்யும் வீரர்கள்' என எடுத்துக்காட்டுகளையும் தியாகம் என்பதற்குக் கொடுத்துள்ளது க்ரியா அகராதி. தியாகம் பிறர் நலனைக் குறிக்கோளாகக் கொண்டது. பொதுவாக அங்குத் தன் நலனுக்கு இடமில்லை. தியாகம் செய்பவர்களுக்கு இழப்பு ஏற்படும்; இழப்பு இல்லையேல் தியாகம் இல்லை. ஆனால் அந்த இழப்பு, பிறரின் நன்மை என்ற ஒரே நோக்கைக் கொண்டு அமைதலால் தியாகம் செய்பவர்க்கு இழப்பாகத் தெரிவதில்லை. காலந்தோறும் இத்தகைய தியாகச் சிந்தனையுடையவர்கள் இருந்துள்ளனர் என்பதற்குத் தமிழ் இலக்கியங்கள் சான்றளிக்கின்றன.

தியாகச் செயல்களைப் பொதுவாக நான்கு நிலைகளில் பகுக்கலாம். அவை: பொருள் தியாகம், பதவித் தியாகம், வாழ்க்கைத் தியாகம் மற்றும் உயிர்த் தியாகம்.

பொருள் தியாகம்:

ஒருவர் தனக்குரிய பொருளை, தான் பெற்ற பொருளைத் தனக்கெனக் கொள்ளாது, தன் நலன் கருதாது, பிறிதொருவருக்கு முற்றிலுமாகக் கொடுப்பது பொருள் தியாகம். தியாகப் பொருள், அதனைக் கொடுப்பவரைப் பொறுத்தமட்டில் மதிப்பும், பயன்பாடும் உயர்ந்ததாக இருக்கும்; அதனைப் பெறுபவர் பெரும் பயனடைவர்.

மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீத் தனையே (புறம் 91. 7–11)

எனும் பாடல் அதியமான் ஔவைக்கு நீண்ட நாள் வாழவைக்கும் நெல்லிக்கனியினைக் கொடுத்ததைக் கூறுகிறது. அந்த நெல்லிக் கனியினைத் தான் உண்டால் நீண்ட நாள் வாழலாம் என்பதனை நன்கு அறிந்திருந்தும் அதனைத் தான் உண்ணாது, தன் நெடுநாள் வாழ்வைக் கருத்தில் கொள்ளாது அதனை ஔவைக்குக் கொடுத்தமை மனிதநேயத்தின் உச்சத்தில் பிறந்த செயல்.

பதவித்தியாகம்:

பதவித்தியாகம் என்பது ஒருவர் தனக்குரிய பதவியினை, தனக்குக் கிடைக்கவிருக்கும் பதவியினை, எந்த எதிர்பார்ப்புமின்றித் தமது உள்ளுணர்வின் தூண்டுதலுக்கு ஏற்ப மகிழ்வுடன் பிறிதொரு வருக்குத் தானாகவே கொடுப்பது.

குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடகோச் சேரல் இளங்கோ வடிகட்கு (1-2)

எனும் சிலப்பதிகாரப் பதிகத்தின் வழி இளங்கோவடிகள் அரசப் பதவியினைத் தியாகம்செய்து, துறவறம் பூண்டமை தெரியவருகிறது.

தானும் கோயிலாளும் புறம் போந்து
நின்ற கோயிலுள்ளவெல்லாம் கொண்மின் என்று
காணம் ஒன்பது நூறாயிரத்தோடு அரசு
கட்டிற்கொடுப்ப . . . .

எனப் பதிற்றுப்பத்து - எட்டாம் பத்து-பதிகத்தில் கொடுத்துள்ள தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை அரிசில் கிழாருக்குப் பொருள்களோடு அரசுப் பதவியும் கொடுக்கும் செய்தியும் பதவித் தியாகத்திற்குச் சான்றாக அமைகிறது.

வாழ்க்கைத் தியாகம்:

உலகம் நிலைபெற மனித வாழ்வில் இல்வாழ்க்கை முக்கியமானது. இந்த வாழ்க்கையும் சமுதாயக் கோட்பாடு களுக்குட்பட்டு முறையான வாழ்க்கையாக அமைதல் வேண்டும். இல்வாழ்க்கையைப் பற்றித் தொல்காப்பியர்,

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே *(தொல்.கற். 51)*

எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் இத்தகைய இல்வாழ்வு வாழாது பிறர் நலம் பேண அதனை இழத்தலும் மனிதர்களிடம் காணப்படும் ஒரு தியாகச் செயல். காரைக்கால் அம்மையாரும், புத்தரும் துறவறம் பூண்டமை வாழ்க்கைத் தியாகம். தன் அண்ணன் நலனுக்காகத் தன் இல்வாழ்க்கையை, மனைவியை விட்டு, அண்ணனுடன் காட்டுக்குச் சென்ற இலக்குவன் செயலும் இத்தகையதே.

உயிர்த் தியாகம்:

உயிர்த்தியாகம் இரு நிலைகளில் அமைந்துள்ளது. ஒன்று தற்சார்பானது, மற்றொன்று பிறர்ச் சார்பானது.

தற்சார்பு

மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

எனும் குறள் நெறிக்கு ஏற்ப "எஞ்ஞான்றும் தம்நிலையினின்று தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம்" எனும் பரிமேலழகர் கருத்துப்படி தன் உயிர்நீக்கும் செயல் தற்சார்பு உயிர்த்தியாகம்.

பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே

(சிலம்பு-வழக்குரை, 74-78)

எனும் பாண்டியன் நெடுஞ்செழியன் செயல் இத்தகையதே. சேரமான் பெருஞ்சேரலாதன் சோழன் கரிகாற்பெருவளத்தானோடு போரிட்டுப் புறத்துற்ற புண்ணுக்கு நாணி வடக்கிருந்த செயலும் (புறம்.65) தன் சார்பு உயிர்த்தியாகமே.

தியாகச் செயல் பிறருக்கு நன்மை தருவதாக அமைதல் வேண்டும். தன்சார்பு உயிர்த் தியாகம், தியாகம் செய்பவர்க்கு நலனுடையதாக அமையினும் இச்செயல் பிறருக்கும் பயனுள்ளதே.

பாண்டியன் நெடுஞ்செழியன் நீதிக்காக, நீதி தவறியதால் மேற்கொண்ட உயிர்த்தியாகம் பிறர் நீதி தவறாமல் இருக்க அறிவுறுத்தும். பெருஞ்சேரலாதன் செயலும் ஒவ்வொரு அரசனும் நாட்டைக் காக்கும் ஆற்றல் உடையவனாக இருத்தல் வேண்டும், திறமை மிக்கவனாக இருத்தல் வேண்டும் என்பதை அரியணையில் இருப்போர்க்கு அறிவுறுத்தும்.

பிறர்ச்சார்பு:

இது பிறர் நலனுக்காக, சமுதாய நலனுக்காக, நாட்டு நலனுக்காகத் தன் உயிரைக் கொடுக்கும்; கொடுக்க முன் வரும் அரும்பெரும் தியாகம். இதுவே தியாகங்களின் உச்ச நிலை.

பாடி நின்றனெ னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்
ஆடுமலி யுவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே *(புறம் 165; 9-15)*

இரவலர்க்கு இல்லை என்னாது பரிசில் கொடுத்து வந்த தன்னிடம் கொடுக்கப் பொருள், நாடு ஒன்றும் இல்லாத போது பரிசில் வேண்டிய புலவனிடம், தன் தலையினைக் கொண்டு வருபவர்க்குப் பரிசு வழங்கப்படும் என அறிவித்த அரசனிடம் தன் தலையினை எடுத்துச் சென்று பரிசு பெறுக எனக் கூறிய குமணனின் செயல் பெரும் தியாகமே.

தன் தோழர் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் துறந்ததை அறிந்த பிசிராந்தையாரும் அவ்வாறே உயிர் நீத்தது (புறம்: பாடினோர் வரலாறு, ப.49) நட்பின் ஆழத்தால் எழுந்த உயிர்த்தியாகம்.

இவ்வாறாக மனிதநேயத்தின் மகுடமாக விளங்கும் தியாகச் செயல்கள் பல அக்கால மக்கள் வாழ்க்கையில் நடைபெற்றுள்ளன. பிற மனிதநேயச் செயல்களும் தன்னைப் போல் பிறரையும் நேசித்தல் எனும் அடிப்படையில் செயல்பட்டாலும் ஓரளவிற்குத் 'தனக்காக' என்ற ஓர் உணர்வு அங்கு அடிநிலையில் உண்டு. 'ஈத்துவக்கும் இன்பம் போல்' தனி மகிழ்ச்சியும் காணலாம். ஆனால் பெரும்பான்மையான தியாகச் செயல்கள் அவ்வாறன்று; தன்னைவிடப் பிறரை நேசிக்கும் அன்பு கொண்டது, உறவு கொண்டது. பெரும்பாலும் தனக்கு

இன்பத்தைத் தராது; மாறாகத் துன்பத்தையும், இழப்பையும் தரும். எனினும் தன் பொருளை, பதவியை, உயிரை இழத்தலால் பிறருக்கு, சமுதாயத்துக்கு, நாட்டுக்கு நன்மை ஏற்படும் என்ற மன நிறைவு ஏற்படும். தியாகம் புரிதல் அரிது; புரிந்தால் பெறும் புகழ் பெரிது; அது என்றும் அழியாது. இந்நிலையில்,

பிறப்பவர்கள் பலகோடி
இறப்பவர்கள் பலகோடி
இறப்பில்லாமல் என்றும்வாழ
தியாகமே உயிர் நாடி

எனும் பாடல் இங்கு நினைவுகூரத்தக்கது.

******

மனிதநேயம் - கொடை

முனைவர் கு. பகவதி
இணைப் பேராசிரியர்

மனிதநேயம் மனித மனத்தினின்று எழும் அன்பு சார்ந்த, நலம் நாடும் உணர்வு; எல்லா மனிதர்களிடமும் இயல்பாகக் காணப்படும் உணர்வு; எல்லா நேரங்களிலும் வெளிப்பட வேண்டும் என்பது எதிர்பார்ப்பு ஆயினும், சில சூழல்களில், சில நேரங்களில் வெளிப்படுதல் இதன் இயல்பு.

சொல்லும் பொருளும்

மனித நேயம் என்ற கலைச் சொல்லாக்கம் அண்மைக் காலத்தது; புதிய சொல்லாக்க முயற்சியில் கிளைத்தது. ஆனால் மனிதனின் நேயம் புதியதன்று. தொன்று தொட்டே தொடர்ந்து வருவது. இச்சொல் மனிதன், நேயம் என்ற இரு சொற்களின் இணைப்பில் உருவானது. இவ்விரு சொற்களையும் தனித்தனியே நோக்கும்போது மனிதனையும் நேயத்தையும் தனித்தனியே சுட்டும். ஆயின் மனிதநேயம் என்ற ஒரே சொல் நிலையில் மனிதச் சார்பு சார்ந்த பல விளக்கங்களை இது பெறுகிறது. இச்சொல்லை யார் முதலில் பயன்படுத்தினார் என்பதும் எந்தப் பொருளுக்குரியதாக இது உருவாக்கப்பட்டது என்பதும் ஆராயப்படுதற்குரியது எனினும் இச்சொல் இன்று மனிதர்களை நேசித்தல் என்ற பொருளில் பயன்பட்டு வருகிறது. ஆயினும் இச்சொல்லை எண்ணிப் பார்க்கும்போது மனிதனின் நேயம், மனிதனிடத்தில் உருவாகும் நேயம், மனிதனிடத்தினின்றும் வெளிப்படும் நேயம் என விரியும் நிலையில் தன்னில் தொடங்கி, பிறரிடத்தில், பிற உயிர்களிடத்தில் முடியும் நிலை தெரிகிறது. எனவே தன்னைப் பாதுகாத்தல்/ தற்பாதுகாப்பு ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையானது என்ற நிலையில் தன்னை நேசித்தல் அமையும், பிற மனிதர்களை நேசித்தலைக் குறிக்கும்; பிற உயிர்களை நேசித்தல் என்ற பொருளையும் கொள்ளும் என்ற நிலையில் இம்மூன்று பொருட்களும் இணைந்து நிற்கும் பொழுதே இச்சொற்பொருள் முழுமை பெறும் எனத் தோன்றுகிறது.

வரையறை

மனித நேயம் மனிதனோடு ஒன்றறக் கலந்த இயல்புகளின், உணர்வுகளின் வெளிப்பாடு. இது காட்டப்படும் மனிதர்க்கு /

உயிர்களுக்கு ஏற்ப, சுற்றியிருக்கும் சமுதாயத்திற்கு ஏற்ப, காலச்சூழலுக்கு ஏற்ப, சிந்தனை ஆற்றலுக்கு ஏற்ப, அன்பு, அருள், இரக்கம், கனிவு, கருணை, பரிவு, ஜீவகாருண்யம் போன்ற பல்வேறு உணர்வுகளாக, கொடை, தியாகம், இயக்கம் போன்ற பல்வேறு செயற்பாடுகளாக வெளிப்படும். சுருக்கமாகச் சொன்னால், 'மனித மனத்தில் தோன்றும் அன்புணர்வு தனக்கும் பிற உயிர்களுக்கும் புரை தீர்ந்த நன்மை பயக்கும் விதமாகச் சொல்லில், செயலில் வெளிப்படுதல் மனித நேயம்' எனலாம்.

மனிதனும் மனிதநேயமும்

இயற்கை மனிதனுக்கு அளித்துள்ள உணர்வுகள், இயல்புகள் பல. உணர்வுகள், இயல்புகள் இயல்பானவை போன்று இவற்றின் வெளிப்பாடுகளும் இயல்பானவை. இவற்றுள் சில மனிதநேயம் சார்ந்தன; சில சாராதன. இவற்றை வெளிப்படுத்தும் நிலையிலும் விட்டு விட வேண்டிய நிலையிலும் மனிதனின் செயல்பாடுகள் அமைதல் வேண்டும். உலகில் மனிதன், தான் மட்டும் தனித்து வாழ்தல் என்பது இயலாதது. அவன் சார்ந்து வாழ வேண்டியவன். எனவே பிறர்ச் சார்பு என்பது தனிமனிதன் தவிர்க்க இயலாதது. அதற்கேற்ப அவனது இயல்புகளும் மாற்றம் பெற வேண்டிய நிலை. ஏனெனில் எல்லா மனிதர்களும் ஒன்றுபோல் சிந்திப்பதில்லை; செயல்படுவதில்லை. அவர்களின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் வேறுபடுவன. இந்நிலையில் தன் உணர்வுகளை, தன் செயல்களைப் பிறர் நலம் கருதி வெளிப்படுத்தவோ, அடக்கவோ, அழித்து விடவோ செய்ய வேண்டியவன் ஆகிறான் மனிதன். அவ்வாறு வெளிப்படுத்தப் படுவன, அடக்கப்படுவன, அழித்து விட வேண்டியன அனைத்தும் தன்/பிறர் நலம் சார்ந்தவைகளாக இருக்கும் நிலையில் அவையே மனிதநேயப் பண்புகளாக மிளிர்கின்றன. கருணை, கோபம், பொறாமை ஆகியன மனிதப்பண்புகள் தாம். இவற்றுள் கருணை காட்டப்படவேண்டும்; கோபம் அடக்கப்படவேண்டும்; பொறாமை அழிக்கப்படவேண்டும். இவ்வாறு மனிதன் தன் இயல்புகளை, நன்மை, தீமையுணர்ந்து செயல்படுத்தும் போதே மனிதநேயமுள்ள மனிதனாகவும் உயர்கிறான் என்பது வெளிப்படை

மனிதநேய வெளிப்பாடும் பயன்பாடும்

மனித மனத்தில் உருவாகும் இம் மனிதநேயம் தனிமனிதன் அடையும் நன்மையுடன் நிற்பதில்லை. தனி மனிதன் சார்ந்து வெளிப்படும் போது அது தனிமனிதனுக்கு மட்டும் பயன்தரும். அதுவே சமுதாயத்தை நோக்கித் தழைக்கும் போது பல

மனிதர்களுக்கும் பயனாகும். மதங்கள், இயக்கங்கள் இவ்வாறு கிளைத்தவைதான். குழந்தை மணம், பெண்ணடிமைத்தனம், பெண்கல்வி, உடன்கட்டை ஏறல், தீண்டாமை ஒழிப்பு, பொதுவுடைமை, ஜீவகாருண்யம் போன்றன சார்ந்த சீர்திருத்தச் சிந்தனைகள், செயற்பாடுகள் இதன் வெளிப்பாடுதான்.

தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம்

மனிதனின் தோற்றம் தொடங்கி, தொடர்ந்து வரும் இம்மனித நேயம் சார்ந்த சிந்தனைகளை, அவற்றின் வெளிப்பாடுகளை, செயற்பாடுகளைப் பல வரலாற்று மூலங்கள் மூலமாகவும் காணல் இயலுகின்றது. தமிழ் இலக்கியம் இவற்றுள் ஒன்று. பண்டைய வரலாறு முதல் இன்றைய வரலாறு வரை தமிழனின் வரலாற்றினைத் தெளிவுபடுத்திக் கொள்ள மிகப்பெரும், மிகச் சிறந்த வரலாற்று மூலமாகத் திகழும் தமிழ் இலக்கியங்களில் இச்சிந்தனைகள் மலிந்து காணப்படுகின்றன. இவற்றை முழுமையாகத் தொகுத்துக் காணும்போது தமிழரிடம் காலந்தோறும் காணப்பட்ட மனிதநேயச் சிந்தனைகள் என்னென்ன? அவை எப்போது, யாரிடம், எவ்வாறு வெளிப்பட்டன? அவை ஏற்படுத்திய தனி மனிதச் சமுதாய மாற்றங்கள் என்னென்ன? போன்ற பல எண்ணங்கள் வெளிப்படும். இவற்றை ஒவ்வொன்றாக அணுகும் போது கிடைக்கும் முழுமை தமிழரின் மனிதநேயக் கோட்பாடுகளைப் புரிந்து கொள்ளவும் வழி வகுக்கும். இக்கட்டுரை தமிழ் இலக்கியங்கள் காட்டும் கொடை பற்றிய சில சிந்தனைகள், அவர்தம் கொடை பற்றிய கோட்பாட்டை அறிதலுக்கு எவ்வாறு துணையாகின்றன எனக்காட்ட விழைகிறது.

கொடை

தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் வெவ்வேறு பாடுபொருள் கொண்டும் வடிவம் கொண்டும் வெளிப்பாட்டு உத்திகள் கொண்டும் இலங்குகின்றன. இவற்றிற்குக் காலந்தோறும் சமுதாயத்தில் ஏற்பட்டு வரும் பல்வேறு அரசியல், சமுதாய, பண்பாட்டு மாற்றங்கள் காரணங்களாகின்றன. ஆயின் எல்லாக் கால இலக்கியங்களிலும் மனிதநேயச் சிந்தனைகள் இடம் பெறுவதில் மட்டும் மாற்றமில்லை. மனிதனுக்காக, மனிதனைப்பற்றி, மனிதனால் படைக்கப்படும் படைப்பு என்ற நிலையில் மனித உணர்வுகள், எண்ணங்கள் போன்றன இயல்பாக இவற்றுள் ஊடுருவி நிற்கின்றன. மேலும் மனித நேயத்தின் சிறப்பு, தேவை காரணமாகப் பாடுபொருளாகவே மனித நேயச் சிந்தனைகள் அமைவதையும் காண முடிகிறது. இவ்வாறு எல்லாக் கால இலக்கியங்களிலும் நிறைந்து

காணப்படும் மனிதநேயக் கூறுகளுள் ஒன்று அறம். தமிழர் தொன்று தொட்டு அறச்சிந்தனையுடன் திகழ்ந்தமை, அறவுணர்வுடன் செயல்பட்டமை பற்றியெல்லாம் பல செய்திகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. அறநெறி அருளில் தோன்றும் தன்மையினை,

"மெல்லென்று அருளிற் பிறக்கும் அறநெறி" (நான். 5: 2-3)

"மென்கண் பெருகிற் அறம் பெருகும்" (நான். 91: 2-3)

"நெகிழ்ந்த அருளினால் ஆகும் அறம்" (சிறுபஞ்ச. 32: 3-4)

என்றின்னவாறு அறநூல்கள் விளக்குகின்றன. மேலும் நாலடியார் இந்த அறத்தின் வெளிப்பாடு பலவாக அமைதலை,

"ஆவேறு உருவின ஆயினும் ஆபயந்த,
பால்வேறு உருவின அல்லவாம் - பால்போல
ஒரு தன்மைத்தாகும் அறநெறி ஆபோல்
உருவுபல கொளல் ஈங்கு" (நாலடி. 118)

எனச் சுட்டும். இவ்வாறு அறம் கொள்ளும் பல உருவுகளுள் ஒன்று கொடை

கொடையின் படி நிலைகள்

கொடையைச் சுட்டப் பல சொற்கள் தமிழில் உண்டு. ஈகை, விருந்தோம்பல், கையுறை, தானம், தருமம், அன்பளிப்பு, தியாகம் போன்ற பல. அன்பு காரணமாகக் கொடுத்தல் என்ற மனிதநேய வெளிப்பாடுதான் கொடைக்கு அடிப்படை எனினும் இக்கொடையிலும் பல்வேறு படிநிலைகள் இருப்பதைக் காட்டுவன இச்சொற்கள்.

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை என வள்ளுவர் உரைப்பார். தலைவன் தலைவிக்குக் கையுறை கொடுத்தலைக் காட்டும் சங்கப்பாக்கள். இருவரின் மகிழ்ச்சிக்கும் காரணமாகும் இச்செய்கை. தானம் செய்தல் இரப்பவன் இல்லாதவன் எல்லோருக்கும் கொடுத்தல். தருமம் பல அறச் செயல்களையும் குறிப்பிடுவது. அன்பளிப்பு அன்பின் அடிப்படையில் கொடுப்பதுடன் சிலரைப் பொறுத்தவரை எதிர்பார்ப்பும் இணைந்தது. தியாகம் முழுமையாகக் கொடுத்தல். கொடையின் இத்தகைய வேறுபட்ட போக்குகள் இன்று நேற்றல்ல, பண்டைக் காலம்தொட்டே தொடர்ந்து வருகின்றன. 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை, மற்றெல்லாம்' என்ற குறள் (221) தொடரிலேயே

இது தெளிவுபடுகிறது. இவை சரியா தவறா என்ற கேள்வியை விட, இவை தமிழர் சமுதாயத்தில் நிலவி வந்த தன்மைகள், நடைமுறைகள் என்று ஏற்றுக் கொள்ளும் தன்மையிலேயே இவற்றை ஆராய வேண்டும்.

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை

ஈ, தா, கொடு என்று ஈபவனுக்கும், பெறுபவனுக்கும் உரிய தொடர்புக்கு ஏற்ப, வேறு வேறு சொற்களைப் பயன்படுத்த வேண்டும் (தொல். 927) போன்ற செய்திகளைத் தொல்காப்பியம் சுட்டுவது முதல், ஈகையைப் பற்றிய பல எண்ணங்களைத் தமிழ் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

தொல்காப்பியரின் ஈ, தா, கொடு நூற்பாவில், இரவலர்கள் இன்னார் என்ற குறிப்பில்லாத நிலையில், கேட்போர் யாராக இருப்பினும் அவர்க்குக் கொடுக்கப்பட்டமை தெரிகிறது. 'இல் என இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு' (கலித். 2:15) என்ற பாடலடியிலும், இரப்பவர் இவர் என்ற குறிப்பில்லை. எனவே 'இல்லாதார் இரவலர்' என்ற நிலையே ஆதி முதல் என்பது தெளிவு.

கொடைப்பொருட்கள் பலவாக அமைந்தன என்பதையும் இலக்கியங்கள் காட்டுகின்றன. மன்னர் உணவு, உடையுடன் பல பரிசுப் பொருட்களையும் வழங்கினர். மணிமேகலை உணவு, உடை, உறையுள் கொடுத்தலே அறம் என்கிறது. இவ்வாறு பல பொருட்கள் கொடையில் இடம்பெறல் காலந்தோறும் தொடர்ந்து காணப்படும் நிலையே. இருப்பினும் இந்த எல்லாக் கொடையிலும் முதன்மையிடம் உணவளித்தலுக்கே இருந்தது என்பது பல சான்றுகள் மூலம் தெளிவுபடும் ஒரு செய்தி. இதற்குக் காரணம் பசி.

> **"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்**
> **பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**
> **நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்**
> **பூண்முலை மாதரோடு புறங்கடை நிறுத்தும்**
> **பசிப்பிணி என்னும் பாவி"** *(11: 76-80)*

என, மணிமேகலை பசியின் கொடுமையையுரைக்கிறது. இதனையே நாலடியார் 'ஒத்த குடிப்பிறந்த கண்ணும் ஒன்றில்லாதார் செத்த பிணத்திற் கடை' (281) எனச் சுட்டுகிறது. எனவேதான் இதனைப் பசிப்பிணி (மணி: 18: 234) என்றனர் போலும். இந்நோய் தனிமனிதனைத் தாக்கி அவனது மரியாதை, அவனது செயல்திறன் எல்லாவற்றையும் அழிக்கும்; அப்போது, சமுதாயமும் பாழ்படும்

என்ற நிலையிலேயே இந்நோய் தீர்க்க உணவளித்தல் என்ற நிலையில் தமிழர் இதனையே முதன்மை அறம் எனக் கருதிச் செயல்பட்டனர். எனவேதான் அறநெறிச்சாரமும், 'ஊண் கொடையோ டொன்றும் கொடையொப்பதில்' எனச் சொல்லிற்று (பன்னூல் பாடற்றிரட்டு. ப. 59).

ஔவையாரும் இதனை,

> "பொன்னும் முத்தும் மணியும் கலந்தொரு
> கோடானு கோடி கொடுப்பினு மக்கொடை
> ஒருபொழு தொருவ னுணவருள் நிலைக்கு
> நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே"
>
> (பன்னூல்பாடத்திற்றிரட்டு ப. 59)

என்பார்.

ஆற்றுப்படைஇலக்கியம், வழிச் செல்லும் இரவலர் அந்தந்த நிலத்து உணவினைப் பெற்ற தன்மையைக் காட்டும். இந்த ஈகையில் புதியவர்களுக்குத் தாமாக மனமுவந்து விருந்து பேணியது பெறப்படுகின்றது. இதனை,

> "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
> வேளாண்மை செய்தற் பொருட்டு" (81)

எனக் குறள் இயம்புகிறது.

> "அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
> துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
> விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" (சிலப். 16:71–73)

என்ற, தொல்லோர் விருந்தை எதிர்சென்று கொண்ட சிறப்பை இழந்தமை குறித்து வருந்தும் கண்ணகியின் துன்பம், 'விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்' என்ற சீதையின் துன்பம், விருந்து பேண முடியாமை குறித்து வருந்தியதற்கான சான்றுகள்; விருந்தோம்புதலுக்கு இல்லறத்தார் கொடுத்த முக்கியத்துவம் காலந்தோறும் தொடர்ந்து வந்ததைக் காட்டும் சான்றுகள்.

மன்னர்களும் உணவும் மேலும் பல பொருட்களும் கொடுத்து மகிழ்ந்தமை குறித்த பல சான்றுகள் உண்டு. இதில் புகழ் விருப்பமும் தெரிகிறது. 'இம்மைச் செய்தது மறுமைக்கா மெனும் அறவிலை வணிகன் ஆயலன்' (புறம். 134) என்ற கூற்றிலும் இது தெளிவுபடுகிறது. மறுமை கருதி, ஈந்த தன்மையோர் இங்குத் தெரிய

வருகின்றனர். 'அறம் கருதிக் கொடை புரிதல் கூடாது' என்ற சிந்தனை இவர்களிடம் இருந்தமையும் புலனாகிறது.

இந்த ஈகையுணர்வு இன்று வரை தொடரும் ஓர் உணர்வு. கொடுக்கும் முறைகளில் இன்று மாற்றங்கள் உண்டு. உணவு அளித்தலில் பெறுபவர் நிலையிலும் மாற்றம் உண்டு. பொதுவாக இன்று விருந்தினர் என்ற சொல் புதியவர்களை, தெரிந்தவர்களை, உறவினர்களைக் குறிப்பிட்டாலும் முதலில் புதியவர்களை மட்டுமே இச்சொல் குறித்தது. (விருந்து - அதிதி, புதியவன், புதுமை, நூலுக்குரிய வனப்புகளுள் ஒன்று - தமிழ் லெக்ஸிகன் தொகுதி 6 பக்-3704) எனவே விருந்தோம்புதலில் அமையும் விருந்தினர் புதியோராக அமையும் நிலையில், புதியோரை ஓம்புதல் என்னும் போது, அங்கு எந்த வித எதிர்பார்ப்பும் இருத்தலுக்கு வாய்ப்பில்லை. எனவே தான் விருந்தோம்புதலை முதன்மையான ஈகை எனக் கருதி இல்லறத்தார் இதனைத் தம் கடமையாகக் கொண்டனர் போலும். சுற்றந்தழாலில் இவர்கள் உறவினரை அரவணைத்து வாழ்ந்தமை புலப்படுகிறது. ஆயின் இன்று விருந்து கொடுத்தல் என்பதில் தெரிந்தவர்கள், உறவினர்கள் ஓம்பப்படுதலே அமைகிறது. எனினும் தெரியாதவர் களைப் பேணுதலும் தமிழர் வாழ்வில் உண்டு. எனவே இன்றைய நிலையில் பொதுவாக இக்கொடையுணர்வை நோக்க, குறிப்பிட்ட நாள்களில் மட்டுமன்றி இயற்கைச் சீற்றம், இயற்கைப் பொய்ப்பு போர் காரணமாகப் பாதிக்கப்பட்டோருக்கு உதவுதல், அனாதை இல்லங்களுக்கு அளித்தல் எனப்பல நிலைகளில் வெளிப்படு கின்றதைக் காண்கிறோம். தவிர இரத்த தானம், உறுப்புத் தானம் போன்ற பல தானங்களும் இவற்றுள் அடங்கும். இவற்றையெல்லாம் நோக்க 'வறியார்க்கு ஒன்று ஈதலே ஈகை' என்ற வள்ளுவர் வாக்கு உலகம் உள்ள வரையிலும் இருக்கும் என்பது தெளிவு. எனவே இன்றைய நிலையில் இத்தொடருக்கு, 'எதிர்பார்ப்பின்றி யாருக்கு, எது, எப்போது தேவையோ அதனை, அப்போது, அவருக்கு அளிப்பது ஈகை' என விளக்கம் அளிக்கலாம்.

அளவு

எவ்வளவு கொடுக்க வேண்டும் என்றும் தமிழர் சிந்தித்தனர். இல்லாதவனுக்கும் இரப்பவனுக்கும் கொடுப்பது ஈகை எனினும் அங்கும் அளவு கருதப்பட வேண்டும் என்று எண்ணியவர்கள் தமிழர்கள். இதனைக் குறள் தெளிவாக விளக்குகிறது.

"ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி" (477)

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பதை உணர்ந்தவர் வள்ளுவர். எனவே பொருளைப் போற்ற வேண்டும் என்பதும் அவர்தம் அவா.

சங்க காலத்திய மன்னன் கொடை மடம் உடையவனாகக் காட்டப்படுகின்றான். வரிசையறியாது கொடுத்துள்ளான். தலைநாட் போலப் பல நாளும் கொடுத்துள்ளான். மேலும் முந்நூறு ஊர்களுடைய நாடு முழுவதையும் பரிசிலர்க்குக் கொடுத்தவன் பாரி. ஒரு வேளை இத்தகைய செயல்கள் கொடைப் பொருளின் மதிப்பினை உணரவைக்காத நிலையிலேயே வள்ளுவர் இவ்வாறு சொன்னாரோ என்று சிந்திக்கத் தோன்றுகிறது அல்லது மன்னனின் இச்செயல்கள் உயர்வு நவிற்சி எனக் கொண்டாலும், அல்லது புகழ் விரும்பி மன்னர்கள் இவ்வாறு அளித்திருக்கலாம் எனக் கொண்டாலும் கூட, வள்ளுவர் காலச் சமுதாயத்தில் அளவறிந்து பொருளை வழங்க வேண்டும் எனச் சொல்ல வேண்டிய தேவை இருந்திருக்கலாம். அதனால் வள்ளுவர் இவ்வாறு சொன்னார் என்றும் கருதலாம். இதனால் பலர் பயன் பெறுவர் என்ற எண்ணமும் இருந்திருக்கக் கூடும். தவிர, இக்குறளை இன்னொரு கோணத்திலும் சிந்திக்கலாம். இக்குறள் இடம் பெற்றிருப்பது அரசியல், வலியறிதல் அதிகாரத்தில் ஆகும்.

அரசனின் பல வலிமைகளில் பொருள் வலிமையையும் விளக்குகின்றார் வள்ளுவர். முதல் குறளில் ஓர் அரசன், வலிமை குறித்துச் சிந்திக்க வேண்டிய, அதன் வழிச் செயல்பட வேண்டிய செய்திகளை விளக்கிச் செல்கின்றபோது, வினைவலி, தன்வலி, மாற்றான் வலி, துணைவலி என எல்லா வலிமைகளையும் சீர்தூக்கிச் செயல்பட வேண்டும் என்கிறார். இறுதி நான்கு குறட்பாக்களில் பொருள் வலிமையை இயம்புகின்றார். அவற்றுள் முதல் குறள் இது. இதற்கு 'ஈகை நெறிப்படி தன் செல்வத்தின் அளவறிந்து தக்கவாறு அளவோடு ஈதல் வேண்டும்' என உரையாசிரியர்கள் உரை எழுதுகின்றனர். எனினும், இங்கும் முதற் நூற்பா போன்று தன், பிறர் என்ற இரண்டு பக்கமும் நோக்க, அளவறிதல் என்பது தன்னிடம் உள்ள அளவு, தனக்கு எவ்வளவு கொடுக்க முடியுமோ அந்த அளவு என்பதுடன், கேட்பவனுக்கு எவ்வளவு தேவையோ அந்த அளவும் காண வேண்டும் என்ற கருத்தையும் இணைத்துச் சொன்னாரோ வள்ளுவர் என்ற எண்ணம் எழுகிறது. தன்னிடம் மிகுதியாக இருப்பினும், தன்னால் மிகுதியாகக் கொடுக்க முடிந்தாலும் கேட்பவரின் தேவைக்கு அதிகமாகக் கொடுக்கும்போது கொடையின் மதிப்பினைப் பெறுபவன் உணரமாட்டான்; அளவின்றிக்

கொடுக்கும்போது கொடை சிறக்காது; பொருளின் சிறப்பும் உணரப் படமாட்டாது.

இன்று பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்றும் சொல்கிறோம். தான் அளிக்கும் கொடைப் பொருள் உரியவருக்குச் சென்று சேருமா? உரியவருக்குத்தான் அளிக்கிறோமா? என்ற சிந்தனைகள் எல்லாம் இன்று மேலும் தேவைப்படுகின்ற சிந்தனைகள்.

கொடுக்கும் முறை

தமிழரிடம் காணப்பட்ட மற்றுமொரு சிந்தனை கொடை பரிவுடன், மகிழ்வுடன் கொடுக்கப்பட வேண்டும் என்பதுமாகும். மகளிர் விருந்து பேண முடியவில்லையே என வருந்தும் நிலை விருந்து ஓம்புதலை மகிழ்வுடன் செய்திருக்கின்றனர் என்ற எண்ணத்தைத் தருகிறது. மன்னன் பரிவுடன் ஈகை செய்த தன்மை காணப்படுகின்றது. எனினும் எல்லோரும் மகிழ்வுடன் கொடுத்தார்களா என்ற வினாவை,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" *(குறள். 90)*

எழுப்புகிறது. முகந்திரிந்து நோக்கியமை இருந்திருக்கிறது. இதனடிப்படையில் பிறந்தமையே இரத்தல் பற்றிய பல கருத்துகளும் அறவுரைகளும். இரவு, இரவு அச்சம் என்ற இரண்டு அதிகாரங்களில் வள்ளுவர் இரத்தல் பற்றிக் கூறுகின்றார்.

"ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்" *(குறள். 1066)*

என இரத்தலின் இழிவு கூறுகிறார்.

எனவே இரத்தலின் இழிவு காரணமாகக் கொடுத்தலின் சிறப்புப் பற்றி மனிதர் உணரும் வண்ணம் பல கருத்துகளைச் சொல்லிச் சென்றிருக்கின்றனர் தமிழ் இலக்கியவாதிகள். ஆயினும் முன்னரே குறிப்பிட்டபடி எல்லோரும் எல்லாநேரத்திலும் மனித நேயத்துடன் திகழ்தல் என்பது இயலாதது. கொடுத்தலும் அரிது என்ற நிலையினையும் வள்ளுவர் தொட்டு, பாரதி வரையிலும் தெளிந்து உணர்ந்திருந்தனர். இதன் காரணமாக,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்" *(குறள். 1062)*

என, வள்ளுவர் படைத்தவனைச் சபிக்க, பாரதியார்

"தனியொருவனுக்கு உணவிலை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்" (பாரதசமுதாயம். 2)

என,. உலகினை, சமுதாயத்தை அழிக்க நினைக்கிறார். இல்லாதவன், பசித்தவன் துன்பத்திற்குப் படைத்தவனையும் சமுதாயத்தையும் காரணம் காட்டல் இங்கு நோக்கத்தக்கது.

கொடைச் சிந்தனைகள்

இவ்வாறு இல்லாமை, எப்பொழுதும் ஈதல் இயலாமை, மக்களிடம் காணப்பட்டமை, தமிழ் மக்களைச் சிந்திக்க வைத்த நிலையிலேயே கொடையைப் பற்றிப் பல விளக்கங்களும் அறிவுரைகளும் நம்பிக்கைகளும் மக்களிடம் சொல்லப்பட்டன.

"உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலு மிலரே" (புறம். 182)

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" (குறள். 82)

"யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி"
(திருமந்திரம் 252)

"ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை" (மணி. 11: 93-94.)

"பிறக்கும் பொழுதும் கொடுவந்ததில்லை; பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுதும் கொடு போவதில்லை; இடை நடுவில்
குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுத்தறியாது
இறக்கும் குலாமருக்கும் என்சொல்கேன் கச்சிஏகம்பனே"
(பட்டினத்தார் - திருஏகம்பமாலை - 7)

என, இயல்பாகச் சொன்னார்கள்.

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. (குறள். 86)

"இல்லா விடத்தும் இயன்ற அளவினால்
உள்ள இடம்போற் பெரிதுவந்து - மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்கு
அடையாவாம் ஆண்டைக் கதவு" (நாலடி. 91)

என, வீடுபேறு கிடைக்கும் என்று சொன்னார்கள்.

"ஈத்துண்பான் என்பான் இசை நடுவான்" *(நான். 60:1)*

"அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர்
கொடுத்தார் எனப்படும் சொல்" *(நாலடி. 100:3–4)*

என, புகழ் கிடைக்கும் என்று சொன்னார்கள்.

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்" *(குறள். 166)*

என, கொடுப்பதைத் தடுத்தால் அடையும் தீமை சுட்டிச் சொன்னார்கள்.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்" *(குறள். 33)*

"கல்யாணம் தேவர் பிதிர் விழா வேள்வி என்று
ஐவகை நாளும் இகழாதறஞ் செய்க
பெய்க விருந்திற்கும் கூழ்" *(ஆசாரக். 48)*

என முடிந்த பொழுதெல்லாம், சில குறிப்பிட்ட நாட்களில் எல்லாம் கொடை செய்யச் சொன்னார்கள்.

இவ்வளவு சொல்லியும் செய்யாதவர்கள் இருந்தென்ன, இல்லாதிருந்தென்ன என்றும் சொன்னார்கள்.

"ஓயாமல் பொய் சொல்லுவார்................

– – – – – – – – – –

.... பிறர்க்குபகாரஞ் செய்யார்: தமை அண்டினார்க்கொன்
றீயார் இருந்தென்ன போயென்ன காண் கச்சி ஏகம்பனே"
(பட்டினத்தார் திருஏகம்பமாலை – 19)

இவற்றையெல்லாம் நோக்க இயல்பாகச் சொல்வதுடன், நம்பிக்கை, சடங்கு, பயன் எனச் சொல்வது அதிகப் பயனளிக்கும் என்ற நிலையில் இக்கருத்துகளையெல்லாம் சொல்லி, மக்களிடம் கொடையுணர்வை மேம்படுத்தி, இல்லாதவர் துன்பம் போக்க விழைந்திருக்கின்றனர் என்பது பெறப்படுகிறது.

கருதுகோள்

தமிழ் இலக்கியங்கள் சுட்டிய கொடை பற்றிய தமிழரின் சிந்தனைகள் சில ஆராயப்பட்டன. இவற்றினின்றும், தமிழரின் சமுதாயத்தில் கொடை இருந்தது, கொடுக்காமையும் இருந்தது; மகிழ்வுடன் கொடை செய்யப்பட்டது, மகிழ்வின்றிக் கொடுக்கப்

பட்டது; அளவின்றிக் கொடை செய்யப்பட்டது, அளவாகச் செய்யப்பட்டது போன்ற பல செய்திகள் புலப்படுகின்றன. தமிழர் இவற்றையெல்லாம் அறிவு பூர்வமாகவும், உணர்வு பூர்வமாகவும் அணுகிய காரணத்தால், இருப்பவன் கொடுக்க வேண்டும்; இல்லாமை அகற்றப்படவேண்டும் என்பதும் துன்புறும் மனிதனால் சமுதாயம் பாதிக்கப்படக்கூடாது; சமுதாயத்தால் மனிதன் துன்பப்படக்கூடாது என்பதும் கருதி, அதற்கேற்பத் தம் வாழ்வில் கொடைச் செயல்கள் அமைய வேண்டும் என்ற கோட்பாடு கொண்டு வாழ வேண்டும் என்று விரும்பி வாழ்ந்து வந்துள்ளான்; வாழ்ந்து வருகின்றான் எனக் கருதுதல் இயலுகிறது. இக்கருதுகோளைக் கொண்டு, தமிழ் இலக்கியங்கள் முழுமையும் காட்டும் கொடை பற்றிய, கொடையுடன் தொடர்புடைய வறுமை, பசி, நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் போன்ற அனைத்துச் சிந்தனைகளையும் காலவாரியாகக் காணும்போது தமிழரின் கொடை பற்றிய இந்தக் கருதுகோள், தமிழரின் கொடைக் கோட்பாடாதல் கூடும்.

******

திருக்குறளும் மனிதநேயமும்

முனைவர் தி. மகாலட்சுமி
ஆராய்ச்சி உதவியாளர்

உலகப் பொதுமறை எனப் போற்றும் திருக்குறளில் சொல்லப் படாத செய்திகளே இல்லை எனலாம். இது அறநூலாகத் தோன்றினும் இதில் சமூகச் சிந்தனை, விழிப்புணர்வு, சமூகத் தேடல் எனப் பல்வேறு நிலைகள் ஊடாடிக் கிடக்கின்றன. அவ்வகையில் மனிதநேயக் கருத்துகள் செறிந்து, நிறைந்து கிடக்கின்ற ஊற்றாகவும் இது திகழ்கின்றது. அருளுடைமை என்ற அதிகாரத்தை இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவ்வதிகாரத்திலும் அன்புடைமை, புலால் மறுத்தல், கொல்லாமை, இரவு, இரவு அச்சம் ஆகிய அதிகாரங்களில் உள்ள மனித நேயக் கருத்துகளைக் காணலாம்.

மனிதநேயம்-விளக்கம்

மனிதன்-மனிதனிடத்தும் பிற உயிர்களிடத்தும் காட்டும் நேயம் மனிதநேயம். இந்த மனிதநேயம் என்ற சொல் இருபதாம் நூற்றாண்டில் ஆங்கிலவழித் தமிழ்ப்படுத்தப்பட்ட ஒரு சொல். அருளுடைமை என்பதன் மாற்றுச் சொல்லே மனிதநேயம்.

அருளுடைமை-பொருள்விளக்கம்

அருளுடைமை என்பதற்குப் பல்வேறு விளக்கங்களை உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். அவற்றுள் "அருளுடைமையாவது யாதானும் ஒருயிர் இடர்ப்படின் அதற்குத் தன்னுயிர்க்கு உற்ற துன்பத்தினால் வருந்துமாறு போல வருந்தும் ஈரமுடைமை" என்பது மணக்குடவர் தரும் விளக்கம். "எல்லா உயிர்கள் மேலும் தயை உடையவனாய் இருக்கிறது." என்பது மல்லர் தரும் விளக்கம். எனவே ஓர் உயிர் துன்பப்படும் போது அவ்வுயிர்பால் கசியும் ஈரமுடைமையை அருளுடைமை எனலாம். மனிதநேயம் என்பதும் இதன்பாற்படுவதே.

அன்புடைமையும்-அருளுடைமையும்

"இல்லற வாழ்வில் அன்புடைமை முதிர்ந்து, விருந்தோம்பல், ஒப்புரவு, ஈகையாற் படர்ந்து துறவியலில் அருளுடைமை ஆகிறது. இதனையே வள்ளுவர் 'அருள் எனும் அன்புஈன் குழவி' (757) என்றார்" என்று அன்புக்கும் அருளுக்கும் உள்ள தொடர்பைத் தண்டபாணி

தேசிகர் விளக்குகிறார். மேலுமவர், 'கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையார் மேற்கொண்டது அன்பு. அதுவே புறாவுக்குத் தன் தசையைக் கொடுத்த சிபியின் செயல் அருள்'' என்ற காட்டின் வழி அன்புடைமையும் அருளுடைமையும் தம்முள் தொடர்பு கொண்டவை என விளக்குகிறார்.

அன்பும்–இல்லற அன்பும்

ஒத்த அன்புடையவர்களால் உருவாகும் அன்பு வாழ்க்கை அன்புடைமையாகும். இருப்பினும் இவ் அன்பு வாழ்க்கைக்கு மட்டுமன்றி அதனையும் தாண்டிச் செலுத்தப்பட வேண்டிய ஒன்று. ''தன்னைச் சார்ந்தார் மாட்டுக் காதலுடையவனாதல்'' என்ற மணக்குடவர் உரை இல்லறம் சார்ந்தோர் கொள்ளும் அன்பை அன்புடைமையாகக் காட்டுகிறது. "இல்லறம் இனிது நடத்தலும், பிறவுயிர்கள் மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனாகலின் இது வேண்டப்பட்டது'' என்பது அன்புடைமைக்கான அதிகார விளக்கத்தில் பரிமேலழகர் கூறும் சிறந்த விளக்கமாகும். எப்படியெனில்,

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்" (71)

என்ற குறளில் ஆர்வலர், புன்கணீர் என்பதற்குத் துன்பம் கண்ட விடத்து அன்புடையவர் பெருக்கும் கண்ணீர் என்பது விளக்கமாகும். இதன்வழிக் கண்ணீரின் அளவைப் பொறுத்து அன்பு வெளிப்பட்டு நிற்கும் என்று தெரிகிறது. அமெரிக்காவில் இரட்டைக் கோபுரம் சரிந்து ஆயிரக்கணக்கானோர் மடிந்தபோது இங்குள்ளவருக்குத் தோன்றியது இரக்கம். அதுவே தன்மகன் காலொடிந்து வருந்தினால் வரும் கண்ணீர் அன்பு. இவ் அன்பு தொடர்புடையார் மாட்டு நிகழும் உணர்வுப் பகுதி. மேலும்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உடையர் பிறர்க்கு" (72)

என்ற குறள் தன் உறவுக்காரர்களிடம் மட்டுமன்றி அதனையும் தாண்டி அன்பு செலுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இந்த உணர்வு மிகுதிப்படும்போது அருளுடைமையாக மலர்கிறது. 'அன்பு ஈனும் ஆர்வம் உடைமை' (74) என்ற குறளுக்குப் பொருளுரைக்கும் காளிங்கர் "பல உயிர்களிடத்தும் வைத்த உள்ளன்பு" என்கிறார். எனவே அனைத்து உயிர்களிடத்தும் காட்டும் இரக்க உணர்வை அருளுடைமை என்று கொள்ள இயலும்.

அருளுடைமை – செல்வம்

செல்வமானது கல்வி, கேள்வி, பொருள் எனப் பலவகையாக விரிந்து நிற்கக் கூடியது. இவற்றுள் ஒன்றான பொருட் செல்வத்துள் உண்டி, உடை, உறையுள், விளைநிலம் போன்றன அடங்குகின்றன. இருப்பினும்,

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" *(212)*

என்ற குறள் பிறருக்கு உதவும் பொழுதுதான் செல்வமானது அதன் பயனை அடைகிறது என்பதை உணர்த்துகிறது. இரக்கமற்ற கயவர்களிடமும், இழிந்தவர்களிடமும் இருக்கும் செல்வம் உயர்வுபடாது. இத்தகையவரிடத்து அருள் பிறப்பதில்லை. அருள் என்னும் உயர்வுடைய செல்வம் பிறக்கும் வழியை,

"வலியார்முன் தன்னை நினைக்க தான்தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து" *(249)*

என்ற குறள் காட்டுகிறது. இங்கு மெல்லிய உயிர்கள் அதாவது அடக்கப்பட்ட ஆடுமாடு போன்ற உயிர்கள் மேலும் கொள்ளும் இரக்கம், அருள் பிறப்பதற்கு வழியாகிறது.

கொல்லாமை–புலால் உண்ணாமை

நம்மிலும் மெல்லிய உயிர்களிடம் காட்டும் அன்பினால் அருள் பிறக்கும். பின்பு வையகமட்டும் வளரும்; முடிவில் அது கொல்லாமை என்ற உயர்மிகு பண்பில் நிற்கும் என்பது வள்ளுவர் எண்ணம். எனவே அருள், புலால் உண்ணாமை ஆகியவற்றைக் கூறி இறுதியாகக் கொல்லாமையை வலியுறுத்துகிறார்.

"ஓரறிவுயிரையும் கொல்லாதிருத்தல் கொல்லாமை. பிற உயிரைப் போக்கிய ஊனை உண்ணாதிருத்தல் புலால் மறுத்தல். ஆதலால் அருளையடுத்து இடம் பெறத்தக்கது புலால் மறுத்தல். முதிர்ந்த விரதமாக இறுதியில் பெறத்தக்கது கொல்லாமை" என்று தண்டபாணி தேசிகர் கூறுவார்.

ஓரிறிவுயிரையும் கொல்லாதிருப்பது ஆண்டவனை வணங்கி வீடுபேறடையத் துடிக்கும் அன்பருக்கன்றி நடைமுறை வாழ்க்கையில் அனைவருக்கும் கைகூடாது. ஆகையால் மெல்லிய உயிர்களை மதித்தலும், பரிவுகாட்டலும், உண்ணாதிருத்தலும் அருளைப் பெறுவதற்கு வழியாகும் என்பது வள்ளுவர் கருத்து.

மேலும் உண்ணக் கூடிய மெல்லிய உயிர்களைக் கொன்று தின்று கொண்டே இருந்தால் முடிவில் நாமும் வலிய விலங்குகளுக்கு இரையாகும் நிலை ஏற்படக் கூடும். பிறகு அதனைவிட வலிமையானது அதனை உண்ண இறுதியில் ஆக்கலும் அழிதலும் இன்றி உயிர்களே இல்லாத உலகம் மட்டுமே எஞ்சும். எனவே, வள்ளுவர் "ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை" என்று கூறியுள்ளார்.

"உண்ணப்படும் விலங்குகள் அதனால் தேய்ந்து சிலவாக, ஏனைய பலவாக வருதலின் உண்ணாமை உள்ளது உயிர்நிலை என்கிறார்." என்று பரிமேலழகர் தரும் விளக்கம் சிறப்புக்குரியது. எனவே புலால் உண்பது என்ற நிலையிலிருந்து மாறுவது அருளைப் பெறுவதற்கான முதல்வழியாகும்.

அருளுடைமை–மதம்

இறைவனை அடையும் வழிகளைக் கூறும் மதங்கள் பலவாக உள்ளன. ஒரு மதம் கூறியதை இன்னொன்று மறுக்கும் அல்லது ஏற்கும். ஆயின் அனைத்து மதங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சில கருத்துகள் ஒவ்வொரு மதத்திலும் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் அருளுடைமையாகிய மனிதநேயம். 'உன் உயிரைப் போல, பிற உயிரையும் நேசி' என்ற மனிதநேயக் கருத்தை அனைத்துச் சமயங்களும் கூறுகின்றன. இதனையே,

> "நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்
> தேரினும் அஃதே துணை" (242)

என்கிறார் வள்ளுவர். "எல்லாச் சமயத்தாரானும் உறுதியாக விரும்பப்படுவது அருளாதலால் உயிர்க்குறுதி வேண்டினோர் அருளுடையராக வென்பது கருத்து" என இராமானுஜகவிராயர் விளக்கம் தருகிறார். சமயங்கள் பல இருந்த காலத்திலும் வள்ளுவர் அருளை மனத்தில் கொண்டு வாழுங்கள் என்று கூறியிருக்கிறார். இன்றும் சமயங்கள் பல இருப்பினும் மனிதநேயத்தோடு வாழுங்கள் என்பதே முதன்மையாகக் கூறப்பட்டு வருகிறது. எனவே மதவழியாக நடப்பினும் மனிதாபிமானத்தோடு நடப்பதே சிறந்தது.

அருளும்–உயிரும்

> "மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
> தன்னுயிர் அஞ்சும் வினை" (244)

என்ற குறளில் மன்னுயிர் என்பதற்கு நிலைபெற்ற உயிர் என்பது பொதுவான பொருளாகும். "ஆத்மா அழிவற்றது. அதுவே மன்னுயிர்"

என்பது சமயக் கருத்து. "உயிர்களெல்லாம் நித்தியமாகலின் மன்னுயிர் என்றார்" என்பர் பரிமேலழகர். 'துவசம் சாபாவ அப்பிரிதியோகி" (நாசமின்றி இருப்பது) எனத் தண்டபாணி தேசிகரும் விளக்கம் தருகிறார். வள்ளுவரும் இம்மை, மறுமை, ஆத்மா போன்ற சொற்களைக் கையாண்டுள்ளார்.

நிலைத்த உயிரை விரும்பி அருள் செய்பவர் என்பதற்குப் பொருள், இவ்வுலகில் வாழ்வதற்கு ஏற்ற சூழலையும், வளத்தையும் இனிவரும் தலைமுறையினருக்கும் உருவாக்க முனைபவருக்குத் தன் உயிரைப் பற்றிய அச்சமில்லை என்பதாம். சுற்றுச்சூழல், வளம் எனப் பலவற்றையும் எண்ண வைக்கும் மனிதாபிமானமிக்க குறளாக இது அமைகிறது.

"அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி" (245)

என்ற குறள் அருளுடையவராக வாழ்கின்றவர்களுக்குத் துன்பம் இல்லை; காற்று இயங்குகின்ற வளம் பொருந்திய பெரிய உலகத்தில் வாழ்வோரே இதற்குச் சான்று என்கிறது.

தன்னைப்போல் பிறரையும் நேசிக்கும் பண்பு ஒரு நாட்டில் நிறைந்து இருக்குமானால் அந்த நாடு நிச்சயமாக வளம்பெற்றுத் திகழும். எனவே அருள்உடைமைச் சிந்தனையோடு கூடியவர்கள் பெருக வேண்டும் என்பதை இக்குறள் வலியுறுத்துகிறது.

இரவும் இரவு அச்சமும்

வள்ளுவர் இரவதிகாரத்தில் வறியோனின் இரத்தலுக்குப் பரிந்து பேசுவார். இரவச்ச அதிகாரத்தில் இரத்தலின் இழிவைப் பேசுவார். இரத்தலும், ஈதலும் உள்ள சமுதாயத்தில் நீ இரத்தல் செய்யாதே, நீ ஈயாதே என்று கூறிவிட்டால் இரத்தலைச் செய்து வந்தவன் அடுத்து என்ன செய்வான் என்ற சிக்கல் உருவாகிறது. எனவே இதற்குத் தீர்வுகாணும் பொருட்டு 'அப்பா நீ வாங்கு தவறில்லை' என இரப்பவனுக்குப் பரிந்து பேசுகிறார். அதுபோல் தருபவரிடம் 'நீ கொடு அதுதான் உனக்குச் சிறப்பு' என அவனைத் தரச்சொல்லி ஊக்கப்படுத்துகிறார். எனவேதான் "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" (221) என்றார். ஆயின் இரத்தலைத் தொடராது தடுத்துநிறுத்த வேண்டும் என்ற நோக்கில் அல்லவா வள்ளுவர் அப்படிக் கூறினார்.

எனவே அடுத்தபடியாக வாங்கு என்று கூறினேன் என்பதற்காக நீ தொடர்ந்து வாங்கிக் கொண்டே இருக்கக் கூடாது.

ஏனென்றால் அது மிகமிக இழிவான செயல். எனவே அதனை விடுத்து, நீ உழைப்பதற்கு முன் வரவேண்டும். உழைப்பின் பயன் மிகக் குறைவாகக் கிட்டினும் இரத்தலை விட உயர்வு என்பதால் அதனை நீ மலையளவு பயனாக எடுத்துக் கொண்டு முன்னேற வேண்டும். செறிவில்லாத தெளிந்த நீர் போன்ற கஞ்சி ஆயினும் தன் உழைப்பால் பெற்றதாயின் அதனை உண்பது என்பது அமிர்தத்தோடு ஒக்கும் (1065). இத்தகைய உழைப்பு உயர்வுதரும் நிலையில் இரத்தலும் ஈகையும் மெல்லமெல்லக் குறைந்து இறுதியில் மறையும் நிலை உருவாகும்.

உழைப்பு அடிபட்டுச் சோம்பல் காரணமாகப் பிறரிடமிருந்து பெறக்கூடிய நிலை என்பது இழிவுக்கும் இழிவானது என நினைத்த வள்ளுவர் உழைப்பின்றிப் பெறும் எப்பொருளும் மனிதநேயத்திற்கு இடையூறாக அமையும் என்பதை உட்பொருளாக வைத்துப் பேசுகிறார். இதன்வழி இரக்கும் நிலை ஏற்படினும் முயற்சியைக் கைவிடாது உழைக்கும் நிலை உருவாகி ஏற்றத்தாழ்வுகள் நீங்கவேண்டும் என்ற மனிதநேயச் சிந்தனையை வள்ளுவர் தருகிறார்.

முடிவாக...

அனைத்து உயிர்களிடத்தும் காட்டும் இரக்கமே அருளுடைமை.

அன்பும், அருளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை; அன்பின் வளர்ச்சியே அருளுடைமை.

அன்பு என்பது இல்லறம் பேணுவார் கடைப்பிடிப்பது மட்டுமல்ல. அது அதனினும் பெருகிப் பரவி நிற்பது.

எளிய உயிர்களையும் பேணுவதால் அருள்பிறக்கும்.

கொல்லாமை என்ற உயர்ந்த நெறியை அனைவரும் பின்பற்றுவது கடினம்; எனினும் புலால் உண்ணாமை என்ற பண்பைக் கடைப்பிடித்தல் இயலும். அருளுடைமை அழகுற உருப்பெற இதுவே முதன்மைப் பண்பாகும்.

முடிந்தவரை அருள்கொண்டு வாழுதல் என்பதே நல்ல நெறி.

இனிவரும் உலகத்தையும் காக்க எண்ணும் அருளுடைமை கொண்டவருக்குத் துன்பமில்லை. இழிந்தது இரத்தல்; உயர்ந்தது உழைப்பு, அதுவே மனிதநேயத்தை வளர்க்கும்.

******

திருமந்திரம் உணர்த்தும் மனிதநேயம்

இரா. கமலா
ஆய்வாளர்

மனிதநேயம் என்ற இச்சொற்றொடர் இப்பொழுது பல்லோராலும் கையாளப்படுகின்ற ஒரு சொற்றொடராகும். அன்பு, அருள், பரிவு, பாசம், அறம் இவையனைத்தும் மனிதநேயக் கூறுகளில் அடங்கும். மனிதன் மனிதனாக வாழ்வதற்குரிய பண்புகளையும் அறநெறிகளையும் நூல்கள் பல நுவலுகின்றன. மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களையும், வாழ்க்கை நெறிமுறை களையும் திருமூலர் தம் திருமந்திரத்துள் கூறுகின்றார். இவர்தம் நூலில் சொல்லப்பெற்ற அறஞ்செயான் திறம், அறம் செய்வான் திறம், அன்புடைமை, உயிர் நிலையாமை, தானச்சிறப்பு, புலால் மறுத்தல், இதோபதேசம், உட்சமயம் ஆகிய பிரிவுகளில் அடங்கிய அறச் சிந்தனைகளில் பொதிந்து கிடக்கும் மனிதநேயத்தைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இவ்வுலகெல்லாம் அன்பின் வழி இயங்குகின்றது.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்பது திருக்குறள் (80).

'அன்பே கடவுள்' , 'அன்பே சிவம்' என்ற சொற்றொடர்கள் அன்பின் பெருமையை உணர்த்துவனவாம். அன்பு வேறு, சிவம் வேறு என எண்ணுகின்றவர்கள் அறிவில்லாதவர்கள், மெய்யுணர்வு வாய்க்கப் பெறாதவர்கள். உலகத்து உயிர்களிடத்தெல்லாம் அன்பு பூண்டொழுகுவோர் பேரின்ப, இறைப்பேற்றை அடைவர் என்பதைக் கீழ்வரும் பாடல் உணர்த்துகின்றது.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

(திருமந்திரம், அன்புடைமை, பா – 1)

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் கருதும் அன்பு நெஞ்சினர் யாவர்க்கும் இரங்கக் கூடியவர்கள். அவர்கள்

கடுஞ்சொல் கூறார். சினத்துள் மூழ்கார். கனிந்த நெஞ்சத்துடன் அன்பு கூர்ந்தார் ஈசன் கழலடி காண்பர் என்பதை,

"கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்
மலிந்தவர் மாளுந் துணையு மொன்றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே"

(அறஞ்செயான் திறம், பாடல் 7)

எனக் கூறுங்கால் பொருளாசை உற்றோர் நல்லறஞ் செய்யாமையால் வழித்துணை ஏதுமின்றி மாள்வர் என்றும் சினத்தைக் கொண்டோர் அச்சினத்தினால் தீமை செய்து துன்புற்று இருள் உலகில் வீழ்வர் என்றும் திருமூலர் உணர்த்துகின்றார். இப்பாடல்களின் வழி சினம், பொருளாசையால் வரும் தீமைகள் குறித்துப் பேசும் திருமூலர் அன்பின் மேன்மையையும் புலப்படுத்துகிறார். மனிதநேயமிக்கவர்கள் பொருளாசை, சினம் இவற்றை ஒழித்தவர்கள் ஆவார். அன்புள்ளம் கொண்டு இறைப் பேற்றினை அடைகின்றவர்கள் ஆவார்.

நூல் உணர்த்தும் அறங்கள்:

பிறர் பொருளில் நாட்டம் செல்கின்றபோது கூடவே வஞ்சனை தோன்றும். பொய் கூறத் தோன்றும். தீய சொற்களும் பேசத்தோன்றும். மற்றவர்க்குத் துன்பம் விளைவிக்க எண்ணம் தூண்டும். இத்தீய நெறிகளை விட்டுவிட்டு எண்ணத்தில் சிறந்து வாழச் சொல்கின்றார் திருமூலர். செவ்வியன் ஆகி மற்றவர் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நாம் உண்ணும் நல்ல உணவினை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி அறிவுறுத்துகின்ற நேயம் மனிதாபிமானமிக்க தலைசிறந்த நேயம் எனலாம்.

அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்வியவ னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்வி கொடுமின் தலைபட்ட போதே

(உயிர்நிலையாமை, பா. 9)

பஞ்சமா பாதகங்களை நீக்குதல்

கொலை, களவு, கள்ளுண்டல், அறம் திறம்பிய காமம், பொய் கூறல் இவையனைத்தும் பஞ்சமா பாதகங்களாகும். இப்பாதகங்களைச் செய்வோரிடத்து மனிதநேயம் அழிந்து போயிருக்கும். மனிதநேயம்

மிக்கவரோ இவற்றை நீக்கி இறைவனைச் சார்ந்து இன்பம் பெறுவர். இதனைக் கீழ்க்கண்ட பாடல் விளக்குகின்றது.

கொலையே களவு கட்காமம் பொய்கூறல்
மலைவான பாதக மாம்அவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்கு
இலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே

(கொல்லாமை, பா. 3)

ஒருவர்க்கு இன்பமும், துன்பமும் அவரவர் செய் கரும வினையினால் அமைகின்றன. இதனை ஒவ்வொருவரும் நினைத்துப் பார்த்தல் வேண்டும். மற்றவர்க்கு எந்தத் தீங்கும் செய்தல் கூடாது. அறமுறை தவறி, வடுவெனப் பாராது மற்றவர்க்குத் துன்பம் செய்தால் அவர்கள் இன்பம் பெற மாட்டார்கள். இறைவன் அவர்கட்கு இன்பம் அளிக்கமாட்டான். இறைவன் அருள் பெற்று வாழ மனிதநேயம் மலரவேண்டும். இல்லாதார்க்கு, வேண்டுவார்க்கு ஊணும், உடையும், பிறவும் கொடுத்து வாழ்தல் வேண்டும். மற்றவர்க்குத் துன்பம் செய்கின்றவர்கள் மக்கட்பிறவியினும் தாழ்ந்தவர்கள் என்பதை,

கெடுவது மாவதுங் கேடில் புகழோன்
நடுவல்ல செய்தின்ப நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யிற் பசுவது வாமே

(அறஞ்செயான் திறம் – 9)

என்ற பாடல் விளக்குகிறது.

மனிதநேயத்திற்குரிய அடிப்படைப் பண்பு அன்பாகும். அன்பிலார் அறத்தை உணர்வதில்லை. ஈதல் இசைபட வாழ்தலே ஒருவர்க்கு ஊதியமாகும். ஈதல் ஒரு சிறந்த அறமாகும். இவ்வறம் இன்பத்தைத் தரவல்லது. இதனை உணராத பேதையார் அறம் மறந்து, ஆர்க்கும் ஈயாமல், மனிதநேயம் மறந்து வாழ்கின்றாரே என மனம் நொந்து பாடுகின்றார் திருமூலர்.

"இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கை யினாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம்அறி யாரே

(அறஞ் செயான்திறம் – பா. 8)

என்ற பாடல் இதனை உணர்த்தும்.

மேற்கொள்ள வேண்டிய எளிய அறங்கள்

மனிதநேயம் பெருகிட, மானுடப் பண்புகள் சிறந்திட, இடைவிடாது நம்மால் இயன்ற அளவு அறம் செய்தல் வேண்டும்.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்" *(குறள். 33)*

என்பது திருக்குறள். திருமந்திரம் அனைவரும் மேற்கொள்ளத் தக்க எளிய, இனிய அறங்களை வலியுறுத்துகின்றது. வழிபாடு செய்யும் உள்ளம் வன்மையிற் செல்லாது. வழிபாடு, மனத்தைச் செம்மை யாக்கும். எனவே இறைவற்கு ஒரு பச்சிலையிட்டு வழிபடுக என்கிறார் திருமூலர்.

கடமை மறந்தோர், இறந்தார்க்குக் கடன் செய்யாதவர், பாவங்கள் இயற்றியோர் இவர்கள் தம் பாவங்களுக்குப் பரிகாரமாகப் பசுவிற்கொரு பிடி புல் அளித்தல் வேண்டும் எனத் தரும சாத்திரங்கள் உரைக்கின்றன. இத்தகைய சிறப்புப் பொருந்திய பசுவிற்கு ஒரு பிடி வாயுறையாகப் புல் அளித்தல் யாராலும் இயலும். இதுவும் ஒருவகை தருமமேயாகும். தாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி உணவு அளித்தல் மனிதநேயமிக்க அறச்செயலாகும். எல்லோர்க்கும் இன்னுரை வழங்கலும் யார்க்கும் இயலும் அறமேயாகும். இத்தகைய கருத்துகளைத் திருமூலர்,

"யாவர்க்கு மாம்இறை வர்க்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசுவுக் கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே."
(அறம் செய்வான் திறம், பா. 3)

என்று உரைக்கின்றார் பிறர்க்கின்னுரை மொழிகின்றபோது அல்லவை தேயும், அறம் பெருகும் என்ற வள்ளுவரின் வாக்கினை,

"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்" *(குறள். 96)*

என்ற திருக்குறளினால் அறியலாம்.

பசியை மாற்றும் மனிதநேயம்

பசியைப் பிணி என்று கூறுவாரும் உண்டு. ஒரு சாண் வயிற்றுக்காகத்தான் இவ்வுலகில் உள்ளவர் அனைவரும் உழைக்கின்றனர். பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்பது ஒரு

முதுமொழி. பசித்தவர்க்கு உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆவர். இவர் நமக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்ற விருப்பு வெறுப்பினை நீக்கி, உயர்வு, தாழ்வு, செல்வம், வறுமை, இளமை, முதுமை என வேறுபாடு கருதாமல் உணவினை வழங்கிடுதல் மனிதநேயம் படைத்தோர் செயலாகும். பசியைத் துறந்தார்தம் தவத்தை விட வலிமை மிக்கது ஒருவர் தம் பசியை மாற்றுவார் தம் வலிமை என்பதை,

> *"ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை*
> *மாற்றுவார் ஆற்றலின் பின்"* (குறள். பா 225)

என்ற குறட்பாவினால் உணரலாம். செல்விருந்தோம்பி வருவிருந்துக் காகக் காத்திருக்க வேண்டும் என்றும், விருந்தினர்க்குப் புதியனவற்றை, நல்லனவற்றை உணவாக அளித்தல் வேண்டும் என்றும், நமக்கு வேண்டாதவற்றைப் பழையனவற்றைத் தருதல் சிறந்த பண்பு ஆகாது என்றும், நாள்தோறும் அதிதிகள் வருகின்றனரா எனப் பார்த்திருந்து, அவர்க்கு உணவூட்டி உண்ணுதலே நல்லறத்தின் பாற்பட்ட மனிதநேயம் என்றும் திருமந்திரம் பகர்கின்றது. பாடலாவது,

> *"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்*
> *பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்*
> *வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்*
> *காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே*
> (தானச்சிறப்பு, பா. 1)

என்பதாகும்.

> *"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
> *அன்னநீ ரார்க்கே உள"* (திருக்குறள் 527)

என்ற திருக்குறள் இங்கு நினைவு கூர்தற்குரியது.

"செல்வத்துப் பயனே ஈதல்" என்பது புறநானூறு (பா. 10) செல்வத்தின் பயனை நல்லறமாகிய ஈதலைச் செய்யாதவர்கள் அறியார். வட்டி வாங்கும் பாதகர்கள் செல்வத்துப் பயனை அறிய மாட்டார்கள். ஊருள் எட்டி மரம் பழுத்தால் யார்க்கும் பயன்படுவ தில்லை. நச்சு மரம் நடுவூருள் பழுத்தால் யார்க்கும் பயன்படாதது போல, உலோபிகள் செல்வம் யார்க்கும் பயன்படாது என்ற திருக்குறள் கருத்து இங்குச் சிந்திக்கப்பாற்று.

திருக்குறளாவது,

> "நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
> நச்சு மரம்பழுத் தற்று" (குறள். 1008)

என்பதாகும்.

இக்கருத்தை உணர்த்தும் திருமந்திரப் பாடல் வருமாறு:

> "எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன
> ஒட்டி நல்லறஞ் செய்யாதவர் செல்வம்
> வட்டி கொண்டீட்டியே மண்ணின் முகந்திடும்
> பட்டிப் பதகர் பயன் அறியாரே"
>
> (அறஞ்செயான் திறம், பா. 1)

மக்கள் பூசையே மகேஸ்வர பூசை

இறைவன் வதியும் கோயில்களுக்கு அள்ளித்தருவார் பலர் உள்ளனர். பொருளின்றி வாடும் வறியார்க்கீவார் சிலரே! மனிதநேயம் பெருக வேண்டும் என்ற எண்ணத்தினால் திருமூலர் கூறும் கருத்து இங்கு உன்னற்பாலது. இறைவனுக்குப் பொருள்களை வழங்கினால் மக்களுக்குப் போய்ச் சேர்வதில்லை. நம்பராம் மனிதர்களுக்கு அளிக்கும் பொருள்கள் இறைவனைச் சேரும் என்பதை,

> 'படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்
> நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா
> நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
> படமாடக் கோயில் பகவற்க தாமே"
>
> (மகேசுவர பூசை, பா. 1)

மக்கள் பூசை மகேஸ்வரனுக்காகும் என்பதை இங்குத் திருமூலர் தெளிவாக உணர்த்தியுள்ளமை காண்க.

அறம் செய்வார் நோயுறார்

இனிய நல் அறங்களைச் செய்து மனிதநேயத்துடன் செயல்பட வேண்டும். நீர் ஊற்றி மரங்களை நட்டுச் சோலைகளை உருவாக்குதல் வேண்டும். ஈயின் தலை அளவாவது (சிறிய அளவிலாவது) ஈதல் வேண்டும். இவ்வறச் செயல்களைச் செய்வார் எந்த நோயையும் உறுவதில்லை. இச்செயல்களைச் செய்யாதவர் மாட்டுக் குத்திருமல், இரத்த சோகை நோய், வெப்பு நோய் மிகும் எனக் கூறித் தெருட்டி மனிதநேயத்தினை அறிவுறுத்துகிறார்.

பாடலாவது,

"இருமலும் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமம் செய்யாதவர் தம்பால தாகும்
உருமிடி நாகமு ரோணி கழலை
தருமம் செய்வார் பக்கல் தாழகில்லாவே"

(அறஞ்செயான் திறம், பா. 4)

என்றும்,

பரவப் படுவான் பரமனை ஏத்தார்
இரவலர்க் கீத்தலை யாயினும் ஈயார்
கரகத்தால் நீரட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தில் நிற்றிரோ நள்னெஞ்சி னீரே"

(அறஞ்செயான் திறம், பா. 5)

என்றும் கூறுகிறார்.

பொதுநலம் நாடும் மனிதநேயம்

சாதி, சமயம், குலம் இவற்றின் பெயர்களால் இன்றைய உலகு, சண்டை, சச்சரவு, வன்முறை இவற்றைக் கண்டு கொண்டிருக்கின்றது. இறைவன் முன் அனைவரும் சமம் என்பதை உணர்ந்து விட்டால், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உண்மையை உணர்ந்து விட்டால் நாட்டில் மனிதநேயம் பெருகும். இதனை மனிதர் யாரும் நன்று நினைத்தல் வேண்டும் என்பதை,

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்
நன்றே நினைமின் நமனில்லை நாளுமே
சென்றே புகுங்கதி யில்லை நுஞ்சித்தத்து
நின்றே நிலைபெற நீநினைந் துய்மினே"

(இதோபதேசம் – 1)

என்பர்.

சாதிசமயங்களின் பெயரால் பூசலிடுவோரைத் தெருட்டு கிறார். அரிய ஓர் உவமை காட்டி உணர்த்துகிறார். அஃதவாது ஒரு பேரூர் உளது. அதை அடைய ஆறு வழிகள் உள. அதுபோல் இறைவன் ஒருவன். அவனை அடைய அறுசமயங்களும் உள்ளன. எம் சமயம் உயர்ந்தது உம் சமயம் தாழ்ந்தது எனப் பூசலிடாம லிருக்கும் வண்ணம் வழியைக் காட்டுகின்றார். மனிதநேயமிக்கார் சாதி, சமயச் சண்டைகளில் ஈடுபடார். திருமூலர் உணர்த்தும் அப்பாடலாவது,

"ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றிது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயை யொத்தார்களே

(உட்சமயம், பா. 2)

என்பதாகும்.

அறங்கள் பல செய்து மனிதநேயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், யாவர்க்கும் உண்ணும் உணவு, உடை கொடுத்து மனிதாபிமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்றும், மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு என்றும், மனிதநேயம் செழித்திட ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையை மக்கள் யாவரும் போற்றிப் பின்பற்ற வேண்டும் என்றும் இக்கட்டுரையின் கண் காட்டப் பெற்றன.

******

அடைக்கலங் காத்தலில் மனிதநேயம்
(மாதரி பாத்திரப் படைப்பின் வழி)

முனைவர் சூ. நிர்மலாதேவி
ஆராய்ச்சி உதவியாளர்

மனித நற்பண்புகளை அடியொற்றிப் பிறப்பது மனிதநேய உணர்வாகும். 'அடைக்கலங் காத்தல்' என்பது மனித நற்பண்பாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. அடைக்கலம் என்று வந்தவர்களை, அடைக்கலமாகத் தந்த பொருளைப் பாதுகாத்தல் சிறந்த பண்பாடாகக் கொள்ளப்பட்டது. அடைக்கலங் காத்தலில் காணப்படும் மனிதநேய உணர்வைச் சிலப்பதிகாரத்தில் வரும் இடைக்குல மடந்தை மாதரியின் பாத்திரப் படைப்பின் வழி நோக்குவதை இக்கட்டுரை கருப்பொருண்மையாகக் கொண்டு ஆய்வு செய்கிறது.

அடைக்கலம் – சொல்லாய்வு

'அடை + கலம் = அடைக்கலம்' என அமைந்துள்ளது. கலம் = பொருள்; அணிகலன், படைக்கலம் போன்ற சொற்களில் இப்பொருளைப் பொதுவாகக் காணலாம். அடைமானமாக வைக்கப் பெறும் பொருள் அடைக்கலப் பொருள் எனப்பட்டது. அடைக்கலம் என்றாலே அடைமானமாக வைக்கப்பெறும் பொருள் என்றுதான் பொருள். ஆனால் இந்த ஆதிப்பொருள் மறைந்து நாளடைவில் அடைக்கலப் பொருள் என்றால்தான் அடைக்கலமாக வைக்கப்பட்ட பொருள் என்பதைக் குறிப்பதாக அமைந்து விட்டது. இதன் பின்னடைவில் அடைமானமாக வைக்கப்பட்ட மனிதர்களும் அடைக்கலம் என்ற சொல்லால் சுட்டப்பட்டனர்.[1]

அடைக்கலம் என்றால் அடைக்கலப் பொருள் என்பதைக் குறிக்கும் என்றும் அடைக்கலப்பொருள் என்றால் ஒப்புவிக்கப்பட்ட பொருள் என்றும் அடைக்கலம் புகுதல் எனும் போது சரண் புகுதல் என்பதைக் குறிக்கும் என்றும் தமிழகராதி விளக்கம் தருகின்றது. "அடைக்கலப்பொருள் காத்தவா ரழகிதென் றழுதான்" (கம்பராமாயணம், பிரமாத்திரப் படலம், பா.எண். 197), "அடைக்கலம் அடியேன் என்றென் றழுதிரந் தயருங் காலை' (காஞ்சிப்புராணம், திருநெறி 53) என அமைந்துள்ள தொடர்களையும் இலக்கியப் பயன்பாடுகளாக எடுத்துக் காட்டலாம்.

அடைக்கலங் காத்தலின் தோற்றம்

'அடைக்கலங் காத்தல்' என்பது சிறந்த மனித நேயப் பண்பாகும். மனிதநேய உணர்வு அற்றவரால் அடைக்கலங் காத்தல் இயலாது. எவ்விதப் பதிலுதவியையும் கருதாது அடைக்கலம் என்று வந்தவர்களைத் தாங்கிக் காப்பாற்றுவதும் அடைக்கலமாக அளிக்கப்பட்ட பொருளை உயிரெனப் பாதுகாத்துத் திருப்பி அவர் வேண்டும் போது அவரிடமே ஒப்படைப்பதும் உயர்ந்த பண்பாடாகும். இத்தகு அடைக்கலங் காத்தல் என்பது மனித நற்பண்பாக உருப்பெற்றது எப்பொழுது என்பது ஆராய்தற்குரியது. விருந்தோம்பற் பண்பின் வளர்ச்சி நிலையாக அடைக்கலங் காத்தல் அமைந்துள்ளது எனக் கொள்ள இடமுள்ளது.

தொல்லிலக்கணமான தொல்காப்பியத்திலும்[2] சங்க இலக்கிய மேற்கணக்கு நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டிலும் 'அடைக்கலம்' என்ற சொல் கையாளப் பெறவில்லை[3] ஆயின் பாரி இறந்ததன் பின்னர், பாரி மகளிரைக் காத்து மணம் செய்விக்கும் பொறுப்பை ஏற்ற புலவர் கபிலர், அம்மகளிரைப் பார்ப்பாரிடத்து அடைக்கலப்படுத்தியதாகப் பாடல் எழுந்த சூழல் விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (புறம்: 113, 116) ஆனால் அடைக்கலப் படுத்தப்பட்ட செய்தியுடைய பாடல்கள் கிடைக்கவில்லை. அடைக்கலங் காத்தல் தொடர்பான பாடல்சான்றுகள் கிடைக்கவில்லையாயினும் புதிதாக வருபவர்களை விருந்தோம்பிக் காக்கும் பண்பு சங்க காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டமைக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. புதிதாகப் பெறும் விருந்தின் பொருட்டுச் செல்பவனையும்[4] விருந்துவரக் கரைந்த காக்கையையும்[5] குறுந்தொகை காட்டுகின்றது. ஆனாலும் வந்த விருந்தினர்கள் குறிப்பிட்டோர் இல்லத்தில் சின்னாட்கள் அடைக்கலமாகத் தங்கிச் சென்றனர் என்பதற்கான குறிப்புகள் கிடைக்கவில்லை.

சங்க இலக்கியக் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திருக்குறளிலும் 'அடைக்கலம்' என்ற சொல் எங்கும் ஆளப்பட வில்லை.[6] ஆயின் விருந்தின் சிறப்புரைக்கும் விருந்தோம்பல் 9ஆம் அதிகாரமாகக் குறளில் இடம் பெற்றுள்ளது. 'இருந்தோம்பி இல்வாழ்வது விருந்தோம்பி வேளாண்மை செய்வதற்கு' (குறட் கருத்து 81) என்றும், 'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று' (குறட்கருத்து: 82) என்றும், 'செல்விருந்து ஓம்பி வரும் விருந்தைப் பார்த்திருக்க வேண்டும்' (குறட் கருத்து: 86) என்றும் விருந்தோம்பற் பண்பைத் திருக்குறள் எடுத்தியம்பியுள்ளது. ஆக, குறட்பாக் காலகட்டத்திலும் வந்த விருந்தினர்கள் சில நாட்கள்

இல்லத்தாரின் அடைக்கலமாக ஆகித் தங்கியிருந்தனர் என்பதற்கான குறிப்புகள் கிடைக்கவில்லை.

அடைக்கலம் – அடைக்கலக் கோட்பாடுகள் காணப்படும் முதல் நூல்கள்

'அடைக்கலம்' என்ற சொல் முதன் முதலாகச் சங்கக் கீழ்க்கணக்கு நூல்களான அற இலக்கியங்களாகிய இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு ஆகிய நூல்களில்தான் காணக் கிடைக்கின்றது. இந்நூல்களுள் 'அடைக்கலங் காத்தல்' என்பது ஒரு சிறந்த மனிதநேயப் பண்பாகக் கொள்ளப்பட்டு, அதற்கெனச் சில கோட்பாடுகள் உருவாக்கப் பட்டமையும் தெரிய வருகின்றது.

1. "அடைக்கலம் வவ்வுத லின்னா"[7]

என, பிறர் அடைக்கலமாக வைத்த பொருளைக் கவர்ந்து கொள்ளுதல் துன்பமானது என்றும்

2. "அன்றறிவார் யாரென் றடைக்கலம் வெளவாத
நன்றியின் நன்கினியது இல்"[8]

என, அந்நாள் (தன்கண் வைத்த) அறிவாரொரு மிலரென்று அடைக்கலப் பொருளை அபகரியாத நன்மையினும் இனியது பிறிதொன்றில்லை என்றும்

3. - - - - - - - - - - - - - - - - - -
"வைத்த அடைக்கலங் கொள்வானு மிம்மூவர்
எச்சம் இழந்துவாழ் வார்"[9]

என ஒருவன் வைத்த அடைக்கலப் பொருளைக் கைப்பற்றிக் கொள்பவன் தம் மக்களை இழந்து வருந்தி உயிர் வாழ்வான் என்றும்

4. "தன்னுடம்பு தாரம் அடைக்கலம் தன்னுயிர்க்கென்
றுன்னித் துவைத்த பொருளோ டிவைநான்கும்
பொன்னினைப்போல் போற்றிக் காத்துய்க்க, உய்க்காக்கால்
மன்னிய ஏதம் தரும்"[10]

என, அடைக்கலப் பொருளைப் பொன்னினைப் போல் போற்றிக் காக்க வேண்டும்; காவாதவற்குத் துன்பம் வரும் என்றும்

5. "செல்லற்க சேர்ந்தார் புலம்புறச் செல்லாது"[11]

எனத் தம்மை அடைக்கலமாக அடைந்தார் துன்புற்று அவலிக்குமாறு தீய வழியில் செல்லாதொழிக. அவ்வாறு தீ நெறியில் ஒழுகின் அது

பாவங்களுள் தலையாயது ஆகும் என்றும் இவ்வாறான கொள்கைகள் அடைக்கலங் காத்தல் தொடர்பாக வகுக்கப்பட்டு, அவை பின்பற்றப்படல் வேண்டும் என்று அற இலக்கியங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன. இவற்றின் மூலமாக அற இலக்கியக் கால கட்டத்து மக்கள் அடைக்கலமாகப் பொருளை வைத்துள்ளனர்; மனிதர்களும் அடைக்கலமாக அமைந்துள்ளனர் எனத் தெரிகிறது.

மாதரியின் அடைக்கலங் காத்தல் வழி மனிதநேயம்

சங்க காலத்தினை அடுத்து அமையும் காப்பிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் 'அடைக்கலம்' என்ற சொல்லையே தலைப்பாகத் தாங்கி, 'அடைக்கலக் காதை' அமைக்கப் பட்டுள்ளமையைக் காண்கிறோம். சிலம்பின் மதுரைக்காண்டத்தில் 15ஆவது காதையாக இடம்பெற்றுள்ள இக்காதையில் வரும் மாதரி பாத்திரப்படைப்பு அற இலக்கியங்களில் சுட்டப்பட்ட 'அடைக்கலங் காத்தல்' விதிமுறைகளின் விளக்கமாக, உயிர்ச் சித்திரமாக, அப்பண்பின் அடையாளச் சின்னமாக அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

மூன்று காண்டங்களுடைய சிலப்பதிகாரத்தின் இறுதி இரு காண்டங்களில் வரும் துணைப்பாத்திரமாக மாதரி அமைகிறாள். மொத்தம் உள்ள 30 காதைகளில் 6 காதைகளில் மட்டும் இடம் பெறும் மாதரி முதல் 4 காதைகளில் பாத்திரமாகவும் மற்ற இரு காதைகளில் பிறரால் பேசப்படுவதன் மூலமும் இடம் பெற்றுள்ளாள். அடைக்கலங் காக்கும் மனிதநேயப் பண்புடையவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற குறிக்கோளை உட்கொண்டதாய் மாதரி பாத்திரப்படைப்பு அமைந்துள்ளது. அற இலக்கியங்கள் வகுத்த 'அடைக்கலங்காத்தல்' என்ற மனிதநேய மரபின் முதல் பிரதிநிதி இப்பாத்திரப் படைப்பாகும். மாதரியிடம் காணப்படும் பண்பு நலன்கள் அடைக்கலங் காத்தற்குரியாருக்குள்ள தகுதிகளாக இக்காப்பியம் மூலம் சித்திரிக்கப்பட்டுள்ளமை தெரிகின்றது. இக்காப்பியம் காட்டும் அத்தகுதிகளை ஆராய்வதன் மூலம் அடைக்கலங் காத்தல் என்ற மனிதநேயச் செயலைச் செய்வாருக்குள்ள பண்புகளை நாம் அடையாளம் காண முடியும்.

மாதரியின் பண்பு நலன்களாகக் காப்பியம் குறிப்பிடுவனவாக,

1. குலப்பெருமை
2. தீதற்ற தன்மை, அனுபவ முதுமை, நடுவு நிலைமை தவறாமை, இரக்க குணமுடைமை போன்ற பல்வேறு நற்பண்புகளுடைமை

3. சமயப் பொது நோக்குடைமை

4. பெரியோர் சொல் பேணுதல்

5. அடைக்கலமாய் வந்தவரை உறவாகத் தழுவிக் கொள்ளும் பெரும்போக்குடைமை

6. செய்யும் எச்செயலிலும் அடைக்கலமாய் வந்தவரை மகிழ்வூட்டும் எண்ணமுடைமை

7. தொண்டுள்ளமுடைமை

8. தலைமைச் சிறப்புடைமை

9. எவர் அறப்பண்புடையார், எவர் அறப்பண்பற்றவர் என எடையிட்டறியும் தன்மையுடைமை

10. அடைக்கலப் பொருளைப் பொன்னே போல் போற்றும் போக்கு

11. பொன்னே போல் போற்றும் அடைக்கலப் பொருளை உயிரினும் மேலாகக் கருதும் தன்மை.

என்ற இத்தகு பண்பு நலன்கள் கொண்டவளாக மாதரி பாத்திரப்படைப்பு அமைந்துள்ளதைச் சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகின்றது.

குலப்பெருமையுடையவராயிருத்தல்

'வினையே ஆடவர்க்குயிரே' எனத்தலைவன் மட்டுமே வினைமேற் செல்லும் மரபு மாறி, வினைமேற் செல்லும் தலைவனுடன் தலைவியும் உடன் வரும் மரபு மாற்றம் காப்பிய காலத்தில் நிகழ்ந்துள்ளது. வணிகம் செய்யப் புறப்பட்ட தலைவன் கோவலனுடன் வரும் தலைவி கண்ணகியை ஓர் இல்லத்தில் அடைக்கலமாகத் தங்க வைக்கும் கடமைக்கு ஆட்படுகிறார் கவுந்தியடிகள். பசுக்களுக்குப் பசும் புல்லையும் தண்ணீரையும் அளித்து அவற்றைப் பாதுகாத்து, அவை நல்கும் பாலையும் பாலின் பயன்களான தயிர், மோர், வெண்ணை, நெய் போன்றவற்றை அனைவருக்கும் வழங்கி வாழும் ஆயர்குல வாழ்க்கை தீதற்ற ஒன்று என்று முடிவு செய்து, அத்தகு ஆயர் குலத்தில் வந்த மாதரி கண்ணகியை அடைக்கலமாக வைக்கத் தகுதியானவள் எனக் கருதி, அவளிடம் கண்ணகியை ஒப்படைத்தார் கவுந்தியடிகள் என்கிறது சிலம்பு. அடைக்கலப் பொருளைக் குலப்பெருமையுடையாரிடம்

அளிக்க வேண்டும் என்ற கருத்து இதன் மூலம் வலியுறுத்தப் பட்டுள்ளது. குலச்சிறப்புடையாரே அடைக்கலங் காக்க வல்லவர் என்றும் துணியப்பட்டுள்ளது.

"ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை" (15 : 120–122)

என்கிறது சிலம்பு.

மேலும் ஒரு பெண்ணைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒரு பெண்ணிடம் ஒப்படைக்கும் புதுமையையும் புரட்சியையும் இக்காப்பியம் படைத்துக் காட்டியுள்ளது. கோவலன், கண்ணகி என்ற இருவரும் அடைக்கலப்படுத்தப்படினும் அடைக்கலப்படுத்தப் படுபவள் கண்ணகி என்பதையே காப்பியம் வலியுறுத்திச் சொல்லியுள்ளது.

"மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு" (15: 123)

"கேட்டனை யாயினித் தோட்டார் குழலியொடு
நீட்டித் திராது நீபோ கென்றே" (15:198-199)

அரும்பெறற் பாவையை அடைக்கலம் பெற்ற
இரும்பே ருவகையின் இடைக்குல மடந்தை" (16:1-2)

எனும் வரிகள் காணத்தக்கன.

நற்பண்புகளுடைமை

நற்பண்புகளுடையவர்க்கே அடைக்கலங் காத்தல் என்ற மனிதநேய நற்செயலைச் செய்ய இயலும். குலச்சிறப்புடைய மாதரி, தன்னளவிலும் பல நற்பண்புகளுடையவளாயிருக்கிறாள். தீதற்ற தன்மையும் அனுபவ முதுமையும் நடுவுநிலைமையும் பிறரை ஓம்பும் இரக்க குணமும் ஒருங்கே அமையப் பெற்ற இவளுடன் கண்ணகியை இருக்கச் செய்வதில் யாதொரு தீங்கும் குற்றமும் ஏற்படாது என உறுதி செய்து கொண்டு, கண்ணகியை மாதரியிடம் அடைக்கலப் படுத்துகிறார் கவுந்தியடிகள். (15: 123-124).

சமயப் பொது நோக்குடைமை

மாதரி ஆயர்களின் குலதெய்வமான திருமாலை வழிபடுபவள். குடத்துப்பால் உறையாமல் வெண்ணை உருகாமல், மறி தெறித்து ஆடாமல் உள்ள தீ நிமித்தங்களைக் கண்ட மாதரி (17:1–3) தம் குல தெய்வமான கண்ணன், நப்பின்னையோடாடிய குரவையாட

ஏற்பாடு செய்கிறாள். ஆய்ச்சியர் குரவை முடிந்ததும் பூவும் புகையும் புனை சாந்துங் கண்ணியும் கைக்கொண்டு நீடுநீர் வையைத்துறை மூழ்கி நெடுமாலின் அடியேத்தச் செல்கிறாள். (18: 1-4). கண்ணகி கோவலனுக்கு அமுது பரிமாறி நின்ற காட்சியைக் கண்டு களித்து, அவர்கள் கண்ணனோ நப்பின்னையோ என வியக்கிறாள். (16:46-51). இவ்வாறு மாலின் அடி தொழுதேத்தும் மாதரி, புறஞ்சேரி சென்று பூங்கண் இயக்கிக்குப்[12] பாற்சோறு படைக்கவும் செய்கிறாள். சமணப் பெண் துறவியான கவுந்தியடிகளைக் கண்டவுடன் அவரின் அடிகளிலும் வீழ்ந்து வணங்குகிறாள். மாதரியின் இத்தகு சமயப் பொதுநோக்குடைமையும் அடைக்கலங் காக்க வல்லாருக்குரிய அருங்குணமாகக் காப்பியம் குறிப்பிட்டுக் காட்டுகிறது எனலாம்.

பெரியோர் சொல் பேணுதல்

பெரியோரின் சொல்லைப் பேணுதல் வேண்டும் என்ற கொள்கையுடையவளாக மாதரி திகழ்கிறாள். கண்ணகியை அடைக்கலமாக ஒப்புவித்த கவுந்தியடிகள் மாதரியிடம் அடைக்கலமாய் வந்தாரை எவ்வாறு போற்றிக் காக்க வேண்டும் என்பதற்குக் குரங்காக இருந்து, அடைக்கலம் அளிக்கப்பெற்றோர் செய்த தானத்தால் வானவனாக உயர்ந்த ஒருவனையும் குரங்குக்கு அடைக்கலம் அளித்தவர்களும் பிறவிப் பிணி நீங்கியதையும் உள்ளடக்கிய ஒரு கதையைக் கூறுகிறார். (15:151-197) கல்விச் செல்வமில்லாவிடினும் கேள்வி ஞானத்தால் கதைப்பொருளை அறிந்து கொண்ட மாதரி, கவுந்தியடிகளின் சொற்படி அடைக்கலங் காக்கும் பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்ற எண்ணம் கொள்கிறாள். மேலும் கவுந்தியடிகள் சொன்ன ஒவ்வொரு செயற்பாட்டையும் சிறப்பாகச் செயற்படுத்தவும் செய்கிறாள்.

> 'மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
> செங்கயல் நெடுங்கண் அஞ்சனந் தீட்டித்
> தேமென் கூந்தற் சின்மலர் பெய்து" (15:131–133)

தூமடி உடுக்குமாறு கவுந்தியடிகள் கூறுகிறார். அதன்படியே மாதரி,

> "செறிவளை யாய்ச்சியர் சிலருடன் கூடி
> நறுமலர்க் கோதையை நாணீ ராட்டி" (16:8–9)

அணி செய்கிறாள்.

> "ஐயந்தீர் காட்சி யடைக்கலங் காத்தோம்ப
> வல்லாதேன் பெற்றேன் மயல்" (29 : 8ஆம் பாடல்)

என்று அடைக்கலமிழந்த போது தவத்தோர் அளித்த அடைக்கலத்தைப் பேணும் வன்மையில்லாது போனேனே என்று வருந்துகிறாள்.

கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாய் ஒப்புவித்த கவுந்தியடிகள்,

> **“ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்**
> **தாயும் நீயே யாகித் தாங்கு”** *(15 : 135–136)*

என்று அன்புக்கட்டளையிட, அதனைச் சிரமேற் கொண்ட மாதரி கண்ணகியை உறவு முறையுடன் தழுவிக் காப்பதையும் காப்பியம் காட்டுகிறது. பெரியோர் சொற்பேணுபவரே அடைக்கலங் காக்கத் தக்கவர் என்ற கருத்து இவ்வாறாகக் காப்பியத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

அடைக்கலமாக வந்தவரை உறவாகத் தழுவிக் கொள்ளுதல்

சேர, சோழ, பாண்டிய நாடு என்ற மூன்று நாடுகளாகப் பிளவுபட்டுக் கிடந்த தமிழகத்தில் சோழ நாட்டிலிருந்து வந்தவள் கண்ணகி; செல்வ வளம் சிறந்த வணிகர் குலமகள். மாதரியோ பாண்டிய நாட்டைச் சேர்ந்தவள்; ஆயர் குல மகள். இவர்களிடையே நாடு கடந்த அன்பு உறவு முறை சிறந்திருந்ததைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது. சின்னாட்கள் மட்டுமாகத் தன் அடைக்கலமாக வந்த கோவலன், கண்ணகியை மாதரி தன் மகன், மருமகளாக உறவு முறை கூறி உளமார ஏற்று மகிழ்கிறாள்.

> “என்னுடன் நங்கையீங் கிருக்க” *(16:14)*

என மாதரி கண்ணகியை நோக்கிக் கூறும் வரியிலுள்ள ‘நங்கை’ என்பது மருகியை அழைக்கும் முறைப்பெயர் என்று தெரிகிறது.

“புதல்வர் மனைவியரைக் கூறும் முறைப்பெயராதலின் நங்கையென்றாளென்க. இஃது அக்கால வழக்கு”. என உரை எழுதுகிறார் அடியார்க்கு நல்லார்.[13] மற்றும் ஓர் இடத்தில் கண்ணகியை நோக்கி மாதரி, தன் மகள் ஐயையைக் குறிப்பிட்டு,

> “நாத்தூண் நங்கையொடு நாள்வழிப் படூஉம்
> அடிசி லாக்குதற்கு” *(16:19-20)*

எனக்குறிப்பிடலால் கோவலனை மகனாகக் கருதி அவனின் உடன் பிறந்தாளாகிய தன் மகள் ஐயை கண்ணகிக்கு நாத்தனார் என்ற உறவு முறை குறிப்பிட்டுப் பேசக் காண்கிறோம். மற்றும் ஓர் இடத்தில், கண்ணகி தெய்வமான பின்பு அவளுக்கு ஐயையைக் காட்டி தேவந்தி,

"மாமி மடமகளைக் கண்டாயோ தோழி" (29: 8ஆம் பாடல்)

எனக் கூறுவதிலும் மாமி-மருமகள் உறவுடையவர்களாக மாதரி-கண்ணகி குறிப்பிடப்படுவதைக் காணலாம். அடைக்கலமாக வந்தவர்களை அடைக்கலமாக மட்டும் கருதாமல் தன் உற்ற உறவாகவும் கொண்டு தழுவிக் கொள்ளும் அன்புள்ளம் வாய்க்கப் பெற்றோரே அடைக்கலம் காக்க வல்லவர் என்பது இவற்றின் மூலம் பெறப்படுகிறது.

செய்யும் எச்செயலிலும் அடைக்கலமாய் வந்தாரை மகிழ்வூட்டும் எண்ணமுடைமை

அரண்மனைக்கு நெய்யளக்கும் கடப்பாடுடைய மாதரி(17: 5-7) அதிகாலையில் பார்த்த போது குடப்பால் உறைந்திருக்கவில்லை.

மேலும்,

குவிமிமில் ஏற்றின்
மடக்கணீர் சோரும் . . . .

உறுநறு வெண்ணெய் உருகா நிற்கும்
மறிதெறித் தாடா . . . .

நான்முலை யாயம் நடுங்குபு நின்றிரங்கும்
மான்மணி வீழும் . . . . (17:1-2-3)

இத்தகு தீநிமித்தங்களைக் கண்ட மாதரி, வரவிருக்கும் பெருந்துயர் ஒன்றுண்டு என உணர்ந்து, அது அகலுமாறு குரவையாட்டயர முடிவு செய்கிறாள். பெருந்துயரை நீக்கும் நோக்கோடு இதுவரையும் இத்தகு ஆடலைக் கண்டிருக்காத, அடைக்கலமாக வந்த,

"மண்ணின் மாதர்க்கணியாகிய **கண்ணகியும்** தான் காண ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவன் பிஞ்ஞை யோடாடிய குரவையாடுவோம்" (17: கருப்பம்)

என்று தன் மகள் ஐயையை நோக்கிக் கூறுகிறாள் மாதரி. அடைக்கலம் காப்போருக்குத் தான்செய்யும் எச்செயலிலும் அடைக்கலமாய் வந்தோரை மகிழ்விக்கும் நோக்கிருக்க வேண்டும் என்பதை இவ்வாறாகச் சுட்டிச் சென்றுள்ளமை தெரிகிறது.

தொண்டுள்ளமுடைமை

அரும்பெறற் பாவையை அடைக்கலம் பெற்றதால் இரும்பேருவகை அடைந்த இடைக்குல மடந்தை மாதரி (16:1-2)

முதற்கண் கண்ணகியைப் பூவலூட்டிய புனைமாண் பந்தர்க் காவல் சிற்றில் கடிமனைப்படுத்துகிறாள் (16:5-6) பின்னர் நறுமலர்க் கோதையை நாணீராட்டுகிறாள் (16:9) தான் மட்டும் பணிவிடைகள் செய்யாது, அடிசில் தொழில் செய்ய என் மகள் நினக்கு அடித்தொழிலாட்டி (16:12) என்று தன்மகளையும் கண்ணகிக்குக் குற்றேவல் செய்யப் பணிக்கிறாள். அடிசிலாக்குதற்குப் புதிய நற்கலங்களை அளிக்கிறாள்.

சமையல் செய்வதற்காக,

"மடைக்கலந் தன்னொடு மாண்புடை மரபிற்
கோளிப் பாகற் கொழுங்கனித் திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத் தீங்கனி
சாலியரிசி - - - - - - - - - - - - -"

என்ற இவற்றுடன் பாலும் பாலின் பயனாகிய தயிர், நெய் போன்றவற்றையும் மாதரி கண்ணகிக்கு அளிக்கிறாள் (16:23:27). அடைக்கலங் காப்போருக்குப் பணிவிடை செய்யும் தொண்டுள்ளம் வேண்டும் என்ற விதிமுறையின் விளக்கமாக மாதரி திகழ்கிறாள்.

தலைமைச் சிறப்புடைமை

ஆயர் குல மகளாகிய மாதரி, ஆயர் குலத்தின் தலைமைச் சிறப்புடையவளாக இருந்தமை சில இடங்களில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது. தலைமைச் சிறப்பு அவளது முதுமை காரணமாக அமைந்ததாகவும் இருக்கக்கூடும். பயணக் களைப்பு நீங்குமாறு கண்ணகியை நீராட்டும் போது, செறிந்த வளையணிந்த ஆய்ச்சியர் சிலர் மாதரியுடன் சேர்ந்து அப்பணியில் ஈடுபட்டு உதவுகின்றனர் (16: 8-9). இதுவரையும் பயன்படுத்திய பாத்திரங் களல்லாது புதிய, தூய, மேற்குடி மக்கள் பயன்படுத்தத்தக்க கலங்களைத் தரவேண்டும் என்று மாதரி கூற, மற்ற ஆய்ச்சியர் அதன்படி தக்க ஏற்பாடுகளைச் செய்கின்றனர் (16:20-21). குரவைக் கூத்து நிகழ்த்த வேண்டும் என்று மாதரி முடிவு செய்து குரவைக் கூத்தாடப்படுகிறது. கூத்தாடலுக்கென மாதரி ஏழு பெண்களைத் தேர்ந்தெடுத்துப் பழைய இசை நரம்புகள் நிற்கும் முறைமைகளிலே அவர்களை நிறுத்திப் படைத்துக்கோள் பெயரிடுதலையும் (புனை பெயரிடுதல்) (17: கொளு, சுட்டு, எடுத்துக்காட்டு) காண்கிறோம். இத்தகு செயல்கள் மாதரியின் தலைமைத் தன்மையை உணர்த்தி நிற்கின்றன. அடைக்கலம் காப்போருக்குத் தலைமைச் சிறப்புடைமை தேவை என்பது இவற்றின் மூலம் புலப்படுத்தப்படுகின்றது.

அறப்பண்புடையார், அறப்பண்பற்றாரை எடையிட்டறியும் தன்மை

அரியர், எளியர் என்னாது, இன்னார், இனியர் என்னாது, மக்கள், மக்களை ஆளும் மன்னவன் என்னாது, ஒரு புடை சாராது, நீதியை அறியும் தன்மை அடைக்கலம் காப்போருக்கு அமைந்திருத்தல் வேண்டும். வெற்றிச் சிறப்புடைய வேந்தன் பாண்டியனைத் தன் ஒற்றைச் சிலம்பு காட்டிச் சேயிழை கண்ணகி வென்றாள் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட மாதரி, கோவலன் தீதற்றவன்; மன்னவன்தான் பிழை செய்து விட்டான் என்று நடந்திருக்கக் கூடிய நிகழ்ச்சியை உடன் சீர்தூக்கிப் பார்த்து, எவர் குற்றமற்றவர், எவர் குற்றமுடையவர் எனத் தீர்மானிக்கும் திறம் கொண்டவளாகக் காட்டப்படுகிறாள். தன் நாட்டை ஆளும் மன்னவனே ஆன போதிலும் அவன்தான் தவறிழைத்து விட்டான்; கோவலன் குற்றவாளி அல்ல என உறுதியுடன் உரைக்கிறாள்.[14] எவரையும் எடையிட்டறியும் குணம் கொண்டவர்களாக அடைக்கலங் காப்போர் திகழ வேண்டும் என்பதை இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகின்றது.

அடைக்கலப் பொருளைப் பொன்னே போல் போற்றும் போக்கு

அடைக்கலப் பொருளை எவ்வாறு காக்க வேண்டும் என்று கூறும் முதல் இலக்கியச் சான்றான ஆசாரக்கோவை, அடைக்கலமாய் அமைந்தவரைப் பொன்னைப் போற்றிப் பாதுகாப்பது போன்று காக்க வேண்டும் என்று கூறுகின்றது. "பொன்னினைப்போல் போற்றிக் காத்துய்க்க" (பா.எண் 95) என்பது பாடல் வரியாகும். ஆசாரக்கோவை குறிப்பிடும் இதே கருத்தை அடியொற்றிக் கூறுவதாகக் கண்ணகியை அடைக்கலமாகப் பெற்ற மாதரி, 'பொன்னினைப்போல் நின்னைப் பாதுகாப்பேன்' என்பது அமைந்துள்ளது. "பொன்னின் பொதிந்தேன் புனைபூங்கோதை" என்பது சிலப்பதிகார வரியாகும் (16:13) இதன் மூலம் அறநூல் வகுத்த அடைக்கலங்காத்தல் கொள்கையின் பாத்திர விளக்கமாக மாதரி அமைந்துள்ளமை தெரிகிறது.

அடைக்கலப் பொருளை இழக்க நேரிடின் உயிர்துறக்கும் போக்கு

அற இலக்கியங்கள் வகுத்த 'அடைக்கலங் காத்தல்' கோட்பாடுகளையும் தாண்டி, அடைக்கலமாய் வந்தவரை இழந்தால், அடைக்கலங் காப்போர் உயிரை விட்டு விடுவதை வெளிக் காட்டும் காப்பியமாகச் சிலம்பு திகழ்கின்றது. கோவலனின் இறப்புக்கும்

கண்ணகியின் மீளாத் துயருக்கும் மாதரி எவ்விதத்திலும் காரணமானவள் இல்லை. அவர்களுடன் நீண்ட நாட்கள் மாதரி பழகவுமில்லை. முதல் நாள் மாலைப்பொழுதில் அடைக்கலப்படுத்தப் படுகிறவர்கள் "சென்ற ஞாயிற்றுச் செல்சுடர் அமையத்து" (14:203) ஆயரிருக்கையுள் நுழைந்ததாகத் தெரிகிறது. நண்பகலிலேயே வருவான் என்று எதிர்பார்த்த தன் காதற் கணவனைக் காணாததால் மனம் நடுக்குறுகின்றது என்று கண்ணகி புலம்பிக் கூறும் கூற்றால் ("நண்பகற் போதே நடுக்குநோய் கைம்மிகும்") (18:16) அடுத்த நாள் மாலைப்பொழுதில் துயர வாழ்வை அடைகின்றனர் எனத் தெரிகிறது. செய்தியறிந்த அற்றை நாள் நள்ளிரவிலேயே ('இடையிரு ளியாமத் தெரியகம் புக்கதும்") (27:78) மாதரி அடைக்கல மிழந்தேனே எனக்கூறித் தீப்பாய்ந்து உயிரை விட்டு விடுகிறாள். "அடைக்கலமிழந்த பின் உயிர் வாழலாகாது' என்ற புதிய ஒரு பரிமாணத்தை மாதரி பாத்திரம் உருவாக்கிக் காட்டுகிறது.

'அடைக்கலமிழந்தேன் இடைக்குல மாக்காள்" (27:76)

என்றும்,

"ஐயந்தீர் காட்சி யடைக்கலங் காத்தோம்ப
வல்லாதேன் – – – – – " (29: 8ஆம் பாடல்)

என்றும் வருந்தித் தன்னுடைய மகனாகவும் மகளாகவும் கருதிப் போற்றிப் பாதுகாத்த கோவலன், கண்ணகிக்கு இத்தகு துயர் வாழ்வு வந்ததே என்று வெதும்பி, மாதரி மரணத்தைத் தழுவுகிறாள்.

வேற்று நாட்டிலிருந்து பிழைப்பு தேடித் தன் நாட்டிற்கு வந்த, முன்பு எவ்விதத்திலும் தொடர்பில்லாத, தன்னுடன் இரத்த உறவோ, பிற உறவோ இல்லாத கோவலன், கண்ணகியின் பொருட்டு மாதரி உயிர் விட்டமையை 'அடைக்கலங் காத்தல்' என்ற மனிதநேயச் செயலின் உச்ச கட்ட நிகழ்ச்சி எனக் குறிப்பிடலாம்.

உண்மையை உணராது கோவலனைக் கொலையுண்ணச் செய்ததால் வளைந்த செங்கோலைத் தன் உயிரைக் கொடுத்து நிமிரச் செய்த பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனைப் போன்று (22: 3-5) அடைக்கலமாய் வந்தாரைக் காக்க இயலாது போனதால் 'அடைக்கலங் காத்தல்' என்ற வளைந்த கோட்பாட்டுக் கோலைத் தன் உயிரைக் கொடுத்து நிமிர்த்தியுள்ளாள் மாதரி எனலாம்.

மணப்பருவத்திலுள்ள தன் மகள் ஐயையின் பொருட்டுக் கூட உயிர் தாங்கி வாழ ஒப்பவில்லை மாதரி. "நின் மாமி மாதரியின் மரணத்தால் அழகிய திருமணம் நிகழ்த்தப் பெறாமல் நிற்கும்

ஐயையைப் பார்த்தாயா தோழி"[15] என்று கண்ணகியின் தோழி தேவந்தி அரற்றுதலைச் சிலம்பு வெளிக்காட்டியுள்ளது. அடைக்கலங் காக்க இயலாத தான் உயிர் வாழக்கூடாது என்ற கொள்கை உறுதியுடன் தீப்பாய்ந்து மரணத்தைத் தழுவுகிறாள் மாதரி.

சிவனடியார் ஒப்படைத்துச் சென்ற கந்தலாடையை உரிய நேரத்தில் திரும்ப ஒப்படைக்க இயலாமல் போனதால் உயிரை விடத் துணிந்து நின்ற திருக்குறிப்புத் தொண்டர் வரையும்[16] மாதரியின் செயல் வீச்சு பரவிப் பதிந்துள்ளதை இலக்கிய வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. அடைக்கலப் பொருள் மனிதராக இல்லாது, அஃறிணைப் பொருளான ஒரு துணியாக இருந்தபோதும் அடைக்கலங் காக்க இயலா விடின் உயிரை விட்டு விடவேண்டும் என்ற கொள்கை பக்தி இலக்கியக் காலத்திலும் வெளிப்படுத்தப் பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகிறது.

முடிவுரை

1. அடைக்கலங் காத்தல் என்பது ஒரு மனிதநேய மாண்புடைய செயல் என்பதும்

2. அடைக்கலங் காத்தல் ஒரு நற்பண்பாகக் கருதப்பட்டுக் கொள்கைகள் வகுக்கப்பட்டு வளர்ந்தது அற இலக்கியக் காலகட்டத்தில் என்பதும்

3. அடைக்கலங் காத்தற்கு அடிப்படைக் கூறு விருந்தோம்பற் பண்பு என்பதும்

4. விருந்தோம்பற் பண்பு சங்க காலந்தொட்டு இருந்து வரும் பழம் பண்பாட்டு மரபு என்பதும்

5. பொருளையும் மனிதர்கள் தங்களைத் தாங்களும் அடைக்கலமாக வைக்கும் வழக்கம் அறநூற் காலகட்டம் தொடங்கி இருந்தது என்பதும்

6. கடமையாற்றச் செல்லும் தலைவனுடன் தலைவியும் வீட்டை விட்டு வெளி வரும் போது அடைக்கலங் காத்தல் என்ற மரபு வளர்ச்சி பெற்றுள்ளது என்பது சிலப்பதிகாரக் காப்பிய வழி அறியலாகும் உண்மை என்பதும்

7. அறநூல்கள் கூறிய அடைக்கலங் காத்தல் கோட்பாடுகளின் பாத்திர விளக்கமாக மாதரி திகழ்கிறாள் என்பதும்

8. அறநூல்களில் குறிப்பிடப்படாத அடைக்கலங் காப்போர்க்குரிய பிற பண்புநலன்களையும் உள்ளடக்கிய மாதிரிப் பாத்திரமாக மாதரி பாத்திரம் சிலம்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதும்

9. அறநூல் கோட்பாடுகளையும் தாண்டி, அடைக்கலங் காக்க இயலாவிடின் உயிரை விட்டு விடவேண்டும் என்ற புதிய வளர்ச்சி நிலையைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது என்பதும்

10. இம்மரபு பக்தி இலக்கியக் கால கட்டத்திலும் எதிரொலித்துள்ளது என்பதும் இக்கட்டுரை வழி புலப்படுத்தப் பட்டுள்ள செய்திகளாகும்.

இன்றையக் காலகட்டத்தில் அடைக்கலங் காத்தல் என்பது பல்விதப் பரிணாமங்களைப் பெற்று விட்டது. என்றாலும் பதிலுதவி கருதாத, அறநூல்காலத்து, சிலப்பதிகாரக் காலத்து அடைக்கலங் காத்தல் என்பது தனிமனிதர்களிடை ஆங்காங்கு காணப்படவே செய்கின்றது. குழந்தைகள் காப்பகம், முதியோர் காப்பகம், அநாதை விடுதிகள் மற்றும் சேவை மையங்கள், தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றைச் சமூகப் பொறுப்புணர்வுடன் தன்னலம் கருதாது, தொண்டு மனப்பான்மையுடன் நடத்தும் அறப்பண்பாளர்களிடம் அடைக்கலங் காத்தற் பண்பு படிந்திருக்கக் காண்கிறோம்.

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்" (குறள். 996)

என்ற வள்ளுவர் வாக்கு இன்றும் மெய்வாக்காகவே திகழ்கின்றமை இதனை உறுதி செய்கின்றது.

குறிப்புகள்

1. சிலப்பதிகாரம் சொல்லாராய்ச்சி, டாக்டர் எஸ். சௌந்தர பாண்டியன், பக். 150.
2. தொல்காப்பியச் சொல்லகராதி
3. பழந்தமிழ் நூற் சொல்லடைவு, முதல் தொகுதி.
4. 'விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே' குறுந்தொகை. 33.
5. 'விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே' குறுந்தொகை. 210.
6. திருக்குறட் சொல்லடைவு, தமிழ்மணி, சாமி வேலாயுதம் பிள்ளை.
7. நானாற்பது உரையுடன், (இன்னாநாற்பது) 40:3.
8. மேற்படி (இனியவை நாற்பது), 30:3-4
9. கடுங கடிகை மாமூலம் (திரிகடுகம்) 62: 3-4)
10. ஆசாரக்கோவை, தி. செல்வக் கேசவ முதலியார் பதிப்பு, பா.எண். 95.

11. பழமொழி நானூறு, ம. இராசமாணிக்கம் பிள்ளை உரை, 196:1

12. 'இயக்கி - பாண்டி நாட்டில் இசக்கி எனவும் வழங்குவர். ஆரியாங்கனை எனவும் கூறுவர். (ஆரியாங்கனை-கணவனிருக்கும் பொழுதே துறவு பூண்ட தவப்பெண்) - சிலப்பதிகாரம், ந.மு.வே. உரை, பக். 361.

13. சிலப்பதிகாரம், அரும்பத உரையும் அடியார்க்கு நல்லாருரையும், பக். 425.

14. வலம்படு தானை மன்னவன் றன்னைச்
சிலம்பின் வென்றனள் சேயிழை யென்றலும்
தாதெரு மன்றத்து மாதரி யெழுந்து
கோவலன் தீதிலன் கோமகன் பிழைத்தான்
அடைக்கல மிழந்தேன் இடைக்குல மாக்காள்
குடையும் கோலும் பிழைத்த வோவென" சிலம்பு, (27:72-77)

15. "அவ்வை மகளிவடான் அம்மணம் பட்டிலா
வையெயிற் றையையைக் கண்டாயோ தோழி
மாமி மடமகளைக் கண்டாயோ தோழி"
சிலம்பு, (29: 8ஆம் பாடல்)

16. திருத்தொண்டர் புராணம் 2ஆம் பகுதி, திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம், சுப்பிரமணிய முதலியார் உரை, பா. எண்: 1201.

17. திருக்குறள் கருத்துரை, நாமக்கல் கவிஞர் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை.

******

கம்பர் காட்டும் மனிதநேயம்

முனைவர் ச. சிவகாமி
இணைப் பேராசிரியர்

இன்றைய உலகின் இன்றியமையாத் தேவையாகச் சான்றோர் அறிவுறுத்துவது மனிதநேயமாகும். அனைவரையும் அச்சுறுத்திக் கொண்டு வளர்ந்து வரும் வன்முறைக்குச் சிறந்த மாற்றாக மனிதநேயம் அமைகிறது. உலக மக்களை ஒருங்கிணைத்து வளமுடன் வாழச் செய்யும் ஒப்பற்ற வெண்குடை மனிதநேயமே என்பது சமூக மேம்பாட்டுச் சிந்தனையாளரின் பொதுவான எண்ணம். தொன்மைக் காலம் முதல் இன்று வரை தமிழிலக்கியப் பரப்பில் தனியிடங் கொண்டுள்ளது மனிதநேயம். குறிப்பாக அறவிலக்கியங்களின் எழுச்சிக்கு இதுவே அடிப்படை. சமூக முன்னேற்றத்தினையும் சிந்தனையில் கொண்டெழும் இலக்கியங்களே காலத்தை வென்று நிலை பெறுகின்றன. அவ்வகையில் ஆயிரமாண்டுகள் கடந்தும் உயிர்ப்புடன் திகழும் கம்பராமாயணம் மனிதநேயம் தொடர்பாகத் தரும் கருத்துகள் இக்கட்டுரையில் எண்ணப்படுகின்றன. கட்டுரையின் பக்க வரையறையைக் கருதிப் பாலகாண்டம் மட்டும் இங்குக் களனாகின்றது.

கம்பர் கருதும் மனிதநேயம்

கம்பர் பார்வையில் எது மனிதநேயம் எனக் காண்பது இங்குக் கருத்தாகிறது. தம் கூற்றாகவும் கதைமாந்தர் வழியும் கம்பர் இதனை உணர்த்துகிறார். அவற்றை ஆழ்ந்து நோக்கும் பொழுது நான்கு நிலைகளில் மனிதநேயம் விளக்கம் பெறுவதைக் காணமுடிகிறது.

1. அறவாழ்க்கை மனிதநேய வாழ்க்கை:

ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று அறநூல்கள் வழிகாட்டுகின்றனவோ அதன் படி நடத்தல் மனிதநேயத்தின் பாற்படுகின்றது. தாடகையைக் கொல்லத் தயங்கும் இராமனிடம் விசுவாமித்திரர், 'ஈறு இல் நல் அறம் பார்த்து இசைத்தேன்....... ஆறி நின்றது அறன் அன்று; அரக்கியைக் கோறி' (382) எனக் கட்டளையிடல்; இராமனை எதிர்த்து நிற்கும் பரசுராமனிடம் தயரதன், 'அறன் நின்றதன் நிலை நின்று உயர் புகழ் ஒன்றுவது அன்றோ மறன் என்பது? மறவோய்' (1284) என இறைஞ்சுதல்; அணி இழை மகளிரும் அலங்கல் வீரரும் தணிவன அறநெறி (125) எனும்

கவிக்கூற்று முதலானவை இதனை வலியுறுத்துகின்றன. நல்லனவற்றை எண்ணுதல்; நல்லனவற்றைச் செய்தல் என்பனவற்றால் மனிதநேயம் மாண்புறுகின்றது.

2. தன்னுயிர் போல் மன்னுயிரை நேசித்தல்:

தயரதனின் ஆட்சிச் சிறப்பைப் பாராட்டும் கம்பர் 'உயிர் எலாம் தன் உயிர் ஒக்க ஓம்பலால்......... உயிர் எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்' (177) என மொழிகிறார். இதே போன்று அம்பரீடன் என்னும் மன்னனையும், 'வையத்து உயிர்க்கு உயிர் ஆய தோன்றல்' எனப் புகழ்கின்றார். இவற்றால் தனக்கும் பிறருக்கும் இடையே எவ்வித வேறுபாடும் கருதாநிலை உணர்த்தப்படுகிறது. ஒருவர் தன்னைப் போன்றே மற்றவரையும் கருதின், தான் நல்லது எனக் கருதுவனவற்றை மட்டுமே பிறருக்கும் கூறுவர், செய்வர்; தனக்கு ஒவ்வாதது, துன்பந்தருவது, தீங்கிழைப்பது என எண்ணுவனவற்றைப் பிறரிடத்தும் விலக்குவர்; தான் துன்புறுகையில் எதிர்பார்க்கும் அன்பை, ஆதரவை, உதவியைப் பிறர் துன்புறுமிடத்தும் காட்டுவர்; தன் வெற்றி காண்கையில் கொள்ளும் மகிழ்வைப் பிறர் வெற்றியிலும் வெளிப்படுத்துவர் என இதனை விரித்துக் கொண்டே செல்லலாம். இவ்வாறு உள்ளும் புறமும் (தான், பிறர்) ஒன்றேயாதலால் வேற்றுமை ஒழிந்து ஒன்றிய உணர்வு மலர்ந்து மனிதநேயம் சிறக்கிறது.

3. தாயன்பு போன்றது மனிதநேயம்:

மன வேற்றுமைகளை அழித்துப் பகைவனுக்கும் அருளும் நல்லுள்ளம், மனிதநேயம் அன்பால் நிகழ்கிறது. அன்பிற்கும் மனிதநேயத்திற்கும் இடையே பெயரளவில் மட்டுமே வேற்றுமை; இரண்டும் ஒன்றே என்பது ஆழ்ந்து நோக்கினால் புலப்படும். ஏனெனில் அன்பு,

அனைவரையும் நேசிக்கும்
உயர்வு தாழ்வு பார்க்காது
அவர் இவர் என்னாது
நட்பு பகை நோக்காது
நிறம் இடம் மொழி இனம் காணாது
கைமாறு கருதாது
காலநேரம் அறியாது
மறந்தும் கெடுதல் செய்யாது
கனவினும் தீங்கு எண்ணாது
துன்பத்தில் துணை நிற்கும்

இன்பத்தில் பங்கேற்கும்
குணமே போற்றும்
குற்றம் காணாது
பொறாமைப் படாது
பொல்லாங்கு பேசாது
தவற்றினைத் திருத்தும், தண்டிக்காது
பிழை பொறுக்கும், மன்னிக்கும், மறக்கும், வஞ்சிக்காது
முன்னேற்றும்; முட்டுக்கட்டை போடாது
தடையகற்றும் தடைக்கல் ஆகாது
உதவி செய்ய ஓடும்
ஒளியாது; ஒளிக்காது
எட்டி நின்று வேடிக்கை பார்க்காது
நல்ல பண்புகளின் ஆலயம்
கெட்ட குணங்களின் சமாதி
நன்மைகளின் ஊற்று
நலிந்தோர்க்கு உதவுதல் உயிர்மூச்சு

எனவேதான் தம் காப்பியத்துள் மனிதநேயத்துடன் செயல்படுவோரை அன்பிற் சிறந்தோராகவும் பாராட்டுகிறார். அன்பினும் அதன் மேன்மையை, தூய்மையை உணர்த்தத் தாயன்பைக் குறியீடாக்குவது கம்பர் மரபு. ஆட்சியாளர்க்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த தயரதனைத் 'தாயொக்கும் அன்பின்' (171) எனப் பாராட்டுகிறார். மற்றும் தன் குடிகளுக்கு 'ஈன்ற நல் தாய் எனக் கருது பேர் அருளினான்' (1057) எனவும் போற்றுவார். அனுமன் 'தாயே அனைய கருணையான்' (5931); பிரகலாதன் 'தாயின் மன்னுயிர்க்கு அன்பினன்' எனப் பிறவிடத்தும் பேசுதல் இங்குச் சுட்டத்தக்கது. எனவே மனித நேயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் தாயன்பைக் காட்டுகிறார் எனலாம்.

4. வேற்றுமை கடந்து துணை நிற்றல்:

தனக்கு வேண்டியவர், தன்பால் அன்புடையார், தன் சுற்றம் எனக் குறுகிய வட்டத்துள் சிறைப்படாது, முன்பின் அறியாதார், வேண்டாதார், பகைவர் என ஒதுக்கப்பட்டோர் யாராயினும் இனம், மொழி, சமயம், நாடு முதலான வேற்றுமைகளைக் கடந்து, தேவையான உதவிகளை இயன்றவரையில் தானே முன் வந்து செய்தல் மனிதநேயமாகும். அவ்வுதவியும் 'தீது இலா உதவி' (476) என வரையறுத்தலும் குறிக்கத்தக்கது. இதனை இயற்கைக் காட்சி யொன்றை வருணிக்கையில் கம்பர் வெளிப்படுத்துகிறார்.

சேல் உண்ட ஒண்கணாரின் திரிகின்ற செங்கால் அன்னம்
மால் உண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
கால் உண்ட சேற்று மேதி கன்று உள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பால் உண்டு, துயில, பச்சைத் தேரை தாலாட்டும் பண்ணை *(44)*

என்பது அவ்வழகிய, இனிய காட்சி. இங்கு அன்னப் பறவையின் மழலைக்குத் தாமரைப் பூ இருப்பிடமாகிறது. எருமை சுரக்கும் தீம்பால் அதற்கு உணவாகிறது. பிறர் வெறுத்து ஒதுக்கும் தவளையின் குரல் சுகமான தாலாட்டாக இனிதே தூங்குகிறது. இங்கு இனம், மொழி கடந்து உறவுநிலை சிறப்பாக வெளிப்பட்டுள்ளது. இதுபோன்று யார், எவர், ஏன், எதற்கு என்ற வினாக்களின்றி இயன்றதை இயன்றபோது நல்கி யாவருக்கும் துணைநிற்றல் மனிதநேயம் எனக் கம்பர் இவண் உணர்த்துகிறார். இவரின் இவ்வெண்ணம் தயரதனின் அறிமுகமாக அமையும்,

தாய் ஒக்கும் அன்பின், தவம் ஒக்கும் நலம் பயப்பின்
சேய் ஒக்கும், முன் நின்று ஒரு செல்கதி உய்க்கும் நீரால்
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும்; நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால், அறிவு ஒக்கும்; எவர்க்கும் அன்னான் *(171)*

எனும் பாடலிலும் எதிரொலிக்கிறது.

மனிதநேயத் தோற்றக்களன்

மனிதநேயம் எதிலிருந்து தோன்றுகின்றது; எது அதன் மூலமாகின்றது என்பதற்கும் கம்பர் விடை தந்துள்ளார். ‘உடன் பிறப்பு உணர்வு’ என்பது அதுவாகும். கம்பராமாயணத்தின் உயிர்நிலைப் பாட்டாக அமையும்,

குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம்; எம் உழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம்
புகல் அரும் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை
(6507)

எனும் கதைத்தலைவன் இராமனின் கூற்று இதனைத் தெளிவாக்குகிறது. இப்பாடல் வழி நட்பு உறவாதலும், அவ்வுறவு பின் சமூக உறவாக விரிவிடைதலும், அதனால் உள்ளங்கள் கனிந்து ஒன்றாதலும் காப்பியக்கதைப் போக்கில் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. (இருபதில் கம்பன், பக். 27-31). இராமன் இனம் பாராது தன்னிடத்து வருவோரை நட்பாக ஏற்றுக் கொள்வதுடன் உடன்பிறப்பாக அவர்களை உயர்வு படுத்துவதும் அனைவரும்

அறிந்த ஒன்று. கம்பருக்கே உரிய இச்சீரிய சிந்தனை இன்று உலக அரங்கிலும் ஓங்கி ஒலிக்கக் கேட்கிறோம்.[1] இவ்வுடன்பிறப்பு நேயத்தைக் கம்பர் பிற உயிரினங்களிடத்தும் காட்டி (இருபதில் கம்பன், மேற்படி) மனிதநேயத் தோற்றம் உடன்பிறப்பு உணர்வில் ஒளிவிடுவதைப் புலப்படுத்துகிறார். இருவரிடையே உடன் பிறப்பு நேயம் கால் கொள்ளும் பொழுது இருவரின் சுற்றமும் இணைகிறது; ஒருவருக்கொருவர் துணைநிற்றல் இயல்பாகிறது; நீ, நான் எனும் வேற்றுமை மறைந்து நாம் எனும் ஒருமை மலர்கிறது; தன்னைப் போல் பிறனையும் எண்ணும் பண்பு ஊற்றெடுக்கிறது. மனித மன மேம்பாட்டுச் சிந்தனையில் கம்பர் கொண்ட பேரார்வத்தின் விளைவே இம்முடிவு எனல் பொருந்தும்.

மனிதநேயம் மலரும் முறை

மனிதன் பிறக்கும் பொழுது கள்ளங் கபடமற்ற உள்ளத்துடன் குழந்தையாக இருக்கிறான். இதன் பின்பு வளர்கின்ற சூழல், அவனுடைய தேவை, விருப்பம் இவற்றிற்கேற்ப மனித நேயத்துடனோ, மனிதநேயமின்றியோ உருவாகின்றது. ஒரு குழந்தையை மனிதநேயமிக்க சிறந்த குடிமகனாக மலரச் செய்யும் முறைமையைக் கம்பர் மிகத் தெளிவாக, அழகாகப் படம் பிடித்துள்ளார். அயோத்தியின் பெருமையினைப் பலவாறாகப் பாராட்டியவர் நிறைவாக,

> ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து எண் இல் கேள்வி
> ஆகும் முதல் திண்பணை போக்கி, அருந்தவத்தின்
> சாகம் தழைத்து, அன்பு அரும்பி, தருமம் மலர்ந்து
> போகம் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே (167)

எனக் கூறுகிறார். கல்வி எனும் ஒரு வித்து முளைத்து, கணக்கற்ற கேள்வி அறிவு, அனுபவ அறிவு எனும் வலிமையான கிளைகளைப் பரப்பி, அரிய தவமாகிய இலைகளால் தழைத்து, அன்பினை அரும்பச் செய்து, தருமத்தை மலர்வித்து இன்பம் எனும் கனியாகப் பழுத்தது போல் அயோத்தி மாநகர் சிறந்தது என்பது இதன் பொருள். மனிதநேயம் நிறைந்த நல்வாழ்க்கை எப்படி உருவாகிறது என்பதையும் இங்குக் குறிப்பால் உணர்த்துகிறார்.

கல்வியானது ஒருவரின் மனம் நன்கு பண்படத் தேவையாகிறது; நல்லது எது, கெட்டது எது என்று எதையும் பகுத்துணரத் தேவைப்படும் முதற் கருவி கல்வி என்பது கம்பரின் எண்ணம். இதனுடன் பெரியோர், நட்பு, சுற்றம் முதலானோரிட மிருந்து பெறும் நல்லுரைகளாகிய கேள்வியறிவும், அவரவரின்

வாழ்க்கை கற்றுத்தரும் பட்டறிவாகிய அனுபவ அறிவும் இணைய மனிதனாக வாழ வேண்டிய வாழ்க்கைப் பாதை தெளிவாகப் புலனாகிறது. நற்பண்புகளாகிய தவம் வாழ்க்கைப் பாதைக்கு நல்லொளியாகி வழிகாட்டுகிறது. இவற்றால் மனிதமனம் அன்பால் நிறைந்து வழிய அங்கு அறமாகிய மனிதநேயம் மலர்கிறது. வாழ்க்கை பிறர்நலம் பேணும், மகிழ்விக்கும் இன்பக்கனியாகக் கனிகின்றது. இவ்வாறு ஒவ்வொருவரிடமும் மனிதநேயம் கால்கொள்வதற்குக் கல்வி, கேள்வியறிவு, விடாமுயற்சியுடன் கூடிய நற்செயல்கள் (தவம்), அன்பு, அறம் என்பனவற்றின் இன்றியமையாமையை உணர்த்துகிறார். இவை அனைத்திலும் கல்வி முன்னிற்பதை, பெண்களின் சிறப்புரைக்கும் இடத்திலும்,

பெருந்தடங்கண் பிறைநுதலார்க்கு எலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே *(67)*

என்பதால் வலியுறுத்துகிறார்.

மனிதனுள் உறைந்திருக்கும் மனிதநேயப் பண்பை எழுப்பிச் செயல்பட வைப்பது; எண்ணம். சொல், செயல் என்பனவற்றால் எவ்வகையிலேனும் பிறருக்குச் சிறிதும் தீங்கிழைக்காது இயன்றவரை துணை நிற்கச் செய்வது அவர் கற்கும் கல்வி; சுற்றியிருப்போர் புகட்டும் நல்லறிவு; நற்செயல் புரியக் காட்டும் துடிப்பு, விடா முயற்சி, உள்ளத்துள் ஊற்றெடுக்கும்அன்பு; அறவாழ்க்கையில் கொண்டுள்ள பிடிப்பு என்பதைக் கம்பரின் கருத்தாக உய்த்துணரலாம். இதுவே இப்பாடலின் *(167)* உட்குறிப்பு என்பதற்கு அரணாக,

கூற்றம் இல்லை ஓர் குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லை, தம் சிந்தையின் செம்மையால்
ஆற்றல் நல்அறம் அல்லது இலாமையால்
ஏற்றம் அல்லது இழித்தகவு இல்லையே *(70)*

எனும் பாடலும் அமையக் காணலாம். ஒருவர் மனத்தில் கல்வியுறிவும், அன்பும் நிறையும் பொழுது தவறு செய்வது தவிர்க்கப்படுகிறது; எனவே சிந்தை தூய்மை பெறுகிறது. இதனால் பிறரைத் துன்புறுத்துவதற்கு அடிப்படையாய் அமையும் சினம் அழிகிறது; இவற்றால் மனவலிமையும் செயல் வலிமையும் மிகுந்து அறவாழ்க்கை தழைக்கிறது; எனவே மனிதன் என்றென்றும் நற்பண்பால், நற்செயல்களால் உயர்ந்து கொண்டே செல்கிறான்; துன்பமோ, இழிவோ அவனைத் தொடுவதில்லை. மனிதநேய வாழ்வு மலருகிறது.

மனித நேயக் கூறுகள்

உடலை இயங்கச் செய்யும் உயிர் மூச்சுப் போன்றது ஒவ்வொருவர் உள்ளும் புதைந்து நிற்கும் மனிதநேயம். இது எண்ணம், சொல், செயல் என மூன்றிலும் தன்னை இணைத்துள்ளது.

எண்ணம்:

உள்ளத்தில் எழும் எண்ணமே, சொல்லாக, செயலாக மாற்றம் காண்கிறது. எனவே மனிதநேயப் பண்பு செயல் வடிவம் பெற அது எண்ணத்தில் பதிதல் முதல் தேவையாகிறது. இதனை விசுவாமித்திரரிடம் கம்பர் அமைக்கிறார். தம் வேள்வி நிறைவேறத் துணையாக இராம, இலக்குவரை அழைத்து வரும் விசுவாமித்திரர், வெம்மை மிகுந்த பாலைநிலம் எதிர்ப்பட, 'இவர் பெரிது அளவு இல் ஆற்றலைப் பொருந்தினர் ஆயினும் பூவின் மெல்லியர்; (பாலையின் வெம்மையால்) வருந்துவர் சிறிது' என மனத்தின் நினைக்கின்றார் (355). இவ் எண்ணம், அக்குறை தீர்க்கும் வழிவகை நாடி, அவர்களுக்கு இரு மந்திரங்களை உபதேசித்து காப்பாற்றக் (356-357) காணலாம்.

சொல்:

இயல்பான சொல்லாடல் கூடப் பிறரிடம் மகிழ்ச்சியை உருவாக்கும் தன்மையதாகும். இராமன் தனக்கு எதிர்ப்பட்ட குடிமக்களிடம், முதிர்ந்த அருளோடு முகம் மலர்ந்து, ஒளிர, 'எது வினை? இடர் இலை? இனிது நும் மனையும், மதி தரு குமரரும் வலியர் கொல்' என (311) நலம் விசாரிப்பது அவர்களுக்கு மிகுந்த இன்பத்தைத் தருகிறது (312). மற்றவர்களிடம் கொண்ட அன்பிற்கு, மனிதநேயத்திற்கு இதுவும் ஓர் அடையாளமாகும். இங்குப் பெறுவதும் இழப்பதும் எதுவுமில்லையாயினும் இருவரிடையேயும் மனமகிழ்ச்சி மிகுந்து அன்பினை அதிகரிக்கச் செய்கிறது.

மனிதநேயமிகு சொற்கள், துன்புறுவோர்க்கு அருமருந்தாகவும் அமையக்கூடும் என்பதனையும் கம்பர் காட்டுகிறார். தனக்கு மகவில்லாக் குறையால் மனம் நொந்து தயரதன் வாடும் பொழுது, வசிட்டன், 'நீ வருந்தல் .... புதல்வரை அளிக்கும் வேள்வி தீது அற முயலின் ஐய சிந்தை நோய் தீரும்' (208) என ஆறுதல் கூறுகிறான். ஒருவரின் துயரினைத் தம்மால் தீர்க்க முடியாவிடினும் ஆறுதல் தரும் சொற்களும், அதனின்றும் மீள வழி காட்டுதலும் மனிதநேயப் பண்பினவாகும். வசிட்ட முனியின் இவ்வாறுதல் மொழிகளால் தயரதன், எழுந்த பேர் உவகையால் புத்துணர்வு கொள்வதைப் பார்க்கிறோம் (209).

ஒருவர் தவறிழைக்கையில் அவர் மனம் புண்படா வண்ணம் தகுந்த சொற்களால் நல்வழிப்படுத்தலும் இவண் கூறத்தக்கது. பிள்ளைப் பாசத்தால் விசுவாமித்திரருடன் இராமனை அனுப்ப மறுக்கும் தயரதனிடம் வசிட்டன் எடுத்துரைக்கும் நயமொழிகளை இதற்குக் காட்டாக்கலாம்.

நின்மகற்கு
உறுத்தல் ஆகலா உறுதி எய்தும் நாள்
மறுத்தியோ? எனா வசிட்டன் கூறினான்
'பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம் போய்
மொய் கொள் வேலைவாய் முடுகும் ஆறு போல்,
ஐய! நின் மகற்கு அளவு இல விஞ்சை வந்து
எய்து காலம் இன்று எதிர்ந்தது' என்னவே *(328, 329)*

இங்கு, இராமன் விசுவாமித்திரருடன் செல்வதால் பெறவிருக்கும் நன்மைகளைச் சுட்டித் தயரதனின் மனத்துயரினைப் போக்கிச் செயல்பட வைப்பதைக் காண்கிறோம்.

மனம் நிறைந்த மகிழ்வில், அன்புப் 'பெருக்கில்', வெளிப்படும் எண்ணிய பொருள் எலாம் இனிது முற்றுக' *(1302)* என்பது போன்ற வாழ்த்து மொழிகளும் இதில் அடங்கும்.

செயல்:

பிறர்துயர் துடைக்கச் செய்யப்படும் அனைத்துச் செயல்களுமே இதில் அடங்கும். கம்பர் இதில் காட்டுவனவற்றுள் வறுமையாளருக்கு உணவளித்தல் முதலிடம் பெறுகிறது. மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்து *(394)* என்று, தம் தம் இல் இருந்து, தாமும் விருந்தொடும் தமரினோடும் அந்தணர் அமுத உண்டி அயிலுறும் அமலை *(53)*, வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்தும் அன்றி விளைவன யாவையே *(67)* என அதனைக் காட்சிப்படுத்தும் கம்பர் பசித்தோர்க்கு உணவளிக்கும் அறச்சாலைகளை 'ஊட்டிடம்' *(68)* எனப் போற்றுகிறார்.

உணவளிப்பதுடன் அவர் தம் வறுமையை முற்றிலுமாக, நிரந்தரமாக ஒழிப்பதற்கு ஏற்றவாறு பொருள் வழங்குதலை, 'உள்ளது மறாது உதவும் வள்ளல்'; 'உள்ளன யாவையும் உதவி பூண்டவும் கொள்ளையிற் கொள்க எனக் கொடுக்கின்றாரினே' *(1235)* எனச் சிறப்பிக்கிறார்.

தயரதன் முதலானோர் காணும் பொருட்டு அரசவைக்கு வரும் சீதையை, 'சிந்தொடு, குறளும் கூனும் சிலதியர் குழாமும் தெற்றி

வந்து அடிவணங்கிச் சுற்ற .... நங்கையும் நடக்க லுற்றாள்' (1139) எனக் காட்டுகிறார். இங்கு உடற்குறை உடையோரைப் பணியமர்த்தி, நலிந்தோர்க்கு உதவும், பரிவுகாட்டும் தன்மையைப் புலப்படுத்துகிறார்.

பிறர் நலத்திற்காக, மனிதநேயப் பண்பாளர் தம்மையே இழக்கத் துணிவர் என்பதனை, இரிசக முனியின் மைந்தன் கனச்சேபன், பெற்றோர் விருப்பப்படி அம்பரீடனின் யாகத்திற்கு நரபலியாகச் செல்வதில் (601) பெறலாம்.

பிழை புரிந்தோர் தண்டிக்கப்படுதலும் மனிதநேயச் செயலாக, தாடகையை வீழ்த்த இராமனை ஏவும் விசுவாமித்திரன் கூற்றில் (376-382) வெளிப்படுகிறது. 'பெரியோரொடும் மறம் கொடு, இத்தரை மன்னுயிர் மாய்த்து, நின்று அறம் கெடுத்தவட்கு ஆண்மையும் வேண்டுமோ? (379) என்பதனால் தவறிழைத்தோர் மீது பரிவுகாட்டுதல் மனிதநேயமன்று என்பது வலியுறுத்தப்படக் காணலாம்.

இதுபோன்றே தீமையைக் களையத் தீமையோரை, பெருந் தீங்கிழைப்போரை அழித்தலும் மனிதநேயச் செயற்பாடாவதைக் காப்பியக் கதைப்பொருள் உணர்த்தி நிற்கிறது. இங்கு,

> அலைகடல் நடுவண், ஓர் அனந்தன் மீமிசை
> மலை என விழி துயில் வளரும் மாமுகில்
> 'கொலை தொழில் அரக்கர்தம் கொடுமைதீர்ப்பென்' என்று
> உலைவுறும் அமரருக்கு உரைத்த வாய்மையை (185)

எண்ணலாம்.

மனிதநேயம் வெளிப்படும் சூழல்

மனித மன உணர்வுகள் அவனுள் மறைந்து நின்று அவ்வவற்றிற்குரிய சூழலமைகையில் பலரும் அறிய வெளிப்படுகின்றன. மனிதநேயம் புலப்படும் சூழல்கள் சிலவற்றைக் கம்பர் அமைத்துள்ளார்.

தம்மையடைந்து உதவி வேண்டியோர்க்கு வேண்டியபடி துணைநிற்றல் மிகுதியாகப் பேசப்படுகிறது. விசுவாமித்திரர் வேள்விக் காக்கத் தயரதன் இராம, இலக்குவரை அனுப்புதல், அரக்கரை அழிக்கத் திருமால் அவதாரமெடுத்தல் (412), விசுவாமித்திரர் திரிசங்கு மன்னனுக்குத் தனி விண்ணுலகு உருவாக்கல் (597), எனப் பலவாறாகக் (442-443) காணப்படுகிறது. துன்பத்தில் இடருறும் பிறருக்கு உதவ வேண்டும் என்ற மனிதநேயம், உதவி தேவைப்படுவோரால் உணர்த்தப்பட்டவுடன் வெளிப்படுவதை இவற்றில் காண்கிறோம்.

புதுவருவாய் வரும் பொழுது அதனை வறியோருடன் பகிர்ந்துண்ணும் மனிதநேயம் வெளிப்படுகிறது. இதனைக் கோசலத்து உழவர் தம் வயல் தந்த அளப்பரும் விளைச்சலை, 'வறியவர்க்கு உதவி, மிக்க விருந்து உண மனையின் உய்ப்பார்' (51) எனப் பெருமிதத்துடன் கம்பர் காட்டுவார்.

இன்பமான நிகழ்வுகளால் மனம் மகிழ்ச்சியில் பொங்கும் நேரம், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' எனும் தாயுமானவரின் வாக்குக்கு ஏற்ப அதனைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் முகமாகப் பொருளுதவி புரிதல் இதில் கருதப்படுகிறது. தயரதன் இராமன் முதலானோரைப் பெற்ற போதும் (2747 - 289) இராமனின் திருமணச் செய்தியறிந்து புறப்பட்ட போதும் (1228), இராமன் - சீதை திருமண விழாவின் போதும் (1261) தான, தருமம் செய்தலைச் சான்றாக்கலாம். இக்கூறும் மிகுந்த பயிற்சி காட்டுவது சுட்டத்தக்கது. மனத்திற்கினிய செயல் நடக்க இருக்கும் பொழுது அதன் தொடக்கத்திலும் நிறைவிலும் மனிதநேயப் பண்பு ஒளிருவதை இது காட்டுகிறது.

கண் முன் நிகழும் எதிர்பாரா விபத்தால் பாதிக்கப்பட்டோரை அவர் முன்பின் அறியாதவராக இருப்பினும் மனிதநேயமுடையார் காப்பாற்றத் துணிவர்; தம் உயிரையும் பொருட்படுத்த மாட்டார் என்றும் மனிதநேயம் எச்சூழலிலும் எவ்வேளையிலும் வெளிப்படும்; அதற்கென்று வரையறை வகுத்தலும் இயலாது என்பனவும் காப்பியக் களனுள் உணர்த்தப்படுகின்றன. இராமன், சீதை திருமண விழா காணச் செல்லும் வழியில் குதிரை மீதமர்ந்திருந்த ஒரு மங்கை குதிரையின் திடீர்த் துள்ளலால் நிலை தடுமாறி விழ இருந்தபோது, அதனைக் கவனித்த ஒருவன் மின்னலெனப் பாய்ந்து காப்பாற்றுவதை (762) எடுத்துக் காட்டாக்கலாம்.

மனிதநேயர்

மனிதநேயமுடையாரைப் பெருமைப்படுத்த, கம்பர் பயன்கொள்ளும் மொழிகளும் எண்ணத்தக்கன.

முறையின் நூல் உணர்ந்தார் (9)
நல்லோர் (388), பெரியவர் (474)
கருதல் அரும் பெருங் குணத்தோர் (641)
வள்ளல் (762)
ஆய்ந்து உணர் கேள்வி அருந்தவர் (1262)

எனப் பொதுநிலைக் குறிப்புகள் அமைகின்றன. கதை மாந்தருள் தயரதனை,

> அறன் ஒன்றும் திருமனத்தான் (243)
> தருமத்தின் கவசத்தான் (650)
> மனுவென்ற நீதியான் (650)
> வழுவில் சிந்தனையினான் (1046)

என்றும் விசுவாமித்திரரை,

> கோது இலாக் குணத்தான் (476)
> அவ்வியம் அவித்த சிந்தை முனிவன் (602)
> அறப்பொருள் உணர்ந்தோய் (603)

எனவும் இராமனை,

> நீதியான்
> பெருந்தகை (374)
> குணங்களால் உயர்ந்த வள்ளல் (479)

என்றும் வசிட்டரை,

> சான்றவர் சான்றவ (257)
> தருமம் மாதவம் போன்று ஒளிர் புனித (257)

என்றும் சிறப்பிக்கின்றார். இவற்றினின்றும் மனிதநேயமுடையார் நல்லோராக, பெரியோராக, வள்ளலாக, பெருங்குணத்தவராக, நீதியுடை நேர்மையாளராக, சான்றோராக, புனிதராக, அமைவர்; அவர்கள் முறையான கல்வியைக் கசடறக் கற்றுத் தெளிந்த சிந்தையர்; நல்லது கெட்டதைப் பகுத்துணரும் பண்பினர்; அறத்தை நன்கு அறிந்து அதனை மட்டுமே குறிக்கோளாக வாழ்வில் கொண்டவர்; சிறிதும் குற்றமற்ற மனத்தினர், பண்பினர் என்பன அவர்க்குரிய இயல்புகளாகப் பெறப்படுகின்றன. இவற்றால் இவர் சான்றோருள் சான்றோராக, உள்ளத்தின் ஒளி உருவிலும் எதிரொளிக்க இறைமை பொருந்திய புனிதராக விளங்குகின்றனர்.

மனிதநேய முரண்பாடுகள்

கம்பரின் மனிதநேய வரையறைகளில் சில முரண்பாடுகளும் தென்படுகின்றன. பிற உயிர்களுக்குத் தீங்கிழைத்தல் என்ற நிலையில் தாடகையை அழித்தல் மனிதநேயமாகத் தாடகை வதம் காட்டுகிறது. ஆனால் அரசர் குலத்தை வேரறுப்பதாக வஞ்சினத்துடன் எதிர்த்த பரசுராமனை இராமன்,

பூதலத்து அரசை எல்லாம் பொன்று வித்தனை என்றாலும்
வேதவித்து ஆய மேலோன் மைந்தன் நீ விரதம் பூண்டாய்
ஆதலின் கொல்லல் ஆகாது (1298)

எனப் பிழைக்கச் செய்வது முறையா? இன வேறுபாடு காரணமாகத் தண்டனையில் ஒரே குற்றத்திற்கு மாறுபட்ட தண்டனைகள் பொருந்துமா? மனிதநேயத்துள் இம் முரண் இடம் பெறலாமா என்பன போன்ற வினாக்கள் இங்கு எழுகின்றன. பரசுராமனுக்கு உயிராக விளங்கிய தவவலிமை அவன் குற்றத்திற்குத் தண்டனையாக அழிக்கப்பட்டது என்று அமைதி காட்டினும் இது மேலாய்விற் குரியது.

வையத்து உயிர்க்கு எல்லாம் உயிராக நல்லாட்சி புரியும் அம்பரீடன் 'வதைபுரி புருட மேதம்' செய்ய (599) நரபலி கொடுக்கத் துணிவது மனிதநேயமா? நரபலிக்கு உடன்பட்டு வந்தவனைக் காப்பாற்றக் (கனச் சேபன்) கோசிகன் (விசுவாமித்திரன்) தன் மைந்தர்களை அவனுக்குப் பதிலாகச் செல்ல வேண்டுவது மனிதநேயமாகுமா? அதற்கு அவர்கள் உடன்படாமையால், 'நீர் அடவிகள் தோறும் சென்றே ஒழுங்கு அறு புளிஞர் ஆகி உறுதுயர் உறுக' (605) எனச் சபித்தல் ஏற்கத் தக்கதா? - எனும் முரண் நிலையும் காணத்தக்கது. இங்கு இத்தொன்மத்தின் கதைப் பொருளைத் தவிர்த்து, 'ஒருவரைக் காப்பாற்றுவதற்காக மற்றவரைத் துன்புறுத்தல்' மனிதநேயமாகுமா என்ற கருத்தை மட்டும் நோக்குதல் தேவையாகிறது. இச்செயலும் மனிதநேயத்துள் முரண்பாட்டைச் சுட்டுவதாகவே இங்கு எண்ணப்படுகிறது.

இவை இன்று மறுக்கப்படுவதன் காரணமாக, மனித நேயத்திற்கு அளிக்கும் விளக்கம் காலச்சூழலுக்குத் தக மாறும் பெற்றியது எனக் கொள்ளலாம்.

மனிதநேயமின்மை

எவையெவை மனிதநேயமற்றன; மனிதநேயமின்மைக்குக் காரணங்கள் யாவை என்பனவற்றையும் கம்பராமாயணம் நல்குகின்றது.

அறத்திற்கு (நல்லனவற்றிற்கு) ஊறு விளைவித்தல் (379, 658); கொலை புரிதல் - மனித ஊன் உண்ணுதல் (380, 381), பிறருக்கு ஒருவர் உதவுவதைத் தடுத்தல் (425) ஊனமுற்றவரை இகழுதல் (427); நலிந்தோரைத் துன்புறுத்தல் (545); உயர்வு தாழ்வு கற்பித்தல் (595);

இருவர்க்கிடையே பகைமையைத் தூண்டி வேடிக்கை பார்த்தல் (1290) முதலானவை மனிதநேயமற்ற செயல்களாக உணர்த்தப்பட்டுள்ளன.

சமமாகப் போற்றத் தக்கவரிடையே கொள்ளும் அன்பில் வேற்றுமை காட்டுதல் (270), பிற நல்ல குணங்களையெல்லாம் இல்லையென்றாக்கும் வலிமை கொண்ட கஞ்சமனம் (363), சினம் (382),தன் விருப்பத்திற்கு உடன்படாமை (592-593, 401) பிறர் நலம் கண்டு கொள்ளும் பொறாமை (909), ஆணவம் எனும் தன் முனைப்பு (595) என்பன மனிதநேயமின்மைக்கான காரணங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன.

நிறைவுரை

மேற்கண்டனவற்றால்,

“அன்பை மூலதனமாக்கி
அறிவைப் பயன்படுத்தி
செய்வன சீர்தூக்கி
உழைப்பை உரமாக்கி
யாருக்கும் எதற்கும் எப்பொழுதும்
இயன்றதைக் கொண்டு இயன்றவரை
உதவுதல் மனிதநேயம்”

என்பது பெறப்படும். கம்பராமாயணத்தை முழுமையாகக் கற்கும் பொழுது மேலும் பல எண்ணங்கள் இணையப் பெரிதும் இடனுண்டு. கம்பன் கதை நிகழ்வுகளையும், கதை மாந்தரையும் தனித்தனியே மனிதநேய நோக்கில் ஆய்வு செய்யும் பொழுது மனிதநேயம் பற்றிய கருத்துகள் தெளிவாகும். கம்பரின் மனிதநேயமும், மனிதநேயத்திற்கு, மனிதத்திற்கு அவரளிக்கும் விளக்கமும் சிறப்பிக்கப்படும். எவ்வகை ஆய்விற்கும் இடங்கொடுக்கும் கம்பரின் தனிச்சிறப்பும் மேன்மையுறும்.

குறிப்புகள்

1. Our prayer is the man everywhere will learn finally, to live as brothers, to respect each other's differences, to heal each other's wounds, to promote each other's progress and to benefit from eachother's knowledge.

   -Adlai Ewing Stevenson

The International Dictionary of Thoughts; J.G. Ferguson Publishing Company, Chicago; 1969; p. 100.

******

பாரதியார் கவிதைகளில் மனிதநேயம்

ம. பெரியசாமி
ஆய்வாளர்

நவயுகக் கவி, புதுக்கவிதையின் தந்தை, மகாகவி என்றெல்லாம் போற்றப்படும் சி. சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளிலிருந்து மனிதநேயக் கருத்துகளை, இக்கட்டுரை வெளிக்கொணர முனைகிறது.

பாரதியார் 1882இலிருந்து 1921 வரை வாழ்ந்தவர். 1904இலிருந்து 1921 வரை பதினேழு ஆண்டுகள் கவிதை, கட்டுரை, சிறுகதை, காப்பியம் என்று பல வகையான இலக்கிய ஆக்கங்களில் திறமை பெற்றவராக விளங்கினார். இலக்கியம் படைப்பதைத் தொழிலாகக் கொண்டு நாட்டுக்கு உழைத்துப் போந்தார்.

மனிதநேயம்

'மனிதன் மனிதனை மதித்துச் செலுத்தும் அன்பு' என மனிதநேயத்திற்கு விளக்கத் தருகிறது க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.

மனிதநேயம் என்கிற இச்சொல் ஒரு மனிதன் பிற மனிதரிடத்துக் காட்டும் அன்பு, இரக்கம், கருணை என்ற வகையில் அமைகிற humanity என்னும் ஆங்கிலச் சொல்லின் இணையான தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

இச்சொல்விற்கான பொருள் விளக்கம் அதனுடைய இயல்பை உணர்த்துவதாக அமைகிறது. இதில் ஒன்று, துன்பப்படும் மனிதனைப் பார்த்தவுடன் அவனுக்கு உதவி செய்வது; அவன் மீது பச்சாதாபம் காட்டுவது; அவன் நிலைகண்டு வருந்தித் துன்பப்படுவது.

மற்றொன்று மனிதனின் துன்பத்திற்கான காரணகாரிய உறவைத் தேடுவது. அதன் வழி துன்பக் காரணிகளின் மூலவூற்றைக் கண்டு அதனை அழிப்பது. இது அனைத்து மனிதர்களும் இன்பமுடன் வாழ்வதற்கான சமூகச் சூழலை ஏற்படுத்த உழைப்பது என்பதாகும்.

முதலில் கூறியதற்கும் பின்னதற்கும் வேறுபாடுகள் நிறைய உண்டு. பின்னது,

> "நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்." (திருக்குறள் 948)

என்ற வள்ளுவரின் கூற்றுக்கு ஒப்பச் செய்வது. பாரதியார் பயணப்பட்ட பாதை மேற்சொன்ன வள்ளுவர் காட்டிய பாதை என்பதைச் சுதந்திர நாட்டில் வாழும் நாம் தெளிவாக உணர முடிகிறது.

பொதுவாக, கலை, இலக்கியம் ஆற்றும் பணிகள் இத்தகையதெனக் கூறுவர்.

> "மனிதனுக்கு மனிதன் உள்ள உறவையும், மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவையும், அடிநிலையாகக் கொள்வதே கவிதை. இந்த உறவின் தாற்பரியத்தையும், மர்மத்தையும் ஊடுருவிக் காணவே பெரும்பாலான கவிஞர்கள் விழைகின்றனர்"[2]

எனக் கவிஞர் தம் இயல்பு பற்றிப் பேசுவார் கலாநிதி க. கைலாசபதி.

உலக இலக்கிய அரங்கில் பலரும் போற்றக் கூடிய நிலையில் இக்கருத்து அமைவதைக் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக, சோவியத் ருஷ்யாவின் இலக்கிய கருத்தா ஒருவர் இவ்வாறு கூறுகிறார்.

"ஒரு மனிதன் தன்னிலும், மக்களிலும் சமூகத்திலும் இருக்கக் கூடிய சிறப்பான எல்லாவற்றையும் பற்றி அறியவும், நேசிக்கவும், கவலைப்படவும் செய்வதற்காக, இலக்கியம் தனது சிலுவையைத் தியாகத்தோடு எடுத்துச் செல்லவும், வாழ்வின் சிரமங்களுடன் தலையிடவும் வேண்டும். இதையே கலையின் உண்மையான நோக்கமாகக் கருதுகிறேன்"[3]

இக்கருத்தை அடியொற்றியே பாரதியார் கவிதைகளில் காணப்படும் மனிதநேயக் கருத்துகளை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

பாரதியாரின் தனிச் சிறப்பு

இந்தியாவெங்கும் சுதந்திரப் போராட்டம் பரவி மக்களிடையே வெள்ளையர் ஆட்சிக்கு எதிரான மன உத்வேகம் எழுந்த காலத்தில் வாழ்ந்தவர் பாரதியார். இக்காலத்தில் வாழ்ந்த பல புலவர்கள், தூது, உலா, மடல் என்று காலத்திற்குப் பயன்தராத பல செய்யுள்களை எழுதி மகிழ்ந்து கொண்டிருந்தனர். ஆனால் பாரதியார்

இந்திய மக்களின் அடிமைப்பட்ட வாழ்வை, அவர்களது துயரத்தை, அவமானப்படுத்தப்பட்ட வாழ்வை விரும்பவில்லை. எனவே மக்கள் இன்பமும் சுதந்திரமும் அடைவதற்குத் தேவையானவற்றைக் கவிதையாக்கினார்.

இவர் இந்திய மக்களின் துயருக்கெல்லாம் காரணமாக அமைந்திருந்த வெள்ளையரின் காலனிய ஆட்சியை எதிர்த்துப் போராடும் மனவலிமையை உருவாக்கக் கவிதை புனைந்தார். இதில்தான் மற்றவர்களுக்கும் பாரதிக்கும் உள்ள வேறுபாட்டையும் சிறப்பையும் அறியமுடிகிறது. எனவே அவர் போற்றுதலுக்கு உரியவராகிறார்.

மனிதன்

பாரதியார் மனிதனைப் பாடினார். அவர் கூறும் மனிதன் அடிமைத் தனத்தை ஒப்புக் கொள்ளாதவன். சுதந்திரமாக வாழ்வதற்குப் போராடுகிறவன். வசதியும் வாய்ப்பும் கிடைக்கிறது என்பதற்காக, சொந்த நாட்டு மக்களுக்குத் துரோகம் இழைத்து விட்டுக் கும்பினியர் (கம்பெனியர்) தரும் வளமான வாழ்வை நாடாதவன். வலிமை குன்றிய நிலையில் உள்ள மனிதனை அடிமையாக நடத்தக் கூடாது என்பதில் உறுதியானவன். இத்தகைய சிந்தனை உள்ளவர்களைச் சாதி, மதம், நாடு, இனம் என்பதைக் கடந்து, உலகளாவிய மனிதநேயத்தைப் போற்றும் அருளாளர்களாகக் கருதுபவன். வள்ளுவரும் இக்கருத்தை ஒருவாறு தன் சின்னக் கவிதையில் சுருக்கமாகக் கூறுகிறார்.

> **"பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்புஒவ்வா**
> **செய்தொழில் வேற்றுமை யான்** ***(திருக்குறள். 972)***

உலகில் தோன்றிய மனிதர்கள், குழந்தைப் பருவம் தொடங்கி முதியவர் ஆகும் வரை பல்வேறுபட்ட குணநலன்களை உடையவராக வாழ்கின்றனர். அத்தகையோர் கொள்ளத் தக்கன எவை, கொள்ளத் தகாதன எவை என்பது பற்றிப் பாரதி வழி நின்று காண்போம்.

சாதி எதிர்ப்பு

இந்தியச் சமூகத்தின் ஆற்ற முடியாத புண்ணாக இருப்பது சாதிக் கொடுமை. சாதி முறை பிறப்பிலேயே மேலோர், கீழோர் எனத் தீர்மானிப்பதாகும். சாதிமுறை சரிதான் எனக் கூறினால் செயலுக்கும் அதன்வழிக் கிடைக்கும் பயனுக்கும் மதிப்பு இழந்து, சமூகம் அழிந்து விடும். இவ்வாறான சமூகத்தில் சம ஆத்ம பலம் கொண்ட மனிதர்கள், மனித நெறியில் நின்று வாழ்வது இயலாத காரியம் ஆகி விடும்.

இதே போன்று வெள்ளையர் தங்களை ஐரோப்பியர் என்றும் தாங்களே உயர்ந்தவர்கள் என்றும் உலகை ஆள்வதற்குத் தகுதிபடைத்தவர்கள் என்றும் கூறுகின்றனர். இவ்விரண்டுமே மனிதத் தன்மை அற்றவை, நம் நாட்டுத் தேள் கொட்டினால் விசம் இல்லாமல் போய்விடாது; வெள்ளையனின் குண்டாந்தடியும் மண்டையைப் பிளக்காது, பூ மாரி பொழியாது; என்பதைப் பாரதியார் உணர்ந்து இரண்டையும் சாடுகிறார். சுதந்திரம் பெற்ற இந்தியாவில் இவை இரண்டும் மண்மூடிப் போனதாக நினைத்துப் பள்ளு பாடுகின்றார்.

"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே –வெள்ளைப்
பரங்கியரைத் துரையென்ற காலமும் போச்சே"

(சுதந்திரப் பள்ளு)

இதுதான் பாரதியாரின் சமத்துவ சமூக நோக்கின் மாசற்ற மனிதநேயப் பண்பாகும்.

மானிடராய்ப் பிறந்து சாதியிலே உயர்வு, தாழ்வு பாராட்டிக் கொண்டிருந்தால், ஒரு தேசத்து மக்களை, அத்தேச மக்களே அடிமைப்படுத்திக் கொண்டிருந்தால், அது நியாயப்படுத்தப்பட்டால், பிறநாட்டினருக்கு அடிமைப்படுதல் என்ற நிலை நியாயமானதாக மிகமிக எளிமையானதாக மாறிவிடும். எனவே இக்கேடு இந்திய மக்களிடையே உள்ளவரை வெள்ளையருக்குதான் அது நன்மை பயக்கும்; இந்திய மக்களுக்குத் துன்பம் உண்டாக்கும் என்று சுட்டிக் காட்டுகிறார் பாரதி.

"ஜாதிச் சண்டை போச்சோ? – உங்கள்
சமயச் சண்டை போச்சோ?" (தொண்டு செய்யும் அடிமை)

என்று வெள்ளை அதிகாரி சுதந்திரம் வேண்டுவோரைக் கேட்கிறான். மேலும், சுதந்திரம் கேட்கிறீரே உமக்கு அந்தத் தகுதி உண்டா என்று ஏளனமாகக் கேட்கிறான்.

சேர்ந்து வாழ்வீரோ – உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ? (தொண்டு செய்யும் அடிமை)

இக்கவிதைகளை எழுதுபவர் பாரதியார்தான். ஆனால் அவர் வெள்ளையரின் வாயிலாக இந்திய மக்களின் வாழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். மனிதனை மனிதன் அடிமைப்படுத்தக் கூடாது, அது மடமை. அவ்வாறு செய்தால் அத்தேசம் வலிமைகுன்றி, பஞ்சமும், நோயும் தலைவிரித்தாடும். பிறநாட்டார் அதை எளிதில் கைப்பற்றி விடலாம். வெள்ளையர் நம்மை அடிமைப்படுத்தியதற்கு

இந்திய நாட்டிற்கு உள்ளேயே இருந்த ஒற்றுமையின்மையைச் சுட்டிக் காட்டுவதை அறியமுடிகிறது.

இதற்கு என்ன தீர்வு? எவ்வாறு இத்தேசத்தில் உள்ள சாதியை அழிப்பது? உயர்ந்தவர் யார்? தாழ்ந்தவர் யார்? என்பதைத் தீர்ப்பதன் மூலமே முடியும் என்பதை அறிகிறார் பாரதி. சாதியை ஏற்றுக் கொண்ட பெரிய மனிதர்களிடம் இதனைக் கூறாது தெய்வத்தன்மை கொண்ட குழந்தைகளிடம் கூறுகிறார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!
நீதி, உயர்ந்த மதி, கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்" (பாப்பா பாட்டு)

' Child is the father of a Man' இன்றையக் குழந்தை நாளைய தந்தை என்ற வகையில் நாளைய சமூகத் தலைவன் உணர்ந்தால் பயனை மிகுவிக்கும் என்பது பாரதியாரின் எண்ணம்.

ஆண் பெண் சமத்துவம்

இந்தியச் சமூகம் பெண்களை வீட்டிற்குள்ளே பூட்டி வைத்திருந்தது; அதை நியாயப்படுத்தியது. பெண்களுக்கென மனம், சுதந்திரம், விருப்பம் என்பன உண்டு என்று சிந்தியாது, பெண் ஆணுக்கு அடிமைப்பட்டவள், அதுவே நீதி என்று வேதாந்தம் பேசிக் கொண்டிருந்தது. அதாவது பெண்களுக்கு உரிமை ஒரு விழுக்காடு தரலாமா! அல்லது இரண்டு விழுக்காடு தரலாமா என்று மந்திராலோசனை செய்து கொண்டிருந்தது.

பாரதி இச்சமூகத்தைப் பார்த்து இகழ்ந்து சிரித்து, சமத்துவம் ஒன்றே மனிதநேயம்; மனித நாகரீகம் என்று கும்மி கொட்டி ஆடுவதைக் காண முடிகிறது.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!"
(பெண்கள் விடுதலைக் கும்மி)

இக்கவிதை மனிதநேயம் மிக்கதாக, காதில் தேன் வந்து பாய்வதாக அமைவதை உணர முடிகிறது.

கற்பும் பாரதியும்

கற்பு என்பதைப் பேசிப் பெண்களை அடக்கி வைத்திருந்தனர். பெண்களின் கவசம் கற்பு என்றும் அதைத் தவறாது காப்பது உயர்நீதி என்றும் கூறினர். இதில் தவறினால் தண்டிக்கப்பட வேண்டுமென்றனர். மேலும் பெண்ணைப் பழித்தும் அவமானப் படுத்தியும் வந்தனர். ஆனால் ஆண்களோ பலபெண்களுடன் உறவாடுவதைப் பரத்தையர் ஒழுக்கம் என்று கூறி ஒழுகி வந்தனர். இந்த அநீதியை எதிர்த்துச் சரியான நீதி எது என்பதைச் சொல்லுவதற்குப் பாரதியாருக்கு விருப்பம் உண்டானது. இவ்வொப்பற்ற மனிதநேயத்தை வெளிப்படுத்துகிறது இக்கவிதை,

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்;
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"
(பெண்கள் விடுதலைக் கும்மி)

காதலை மானுடத் தலைமை இன்பம் என்று பாடினார் பாரதியார். காதலில் உண்டாகும் இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி என்பதில் இருவருக்கும் சமமான பங்கு உண்டு. ஆனால், இதற்கு மாறாகத் துன்பம், ஏமாற்றம் இவற்றைப் பெண்ணுக்கு மட்டுமே கூறினர். காதலில் தோற்றால் பெண் இகழப்பட்டாள். ஆனால் ஆண்கள் அடுத்த காதலுக்குத் தயாராவதற்குச் சமூகம் இடம் தந்தது. இதை மாற்றும் பொருட்டு பாரதியார் தன் கண்ணம்மா வாயிலாக, ஒரு வழி சொல்லுகிறார்,

"ஆற்றங் கரையதனில் முன்ன மொருநாள் - எனை
அழைத்து தனியிடத்தே பேசிய தெல்லாம்
தூற்றி நகர்முரசு சாற்றுவ னென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம்"
(கண்ணன் - என் காதலன் - 4)

ஏமாற்றப் பார்க்கும் ஆண்மக்கள் தப்பிக்க இயலாது என்பதும், பெண்களும் தங்கள் காதலைச் சமூகத்தின் முன் வைத்துப் பாதுகாப்பைத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதும், பெண் தான் விரும்பும் ஆடவனைத் துணிந்து சமூகத்தின் முன் வைக்க வேண்டும் என்பதும் அவரது உட்கிடையாக உள்ளது. அதாவது உரிமையும் விடுதலையும் அடிமைப்பட்டோருக்கும், மறுக்கப்பட்டோருக்கும் உரியது என்பதே கவிஞர் கூறும் செய்தியாக உள்ளது.

சமத்துவம் உள்ள இரண்டு ஆத்மாக்களின் அல்லது மனங்களின் இணைவால் மட்டுமே காதல் மலரும் என்பதையும் பாரதியாரின் கவிதை கூறுகிறது.

ஆனால், சிற்றிலக்கியங்கள் குறிப்பாக, உலா, கலம்பகம், குறவஞ்சி போன்ற நூல்கள் மற்றும் இக்காலத்தில் (பின்) நவீனத்துவக் கவிதைகள் பெண்ணைப் போகப் பொருளாகவும், உடல் சார்ந்த கவர்ச்சிப் பிம்பமாகவும் காட்டுகின்றன. ஆனால் பாரதியார் இதை மறுக்கிறார். கவிதையிலேயே பதிலுரைக்கின்றார்.

காதல் செய்யும் இருவரும் இன்பம், துன்பம், இவற்றில் பங்கெடுத்து வாழுங்காலத்தில் இருவரும் சமமானவர்கள் என்று உணரவேண்டும் என்கிறார். இவ்வுணர்வு உள்ள போது மட்டுமே காதலும் இருக்கும்; வாழ்வும் சுவையாகும் என்பதைக் கவிதையாக்குகிறார்.

வானமழை நீயெனக்கு, வண்ணமயில் நானுனக்கு
பானமடிநீ எனக்கு, பாண்டமடி நானுனக்கு
ஞானவொளி வீசுதடி, நங்கை நின்றன் சோதிமுகம்
ஊனமுறு நல்லழகே, ஊறுசுவையே! கண்ணம்மா!

(கண்ணம்மா – என் காதலி – 6)

மேல் கீழ் என்று கூறினால் காதல் மலராது என்றும் காதலின் நுட்பம் சம ஆத்மாவாகக் கருதுவதிலே உள்ளது என்றும் பாரதியார் கூறுவதை அறியமுடிகிறது.

பக்தி

ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் ஏதாவது ஒரு வகையில் இறைபற்றிய நம்பிக்கையையும், பக்தியையும் கொண்டுள்ளனர். இந்திய மக்கள் பலவகையான நம்பிக்கைகளையும், பலவகையான கடவுளரையும் கொண்டுள்ளனர். இவ்வேறுபாடு இந்தியத் தேசத்தின் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே ஆகும். ஆனால், வெள்ளையர் இவ்வேறுபாட்டைப் பயன்படுத்தி மக்களுக்குத் தவறான வழி காட்டினர். மூடப்பழக்க வழக்கங்களில் ஆதாயம் தேட முனைந்தனர். அவ்வேளையில் இந்திய மக்களின் ஆத்ம வெளிப்பாடாக இருந்த கவிஞர் இதை உணர்ந்து சாடுகிறார்.

பாரதியாருக்குக் கடவுள் பக்தி உண்டு. அவரது கடவுள் பக்தி மறு உலகில் மோட்சம் அடைய வழி சொல்வது அல்ல. இத்தரைமீது, இந்நாளில் வாழ்பவர்களுக்கு வழி சொல்லுவது. அதனால்தான் இவர் மக்கள் வாழ்வு சுகப்பட வல்லமை தரவேண்டும் என்று சிவசக்தியிடம்

வரம் வேண்டுகிறார். ஆனால் வெள்ளையரின் கைக்கூலிகள் கூறிய மறு உலகில் மோட்சம் என்பதை மறுத்துச் சங்கு ஊதுகிறார்.

> **செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்**
> **சேர்ந்திடலா மென்றே எண்ணியிருப்பார்**
> **பித்த மனிதர், அவர் சொலுஞ் சாத்திரம்**
> **பேயுரையா மென்றிங் கூதேடா சங்கம்!** *(சங்கு)*

தருமத்தை நிலை நாட்டப் பாரதப்போரில் கவுரவர்களின் வாழ்வை முடிக்கப் பார்த்தன் ஊதிய சங்காக பாரதியின் சங்கு முழங்குவதை உணர முடிகிறது.

மனிதர்கள் சமத்துவத்தோடு வாழவேண்டும் என்பது கருதியே கடவுள் அவதாரம் கொடுக்கப்பட்டது. உலகில் உள்ள வேதங்கள் அனைத்திலும் இதுவே அடிநாதமாக இருப்பதை உணர்ந்த பாரதியார், இந்திய மக்களைப் பிரிக்கத் தெய்வத்தில் வேற்றுமை கூறிச் சதி செய்த வெள்ளையருக்குத் தக்க பதிலை வழங்கி உள்ளார்.

> **ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி**
> **அலையும் அறிவிலிகாள் – பல்**
> **லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுன்**
> **டாமெனல் கேளீரோ?** *(அறிவே தெய்வம்)*

சமூகத்தில் அறிவுக்குறைவு ஏற்படும் போதெல்லாம், கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் மனிதருக்குள்ளே பகையும் வேறுபாடும் தோன்றி ஒருவரொருவரை ஏய்த்தும் மாய்த்தும் வாழ்ந்து வந்ததற்கு மாற்றாகச் சுத்த அறிவை ஆயுதமாகப் பாரதியார் தன் கையில் எடுத்துள்ளார். இதுபோன்ற கருத்துகளே பாரதியாரின் பாடலில் புதைந்துள்ளது.

நாட்டுப்பற்று

பாரதியைத் தேசியக் கவியாக்கியது அவரது நாட்டுப்பற்றும் அதன் முன்னேற்றத்திற்கு வாழ்நாள் இறுதி வரை போராடியதும்தான்.

நாட்டுப்பற்றில் மனிதநேயத்தைப் பாடியது எவ்வாறு என்று வினவினால், எந்நாட்டு மக்களிடமும் வேற்றுமை பாராட்டாது நேயம் கொண்டுழைத்ததுதான். நமக்குள்ளே உயர்வு தாழ்வு கற்பிக்கும் சாதியையும் மத விரோதங்களையும் கண்டித்தார். அதே நேரத்தில் அந்நியர் செய்யும் அடிமைத் தனத்தையும் எதிர்த்தார். இங்குதான் அவர் மனிதர் எல்லோரிடத்தும் அன்பு பாராட்டுதலை அறியமுடிகிறது.

"மேலும், உலகத்து மனிதர்களெல்லோரும் ஒரே ஜாதி. "இந்தச் சண்டையில் இத்தனை ஐரோப்பியர் அநியாயமாக மடிகிறார்களே" என்பதை நினைத்து நான் கண்ணீர் சிந்தியதுண்டு. இத்தனைக்கும் சுதேசியத்தில் கொஞ்சம் அழுத்தமானவன். அப்படியிருந்தும் ஐரோப்பியர் மடிவதில் எனக்குச் சம்மதம் கிடையாது. எல்லா மனிதரும் ஒரே வகுப்பு"[4]

இக்கூற்றில் பாரதியின் உலகம் தழுவிய மனிதப் பண்பு வெளிப்படுகிறது. இக்கருத்து பாரதி கீதையின் வாயிலாகக் கண்டு எடுத்துக் கொண்டது.

"எல்லா உயிர்களிடத்தும் தன்னையும்
தன்னிடத்தே எல்லா உயிர்களையும் காண்பவனே
காட்சியுடையவன்"[5]

என்ற இச்சாரத்தை இவரது கவிதை வெளிப்படுத்தி நிற்கிறது. தன்னைப் போன்றும் தன் நாட்டு மக்களைப் போன்றும் மனிதனாக வாழ்வதற்குப் போராடும் சுதந்திரத்திற்குப் போராடும் உலக மக்களைக் கண்டு மகிழ்ந்து கவிதை படைத்துள்ளார். ருஷ்யப் புரட்சியைப் (1917) பாராட்டிக் கவிதை எழுதும் போதும் தன் நாட்டையும், தன் நாட்டு மக்களின் தேவையையும் இணைத்து விடுகிறார். இதனைப் பின்வரும் கவிதை காட்டுகிறது,

குடிமக்கள் சொன்னபடி, குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கூடியொன்றி லெழுந்தது பார்; குடியரசு சென்று
உலகறியக் கூறிவிட்டான் (புதிய ருஷ்யா)

இவ்வாறு குடிமக்கள் மேன்மையுற, இந்திய அறிவுஜீவிகளை அழைத்தார்.

இவ்வழைப்பிற்கு வராதவரைப் பின்வருமாறு சாடுகிறார்,

"பின்னரும் எண்ணிலாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்".
(சுதந்திர தேவியின் துதி)

போராட்டத்திற்கு வராதவர்களை அவ்வாறு கூறிவிட்டு வந்தும் சிலர் உதட்டளவில் 'வந்தே மாதரம்' என்று கூப்பாடு போடுவதை எள்ளி நகையாடுகிறார்.

"தாயைக் கொல்லும் பஞ்சத்தை தடுக்க முயற்சியுறார்
வாயைத் திறந்து சும்மா – கிளியே
வந்தே மாதர மென்பார்"
(நடிப்புச் சுதேசிகள்)

மற்றவர்களை இவ்வாறு கூறிவிட்டுத் தன்னை எவ்வாறு கூறுகிறார் என்றால், மக்களின் அறியாமையை அகற்ற முடியவில்லையே; அவ்வறியாமையை அகற்றி விட்டால் வெள்ளையனை வெளியேற்றிவிடலாம். பிறகு, அனைவருக்கும் இன்பச் சுதந்திர வாழ்வு என்கிறார். ஆனால் மக்கள் நிலையோ இவ்வாறு உள்ளது.

"கஞ்சி குடிப்பதற்கிலார் – அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே – நிதம்
பரிதவித்து உயிர் துடித்துத்
துஞ்சி மடிகின்றாரே – இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே
(பாரத ஜனங்களின் தற்கால நிலைமை)

இக்கவிதையில் மக்களின் நிலைகண்டு நெஞ்சு வெதும்பிக் கண்ணீர் சிந்துகிறார். அவரே இதற்கு மாற்று ஒன்றைக் கண்டு கூறுகிறார்.

"மனிதர் அத்தனை பேருக்கும் போதுமான ஆகாரம் பூமிதேவி கொடுக்கும். பூமி தேவியின் பயனை நேரே கையாளத் தெரியாமல் பொறாமையாலும் அறியாமையாலும் தாறுமாறாக விழல் படுத்தி, சோறு தேடும் இடத்தில் சோறு தேடாமல், ஒருவர்க்கொருவர் கொல்ல வழிதேடி, பலர் வயிறு வாடச் சிலர் வயிறு ஜீர்ணசக்தியில்லாமல் போக மனிதர் பரிதாபமாகக் காக்கை யிலும் கடைப்பட்ட வாழ்வு வாழ்ந்து வீணே நசித்துப் போகிறோம். 'ஏழைகள் வருந்தினால் நமக்கென்ன? என்று நினைப்பவர் பரமமூடர். பலர் சௌகரியப்படும் வரை சிலர் சௌகரியம் அடைதல் இந்த உலகத்தில் சாத்தியமில்லை"[6]

மனித சமூகம் அனைத்திற்கும் பொருந்தும்படியான மனிதநேயக் கருத்தாக விளங்குகிறது.

இதே கருத்தை இவர் கவிதையிலும் தருகிறார்.

"முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுதுக்கும் பொதுஉடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக்குகொரு புதுமை" (பாரத சமுதாயம்)

இவ்வாறு பாரதியின் கவிதைகளில் நிறைந்து கிடப்பது மனிதநேயப் பண்பாகும்.

முடிவாக

மக்கள் அனைவரும் சமமானவர்கள். இதை மறுத்த உள் நாட்டுச் சாதிக்கொடுமையையும், மதவிரோதத்தையும், பாலியல் ஏற்றத் தாழ்வையும் கண்டித்தார். மனித சாதி ஒன்றே என்று இடித்துரைத்தார்.

ஐரோப்பிய வெள்ளைத் துரைத்தனம் எதிர்த்து வீழ்த்த வேண்டிய ஒன்று எனக் கருதிப் போராடினார். பாரதி வென்றதை இன்று நாம் அறிகிறோம்.

மனிதன் என்பவன் மேல் கீழ் அற்றவன். மனித ஆத்மா சமமான அன்பு கொள்ளும் போது மட்டுமே மனிதநேயம் மலரும். மக்கள் இன்பமான வாழ்வு வாழ்வர். இதுவே அவரது கவிதைகளில் விரவிக் கிடக்கும் கருத்தாகும்.

குறிப்புகள்

1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, தமிழ்-தமிழ்-ஆங்கிலம், முதற் பதிப்பு, 1992.
2. பாரதியார் ஆய்வுகள், க. கைலாசபதி, பக். 19
3. ஜமீலா (குறுநாவல்), ஜிங்கிஸ் ஐத்மாத்தவ் (மொழிபெயர்ப்பு), பக். 3.
4. பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பதிப்பகம், பக். 101.
5. பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பதிப்பகம் பக். 31.
6. பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பதிப்பகம், பக். 48.

******

"பாரதியின் பாஞ்சாலி சபதம்" காட்டும் மனிதநேயம்

சு. இரவீந்திரன்
ஆய்வாளர்

மனித நேயத்திற்கு அகராதிகள் பல்வேறு பொருள்களைக் கூறினும் அவையனைத்தும் மனதை அடிப்படையாய்க் கொண்டதே! நல்ல மனம் படைத்த மனிதன் மனித நேயத்துடன் செய்யும் ஒவ்வொரு காரியமும் காலத்தால் நிலைபெற்று மனித குலத்திற்கு மட்டுமின்றி உலகத்தில் தோன்றிய உயிர்களனைத்திற்கும் நன்மையைப் பயக்கின்றது. பிறிதொன்றை எதிர்பாராமல் செய்யப்படுகின்ற செயல்கள் மனித நேயச் செயல்களாக அமைகிறது. அது உணவாகவும் பொருளாகவும் ஏன் இலக்கியமாகவும் மன வாட்டத்தைப் போக்குகின்ற அத்தனையும் இதிலடங்கும். அது அவரவர் மனப்பக்குவத்திற்குத் தகுந்தவாறு வேதனையிலிருந்து விடுபடுவதற்கும், நிம்மதி பெறுவதற்கும் வாழ்வுக்கு வழிகாட்டு வதற்கும் முன்னுதாரணமாக அமைந்து அவர்களின் இருண்ட வாழ்வை ஒளிமயமாய் ஆக்குகின்றது.

அந்த வகையில் புவியனைத்தும் போற்றிட வான் புகழ் படைத்த, தமிழ் மொழியைப் புகழில் ஏற்றிய மகாகவி பாரதியார் அவர்களால் எழுதப்பெற்ற குறுங்காவியமான பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் குறிப்பிட்டு இருப்பதுபோல் தமிழ் மொழிக்கு, தம்மை சூழ்ந்திருந்த சமுதாயத்திற்கு, புகழ்சேர்க்க அல்லது சமுதாயத்தில் காணப்பட்ட குறைகள் நீங்க, தாய்நாடு விடுதலையடைவது போன்ற பல்வேறு சிந்தனைகளை மனத்தினுள் வைத்துக் காலத்தால் அழியாத குறுங்காவியமான, "பாஞ்சாலி சபதம்' முன்னணியில் நிற்கிறது'. வியாசர் எழுதிய மகாபாரதத்தைத்தழுவி பதினான்காம் நூற்றாண்டில் வில்லிப்புத்தூரார் பாரதம் எழுதினார். வியாசரைத் தழுவியே இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாரதியார் மகா பாரதத்தின் ஒரு சருக்கத்தை விரித்து பாஞ்சாலி சபதமாக எழுதினார். அடிமைப்பட்ட இந்தியாவைக் கண்ட பாரதி மக்களுக்கு விடுதலை உணர்ச்சியை ஊட்டுவதையே நோக்கமாகக் கொண்டு தம் கூற்றாகவே எடுத்துக்கூறும் உத்தியைக் கையாண்டு வெற்றி கண்டிருக்கிறார்.

"சூதுபோர் சருக்கம்" என்பது வில்லிபுத்தூரார் இட்டபெயர். பாரதி சூட்டிய பெயர் "பாஞ்சாலி சபதம்", பாகவதர்களோ

"திரௌபதை மானசம்ரட்சணம்" என்று பெயர் தந்தனர். எது எவ்வாறிருப்பினும் கொடுங்கோலன் அவையிலே நின்று சபதம்செய்த பாஞ்சாலியின் வீரத்தை, அடிமைப்பட்டு அந்நிய அரசுக்கு அடங்கி வாழும் பாரத மக்களுக்கு உணர்ச்சியூட்டி அவர்களையெல்லாம் விடுதலைக்குப் போராடும் வீரர்களாக மாற்றும் நோக்குடன் தம்குறுங்காவியத்திற்குப் பெயர் தந்தான் என்பார் ம.பொ.சி. (தொல்காப்பியத்திலிருந்து பாரதியார் வரை எனும் நூல்). பெண்மைக்குச் சிறப்பூட்டவே பாஞ்சாலி சபதம் எனப் பெயர் சூட்டினார் எனக்குறிப்பிடுகிறார் ப. ஜீவானந்தம் என்னும் ஜீவா. (பாரதி வழி எனும் நூல்).

பாரதியார் தமது புலமைத் திறமைக்குப் பாஞ்சாலி சபதத்தைச் சான்றுகாட்டுகிறார், குவளைக் கண்ணன் என்னும் பெயருடைய தம் நண்பருக்கு எழுதிய கடிதத்தில், "நான் என்னுடைய பாஷையில் என் முழு மூளையையும் கசக்கிப்பிழிந்து "பாஞ்சாலி சபதம்" எழுதியிருக்கிறேன்" என்று குறிப்பிடுகின்றார். (ம.பொ.சி.யின் நூல்) பாரதியார் தாம் கருதிய பெண் விடுதலை, நாட்டு விடுதலை ஆகிய வேட்கைகளைத் தணிக்கவே "பாஞ்சாலி சபதம்" என்னும் இக்காவியத்தைப் படைத்துள்ளார் என்பதுதான் பேருண்மையாகும்.

சமுதாயத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளில் ஒன்றிக் கலக்கும் எதார்த்த வாதிகளின் படைப்புகள் நடப்பியலைத் தெளிவாய் உணர்வதற்கு அடிப்படையாய் அமைகிறது. ஒவ்வொருவரும் உரிமையுடன் வாழவேண்டும் என்பதே சமுதாய நோக்கமாகும்; அதுவே இலக்கியத்தின் கொள்கையுமாகும். உரிமை மறுக்கப்படும்போதோ அல்லது அதற்கு ஊறு நேரும்போதோ ஏற்படும் விளைவுகள் சீர்திருத்த இலக்கியங்களாகவும், புரட்சி இலக்கியங்களாகவும் மலர்கின்றன. உரிமையை அனுபவிக்கும்போது எழும் உணர்வுகள் அழகியல் இலக்கியங்களாக மலர்கின்றன. நெடுங்காலமாக உரிமை மறுக்கப்பட்டு வரும் பெண்ணுலகையும் அடிமையுற்ற இந்திய மக்களைத் தட்டி எழுப்பவும், இந்தியத் தாயை ஒரு பெண்ணாகவும் பாரதி பார்த்தாலும் பாஞ்சாலியைப் பாரத அன்னையாகவே உருவகம் செய்து இக்காவியத்தை வழங்குகிறான்.

இக்குறுங்காவியத்தில் பெண்ணியத்தின் கூறுகள் பல அமைந்துள்ளன. தன்னுரிமையுணர்வு, சமத்துவத்திற்காகப் போராடுதல், பாலின வேறுபாடு களைதல், ஆளுமைத்திறமையை வெளிப்படுத்துதல், அஞ்சாமை போன்ற விடுதலைக் கூறுகள் அனைத்தும் பாஞ்சாலி சபதம் மூலம் வெளிப்படுகிறது.

கதைச்சுருக்கம்

இந்திரப்பிரத்த நகரில் பாண்டவர்கள் இயற்றிய இராசசூய வேள்விக்கு வந்திருந்த துரியோதனன் மயனால் அழகிய வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்ட தருமபுத்திரரின் சபா மண்டபத்தைக் காணச் சென்று பொய்த்தோற்றத்தின் காரணமாக நிலைதடுமாறுகிறான். பளிங்கு என நினைத்துத் தடாகத்தில் விழுகிறான். இதைக் கண்ட பாஞ்சாலி சிரித்துவிடுகின்றாள். ஏற்கனவே பொறாமை என்னும் வன்னெஞ்சுணர்வு புழுங்கியிருந்த துரியோதனன் பாண்டவர்கள் மீது வெறுப்புக்கொண்டு பகையுணர்வுக்கு ஆட்கொள்ளப்படுகிறான். அஸ்தினாபுரம் போய்ச்சேர்ந்தபின் தன் மாமன் சகுனி, தன் தம்பி துச்சாதனன், புறஞ்சுவர் கோலம் செய்யும் கர்ணன் ஆகியோருடன் பாண்டவர்களுடைய வலிமையை எவ்வாறு அடக்கவேண்டும் என்று ஆலோசனை நடத்தினான்.போரிட்டுப் பாண்டவர்களை வெல்லவேண்டும் என்று கர்ணன் கூறினான். ஆனால் சகுனி ஏற்கவில்லை. சூழ்ச்சியினால்தான் பாண்டவர்களை வெல்ல வேண்டும் என்று கூறினான். அவனது ஆலோசனையின்படி தேவலோகத்திலும் இல்லையென்று சொல்லும்படியான அழகான சிற்ப வேலைப்பாடு கொண்ட ஒரு மண்டபத்தைக் கட்டி முடிக்கின்றனர். அதைப் பார்க்கவரும்படி பாண்டவர்களை அழைக்க வேண்டும்; நயமாகப் பேசிச் சூதாடி அவர்கள் நாட்டைக் கைப்பற்றிக் காட்டிற்கு அனுப்பவேண்டும் என்று முடிவுசெய்கின்றனர்.

தந்தை திருதராட்டிரன் அனுமதியும் பெற்றபிறகு சிறியதந்தை "விதுரன் பாண்டவர்களை அழைத்து வர வேண்டும்" என்றதும் தமையன் கட்டளையை மீற முடியாத நிலையில் அங்குச்சென்று திருதராட்டிரன் பாண்டவர்கட்குக் கொடுத்த அழைப்பு மடலை பாண்டவர்களிடம் கொடுத்ததோடு சூதாடத்தான் கௌரவர்கள் அழைக்கின்றார்கள் என்ற உண்மையையும் எடுத்துக் கூறுகிறான். கௌரவர்களின் சதியைப் புரிந்துகொண்ட தம்பியர்கள் நால்வரும் கூடாது என்றனர். தருமனோ பெரியப்பாவின் கட்டளையை மதிக்கவேண்டும் என்கிறான். வருவது எதுவாயினும் நம்மால் தடுக்க முடியாது; விதியே வலியது என்று கூறிப் பயணத்திற்கு ஆயத்தமானார்கள்.

தங்கள் தர்மபத்தினி திரௌபதியோடு (பாஞ்சாலி) அஸ்தினாபுரம் வந்து விடுகின்றனர். பாண்டவரை வரவேற்று உபசரித்தபின் மறுநாள் பாண்டவர்கள் சபைக்கு வரவழைக்கப்பட்டு நன்றறியாத சகுனி சூதாட அழைக்கின்றான். தருமமே உருவான

தருமன் மறுக்கிறான். சகுனியோ மன்னர்முன்னே நினை அழைத்துவிட்டேன் "சொல்லுக வருவதுண்டேல், மனத்துணிவு இல்லையெனில் அதுவும் சொல்லுக"[1] எனப் பலவாறு வஞ்சக நெஞ்சத்துடன் ஏளனம் செய்து சூதுக்கு ஆளாக்குகிறான். சூதுக்கு இணங்கி ஒவ்வொன்றையும் இழக்கிறான் தருமன். சகுனி தருமனை நோக்கி நாட்டை வைத்து ஆடுமாறு கூற, சூது மீண்டும் தொடரத் தருமன் நாட்டையும் இழக்கிறான். தருமன் செல்வம் முற்றும் இழந்ததால் தம்பியரைச் சூதில் வைக்குமாறு சகுனி கூற, அதுகேட்ட கர்ணன் நகைக்க, சபையோர் கண்ணீருதிர்க்கத் தருமன் நெஞ்சம் கலங்குகிறான்.

சகாதேவன், நகுலன், பார்த்தன் (அருச்சனன்) வீமன் என்று தம்பியர் அனைவரையும் அவர்கள்தம் பெருமை கூறிச் சூதில் வைத்து இழக்கிறான். பின்னர்த் தன்னைத்தானே பணயம்வைத்து மோசச் சகுனியிடம் தோற்றுத் தலை குனிந்து நிற்கையில் துரியோதனன் ஆராவரிக்கின்றான். சகுனியோ ஐவர்மேவிடும் தேவியாம் பாஞ்சாலி அதிட்டமுடையவள் ஆகையால் அவளை வைத்தாடினால் தோற்றதனைத்தும் மீண்டும் பெறலாம் எனக் கூறக் கேட்டக் கெடுமதியாளன் துரியோதனன் பெரிதும் உவகை கொள்கிறான். நான்காவது சருக்கமாகிய துகிலுரிதல் சருக்கத்தின் தொடக்கத்தில் சூதில் திரௌபதியை இழக்கிறான் தருமன். திரௌபதியைத் துரியோதனன் மன்றத்திற்கு அழைத்துவரச் சொல்ல, தேர்ப்பாகன் பணிக்கப்பட்டு, திரௌபதியிடம் சென்று நிகழ்ந்ததுரைக்க அவள் அதிர்ச்சியுற்று, தன்னை வைத்திழந்த நாயகர்க்குத் தாரம் கொள்ளும் உரிமையில்லை எனும் முகமாக,

"வல்ல சகுனிக்கு, மாண்பிழந்த நாயகர்தாம்
என்னை முன்னே கூறி இழந்தாரா? தம்மையே
முன்னமிழந்து முடித் தென்னைத் தோற்றாரா?
சென்று சபையில் இச்செய்தி தெரிந்துவா"[2]

என்றுரைத்தாள்.

தேர்ப்பாகன் மன்னனிடம் சென்றுரைத்து, மீண்டும் பாஞ்சாலியை வந்தழைக்க மனம் பொறுக்காதவனாய் மறுத்துக்கூற தன் தம்பி துச்சாதனனை அனுப்புகிறான் துரியோதனன்.

ஐந்தாவது சருக்கமாகிய சபதச் சருக்கத்தை கூர்மையான சொற்களால் கூர்த்த மதியுடைக் கவிகளால் பாடிமுடிக்கும் பாரதியார்,

"ஆண்டகையில்லாப் புலையனாம்"[3] துச்சாதனனும் திரௌதியை அழைத்துவர மாளிகையை நோக்கிச் செல்கிறான்.

பாஞ்சாலி மாதவிலக்கானதால் ஓராடையில் இருப்பதாகக் கூறி வேந்தர் சபைக்கு வர மறுக்கிறாள். துச்சாதனன் அருகில் சென்று பாஞ்சாலியின் கூந்தலைக் கையால் பற்றி இழுத்துச் செல்கிறான். சபையில் சென்ற திரௌதி கதறுகிறாள். தருமனின் தம்பியர் நெஞ்சம் பதைத்துப் பின் கலங்கித் தலை குனிகின்றனர். கணவர்தம் கையறு நிலைகண்டு தானே நீதி கேட்க முனைகிறாள் பாஞ்சாலி.

கர்ணன் சிரிக்கின்றான் வீட்டுமாச்சாரி (பீஷ்மர்) அக்காலத்திற்கு ஒத்த நீதியென விளக்குகிறார். தருமனுக்குத் தாரத்தை வைக்க உரிமையுண்டு என்றும் உரைக்கின்றார். "பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்" என்று புலம்புகின்றாள். பாஞ்சாலி, பாண்டவரை நோக்கிக் கலங்க வீமன் வெகுண்டெழுந்து தன் உடன் பிறந்தவனின் செயலினைக் கடிந்துரைக்கின்றான். அருச்சுனன் தடுத்து,

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் . . . . . இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்"[4]

என்று கூறிப் பொறுமையைக் கடைபிடிக்கக் கூறுகிறான்.

மாற்றான் தம்பி விகர்ணன் எழுந்து வீட்டுமன் கூறியதை மறுத்து, பெண்மையை இழிவு செய்யும் செயல் பெரும்பாவம் என்று கூறுகிறான். விகர்ணன் சொற்கேட்டு கர்ணன் எழுந்து விகர்ணனுக்கு நீதி கூறும் தகுதியில்லை என்றுரைத்து மார்பிலே துணியைத் தாங்கும் வழக்கம் அடிமைகட்கு இல்லை என்பதால் ஐவரின் சீலையையும், பாஞ்சாலியின் துகிலையும் களையுமாறு பணிக்கிறான். துச்சாதனன் எழுந்து அன்னையின் துகிலை மன்றிடை உரிதலுற்று மகிழ, விதுரனோ மயங்கிச் சாய்ந்தான். துச்சாதனன் துகிலைக் களைய முற்படுகையில் பாஞ்சாலி கண்ணனை இறைஞ்சி உலகை மறந்து உட்சோதியில் கலந்து அபயம் வேண்ட கடலலைபோல் சேலைகள் வளர்ந்தன. தேவர்கள் பூச்சொரிய வீட்டுமன் கைதொழ, பீமன் துரியோதனனின் தொடையைப் பிளந்து உயிர் மாய்ப்பதாகவும் துச்சாதனன் தோள்களைப் பிளப்பதாகவும் சூளுரைக்கின்றனர். துரியோதனன், துச்சாதனன் ஆகியோரின் குருதியைத் தடவிக் குழல் முடிப்பதாகப் பாஞ்சாலி சபதம் செய்கிறாள். பாஞ்சாலி சபதத்துடன் குறுங்காவியத்தை முற்றுவிக்கின்றார் பாரதி.

கதையமைப்பு

பாரதியின் குறுங்காவியம் "பாஞ்சாலி சபதம்" ஐந்து சருக்கங்களில் இரண்டு பாகங்களில், 1. துரியோதனன் சூழ்ச்சிச்

சருக்கம், 2. சூதாட்டச் சருக்கம், 3. அடிமைச்சருக்கம், 4. துகிலுரிதற் சருக்கம், 5. சபதச் சருக்கம் என்பதாக அமைந்துள்ளது.

முதலாவதாக இராயசூய யாகச் சிறப்பாகவும், இரண்டாவதாகத் துரியோதனன் பொறாமையும் (பொறாதிருத்தல்) மூன்றாவதாக விதுரன் தூதாகவும், நான்காவதாகச் சூதாடுதலையும், ஐந்தாவதாக அடிமையாக்குதல், ஆறாவதாகப் பாஞ்சாலியின் அறிவுத் திறம் வெளிப்படுதலையும் துகிலுரிதலையும் சபதமேற்றலுமாக முடிக்கின்றார்.

கதையின் மாண்பு

திரௌபதியைப் பணயப் பொருளாக வைத்த இழிசெயலைப் பாரதி,

"வேள்விப் பொருளிடையே – புலைநாயின்முன்

. . . . .

. . . . .

கேள்விக் கொருவரில்லை . . . . உயிர்த் தேவியைக்

கீழ்மக்கட் காளாக்கினன். . . . ." [5]

என்று பாஞ்சாலி பால் வருந்துவது, பாரதி பெண்மையின் மீது வைத்துள்ள பக்தியையும், பெண்மையைத் தாயாகவும், தாய்நாடாகவும் உருவகப்படுத்திக் கொண்டு தன் கூற்றாகவே சில இடங்களில் பேசுவதும் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற அவன் பாடுவதும் பாஞ்சாலி சபதத்தின் வெற்றி எனலாம்.

முற்போக்கு எண்ணம்

"மார்பிலே துணியைத் தாங்கும் வழக்கம் அடிமைகட்கு இல்லை என்று துச்சாதனன் கூறுவதற்கு முன்னே பாண்டவர்கள் ஐவரும் திறந்த மார்புடன் விளங்கி மேல் துணியைக் கீழே எறிந்தனர். அந்நிலையில் தன் தொடைமீது வந்து அமருமாறு கூறிய மானமிலாத் துரியன்,

"வல்வார்த்தையாடிய பாஞ்சாலியின் துகிலை உரிந்திடுவாய்" என்று தன் தம்பி துச்சாதனனுக்குக் கட்டளையிட்டான். முதலில் நிலைமையைப் புரிந்து அறிவு பூர்வமாக ஆராய்ந்து தன்னைக் காத்துக் கொள்ளத் தேவையான வாதத்தை எழுப்பிய பின்பே அவள் கலங்குகிறாள். சாதாரணப்பெண்களைப் போல் அழுது புலம்பிய பின் மீளும் வழி தேடவில்லை பாரதியின் பாஞ்சாலி, அவையில் உள்ள ஆன்றோர், சான்றோர்களைக் கண்டு சீறிச் சினந்து நீதி கேட்கின்றாள்.

நீதி கிடைக்காத திரௌபதியின் சீற்றமாகப் பாரதியின் பாக்கள் சுட்டெரிக்கும் சொற்களுடன் வெளிப்படுகிறது. "பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரம்" என்று சாடுகின்றாள். அடிமைப்பட்ட பாஞ்சாலிக்கு மேலாடை தரிக்கும் உரிமையில்லை என்பதால் துச்சாதனன் அன்னையவள் துகில் பற்றி இழுக்கிறான், இது ஒரு புறமிருக்க,

அக்காலத்தில் அடிமைகள், பெண்கள் உட்பட மேலாடை அணியும் வழக்கமில்லை இதனை, "மார்பிலே துணியைத் தாங்கும் வழக்கம் கீழடியார்க்கில்லை" என்னும் பாரதியின் கூற்றால் உணரலாம். கோயில் சிற்பங்களில் கூட அரசகுலமகளிர் ஆடை அணிந்திருப்பதையும் பணிப்பெண்கள் மேலாடையற்ற நிலையில் வடிக்கப் பட்டிருப்பதையும் காணலாம். (சான்று தஞ்சைப் பெரிய கோயில் சிற்பங்களும், ஓவியங்களும்) இந்த வர்க்க பேதம் பெண்களை மிகவும் அடிமைப்படுத்தியது. சென்ற நூற்றாண்டின் இறுதியில்கூடக் கேரளத்தில் அடித்தள மகளிர் மேலாடை அணிய அனுமதி கேட்டு, நீதிமன்றம் சென்று வெற்றி கண்டிருப்பது வரலாறு காட்டும் உண்மையாகும். (இதனை முன்னிருத்திக் கேரளத்து முற்போக்கு ஞானி சுவாமி சிவானந்த பரமஹம்சரும் 'கேரள அனாச்சாரம்" என்ற நூல் எழுதியிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது).[6]

அடிமைப்பட்ட ஆடவரும் மேலாடை அணிதல் இல்லை என்பதால் பாண்டவர்கள் மேலாடை துறந்தனர், இன்றும் கிராமப் புறங்களில் பண்ணையார்களைக் கண்ட கூலியாட்கள் தம் மேல் துண்டை எடுத்து இடையில் கட்டிக்கொள்வதையும் ஆடவர்கள் மார்பில் ஆடையின்றி ஆண்டவனை வழிபடுவதையும் காணலாம். இதே கோட்பாட்டில் தான் அடிமைப்படுத்தப்பட்ட அடித்தள மக்கள் இழிவு படுத்தப்படுவதைப் பாரதி சுட்டிக் காட்டுகிறார். அரசகுல மகளான பாஞ்சாலிக்கு மேலாடைதரிக்கும் உரிமையுண்டு, தாயத்திலே விலைப்பட்ட அடிமைகளுக்கு அந்த உரிமையில்லை எனவே துகிலுரிக்க ஆணையிடப்படுகிறது. ஆடவர் உள்ளிட்ட அனைத்து அடிமைகளும் தாரத்தைக் காக்கும் உரிமையின்றி வாழ்ந்ததையும் பாரதி,

> "நிலை சாயப் புலைத்தொண்டு
> சார்ந்திட்டால் – பின்பு
> தாரமுடைமை அவர்க் குண்டோ?"[7]

என்று பாஞ்சாலியின் வாயிலாகப் புல்லடிமைச் செய்வோர்க்குத் தார முடைமையில்லை என்பதை விளக்குகிறார். விலங்குகளின் நிலையை

விட இரங்கத் தக்க நிலையில் வாழ்ந்த பணிமகளிருக்காகக் குரல் கொடுக்கும் SOCIALIST FEMINIST போன்ற பாரதியும் இவ்வகைப் பெண்களுக்காக வருந்திக் குரல் எழுப்புவதில் பாரதியை மனித நேயச் செல்வராக காணமுடிகிறது.

வீடுமன் வாயிலாகவும் மகளிர் நிலையை விளக்குகின்றார். அக்காலத்தே,

"ஆடவருக்கு ஒப்பில்லை மாதர்
ஒருவன் தாரத்தை விற்றிடலாம்
தானமென வேற்றவர்க்குத் தந்திடலாம்
முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை"[8]

என்று விளக்குகிறார். இதே நிலைதான் அரிச்சந்திரனுக்கும் ஏற்பட்டது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

பாரதியின் புதுமைப்பெண்

இழிநிலைகண்டு சீறி எழுந்த பாஞ்சாலியைப் புதுமைப்பெண்ணாகக் காண்கிறார் பாரதி, தன்னுரிமைக்காகப் போராடிய காவிய நாயகி பாஞ்சாலியின் போராட்டம் இன்றும் தொடர்கிறது. எனவேதான் பாரதியும் "மனதில் உறுதிவேண்டும்" என்று பாடியதுடன் பெண் விடுதலை வேண்டும் எனக் கூறிவிட்டு அடுத்த வரியில் பெரிய கடவுள் துணை செய்யவேண்டும் எனப் பாடுகின்றார். பாரதி கண்ட பாஞ்சாலி இந்தப் பெரும் போராட்டத்தைத் தொடங்கி வைக்கின்றாள், "நான் துருபதன் மகள்' என்று கூறித் தன்னை வைத்திழக்கத் தருமனுக்கு உரிமையில்லை என்று நியாயம் கேட்கும்போது சமத்துவத்திற்காகப் போராடும் புதுமைப் பெண்ணைக் காணமுடிகின்றது. அடிமைத்தளை நீக்க ஆவேசமுறும் பாஞ்சாலியை உரிமைபெறத் துடிக்கும் பாரதத் தாயாகவே காண்கிறார்.

கதைப்பாத்திரங்களின் பண்புகள்

பாஞ்சாலி

காவியத்தின் நாயகியாகப் பாஞ்சாலியைப் படைத்தபோதும் பாஞ்சாலி சபதத்தையே நோக்கமாகக்கொண்டு எழுதியதாலும் பாஞ்சாலியின் ஆவேசத்தை ஓர் உணர்ச்சிக் காவியமாக எழுதியுள்ளார். அடிமைத் தளை நீங்க, ஆவேசமுறும் பாஞ்சாலிமூலம் பாரதத்தாயைக் காண்கிறார். துணிவு மிக்கவளாகப் படைத்திருப்பதால் புதுமைப் பெண்ணாகவே சித்திரித்துள்ளார்.

விதுரன்

விதுரன் துரியோதனனின் சிற்றப்பனாக இருந்தாலும் பாஞ்சாலியைப் புகழ முற்பட்டு "தெய்வத் தவத்தி" என்று விளிப்பதன் மூலம் "மெய்ந்நெறியுணர் விதுரன்" என அடைமொழி பெறுகிறான். திருதராட்டிரன் ஊனக்கண் அற்றவனாயினும் விதுரன் மூலம் ஞானக்கண் பெற்றவனாய் விதுரனின் அறிவு போற்றப்படுகிறது.

பெருந்தன்மை (மாண்பு)

விதுரன் பாண்டவரிடம் தூது சென்றபோது தன் தூதுரையை உடனே கூறவில்லை. தக்க பொழுது கண்டு இரவு வந்தவுடன் தான் வந்த சேதியைக் கூறுகிறான். விதுரன் தருமனிடம் திருதராட்டிரனே சூதின் தீமையை உணர்த்தியதாகத் தெரிவித்து,

"சொல்லிய குறிப்பறிந்தே – நலந்
தோன்றிய வழியினைத் தொடர்க"[9]

என்று கூறுகிறான். தருமனுடைய தீர்மானத்திலும் குறுக்கிடவில்லை விதுரன். சூதுபோர் நடக்கும்போது அமைதியாய் இருந்த விதுரன் நாட்டை வைத்தாடுமாறு சகுனி கூறியதும் தன்னையும் மீறிச் சினங்கொள்கிறான். இவன் மூலமாகக் கவிஞரின் சீற்றம் வெளிப்படுகிறது. பாரத நாடு அடிமைப்பட்டதை எண்ணிக் குமுறிய பாரதியால் தருமனின் நாடு அடிமையாவதைத் தாள இயலவில்லை. எனவே தீமைகண்டும் ஊமையாய் அமர்ந்திருக்கும் திருதராட்டிரனை இடித்துரைக்கின்றான்.

அதோடு விதுரன் துரியோதனனுக்கு உலக இயல்பை எடுத்துரைக்கிறான். இனிய சொல் கூறுவோர், இடும்பைக்கு வழி சொல்பவர், நன்மை காண்பவர் இடித்துரைப்பார்கள், நெடும்பச்சை மரம்போல் வளர்ந்தும் இதனை நீ அறியவில்லை; நலம் கூறுபவர்மொழி கேளாத உன் அவையில் நல்லோர் அமைச்சராக இருப்பதற்குத் தகுதி பெற்றவரல்லர். பித்தரும், நீசரும், வேசையரும் மட்டுமே தகுதியுடையவர்கள் எனும்போது துரியோதனன் தன்னை நன்றி கெட்டவன் என்றும் நாணம் அற்றவன் என்றும் மூடப்புலமையினோன் என்றும் சாடுவதையும் பொருட்படுத்தாத பண்பு விதுரனின் மனித நேய மாண்பாகவே தெரிகிறது.

"விதிவழி நன்குணர்ந்திடினும் பேதையேன் நான்
வெள்ளை மன முடைமையினால் மகனே நின்றன்
சதிவழியைத் தடுத்து உரைகள் சொல்லப் போந்தேன்

சரிசரி இங்கேதுரைத்தும் பயனொன்றில்லை
மதிவழியே செல்லுக"[10]

என்று கூறிச் சபையில் அமர்ந்தான்.

அதோடு பாஞ்சாலியை அவைக்கு அழைத்துவர ஆணையிடும் துரியோதனனுக்கு,

"வெந்நரகு சேர்த்து விடும்
வித்தை தடுத்துவிடும், மன்னவனே
நொந்தார் மனஞ்சுடவே சொல்லும் சொல்"[11]

என எச்சரிக்கிறான், துரியோதனன் தீ நெறிச் செல்வது சகுனியால் என்பதை உணர்ந்த விதுரன் சகுனியை வெறுக்கிறான்.

பாஞ்சாலியை அடிமைப்படுத்தும் போதும் கௌரவர்கள் நாசமுறப்போவது குறித்தும் மீண்டும் சினந்து கூறித் தனது வெள்ளைமனத்தையும், அநீதி கண்டவிடத்து ஆத்திரமடையும் பண்பைப் புலப்படுத்துவதுடன், துரியோதனன் பிறந்தபோது தீய சகுனங்கள் தோன்றியதாகவும் கூறுகின்றான்.

"ஞான மீதிலின் பிறந்தன்றே
. . . .
அஃதுணர்ந்த நிமித்திகர் வெய்ய
கலகம் தோன்றுமிப் பாலகனாலே
காணுவீரெனச் சொல்லிடக் கேட்டோம்"[12]

இவ்வாறு கூறுவதுடன் தன் உரையை முடிக்கும்போது மகாபாரதப் போர் வரும் என்றும் எச்சரிக்கின்றான். விதுரனைச் சான்றோனாக, அநீதியை அழிக்கத்துடிக்கும் ஆன்றோனாகப் படைத்துள்ளார் பாரதி.

இங்கே நாம் கொள்ளவிருக்கும் செய்தி யாதெனில் அநீதியைக் கண்டு ஆன்றோர்களும், சான்றோர்களும் எவ்விதக் கருத்தும் கூறாமல் துரியோதனனுக்கு அஞ்சி வாய் மூடி மௌனியாய் இருந்தபோது விதுரன் மட்டுமே நீதிக்காகப் போராடுகின்றான்; எதிர்வரும் துன்பத்தைச் சுட்டுகிறான். தருமத்திற்கு ஏற்படும் தீமையைக்கண்டு, நெஞ்சு பொறாதவனாய் விம்முகிறான். தன் அண்ணன் மகனால் தீமை ஏற்படப் போவதை எண்ணி வேதனை யுறுவதால் இவனே மனித நேயச் சீலனாகக் காட்சியளிக்கின்றான் என்பது வெள்ளிடை மலையாய் விளங்குகிறது.

வீட்டுமன்

அரசவை சென்ற திரௌபதி தன் கணவனிடம் முறையிடும் போது, அவையோரை நோக்கி நீதியழிந்ததோ என வினவுகிறாள். வீட்டுமன் அப்போது நீதியுரைக்க முற்பட்டுப் பெண்கள் ஆடவரின் உரிமையென்று கூறுகிறான்.

"தீங்கு தடுக்கும் திறமிலேன்" என்று தன் இயலாமையை உணர்த்தித் தலை கவிழ்கிறான்.

"தன்னை அடிமையென விற்றபின்னுந் தருமன்
நின்னை யடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு"[13]

என்று வீட்டுமன் கூறப் பாஞ்சாலி சீறுகிறாள்.

"தீங்கு தடுக்கும் ஆற்றலை யான் பெற்றிலேன்" என்று, நடப்பது தீங்குதான் என்றறிந்தும் தடுப்பதற்கு வழியில்லை என்று நொந்துகொள்ளும் பாங்கு வீட்டுமனின் நேயத்தை வெளிப் படுத்துகிறது.

பாண்டவர் பண்பு

வீடுடை ஐவர், வெந்திறர் பாண்டவர், தார் செய்தோளிளம் பாண்டவர் தம்மைச் சமரில் வெல்வது ஆங்கெளிதன்றாம் என்று சகுனியும்,

"பஞ்சவர் வீரம் பெரிதுகாண் – ஒரு
பார்த்தன் கைவில்லுக் கெதிருண்டோ"[14]

என்பதும்

விதுரன் தருமனின் பெருமையை,

"எம்பிரான் உளம் கொள்ளுதி யாயின்
யாவுந் தான மெனக் கொடுப்பாரே"[15]

என்று கூறுவதன்மூலம் தருமனின் சிறப்பும் வெளிப்படுகிறது.

வீமனின் சீற்றம்

தம்பியரை அடிமையாக்கிய செயலையும் பொறுத்த வீமனால் பாஞ்சாலியைப் பகடைக்கு அடிமைப்படுத்திய செயலைப் பொறுக்க இயலவில்லை.

"இது பொறுப்பதில்லை – தம்பீ
எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான் – அண்ணன்
கையை எரித்திடுவோம்"[16]

தருமன் செய்த இழி செயலுக்கு ஆளையே கொல்லவேண்டும் என்று கூறிக் கற்பிற் சிறந்த பெண் தெய்வத்தை வைத்து ஆடினானே என உள்ளம் நோகின்றான்.

வீமனும், அருச்சுனனும்

அருச்சுனன் வீமனின் உரையைக் குறித்து வருத்தம் தெரிவித்து, பகைவரின் முன்னால் அண்ணனைச் சாடுதல் முறையாகுமா? என்று கடிந்துரைக்கிறான்.

சினத்தீயின் வசப்பட்டுத் திரிலோக நாயகனாம் தருமனைச் சினந்த செயலினைக் கடிந்து பின்னர் அவனை அமைதிப் படுத்துகிறான். தருமன் இப்போது சூதினால் சூழப்பட்டு இருப்பினும் தருமம் மறுபடி வெல்லும்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்"

எனப் பொன் மொழி கூறியபின்,

"கருமத்தை மென்மேலும் காண்போம், இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம்"

என்று உறுதியுரைக்கும்போது அருச்சுனனின் பண்பும், துயரிலும் அண்ணனை வழிபடுபவனாகவும் விவேகமும் அறிவாற்றலும் உடையவனாகவும் மனம் தளராதவனாகவும் ஆற்றல் மிக்கவனாகவும் மனித நேயத்தில் சிறந்தவனாகவும் காட்டப்படுகின்றான்.

திருதராட்டிரன்

துரியோதனனுக்குத் தன் விருப்பத்தை நிறைவேற்ற முன்வராத தந்தையைக்கண்டு சினமெழுகிறது.

"கொல்லும் நோயினை வெல்லக் கருதி மருந்து செய்யும்
மருத்துவன் மீது சினம்கொண்டு அவனுக்குத் தீங்கு இழைக்கும்
அறிவில்லாதவன் போன்று"[19]

தந்தை கூறிய சொற்களைக் கேளானாய்த் தந்தை மீது கடுஞ்சினம் கொண்டு கட்டுரைக்கத் தொடங்கினான் துரியோதனன்.

பாண்டவரின் தந்தையாய் நின்று திருதராட்டிரன் பேசுகிறான் என்றும் பாண்டவரிடம் அன்புகொண்டு தன்னை வெறுப்பவன் திருதராட்டிரன் என்றும் கூறுகின்றான். பாண்டவருக்கு தூது விடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்துகிறான்.

உன் வார்த்தையின்றி அப்பாண்டவர் வாரார்.

"இந்த வார்த்தை உரைத்து விடாயேல்
இங்கு நின்முன் ஆவி இறுப்பேன்"[20]

என்று கூறித் தந்தையைச் சம்மதிக்க வைக்கின்றான். சகுனியிடம் வெறுப்புக் கொண்டவன் திருதராட்டிரன்.

"பிள்ளையை நாசம் புரியவே ஒரு
பேயென நீவந்து தோன்றினாய்"[21]

கதியுறுங் காலனன்றோ – இந்த
கயமகனென நினைச் சார்ந்துவிட்டான்"[22]

என்றும்

"வென்று படுத்தனன் எவ்விதி என்னை
மேலை விளைவுகள் நீ அறியாயோ
அன்று விதித்ததை இன்று தடுத்தல்
யார்க் கெளிதென்று மெய்
சோர்ந்து விழுந்தான்"[23]

இவைகளெல்லாம் தன் மகன் செய்வது அநீதியான செயல் என்றுணர்ந்த திருதராட்டினிடமும் சற்று நேயத்தைக் காணமுடிகின்றது.

சகுனி

பாரதி சகுனியை அறிமுகப்படுத்தும்போதே "புலைநடைச் சகுனி" என்று அறிமுகப்படுத்துகிறார்.

"சூதும் பொய்யும் உருவெனக் கொண்ட
துட்ட மாமன்"[24] "ஈன மாமன்"[25] "பீடிழந்த சகுனி"[26] "அருளற்ற சகுனி"[27]

"இழிஞன்"[28] "கள்ளச்சகுனி"[29] "மோசச் சகுனி"[30]

என்றும் சூதாடுவதில் சகுனி நிகரற்றவன் என்றும் உரைக்கின்றார்.

கர்ணன்

பாரதி கர்ணனை நல்லவனாக வருணித்தபோதும் அவன் சேரக்கூடாத தீயோரைச் சார்ந்து இருந்ததால் அவனைப் பல இடங்களில் கடிந்துரைப்பதுடன் கொடிய குணம் உடையவனாகவும் குறிப்பிடுகின்றார்.

> "மைந்நெறி வான்கொடையான் – உயர்
> மானமும் வீரமும் மதியுமுளோன்
> உய்ந்நெறி யறியா தான் இறைக்கு
> உயிர்நிகர் கன்னனும் உடனிருந்தான்"[31]

எனச் சூதுப்போர் நிகழும்போதும் பாண்டவரும் பாஞ்சாலியும் அடிமைப்பட்டபோதும் கர்ணன் அமைதியாகவே இருக்கிறான். அனைவரும் பாஞ்சாலியின் துயர்கண்டு மனங்கலங்கி அமர்ந்திருக்க, துரியோதனன் தம்பியருள் ஒருவனாகிய விகர்ணன் எழுந்து பாஞ்சாலியை அடிமைகொள்வது நீதியாகாது என்றுரைக்கக் கர்ணன் குறுக்கிட்டு அவனுக்கு மாற்றம் உரைக்கின்றான்.

"தாரணிவேந்தர் அனைவரும் அமைதியாயிருக்கச் சிறியவனாகிய விகர்ணன் நீதிமுறை கூறுதற்குத் தகுதியற்றவன்" என்று விகர்ணனை அடக்குகிறான். பின்னர் மார்பிலே துணியைத் தாங்கும் வழக்கம் கீழ்மக்களுக்கில்லை என்பதால் பாண்டவர், பாஞ்சாலி ஆகியோரின் மேலாடையைக் கழற்ற கர்ணனே முதற்காரணமாக யிருக்கின்றான். இக்கூற்றே பாஞ்சாலி சபதத்திற்குக் காரணமாகிறது. அதனால்தான் பாஞ்சாலியை அவமானப்படுத்தத் தூண்டிய கர்ணனைப் போரில் மாய்ப்பதாக பார்த்தன் சபதம் செய்கிறான். அதனாலேயே பாரதி, கர்ணனைக் கொடையில் சிறந்தவன் என்று அறிமுகப்படுத்திய போதும் தீயோருக்குத் துணைசென்று பாஞ்சாலியின் ஆடையை நீக்க உத்தரவிடும்போது கர்ணனைக் கீழ்மகனாகவே எண்ணச் செய்கிறார்.

துச்சாதனன்

துச்சாதனனைப்பற்றிப் பாரதி விளக்கும்போது புத்தி விவேகமற்றவன் என்றும் ஆனால் புலி போன்ற உடல் வலிமை கொண்டவன் என்றும் அதர்மக் காரியங்களை இன்பத்துடன் செய்பவன் என்றும் நல்லவர் கேண்மை நாடாதவன் என்றும் கூறுகிறார்.

துரியோதனனிடம் தன்னிலைமையை உரைக்குமாறு பாஞ்சாலி பதறியதையும் பொருட்படுத்தாமல் கூந்தலைப் பற்றி

இழுத்துச் செல்கிறான்; சபைக்கு அழைத்து வந்த பின்னரும் "தாதியடி தாதி" ஆடி விலைப்பட்ட தாதி" என்றும் தீதுரைக்கின்றான். கர்ணன் பணியாளர் மூலம் பாஞ்சாலியின் ஆடை களைய சொல்கிறான், துகிலுரிய முற்படுவதோ துச்சாதனன்.

"பிச்சேறிய வனைப்போல் – அந்தப்
பேயனும் துகிலினை உரிகையில்"[32]

என்று கவிஞர் விவரிக்கும்போது மனிதனாய்ப் பிறந்தும் விலங்குக்குணம் பொருந்தியவனாய் மனித நேய மற்றவனாய்த் துச்சாதனன் காட்டப்படுவது இங்கே தெளிவாகிறது.

விகர்ணன்

நூற்றுவரில் நல்லவனாக அநீதி நடக்குமிடத்து நீதிக்குக் குரல் எழுப்பும் சான்றோனாக அண்ணன் செயலே ஆனாலும் அறமற்ற செய்கையெனில் இடித்துரைக்கும் அறவோனாகக் காட்சியளிக்கிறான் விகர்ணன்.

குலமுதல்வனாம் பாட்டன் வீடுமனின் நீதியைப் பிழையென்று சுட்டுகிறான். வேதநெறி மாறிப் பின்னாளில் பெண்ணினம் அடிமையானதை வீட்டுமன் சுட்டிக்காட்ட அதற்கு மாற்றம் உரைப்பானாய்,

"எந்தையர் தம் மனைவியரை விற்பதுண்டோ?
இதுகாறும் அரசியரைச் சூதில் தோற்ற
விந்தையை நீர் கேட்டதுண்டோ" என்றும்

"சூதர் வீட்டில் ஏவற்பெண் பணயமில்லை
என்றும் கேட்டோம்" [33]

என்றும் உலக வழக்கை எடுத்துரைக்கிறான். பெண்களை அடிமைப் படுத்தியதே தவறு என்று ஆணித்தரமாகக் கூறுகிறான். அரசியரைச் சூதில் தோற்ற விந்தையைக் கேட்டதுண்டோ? என்று அநீதியைச் சுட்டிக் காட்டுகின்றான், எது எவ்வாறாயினும் திரௌபதி கூறிய வழக்கின்படியே பார்த்தாலும் அவள் அடிமையல்லள் என்று கூறுகிறான்.

"தன்னை யவள் இழந்தமையான் – பின்னர்த்
தாரமேது? வீடேது? தாதனான பின்னையுமோர்
உடைமையுண்டோ? என்று நம்மின் பெண்ணரசி
கேட்கின்றாள் பெண்மை வாயால்"[34]

என்று பாஞ்சாலியின் பொருட்டு வாதாடுகிறான். பாவந்தன்னை இருவிழி நோக்கினும் வாய் பேசாது அமர்ந்திருக்கும் மன்னர்களை நோக்கி நீதி காண வேண்டுகிறேன் என்கிறான். விகர்ணன் இவ்வாறு உரைத்தவுடன் சில வேந்தர்கள் அச்சம் தவிர்த்து, "ஒவ்வாது சகுனி செய்யும் கொடுமை"[35] என்றும் "ஒருநாளும் உலகம் இதனை மறக்காது"[36] என்றும் ஏந்திழையை அவைக்களத்தில் இகழ்தல் வேண்டா"[37] என்றும் கூறுகின்றனர்.

அநீதியைச் சொல்லுமள்வு அறவுணர்வைத்தூண்டினான் என்று விகர்ணனின் கூற்று பற்றிப் பாரதி பாடுகிறார். விகர்ணனுக்கு இருந்த துணிவும் அறவுணர்வும் அங்கிருந்த மூத்தோருக்கும், ஏனைய சான்றோருக்கும் இருந்திருக்குமேயானால் பாரதப்போரே நிகழ்ந்திருக்காது. விதுரனுக்கு அடுத்தபடியாக நூற்றுவரில் அறமற்ற செயல்களை இடித்துரைப்பவனாக உயர்ந்து நிற்கின்றான் விகர்ணன். இவனது மனித நேயச் செயலும் போற்றப்பட வேண்டியதே.

தேர்ப்பாகன்

இக்குறுங்காவியத்தில் வருகின்ற சிறிய பாத்திரமே தேர்ப்பாகன். இவன் தன் குண நலனால் உயர்ந்து நிற்பவன்; பெண்மையைப் போற்றுபவன். துரியோதனன் ஆணையை ஏற்று மீற முடியாதவனாய்ப் பாஞ்சாலியிடத்தில் சென்று கூறுமுன், "சொல்லவுமே நாவு துணியவில்லை" தோற்றிட்டான்"[38] என்று கலங்கும்போது அனுமனை இங்கே நினைவு கூறவைக்கிறான். இவ்வாறு சொல்லின் செல்வனாகிறான். தேர்ப்பாகன் ஓர் ஏவலாளாக இருந்தபோதும் அவனிடமும் மனிதாபிமானப் பண்புகள் அங்கிருந்த அரசர்களைவிட உயர்ந்து காணப்படுகிறது.

மனிதநேயம் வெளிப்படும் மாந்தர்கள்

திருதராட்டிரன், விதுரன், விகர்ணன், தேர்ப்பாகன் ஆகியோர்கள் மூலம் இக்குறுங் காவியத்தில் மனித நேயப் பண்புகள் சற்று வெளிப்பட்டு இருப்பினும் முழுமையாக விதுரன் மூலமாகவும், விகர்ணன் மூலமாகவும் வெளிப்பட்டிருக்கின்றது. இருவருமே பெண்மைக்கு இழைக்கப்படும் அநீதிகளை, கொடுமைகளைப் பொறாத சான்றோர்களாய் மிளிர்கின்றனர். எல்லோருமே மாற்றான் பக்கம் இருந்தாலும் நீதிக்காகப் போராடும் அறவோராய்க் காட்சிதருகின்றனர்.

மனித நேயமின்மை

கர்ணன் எல்லோராலும் பாராட்டப்படும் கொடைத் தன்மை பெற்றிருந்தும் தீயோருடன் இணைந்து இழிகுணத்திற்கு ஆளாகி, பாஞ்சாலி சபதமேற்க முழுமுதற் காரணமாகிறான்.

துச்சாதனன் மனிதப் பிறவியெடுத்தும் தனது தமையனின் மனைவி, தன் தாயை யொத்தவள் என்றும் பாராது கருணையில்லாதவனாய், இரக்கமற்றவனாய் அவள் கூந்தலைப் பிடித்து இழுத்து வந்தது மனிதாபிமானமற்ற விலங்கின் செயலாகும்.

சூதுக்கும், பொய்மைக்கும், உருவம் ஒன்று உண்டென்றால் அது சகுனிதான். நேயமென்ற சொல்லுக்கு வெகு தொலைவில் நிற்பவன்.

முற்றுரை

இக்குறுங்காவியம் மூலம் மகாபாரதக் கதையின் ஒரு பகுதியும் அதனால் நன்மைக்கு ஏற்பட்ட தீமையும் ஒரு பெண்ணுக்கு ஏற்பட்ட அவமானமும், அவளது திறத்தையும் இறைவனது அருளையும் அவள் கற்பிற் சிறந்த மாண்பையும் காணமுடிகிறது, தருமம் தோற்றதுபோல் இருப்பினும் தர்மமே வெல்லும் என்பதும் விளங்குகிறது.

குறிப்புகள்

* "மனிதன் மனிதனை மதித்துச் செல்லும் அன்பு" என்று க்ரியாவின் வணக்கமும், Human kindness - தயை, கருணை, மனிதத்தன்மை தயாள (இரக்கமான பண்புகள்) என்று லிப்கோ அகராதியும் கூறுகின்றன.

1. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 177 வரி 6-8
2. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 48 வரி 103-106 வரை
3. பாரதியார் -மேற்படி நூல், பாகம் II பாடல் 73
4. பாரதியார் -மேற்படி நூல், பாகம் II பாடல் 63 வரி 7
5. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 41 வரிகள் 1-8
6. கேரள அனாச்சாரம் - சிவானந்த பரமஹம்சர், சித்தாஸ்ரம வெளியீடு 3ஆம் பதிப்பு, 1999.
7. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 52, வரி 6-8
8. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 67, வரி 62-65
9. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 129, வரி 7-8.
10. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 13, வரி 1-5
11. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 48, வரி 65-68
12. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 193, வரி 1-8

13. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 66, வரி 61-66

14. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 55, வரி 3-4

15. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 202, வரி 5-6

16. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 77, வரி 1-4

17. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 79

18. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 104

19. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 85, வரி 5-8

20. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 97, வரி 7-8

21. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 108, வரி 1-2

22. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 108, வரி 7-8

23. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 76, வரி 3-8

24. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 40, வரி 4

25. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 40

26. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I

27. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 195

28. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 58

29. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 193

30. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 71

31. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் I பாடல் 18, வரி 5-8

32. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 88, வரி 5-6

33. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 81, வரி 1-8

34. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 82, வரி 1-4

35,36,37. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 83, வரி 3-6

38. பாரதியார் பாஞ்சாலி சபதம், பாகம் II பாடல் 118, வரி 4-5

******

மனிதநேயப் பார்வையில் நாமக்கல் வே. இராமலிங்கனார் கவிதை

த. பூமிநாகநாதன்
ஆராய்ச்சி உதவியாளர்

இந்திய விடுதலைக்குப்பின் தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக இருந்து சிறப்புச் செய்தவர் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை. இவரைப் பற்றி ராஜாஜி அவர்கள் கூறும்போது, 'திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது. காந்திதூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது' என்று வருணித்துச் சிறப்பித்துள்ளார். 19.10.1898 இல் வேங்கடராயப்பிள்ளை அவர்களுக்கும் அம்மணி அம்மையாருக்கும் எட்டாவது பிள்ளையாகத் தோன்றியவர். 'ஆடுராட்டே சுழன்றாடு ராட்டே' என்ற பாடலின் மூலம் தமிழகம் முழுவதும் அறியப் பெற்றவர். அன்னவரின் கவிதைகளே ஈண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

மனிதம், மானுடம், மனித நேயம் போன்ற சொற்கள் மேலை நாட்டு இலக்கியக் கோட்பாடுகளை ஒட்டித் தமிழில் தாக்கம் பெற்ற புதுச் சிந்தனைகள் ஆகும். தமிழில் இடைக்காலத்தில் அதிலும் குறிப்பாகக் கம்பனின் ஈர்ப்பில் வசப்பட்ட சுவைஞர்களிடத்து இருந்துதான் 'மானுடம்' என்ற சொல் பரவலாகத் தமிழ் இலக்கியத்தில் செல்வாக்குப் பெற்றது.

ஆயின் மானுடம், மனித நேயம் என்ற சொற்கள் இன்று கூறும் பொருளைத்தான் அன்றே பண்பாடு, நாகரிகம் என்ற சொற்கள் உணர்த்தின. ஆகவே பண்பாடு என்ற சொல்லின் விளக்கத்தை உணர்ந்து கொண்டால் அச்சொல்லின் உள்ளே மானுடம் கரைசலாய்க் கரைந்து உள்ளிருப்பதை அறியலாம். இச்சொல்லைப் பற்றி பேராசிரியர் அ.மு.ப. அவர்கள் கூறும்போது, "பண்பாடு என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் Culture என்ற சொல் பயன்படுத்தப் படுகிறது. அதற்கு Tiliage, Improvement by traing, Intellectual devel-opment, cultivate என்பன பொருளாகக் காட்டப்படுகின்றன. இச்சொல்லோடு தொடர்புடைய மற்றொரு சொல் Agriculture என்பதாகும். இதற்கு cultivation of the soil என்பது ஓர் உரை. மற்றொரு அகராதி அந்தச் சொல் வந்த வரலாற்றை விளக்குகிறது.

(Oxford P:26) அச்சொல் இலத்தீன் மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு வந்ததாம்.

'Ager' என்றால் வயல் (field) culture என்றால் பண்படுத்தல் (cultivate) எனக் கொள்ளுகின்றனர். இவற்றைப் பொருத்தி நோக்கினால் நிலத்தை நல்ல வகையில் மற்றவர்களுக்கு வேண்டிய உணவு முதலியவற்றைக் கொடுக்கும் வகையில் நல்ல பயிர் விளையும் வகையில் பயன்படுத்தல் Agriculture ஆகிறது. எனவே அந்த அடிப்படையில் மனத்தை மற்றவர்களுக்கு உதவும் வகையில் யான், எனது என்னும் செருக்கு அற்று மற்றவர்களை வாழ்விக்கும் நெறியில் - பல்வேறு வகையில் பறந்து செல்லும் மனத்தை, அது செல்லும் வழியில் அல்லாது நல்ல நெறியில் திருப்பி நாம் பேணும் வகையில் - நல்ல அறிஞர்தம் மொழிகளும், ஆசிரியர் தம் பொன் மொழிகளும் ஆகிய எருவினையிட்டு, சிந்தனை ஏர் ஓட்டி நல்ல வகையில் நம்மை நாம் பண்படுத்திக் கொள்வதே பண்பாடு"[1] என விளக்கம் அளிக்கிறார் அ.மு.ப. அவர்கள்.

'பண்பட்ட நல்ல நிலத்து விளையும் தானியம் பிறர்க்கு உணவாக உதவுவது போல, உள்ளம் பண்பட்ட நல்லவர்கள் உடல் பொருள் உயிர் அனைத்தாலும் மற்றவர்களுக்கு உதவுவார்கள் என்பது தேற்றம். எனவே பண்பாடு என்பது தியாக வாழ்க்கையாக அமைகிறது எனலாம். இதையே புரோனிஸ் லா (Bronislaw malinowski (London School of Economics & Political Science - Encyclopaedia of Social Science p.645) என்பாரும் உறுதி செய்வதாக'[2] அ.மு.ப. குறிப்பிடுகிறார்.

தியாக வாழ்வு என்றால் அனைத்தையும் விட்டுத் துறவு நிலையை மேற்கொள்வதில்லை. பண்பட்ட நிலம் அப்படிச் செய்வதில்லை. எத்தனை ஆண்டுகள் அது விளைவினை வாரி வழங்கினும் அது அழிவதில்லை, கெடுவதில்லை. நல்ல பண்பாளரும் அதே நிலையில் தாம் கெடா வகையில் அதே வேளையில் மற்றவர் வாழும் வகையில் மக்கள் பாதையை வகுத்துச் செல்பவர்களே ஆவர்.

இதைத்தான் பரிமேலழகர் பண்புடைமை அதிகாரத்திற்கு விளக்கம் தரும் பொழுது, "பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்"[3] என்பார் எனக் கூறுகிறார் அ.மு.ப.

விலங்கிலிருந்து வேறுபடுத்தி மனிதனாக வாழ வைப்பது பண்பாடு. அவ்வாறு விலங்கில் இருந்து பிரிந்த மனிதன் தனி வாழ்வை விட்டுக் குடும்ப வாழ்வை மேற்கொள்ளுகிறான். அக்குடும்ப வாழ்வில்

அவனையறியாமலேயே அவன் உள்ளம் மனைவி, மக்களிடத்துப் பற்று, பாசம் கொள்கிறது. பொல்லா உள்ளத்தாரும் கூட உற்ற மனைவியிடமும் பெற்ற மக்களிடமும் பிறர் கூறாமலேயே அன்பு காட்டத் தொடங்குவர். ஆனால் அந்த அன்பின் எல்லை அந்தப் பற்றுடன் முடிந்து விடாது, விரிந்துபரந்து சென்று பிறரையும் பிறவற்றையும் பற்றவேண்டும். அன்புடைமை என்று வள்ளுவர் இதைத்தான் காட்டுகிறார்.

எனவே தம்மோடு தொடர்பு அற்றவர்மேல் இயல்பாகச் செல்லும் உள்ள நெகிழ்ச்சியே அன்பாகவும் அவ்வன்பின் விரிவே பண்பாடாகவும் அப்பண்பாட்டின் முதிர்ச்சியே மனிதம், மானுடம், மனித நேயம் என்கின்ற வெளிப்பாடாகவும் உருப்பெறுகிறது எனலாம்.

இத்தனி மனிதப் பண்பாடு, தனி மனிதன் மற்றவரோடு மாறுபாடற்று, ஒரு நாடு பிற நாட்டோடு போரும் பிற கொடுமைகளும் அற்று, ஓர் இனம் மற்றொரு இனத்தோடு பகைமை அற்று உதட்டளவில் இல்லாமல் உள்ளத்தால் ஒன்றி, அந்த ஒன்றிய உள்ளத்தால் நிகழும் பிற நிகழ்ச்சிகளும் செயல்களும், பிறவும் யாவும் தனிமனிதனுக்கும், தனிச் சமுதாயத்திற்கும், தனி நாட்டிற்கும், தனி இனத்துக்கும் என்றும் இல்லாமல் எல்லாருக்கும் ஒப்ப இருக்கும் வகையில் வழிகாட்டும் நெறியே பண்பாடாகும்."[4]

திரு. டி.என். சேஷாசலம் அவர்கள் கூறும்போது, "அயலோர்பால் அன்பும் மற்றவர்க்கு உதவ வேண்டும் என்னும் ஆர்வமும் மானுட மடமையை நீக்கி, இடுக்கண் களைந்து எல்லோரும் எங்கும் இன்புற்று இருக்குமாறு செய்ய வேண்டும் என்னும் விருப்பமும் நாம் பிறந்த நாள் கண்டதிலும் இவ்வுலகம் நன்மையும் இன்பமும் அதிகம் பெற்றிருக்க அகலும் நாள் காணவேண்டும் என்னும் உயரிய நோக்கமும் இவையடைய பொது நலக் கூட்டுறவு வாழ்க்கைக்குரிய பிற கருத்துகளையும் ஒருவனுக்கு எய்துவிப்பது "கல்சர்" எனவும் "எல்லாம் செம்மையாயிருக்க வேண்டுமெனும் அவாவினின்று விளைவது கல்சர்; மீண்டும் அவ்வவாவினை விளைவிப்பது கல்சரே"[5] என்ற குறிப்பும் ஈண்டு எண்ணற்பாலது.

ஆகவே பண்பாட்டின், கல்சரின் அடிப்படைக் கூறான அன்பின் விரிவே இன்று பேசப்படும் மனித நேயம் எனலாம்.

உலகளாவிய சிந்தனை உள்ள எழுத்தாற்றல் மிக்க எழுத்தாளர்கள், கவிஞர்கள், படைப்பாளர்கள் தான், தனது என்ற சிறிய வட்டத்தை விட்டு மிகப்பெரிய உலகின் மனித நலம் கருதித்

தங்கள் படைப்புகளைத் தர முடியும். அருள் உள்ளம் கொண்ட இத்தகையோர்தான் சமூகம் சிறப்புற ஒற்றுமை, சமதர்மம், நற்பண்பாடு, கேடறுத்தல் போன்ற பல்வேறு கோணங்களில் சிந்தித்துத் தங்கள் படைப்பை நல்குவர்.

நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை அத்தகைய சிந்தனை உடையவர்தான். காந்தீயத்தால் கவரப்பட்டு, சத்தியாகிரகம், (ஒத்துழையாமை) அஹிம்சை ஆகிய காந்தி சொன்ன கருத்துகளைத் தனது வேதமாகக் கொண்டு இயங்கியவர். அவர் கவிதைத் தொகுப்பில் இருந்து மனித நேயச் சிந்தனையை வலுப்படுத்தும் ஒரு சில கவிதைத்துளிகளைக் காணலாம்.

இந்திய நாடு விவசாயத்தையே பெருந் தொழிலாகக் கொண்டது. இந்நாட்டில் மக்கள் தொகை அதிகம். உழைப்போர் அதிகம். அதிலும் உழவுத் தொழிலை மேற்கொண்டவர்தான் மக்கட்தொகை விழுக்காட்டில் முன்னணியில் இருப்பவர்கள். பண்ணைகளும் ஜமீன்களும் மண்ணைத் தன் வசப்படுத்திவிட்ட நிலையில் உழைப்பவனுக்கு நிலம் என்பது கானல் நீராகி விட்டது. அத்தருணத்தில் தான்காந்தியின் சீடர் வினோபாஜி அவர்கள் பூமிதான இயக்கத்தை மேற்கொண்டு அரிய தொண்டு செய்தார். மானுடத் துயர் நீக்க காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை பாதயாத்திரை செய்த அவ்வறவோனின் பணி சிறக்கக் கவிஞர் அப்பணியைப் பாராட்டி இவ்வாறு கூறுகிறார்.

பூமிதானம் செய்வதே
புண்ணி யத்திற் புண்ணியம்
புனிதமான முறையில் நாட்டின்
வறுமை போகப் பண்ணிடும்
சாமி சாட்சியாக எங்கும்
சண்டைகள் குறைந்திடும்
தானதர்ம ஆசையே நம்
தமிழகத்தின் கல்வியாம்
தந்துவக்கும் இன்பமே நம்
தலைசிறந்த செல்வமாம்
தீனருக்கும் பூமி கொஞ்சம்
தானமாகத் தருவதால்
தேச மெங்கும் அமைதி பெற்றுத்
திருவி லாசம் பெருகுமே
காந்தி சொன்ன ராம ராஜ்யம்
காண வல்ல தலைவனாய்க்

கர்ம பக்தி ஞான யோகம்
கருதும் புத்தி நிலைய னாய்ச்
சாந்த சத்தி யாக்ர கத்தின்
காட்சி யாம் நம் வினோபா
சாற்றுகின்ற பூமிதானம்
சோற்றுப் பஞ்சம் மாற்றுமே[6]

இக்கவிதையில் உழைக்க உழவனுக்கு நிலம் கிடைத்து விட்டால் சோற்றுப் பஞ்சம் மடிந்து போகும் என்ற ஜீவ வரியின் வாயிலாக, கவிஞர் பூமிதானத்தின் சிறப்பைக் கூறும் வாயிலாக மானுடத்தை அச்சுறுத்தும் பெருந்துயரகற்ற சங்க நாதம் எழுப்புவதையறியலாம்.

கூட்டுறவு

உலகம் உய்வதற்கு ஒற்றுமை தேவை. அவ் ஒற்றுமை 'கூட்டுறவு' என்ற இணைதலின் மூலமே செயல்பட முடியும். தனித்து நின்று ஒரு செயலைச் செய்வதைவிடக் கூட்டுறவு முறையில் ஒரு தொழிலைச் செய்யும் போது, பொது நலம் அங்கே தலைமை ஏற்கிறது. இக்கருத்து பற்றி, கூட்டுறவின் சிறப்பு குறித்து எதிர்மறையிலும், நேர் கருத்திலும் கவிதை யாத்துள்ளார் நாமக்கல் கவிஞர்.

'கூட்டுற வில்லா ஒரு நாடு
குறைவற வாழ்வது வெகுபாடு
மேட்டிமை பேசும் நாடெல்லாம்
மேன்மை பெற்றது கூட்டுறவால்
கல்வி சிறந்திடும் கூட்டுறவால்
கலைகள் நிறைந்திடும் கூட்டுறவால்
செல்வம் வழுத்திடும் கூட்டுறவால்
சேமம் நிலைத்திடும் கூட்டுறவால்
வாணிபம் பெருகிடும் கூட்டுறவால்
வளப்பம் மிகுந்திடும் விவசாயம்
நாணய நடத்தைகள் அதிகரிக்கும்
நம்பிக்கை வளர்ந்திடும் கூட்டுறவால்
பண்டக சாலைகள் நிறைவாகும்
பணமுடை என்பது குறைவாகும்
கொண்டுள காரியம் எது வெனினும்
கூட்டுற விருந்தால் அது முடியும்
கூட்டுற வென்னும் கொள்கையினால்
குற்றமில் லாமல் மேற்கொண்டால்

நாட்டில் தரித்திரம் நீங்கி விடும்
நம்முடை சுதந்திரம் ஓங்கி விடும்'[7]

எனக் கூட்டுறவின் வலிமையைக் கூறி நேயத்தோடு வாழ்வதற்கு நல்வழியைக் காட்டுகிறார் கவிஞர்.

சமதர்மம்

சமூகத்தில் மனிதன் ஏற்றத் தாழ்வு கொண்டு வாழ்வது கவிஞருக்கு ஒப்பவில்லை, உடன்பாடு இல்லை. சமதர்மத்தோடு வாழவேண்டும் என்பதே அவரது நோக்கு. அதற்கு அன்புள்ளம் வேண்டும். எதையும் எந்த நிலையிலும் ஏற்கும் கருணை உள்ளம் வேண்டும். இதனை,

'திட்ட மிட்டே அரசாட்சி செய்திட்டாலும்
தீவிரமாய்ச் செல்வங்கள் திரண்டிட்டாலும்
கட்டு திட்டம் காவல் படை களத்திட்டாலும்
'கருணை' என்ற ஒருணர்ச்சி கலக்கா விட்டால்
சுட்டெரிக்கும் தீ உடலிற் பட்டா லென்னச்
சுதந்தரத்தின் இன்பமெல்லாம் சுருங்கிப் போகும்
அட்டியென்ன! கருணை அன்பிங் கென்ப வெல்லாம்
ஆண்டவன் பால் 'பக்தி' என்ற அதுதான் நல்கும்[8]

இப்பாடலில் கவிஞர் கருணையும் அன்பும்தான் சுதந்திரத்தைத் திடமுடன் காக்கவல்லது. சுதந்திரம் என்பது எங்கும் எவர்க்கும் எந்த நாட்டிற்கும் பொருத்தமுடையது. ஆகவே அங்கே கருணை, அன்பு குறைந்தால் அச்சுதந்திரம் குறைபட்டு விடும் என எச்சரிப்பதைக் காணலாம். ஆகவே சமதர்ம நோக்கிற்குக் கருணையும் அன்பும் அவசியம் என வற்புறுத்துவதைக் காணலாம்.

தீண்டாமை

ஒரு நாட்டின் பெருநோய் என்றால் அது தீண்டாமை என்னும் கொடுமையே. மானுடத்தின் சிறப்பைச் சீரழிக்க வல்ல திறன் இத்தீண்டாமைக்கு உண்டு. கவிஞர் இத்தீண்டாமை குறித்துச் சொல்லியுள்ளவை இன்றைய தலைமுறையினர் அறியவேண்டிய ஒன்று. தீண்டாமை குறித்துக் கவிஞர் கூறும்போது,

'வேதத்தி லில்லை கீதையில் இல்லை
வேறுள சாத்திரம் யாருக்கினி
சாதித்து யாரையும் சண்டாள னென்றிடும்
சாத்திரம் சத்தியச் சம்மதமோ

நால்வ ருரைத்ததே வாரத்தி லில்லை
நந்தன் குலத்துக்கு நிந்தை சொலல்
பால்வரும் ஆழ்வார் பாசுரத் தில்லை
பாணர் வளர்ந்ததைக் கோணலெனல்
சங்கரர் காசியில் அங்கென்ன சொன்னார்
சண்டாள பக்தனும் தம்குரு வென்றார்
எங்கள் ராமானுஜர் தம்குல மென்றே
யாரையும் கொண்டுடன் கோயிலும் சென்றார்.[9]

நால்வர் நூல்களும் வேதமும் பாராட்டாத தீண்டாமையை நாம் ஏன் பாராட்ட வேண்டும் என்ற ஆதங்கத்தை அவரிடம் காணமுடிகிறது. சங்கரன் ஒதுக்கிய தீண்டாமை தீண்டப்படாமல் போகவேண்டும் என்பதே அவரது நோக்கு. அந்த வேகத்தில்தான்,

'நாய் குரங்கு பூனையை
நத்தி முத்த மிடுகிறோம்
நரக லுண்ணும் பன்றியும்
நம்மைத் தீண்ட ஒப்புவோம்
ஆயும் நல்ல அறிவுடை
ஆன்ம ஞான மனிதனை
அருகிலே வரப் பொறாமை
அறிவிலே பொருந்துமோ?[10]

என வினவுவதோடு,

'தொத்து நோய்கள் மெத்தவும்
தொடர்ந்து விட்ட பேரையும்
தொட்டுக் கிட்டுச் சொஸ்த மாக்கல்
தர்ம மென்று சொல்லுவார்
சுத்த மேனும் ஜாதியால்
தொடப்ப டாதிங் கென்றிடில்
தொத்து நோயைக் காட்டிலும்
கொடிய ரென்று சொல்வதோ?[11]

என்ற இந்தப் பாடலில் தீண்டாமைக்கு உட்பட்ட மாந்தரைத் தொட்டால் ஒட்டிக் கொள்ளும் பெருநோய் உடையோர்க்கும் கீழாக எண்ணுவது முறையன்று என்று கவிஞர் ஆற்றொணாத் துயரத்தோடு ஆதங்கப்படுவதைக் காணலாம்.

சீர்கெடுக்கும் குடி

சமூகத்தின் சீர்கேட்டிற்குப் பெரிதும் துணை நிற்பது குடிப்பழக்கமாகும். அக்காலத்தே காந்தி, ராஜாஜி போன்ற

பெரியோர்கள் இதற்கு வன்மையான எதிர்ப்பைத் தெரிவித்து வந்துள்ளனர். கவிஞர் இக்கொடிய சக்தியை எதிர்த்து வன்மையாகக் கண்டித்துள்ளார்.

"மக்களை வதைத்திடும்
மனைவியை உதைத்திடும்
துக்கமான கள்ளினைத்
தொலைப்பதே துரைத்தனம்
தேசமெங்கும் தீமைகள்
மலிந்த திந்தக் கள்ளினால்
நாசமுற்று நாட்டினர்
நலிந்த திந்தக் கள்ளினால்
குற்றமென்று யாருமே
கூறுமிந்தக் கள்ளினை
விற்க விட்டுத் தீமையை
விதைப்ப தென்ன விந்தையே"[12]

என்ற இப்பாடலில் குடிப்பழக்கம் பலராலும் கண்டிக்கப்படும் போது இதனை விற்பனை செய்யச் சமூகம் எவ்வகையில் ஆதரவு தரலாம் என்ற வினாவையும் எழுப்பியுள்ளது காணத்தக்கது.

தொண்டன்

மொத்தத்தில் சமூகம் முன்னேற மனித நேயம் தழைக்க 'அன்பு' தான் துணை நிற்க முடியும். அவ்வன்பு தொண்டின் மூலமே வெளிப்படும். அத்தகைய தொண்டுள்ளம் கொண்ட உண்மைத் தொண்டனைப் பற்றிக் குறிப்பிடும் போது,

'தொண்டு செய்யக் கற்றவன்
துயரம் போக்கும் உற்றவன்
சண்டை போடும் மக்களைச்
சரசமாக்கி வைக்கவே
தீர வாழ்வு சொல்லுவான்
தீமையாவும் வெல்லுவான்
அன்பினைப் பெருக்குவான்
ஆசையைச் சுருக்குவான்
துன்ப முற்ற எவரோடும்
துணையிருக்கத் தவறிடான்
கூவிடாமல் ஓடுவான்
குறைகள் தீர்க்க நாடுவான்

ஏவிடாத தொண்டனே
எதிலும் வெற்றி கொண்டவன்'[13]

என ஏவா மக்கள் மூவா மருந்தாய்த் திகழும் தொண்டனைப் பாராட்டுகிறார்.

வெற்றி என்பது எது எனக் கவிஞரைக் கேட்டால் அவர் பின்வருமாறு கூறுகிறார். நாடு பிடிக்கும் ஆசையால் வலிந்து பிறர் மண்ணைக் கவர, கலவரங்களையும் மக்களிடையே சாதி சமயக் காழ்ப்புணர்வுகளையும் ஏவி விட்டு, அதனைக் காரணமாகக் கொண்டு போரிடுவதாலும் சண்டையிடுவதாலும் கிடைப்பது உண்மையான வெற்றி ஆகாது. போரிடுவதும் சண்டையிடுவதுமல்ல வெற்றி. வெற்றி என்பது விட்டுக்கொடுப்பது; அமைதி காப்பது; இழப்பைத் தவிர்ப்பது ஆகும். இது பற்றிக் கூறும்போது,

'மண்டை வந்த நாளிலே
மரணம் உண்டு தோளிலே
சண்டை போடத் தூண்டித்தான்
சாகச் சொல்ல வேண்டுமா
குண்டுபோட யுத்தமா
கொல்லக் கூட வித்தையா
மண்டலத்தில் போரையே
மறந்து போக நேருமா'[14]

என வீரம் என்பது போரிலும் சண்டையிலும் இல்லை. அது 'அன்பு' என்னும் மூன்றெழுத்தில்தான் உள்ளது. அதுபோல ஆண்மை என்பது பற்றிக் கூறும் போது,

'உள்ளதை உரைத்தல் ஆண்மை
ஒளிப்பதை ஒழித்தல் ஆண்மை
கள்ளத்தைக் கடிதல் ஆண்மை
கயமையைக் காய்தல் ஆண்மை
எள்ளளோத்த துன்பம் கூட
எவருக்கும் இழைக்கா தாண்மை
வெள்ளத்தைப் போன்ற அன்பின்
வெற்றியே விரும்பும் ஆண்மை'[15]

என ஆண்மையின் திறம்பற்றிக் கூறுகிறார். இது பெண்மைக்கும் பொருந்தும்.

முடிவுரை

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் ஒற்றுமை, கூட்டுறவு, சமதர்மம், கள்ளுண்ணாமை, தீண்டாமை ஒழிப்பு போன்ற எத்தனையோ மானுடத்திற்குத் தேவையான செய்திகளைக் கூறியுள்ளார். இவை அத்தனையும் மனித நேய வெளிப்பாடுகள் என்றால் மிகையாகாது. 'பண்பைக் காப்போம்' என்ற தலைப்பில் அவர் சொன்ன கருத்தையே முத்தாய்ப்பாக வைத்து, மனித நேயச் சிந்தனை அவரது கவிதையின் ஊடு பாவாக அமைந்துள்ளது எனச் சொல்லி,

அயல் நாட்டை அபகரிக்கும் ஆசைக் கல்ல
பிறமொழியை அவமதிக்கும் அகுந்தைக் கல்ல
இயல்பான உரிமைகளை இழந்திடாமல்
இனப்பெருமை நற்குணத்தை இழந்திடாமல்
செயலாலும் சொல்லாலும் சிந்தையாலும்
செய்ய தமிழ்த் திருநாட்டின் நலமே பேணி
உயர்வான தமிழ்ப் பண்பைக் காப்போ மானால்
உலக நலம் காப்பதற்கும் உதவியாகும்[16]

என்ற கவிஞரின் கருத்தோடு, மனித நேயம், மானுடம் ஆகியவற்றின் வெளிப்பாடு அவரது பண்பாட்டோடு இரண்டறக் கலந்துள்ள தென்றால் மிகையாகாது. களையற்ற நற்கழனியிற் செழித்து விளைந்து விளைந்து பக்குவமாய்த் திகழும் நெற்கதிர்போல், பட்டறிவாலும் காந்தீயச் சிந்தனையாலும் உயர்ந்து நிற்கும் கவிஞரின் கவின்மிகு கவிதைகள் யாவுமே உலக நலம் பேணல் என்ற மனிதநேயக் கோட்பாட்டால் சிறந்து விளங்குவன அன்றோ!

குறிப்புகள்

1. சமுதாயமும் பண்பாடும், அ.மு.ப., ப.225
2. மேற்படி " " ப.225
3. மேற்படி " " ப.226
4. மேற்படி " " ப.226
5. கல்சர் பண்பும் பயனும் அது ப.2
6. நாமக்கல் வே. இராமலிங்கம் கவிதை ப.164
7. " " ப.174
8. " " ப.196

9.	"	"	ப.164
10.	"	"	ப.168
11.	"	"	ப.168
12.	"	"	ப.172
13.	"	"	ப.172
14.	"	"	ப.417
15.	"	"	ப.408
16.	"	"	ப.197

******

‘அப்துல் ரகுமான் கவிதைகளில் மனிதநேயம்

அ. பூரணலதா
ஆய்வாளர்

இலக்கியக் கலை மானுடத்தின் நலனைக் காத்து வளர்த்திட வேண்டும். கவிதை இலக்கியம் படைக்கும் கவிஞன் சமுதாயத்தின் ஓர் உறுப்பினன். சமுதாய நாற்றங்காலில் தான் இலக்கியப்பயிர் செழித்து வளர முடியும் இருக்கின்ற சமுதாயத்தை மாற்றி, இருக்கவேண்டிய சமுதாயத்தைக் கொண்டுவர எண்ணுபவன் கவிஞன். “ஒரு சமுதாயத்தின் விருப்பு, வெறுப்பு, நம்பிக்கை முதலியவற்றை வளர்த்துப் பண்படுத்துவது அந்தச் சமுதாயத்தின் இலக்கியமே. ஆகையால், இலக்கிய வடிவில் மனித வாழ்வைப் பெரிதும் மாற்றியமைப்பது கவிதைகளே”[1] என்பது மு.வ. கூற்று.

மானுட சமுதாயத்தின் மீது தீராக் காதல் கொண்டுள்ள கவிஞர்கள், தங்கள் கவிதைகளில் ஆன்ம நேயமெனும் மனித நேய மேம்பாட்டை விழையும் விருப்பினராக உள்ளனர். மற்றவர்களுடன் நட்புறவு கொண்டாடுதல், அன்பினை வளர்த்துக் கொள்ளுதல், சகமனிதனுக்கு ஒத்துழைப்பும் உதவியும் வழங்குதல், சுயநலமின்மை ஆகியவை மனிதநேயப் பண்புகள் எனலாம். அப்துல் ரகுமானின் ‘பால்வீதி’, ‘சுட்டுவிரல்’, ‘ஆலாபனை’ ஆகிய மூன்று கவிதை நூல்களிலும் காணப்படும் சில கவிதைகளிலுள்ள மனிதநேயக் கருத்துகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

மனித நேயத்தின் அடிப்படை

மனித நேயம் பிறக்க வேண்டுமானால் ஒவ்வொருவர் மனத்திலும் சுயநலம் என்பது நீங்க வேண்டும். “நீதி நூல்கள் எப்போதும் ‘நான் அல்லேன், நீயே’ என்று சொல்லுகின்றன. அவற்றின் இலட்சியம் ‘சுயநலம்’ அல்ல, ‘சுயநலமின்மை’ என்பதே ஆகும்”.[2] தான் பெற்ற மானுடப்பிறப்பு முழுமைபெற்றுச் செம்மையுற வேண்டுமெனில், மனிதன் சகமனிதனை நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மனிதநேயம் வளர்ந்தோங்க வேண்டும். பிற உயிர்களின் மேல் அன்பு, இரக்கம் கருணை போன்றவை மனித மனத்திற்குள் ஊற்றெடுக்க வேண்டும்.

“எந்தக் கொள்கை மனித நேயத்தைப் போதிக்கிறதோ அதுவே உயர்ந்த கொள்கை. மனித நேயத்தை அடிப்படையாகக்

கொண்டிருக்காத கொள்கை எவ்வளவு உயர்ந்ததாயினும் தூக்கி எறியப்பட வேண்டியதாகும்"[3] என்று அப்துல்ரகுமான் குறிப்பிடுவதிலிருந்து மனித நேயத்தின் மகத்துவத்தை அறியமுடிகிறது.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று தாவரங்களையும் கருணைக் கண்கொண்டு நோக்கினார் வள்ளலார். ஆறறிவுபெற்ற மனிதன் சக மனிதனிடம் மட்டுமல்லாமல் விலங்கு, பறவை, தாவரங்கள் முதலான சகல உயிரினங்களிடமும் சொல்லாலோ, செயலாலோ கருணையுடனும் அன்புடனும் நடந்து கொள்வதும் மனிதநேயம் என்றே கொள்ளலாம்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பது ஆன்றோர் வாக்கு. சேவை மனப்பான்மை மனித நேயத்தின் அடிப்படையில் பிறக்கிறது. தானாகவே முளைத்து, தானாகவே தண்ணீர் குடித்து, தானாகவே வளர்ந்து தன்னையே வழங்கும் இயல்புடையது பனைமரம். அந்தப் பனைமரத்தைப் போன்று தன்னலமில்லாமல் சேவை புரிபவர்கள், மனிதனாய்ப் பிறந்ததன் பயனை அடைந்தவர்களாகின்றனர். மேகத்தைப் போல தானும் மழையாக வேண்டும் என்று கேட்பவனைப் பார்த்து,

"உன்னைக் கேட்பவர்களுக்கு
உன்னை முழுமையாகத் தர
ஒப்புக்கொள்
நீயும் மழையாவாய்"[4]

என்கிறார் அப்துல்ரகுமான். மற்றவர்களுக்கு உதவுவதற்காகத் தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கும் உயர்ந்த உள்ளமே மனித நேயத்திற்கு அடிப்படை எனலாம்.

மானுட தர்மம்

மனித நேயம் என்பதை மானுட தர்மம் என்று சொல்லலாம். காலங்காலமாகப் போதிக்கப்பட்டும் இன்னும் இந்த மானிட தர்மம் போதனைக்குரியதாகவே இருக்கிறது. "இந்த மண்ணுக்கு வரலாறா யிருக்கிற வறுமையும், இந்த மண்ணில் பரம்பரையாய்ப் பாதுகாக்கப் பட்டு வரும் பலவீனங்களும் ரத்தம் கலந்த கண்ணீரும் எப்போதும் இருந்து வரும் ஏமாற்றங்களும் அவற்றுக்குத் தீர்வு காணவேண்டும் அல்லது அவற்றிலிருந்து தப்பிக்க வேண்டும் என்ற தவிப்பும் தகிப்பும் இந்த மண்ணில் கவிஞர்களை உற்பத்தி செய்யும் கருவறைகளாகும்"[5] என்கிறார் வைரமுத்து. அந்தக் கருவறையின் குழந்தைதான் அப்துல்ரகுமான் என்று எண்ணும் வண்ணம் அவரின் கவிதைகளில்

மனிதம் பாடுபொருளாகியுள்ளது. மனிதத்தில் ஒரு கூறாகிய மனிதநேயம் அவரின் விழைவாகியுள்ளது.

'ஒரே ஒரு பாதை மட்டும் காணோம்
இதயத்திற்குப் போகும் பாதை
அதனால் தான்
மனிதன் இன்னும் ஊர்போய்ச் சேரவில்லை'[6]

என்று இன்றைய சமுதாயத்தில் வாழும் மனித மனங்களைப் பற்றிக் குறிப்பிடுவதன் மூலம் மனித நேயத்தின் தேவையை உணர்த்துகின்றார் கவிஞர்.

மனிதமும் மனிதநேயமும்

மனிதனின் கண்களுக்கு மறைப்பாகவும், தூக்கமாகவும் உள்ள 'நான்' என்ற அகங்காரத்தைக் கொலை செய்துவிட்டால் தான், மனித மனத்தில் சக மனிதன் மேல் நேசமும் பாசமும் தோன்றும்.

'காதலை மட்டுமல்ல
கடவுளை வாங்குவதற்கும்
'நான்' என்பதுதான் விலை
. . . .
. . . .
ஆம்
'தற்' கொலை செய்துகொள்
நீ அமரனாவாய்!'[7]

என்கிறார் அப்துல்ரகுமான்.

மனித இனத்தில் நாகரிகம் என்ற பெயரில் மனிதத்தன்மை சீரழிகிறது. காட்டில் வாழ்பவர்களைப் பார்த்துக் காட்டுமிராண்டிகள் என்று சொல்கிறோம். ஆனால் நாட்டில் இருப்பவர்களை நாட்டுமிராண்டிகள் என்று இடித்துரைக்கிறார் அப்துல்ரகுமான்.

'நீ காட்டில்
மனிதனாய் இருந்தாய்
நாமோ நாட்டில்
மிருகங்களாய் இருக்கிறோம்'[8]

என்ற வரிகளில் மனிதம் மிருகமான நிலையைக் கூறுகிறார். இவ்வாறு இடித்துரைப்பதன் மூலம் மனிதன் மனிதத் தன்மையைப் பெறவேண்டும் என்று ஆவல் கொள்கிறார். "ஒருவருக்கொருவர் துணையாக இருக்கவேண்டும் என்றுதான் சமுதாய வாழ்க்கையை

மனிதர்கள் மேற்கொண்டார்கள். ஆனால் காட்டுமிராண்டிகளின் நாகரிகம் கூட நாட்டு மனிதர்களிடம் இல்லையே?'[9] என்கிறார் கவிஞர் கண்ணதாசன்.

மானுடத்தின் குறைகளை இடித்துரைத்த அப்துல்ரகுமான் மானுடத்தின் சிறப்பையும் கூறுகின்றார். ஒருநாள் தனக்கும் வானத்திற்கும் போட்டி நடந்ததாகக் குறிப்பிடும் கவிஞர்,

'இறுதியில் நான்
புதுப்புது இலட்சியங்களை
நோக்கி நடக்கும்
என்பாதங்களை எடுத்துவைத்தேன்
வானம் தோற்றது'[10]

என்கிறார். வானத்தையே தோற்கடிக்கும் வலிமை மனிதனின் இலட்சியங்களுக்கு உண்டென்றால், மனிதநேயமும் அந்த இலட்சியங்களில் ஒன்றாக இருக்குமானால் வையம் தழைக்கும்.

சிறார் நேயம்

கண்ணாமூச்சி ஆடவேண்டிய விளையாட்டுப் பருவத்தில், வாழ்க்கையே கண்ணாமூச்சி ஆகிவிட்ட குழந்தைத் தொழிலாளர்கள் அப்துல்ரகுமானின் இதயத்தைக் கனக்க வைக்கிறார்கள்.

'வருடம் தவறாமல்
குழந்தைகள் தினத்தைக்
கொண்டாடுகிறவர்களே!
தினங்களைக் கொண்டாடுவதை
விட்டு விட்டுக்
குழந்தைகளை எப்போது
கொண்டாடப் போகிறீர்கள்?'[11]

என்ற கவிதை வரிகளில் குழந்தைகள் மீது அவர் கொண்ட நேயத்தைத் தரிசிக்க முடிகிறது.

இளைஞர் நேயம்

'கரும்பலகையில் தொடங்குவது
கறுப்பு அங்கியில் முடிகிறது
ஒவ்வொரு கையிலும்
காகிதத் திருவோடு'[12]

என்று வேலையில்லாப் பட்டதாரி இளைஞர்கள் மீது நேயம் கொண்டு உருகுகிறார் அப்துல் ரகுமான்.

வறியார் மீது நேயம்

வறுமையில் வாழ்வதைக் காட்டிலும் வேறு கொடுமை உலகில் இல்லை எனலாம். மனிதத்தைத் தம் கவிதைகளில் பாடுபொருளாகக் கொண்டுள்ள கவிஞர் மனிதனின் வறுமை நிலையைக் கண்டு வருந்துகிறார். இது அவருடைய சமூக அக்கறையையும், மாறாத மானுட நேசத்தையும் காட்டுகிறது எனலாம்.

'வறுமைக் கோட்டை அழிப்போம் என்று
பேசினேன். அரசாங்கச் சொத்தை
அழிக்கத் தூண்டியதாக அடைத்துப்
போட்டு விட்டார்கள்'[13]

என்கிறார். மேலும்,

"சுதந்திர தினவிழாவில் ஜனகணமன பாடிக் கொண்டிருந்தார்கள். நான் பசியால் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தேன். எழுந்து நிற்க முடியவில்லை. தேசிய கீதத்தை அவமதித்தாகச் சிறையில்அடைத்துவிட்டார்கள்"[14]

என்றவரிகள் ஒவ்வொருவரையும் ஆழ்ந்து சிந்திக்க வைப்பதுடன் வறுமையின் கொடுமையைப் படம்பிடித்து மனத்தில் இரக்கத்தைச் சுரக்கச் செய்கிறது. இதனையே,

'இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது'[15]

என்று வள்ளுவர் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

வறுமையில் வாடுகின்றோருக்குத் தன்னால் இயன்ற உதவியைச் செய்வது மனிதநேயம் எனலாம்.

'உன் கண்களை
இரக்கக் கண்ணீரால் அலங்கரி'[16]

என்ற கவிதை வரிகளும்

'உன் கைகளை ஈகையால் அலங்கரி'[17]

என்ற வரியும் மனிதநேயத்தை வார்த்தைகளில் தரிசிக்கச் செய்யும் வரிகள் எனலாம்.

சாதி பேதங்களைச் சாடல்:

அப்துல் ரகுமானின் கவிதைகளில் சாதி மத பேதங்களைச் சாடுகின்ற, சமத்துவ சமுதாயத்தைக் காண விழைகின்ற மனித

நேயத்தைக் காணமுடிகிறது. 'செம்புலப் பெயல்நீர்' போல எல்லாம் கலந்துவிட்ட இந்த விஞ்ஞானக் காலத்திலும் சாதியையும் வருணத்தையும் தன் விலாசமாகச் சொல்லுபவனைக் கேலி செய்கிறார் அப்துல் ரகுமான். சுரங்கள் சங்கமிக்கும் பூபாளராகத்தின் அபசுரங்கள் தான் சாதி பேதத்தைக் கொண்டாடுவோர் என்கிறார்.

'இல்லை
இன்னும் நான்
இந்தச் சாதிதான்' என்கிறாயா?
அப்படியென்றால்
பிரேதமே!
உயிருடையவர்கள் மத்தியில்
உனக்கென்ன வேலை?[18]

என்கிறார். மனிதநேயமே இக்கவிதையின் அடிநாதமாக ஒலிப்பதை உணர முடிகிறது.

சட்டத்தின் ஓட்டைகள்:

சரியான நீதியைத் தராமல் கண்களைக் கட்டிக் கொண்டுள்ள நீதி தேவதையை இவ்வாறு சாடுகின்றார் கவிஞர்.

'உன் தராசுத் தட்டுக்களைக்
கொஞ்சம் கண்திறந்து பார்!
அங்கே
புறாவின் மாமிசத்தைச்
சிபிகள் உண்ண ஆரம்பித்து விட்டார்கள்'![19]

என்பது அவர் கவிதை. மக்கள் மீது கொண்டுள்ள வாஞ்சையின் காரணமாக அவர்களுக்கு நீதி மறுக்கப்படும் நிலைகண்டு குமுறியது கவிதையாகியுள்ளது.

பெண்மை மீது நேயம்!

பெண்மை, போற்றி மதிக்கப்பட வேண்டியது. நம் நாட்டில் பெண்மை அடிநாள் தொட்டே அடிமைத்தளையில் கட்டுண்டு வந்திருக்கிறது என்பது கருத்தாக வெளிப்படுகிறது. இல்லறமாகிய நல்லறம் நடத்துவதற்காக வாழ்க்கைத் துணையைத் தேடுகின்ற ஆண்மகன், வரதட்சணை கேட்கும் அவலத்தைக் கீழ்க்காணுமாறு கூறுகின்றார்.

'நீ உன்னை விற்றால் அது விபச்சாரம்
நாம் எங்களை விற்றால்
அது திருமணம் என்றோம்'[20]

என்று வரதட்சணை கேட்கும் முதுகெலும்பில்லாத ஆண்மக்களைச் சாடுகின்றார்.

'காதல் கூட
நாம் உனக்கு விரிக்கும் வலைதான்
தாலி கூட
நாம் உனக்குப் பூட்டும் விலங்குதான்
அம்மா, சகோதரி, காதலி, மனைவி, மகள்
வைப்பாட்டி, வேசி என்று
எங்கள் விளையாட்டிற்கான பொம்மையாகவே
உன்னை ஆக்கினோம்'[21]

இவை பெண்கள் படும் துன்பம் கண்டு மனசாட்சியுடன் அப்துல் ரகுமான் வடித்த வரிகள் எனலாம். "பெண்ணிற்கு மதிப்புக் கொடுங்கள்; உரிமை கொடுங்கள்; வணக்கம் செலுத்துங்கள்; பெண்ணை மதித்துப் போற்றலே நாகரிகம்; அவளைக் கட்டுப்படுத்தல் - அடிமைப்படுத்தல் - கொடுமையாக நடத்தல் அநாகரீகம்"[22] என்ற திரு. வி. க.வின் கூற்று இங்கு நோக்கத்தக்கது.

பெண்மை நசித்திடும் நிலை கண்டு குமுறுகின்ற கவிஞர், பெண்களின் கடமையையும் நினைவூட்டுகின்றார். புதுமைப் பெண்கள் என்ற பெயரில், பெண்மைக்குரிய இலக்கணத்தைத் துறந்து விட்ட பெண்களைச் சாடுகின்றார்.

'ஒன்று, தெய்வமாகிறாய்;
இல்லையென்றால்
பேயாகின்றாய்
மனிதம் உனக்கு
எப்போது வாய்க்கும்?'[23]

என்ற அழுத்தமான வரிகள் மூலம் இன்றைய புதுமைப் பெண்களுக்குள் மனிதத்தைத் தேடுகின்றார். பெண்மையின் மீது கொண்ட மனிதாபிமானத்தின் காரணமாகவே தவறுகளைச் சுட்டிக் காட்டி நெறிப்படுத்த விழைகிறார்.

அரசியல் அவலம்:

தான் வாழும் நாட்டில் அரசியல் அவலத்தைக் கண்டு, குறைகளைக் கண்டு வருந்துகிறார் கவிஞர். சகமனிதர்கள் மீது

கொண்ட நேசத்தினாலேயே அவர் சமூகக் குறைகளைச் சுட்டிக் காட்டுகிறார்.

'யாப்பு என்றால் ஒன்றாகக் கட்டுதல்
என்று பொருள்
வெறும் சொற்களைக் கட்டும் யாப்பிலக்கணத்தைக் கற்றவன் கவிஞனாக முடியாது. மனிதர்களை நேசத்தளையில் கட்டும் யாப்பிலக்கணத்தைக் கற்றவனே கவிஞனாகிறான்'[24]

என்கிறார்.

மனிதர்களை நேசத்தளையில் கட்டும் யாப்பிலக்கணம் கற்ற கவிஞராக விளங்குவதாலேயே சமூகக் குறைகளைச் சுட்டுகிறார். அவ்வாறு சுட்டுவதன் மூலம் அக்குறைகள் களையப்பட வேண்டும் என விரும்புகிறார்.

தேர்தலினாலும் ஜனநாயகத்தினாலும் மக்களுக்கு எந்தப் பலனும் இல்லை. ஐந்தாண்டுக்கு ஒரு முறை என்ற தலைப்பில்,

'புறத்திணைச் சுயம்வர மண்டபத்தில்
போலி நளன்களின் கூட்டம்
கையில் மாலையுடன்
குருட்டுத் தமயந்தி'[25]

என்கிறார். வாக்காளர்களைக் குருடர்களாகவும் வேட்பாளர்களைப் போலிகளாகவும் உருவகிப்பதன் மூலம் இன்றைய ஜனநாயத்தின் மிக மோசமான அவலநிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார். நமது திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படாமல், வஞ்சகமான அரசியல்வாதிகளே பலன்களை அனுபவிக்கின்றனர் என்கிறார்.

'வரங்களே
சாபங்கள்
ஆகுமென்றால்
இங்கே
தவங்கள்
எதற்காக?'[26] என்கிறார்

மனிதன், சகமனிதன் மேல் நேசம் காட்டினால் மட்டுமே சமுதாயம் ஆரோக்கியமானதாகத் திகழும். "ஈட்டி முனையால் சாதிக்க முடியாததைக் கூட இதயக் கனிவால் சாதிக்க முடியும்"[27] என்பது கண்ணதாசனின் கூற்று. அரசியலில் அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தலைகால் புரியாமல் ஆடும் அதிகார வர்க்கத்தினரைப் பார்த்து,

"உங்கள் அதிகாரம்
மண்ணைத் தானே ஆள்கிறது
அதனால் மனங்களை
ஆள முடியவில்லையே"[28]

என்கிறார். மனங்களை ஆள்வதற்கு மனிதர்கள் மேல் உண்மையான நேசம் கொள்ள வேண்டும் என்ற கருத்து இங்கு தொனிக்கிறது.

முடிவுரை

அன்பு நீங்கி அராஜகம் குவிவதற்கும், நட்பு நீங்கிப் பகை வளர்வதற்கும், மனித நேயம் என்ற உயர்பண்பு, மனித சமுதாயத்தை விட்டு விலகிப் போனதே காரணம்.

தனிமனிதன் மீதும் சமுதாயத்தின் மீதும் கொண்ட நேசத்தினால் மக்களின் அவலநிலைகளையும் அதற்கான காரணங்களையும் தம் கவிதைகளில் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர். அவ்வாறு சுட்டிக் காட்டுவதன் மூலம் அக்குறைகளை நீக்கி, மனித நேயத்தை விதைக்க முயல்கிறார்.

உன்னதமான மனிதநேயத்தைத் தன் கவிதைகளில் பாடுபொருளாக்கியிருப்பதன் மூலம், கவிதையைப் படிப்போர் மனத்தில் மனித நேயத்தை வளர்க்க முயன்றிருக்கிறார்.

மனித நேயம் என்ற உயர்நிலைப் பண்பு நெறியைக் கடைபிடிக்கத் தொடங்கினால் ஒப்புயர்வற்ற சமுதாயத்தைப் படைக்க முடியும் என்ற அப்துல் ரகுமானின் உள்ளக்கிடக்கையே அவரின் கவிதைகளில் வெளிப்படுகிறது.

குறிப்புகள்

1. மு. வரதராசன், இலக்கியத்திறன், ப. 45.
2. விவேகானந்தரின் அறிவுரைகள், ப. 51.
3. அப்துல் ரகுமான் மணிவிழாமலர், ப. 102.
4. அப்துல் ரகுமான் ஆலாபனை, ப. 68.
5. வைரமுத்து, கல்வெட்டுக்கள், ப. 42.
6. அப்துல் ரகுமான், மு.கூ.நூ., ப. 104. (முன் கூறிய நூல்)
7. மேலது, ப. 135.
8. மேலது, ப. 152.
9. கவிஞர் கண்ணதாசன், அனுபவ மொழிகள், ப. 48.

10. அப்துல் ரகுமான், மு.கூ.நூ., ப. 18.
11. மேலது, சுட்டுவிரல், ப. 89.
12. மேலது, ப. 24.
13. மேலது, ப. 12.
14. மேலது, ப. 12
15. திருக்குறள், கு.எ. 1041.
16. அப்துல் ரகுமான், ஆலாபனை, ப. 24.
17. மேலது, ப. 25.
18. அப்துல் ரகுமான், மு.கூ.நூ., ப. 217.
19. மேலது, பால்வீதி, ப. 83.
20. அப்துல் ரகுமான், மு.கூ.நூ., ப. 9.
21. மேலது, ப. 10.
22. திரு. வி. கலியாண சுந்தரனார், பெண்ணின் பெருமை, ப. 302.
23. அப்துல் ரகுமான், சுட்டுவிரல், ப. 79.
24. அப்துல் ரகுமான், மு.கூ.நூ., ப. 91.
25. மேலது, பால்வீதி, ப. 72.
26. மேலது, ப. 79.
27. கவிஞர். கண்ணதாசன், மு.கூ.நூ., ப. 34.
28. அப்துல் ரகுமான், ஆலாபனை, ப. 155.

******

மனிதநேயமும் இயேசுமாகாவியமும்

முனைவர் அன்னிதாமசு
பேராசிரியர்

மனித நேயம். அது மனத்தில் தோன்றும் மலர்ச்சி. இதயத்தில் சுரக்கும் ஈரம். தக்கார் தகவிலர் என வேறுபாடு கணிக்காது அனைவர் பாலும் பொங்கும் அருள் உணர்ச்சி. கருணைப் பொழிவு.

சிந்தனையில் அருளும், இதயத்தில் நெகிழ்ச்சியுமாக உள்ளூறுகின்றது மனிதநேயம். இன்சொற்களாக வெளிப்பட்டு, தியாகச் செயல்களாகப் புறப்படுகின்றது; புலப்படுகின்றது. பிறர் மேம்பாட்டுக்காகத் திட்டங்கள் தீட்டுகின்றது. இல்லாதார்க்கு நிறைவு தரும் ஈகையை முன்னிறுத்துகின்றது. அது தன்னைப் போல் பிறனை நேசிக்கும். பகைவனுக்கும் அருளும். பிறருக்காகத் தன்னை ஒறுக்கும். தன்னை இழக்கும். தான் கண்ணீர் குடித்துப் பிறருக்குத் தண்ணீர் கொடுக்கும். பிறர் கண்ணீர் கண்டு தன் நெஞ்சில் செந்நீர் ஒழுக்கும். பிறர் பசி கண்டு தன் வயிறு காயும். பிறர் தவறுக்காகத் தான் நாணும். பிறர் தீச் செயல்களுக்குத் தான் அஞ்சும்.

சமயத்திற்குரியதல்ல மனித நேயம். சமயம் கடந்தது. மனித நோக்குடையது. மனிதம் வளர்க்கப் பாடுபடுவது. தீவிரவாதம் வழியல்ல; சாத்துவீக முறையில் சிக்கல் அவிழ்ப்பதே மனித நேயம்; ஆயுதங்கள் இல்லாது தீர்வுகள் காண்பதே மனிதநேயம்.

சாதி மத பேதமோ ஏற்றத் தாழ்வோ பார்க்காதது தான் மனித நேயம். சமத்துவம், சகோதரத்துவம் என அனைவரையும் சரிநிகர் சமானமாகக் கருதுவதே அதன் பண்பு. மனிதனுக்கு மனிதன் நெகிழ்ச்சி காட்டுவதுடன் நின்றுவிடாது பரந்து விரிந்து அனைத்துயிருக்கும் இரங்கி, வாடிய உயிரைக் கண்ட போதெல்லாம் எல்லாம் வாடி, தன் ஊன் பெருகப் பிற ஊன் அழிக்காது, எல்லா உயிரையும் தன் உயிர் போல், எல்லோரையும் தன்னைப் போல் பாவித்துக் கொள்வது அதன் மாண்பு.

தனி மனித வெளிப்பாட்டோடு, சட்டங்கள் வழியும் வெளிப்படுவது உண்டு மனித நேயம். பாதிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட 'ஊனமுற்ற மக்களுக்குப் பாதுகாப்பும் மேம்பாட்டு வழிகளும் சட்டம் வாயிலாக நிறைவேறுவதுண்டு. கூண்டுகளைத்

திறந்து சிறைப்பட்ட கிளிகளுக்கு விடுதலை தந்துவிடுவதுடன் அமைவதில்லை அது; தீயவை ஒறுத்து, நல்லவர் நசுக்கப்படாமல் புரக்கவும் செய்கிறது. இது ஒரு புலப்பார்வையாக ஒரு புறப்பார்வையாகக் கூட அமையும்.

கோட்பாட்டு நிலையில் இனிமையும் எளிமையுமாகத் தோன்றும் மனித நேயம், செயற்பாட்டுக்கு அவ்வளவு எளிமையானதல்ல- 'சொல்லுதல் யார்க்கும் எளிய............' (குறள். 664) என்பது போல! 'தான்' 'தனது' 'தனக்கு' என்பது அங்கு இல்லாதாக வேண்டும்; இழக்கப்படவேண்டும். அது அத்துணை எளிதானதல்ல. அதனால் கருத்துக்கும், கை கொள்ளுதலுக்கும் அகற்சி அமைகின்றது. எனவே, மனித நேயத்தை வகுத்துக் காட்ட முடியும், வாழ்ந்து காட்டுதல் கூடுமோ என்ற ஐய வியப்புத் தோன்றும்.

இயேசுமாகாவியம்

மனித நேயத்தை வாக்கிலும் வாழ்விலும் காட்டியவராக, இயேசுவைப் பதிவு செய்யும் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நிர்மலா சுரேஷ் இயற்றிய இயேசு மாகாவியம் (இதயம் பதிப்பகம், சென்னை, 2001) எனும் இலக்கியத்தைக் களனாக்கிக் காணும் போது 1. கவிக் கூற்றில், 2. இயேசுவின் சொற்களில், 3. இயேசுவின் செயல்களில் 4. இயேசு கூறும் கதைகளில் - எனச் சில தளங்களில் மனித நேயக் கருத்துகள் வெளிப்படுவது தெரியவருகிறது. 1. மனித நேயத்தோடு இருத்தல் 2. மனித நேயமற்றுச் செயல் படல், 3. மனித நேயமுடையவராக மாறுதல் என்ற சில பாத்திர நிலைகளும் காணப்படுகின்றன. உருவகமாகவும் குறியீடாகவும் மனிதநேயம் கவிஞரின் சொற்களிலும், மரபுத் தோய்வுடனும் உருவாக்கிக் காட்டப்படலும் உண்டு.

சொல்

'மானுடத்திற்கும் மனிதமென்னும் உயர் திணைக்கும் தலைவன்' (352) என்பது தவிர மனிதாபிமானம், மனித உரிமை, மனித நேயம் போன்ற பிற எந்தச் சொல்லமைப்பும் கவிஞரால் இங்குப் பயன் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. எனினும், 'மனிதநேயம்' என்ற பொருண்மையுடன் 'மானுடக் காதல்' (3)*, 'மக்கள் காதல்' (497), 'மக்கள் நேசம்' (48) என்பன பயன்கொள்ளப்படுகின்றன. இவ்வருகைகளில், இயேசு, மானுடக் காதல் கொண்டவராக, மக்கள்

* எண், பக்க எண்.

காதலனாக மக்கள் நேசனாகக் காட்டப்படுகிறார். 'நேசம்' என்ற தனிச் சுட்டின் வழியும் மனித நேயம் இந்நூலில் வெளிப்படுத்தப்படுகின்றது.

இயேசுவுக்கென்றொரு
தேசம் உண்டு.
அதன் பெயர் நேசம் (8).

இவையனைத்தும் கவிக்கூற்றாம்.

மனித நேயத்தோடிருத்தல்

மனித நேயத்தோடு இருக்கவே இயேசுவின் படைப்பு என்ற கருத்தை வழங்கும் நிலையில், மனித நேயம் வெளிப்படும் பாங்கில், கவிதை வரிகள் அமைகின்றன.

விளிம்பிற்குத் தள்ளப்பட்டவரை
விளிக்க வந்தவர்தான் இயேசு
பேதலித்துப் போன ஆன்மாக்களைக்
காதலிக்க வந்தவர்
சாமன்யரோடு சமபந்தி உண்(டவர்) (18)

ஒதுக்கப்பட்டவர், இயலாமையினர், எளியவர் - ஆகியோர்க்கு இணக்கமாகிச் செயற்படல் எனும் பாங்கு இங்கு வெளிப்படுகின்றது. தேவையிலிருப்பவர்க்கு அத்தேவையை நிறைவு செய்வதே இவர் பிறப்பின் முன் கருத்து என்பதை விவிலியப் பழைய ஏற்பாட்டின் மேற்கோள் வழி இவரே கூறுகின்றார்:

"..........ஏழைகளுக்கு நற்செய்தி
வழங்கவே என்னைத் தேர்ந்தெடுத்தார்;
சிறைப்பட்டவர்களுக்குச் சுதந்திரமும்
குருடர்க்குப் பார்வையும்
ஒடுக்கப்பட்டவர்க்கு விடுதலையும்
அளிக்கும் நேரம் நெருங்கிவிட்டதை
அறிவிக்கவே அனுப்பினார்" (311)

ஏழையுடன் தோழமை, கட்டுண்டவர்க்குக் கட்டவிழ்ப்பு, ஊனருக்கு நன்னலம் என்ற மேம்பாடுகள் அத்தகு உயிர்கள்பால் கொண்ட நேய உருக்கத்தால் சாத்தியமாகின்றன.

மனிதநேயமின்மை

சில காட்சிகள், ஆட்சிகள், நிகழ்ச்சிகள் மனிதநேயமில்லாத சமூகப் புலங்களைப் புலப்படுத்துகின்றன. மனிதனுக்குள்ளேயிருக்கும்

மனிதம் உறங்கிவிடுவதால் இத்தகு நிலையா? அல்லது அவனுக்குள்ளே யிருக்கும் விலங்கு விழித்துக் கொள்வதால் இப்பாங்கா? என்பது சிந்தனைக்குரியது. உடன் காலச் சமூகமும், சமயமும் அவற்றின் செயற்பாடுகளும் வரைவுகளும் இப்பான்மைக்குக் களம் வழங்கியுள்ளன. அக்காலச் சமூகத்தின் சட்ட வரைவும் இத்தகையதுதான்.

கண்ணுக்குக் கண் என்றும்
பல்லுக்குப் பல் என்றும்
பழிவாங்கச் சொல்கிறது
பழைய சட்டம் (243)

என இது பதிவு பெறுகிறது. வர்க்க வேறுபாடு கருதுதல், தீண்டாமையைப் பின்பற்றுதல் எனும் மனித நேயமற்ற சமூகச் செயன்மைகளும் இதனுடன் அணிசேருகின்றன. மனிதநேயத்தின் புலப்பாடான 'இரக்கம்' புலப்படுத்தாத வர்க்க சமூகம்! இதனால்,

கர்ப்பத்துக்குக் கூட
கருணை காட்டாத
அற்ப மனிதர் ஆயிரம் பேர் ....
வர்க்க சமூகத்தில்
இரக்கத்திற்கு இடம் ஏது? (82)

என வினாவை முன்னிறுத்துகின்றார் கவிஞர். 'புறம் போக்கு நிலம் போலக் கருதப்பட்டவர்கள்' (39) என இடையரும், 'சமாரியா! தீண்டாமைக் கொடுமையினால் தீவுபோலானது' (137) எனச் சமாரியரும் சமூகத்தால், சமூகமாக ஒதுக்கப்பட்டவர், ஒடுக்கப்பட்டவர் ஆகின்றனர். சடங்கு, காணிக்கை என ஏழையின் இரத்தம் உறிஞ்சும் மத வாதமும் மனித நேயமின்மையின் வெளிப்பாடாகத் தலைவன் மொழியில் புலப்படுகின்றன.

கட்டாயக் காணிக்கை
மிருக பலி குருதிக்கறை
தகனப் புகை
ஏழையின் பணம் ....
இவையெல்லாம்
தேவைதானா? (75)

அறமில் செயல்களைக் கடியவும் அறவழி காட்டவும் அறநூல்கள் எழுந்தது போல, மனித நேயமற்ற செய்கைகளைச் சுட்டி, மனித

நேயத்துக்கு நேரான நெறிகளைக் காட்டி மேம்படுத்துவதை ஓரிழையாகக் கொண்டு இக்காவியமும் ஆக்கப்படுகின்றது எனல் போதரும்.

மனித நேயத்தினை ஏற்றல்

இயேசு சந்தித்த நபர் பலருள் வரி தண்டல்காரனான -குள்ள உருவினனான - சகேயு என்பவனும் ஒருவன். அவரால் அவனில் ஏற்பட்ட உள்மாற்றம் அவனை மனிதநேயமுடையவனாக மாற்றுகின்றது. ஏழைக்கு, வறியவர்க்கு அளித்தல், நிவாரணம் வழங்குதல் என்பன மனிதநேயச் செயற்பாடுகளாக இங்கே புலனாகின்றன.

"பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு
என் உடமைகளில்
பாதியைத் தருகிறேன்
என் பணி நிமித்தம்
வஞ்சனைக்கு ஆளான வறியவர்க்கு
நான்கு மடங்காகப் பணம்
நிவாரணம் அளிக்கிறேன்" என்றான்.............
............சேமிப்பை விட்டுக் கொடுத்து
தன்னையே மீட்டெடுத்தான் (466)

மனிதமும் மனித நேயமும்

மனிதம் பகுத்தறிவினது. பண்புடையது. மூளையால் சிந்திப்பது. அறிவு பூர்வமான முடிவுகளெடுப்பது. தகுதியைப் பார்ப்பது. மனிதத்தில் வேரூன்றினும், மனித நேயம் ஒருபடி மேற்சென்று மீமனிதமாக அமைவது. மனிதநேயம் நெகிழ்ந்துணர் வுடையது. அன்புடையது. நெஞ்சத்தால் நெருங்குவது. இதயத்தால் சிந்திப்பது (மூளையால் ஊளையிட்ட நரிகளுக்கு மத்தியில் இதயத்தால் சிந்தித்த இயேசு, 195). அருளான செயற்பாடுகளைத் தேர்வது. பிறர் தேவையை நோக்குவது - நிறைவேற்றுவது.

மனித நேயத்தின் முக்கியமான மூன்று முகங்கள் இம்மாகாவியத்தில் வெளிப்படுகின்றன. 1. பிறனை நேசித்தல் 2. மன்னித்தல் 3. தன்னையே தருதல் என்பன அவை. தன்னையே தருதல் என்பதில், மீட்பு, தியாகம், தொண்டு, பிறருக்காகத்தான் துன்பம் தாங்குதல் என்ற பல தளங்களும் வெளிப்படுகின்றன. பிறனை நேசித்தல் என்பது அன்பினை, நேயத்தை மையங் கொண்டது. அதன்பல பரிமாணங்களாகவும், வெளிப்படு புலப்பாடுகளாகவும் அருள் (இரக்கம், கருணை); ஆறுதல்; உதவி; நன்மை தரல்;

அடைக்கலம் (சரணலாயம்), அஹிம்சை, சமத்துவம் (பேதமின்மை); சமாதானம் (அமைதி) - சாந்தம்; சகோதரத்துவம் எனப் பல கூறுகள் தெரியவருகின்றன.

மனிதநேயனாக இயேசுவைச் சித்திரிக்கும் போது இத்தகு முகங்கள் பலவும் தெரிய தெளிய வரைவார் கவிஞர்.

> எதிரிகளை *நேசித்தே* வீழ்த்திய
> போராளி அவர்!
> பூமிக் கோளத்தின் மீது *அஹிம்சை* ரேகைகளைப்
> பரவ விட்டவர் அவர்!
> அன்பு வானத்தின் *அருள்* ஓசோன்! (409)

எதிரணியினரின் கூற்றிலும் இவரது இப்பாங்கின் அருமுகங்கள் புலப்படும், புறப்படும்:

> "இவன் சுவாசக் காற்றே
> சொர்க்கத்தின் தென்றலாம்;
> புறவினத்தார்க்கும் இவன்
> அமைதிப் புறாவாம்;
> சாலையில் இவனைக் காண
> கூடும் கூட்டமே சமத்துவபுரமாம்!" (496, 497)

மனித நேயம் என்பது ஒரு பெரும் பரப்பு. பெருவட்டம். பெருவழி. அதற்குத் தொடக்கம் உண்டு. முடிவோ எல்லையோ நிர்ணயிப்பது அவ்வளவு எளிதல்ல. முடியாது?! இன்னும் இன்னும் என விரிந்து பரந்து கொண்டே செல்லும் அதன் தொடக்கம்,

> "பிறர் உங்களுக்கு
> எதைச் செய்ய வேண்டுமென்று
> விரும்புகிறீர்களோ, அதை நீங்கள்
> மற்றவர்களுக்குச் செய்யுங்கள்"
> என்றார் இயேசு (511)

எனச் சுட்டப்படுகின்றது. பிறரிலிருந்து தொடங்க எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதல்ல மனிதநேயம்; அது தன்னிலிருந்து தொடங்கப்பட வேண்டியது. அது எதிரொலிப்போ, எதிரொளிப்போ அல்ல. விதைப்பு, பதிப்பு.

தன்னைப் போல் பிறனை நேசி

நியாயப் பிரமாணங்களையும், கற்பனை (கட்டளை)களையும் எல்லாம் இரண்டாகச் சுருக்கி மொழிந்தால், ஒன்று, கடவுளை நேசி

என்பது; மற்றொன்று தன்னில் அன்பு கூர்வது போலப் பிறர் மீது அன்பு செலுத்த வேண்டும் என்பது. இவ் விவிலியச் செய்தி, கவி வாக்காகிறது:

> "படைத்தவனை நேசித்தல்
> ஆன்மாவின் ஆதாரம்;
> நம்மைப் போல் பிறரை நேசித்தல்
> வாழ்க்கைச் சக்கர ஆரம்' (395)

இந்தப் 'பிறர்', அன்னியனாகவும் இருக்கலாம்; அயலவராகவும் அமையலாம்.

> '.........அந்நியனாயினும் உன்னைப் போன்றே
> அன்பு நெஞ்சில் வரித்துவிடு' (439)

> '.........மனிதன் தன்னை நேசிப்பது போல்
> அயலவரையும் நேசிக்க வேண்டும்......' (511)

இதன் உச்சம் தான், பகைவனை நேசித்தல். 'எதிரிகளை நேசித்தே வீழ்த்திய போராளி' (409) என முன் கண்ட மேற்கோளையும் 'பகைவனுக்கருள்வாய்' (244) என்ற பகுதியையும் இங்கு இயைத்துக் காணலாம்.

மன்னிப்பு

கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் எனும் தண்டனைச் சட்டம் வழக்கத்திலிருந்த காலத்தில் மன்னித்து விட்டுவிடுதல் எனும் அன்பு வழிப்பட்ட நெறியை முதன்மைப்படுத்துகின்றார். அன்பு செலுத்த முடியாவிட்டால் பிறனை பகைவனை மன்னிக்க முடியாது. இறைவன் மனு மக்களை மன்னித்தல், மனிதன் மனிதனை மன்னித்தல் என்று நேர் கோடும் கிடைக்கோடுமாக இது வெளிப்படுகின்றது.

> என் தந்தையும் மன்னன் தான்
> மகனைக் கொன்ற மக்களை
> மன்னிக்கும் நீதிச் சோழன் (499)

என இங்குள்ள தொன்மத்தை அங்குப் பயன்படுத்துவார் கவிஞர். தந்தை (இறைவன்) மன்னித்தது போல் தனயனும் (இயேசு) மன்னிக்கிறார், சிலுவைப் பாடுகளில் கூட-

> "தந்தையே! இவர்கள்
> அறியாமல் செய்கிறார்கள்
> இவர்களை மன்னியும்" என்றார் (611)

ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும் என்பதை விளக்குவதற்காக இயேசு கூறிய கதையைத் தன் காவியப் பகுதியாக்கியுள்ளார் கவிஞர் (81. மன்னிப்பு, பக். 390-392)-

மன்னிப்பை,
விதைத்தால் தான் அறுவடை செய்ய முடியும் (392)

என்பது இதன் முத்தாய்ப்பான முடிப்பு. 'பாவையும் பாவமும்' (46, பக். 253-262) என்ற பகுதியில் இயேசுவிடமிருந்து மன்னிப்புப் பெற்ற பெண்ணைக் காட்டும் போதும்,

'.........மிகுந்த சிநேகமுடையவளுக்கு
மிகுந்த பாவங்கள் மன்னிக்கப்படும்' (260)

என அன்புக்கும் மன்னிப்புக்குமுரிய தொடர்பு காட்டப்படுகின்றது. இயேசுவின் தேசத்தில் 'மன்னிப்பே தண்டனை'யாம் (8); அவர் மன்னிப்பை அறிமுகப்படுத்தினார்; அவர்கள் காந்த சக்தியானார்கள்' (263) என்பன கவிக்கூற்று.

தன்னையே அளித்தல்

தனக்காகப் பிறரை வருத்துதல், பலியிடல் என்பதும்; தன்னை மையங் கொண்டே வாழ்க்கையை அமைத்தல் என்பதுமான 'இயல்பு' இருக்க, தன்னை இழக்கத் தயாராகுதல் என்ற செயன்மை, மனித நேயத்தின் பெருவரையாகப் பேரெல்லையாகத் தோற்றம் தருகிறது. அது 'வன்முறைக்கு மாற்றாக ஒரு புதிய ஏற்பாடு' (80); அவர் 'தன்னையே பிளந்து வழி தந்தார் செங்கடலாக' (193). இதன் நிறைவு சிலுவையில் அமைகிறது.

சிலுவை என்பது ஆயுதம் அல்ல;
....
சிலுவையை ஏந்துகிறவன்
தன்னையே தருகிறான் (617)

இங்குத் தன்னை இழத்தல் என்பது அழிவல்ல; பேறாகும். 'கோதுமை மணி, நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்' என்பது போன்றது இது.

........எனக்காகத் தன் வாழ்வை
இழக்கிறவன் பெறுகிறான்!
தன்னை மட்டுமே காத்து
வாழ்வைப்

பெறுகிறவன் இழக்கிறான்'
என்றார் (273)

ஊதுவத்தி போன்றும், மெழுகு திரி போன்றும், மருந்து போன்றும் தம்மை இழந்து - அழிந்து - மணமும் ஒளியும் நலமும் தருவது போல் என இதனை விளக்க முயலலாம்.

பிறரை மீட்கத் தன்னை அளித்தல் என்பதால் **மீட்பும்**, தன்னை ஒப்பளித்தல் என்பதால் **தியாகமும்** இங்கு வெளிப்படும் மனித நேயப் பண்புகளாகும்.

மனிதனின் மகன்
மழுங்கிப் போகும்
மானுடத்தை மீட்டார் (355)

மெசையா என்பவர் மீட்பர் (356)

மனிதரை மீட்க வந்தவனே நீ.......... (610)

தன்னுயிர் அளித்து மானிட மீட்பு சாத்தியமாக்கப்படுகின்றது இங்கு.

தியாகம், 'தியாக தேசியம்' (557) என உருவகப்படுத்தப் படுகிறது. 'தன்னையே உணவாய்த் தருகிறேன் என்றவர் தான்' (596) என்பது தியாகத்தின் பரிமாணமொன்றைக் காட்டுகிறது. தியாகம் கருவி ஆகிறது.

கொடுங்கோலர்கள் அஞ்சுவது
ஆயுதங்களுக்கு அல்ல
தியாகத்துக்குத்தான் (348)

இயேசு, தியாக ஆடாக உருவாகிறார். உருவகிக்கப்படுகிறார். பாவம் நீக்க, ஆடு பலியிடப்படுவது பழைய மரபு.

வழி நடத்துவதில் மேய்ப்பனாகவும்
தியாகத்தில் ஆடாகவும்
உருவகமானார் இயேசு (351)

இந்த உண்மை அவர் கூற்றிலும், 'தியாகத்தினால் **தீர்வு** வரும்! இது தேவன் சித்தம்' (364) எனப் பதிவு பெறுகின்றது.

தன்னுயிரளித்து மீட்டல், தன்னையே தியாகம் செய்தல் என்பதுடன், பிறர் துன்பம் தாங்குதல், பிறருக்காகத் துன்புறுதல், தொண்டாற்றுதல் என்பனவும் மனித நேய வெளிப்பாடுகளாகப் புலப்படுகின்றன. நல்லதையும், சிறந்ததையும் தான் எடுத்துக்

கொண்டு நலிந்ததையும் நசல்கொண்டதையும் பிறர்க்கென ஒதுக்கும் பொது மனித இயல்புக்கு வேறாக, பிறர் நன்மை பெறத் தான் துன்புறுதல், பிறர் தீதுறாதிருக்க அத்தீதைத் தான் ஏற்றல் என்னும் நேயமனப்பான்மை தனித்துக் கருதுதற்குரியது. 'மலர்களை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுத்து விட்டு முட்களைத் தனக்கென்று பறித்த முதல் மனிதனோ அவர்' (595) என்ற வியப்புக் குறிப்புத் தருவார் கவிஞர்.

பிறருக்கு உழைக்கத்
தம் தோளைக் கொடுத்துவிட்டு
தம் துயரங்களைத் தாங்க
இயேசுவையே தோளாய்க் கருதி ஓடிவந்த
தொழிலாளர் திரள் மறுபுறம் (250)

இது, இயேசுவின் 'மலைப் பொழிவு'ச் சூழல் விளக்கும் காட்சியின் கவிப்புனைவு. சிலுவைக் காட்சியில் இயேசுவுக்கமைந்த முள்முடியைத் தற்குறிப்பேற்றத்தோடு கவிஞர் புனைந்து தலைவன் சொற்களில் வடிப்பதும் மேற்படி மனிதநேயக் கருத்து வடிப்பாகும்.

மணிமுடி இல்லை எனக்கு!
மக்கள் பாதங்களில்
முள் தைக்கக் கூடாதென்று
அவற்றைச் சேகரித்துத்
தலையில் சுமப்பவன் நான்!
முள்முடி நாயகன்
என்கிறார்கள் என்னை! (498)

'உலகம் தன் துன்பங்களையெல்லாம் அவர் மீது இறக்கி வைத்ததோ' (601) என நெகிழ்வார் கவிஞர்.

பிறருக்காக உழைத்தல், பிறருக்குத் தொண்டு செய்தல் என்பன தன்னலங் கருதாத, தியாக, மனிதநேய வெளிப்பாடு என்பதில் ஐயமில்லை. இயேசுவின் ஊழியத்தின் முதுகுத் தண்டாகத் தொண்டு சுட்டப்படுகிறது.

அது ஒரு இயக்கம்!
இயேசு அதன் இதயம்!..........
.... தொண்டு அதன் முதுகுத் தண்டு!
தோழமை அதன் தோள்வலிமை!............. (263)

அவர், 'நான் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யும்படி வந்தேன்' என்று கூறியதன் விளக்கமாக இக்கருத்து பொருந்துகின்றது.

அன்பின் சில பரிமாணங்கள்

மாகாவியத் தொடக்கம் முதல் முடிவு வரை அன்புப் பிரவாகம் வெளிப்படுகின்றது.

மானுடக் காதல் கொண்ட
அந்த நவரச நாடகம்
துன்பியலாய் முடிந்து
பண்பியலாய் உயிர்த்தது (3)

என்பது ஒரு நிறைவின் தொடக்கம். 'வினயமான தனையன்' (78) சிநேகன் (551) என நேரடியாகவும் 'வையம் வலம் வந்து வணங்கியது அந்த நேச நெருப்பை' (506),

அந்தத்
துறைமுக நகரில்
மக்கள் நங்கூரம்
நிறுத்தி வைத்திருந்தது
ஒரு நேயக் கப்பலை (282)

என உருவகமாகவும் அமைப்பார் கவிஞர். மேலும், அன்பே உருவான அவரை, 'நேசத்தேன்' கொண்ட மனோரஞ்சிதப் பூ அவர்; மனித வண்டுகள் மொய்த்தன அவரை' (294) எனக் காட்சிப்படுத்துவார். இயேசு மிகவும் நேசித்த பெத்தனி கிராம லாசர் குடும்பத்தைக் காட்டும் போது, இவ்வன்புக் கருத்தின் மற்றொரு பரிமாணமாக. 'அவர்களுக்கோ இயேசுவின் நேசமே சுவாசமாயிருந்தது' (402) என்பது தரப்படுகிறது. இயேசு அன்பாயிருந்ததால் தான், அவரால், 'அனைவருக்கும் அன்பு செய்' (244) என அறிவுறுத்த இயல்கின்றது. அன்பின் ஆற்றல் அதனை ஆயுதமாக்குகிறது; நன்மை செய்யும் ஆயுதமாக்குகிறது.

அன்பின் விளைவுகளால்
ஆன என் சொல் முனையும்
கூரான வாள் முனையாய்
ஆகும் இங்கு (272)
என் ஆயுத சாலையில்
அம்பு தயாரிக்க வில்லை
அன்பு தயாரிக்கிறேன் (500)

அன்பிருப்பின், அருள் அமையும். 'அருள் எனும் அன்பு ஈன் குழவி' என்பது வள்ளுவம். அருள், கருணை, இரக்கம் ஆகிய சொற்கள்

வழி இயேசு மாகாவியம் இப்பாங்கின் கருத்துகள் அமைக்கும். 'அருள் என்னும் ஆறாம் திணை' 952), 'கருணைச் சிந்து' (288) 'கருணைக் கருவூலம்' (514), 'கருணை ஆழி' (524) என உருவகப்படுத்துவார் கவிஞர். 'அருளாளன்' (537) என்ற சுட்டும், 'அவர் அதிகாரம் அருளாயிருந்தது' (611) என்ற விளக்கமும், 'இரக்கத்தையே விரும்புகிறேன்' (182) என்ற அவர் கோட்பாடும் 'அவருடைய இருதயத்தில் சுரந்தது ஈரம்' (256) எனும் கூற்றும், 'பழிகளைக் கழித்து விட்டது அவருடைய இரக்கம்' (316) என்ற தகவலும்,

> 'இரக்கம் உடையோர் பேறு பெற்றோர்
> ஏனெனில் அவர்கள் தாமும் இரக்கம் பெறுவர்' (214)

என்ற அவரது மலைப்பொழிவும் இங்குச் சுட்டத்தக்கன.

மனம்-மொழி-மெய் என்ற நிலையில், நெஞ்சின் ஈரமும், சொல்லின் அன்பும் ஆறுதல் எனும் செயற்பாடாக, மனித நேயமுடையவரிமிருந்து பிறருக்குப் பகரப்படுகின்றன.

> 'வருந்தி சுமை சுமக்கிறவர்களே
> என்னிடம் வாருங்கள்!
> நான் உங்களுக்கு
> ஆறுதல் தருவேன்' (601)

என்பது அவர் வழங்கிய முன்மாதிரி. தன் சீடர்களையும் இவ்வாறு ஆறுதல் வழங்கும் ஊழியத்தைச் செய்யச் சொல்கிறார்:

> மிரண்டவர்க்கும் அரண்டவர்க்கும்
> ஆறுதல் கூறித்
> திரண்டவர்க்குத் துணை நிற்க
> என்றார் (302)

நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்த அவர், 'கிழிந்த இதயங்களைத் தன் பேச்சினால் தைக்கிறவ'ராக (278)க் காணப்பட்டார்; 'மருந்தாகவும் இருந்தார்' (222); அவர் 'இதயப் பச்சிலை சாறாகிக் கசிய ஆசி தந்தார்' (171); 'நோயாளிகள் ஆறுதலடைந்தனர்; சுகம் பெற்றனர். அவர் அற்புதங்கள், 'மாய்ந்து போகும் நெஞ்சை மருந்திட்டு வருடிவிட்ட மயிலிறகு' (173); 'வருந்தி நொந்தவனுக்கோ வலம்புரிச் சங்காய்க் கிடைத்தது' (172) எனப் புலப்படுத்துவார் கவிஞர்.

இவ்விதமாகவே, மனித நேயமுடையவர் அஹிம்சை யுடையவராக இருத்தல் (81, 218), சமாதானம் செய்பவராக அமைதல் (215, 218), சமத்துவத்தையும் (397, 407-8, 464, 497)

சகோதரத்துவத்தையும் (393) பின்பற்றுதல், சரணாலயமாக (அடைக்கலமாக) அமைதல் (576), உதவி செய்தல் (49) உணவளித்தல் (303) என அறவழி நிற்றல், பேதம் கருதாமை (583) எனப் பன்முக நிலையிலும் மேம்பட்டவராக அமைதல் புலப்படுத்தப்படுகின்றது.

முடிப்புரை

நியாயப் பிரமாணங்களும் கட்டளைகளும் அன்பு என்பதில் அடங்கி விடுவது போல, மனிதநேயம் என்பதும் அன்பு என்பதில் உட்பட்டு விடுகின்றது. 'உன்னைப் போல் மற்றவர் மீதும் அன்பு செலுத்து' என்ற மனித நேய அடித்தளத்தின் மேல் அதன் சார்புக் கருத்துகளனைத்தும் கற்களாகிக் கட்டிடமாக எழும்புகின்றன. அடித்தளத்தின் உறுதி கட்டிடத்தின் உறுதி. 'இயேசு மாகாவியம்' இவ்வாறு 'அன்பு செய்' எனும் கருத்தைத் தெளிவாக முன்னிறுத்திக் கவிஞரின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றது.

******

மனிதநேயமும் அண்ணல் நபி(ஸல்) அழகிய வரலாறும்

ஆ. கார்த்திகேயன்
ஆய்வாளர்

மனித நேயம் என்பது ஒரு மனிதன் இவ்வுலகில் சக மனிதர்களிடமும் மற்ற உயிரினங்களிடமும் எந்த வேறுபாட்டையும் காட்டாமல் நேசிப்பதில் தொடங்குகிறது.

இந்த நேசிப்பானது மனத்தின் அடித்தளத்திலிருந்து முகிழ்த்துவருவது.

இந்த நேசிப்பின் வெளிப்பாடு சொல்லின் மூலமாகவும் செயலின் மூலமாகவும் சில சூழல்களில் அமைதியாயிருப்பதன் மூலமாகவும் வெளிப்படுகிறது.

இந்த உலகில் உள்ள அனைத்து மனிதர்களின் செயல்களும் அவர்களின் உளத் திருப்தியை மையப்படுத்தியே அமைகிறது. இவ்விடத்தில் உளவியல் அறிஞர் அ. அடால்ப் அவர்களின் கருத்தான "மனித வாழ்வின் இருத்தலுக்கு அடிப்படையாக அமைவது மகிழ்வின் மேல் உள்ள விழைவு" என்பது ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய தாயுள்ளது. இந்தச் சமுதாயத்தில் தனிமனிதன் ஒருவனின் ஒரு செயல் எல்லா விதங்களிலும், யாரேனும் ஒருவனுக்கோ அல்லது ஒன்றிற்கோ நன்மை விளையும் பொருட்டோ, நீடித்த இன்பம் கிடைக்கும் பொருட்டோ, துயர்களையப்படும் காரணத்திற்காகவோ அமையுமென்றால் அது மனிதநேயத்தின் பாற்பட்டது எனலாம்.

மேற்படிச் செயலைச் செய்யும் மனிதனின் மனம் இச்செயலைச் செய்வதின் காரணமாக நிறைவை அடையும் தன்மை உடையதாக இருக்க வேண்டும். அவ்வாறன்றி மேற்படிச் செயலைச் சுய விருப்பமில்லாமல் பலவந்தத்தின் காரணமாகவோ, சூழ்நிலைக் கைதியாகவோ இருந்து கொண்டு அச்செயலைச் செய்வாரென்றால் அந்தச் செயலினால் முள்முனை அளவுகூட யாருக்கும் தீங்கு இல்லை என்றாலும் கூட அக்குறிப்பிட்ட நபரின் செயல் மட்டுமே மனிதநேயமுடையதாக எடுத்துக் கொள்ளப்படும். இதில் உள்ள சிக்கல் என்னவென்றால் குறிப்பிட்ட அந்நபர் என்ன மனோநிலையில் எந்தச் சூழ்நிலையில் செயல்பட்டார் என்பதை அறிவது கடினமான செயல்.

ஆனால் சில செயல்களின் காரண காரியத்தை ஆராய்ந்து அறிவதன் மூலம் ஓரளவுக்கு ஊகிக்க முடியும். இருந்தாலும் இதையே முடிந்த முடிபாய்க் கொள்வது சிறப்பன்று.

ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்தவர் மனித நேயமுடன் தான் செய்தாரா? இல்லையா? என்பதை நுண்மாண் நுழைபுலத்தோடு ஆராய்ந்தாலும் பல ஐயங்களுக்கும் பல வினாக்களுக்கும் இடம் கொடுக்கும் படியான முடிவைத்தான் பெரும்பாலும் அடையமுடியும் என்பது வெள்ளிடைமலை. எனவே செயல்களில் வெளிப்படையாகத் தோன்றும் தன்மைகளையும் அவற்றைச் செயல்படுத்துபவரின் பாங்கும் அச்செயல் செயல்படும் பாங்கும் அச்செயலினால் விளையும் நேர் எதிரிடை விளைவுகளைப் பொறுத்து ஓரளவிற்கு அச்செயலில் உள்ள மனித நேயம் பற்றி உய்த்துணரலாம்.

இப்புவியில் வாழும் ஒரு மனிதனுக்கு அவனைத் தவிர, மற்ற உயிர்கள் அனைத்திலும் கீழ்க்கண்டவாறு பிணைப்பு ஏற்படுகிறது.

1) உறவினர்கள் - (இரத்த சம்பந்தப்பட்ட உறவு)

2) நண்பர்கள்

3) மேற்கண்ட 1) & 2) இல் வராமல் தனக்கு எவ்வகையிலேனும் அறிமுகமானவர்கள்.

4) தனக்கு அறிமுகமே இல்லாதவர்கள் மற்றும் மேற்படி மூன்றின் கீழும் வராத மற்ற அனைத்து உலக உயிர்களும் என வகைப்படுத்தலாம்.

மேற்கண்ட அனைத்துப் பிரிவினர்களிலும் எவ்வகை யிலாவது ஒரு தனிமனிதனுக்குப் பொதுவாக விரும்பத்தகாத உறவு இருக்கலாம். இந்த விரும்பத்தகாத உறவு என்பது குறிப்பிட்ட நபர் மேற்படி பிரிவில் உள்ள ஒரு நபரையோ குழுவையோ, சமூகத்தையோ எதிரியாகப் பாவிப்பது அல்லது ஒரு தனிநபரோ, குழுவோ சமூகமோ அந்தக் குறிப்பிட்ட நபரை எதிரியாகப் பார்ப்பது என்ற வகையில் அமைகின்றது.

இங்ஙனம் நாம் பகுத்துப் பாகுபடுத்திப் பார்த்தவற்றை எள்ளளவும் மனத்திற்கொள்ளாது, தான் எதிரியாகக் கருதினாலும் சரி, தன்னை எதிரியாகக் கருதினாலும் சரி, நன்மை விளையும் பொருட்டுத் தீமையகலும் பொருட்டு நன்மனத்தோடு செய்யப்படும் செயல்களில் மனித நேயம் முதுகெலும்பாய்த் திகழும் என்பதில் ஐயமில்லை.

நீருக்குள் மூழ்கியவன் எங்ஙனம் வெளியேற முயல்வாரோ,

> 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
> இடுக்கண் களைவ்வதைப்போல'[1]

அதாவது உடுக்கை இழந்தவனின் கை எவ்வாறு விரைந்து அனிச்சையாய் செயல்படுமோ அவ்வாறு பிறர் துயர் அகல மனிதநேயமுடையவனின் செயல் அமையும். உதவ இயலா நிலையில் உள்ள போது அவனுடைய உள்ளமானது,

> "கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்
> வெண்ணெய் உணங்கல் போல"[2]

தன் இயலாமையினால் அடைந்த மன வேதனையை விட அதிகமான வேதனையை அடைவான். மேலும் உளவியல் அறிஞர் காரல் ரோஜர் அவர்களின் கருத்தான "மற்றவர்களின் பிரச்சனைகளை நேரிடையாக நாமே முன்னின்று தீர்ப்பதை விட, அவர்களாகவே அவர்களின் பிரச்சனையைத் தீர்க்க நாம் உதவி செய்வது நல்லது" என்ற கருத்து நோக்கத்தக்கது.

மீனைக் கொடுத்துப் பசியாற்றுவதைவிட, மீன் பிடிக்கக் கற்று கொடுத்து அவன் பிரச்சனைகளை அவனே தீர்க்க நாம் துணை நிற்பதில், மனித நேயம் சிறக்கிறது.

ஒரு செயலில் நன்மை, தீமை, சரி, தவறு போன்றவற்றைத் தீர்மானிக்கும் போது செயல் செய்தவர், செய்யப்பட்ட செயல், யாருக்குச் செய்யப்பட்டது, செயலின் தன்மை, அதன் விளைவு, செயல் நடந்த சூழல் போன்ற காரணிகளைக் கொண்டு செயல்பட வேண்டும் என்பது தெளிவு.

இவ்வுலகின் பல சட்ட திட்டங்களும், மதக்கோட்பாடுகளும் ஏன் தத்துவம், உளவியல், சமூகவியல், சட்டம், அறிவியல், மானுடவியல் இன்னமும் எண்ணிலாத் துறைகளின் சல்லிவேர்களும், ஆணிவேர்களும் மனித நேயமெனும் புலத்தினை இறுகப் பற்றி அவை வளர மனிதநேயமெனும் நறுநீரை அருந்துகின்றன.

இதுதான் மனிதநேயம் என்று கட்டியம் கூறும்படியான வரையறையை வகுத்துக் காண்தென்பது அரிய செயல். காரணம், 'மனித நேயம்' என்கின்ற மிக உன்னத உணர்வை ஒருவன் உணர்வதன் மூலமாகத்தான் அதன் முழுப்பரிமாணத்தையும் உய்த்து உணர முடியும். ஆனால் செயல்களில் இழைந்தோடும் மனித நேயத்தை நம்மால் எடுத்து இயம்பி நம் உள்ளத்து உணர்வுகளை அதனூடே வெளிப்படுத்தலாம்.

அண்ணல் நபி (ஸல்) அழகிய வரலாறு

திருக்குர் ஆன் வசனங்கள் இறங்க, இறங்க அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எப்படி அவற்றைச் செயல்படுத்தினார்கள்; தம்முடைய தனிப்பட்ட வாழ்விலும் சமூக வாழ்விலும் இறைக் கட்டளைகளை எப்படிப் பின்பற்றினார்கள்; இறைவன் அருளிய வழிகாட்டுதலுக்கேற்பத் தம் தோழர்களுக்கு எவ்வாறு பயிற்சி அளித்தார்கள்; அழைப்புப் பணியில் ஈடுபட்டபோது அவர்கள் எத்தகைய போக்கை மேற்கொண்டார்கள் - இந்தக் கோணத்தில் திரு நபி (ஸல்) அவர்களின் பெருவாழ்வை ஆராய்ந்து எளிய முறையில் 'மௌலானா அபூஸலீம் அப்துல் ஹை' உருது மொழியில் 'ஹயாத்தே தைய்யிபா' எனும் நூலை எழுதினார். இந்நூலினை மௌலவி காஞ்சி அப்துர் ரவூப் பாகவி அவர்கள் எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இந்நூலைப் பதிப்பித்த இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட் பொதுச் செயலாளர் எம்.ஏ.ஜமீல் அஹ்மத் அவர்கள் திருக்குர் ஆனின் வழிகாட்டுதலுக்கேற்ப அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்வை ஆராய்ந்து, தமிழில் வெளியிடப்படும் முதல் நூல், முன்னோடி நூல் இதுவே ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூலினைக் களனாக்கிக் காணும் பொழுது, 1) அவரின் சமூக அக்கறையிலும் 2) மனித உறவுகளைக் கையாண்ட விதத்திலும், 3) இருசாராருக்கும் வேதனை தராமல் சிக்கல்களை அவிழ்த்த விதத்திலும் 4) இறைக் கருத்துகளை எடுத்தியம்பிய பாங்கிலும் மனிதநேயத்தை உணர முடிகிறது.

ஃபிஜார் யுத்தம்

அரபுக்களுக்கிடையே நடந்த போர்களில் மிகவும் முக்கியமான போரான ஃபிஜார் போர் நடைபெற்ற போது குறைஷிக் குலத்தாரிடம் நியாயம் இருந்ததால் அண்ணலார் (ஸல்) அவர்கள் பக்கம் சேர வேண்டியதாயிற்று. இருப்பினும் மனித நேயத்தின் மாண்பாளரான அண்ணலார் (ஸல்) போரில் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை,

இந்தப் போரில் குறைஷிகள் பக்கம் நியாயம் இருந்ததால் அண்ணலாரும் குறைஷிகளின் தரப்பில் இந்தப் போரில் கலந்து கொண்டார்கள். ஆனால் அண்ணலார் (ஸல்) எவருக்கெதிராகவும் தம் கரத்தை ஓங்கவில்லை48*

---

* பக்க எண்

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன. மேற்படி யுத்தம் சமாதான உடன்படிக்கையின் மூலம் முடிவுக்கு வந்தது. அந்தச் சமாதான உடன்படிக்கையானது,

1. நாட்டிலிருந்து அமைதியின்மையை, பாதுகாப்பற்ற நிலையைப் போக்குவோம்.
2. பிரயாணிகளைப் பாதுகாப்போம்.
3. ஏழைகளுக்கு உதவி புரிந்து வருவோம்.
4. குற்றமற்றவர்கள், அநீதிக்குள்ளானவர்களை ஆதரிப்போம்.
5. அக்கிரமக்காரன் எவனையும் மக்கா நகருக்குள் வசிக்க விடமாட்டோம் (49).

இந்த உடன்படிக்கை மூலம் அரபுக்களுக்கிடையே ஓரளவிற்கு அமைதி திரும்பியது. இதைப் பற்றி அண்ணலார் (ஸல்) பின்னால்,

இந்த ஒப்பந்தத்திற்குப் பகரமாக எனக்குச் சிவப்பு ஒட்டகங்கள் தரப்பட்டாலும் கூட நான் வாங்கிக் கொள்ள மாட்டேன். இன்று கூட அத்தகைய ஓர் ஒப்பந்தத்திற்காக என்னை எவரேனும் அழைத்தால் நான் அதற்கு உடன்படத் தயாராக உள்ளேன்? (49) என்று கூறினார்கள்.

இவற்றிலிருந்து தன் சமூக நன்மைக்காகச் சக மனித நல்வாழ்விற்காக எந்நேரமும் பணி செய்திடத் தயாராக இருந்தார் என்பது புலப்படுகிறது.

சிக்கலைத் தீர்க்கும் விதம்

கஅபா எனும் வழிபாட்டிடத்தை எல்லாக் குலக்குழுக்களும் சேர்ந்து சீர்செய்து கொண்டிருந்தன. அப்போது அக்கட்டிடத்தில் ஹஜருல் அஸ்வத் எனும் கருப்பு நிற புனிதக் கல்லை யார் பதிப்பது எனப் பெரும் சர்ச்சை வந்து விட்டது. அதைத் தீர்க்கும் நபராக அண்ணலார் (ஸல்) அனைத்துக் குழுக்களின் தலைவர்களையும் வரவைத்து அக்கல்லை ஒரு போர்வையின் நடுவில் வைத்து அனைவரையும் போர்வையின் விளிம்புகளைப் பிடித்துத் தூக்கி வரச் செய்தார். குறிப்பிட்ட இடம் வந்ததும், தாமே அக்கல்லை எடுத்து அவ்விடத்தில் பதித்து விட்டார். அதனால் பெரும் போர் தவிர்க்கப்பட்டது. அதை நூலாசிரியரின் கீழ்க்கண்ட கூற்றிலிருந்து அறியலாம்.

இவ்விதம் ஏராளமான உயிர்களும், உடைமைகளும் சேதமாகவிருந்த ஒரு பெரும் கலவரம் தடுத்து நிறுத்தப்பட்டது. (51)

திருமணம்

அண்ணலார் (ஸல்) அவர்கள் தனது 25 வயதிற்குள்ளாகவே பல வாணிபப் பயணங்களைச் செய்து விட்டிருந்தார். வாணிபத்தில் நல்ல புகழையும் பெற்றிருந்தார். அவர் விரும்பியிருந்தால் அவரை விட இளம் பெண்ணை மணம் முடித்திருக்கலாம். ஆனால் தன்னை மணம்புரிய விரும்பிய, 40 வயதுடைய, இரண்டு முறை விதவையான, கதீஜா அவர்களை மணம் புரிந்து கொண்டார்.

கதீஜா அவர்கள் அண்ணலாரை மணம் புரிந்து கொள்ளத் தூதனுப்பினார்கள். அண்ணலாரும் அவர்களை மண முடித்துக் கொள்ள இசைவு தெரிவித்தார்கள். (53)

மேலும் அப்பெண்மணியுடன் மிகவும் அன்புடனும் பாசத்துடனும் அண்ணலார் (ஸல்) வாழ்ந்து காட்டினார் என்பதும், அப்பெண்மணியே அண்ணலாரைப் (ஸல்) பற்றி (நீங்கள் உறவினர் களின் உரிமைகளைப் பேணுகின்றீர்கள்; பிற மக்களின் சுமைகளை நீங்கள் தாங்கிக் கொள்ளுகின்றீர்கள்; ஏழை எளியவர்களுக்கு உதவுகின்றீர்கள்; பயணிகளை உபசரிக்கின்றீர்கள்; நீதி நிலைநாட்டு கின்றீர்கள்; மக்களின் துயரங்களை நீக்கப் பாடுபடுகின்றீர்கள்; (58)

என்றும் கூறிய வார்த்தைகளிலிருந்து அவர்களின் மனமொத்த வாழ்க்கையை அறியலாம். மேலும்,

அந்தரங்க வாழ்க்கையை அறிந்திருந்தவர்கள் கதீஜா (ரலி) அவர்களாயிருந்தார்கள். (65)

என்ற கூற்றிலிருந்து அக்காலகட்டத்தில் வாழ்ந்தோரைப் போலல்லாமல் மிகவும் இணக்கமாக ஆணையும் பெண்ணையும் சமமாகப் பாவிக்கும் இயல்புடையவராக நபி இருந்தாரென்பது தெரியவருகிறது. மேலும் கதீஜா அவர்களின் இறப்பின் பொழுது அவர் அடைந்த துயரும் அந்த ஆண்டையே துக்க ஆண்டாக அனுஷ்டித்ததும் அண்ணலாரின் நேசத்தை எடுத்தியம்புகின்றது.

சமத்துவம்

அக்காலகட்டத்தில் அடிமைகள் முறை இருந்தது. அடிமைகளை எவ்வாறு பயன்படுத்துவார்கள் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் கீழ்வரும் கூற்றிலிருந்து,

கதீஜா (ரலி) க்கு பிறகு அண்ணலாரின் (ஸல்) அந்தரங்க வாழ்க்கையை அறிந்திருந்தவர்கள் அலீ, ஸைத், அபூபக்ரு (ரலி-அன்ஹும்) ஆகியோராவர். (65)

அலீ (ரலி) அவர்கள் அண்ணலாரின் ஒன்று விட்ட சகோதரராகவும், ஸைத் (ரலி) அவர்கள் அண்ணலாரின் அடிமையாகவும் அபூபக்ரு (ரலி) அவர்கள் அண்ணலாரின் நண்பராகவும் இருந்தனர். இவர்கள் நால்வரும் பல்லாண்டுகளாக அண்ணலாரின் தோழமை வாய்க்கப் பெற்றிருந்தார்கள். (65)

மனைவி, சகோதரன், நண்பன், அடிமை இவர்கள் நால்வரையும் அண்ணலார் (ஸல்) நெருக்கமாக வைத்துக் கொண்டார் என்பதிலிருந்து சகோதரன், நண்பன் - அடிமை என்று பாகுபடுத்தாமல் நேயத்தைச் செலுத்தும் பண்பு நபிகள் நாயகத்திடம் இருந்ததை அறியலாம்.

இறைத்தூதராக

இறைப்பணியைச் செய்யும் போது கூட, மற்றவர்களிடம் கைம்மாறு பார்க்காமல் அவர்களை வலிந்து செய்ய வைக்காமல் அறிவுபூர்வமான விவாதங்களுக்கு வழி ஏற்படுத்தி மனிதநேயத்துடன் செயல்பட்டார் என்பதைக் கீழ்வரும் கூற்றிலிருந்து அறியலாம்.

"நான் உங்களிடம் ஏதேனும் கேட்கின்றேனா அல்லது என் சுயநலத்திற்காக உங்களிடமிருந்து எதையும் பெற விரும்புகின்றேனா அல்லது என் கருத்திற்கெதிராக உங்களிடம் அறிவுப்பூர்வமான ஆதாரம் ஏதும் இருக்கின்றதா" (78)

மனித சமூகத்திற்கு இறைச்செய்தியைச் சொல்வதன் மூலம் கிட்டும் நிறைவானது அண்ணலாருக்கு (ஸல்) ஆட்சியும் செல்வமும் கிடைப்பதன் மூலம் இல்லை என்பதைக் கீழ்வரும் ஆசையூட்டல்களுக்கு அவர் செவி சாய்க்காமல் சென்றதன் மூலம் அறியலாம். இங்கேயும் மனித சமுதாய நலத்திற்காகவே அவருடைய நற்போக்கு அமைந்திருப்பதைக் காணலாம். கீழ்வரும் வரிகளைச் சான்றாக்கலாம்.

"முஹம்மதே! நீர் என்ன தான் விரும்புகின்றீர் என்று எங்களுக்குக் கூறும்! மக்காநகரின் ஆட்சியதிகாரத்தை விரும்புகின்றீரா? பெரிய செல்வாக்கு மிக்க குடும்பம் ஒன்றில் திருமணம் செய்ய விரும்புகின்றீரா? அல்லது செல்வக்குவியலை விரும்புகின்றீரா? இவையனைத்துமே எங்களால் தர முடியும். நீர் அதற்காக ஏன் இந்த (அழைப்புப்) பணிகளையெல்லாம் செய்து வருகின்றீர்? மக்கா நகரம் முழுவதையும் உமது ஆட்சியின் கீழ்த் தந்துவிடவும் – நீர் விரும்பும் எதனையும்செய்து தரவும் நாங்கள் தயாராக உள்ளோம். ஆனால் நீர் இந்த அழைப்புப் பணியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்." (83)

குற்றங்கள் நிகழாத சமூகம் சிறப்புடையதாய் இருக்கும். இது நடைமுறைச் சாத்தியமுடையதா? இருப்பினும் ஒரு மனிதநேயமிக்கவர் சகமனிதர்கள் எப்படி இருக்க வேண்டும் என விரும்புவார் என்பதை,

"உண்மையையே பேசுங்கள். கொலை, கொள்ளைகள் நடத்துவதை விட்டு விடுங்கள், அனாதைகளின் சொத்துக்களை உண்ணாதிருங்கள். அண்டை வீட்டாருக்கு உதவுங்கள். விபச்சாரம் மற்றும் தீய பேச்சுகளை விட்டு விலகி இருங்கள்." *(95)*

என்ற அண்ணலாரின் (ஸல்) கூற்றிலிருந்து அறியலாம்.

அண்ணலார் (ஸல்) சில இடங்களில் கோபாவேசமாக வார்த்தைகளை வெளிப்படுத்தினார் என்றாலும் நேர்மைக்கு எவ்விதக் களங்கமும் இல்லாமல் நடந்துக் கொண்டார்.

"அவரை வரவிடுங்கள்; அவர் நல்லெண்ணத்தில் வந்திருப்பாராயின் நல்லது. இல்லையெனில் அவரது வாளாலேயே அவரது தலையைக் கொய்தெறிந்து விடுவேன்." *(102)*

மேற்படி வார்த்தைகளை உதிர்த்த அண்ணலார் (ஸல்),

"அவர்களுக்குள் தியாகம், மற்றும் அர்ப்பணிப்புக்கான ஆர்வம் எந்த அளவிற்கு ஊட்டப்பட்ட தென்றால் அவர்கள் எந்தத் துன்பத்தையும் சகித்துக் கொள்ளவும் – எந்தக் கொடுமையையும் பொறுத்துக் கொள்ளவும் சக்தியுடையவர்களாகிவிட்டார்கள்." *(106)*

என்று கூறுவதிலிருந்து அவரின் நேயத் தன்மையை அறியலாம்.

தாயிஃப் நகரத்தில் அண்ணலார் (ஸல்) பிரச்சாரத்தில் ஈடுபட்ட போது கேலிக்கும், கிண்டலுக்கும், வன்முறைக்கும் ஆளானார் என்பதைக் கீழ்கண்டவற்றிலிருந்து அறியலாம்.

"இந்த நேரத்தில் அண்ணலார் (ஸல்) எந்த அளவிற்குக் காயமுற்றார்கள் என்றால், அவர்களின் திருமேனியிலிருந்து வடிந்த இரத்தம் அவர்களின் காலணிகளை நனைத்து விட்டது. ஆனால் அந்தக் கொடியவர்களோ தொடர்ந்து கல்லால் அடித்துக் கொண்டும் வசைமொழிகள் கூறிக்கொண்டும் இருந்தனர்." *(109)*

இத்தகைய கொடுமைகளுக்கு எதிராக அண்ணலார் (ஸல்) எத்தகைய எதிர்ப்பையும் காட்ட வில்லை. மாறாக,

'இஸ்லாத்தின் அழைப்பை முன்வைப்பதே அவரின் வழக்கமாக இருந்து வந்தது.' (110)

அண்ணலாரின் (ஸல்) அண்டைவீட்டார்கள் அவருக்கு அளித்த துயரங்கள் பின்வருமாறு:

அண்ணலார் நடந்து செல்லும் பாதையில் முட்களைப் பரப்பி வைப்பார்கள். தொழுகையில் ஈடுபட்டிருக்கும் போது கேலியும் கிண்டலும் செய்வார்கள். அண்ணலார் (ஸல்) சிரவணக்கம் (சஜ்தா) செய்து கொண்டிருக்கும் போது குப்பை கூளங்களைக் கழுத்தில் போட்டு விடுவார்கள். அண்ணலாரின் திருக்கழுத்தில் வடுக்கள் பதிந்து விடும் அளவிற்குப் போர்வையைச் சுற்றி ஈவிரக்கமின்றி இழுப்பார்கள். சிறுவர்களை அண்ணலாரின் பின்னால் ஏவி விடுவார்கள்; அவர்கள் அண்ணலாரை ஏசிக் கொண்டும் கைதட்டிக் கொண்டும் செல்வார்கள்; அண்ணலார் எங்காவது உரையாற்றினால் இடையே குழப்பங்கள் விளைவிப்பார்கள்; இவையெல்லாம் பொய் என்று கூறுவார்கள். ஆக, தொல்லை தரவும் துன்பத்தில் ஆழ்த்திடவும் எத்தகைய படுமோசமான வழிமுறைகள் சாத்தியமோ அவை அனைத்தையும் கையாண்டார்கள். (116)

இந்த மக்கள் அண்ணலாரைப் (ஸல்) பொய்ப்பிக்கவில்லை (117), இறுதியில் அவரின் உதவி அவர்களைச் சென்றடையும் (117) என்னும் வாசகங்களிலிருந்து, துன்பம் செய்தவர்களை அவர் வெறுக்கவில்லை, இறுதியில் அவர்கள் நல்வழிப்படுவார்கள் என்ற நம்பிக்கையில் அண்ணலார் (ஸல்) தொடர்ந்து பணியாற்றினார். அவர்களின் தீய செய்கைகளை மட்டுமே வெறுத்தார். இவ்விடத்தில் 'பாவியை நேசி பாவத்தை வெறு' என்கின்ற புனிதர் ஏசுவின் வாக்கு நோக்குதற்குரியது.

மக்காவைவிட்டு மதினாவிற்கு வந்தபோது, அவருடன் இருந்து முஹாஜிர்களை (தாயகம் துறந்தோர்) மதினா முஸ்லீம்களான அன்சார்களை அழைத்து இந்த முஹாஜிர்கள் உங்கள் சகோதரர்கள் என்று கூறினார்கள். இவ்விதம் எல்லா முஹாஜிர்களையும் அன்சார்களின் சகோதரர்களாக ஆக்கிவிட்டார்கள். (116) என்பதிலிருந்து சகோதரத்துவத்தின் மூலம் இருவருக்கிடையே மனித நேயத்தை ஏற்படுத்தி இவர்களுக்குள் சச்சரவுகள் ஏற்படாமல் தவிர்த்தார்.

'நட்லா என்னுமிடத்தில் தங்கியிருந்து குறைஷிகளின் நிலைகளை வேவு பார்த்து அறிவியுங்கள். (182) என அண்ணலார் (ஸல்) ஒரு குழுவை அனுப்பியிருந்தார். ஆனால் அவர்களோ யாரை வேவு

பார்க்க வேண்டுமோ அவர்களிடம் சண்டை போட்டு வெற்றியடைந்து திரும்பினர். அப்போது அண்ணலார் (ஸல்) நான் உங்களுக்குத் தாக்குதல் நடத்தி எதிரிகளின் பொருள்களைக் கொணரும்படி அனுமதியளிக்கவில்லையே? என்று கூறி அந்தப் பொருட்களை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். (182)

இவற்றிலிருந்து அண்ணலார் (ஸல்) அவர்கள் எதிரிகளிடம் கூட அவர்களின் நிலையை அறிந்து அதற்கேற்றபடி கூடியவரை எந்த உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் இல்லாமல் வெற்றி காண வேண்டும் எனும் நன்னோக்குக் கொண்டிருந்தார் என்பது புலப்படுகின்றது.

போர் அவசியம் என்றாகிவிட்டபோது அண்ணலார் (ஸல்),

இறைவனின் முன்னால் இரு கரங்களையும் ஏந்திப் பெரும் மன்றாட்டத்துடனும் பணிவுடனும் கண்ணீர் சிந்திய வண்ணம் தாழ்ந்த குரலில், "இறைவா! உன் திருத்தூதரைப் பொய்யர் என்று நிரூபிப்பதற்காக ஆணவத்தோடும் ஆயுத படை பலத்தோடும் இந்தக் குறைஷிகள் வந்திருக்கின்றார்கள். இறைவா! இனி நீ வாக்களித்திருக்கும் அந்த உதவியை எங்களுக்குத் தந்தருள்! இறைவா! இன்று இந்தச் சின்னஞ்சிறு குழு அழிந்து போய்விட்டால் இந்தப் பூவுலகில் உன்னை வணங்குபவர் உனக்குக் கீழ்ப்படிபவர் யாருமே இருக்க மாட்டார்கள்" என்று இறைஞ்சினார்கள். (190)

என்பதிலிருந்து போரில் அவருக்கு விருப்பமில்லை என்பதை அறியலாம்.

'நடைபெற்ற போரில் வெற்றி பெற்றதும் நபித்தோழர்கள் அக்கைதிகளை எந்த அளவிற்கு நலமாகப் பராமரித்தனர் என்றால், பல சந்தர்ப்பங்களில் தாமே சிரமம் எடுத்துக் கொண்டு அவர்களுக்குத் துன்பமேதும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டார்கள். (193)

'ஒவ்வொருவரும் பத்து முஸ்லீம் குழந்தைகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுத் தந்திட வேண்டும் எனும் நிபந்தனையின் பேரில் மற்றவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.' (193)

என்பவற்றிலிருந்து வெற்றியடைந்த பின்னர் தனக்கு அடிமையான எதிரிகளிடமும் மன்னிக்கும் மனித நேயத்தைக் கொண்டிருந்தார் நபிகள் என்பதை அறியமுடிகிறது.

பொது மன்னிப்பு

மக்காவின் வெற்றிக்குப் பின்னர் அண்ணலார் (ஸல்) உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். அப்போது அங்கு இஸ்லாத்தை

அழித்திட வரிந்து கட்டிக் கொண்டு பாடுபட்டவர்களும் இருந்தனர்.

முஸ்லீம்கள் தம் தாயகத்தைத் துறந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகும் வண்ணம் அவர்களைக் கொடூரமாகத் துன்புறுத்தியவர்களும் இருந்தனர்.

முஸ்லீம்களின் சொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்டவர்களும் இருந்தனர்.

அண்ணலார் (ஸல்) அவர்கள் மீது வசைமாரி பொழிந்தவர்களும் இருந்தனர். அவர்கள் மீது குப்பை கூளங்களைக் கொட்டி மகிழ்ந்தவர்களும் இருந்தனர்.

அண்ணலார் (ஸல்) அவர்களின் உயிரையே குடித்திட விரும்பி இரத்தவெறி பிடித்து அலைந்தவர்களும் இருந்தனர்.

அண்ணலார் (ஸல்) அவர்களுடைய பெரிய தந்தையாரைக் கொன்று அவர்களுடைய ஈரலைப் பிடுங்கியெடுத்துக் கடித்துத் துப்பியவர்களும் இருந்தனர்.

முஸ்லீம்கள் ஒரே இறைவனை மட்டுமே வணங்கி, அவனுக்கு மட்டுமே கீழ்ப்படிவதாக அறிவித்த ஒரே குற்றத்திற்காக அவர்களைக் கொலை செய்தவர்களும் இருந்தனர். (286)

அனைவரையும் பார்த்து அண்ணலார் (ஸல்) இப்பொழுது உங்கள் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை; நீங்கள் அனைவரும் சுதந்திரமானவர்கள்என்று பொது மன்னிப்பு வழங்கினார். (286)

பகைவர்கள் முஸ்லீம்களிடமிருந்து கைப்பற்றிய வீட்டையும் நிலத்தையும் கூட அவர்களிடமிருந்து திரும்பக் கைப்பற்றாமல் அவர்களுக்கே கொடுத்து விட்டார் என்பதை முஸ்லீம்கள் விட்டுச் சென்ற இல்லங்களையும் இடங்களையும் கைப்பற்றிக் கொண்டவர்களிடமிருந்து அதனைத் திருப்பி வாங்கித் தரவுமில்லை மாறாக, அண்ணலார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த முஸ்லீம்களிடம் அவர்கள் தமது உரிமையை விட்டுக் கொடுத்து விடும்படி கூறிவிட்டார்கள். (286) இதன் மூலம் பகைவருக்கு மன்னிப்பு அளிப்பதோடு மட்டுமல்லாமல் அப்பகைவர்கள் பகைமை பாராட்டித் தம்மிடமிருந்து பறித்த பொருட்களைக் கூட அவர்களுக்கே கொடுத்து விட்டது மனித நேயத்தின் உச்சமாகும்.

முடிவுரை

அண்ணலார் (ஸல்) அவர்களின் வாழ்வை எளிய முறையில் எடுத்து இயம்பியுள்ள ஆசிரியரின் திறன் பாராட்டுக்குரியது.

இறைத்தூதரான நபிகளின் (ஸல்) சொல்லில், வாழ்வின் கூறுகளில் மனித நேயம் இழைந்து இருப்பதும் பின்னாளில் போர்களே வாழ்க்கையாகிப் போன போதும் அவற்றின் அடித்தளத்தில் எல்லாம் மனித நேயம் குடி கொண்டு இருப்பதை உணர முடிகின்றது. மனித நேயத்தின் உச்சமானது மனிதர்கள் அனைவரின் வாழ்வும் செம்மைப்பட இறைவனின் வழி நடத்துதலின் பேரில் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் இறைநேயத்தில் பெருமை கொள்கின்றது எனலாம்.

குறிப்புகள்

1. *திருக்குறள் தெளிவுரை, குறள் எண், 788.*
2. *குறுந்தொகை, பா. எண். 58.*

*****

குழந்தைப் பாடல்களில் மனிதநேயம்

முனைவர் மு. வளர்மதி
ஆராய்ச்சி உதவியாளர்

தாய் தன் குழந்தையைத் தாலாட்டிப் பாடல்கள் பாடி, கதைகள் சொல்லி வந்த காலத்தைக் குழந்தைகள் இலக்கியத்தின் தோற்றக் காலம் என்று கூறலாம். ஒரு குறிப்பிட்ட காலத்தை இதற்கு வரையறுத்துக் கூற இயலாது. ஏனெனில் ஏட்டில் எழுதா இலக்கியமாக, நாட்டுப்புறப்பாடல்களாக, கதைகளாக வழங்கிய தாய்மாரும், பாட்டிமாரும் இதன் தொடக்க காலப் படைப்பாளிகள் என்பதை எல்லோரும் அறிவர்.

கைவீசம்மா கைவீசு, நிலா நிலா ஓடிவா, சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு போன்ற பாடல் வரிகள் தாயிடமிருந்து குழந்தைகளுக்கு முதல் இலக்கியமாக அறிமுகமாகின்றன. பிறகு வித விதமான பறவைகளும் விலங்கினங்களும் இடம் பெறும் சின்னச் சின்னக் கதைகளும், 'ஒரே ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தாராம்' எனத் தொடங்கும் கதைகளும், பிறகு இராமாயணம், மகாபாரதம், தெனாலிராமன் கதை, விக்கிரமாதித்தன் கதை போன்ற நெடுங்கதைகளும் குழந்தைகளின் அந்தந்த வயதுக்கேற்ப, வளர்ச்சிக்கேற்ப பல நூற்றாண்டுக் காலங்களாக, பல்லாயிரம் தாய்மார்களின் வாய்மொழியாக குழந்தைகளுக்கான இலக்கியம் வளர்ந்து வந்துள்ளது.

குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம் என்ற இரு சொற்றொடர்கள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. 3 வயது முதல் 6 வயது வரை மழலையர் என்றும் 7 வயது முதல் 14 வயது வரை சிறுவர் என்றும் குறிப்பிடப்படுவதால் இந்த இரு பிரிவுகளுக்குரிய பாடல்களும் கதைகளும் வழங்கப்படுகின்றன. தொல்காப்பியம், சங்க இலக்கியம், பிள்ளைத் தமிழ் போன்றவற்றில் குழந்தைகளைப் பற்றிய குறிப்புகள் பல இடம் பெற்றிருப்பினும் பதினாறாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை உள்ள நூல்களுள் சிறுவர்களுக்கு நீதி நெறிகளை, அறநெறிகளைப் போதிக்கும் வகையில் பாடப்பெற்ற சில நூல்கள் குழந்தைகளுக்கான அறநூல்கள் எனும் தலைப்பில் குறிப்பிடப்படுகின்றன.

1. "ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி

2. அதிவீரராம பாண்டியரின் 'வெற்றி வேற்கை'
3. உலகநாத பண்டிதரின் 'உலகநீதி'
4. குமரகுருபரரின் 'நீதிநெறி விளக்கம்'
5. சிவப்பிரகாச சுவாமிகளின் 'நன்னெறி'

ஆகிய நீதி நூல்கள் இப்பட்டியலில் இடம் பெறுகின்றன.

இருபதாம் நூற்றாண்டில் குழந்தைகளுக்கான பாடல்கள், சிறுவர்களுக்கான சிறுகதை, நாவல், நாடகம், சித்திரக்கதைகள், பழமொழிகள், விடுகதைகள் எனப் பல பிரிவுகளில் குழந்தை எழுத்தாளர்கள் எழுதியதால் குழந்தை இலக்கியம் நவீன இலக்கியத்தின் ஒரு கூறாக இடம் பெற்று வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழில் இதுவரை சுமார் 5000க்கும் மேற்பட்ட நூல்கள் குழந்தை இலக்கியம் எனும் பிரிவில் இடம் பெறுமளவிற்கு வெளியிடப் பட்டுள்ளன. சிறுவர்களுக்கான தனி நூலகங்கள், பதிப்பகங்கள், தொடங்கும் அளவிற்குத் தற்காலத்தில் இவை வளர்ச்சி பெற்றுள்ளன.

சிறுவர்களுக்கான தனி இதழ்களும் குறிப்பிடத்தக்க அளவில் வெளிவந்த வண்ணம் உள்ளன. 1840ஆம் ஆண்டில் தமிழில் 'பாலதீபிகை' என்ற குழந்தைகளுக்கான இதழ் முதன் முதலாகத் தொடங்கப்பட்டது. இதற்குப் பின் 'சிறுபிள்ளையின் நேசத்தோழன்', 'பாலியர் நேசன்' ஆகிய இதழ்கள் குழந்தைகளுக்கென வெளிவந்துள்ளன. 'விவேக சிந்தாமணி', 'ஜனவிநோதினி', 'தமிழர் நேசன்' முதலிய இதழ்கள் சிறுவர் பகுதிகளை வெளியிடத் தொடங்கின. 'பாலவிநோதினி', 'பொக்கிஷபரணி', 'பாப்பாமலர்', 'அணில்', 'பூஞ்சோலை', 'கல்வி', 'சித்திரக்குள்ளன்', 'டமாரம்', 'ஜிங்லி', 'பாலராஜ்யம்', 'கோகுலம்', 'அம்புலிமாமா', 'கரும்பு', 'கண்ணன்' ஆகிய பல இதழ்கள் குழந்தைகளுக்கெனச் சுவையான கதைகளும், பாடல்களும் வண்ணப்படங்களுடன் வெளியிட்டுள்ளன.

இன்று பரவலாக மக்கள் படிக்கும் வார இதழ்களும் செய்தித்தாள்களும் சிறுவர் இதழ்களை வெளியிட்டு வருகின்றன. ஆனந்த விகடன் குழந்தைகளுக்கான 'சுட்டி விகடன்' எனும் சிறுவர் இதழை வெளியிட்டு வருகிறது. தினமலர் நாளிதழ் 'சிறுவர் மலரை'யும், தினத்தந்தி நாளிதழ் 'சிறுவர் தங்கமலரை'யும், தினமணி நாளிதழ் 'சிறுவர் மணி' இதழையும் வண்ணப் படங்களுடன் சிறுவர்களின் சிந்தையைக் கவரும் வகையில் வெளியிட்டு வருகின்றன.

நாளைய தலைமுறையாக உருவாகும் குழந்தைகளுக்கு நல்ல பண்புகளை, நீதிநெறிகளை, சிந்திக்கும் ஆற்றலை, புதியன அறிதல், புதியன உருவாக்கும் ஆற்றலை உருவாக்க வேண்டும் என்ற நோக்கம்

இம் முயற்சிகளுக்கு அடிப்படையாக அமைகிறது. சின்னஞ்சிறுவர் களுடைய உலகம் விந்தையானது. புத்தம் புதியவர்களான இவர்கள் இவ்வுலகை உற்று நோக்குகிறார்கள். வண்ண வண்ண மலர்களும் விதவிதமான ஓசைகளை எழுப்பும் பறவைகளும் விலங்குகளும் நிலவும் கதிரவனும் வானமும் பூமியும் கடலும் மலையும் பல்வேறு மனிதர்களும் இவர்களை விந்தையில் ஆழ்த்துகின்றன. இந்த இளம் இதயங்கள் எழுப்பும் வினாக்களும், அய்யங்களும் பெரியவர்களை வியப்பில் ஆழ்த்துக்கின்றன. உதயமாகும் இவ்வறிவினைக் கண்டு கொண்டு, அதைச் செம்மைப்படுத்தி வழி நடத்திச் செல்லும் பொறுப்பும் கடமையும் பெற்றோர்களுக்கும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு. எனினும் இந்த அணுகுமுறைகளுடன் குழந்தைகளுடன் உறவாட பல இதழ்களின் வழியாக, நூல்களின் வழியாக அவர்களுக்குச் சொல்ல வேண்டிய கருத்துகள் சுவைபட, அவர்களின் உளவியலுக்கேற்ப பல படைப்புகள் வழங்கப்படுகின்றன. பாடல்கள், நீதிக்கதைகள், பழமொழிக் கதைகள், வரலாற்றுக் கதைகள், அறிவியல் கதைகள், துப்பறியும் கதைகள், சித்திரக் கதைகள், சிறு நாவல், நாடகங்கள், மொழிபெயர்ப்புக் கதைகள் எனப் பல்வேறு பிரிவுகள் குழந்தை இலக்கியத்தில் அடங்கியுள்ளன.

அன்பு காட்டுதல், இரக்கம் கொள்ளுதல், உண்மை பேசுதல், நேர்மை, உழைப்பு ஆகியவற்றின் சிறப்பை உணர்த்துதல், கடமையைச் செய்தல், பணிவுடன் இருத்தல், துணிவுடன் செயல்படுதல் என்று பலவிதமான பண்புகளைக் குழந்தைகளுக்கு உணர்த்தும் வகையில், எடுத்துக்காட்டும் வகையில் குழந்தைகளுக்கான படைப்புகள் வெளியிடப்படுகின்றன. தற்காலத்தில் பலவிதமான நற்பண்புகளை, நடவடிக்கைகளைக் குறிப்பிடும் வகையில் 'மனிதநேயம்' என்ற ஒரு சொல் குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது. குழந்தைப் பாடல்களில் இக்கருத்து எவ்வாறு கையாளப்படுகிறது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

மனிதநேயம் என்பது ஒருமனிதன் தன் சக மனிதனிடம் காட்டும் நேயம் என்பதுடன் பிற உயிரினங்கள் மீதும் அன்பு காட்டுவது என்பதையும் உள்ளடக்கியதாகும். குழந்தைப் பருவத்தில் வண்ண, வண்ணப் பொம்மைகள் இடம்பெற்ற பிறகு காக்கை, குருவி, கோழி, கிளி, போன்ற பறவையினங்கள், நாய், பூனை, ஆடு, மாடு, எருமை, கழுதை, குதிரை போன்ற குழந்தைகளுக்கு அறிமுகமாகின்ற விலங்கினங்கள் மீது பரிவும் அன்பும் காட்டி அவைகளுடன் உறவாடக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

“பறவை, விலங்குகளிடம் குழந்தை மனம் மிகுதியாக ஈடுபடும். தீராத ஆசை கொண்டு பறவை, விலங்குகளைக் குழந்தைகள் கண்டு

மகிழ்வார்கள். அவர்களின் கற்பனை உள்ளத்தில் பதியும் வண்ணம் பறவை விலங்குகளைப் பாடிய பாடல்களையும் குழந்தைகள் போற்றி வருகின்றார்கள்"[2] என்று மு. வரதராசனாரும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். தன்னை மறந்து இசையை உற்றுக் கேட்பது குழந்தைகளின் இயல்பு. பாடலின் இனிய சந்தங்கள், சின்னச் சின்ன சொற்கள், சொற்றொடர்கள், எதுகை, மோனை அமைப்புகள், சீரான ஓசை நயம் நிறைந்த பாடலைக் கேட்பதும் பிறகு தானே பாடுவதும் குழந்தைகளின் பொதுத்தன்மையாக உள்ளன. "பாட்டு குழந்தைகளுக்கு பல நன்மைகள் செய்கிறது. பாட்டு எதையும் வசப்படுத்தும்; பாட்டு பலருக்கும் கேட்பவருக்கும் இன்பம் தருகிறது. பாட்டை குழந்தை வாய்விட்டு மட்டும் பாடுவதில்லை. கை கால்களைப் பாட்டுக்கேற்ப அசைத்து அபிநயத்தோடு பாடுகிறது"[3]

குழந்தைகளுக்குரிய பாடல்களைப் பொறுத்தமட்டில் மனிதநேயம் என்ற சொல்லை நேரடியாகப் பயன்படுத்தாமல் குழந்தைகளுக்குப் புரியும் வகையில் எளிமையாக அன்பு, கனிவு, பரிவு, பாசம், நேசம், என்று கவிஞர்கள் பயன்படுத்தியுள்ளளனர். ஒரு சில படைப்புகளில் தற்காலக் கவிஞர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

குழந்தை இலக்கியம் பற்றி ஆய்வு செய்துள்ள ஆய்வாளர்கள் குழந்தைகளின் நல்ல பண்புகளை வளர்ப்பதற்கு அன்புணர்வு அடிப்படையாக அமைகிறது என்பதை முதலில் சுட்டிக்காட்டி யுள்ளனர். "உலகத்தோடு குழந்தைகள் பழகுவதற்கு இன்றியமையாத அன்புணர்வை உயிரினங்கள் பற்றிய பாடல்கள் குழந்தைகளுக்குக் கற்றுத் தருகின்றன. பெரும் தத்துவ ஞானிகள் வளர்ந்தவர்களுக்குக் கற்றுத் தர முயலும் இவ்வன்புணர்வினைக் கவிஞர்கள் மிக எளிதாகக் குழந்தைகளுக்குப் பிடித்தமான உயிரினங்களைக் கொண்டு புகட்டுகின்றார்கள். கவிஞர்கள் குழந்தைகளின் நெஞ்சில் அரும்பச் செய்யும் இவ்வன்புணர்வே குழந்தைகளின் பிற்கால அன்பு வாழ்விற்கும் அருள் வாழ்விற்கும் அடித்தளமாக அமைகிறது. உயிரினங்களிடம் குழந்தைகள் அன்பு காட்டலும், அவற்றிடமிருந்து அன்பைப் பெறுதலுமாகிய இவ்வன்புப் பரிமாற்றத்தை விளக்கி, கவிஞர்கள் அகிம்சை நெறியையும் குழந்தைகளுக்கு அறிவுறுத்து கின்றார்கள் எனவும் கொள்ளலாம்."[4] குழந்தையைப் பாடுவது, குழந்தைக்குப் பாடுவது, குழந்தை பாடுவது என்ற மூன்று வகையாகக் கவிஞர்கள் பாடல்களை வழங்கியுள்ளதைக் குறிப்பிட்டுக் காட்டலாம்.

விலங்குகளும் பறவைகளும் மனிதனின் தோழர்கள் என்ற கருத்துடன் மனிதன் இவ்வுயிர்களிடத்து அன்பு காட்டுவது மனிதப் பண்பு என்பதைப் பல கவிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாரதிதாசன், சுத்தானந்த பாரதி, வாணிதாசன், தமிழ் ஒளி, கா. நமச்சிவாய முதலியார், மணி திருநாவுக்கரசு, மயிலை சிவமுத்து அ.கி. பரந்தாமனார், பூவண்ணன், அழ. வள்ளியப்பா, தி.ஜ.ர., பெரியசாமித்தூரன், தணிகை உலகநாதன், தங்கமணி, தம்பி சீனிவாசன், பெ.நா. அப்புசாமி, செல்வ கணபதி, திருச்சி பரதன், தமிழ்முடி, புவனை கலைச்செழியன் குழ. கதிரேசன், கோவி. கலியபெருமாள், கலியன் சம்பத்து, சக்திக்கனல், கோ. கந்தசாமி, ஆ. கோவிந்தராஜுலு ஆகிய பலரும் குழந்தைகளுக்கான இத்தகைய பாடல்களை வழங்கியுள்ளனர். கதைகளுடன் ஒப்பிடும்போது குழந்தைகளுக்கான பாடல்கள் குறைவு எனலாம்.

உயிர்களிடத்தில் அன்பு காட்டும் மனிதநேயப் பண்பைப் பாரதியார் முதல் தற்காலக் கவிஞர்கள் வரை தத்தம் மொழிநடையில் பாடல்களை வழங்கியுள்ளனர். பாரதியார் ‘பாப்பாப் பாட்டில்” குருவி, கோழி, பசு, குதிரை போன்ற உயிரினங்களிடம் அன்பு காட்ட வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறார்.

‘சின்னஞ்சிறு குருவி போல – நீ
திரிந்து பறந்து வா பாப்பா!
வண்ணப் பறவைகளைக் கண்டு – நீ
மனதில் மகிழ்ச்சிக் கொள்ளு பாப்பா!

கொத்தித் திரியுமந்தக் கோழி – அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடுமந்தக் காக்காய் – அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா!

பாலைப் பொழிந்து தரும் பாப்பா –அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரும் நாய்தான் – அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா!

வண்டி இழுக்கும் நல்ல குதிரை – நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு – இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா![5]

என்று பல உயிரினங்களின் இயல்பைக் கூறி அதை நேசிக்கும் மனப்பக்குவத்தைச் சிறுகுழந்தைகள் பெற வேண்டும் என்ற நோக்கில் மிக எளிமையாக பாரதியார் இப்பாடலில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மனிதன் ஆறறிவு மிக்கவனாயினும் மனித சமூகம் பெற வேண்டிய பல பண்புக் கூறுகளை பறவைகள், விலங்கினங்களிட மிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தைக் கூறும் குழந்தைப் பாடல்கள் பலவற்றைச் சுட்டிக் காட்டலாம். சான்றாக மனிதன் சுயநலத்துடன் வாழாமல், பிறருக்கு உதவி செய்து, தன்னிட முள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்து வாழவேண்டும் என்பதைப் புலவர் புலமைப்பித்தன் 'பகுத்துண்டு வாழ்' எனும் தலைப்பில் வழங்கியுள்ள பாடலைச் சுட்டிக் காட்டலாம்.

"காக்கா பறக்குது பார்தம்பி!
கருப்பா இருக்குது ஆனாலும்
சோக்கா இருக்குது அதன் மனசு!
சுயநலம் இல்லாப் பெருமனசு!!

உணவு கெடைச்சா மற்றதையும்
உரக்கக் கூவிச் சுற்றமுடன்
கெடைச்ச உணவைப் பகிர்ந்துண்டே;
கிரம மாகப் பொழைக்குது பார்!!

காக்கா போலப் பகிர்ந்துண்ணும்
கருணை நெஞ்சம் உடையோர்க்கே
செல்வம் பெருகி நிறைந்திடுமே!
சிறப்பும் புகழும் வளர்ந்திடுமே!![6]

காக்கை இனத்தின் பகிர்ந்துண்ணும் பண்பை ஒரு தனி மனிதன் பெற்றிருக்க வேண்டும் என்று மட்டுமல்லாமல் அது ஒரு மனித சமூகத்தின் பொதுப்பண்பாக வளரக் குழந்தைகளுக்கு இத்தகைய பாடல்கள் மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது. குழந்தைக் கவிஞர்களைப் பொறுத்தமட்டில் குழந்தைகளுக்கு விலங்கினங்களும் பறவையினங்களும் நெருக்கமான தோழர்களாகப் பாடல்கள் மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது. கவிஞர் பெரியசாமித் தூரன் கோழி, சேவல், குயில், கிளி, குருவி, மாடு, குதிரை, எருமை, பூனை, நாய் ஆகியவை நம் தோழர்கள் என்று கூறும் ஒரு பாடலை 'நம் தோழர்' என்னும் தலைப்பில் வழங்கியுள்ளார்.

"கோழி கோழி கொகொகொ
கொண்டைச் சேவல் கொக்கொக்கொக்
குயிலே குயிலே கூகூகூ
கொஞ்சும் கிளியே அக்கக்கா
காக்கை காக்கை காகாகா
கத்தும் குருவி கிகிகி

அவை நம்தோழர் மெய்மெய்மெய்
அன்பாய்த் தீனி வைவைவை"[7]

என்று குழந்தைகளுக்குக் கூறுகிறார்.

மனமே அனைத்துச் செயல்களுக்கும் அடிப்படை பண்பட்ட மனத்தில் அன்பு நிறைந்திருக்கும். அத்தகைய அன்பு பிஞ்சு உள்ளங்களில் அரும்ப வேண்டும் என்பதைக் கவிஞர்கள் பாடல்கள் மூலம் வழங்கியுள்ளனர். வேறுபாடுகள் பல நிறைந்த சமுதாயத்திற்கு மிகவும் தேவையானது அன்பு. இதைக் குழந்தைகளுக்கு நேரடியாகவும் எளிமையாகவும் சொல்ல வேண்டியுள்ளது. சாதி, மதம், மொழி போன்ற வேறுபாடுகளைக் கடந்து செல்ல மிகவும் தேவையானது மனிதநேயம் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

"அன்பு தானே செல்வம்;
அன்பு தானே வாழ்வு;
அன்பு தானே தெய்வம்;
அதனைப் போற்றி வாழ்ந்திடு"[8]

என முரசு. நெடுமாறனும்,

"அன்பைத் தேடி மனித இனம் – கடல்
அலைபோல் எங்கும் அலைகிறது!
மனித நேயமே முன்னாலே – நமக்கு
மதம்மொழி யாவும் பின்னாலே!"[9]

எனக் குழ. கதிரேசனும்,

அன்பின் பெருமையை, முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுகின்றனர். மனித உணர்வுகளை, தேவைகளைப் புரிந்து கொள்ள அன்பு அடிப்படை என்பதால் கவிஞர்கள் இதற்கு மிகவும் முக்கியத்துவ மளித்து பல பாடல்களை வழங்கியுள்ளனர். குழந்தைகளைப் பொறுத்தமட்டில் விலங்கினங்களும் பறவையினங்களும் இயற்கை அமைப்புகளும் பேசும் தன்மை பெற்றவையாகக் கவிஞர்களால் காட்டப்படுகின்றன. குழந்தையின் இயல்பு இவற்றைத் தனக்கு இணையான ஒன்றாகக் காணுவது என்பதால் அதன்மீது கனிவான பார்வையை வழங்கும் தன்மையைப் பாடல்களில் இடம் பெறச் செய்கின்றனர்.

"பச்சைக் கிளியே வா வா
பாலும் சோறும் உண்ண வா!
கையில் வந்திருக்க வா!
கனியருந்த ஓடி வா"[10]

என்ற கவிமணியின் பாடலும்,

"கிளியே, கிளியே வந்திடுவாய்(
　　　　கேட்கும் முத்தம் தந்திடுவாய்!
பச்சை, கண்ணைப் பறிக்கிறது!
　　　　பளபள என்றே இருக்கிறது!
அணில் கடித்த கொய்யாவில்
　　　　அன்பாய்ப் பாதி தருகின்றேன்!
பெயரைச் சொல்லிக் காட்டிடுவாய்!
　　　　பேசக்கேட்டு மகிழ்ந்திடுவேன்!
குருவிக்காரர் போல் உன்னைக்
　　　　கூண்டில் அடைக்க மாட்டேன் நான்
விளையாட்டுக்கே அழைக்கின்றேன்
　　　　விரைந்தே நீயும் வந்திடுவாய்"[11]

எனும் குழ. கதிரேசனின் பாடலும் சான்றுக்குக் குறிப்பிட்டுக் காட்டலாம். தன்னிடம் உள்ளதைப் பிற உயிரினங்களோடு பகிர்ந்து உண்ணும் குழந்தையின் இயல்பைப் பல கவிஞர்கள் தங்கள் பாடல்களில் வழங்கியுள்ளனர். குறிப்பாக இப்பாடல்கள் மழலை மொழியில் பேசும் குழந்தைகளுக்குப் பெரிதும் மகிழ்வையும் மனதில் அன்பு பரவச் செய்யும் ஆற்றலையும் வழங்குகின்றன.

"அணிலே அணிலே ஓடி வா
அழகு அணிலே ஓடி வா
கொய்யா மரம் ஏறி வா
குண்டு பழம் கொண்டு வா
பாதிப் பழம் உன்னிடம்
பாதிப் பழம் என்னிடம்
கூடியே நாம் இருவரும்
கடித்துக் கடித்துத் தின்னலாம்"[12]

எனக் குழந்தையே பாடுவதாக அமைந்துள்ளது.

இயற்கைச் செல்வங்கள் மனிதனுக்கு உதவுவதைச் சுட்டிக்காட்டி, இதுபோன்று குழந்தைகள் பிறருக்குப் பயன்படும் வகையில் வாழ வேண்டும் என்று சுட்டிக் காட்டுகின்றனர். இயற்கையை நேசிப்பது மனித மனத்துள் அடங்கியுள்ள ஒரு பண்புக்கூறு. இதைக் குழந்தைப் பருவத்தில் சுட்டிக் காட்ட வேண்டும் என்பதால் பல படைப்பாளர்கள் இதில் கவனம் செலுத்தியுள்ளனர். அறிஞர் பெ.நா. அப்புசுவாமியின் 'பூக்களின் கட்டளை' என்ற பாடலை இதற்கு ஒரு சான்றாகக் காட்டலாம்.

"சாந்தமான நல் இயற்கைத்
தாய்க்குள் சேய்கள் எத்தனை!
மாந்தர் மட்டும் சேய்கள் அல்லர்,
மலர்கள் யாவும் சேய்களே!
இந்த உண்மைதனை நீங்கள்
என்றும் நெஞ்சில் இருத்தியே
எந்த உயிரும் ஒன்று என்றே
இருப்பீர்: எமது கட்டளை"[13]

மலர்களே குழந்தைகளிடம் சொல்லுவதாக அமைக்கப்பட்டுள்ளது இப்பாடல். மனிதர்கள் மட்டுமல்ல எல்லா உயிர்களையும் நேசிக்க வேண்டும் என்ற ஒரு மனப்பாங்கை வளர்க்குமாறு இப்பாடலில் குறிப்பிடப்படுகிறது. இப்படிப்பட்ட பாடல்களை எழுதும் போது கவிஞர்களே வாழைமரமாக, தென்னை மரமாக, பனைமரமாக, மலர்களாக, பறவைகளாக மாறிவிடுவதை இப்பாடல்களின் மூலம் உணரலாம். 'வாழைமரம்' எனும் தலைப்பில் பரதன் வழங்கியுள்ள பாடல் இதற்கு ஒரு சான்றாகும்.

"என்னைப் போலப் பிறருக்கு
எவரே உதவ முன் வருவார்?
இலையைத் தருவேன்; யாவருமே
இனிதாய் அமர்ந்து உண்டிடலாம்!
காயைத் தருவேன்; தண்டினையும்
கறியாய்ச் சமைத்துப் புசித்திடலாம்
கனியைத் தருவேன்; நற்சுவையில்
களித்துப் பாடி மகிழ்ந்திடலாம்
உடலைக் கூடத் தந்திடுவேன்
உற்சவம் தன்னில் கட்டிடலாம்!
இன்பத் தம்பி தங்கைகளே
என்னைப் போலவே வாழ்ந்திடுவீர்"[14]

என்று 'வாழை மரமே' தன்னைப் போல வாழ வேண்டும் என்று தம்பி தங்கைகளுக்கு சொல்வதாகச் சுட்டிக் காட்டுகிறார்.

"குழந்தைகளுக்குப் போதிக்க விரும்புவர்கள் தாமும் ஒரு குழந்தையாக மாறியாக வேண்டும். இது ஒருமிகப்பெரும் யோக சாதனை. இதை உண்மைக் கவிஞர் ஒருவரால்தான் செய்ய முடியும்"[15] பல நாவல்களையும், சிறுகதைகளையும் உலகுக்கு வழங்கிய மு. வரதராசனார் "குழந்தைகளுக்கு எழுதுவதுதான் கடினம். சொல்லும் கருத்து எளிமையாக இருக்க வேண்டும். உளநூல் அறிவும் இதற்குத் தேவை"[16] என்று குறிப்பிடுகிறார்.

குழந்தைகள் இப்பாடல்களைப் பாடும் பொழுது கையை, காலை அசைத்துப் பாடலின் பொருளுக்கு ஏற்ப அபிநயத்துப் பாடி தானும் மகிழ்ந்து மற்றவர்களையும் மகிழ்விக்கிறது. இத்தகைய பாடல்களின் மூலம் முதலில் குழந்தைகளை மிகவும் கவரும் வண்ண, வண்ணப் பறவைகள், விதவிதமான விலங்குகளுடன் மனதளவில் அன்பு பாராட்டி மகிழும் இந்தப் பண்பு மேலும் மேலும் வளர்ந்து தன்னைச் சுற்றியுள்ள பல்வேறு குணங்கள் நிறைந்த மனிதர்களுடன் பழகும் பொழுது அவர்களிடம் அன்பு செலுத்தி வாழுவதற்கு அடிப்படையாக அமைகிறது. இக்கருத்தைக் காட்டும் வகையில் குழந்தையே தன்னைப் பற்றிக் கூறுவதாகக் குழ. கதிரேசன் "கூட்டாஞ்சோறு' எனும் நூலில் ஒரு பாடலில் வழங்கியுள்ளார்.

"கனிவாய் நானும் இருந்திடுவேன்
கனிந்த பழம்போல் இனித்திடுவேன்
அன்பைச் சொல்லில் குழைத்திடுவேன்
அதிலே இன்பம் அடைந்திடுவேன்!
இதமாய் வார்த்தை சொல்லிடுவேன்
இதயத்தில் ஓர் இடம் பிடித்திடுவேன்
உதவும் கரங்களை நீட்டிடுவேன்
உதவிகள் முடிந்ததைச் செய்திடுவேன்"[17]

என்று குழந்தைகள் பாடும் வகையிலும், இப்படி வாழ வேண்டும் என்ற ஒரு இலட்சிய நோக்கை மனத்தில் விதைக்கும் வகையிலும் பாடலை வழங்குகின்றனர். இந்தப் பண்புகளை இன்று மனிதம், மனிதநேயம் என்று குறிப்பிடுகிறோம்.

"மனிதம் தொலைத்தவன் மனதால் ஏழை!
மானம் தொலைத்தவன் பண்பால் ஏழை"[18]

என்றும் இவ்வாறு பாடல்களில் நேரடியாகச் சமூக நலன் பேணும் கருத்துகள் வழங்கப்படுகின்றன.

"மலர் இருந்தால்
மணம் உண்டு
ஆகாயம் இருந்தால்
பறவைகள் உண்டு
மின்னல் அடித்தால் இடி
முழக்கம் உண்டு
பிறப்பு இருந்தால்
இறப்பு உண்டு
ஆனால் மனிதன்

இருந்தும்
மனிதநேயம்
இல்லை"[19]

என்று சிறுவர்களே வழங்கியுள்ள 'மின்மினிப்பூக்கள்' எனும் கவிதைத் தொகுப்பில் குறிப்பிடுகின்றனர். சாதி மதங்களால் பிளவுபட்டுக் கிடக்கும் இச்சமுதாயம் நாளைய தலைமுறைகளால் இந்த வேறுபாடுகள் மறைய வேண்டும் என்ற கருத்துடன் இங்குச் சுட்டிக் காட்டப்படுகிறது.

"மனிதரை மாய்க்கும் சாதி மதங்கள்
மண்ணில் மறையட்டுமே – அன்று
புனித புத்தன் சொன்ன அன்பு மொழிகள்
பூமியில் நிறையட்டுமே
மனிதா! (மனிதா! மாறிடு மனமே
மனங்களால் ஒன்று படு!
இனியோர் விதிசெய் உலகினை அன்பால்
இணைத்தே வென்றுவிடு!"[20]

என்று குழந்தைகளுக்குக் கவிஞர்கள் அறிவூட்டுகின்றனர்.

'மனிதநேயம்' என்பது ஒரு குறிப்பிட்ட தனிக் குணம் என்று இல்லாமல் ஒரு தனிமனிதன் சமுதாயத்துடன் கூடி வாழும் பொழுது அவன் அடிப்படையில் அன்புள்ளம் கொண்டிருந்தால், குடும்பத்தார், உறவுகள், நண்பர்கள், ஆசிரியர்கள், தொடர்புகொள்ளும் பிற மனிதர்களிடம் பழகுவதற்கு, பிறருக்குப் பயன்படுவனாக வாழுவதற்கு ஏற்ற பல பண்பு நலன்களைப் பெற முடியும் என்பதாக அமைகிறது. இதனுடைய சிறப்பை எடுத்துக்காட்டுவதாக கலியன் சம்பத்து காந்தியடிகள் பற்றிய ஒரு பாடலில் வழங்கியுள்ளார்.

"மனிதநேய உயர் கொள்கை
மனித வாழ்வின் உயிரென்று
இனிதாய்ச் சொன்ன பெரியோர்கள்
இயேசு, அல்லா! இராமபிரான்
கனிவாய்ச் சொன்ன புத்தபிரான்
கருணை வடிவ வள்ளலாரும்
புனித பூமியில் ஒருருவாய்ப்
பிறந்தார் காந்தி யடிகளென!"[21]

என்று காந்தியடிகளைச் சிறப்பித்துப் பாடும் பொழுது குறிப்பிடுகிறார். 'அறஞ் செய விரும்பு' என்று அன்று அவ்வை

சொன்ன ஆத்திசூடியின் கருத்துகளை இன்று மழலையர், சிறுவர் பாடுவதற்கேற்ப, அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் இன்றையக் கவிஞர்கள் எழுதி வருகின்றனர்.

இப்பாடல்களெல்லாம் நடைமுறையில் சிறுவர்களுக்குச் சென்று சேருகிறதா, அவர்களிடம் புழக்கத்தில் இப்பாடல்கள் இருந்து வருகிறதா என்பது அய்யம். எனினும் கவிஞர்கள் பலரும் பதிப்பகத்தாரும் பல நூல்களைக் குழந்தைகளுக்கு வெளியிட்டு வருகின்றனர். இவை நூல்களாகப் பதிவு செய்யப்படுகிறது, வெளியிடப்படுகிறது என்பதும் வரவேற்புக்குரியதாகும். ஆங்கில வழிக் கல்வியை நாடிச்செல்லும் தற்காலப் போக்கில் இவை ஒரு சிலருக்கு மட்டும் பயன்படக் கூடியதாக உள்ளது என்பது ஒரு கசப்பான உண்மையாகும். இருப்பினும் மனிதநேயம் மிக்க நாளைய சமுதாயத்தைக் குழந்தைகள் மூலம் உருவாக்கப் படைப்பாளர்கள் பல உத்திகளைக் கையாண்டுள்ளனர்.

1. ஆறறிவு மிக்க மனிதனின் குழந்தைக்கு அறிவில் குறைந்து, அன்புடன் கூடி வாழும் பறவைகளும் விலங்குகளும் பாடல்களில் இடம் பெறச் செய்யும் இலக்கிய உத்தியை மிகுதியாகக் காணலாம்.

2. மனித உறவுகள், இயற்கை, பறவைகள், விலங்குகள் ஆகிய அனைத்தையும் நேசிக்கும் மனப்பக்குவத்தையும், தன்னால் சமூகம் மேன்மை அடைய வேண்டும் என்ற நோக்கத்தையும் கவிஞர்கள் மழலையர், சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் சொற்களைக் கையாளும் இலக்கிய உத்தியால் பெரியவர்களுக்கான இலக்கியப் படைப்புகளிலிருந்து குழந்தை இலக்கியம் முற்றிலும் வேறுபடுகிறது.

3. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்', அய்ந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது எனும் முதுமொழிக்கேற்ப இளம் நெஞ்சங்களில் மனிதநேயக் கருத்துகளை பதிவு செய்யக் கவிஞர்களே குழந்தைகளாக மாறி அந்தந்த வயதுக்கேற்ப எளிமையாக, சிறு, சிறு தொடர்களில் சுருக்கமாக, சீரான ஓசை நயத்துடன் வழங்குகின்ற இலக்கிய உத்தி குழந்தைப் பாடல்களின் பொதுத்தன்மையாக உள்ளது. வருணனைப் போக்கு, விளித்தல் முறை, உரையாடல், வினாவிடை எனும் அமைப்பு முறைகளில் குழந்தைகளுக்கான இப்பாடல்கள் அமைவது தனிச்சிறப்பாகும்.

உயிரினங்கள் மீது அன்பு காட்டுதல், தன்னலம் கருதாது பிறர் நலம் பேணுதல், பகுத்துண்டு வாழ்தல், கருணை நெஞ்சம் உடையவராக இருத்தல், சாதி, மத வேறுபாடுகளைக் களைதல், அன்பின் பெருமையை, முக்கியத்துவத்தை உணர்த்துதல், இயற்கையை

நேசித்தல், இயற்கை மனிதனுக்கு உதவுவது போல் உதவும் பண்பை வளர்த்தல், பெருஞ் சான்றோரின் சிறப்பை எடுத்துக்காட்டாக்குதல் ஆகிய பல கூறுகளை குழந்தைகளுக்கான இப்பாடல்கள் காட்டுவதாக உள்ளன. மனிதநேயம் எனும் சொல் பிற்காலத்தில் வழங்கப்பட்டதெனினும், அதனுடைய பன்முகத் தன்மையை உணர்த்தும் வகையில், அதனுள் அடங்கும் பண்புகளைக் காட்டும் குழந்தைப் பாடல்கள் பல நூற்றாண்டுகளாக இருந்து வருவதை அறியலாம். இதனால் மனிதநேயம் எனும் கருத்தைப் பல நூறு குழந்தைப் பாடல்கள் விளக்குவதை இவ் வாய்வின் மூலம் அறியமுடிகிறது.

குறிப்புகள்

1. கவிஞர் குழ. கதிரேசன் பாடல்களில் உடல் நலமும், மனநலமும் க. கவிதா, யாழ் வெளியீடு, சென்னை - 14, பதி. டிச. 2002, ப, 20.
2. தமிழ் இலக்கிய வரலாறு, மு. வரதராசன், சாகித்ய அகாதெமி வெளியீடு, பதி. 1972, ப. 372.
3. கவிஞர் குழ. கதிரேசன் பாடல்களில் உடல்நலமும், மனநலமும், க. கவிதா, யாழ்வெளியீடு, சென்னை -14, பதி. மு.ப. டிச. 2002 ப. 41.
4. குழந்தைப் பாடல்களில் பாடுபொருளும் பாடுநெறியும், வெ. தனலக்குமி, மங்கை வெளியீடு, சென்னை-18, பதி.டிச. 1990, ப. 9.
5. பாரதியார் கவிதைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை-13, பதி. மே. 1976, ப. 202.
6. கிள்ளைப் பாடல்கள், புலமைப்பித்தன், அம்மன் புக் கம்பெனி, சென்னை-5, பதி. 1996, ப. 10.
7. குழந்தைப் பாடல்களில் பாடுபொருளும் பாடுநெறியும், வெ. தனலக்குமி, மங்கை வெளியீடு, சென்னை-18, பதி. டிச. 1990. ப.1.
8. மேற்படி, ப. 11.
9. கூட்டாஞ்சோறு, குழ. கதிரேசன், நாகு வெளியீடு, சென்னை-40, பதி. ஜூலை 1998, ப. 68.
10. மலரும் மாலையும், சி. தேசிக விநாயகம் பிள்ளை, பாரி நிலையம், சென்னை - 1, நான்காம் பதி. சன 1951, ப. 72.
11. கவிஞர் குழ. கதிரேசன் பாடல்களில் உடல் நலமும் மனநலமும், க. கவிதா, யாழ் வெளியீடு, சென்னை-40, பதி. டிச 2002, ப. 53.

12. சிறுவர் பாடல்கள், நல்லாமூர் கோ. பெரியண்ணன், வனிதா பதிப்பகம், சென்னை - 61, பதி. டிச. 1997, ப. 16.

13. பெ.நா. அப்புஸ்வாமி நூற்றாண்டு விழா மலர் (கட்) குழந்தைக் கவி 'பேனா', தம்பி சீனிவாசன், நூற்றாண்டு விழாக் குழு, திருநெல்வேலி, 1992, ப. 48.

14. குழந்தைப் பாடல்களில் பாடு பொருளும் பாடு நெறியும், வெ. தனலக்குமி, மங்கை வெளியீடு, சென்னை - 18, பதி. டிச. 1990, ப. 73.

15. பாரதி ஒரு வாழ்வு நெறி, தி.ச. ராஜீ, அமுதநிலையம், சென்னை, பதி. 1976, ப. 92.

16. சிறுவர் இலக்கிய வரலாறு, பூவண்ணன், வானதிப் பதிப்பகம், சென்னை-17, பதி. 1980, ப. 173.

17. கூட்டாஞ்சோறு, குழ. கதிரேசன், நாகு வெளியீடு, சென்னை-40, பதி. ஜூலை 1998, ப. 63.

18. மின்மினிப் பூக்கள், மாணவக் கவிஞர்களின் தொகுப்பு, வி. கோமதி வேலம்மாள் மேனிலைப் பள்ளி, சென்னை-50, பதி. 2001, ப. 35.

19. மேற்படி எஸ். பிரகாஷ், ப. 38.

20. கொழுந்து, கோவி. கலியபெருமாள், புதுச்சேரி, ப. 98.

21. கலியன் கவிதைகள், கலியன் சம்பத்து, ஜெயக்குமார் பப்ளிகேஷன்ஸ், சென்னை-114, பதி. டிச. 2001.

******

சு. சமுத்திரத்தின் 'ஒரு கோட்டுக்கு வெளியே' நாவலில் மனிதநேயம்

மா. பெரியசாமி
ஆய்வாளர்

'சு. சமுத்திரம்' அவர்கள் சில திங்கள் முன்பு வரை நம்முடன் வாழ்ந்தவராவார். சமூகத்தில் உள்ள அநீதிகளைக் கண்டித்தும், முற்போக்கான அம்சங்களுடனும் இலக்கியம் படைத்தவர். இவர் நாவல், சிறுகதை, கட்டுரை போன்ற இலக்கிய ஆக்கங்களில் சிறப்புப் பெற்று விளங்கினார். இவருடைய இலக்கிய முயற்சிக்கும், சமூக அக்கறைக்கும் கிடைத்த பாராட்டுதலாகவும் சிறந்த ஊக்கியாகவும் 'சாகித்திய அகாதெமி விருது' அமைந்தது. இவ்விருது 'வேரில் பழுத்த பலா' என்னும் நாவல் படைப்பிற்கு வழங்கப்பட்டது. இவருடைய முதல் நாவலான 'ஒரு கோட்டுக்கு வெளியே' என்னும் படைப்பிலிருந்து மனிதநேயக் கருத்துகளைக் கூறுவதாக இக்கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது.

மனிதநேயமும் இலக்கியமும்

மனிதநேயம் என்பதற்கான வரையறையை எழுத்தாளர் 'பொன்னீலன்' கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

"கருணை உணர்வினால் வரக்கூடியது 'மனிதாபினாம்' அல்ல. இழப்புகள் வந்தாலும் சக மனிதர்கள் நம்மைப் போல வாழ்வதற்குப் போராடி தியாகம் செய்யும் மனப்பான்மையுடன் வாழ்வதே மனிதநேயம்" (தினமணி (நாளிதழ்) சென்னை பதிப்பு, 7-12-2003, ஞாயிற்றுக்கிழமை).

மேற்கூறியக் கருத்திலிருந்து மனிதநேயம் எவ்வகையில் செயலாற்ற வேண்டும் என்பதை அறிய முடிகிறது. தியாகம் என்பது கருணை உணர்விலிருந்து வேறுபட்டுச் சக மனிதன் வாழ்வதற்குப் போராட வேண்டும் என்பதில் சென்று நிற்பதை உணரமுடிகிறது.

இதேபோல் மற்றொரு கருத்தினைக் காண்போம். இதுவும் மனிதநேயப் பண்பு இலக்கியத்தில் எவ்வகையில் வெளிப்படுத்த வேண்டும் என்பதைக் கூறுகிறது. அது,

"மனிதனுடைய முழு ஆற்றலையும் பண்பையும் தொகுத்து உலகில் உள்ள இலக்கியங்கள் மனிதனுக்கே திரும்பத் தருகின்றன.

அதாவது மாட்சிமை மிக்க மனிதப் பண்புகள் ஆற்றல்கள் அனைத்தும் நமக்கு உண்டு என்பதை நினைவூட்டுகின்றன. அது மட்டுமல்ல அந்த ஆற்றலை நாம் பெருக்கிக் கொள்ள வளர்த்துக் கொள்ள அவை சிறந்த கருவியாகப் பயன்படுகின்றன". (இலக்கியத்தில் மனிதநேயம், பக். 36).

'தாய் நாவலைப் படைத்துப் புகழ்ப் பெற்ற எழுத்தாளரான 'மக்சிம் கார்க்கி' கூறுகிற கருத்துக் கீழ்வருமாறு:

"மனிதர்களுக்கு விரோதமான தன்மை வாய்ந்ததாக இருக்கும் அனைத்தையும், அது அவர்களால் விரோதத் தன்மையற்றதென்று இன்னமும் விரும்பப்பட்ட போதிலும் கூட, அழிப்பதற்கும், குழித்தோண்டி புதைப்பதற்கும் வரலாற்றினால் நம்முடைய இளம் இலக்கியம் கோரப்பட்டு வந்துள்ளது". (கலை இலக்கியத்தில் சோஷியலிஸ்ட் எதார்த்த வாதம், ப. 46)

மேற்கூறிய கருத்திலிருந்து மனிதநேயம் இலக்கியத்தில் அமையும் பாங்கினையும் இப்பண்பு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஊட்டமாக அமைவதையும் சுட்டிக் காட்டுகிறது. இவ்வடிப் படையிலேயே சு. சமுத்திரத்தின் இந்நாவல் அமைந்துள்ளது.

நாவலின் பின்புலம்

இந்நாவல் 1971இல் வெளிவந்தது. இதுவே ஆசிரியரின் முதல் நாவலிலக்கியப் படைப்பாகும். இப்படைப்பின் வழி ஆசிரியர் திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டத்திற்குட்பட்ட கிராமமான குட்டம்பட்டியில் நடக்கும் கிராமத்துப் போராட்டத்தைக் கூறுகிறார். இக்கிராமத்தில் வாழ்கிறவர்கள் விவசாயமும் அதைச் சார்ந்த பிற தொழில்களையும் செய்பவர்களே பெரும் பங்கினர். குடிசைத் தொழிலாக பெண்கள் பீடி சுற்றுதலும் ஆண்கள் பனைமரத்தில் கள்ளிறக்குதலும் செய்கின்றனர். மற்றும் தச்சுத் தொழில் செய்பவர்களும் உள்ளனர். இக்கிராமம் தமிழகத்தின் கிராம மாதிரிக்கு சரியான உதாரணம் எனலாம். இக்கிராமம் இரு பெரும் பிரிவாகப் பிரிந்து அமைந்துள்ளது. அது பிள்ளை, தேவர், நாடார், ஆசாரி போன்ற சாதியைச் சேர்ந்தவர்கள் வசிப்பதை ஊர் என்றும்; நிலத்தில் விவசாயக் கூலியாக உழைத்தும் உதிரித் தொழிலாகப் பறையடித்தல் போன்றவற்றைச் செய்து வரும் பறையர்கள் வசிப்பதைச் சேரி என்றும் சுட்டும் வகையினவாகும்.

நாவலின் கதை

இவ்வூரில் வாழும் உலகம்மை என்னும் இளம் பெண் கூலி விவசாயியாகத் தொழில் செய்து வாழ்ந்து வருகிறாள். இப்பெண்

எழில் மிக்கவளாக உள்ளபடியால் வயது முதிர்ந்த சரோஜா என்னும் பெண்ணிற்கு மாற்றாக இவளைக் காட்டி, திருமணத்திற்குச் சம்மதம் பெறுகின்றனர். இதை அறியாது உலகம்மையும் இச்சதியில் பங்கு பெற்று விடுகிறாள். சதியை அறிந்த போது மாப்பிள்ளையாக வந்த இளைஞனிடம் உண்மையைத் தெரிவித்து விடுகிறாள். திருமணம் நின்று விடுகிறது. இவ்வுண்மையை அறிந்த பெண்ணின் தந்தை உலகம்மையைப் பழிவாங்கும் நடவடிக்கையைச் செய்யத் தொடங்குகிறார்.

உலகம்மையின் தந்தை மாயாண்டி நாடார் சரோஜாவின் தந்தையான மாரிமுத்து நாடாரிடம் ரூபாய் ஐம்பதைக் கடன் வாங்கியிருந்தார். அக்கடன் ரூபாய்க்கு வட்டி மட்டுமே உலகம்மையால் செலுத்தி வர முடிந்தது. எனவே அசல் ரூபாயைக் கேட்டு ஊரின் வழக்கப்படி மாயாண்டி நாடாரைக் கோட்டிற்குள் நிறுத்தி விட்டார் மாரிமுத்து நாடார். காவல் நிலையம் சென்றே அவரை உலகம்மை மீட்டு வந்தாள். காவல் நிலையத்தில் உலகம்மைக்கு உதவி செய்தது லோகநாதன். அதாவது சரோஜாவைப் பெண்பார்க்க வந்த இளைஞன்.

காவல் நிலையச் சங்கதி பண்ணையாரின் கௌரவ விசயமாக மாறிவிட்டபடியால் உலகம்மையைத் தன் காலில் விழ வைக்க வேண்டும் என்று முடிவு செய்தார். இதற்காகப் பல வகையான தந்திர வியூகங்களை அமைத்தார். தன் தங்கையின் கணவனிடம் உள்ள பகையை மறந்து சந்தர்ப்பக் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டார். தன் பெண்ணையும் பலவேச நாடாரின் குடிகார மகனுக்குத் திருமணம் செய்து வைத்தார். எனினும் மாரிமுத்து நாடாருக்குத் தன் பெண்ணை ஒரு குடிகாரனுக்குக் கொடுத்தது பிடிக்கவில்லை. இதற்கெல்லாம் காரணமாக உள்ள உலகம்மையைச் சீரழித்தால்தான் மனம் சாந்தமடையும் என்று முடிவு செய்து விட்டார். ஊரில் தன்னுடைய செல்வாக்கால் மக்களையும் உலகம்மையின் சாதி உறவினர்களையும் பிரித்துவிட்டார். ஊரின் பஞ்சாயத்துத் தலைவரையும் தன் கைப்பாவையாக வைத்துக் கொண்டு உலகம்மையை அவளுடைய தந்தையுடன் சேர்த்து ஊரிலிருந்து தள்ளி வைத்து விடுகிறார்.

ஊரில் உறவுகள் அற்ற நிலையில் பக்கத்து ஊருக்குச் சென்று கூலி வேலை செய்து வாழ்கிறாள். இந்நிலையில் வாழ்ந்து வரும் உலகம்மையைக் குடிசையைக் காலி செய்யப் பலவேச நாடார் 'வக்கீல் நோட்டிஸ்' அனுப்புகிறார். உலகம்மை குடியிருக்கும் இடம் பலவேசம் நாடாரின் இடமாகும். இவ்வக்கீல் நோட்டிஸ் ஆங்கிலத்தில் உள்ளது. இது என்னவென அறிய அருணாச்சலத்திடம் உதவி பெற எண்ணிச்

செல்கிறாள். அங்குதான் தன்னுடைய வீட்டைக் காலி செய்யச் சொல்லும் அறிவிப்பு என அறிகிறாள். அருணாச்சலம் 'பி.ஏ.,' வரை படித்துச் சமூக முன்னேற்றம் காண வாழ்ந்து வருபவன். இவ்விளைஞன் குட்டாம்பட்டிக் கிராமத்தின் சேரிப் பகுதியினைச் சேர்ந்தவன். உறவுகள் அற்றும், வாழும் வீட்டைக் காலி செய்யச் சொல்லும் இவ்விக்கிட்டான சூழலை அறிந்து அங்குள்ள பெண்கள் அன்பையும் ஆதரவையும் காட்டுகின்றனர். அத்தோடு உலகம்மைக்குச் சட்டரீதியான பாதுகாப்புப் பெற்றுத் தர உறுதி தருகிறான் அருணாச்சலம்.

ஊரில் உள்ள மக்களாலும் தன் இரத்த உறவுகளினாலும் தள்ளி வைக்கப்பட்டும் பலவகையானத் துன்பங்களைக் கொடுப்பவர்களாக உள்ளவர்கள் ஒரு பக்கமும் மறுபக்கத்தில் உறவுகள் என்று இல்லை. தாழ்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றவர்கள். இவர்கள் அன்பையும் ஆதரவையும் காட்டுகின்றார்கள். உலகம்மை உண்மையையும் பொய்யையும் வாழ்க்கை என்ற கல்லில் உரசிப்பார்த்தே அறிந்து வாழ்ந்து வருபவள். எனவே 'உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்' என்று உணர்ந்து அருணாசலத்தைச் சகோதரன் என்று ஏற்றுக் கொள்கிறாள்; இறந்து போன தன் தந்தையின் சிதைக்குத் தீமூட்டும் கடமையையும் அருணாச்சலத்தையே செய்ய வைக்கிறாள். ஒதுக்கி வைத்த ஊரை ஒதுக்கி விட்டு, ஆதரவும் அன்பும் காட்டும் சேரியுடன் சேர்ந்து புது வாழ்வை மகிழ்ச்சியுடன் தொடங்குகிறாள்.

நாவலின் சாரம்

சாதி அடிப்படையில் சமூகம் ஏற்றத்தாழ்வாக அமைந்து துன்பத்தில் தவிக்கிறது. அதேபோல் சாதிக்குள்ளேயும் பொருளியல் ஏற்றத் தாழ்வுகள் துயரங்களைப் படைத்துக் கொடுக்கும் வற்றாத அமுதசுரபியாகச் சுரப்பதைக் காட்டுகிறார். அத்தோடு அதற்கு என்னதீர்வு என்பதைக் காட்டுவதில் இலக்கியத்தின் மனிதநேயப் பணி முழுமை அடைகிறது.

பாத்திரங்கள்

உலகம்மை

நாவலின் மையப் பாத்திரம். இவருடைய தந்தையார் மாயாண்டி நாடார். தந்தையின் தொழில் பனை மரமேறிக் கள்ளிறக்குதல் ஆகும். இத்தொழில் செய்யும் போது விபத்தொன்றில் கால் முடமாகி வீட்டிலேயே இருக்க வேண்டியதாகிவிட்டது. உலகம்மை விவசாயக் கூலியாக வாழ்க்கையை நடத்தி வந்தாள்.

குட்டாம்பட்டி கிராமமாக இருப்பினும் பழைய நிலப்பிரபுத்துவக் கலாச்சாரத்தின் பிடிப்பும், புதிய நவீன காலத்துக் கலாச்சாரத்தின் தனித்துவ விருப்பும் மோதிக் கொள்ளும் ஒரு நிலையை அறிய முடிகிறது. இப்போராட்டத்தின் வெளிப்பாடாகவே உலகம்மை படைக்கப்பட்டுள்ளாள். அவள் தான் பிறந்த இந்து சாதியமைப்பைக் கேள்விக்குள்ளாக்குகிறாள். இக்கேள்வியின் தர்க்கவியல் முடிபாகவே இறுதி முடிபு அமைகிறது. தொடக்கத்தில் உலகம்மையின் மனத்தில் தோன்றும் எண்ண அலைகள் இது,

“இத்தன சாதி இல்லாம, ஏழை சாதி, பணக்கார சாதின்னு ரெண்டு இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும். பறையன், பணக்காரன், பணக்கார நாடார் கூட போறன். ஆனால் நாடார்ல ஏழை பறையர்ல ஏழ கூட ஏன் சேரல? சாணான்னு இவனத் தள்ளி வச்சாக்கூட, இவன் ஏழ பறச்சாதி கூடச் சேராம நாடார் நாடார்னு சொல்லறவங்ககூட ஏன் ஒட்டிக்கனும்? பிராமணன்ல ஏழ பறையன் மாதிரி கஷ்டப்படுறான். பறையன்ல பணக்காரன் பிரமாணன், மாதிரி குதிக்கிறான். ஏழப் பறயனும், ஏழச் சாணானும், ஏழ பிராமணனும் ஒன்னாச் சேந்தா, ஊரையே மாத்திப்பிடலாம்”. (பக். 140)

சாதியைப் பற்றிய இக்கருத்து நவீன காலத்துச் சமூகப் புரிதல்களோடு ஆசிரியர் முன்வைக்கிறார். படிக்கும் வாசகர்கள் மனத்திலும் நெருடலாகப் படவில்லை. இது நன்றாகத்தான் இருக்கிறது எனச் சிந்திக்க வைக்கிறார்.

உலகம்மை உருவத்திலும் உள்ளத்திலும் எழிலானவள். இக்காரணத்தாலேயே பண்ணையாரின் மகளுக்கு ஆள் மாறாட்டம் செய்யத் தகுந்தவளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறாள். பெண் உலகம்மை என்று சம்மதம் தெரிவித்து விட்டான். எனினும் ஆள்மாறாட்டம் நடந்ததை உலகம்மை அறிந்து மாப்பிள்ளையிடமும் சொல்லுகிறாள். மாப்பிள்ளையாக வந்த இளைஞனும் உலகம்மையை ஏழ்மையை அறிந்தும் மணக்க விருப்பம் தெரிவிக்கிறான். அதை மறுத்துப் பண்ணையாரின் பெண்ணையே மணக்க வற்புறுத்துகிறாள். அது,

“எங்க சரோசாக்கா அழகு இல்லாம இருக்கத மறைக்க விரும்பல. அழகு முக்கியமா? அஞ்சு விரலும் ஒண்ணா இருக்குமா? எங்க அக்கா குணத்துக்காகவே நீங்க கட்டலாம். யாரையும் நீன்னுகூட சொல்லமாட்டா, குனிஞ்ச தல நிமுரமாட்டா. ஒரு ஈ காக்கா அடிபடக் கூடச் சம்மதிக்க மாட்டா. லட்சக்கணக்கா சொத்து இருந்தாலும் கொஞ்சம் கூட மண்டக்கெணம் கிடையாது. அவள மாதிரி ஒருத்தி இனிமதான் பிறக்கணும். அவள கட்டுறதுக்கு நீங்க குடுத்து வச்சிருக்கணும், ஒங்க மேல உயிரையே வச்சிருக்கா”. (பக். 42)

இந்த மறுப்புரை உலகம்மையின் நேர்மைக்கும் உயரிய பண்பிற்கும் சான்றாகும். அத்தோடு கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுவது என்ற குறுகிய கண்ணோட்டத்திற்கு மாற்றாக நியதியை, உண்மையை அடிப்படையாகக் கொண்டே வாழ வேண்டும் என்றும் அது சிறப்பானது என்பதையும் உணர்ந்து மறுப்பதாக இருக்கிறது.

உலகம்மையைப் பழிவாங்க அவரது தந்தையைக் கோட்டிற்கு நிறுத்தி விடுகின்றனர் ஊர்ப் பெரிய மனிதர்கள். காவல் துறை உதவியை நாடினாள் உலகம்மை. காவல் துறையினர் அழைத்துச் செல்கின்றனர். பாதிக்கப்பட்டவனைக் குற்றவாளியெனச் சித்திரிக் கின்றனர் காவலர்கள். அதற்கு உடந்தையாக இருந்த ஊரார்களைப் பார்த்து இவ்வாறு சபிக்கிறாள்.

"நீங்களெல்லாம் மனுஷங்களாய்யா? ஒங்களுக்கு எதுக்கயா வேட்டி, சட்டை? பொட்டையிலயும் கேடுகெட்ட பொட்டப் பயலுக! ஏன் பின்னால் வாரீக! உள்ளதச் சொல்லப் பயப்படுற நீங்களெல்லாம் எதுக்காக மனுஷன்னு பூலோகத்துல லாந்தனும்? போங்கய்யா, ஒங்க வேலயப் பாத்துகிட்டு" (பக். 82)

இக்கூற்று ஒரு பெண்ணின் கையறு நிலையில் தோன்றும் கதறலாகவே உள்ளதை அறிய முடிகிறது. அத்தோடு இக்கூற்றில் உள்ள 'பொட்டப் பயலுக' என்னும் விமர்சனத்திற்கு ஊரார் உலகம்மையைக் கொடூரமாகத் தண்டிக்கிறனர். அது,

"அவள ஊர்ல இருந்து இன்னையில இருந்து தள்ளி வைக்கிறோம். யாரும் அவக்கூடப் பேசப்படாது. நல்லது கெட்டதுக்கு யாரும் போவக் கூடாது. அவளயும் கூப்புடக் கூடாது. எந்தக் கடக்காரனும் அவளுக்குத் தட்டு முட்டுச் சாமான் குடுக்கக்கூடாது. வண்ணான் வெளுக்கக்கூடாது. ஒரு தண்ணிகூட அவளுக்கும் குடுக்கக் கூடாது. அவாகுடுக்கத வாங்கக் கூடாது. அப்படி யாராவது மீறி நடந்தா அவங்களயும் தள்ளி வச்சிடலாம். அப்பத்தான் ஊர்க்காரங்க பொட்டப் பயலுவ இல்லன்னு அர்த்தம் (பக். 126).

ஊரில் உள்ளவர்கள் தங்களது ஆண்மையை நிரூபித்துக் கொள்ள ஓர் இளம் பெண்ணையும், ஊனமுற்ற வயதான மனிதனையும் தனிமைப்படுத்தப் பொருளாதார, கலாச்சார தடையை விதிக்கின்றனர். ஆனால் சமூக எதார்த்தம் எவ்வளவு பெரும் துன்பத்தையும் நீக்கி வாழ்வை வளப்படுத்த வழியைக் கண்டு கொள்கின்றது. அவ்வாறு உலகம்மை கண்ட வழி மிகவும் புரட்சிகரமானது. அது அன்பையும் அரவணைப்பையும் காட்டும்

சேரி மக்களுடன் இணைவது என முடிவு செய்கிறாள். இதை ஊராரான மேல் சாதியைச் சேர்ந்தவர்கள் உலகம்மையிடம் முடிவை மாற்றிக் கொள்ளும்படி பலவாறு கேட்கின்றனர். உலகம்மையின் உறுதியான பதில்,

"கணக்கப்பிள்ளை, என் ஜாதியைப் பத்திக் கவலப் படான்டாம். நான் இப்போ பறச்சிதான். அப்படி ஆனதுனால சந்தோஷம் இல்லாம போவல. நான் ஒருத்தி போறதால மேல் ஜாதி எல்லாம் போயிடுமுன்னா, ஒங்க சாதிங்க எவ்வளவு இத்துப் போயிருக்கணும்? மொதல்ல அதக்கவனிங்க." (பக். 198).

இப்புரட்சிகரமான முடிவை எடுப்பதற்கு வாழ்வில்கண்ட யதார்த்த உண்மைகளே ஆதாரமானவையாகும். இறுதியாகத் தான் செல்லும் இடம், இது நாள் வரை வாழ்ந்த இடம். என இவ்விரண்டையும் மதிப்பிடும்படியான கூற்றில் இவ்வாதாரத்திற்கு மேலும் துணை செய்வது போன்று அமைந்துள்ளது அக்கூற்று,

"என்னைப் பத்திக் கவலப்படாம ஒங்களபத்தி மட்டுமே கவலப்படுங்க. நான் மேல் ஜாதியில செத்து, கீழ் ஜாதியில பிழச்சிக்கிட்ட பொம்பிள!" (பக். 200)

வாழ்வதற்குப் பிறந்த மனித சமூகம் வதைப்படுவதில் என்ன நியாயம் இருக்க முடியும்? அத்தோடு அத்துயரத்தைத் தரத்தக்க எதுவாக இருப்பினும் அதை எதிர்ப்பதும் அதற்கு மாற்றைக் கண்டு கொள்வதும் பிரக்ஞையுள்ள மனிதனின் சமூகக் கடமையாகும். அவ்வாறே இப்பாத்திரமும் தனது முடிவை தொடக்கமாக்கிக் கொண்டாள்.

லோகநாதன்

குட்டாம்பட்டியின் பக்கத்து ஊரான சட்டாம்பட்டியைச் சேர்ந்தவன். எம்.ஏ. வரை படித்தவன். சகோதரிகள் நிறைந்தது இவன் குடும்பம். அத்தோடு அவர்களைக் கரைசேர்க்கும் பொறுப்பைக் கையில் எடுத்துக் கொண்டவன். தந்தைக்குச் சொந்த நிலம் கிடையாது. குத்தகைக்கு நிலம் பிடித்து விவசாயம் செய்து குடும்பத்தைக் காப்பாற்றும் நியைில் உள்ளவர்.

லோகநாதன் தெளிந்த சிந்தனை பெற்றவன். வாழ்க்கையைக் கீட்சு, ஷெல்லி, பாரதி போன்ற கவிஞர்கள் கூறியதைப் போன்று அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நினைப்பவன். அதே போன்ற திருமணத்திலும் நெறிமுறைகளைக் கொண்டிருந்தாள். அது,

"சமுதாயப் பிரச்சனைகளை அலசிப் பார்ப்பதற்கு,தனக்கு வாய்ப்பவள் பட்டதாரிப் பெண்ணாக இருக்க வேண்டும் என்று நினைத்தான். ஆனால் பல பட்டதாரிப் பெண்களோடு பழகியபின், படிப்பிற்கும் சமுதாயப் பிரக்னைக்கும் சம்பந்தம் இல்லை என்பது மட்டுமல்ல, இந்த 'பட்ட' குவாலிபிகேஷன் அந்தப் பிரச்சினைக்கு ஒரு டிஸ்குவாலிபிகேஷன் மாதிரியும் அவனுக்குத் தென்பட்டது" (பக். 38).

மேற்கண்ட கூற்றினால் திருமணக் கொள்கையில் தளர்ச்சியைக் கடைபிடித்தான் என்பதை அறிய முடிகிறது. இதனாலேயே குட்டாம்பட்டிக்கு வந்து சரோஜா என்று, உலகம்மையைப் பெண்ணாக நினைத்துத் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிக்கிறாள். உலகம்மையின் மூலம் உண்மையை அறிந்த போதும், உலகம்மையைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்கிறான். எனினும் உலகம்மை மறுத்து விடுகிறாள்.

ஒரு கூலித் தொழிலாளியான உலகம்மையை மணந்தால் வறுமை வரும் என்று உணர்ந்தும் திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவிக்கும் பெருமைக்குரிய பாத்திரம்.

அருணாச்சலம்

குட்டாம்பட்டி சேரியில் 'பி.ஏ.' வரைப் படித்தவன். சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் இடையில் வந்த ஒன்று என்பதை அறிந்து அதை நீக்கி அனைவரும் இன்ப வாழ்வு வாழ வேண்டும் என்பதை எண்ணி வாழ்கிறவன். தாழ்த்தப்பட்ட சாதியில் உள்ளவர்களை எவ்வாறு இணைக்க வேண்டும் என்று கூறுவது உலகம்மையின் கருத்தோடு ஒத்த ஒன்றாக உள்ளது. அது,

"போகப் போகப் பாரு. நீ சொன்ன அத்தனை பேரயும் ஒண்ணாச் சேக்கப் போறேன். நம்ம இனத்துல மேல்சாதி மாதிரி நடக்கிற பணக்காரங்களத் தள்ளி வச்சுப்புட்டு மேல்சாதியில இருக்கிற ஏழை எளியவங்கள நம்மோட சேக்கப் போறேன்! ஏன்னா ஹரிஜனங்களைவிட மோசமான நிலையில் பலர் மேல்சாதியில இருக்காங்க இவங்க சாதி மயக்கத்தக் கலச்சிட்டா ஊரயே கலக்கிடலாம்" (பக். 147).

இன்றைய நிலையில் மேற்கூறிய கருத்து சமூக சிக்கலைக் களைவதற்கு உதவிகரமாக உள்ள தென்பது வெளிப்படையாகும்.

அருணாச்சலம் சொல்வதோடு செயலுக்கும் தயாராக இருக்கும் செயல் வீரன். உலகம்மையின் தந்தை இறப்பிற்கு இறுதிச்

சடங்கு செய்யச் சகோதரன் என்ற உறவுநிலையினைப் பெறுகிறான். உலகம்மையின் வாழ்விற்குப் பொறுப்பும் எடுத்துக் கொள்வதில் இவன் பாத்திரம் முடிவு பெறுகிறது.

மாரிமுத்து நாடார்

கிராமத்தில் செல்வம் மிகுந்தவர். பல சிறு விவசாயிகளிடம் கடனைக் கொடுத்து வட்டியை வாங்குவார். குறிப்பிட்ட காலத்திற்குள் கடனைத் தரவில்லை என்றால் நிலத்தை அபகரித்துக் கொள்வார் இவ்வாறு செல்வந்தனாகத் தன்னை வளர்த்துக் கொண்டவர். இவர் நாவலில் தீய செயலைச் செய்பவர் என்பதையும் இவரே உலகம்மையைப் பழி வாங்க பல அநீதிகளைச் செய்தவர் என்பதும் அறிய முடிகிறது. இவர் சரோஜாவின் தந்தை.

சரோஜா

மாரிமுத்து நாடாரின் பெண். முப்பது வயது வரை திருமணம் நடக்கவில்லை. இவளின் இளமையை, கனவை, அழகைச் சீர்குலைத்ததில் இவளின் தாயாரின் பங்கு அதிகம். தாயின் நிலப்பிரபுத்துவக் கலாச்சார பெருமை சரோஜாவிற்கு திருமணம் ஆகாமலேயே மூப்பைப் பரிசளித்தது.

பலவேசம் நாடார்

மாரிமுத்து நாடாரின் தங்கை கணவன். தனது விருப்பம் நடந்தேற வேண்டும் என்றால் எத்தகைய சூழ்ச்சியையும் செய்து சாதித்துக் கொள்பவர். ஊரில் உள்ளவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே அடித்து விடும் திமிரான பழக்க வழக்கங்களைக் கொண்டிருப்பவர். உலகம்மைக்குத் தீங்கு நிறையச் செய்தவர்.

இவரும் மாரிமுத்து நாடாரும் கொடுத்த நெருக்கடிகள் உலகம்மையைப் பெரிதும் துன்பத்திற்கு ஆளாக்கியது. உலகம்மையைச் சுயமான விமரிசனத்தை வாழ்க்கையின் மீது செய்ய தூண்டியது இவர்களே. நெருப்பாக இருந்து உலகம்மை என்ற பொன்னைச் செம்பொன்னாக மாற்றியவர்கள் இவர்கள். இவ்வகையிலேயே முக்கியமான பாத்திரங்கள் உள்ளன. இன்னும் இந்நாவலில் சில பாத்திரங்கள் சிறப்பாக ஆசிரியரால் படைக்கப்பட்டுள்ளன.

முடிவாக......

நவீன காலத்து இலக்கிய வடிவமான நாவல் இலக்கியத்தில் நவீன காலத்துக் கருப்பொருளைப் படைப்பாக்கியுள்ளார். இப்படைப்பில் மனிதநேயப் பண்புகள் சிறப்பாக வெளிப்படுகின்றன.

நிலப்பிரப்புதுவச் சமூக ஒழுக்கமான சாதி ஒழுங்கு, நவீன (Modern) சமூகத்தில் எவ்வகையான மாற்றம் பெறுகிறது என்பதை இலக்கியமாக மாற்றியுள்ளார்.

இந்நாவல் சமூகத்தின் சிக்கலாக உள்ள சாதியமைப்பிற்கு மிகச் சிறந்த தீர்வைத் தருகிறது. அது, அனைத்துச்சாதியிலும் ஏழைகள் உள்ளனர்; அனைத்துச் சாதியிலும் பணக்காரர்களும் உள்ளனர்; அனைத்துச் சாதியிலும் உள்ள பணக்காரர்கள் சொற்ப மானவர்களே; ஆனால் அனைத்துச் சாதியிலும் உள்ள ஏழைகள் பெரும் பங்கினர் ஆவார்கள். இப்பெரும் பங்கினர் அனைவரும் இணைந்தால் சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து விடலாம் என்பதைக் காட்டுகிறார்.

ஒரு நீண்ட காலச் சமூகச் சிக்கலைக் களைவதற்கு, அதன் துன்பத்தைத் தீர்ப்பதற்கு, அச்சமூகத்திற்கு இன்பத்தை அளிப்பதற்கு ஒரு புதிய தீர்வைக் காட்டி நிறைவு செய்கிறார். இதுவே இந்நாவலின் மனிதநேயப் பண்பாக அமைந்துள்ளது.

******

மனிதநேயப் பார்வையில் பிரபஞ்சனின் மகாநதி

த. பூமிநாகநாதன்
ஆராய்ச்சி உதவியாளர்

பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் வளரத் தொடங்கி இந்நூற்றாண்டில் மிகப் பரவலான ஓர் இலக்கிய வகையாக வளர்ந்திருப்பது நாவல் அல்லது புதினம் ஆகும்.

முறையாகக் கற்று அறிவு பெற்றோரும், சாதாரண அறிவு படைத்தோரும் விரும்பி எடுத்துப் படிக்கும் சிறப்பினையுடைய பெருமை நாவல் மற்றும் சிறுகதைக்கு உண்டு. கலைத்துறையில் சிறிதுநேரம் பொழுதுபோக்க விரும்புவோர்க்குச் சிறுகதையும், நீண்ட நேரம் செலவழிக்க விரும்புவோருக்குப் புதினமும் பயன்படுகின்றன.

வேகமாக இயங்கி வரும் இன்றைய மக்கள், கவிதை வடிவில் அமைந்த காவியத்தைப் படிப்பதற்குரிய நேரமும் பொறுமையும் இன்றிப் படிக்க வல்ல உணர்வும் இல்லாத காரணத்தால் காவியம் போன்று செயற்படுவதாய், உரைநடையில் உள்ள புதினத்தை எடுத்து விரும்பிப் படித்து முடிக்கின்றனர். கதை, கதைமாந்தரின் உணர்ச்சிப் போராட்டங்கள் செயல்முறைகள் முதலியன நிறைந்த காவியத்தால் அடையும் பயனை, புதினத்தால் அடைந்து விடுகின்றனர்.

பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றோரும் ஏனையோரும் புதினங்களைப் படிப்பதிலும் படைப்பதிலும் ஆராய்வதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். தமிழகத்திலும் நாவல் துறையானது நன்கு வளர்ந்து வருகின்றது. மனித வாழ்வின் பலவகைக் கோலங்களையும், சமுதாயத்தின் பல்வகைச் சித்திரங்களையும், உளவியல் முறையில் மனிதனுக்கு ஏற்படும் போராட்டங்களையும், அரசியல் பொருளாதாரச் சிந்தனைகளின் மாற்றத்தையும் பிறவற்றையும் நமக்குக் காட்டும் வண்ணம் இன்றையத் தமிழ் நாவல்கள் அமைந்துள்ளன.

பொதுவாக நாவல்கள் பலவகைப்படும். நிகழ்ச்சிகள் மிக்க நாவல் (Novel of action) பண்பு நலன் விளக்கும் நாவல் (Novel of character), விளக்கமும் வருணனையும் மிக்க நாவல் (Picturres que novel), நாடகப் போக்கினதாகிய நாவல் (dramatic novel) என நாவல் நான்கு வகைப்படும் என்பர் திறனாய்வாளர்.[1]

நாவலில் இடம் பெறும் கதை மாந்தரை ஈ.எம். பாஸ்டர் இருவகைப்படுத்திக் காட்டுவார். ஒரு வகையினரை முழுநிலை மாந்தர் (Round characters) என்றும் மற்றொரு வகையினரை ஒரு நிலை மாந்தர் (Flat characters) என்றும் குறிப்பிடுகிறார்.[2]

முழுநிலை மாந்தர் என்போர், நாவலின் தொடக்கம் முதல் முடிவு வரை வருபவராகவும், பண்பு வகையில் முழுப் பரிணாம வளர்ச்சியுடையவராகவும், ஆழமான குறிக்கோள் கொண்டவராகவும் அமைவர். நாவலைப் படித்து முடிக்கும் போது அக்கதை மாந்தரைப் பற்றிய முழுமையான ஒரு பண்பு ஓவியம் நமக்குக் கிடைக்கின்றது. எந்தச் சில பண்புகள் ஒரு குறிப்பிட்ட கதை மாந்தரிடத்து ஆசிரியரால் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அந்தச் சில பண்புகளுக்குக்கேற்பச் செயற்பட்டு நல்ல குணச்சித்திரங்களாக விளங்குவர்[3]

திரு. மா. இராமலிங்கம் முழுநிலை மாந்தர் குறித்துக் கூறுவது ஈண்டு எண்ணத்தக்கது. முப்பரிமாணக் காட்சி தருபவர்கள் இவர்கள். உருவத்தாலும் கருத்தாலும் மெல்ல மெல்ல மாறி வளர்ந்து முழுநிலை மாற்றம் கொள்வர். இவர்களது தோற்றம் மட்டும் அல்லாமல் உள்ளம், உணர்ச்சி, தாபம், கொள்கை, கோட்பாடு எல்லாமே முறையான வளர்ச்சியைப் பெற்று மிளிரும். **இதயநாதம்** கிருஷ்ணபாகவதர் **அகல் விளக்கு** சந்திரன் **சித்திரப்பாவை** ஆனந்தி **பொன் விலங்கு** பாரதி, **செம்பருத்தி** சட்டநாதன், **ஜீவகீதம்** நச்சி, **வளைக்கரம்** சுஜாதா முதலான பாத்திரங்களை உதாரணமாகக் கூறலாம்.[4]

ஈண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 'மகாநதி' நாவலில் உலவும் பாத்திரங்களில் முழுநிலைப் பாத்திரமாக விளங்கும் கோவிந்தன் மற்றும் அப்பாத்திரத்தைச் சுற்றிப் பின்னிப் பிணைந்து வரும் ஏனைய பாத்திரங்கள் வழி மனிதநேயக் கோட்பாடு எந்த அளவிற்கு ஊடாடி உள்ளது என்பதைக் கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மனிதநேயம் – மானுடக் கோட்பாடு:

Humanism என்ற சொல் இன்றைக்கு அனைவராலும் அறியப்பட்ட ஒரு சொல்லாகும். மனிதநேயம், மனிதம் என இச்சொல்லுக்குப் பொருள் கூறுவர். கா. சிவத்தம்பி இதற்கு மானுடக் கோட்பாடு என்று பொருள் கூறுகிறார்.[5] அப்பொருள் மனிதன் சார்ந்த அனைத்தையும் உட்கொள்ளும் தத்துவமாக ஒரு செறிவைத் தேக்கிக் கொள்கிறது. அதுவருமாறு:

"மானுடக் கோட்பாடு என்பது மனிதனை மெய்யான மனிதத்துவம் உள்ளவனாக ஆக்குவதிலும் இயற்கையிலும் வரலாற்றிலும் நிறைந்துள்ள அனைத்துக் கூறுகளிலும் பங்கு கொண்டு மனிதன் தன் அசல் மகத்துவத்தை எய்துவதிலும் அமைந்துள்ளது. (மாக்ஸ் ஸ்கீலர் சொற்களில் சொன்னால் மனிதனுக்குள் இருக்கும் உலகத்தின் மீது கவனம் செலுத்தி மனிதனை உலகத்துக்கு நிகராகப் பெரிதாக்கிக் காண்பது) அறிவு சார்ந்த வாழ்வையும், தன் படைப்புத் திறனையும் தன் ஆற்றலையும் மனிதன் வளர்த்துக் கொள்ள வேண்டும். பௌதிக உலகின் சக்திகளைத் தன் விடுதலைக்கான கருவிகளாக்க உழைக்க வேண்டும் என மானுடக் கோட்பாடு எதிர்பார்க்கிறது".[6]

பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம் *'கம்பனில் மானுடம்'* என்ற தமது நூலில் மானுடக் கோட்பாடு பற்றிப் பேசி வரும் போது, மேலைநாட்டு மானுடக் கோட்பாடு கிரேக்க சிந்தனை மரபில் பிறந்தது என்றும் மனிதனே அனைத்துக்கும் அளவுகோல் எனவும் மனித ஆளுமையோடு இணைத்துத்தான் உண்மையில் விளக்கப்பட வேண்டும் என கிரேக்க மெய்யியலாளர்கள் கூறியுள்ளதாகச் சொல்லியுள்ளார்.[7] மேலும், மேலை மானுடக் கோட்பாட்டின் பல்வேறு வளர்ச்சிக் காலங்களிலும் முதன்மை பெறும் கருத்துகள் இன்னவைதான் என்பவற்றைப் பின்வருமாறு வரிசைப்படுத்துகிறார்.

1. "மனிதனின் செயலாற்றல் போற்றுதற்குரியது.
2. மனிதவாழ்வின் அர்த்தமும் அழகும் இல்லாமல் எந்தக் கோட்பாடும் நிலை பெறத் தக்கதல்ல.
3. மனித அறிவு மகத்தானது.
4. அறிவியல், கலை, இலக்கியம், சமயம், கல்வி எதுவாயினும் மனித நலன், மனித மேம்பாடு மனித உழைப்பு ஆகியவற்றோடு நெருக்கம் மிக்கது என விளக்குகிறார்."[8]

மார்க்சியம் மானுடக் கோட்பாடு பற்றி என்ன கூறுகிறது என்பதைச் சிற்பி பாலசுப்பிரமணியம் பேராசிரியர் கா. சிவத்தம்பி வழி நின்று விளக்குவது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. அது வருமாறு:

"மனித வெற்றிகளைக் காரண காரியங்களோடு வரலாற்று அடிப்படையில் காண்பதும் விளக்குவதும் மார்க்சியத்தின் நெறிமுறை........ மானுடம் குறித்த அதன் பார்வை இவ்வாறு அமைகிறது.

மார்க்சியச் சிந்தனை மரபில் மானுடம் என்பது மனிதனுக்குரிய கௌரவத்தை, தன் வாழ்க்கைச் சூழலைத் தானே மாற்றியமைக்கும் திறனுடைய அவனது ஆற்றலை, அந்த ஆற்றலை அவனுக்கு வழங்கவும் வளர்க்கவும் வேண்டிய அற, நன்னெறிப் பெறுமானங்களைப் பற்றி அறிதலும் அவற்றின் தொழிற்பாட்டை வியந்து கூறுதலும் ஆகும்.[9]

இந்த அடித்தளத்தில்தான் மார்க்சிம் கார்க்கி 'மனிதனைவிட மிக நுண்ணிய அழகிய, அவனைவிட மிகப் பன்முகக் கோலம் கொண்ட, அவனைவிட சுவாரசியமான வேறொன்றை நான் அறியேன்; மனிதனே யாவும் என்று வியந்து எழுதினார்.[10]

ஆகவே மானுடக் கோட்பாடு என்பது மானுடம் பெருமை கொள்ள வேண்டிய ஒரு பண்பு எனலாம்.

கதைச்சுருக்கம்

புதுச்சேரி நகரத்தில் கண் டாக்டர் சத்திரக்கடை கோவிந்தன் ஓர் ஊர் அறிந்த கள்ளுக்கடை வியாபாரி. நாற்பது வயதைக் கடந்தவர். இளமையோடு கூடிய மனைவியும் மக்கட் செல்வமாக கோகிலா என்ற மகளையும், பூர்வீகமாக ஓரளவு நிலத்தையும் தன் சொந்த உழைப்பின் முயற்சியில் நான்கு ஐந்து வீடுகளையும் கைநிறைய வருமானத்தையும் சொத்தாகப் பெற்றவர்.

காந்தியிடத்து ஈடுபாடுடையவர். கதர் சட்டை, கதர் வேட்டி உடுத்துபவர். நடத்துவது கள்ளுக்கடை வியாபாரம் என்றாலும் மதுவை மூன்று தலைமுறையாகத் தொடாத குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒழுக்க சீலர். பிறர்க்குக் கொடுத்து இன்புறுவதில் சீதக்காதி. யாருடைய துன்பத்தையும் பரிவுடன் நோக்கித் தன்னாலான உதவிகள் செய்து, தன்னை உற்சாகப்படுத்திக் கொள்பவர். இவர் மனைவி தையல்நாயகியும் கணவனுக்கேற்ற துணைவி. நேரிய சிந்தனை, எதிலும் பொறுமை, பிறர் நலனில் அக்கறை காட்டுதல் கணவனின் எண்ணப்படி தன்னை நொடிப்போதில் மாற்றிக் கொள்ளும் மாண்புடைய மங்கை.

கோவிந்தனின் நண்பர்களில் ஒருவர் மாசிலாமணி. அவரைத் தாசில்தார் பார்க்க விரும்புவதாகச் செய்தி வந்தது. மாசிலாமணி

தாசில்தாரை அவர் அலுவலகத்தில் சந்திக்க, அப்போது உயர் அதிகாரியின் வருகையின் போது அவரை மகிழ்ச்சிப்படுத்த. பொண்ணு ஏற்பாடு செய்ய வேண்டியது அவர் பொறுப்பு எனத் தாசில்தார் கட்டளையிட்டார். எளியவரான மாசிலாமணி இத்துன்பத்தில் இருந்து அவரைக் காப்பாற்ற வல்லவர் கோவிந்தன் ஒருவர்தான் என நம்பினார். விரைந்து சென்று தன் நண்பர் கோவிந்தனிடம் நடந்ததைக் கூறினார்.

கோவிந்தன் மாசிலாமணியைத் தேற்றி அனுப்பி விட்டு, தாசில்தார்க்கும் உயர் அதிகாரியான கிளேரோன் துரையைச் சந்தித்து, தாசில்தாரின் அச்சுறுத்தல் குறித்துக் கூறினார். அதிகாரி கிளேரோன் கோவிந்தனிடம் தனது தாசில்தார் செயலுக்காக வருத்தம் தெரிவித்ததோடு அல்லாமல் மாசிலாமணியையும் கலங்க வேண்டாம் எனத் தெரிவிக்கக் கூறினார். அன்று இரவு உணவை கிளேரோனுடன் முடித்துக் கொண்டு ஊர் திரும்பினார் கோவிந்து.

ஊரில் கலவரம் மலிந்திருந்த காலம். ராமண்ணா என்றவர் தன் வீட்டில் மூவர்ணக்கொடி ஏற்றிய காரணத்திற்காக பிரஞ்சுக்காரப் போலீஸ் தளவாய் லொரிஸ், ராமண்ணாவைக் கொன்று விட்டான் என்ற செய்தி ஊர் முழுவதும் பரவியிருந்தது. மாலையில் காப்பி குடிக்க வரும் போது பலரும் கூடிக்கூடிப் பேசுவது இவர் காதிலும் விழுந்தது. அப்போது அவர் நண்பர் இராமநாதன் எதிர்ப்பட்டார். இருவரும் நாட்டு நடப்பு பற்றிப் பேசிக் கொண்டனர். அப்போது ராமநாதன், “காந்தி கச்சின்னு சொல்லிக்கிறீர். ஒரு பக்கம் கள்ளுக்கடையும் நடத்திக்கிறீர். கள்ளுக்கடை மறியல் பண்ணின கட்சியிலே கள்ளுக்கடை நடத்துற நீர் எப்படி இருக்கிறீர்! உம்ம சாமர்த்தியம் தானே காரணம். அது மாதிரி பிரஞ்சுக்காரனை எதிர்ப்பதிலேயும் சாமர்த்தியமா நடந்துக்கும்.” எனக் கிண்டலாகக் கூறினார். அந்த வார்த்தைகள் கோவிந்த கிராமணியைச் சுட்டு விட்டன. அந்தப் பொழுதிலிருந்து கள்ளுக்கடையை விட்டுவிடுவது என்று முடிவெடுத்தார்.

எண்ணி முடிவெடுத்தபடியே கள்ளுக்கடை வியாபாரத்தைக் கைவிட்டு விட்டார் கோவிந்தன். இத்தருணத்தில் தான் கோவிந்தனின் அன்பு மகள் காதல் வயப்பட்டு, தங்கராசு என்ற வாலிபனோடு, வீட்டில் இருந்த நகை, பணம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு இரவோடு இரவாக வீட்டை விட்டு வெளியேறி விட, அதிர்ந்து போன கோவிந்தன் இத்தகவலைச் சொல்லி அன்று அதிகாலையில் தன் மனைவியை ஆற்றுப்படுத்தினார். இந்நிலையில் ஓரிரு மாதங்கள் ஓடின. பின்னர்தன் மனைவியின் ஆலோசனைப்படி “சுதேசி ஸ்டேஜ்”

என்ற பெயரில் ஒரு நாடகக் கம்பெனியைத் தொடங்கினார். புகழ் பெற்ற நடிகர்களைக் கொண்டு வந்து காண்டிராக்ட் முறையில் நாடகங்கள் நடத்தினார். அதிலும் நட்டம் கண்டார்.

இத் தருணத்தில் கோவிந்தனின் நண்பர்களில் ஒருவரான ஆரம்பப்பள்ளி ஆசிரியர் வரதன் என்ற நண்பர், அவர் தம் மூத்த இரண்டு பெண்கள் திருமணத்திற்கு வேண்டி அவரது பழைய ஓட்டு வீட்டை அடமானம் வைத்துப் பணம் பெற சேட்டை அணுகிய போது, சேட் பிணை யாராவது வேண்டும் எனக் கேட்க, வரதன் கோவிந்தனை அணுகி உதவி கேட்டார். கோவிந்தனும் பிணையாக இருக்க இசைந்தார்.

இரண்டு பெண்களும் கரையேறிய கையோடு, வரதன் மாரடைப்பால் காலமானார். கடன் கொடுத்த சேட் கோவிந்தனிடம் வரதன் வாங்கிய பணத்திற்காக அவனது வீட்டை ஜப்தி செய்யப் போவதாகக் கோவிந்தனிடம் கூற, அப்படியொரு அவலநிலையை அந்த ஆதரவு அற்ற குடும்பத்திற்கு ஏற்படுத்த வேண்டாம் என்றும், பிணைக் கையொப்பம் இட்ட தானே அப்பணத்தை வட்டியோடு தரத்தயாராக உள்ளதாகக் கூறி, சேட்டை சமாதானப்படுத்தி அனுப்பினார்.

வருவாய்க் குறைவால் சொன்னபடி செய்ய கோவிந்தனால் இயலாமல் போகவே, சேட்டு வழக்கு மன்றம் சென்றான். கோவிந்தன் மீண்டும் சேட்டை வழக்கு மன்றம் செல்ல வேண்டாம் எனவும் எவ்வகையிலும் அந்த ஆதரவற்ற குடும்பத்தாரால் கடனை அடைக்க இயலாது. அவர்கள் தற்போது வாழும் வீடும் இல்லை என்றால் இன்னும் திருமணமாகாது இருக்கும் பெண்களோடு ஆண் துணையற்ற அக்குடும்பம் சாலைக்கு வந்து விடும் ஆகவே, வரதன் கடனுக்காகத் தற்போது கோவிந்தன் வாழும் வீட்டை ஈடு செய்து கொள்ள வேண்டினார். சேட்டும் ஒத்துக் கொள்ள, கோவிந்தன் தான் வாழ்ந்து வந்த பெரிய வீட்டைக் காலி செய்து கொடுத்து விட்டுச் சிறிய வீட்டிற்குள் குடியேறினார்.

வாழ்க்கையின் சரிவு எத்தனை உறுதியான உள்ளத்தையும் உடையச் செய்து விடும் என்பார்கள். கோவிந்தனின் மனைவி தையல்நாயகி மனமும் சற்று பாதித்த காரணத்தால், அக்கவலை மேலிட அவள் சோர்ந்து காணப்பட்டாள். இந்நிலையில் வீட்டை விட்டு வெளியேறிய கோகிலா அலங்கோலமான நிலையில் மூன்று வயதுக் குழந்தையுடன் பிறந்தகம் வந்தாள். கோகிலாவின் வருகை பற்றி, தையல் தன் கணவனுக்குத் தெரிவித்தாள். அதையும் பெரிய

மனதுடன் ஏற்றுக் கொண்ட கோவிந்தன் தன் மகளுக்கு ஆறுதல் கூறியதோடு, இனியாவது வாழ்வில் தீர்க்கமான முடிவை எடுக்கக் கோரினார்.

வேதம், உத்ரா ஆகியோரின் துணையால் வறுமையின் பிடியில் சிக்கித் தவித்த கோவிந்தன் குடும்பத்திற்கு நகரத்தின் மையப் பகுதியில் இட்டலிக்கடை வைக்க ஏற்பாடு செய்தனர். கோகிலா கண்ணீரால் தன் நன்றியை அந்த இருவருக்கும் கூறிக் கொண்டாள்.

வளமான வாழ்க்கையை நிலையான கொள்கைக்காக விட்டுக் கொடுத்த கோவிந்தன், தன் மனைவியின் இழப்பைக் கூடச் சாதாரணமாக ஏற்றுக் கொண்டார். ஆயின் அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் நாட்டு நடப்புகளைக் கண்டு மனம் கொதித்தார்.

கோவிந்தனுக்குப் பொருள் வளம் குன்றியிருந்ததேயின்றி, அவர் புகழ், பெருமை எதுவும் குன்றி விடவில்லை. இந்நிலையில் கோவிந்தனின் நண்பர் சங்கரலிங்கத்தின் மகன் சோமு வேலை விடயமாக கோவிந்தனைச் சந்திக்க வந்தான். நகரில் புகழ்பெற்ற குபேர் என்பவரின் அறிமுகத்தைச் சோமுவிற்கு ஏற்படுத்தினார் கோவிந்தன். பணியிற் சேர்ந்ததோடு குபேருடன் இணைந்து கட்சி வேலையும் பார்த்து வந்தான் சோமு. எப்படியும் வாழலாம் என்ற கோட்பாடு கொண்ட சோமு ஏழு ஆண்டுகளுக்குள் முதல் அமைச்சர் பதவியை எட்டிப்பிடித்து உயர்ந்து நின்றான்.

பதவி, புகழ் முதலியவற்றை எட்டிக்காயாய் எண்ணிய கோவிந்தன், வெள்ளப் பிரவாளமாக அதிர்ந்து ஓடும் மகாநதியாக இல்லாது, தெளிந்து தெள்ளத் தெளிவாய்ச் சீர்மையோடு, கடல்சேர் மட்டும் மக்கள் சேவைக்காக ஆர்ப்பாட்டம் செய்யாது ஒரே கதியாய் நடமிட்டு ஓடும் ஆற்று வெள்ளம் போல, ஆரவாரம் இன்றி நிறைவோடு மனிதநேயமே தலையாயதாகக் கருதி அக்கதியில் தன்னைக் கலங்கரை விளக்கம் ஆக்கிக் கொண்டார்.

கருவின் நோக்கும் கதைத் தலைப்பும்

“வாழ்க்கை எனும் மகாநதி, பொங்கிப் பிரவகித்து, மூர்க்கமும் மூர்த்தன்யமும் பொருந்த திகிலேற்றுகிற மோகினிக் கவர்ச்சியுடன் நடந்து செல்லும் பேரழகை நீங்கள் என்றேனும், ஓர் கணமேனும் தரிசித்ததுண்டா?

நான் அதை அனுபவத்திருக்கிறேன். குலை நடுங்க, மேனி புளகம் உற, அச்சத்தால் உலர்ந்து, சந்தோஷத்தால் கிளர்ந்து, பெரு விருப்போடு உயிர் தோய்ந்து நான் அனுபவத்திருக்கிறேன்.

இடையறாது ஓடிக்கொண்டிருக்கும் மகாநதி, ஒரு கணம் சட்டென்று உறைந்து நின்று, பின்னர் பெருக்கெடுத்தால் எப்படி இருக்கும்! அதி அற்புத அனுபவம் அது. அந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவே இந்த நாவல்[12] கதைக்கருவிற்கான காரணத்தை ஆசிரியர் பூடகமாகச் சொல்ல வேண்டிய நோக்கம் என்ன?

மூச்சுக்காற்று உள்ளவரை ஓடிக் கொண்டிருக்கும் வாழ்க்கை ஓட்டத்திற்கு உறுதுணையாய் விளங்குவது பொருளாதாரம். பொருளாதாரம் என்பது வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணம். மூச்சுக் காற்றின் ஓட்டம் ஒரு கணம் நின்று மீண்டும் ஓடத் தொடங்கினால் இயல்பு வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்களை உணரத்தான் முடியுமேயன்றி வரைபடமாகக் காட்டிவிட முடியாது. மானுடக் கோட்பாட்டின் காரணமாக கோவிந்த கிராமணியால் ஏற்கப்படும் உறுதிப்பாடு, பொருளாதார வீழ்ச்சியையும் பொருட்படுத்தாது சமூக உணர்வோடு அவர் வாழ்க்கை ஆற்றொழுக்காக அமைந்திருப்பதால் இப்புதினம் 'மகாநதி' என்ற பெயருக்குப் பொருத்தமுடையதாகிறது என்பதை அறியலாம்.

மகாநதியின் ஜீவ ஓட்டமாக விளங்குபவர் கோவிந்த கிராமணி. அவர் வாழ்வில் நடந்த சம்பவங்கள் கோர்வையாக அமையப் பெற்று ஒரு புதினமாகியுள்ளது. மனைவி, மகள், நண்பர்கள், சமூகம் என்ற பெரும் பரப்பில் இவர் ஊடாடும் போது இவர் போற்றிய மனிதநேயப் பண்புகளும் இவரை வேண்டிப் பிற பாத்திரங்கள் காட்டிய மனிதநேயப்பண்புகளையும் விரித்துக் காண்பதே இக்கட்டுரையின் மைய நோக்கம்.

கோவிந்த கிராமணி, அவர் மனைவி தையல்நாயகி, நண்பர்களான குப்பு முதலியார், மாசிலாமணி, வரதன் மற்றும் சங்கரலிங்கத்தின் மகன் சோமு, உத்ரா, வேதா என்ற வேதநாராயணன் மற்றும் கோவிந்தனின் மகள் கோகிலா, அவள் கணவன் தங்கராசு, அவள் மாமன் மீனாட்சி ஆகியோர் இப்புதினத்தின் உலா வரும் பாத்திரங்கள் ஆவர். இனி இப்பாத்திரங்கள் வழி நின்று இப்புதினம் காட்டும் மனிதநேயத்தைக் காணலாம்.

இந்நூலைக் கூர்ந்து ஆய்ந்த போது சுதேசிப் பற்று; சகிப்புத்தன்மை; வார்த்தைகளால் காயப்படுத்தாமை; பிறர் கருத்துகளை மதித்தல்; விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை; தவறைத் திருத்தும் போது அச்சமின்றிச் செயல்படுதல்; காலம் அறிந்து உதவி செய்தல்; செழுங்கிளை தாங்குதல்; குற்றம் தவிர்த்துச் சுற்றம் ஓம்புதல்; தற்புகழ்ச்சி போற்றாமை; பாடறிந்து ஒழுகல்; வறுமையிற் செம்மை

போன்ற மானுடக்கோட்பாடுகள் வலியுறுத்திப் பேசப்பட்டுள்ளதைக் காணலாம்.

கோவிந்த கிராமணி

> "வெள்ளை வேட்டியைத் தழையத் தழையக் கட்டி, பனியனும் அதன்மேல் மஸ்லின் அல்லது நைஸ் வெள்ளை ஜிப்பாவும் அணிவது அவர் வழக்கம். சட்டை கழுத்து வழியாக மாட்டிப் பொத்தான் போடுவதாக இருக்க வேண்டும். பொன் பொத்தான்களை இணைத்துப் பொற்சங்கிலி சட்டையில் புரண்டு வெளித் தெரிய இருக்க வேண்டும். கைகளைச் சுருட்டி விட்டுக் கொள்வார்."[13]

எனக் கோவிந்தனின் ஆடை அலங்காரத்தை அறிமுகம் செய்கிறான் வேதா. கோவிந்தன் தூய்மையாக இருக்க விரும்புபவர் மட்டுமல்லாது தன்னை மற்றவரிடத்திலிருந்து ஒருபடி அழகாகக் காட்டிக் கொள்பவர் என்பதிலிருந்து, எதிலும் அழகுணர்ச்சி காண்பவர் அவர் என அறியலாம்.

பொதுவாகக் கோவிந்தன் கள்ளுக்கடை வியாபாரி என்றாலும் சமூக உணர்வு அதிகம் உள்ளவர். ஒருமுறை இவரைச் சந்திக்க வந்தார் தியாகி குப்பு முதலியார். பேச்சு அரசியலைச் சுற்றி அமைந்தது. மக்கள் விழிப்புணர்ச்சி அற்று இருப்பதாகக் குப்பு முதலியார் கூறினார். பேச்சை முடித்துக் கொண்டு முதலியார் விடை பெற்றுச் சென்ற பின் தனக்குள் இவ்வாறு எண்ணினார் கோவிந்தன்.

"மனிதர்களுக்குத் தெய்வங்களாகும் ஆசை முளை விட்டு விட்டது. இனி இது வளர்ந்து மரமாகத்தான் ஆகும். என்னை வழிபடு; என்னைத் துதி; எனக்கு ஏவல் செய்; என் உண்டியலை நிரப்பு; என் நாற்காலிக்கு உன் கால்களைக் கொடுத்துதவு; உன் மூளையை மூடி அடைத்து விடு; உன் மனதை இருட்டாக்கிக்கொண்டு விடு; என்னைத் தொழு; நான் உங்கள் தலைவன்; உன் விமர்சனங்களுக்கு அப்பாற் பட்டவன்[14] என அவர்மனம் இந்த நாட்டில் உள்ள அரசியல் அமைப்புகளும் அமைப்புகளை நடத்துவோரும் தன்னலம் கருதி திசைமாறிச் செல்வதை எண்ணி இப்படி அடிக்கடி கலங்குவார் என வேதா நமக்குக் கூறுவதிலிருந்து எந்த அளவிற்கு அவருடைய உள்ளம் சமூகத்தை நேசிக்கிறது என்பதை உணரலாம்.

குப்பு முதலியார் அரசியல் கூட்டம் நடத்த நன்கொடை கேட்டுக் கோவிந்தனை அணுகுகிறார். மனநிறைவோடும்

மகிழ்வோடும் மரியாதையோடும் கோவிந்தன் பணத்தை அள்ளித்தருகிறார். முதலியார் எதிர்பார்த்தது ஐம்பது ரூபாய்தான். ஆனால் கோவிந்தன் தந்தது நூறு. தானத்திலும் நிதானம் வேண்டும் என்ற அறிவுரையோடு குப்பு முதலியார் பாதிப் பணத்தைத் திருப்பித் தந்து விடுகிறார்.

மெய்சிலிர்த்துப்போன கோவிந்தன் பின்வருமாறு அவரைத்தன் மனத்திற்குள் தனக்குத்தானே எண்ணிப் பார்க்கிறார்.

> *"முதலியாரைப் பார்க்கும் போதெல்லாம் ஏனோ அந்தக் குளத்து நீரே மாமாவின் நினைவுக்கு வந்தது. யாருக்காக எதற்காக இருக்கிறது இந்தக் குளத்து நீர்? குழந்தைகள் இறங்கி மீன் பிடிக்கவா? தவளைகள் பாம்புகள் வாழவா? எருமை குளிப்பாட்டவா? செத்துப் போனவர்க்குச் சிரார்த்தம் பண்ணவா? எல்லாவற்றுக்கும்தான். குளம் எதை ஏற்று எதைத் தள்ளுகிறது? எவரை விரும்புகிறது. எவரை வெறுக்கிறது. நீராய்த் தேங்கிக் கிடப்பதும், விரும்பி வருவோர்க்கு அவர் விரும்பிய விதம் பயனாவதும் அல்லாமல், குளத்தின் ஜனன நியாயம் வேற என்ன? முதலியாரைப் போல குளமும் ஓர் நிஷ்காமி என்பதில் தடை என்ன? ஐம்பது ரூபாய் எவ்வளவு பெரிய தொகை. பல மூட்டை அரிசி வாங்கலாம்? எத்தனை ஜோடி வேஷ்டி எடுத்துக் கொள்ளலாம். தங்கம் காசு ஒன்று இருபது ருபாய் வீதம் வாங்கி இருக்கலாமே. பொதுக் கூட்டச் செலவுக்கு ஐம்பது போதும், எனக்கொன்றும்வேணாம் என்று சொல்ல எவ்வளவு ஞானம் வைராக்கியம் வேண்டும்...... எவ்வளவு மகத்தான மண் இது. தன் கல்லறையின் மேல் பூத்துச் சிரிக்கிற மலர்களைப்பார்த்துச் சந்தோஷப்படும் ஆத்மாக்கள் சக மனிதர்களுக்குச் சந்தோஷம் வருகிறதென்றால் உயிரையே கொடுக்கத் தயாராக இருக்கும் உத்தமர்கள். ராமானுஜரும் குப்பு முதலியாரும் அவர் நினைவுக்கு வந்தார்கள். இந்த மகத்தான மனிதர்கள் தோன்றி இந்த மண்ணை மகிமைக்குரியதாக அல்லவோ மாற்றி அமைத்திருக்கிறார்கள்.*[15]

குப்பு முதலியாரின் சமூகத் தொண்டில் உள்ள நேர்மையை எண்ணி உளம் மகிழும் கோவிந்தன் மனோநிலை பொது வாழ்க்கையில்

நேர்மை வேண்டும் என்பதில் எத்தனை உறுதியுடையது என்பதை அறியலாம்.

பொது வாழ்க்கை என்று சிந்திக்கும் போதெல்லாம் கோவிந்தனின் மனத்தில் அதாவது சித்தப்பா விஸ்வநாதனை நினையாமல் இருக்கமாட்டார்.

விஸ்வநாதன் முரட்டுக் கதர் வேஷ்டி அணிந்து, காந்தியைத் தலைவராக ஏற்றுக் கொண்டு வாழ்ந்தார். காந்தியின் சிஷ்யன் என்பதால் அல்லாமல் சுபாவத்திலேயே நல்ல குணங்களும் பண்பு நலங்களும் கொண்டவர். அவரைக் கண்டு வளர்ந்தவர் கோவிந்தன். ஆகவே தான் காந்தி மீது ஈடுபாடு அவருக்கு. அவரும் அவர் சித்தப்பா வழியைப் பின்பற்றலானார்.

செய்யும் தொழிலில் நேர்மையும் மனித நேயத்தையும் கடைபிடித்தவர் என்பது பின்வரும் நிகழ்வில் இருந்து அறியலாம்:

"கடை வாய்தாப் பணம் கட்ட வேண்டி இருந்ததால் கோவிந்தன் அவ்வலுவலகம் நோக்கி வண்டியில் வந்த போது அலுவலகத்தில் ரத்னசபாபதியைக் கோவிந்தன் பார்க்க நேர்ந்தது.

"சௌக்யம் தானா........" என்றார். ரத்னம் ஆகா ——— நீங்க எப்படி? வீட்டில உள்ளவங்க நல்லாயிருக்காங்களா........?

"இருக்காங்க கோவிந்து.... தொழிலு தான் நாளுக்கு நாள் சிக்கலாயிட்டாருக்கு...... உங்களுக்குப் பரவாயில்லே. சொந்த தோப்பு. சொந்த மரத்து கள்ளு இறக்கறீங்க. கட்டிவருது- என்னை மாதிரி தோப்பைக் கள்ளுக்குக் குத்தகை எடுக்கிறவன் பாடு திண்டாட்டமாயிருக்கு..... வருஷா வருஷம் குத்தகைப் பணம் மட்டும் கூடிக் கிட்டு வருது. ஏலம் கூடிப் போய்கிட்டு இருக்கு. கட்டி வருமா? தொழில் தெரிஞ்சவங்க நீங்க சொல்லுங்க...."[16]

"முடியாது தான் ரத்னம் நாம கள்ளு விலையை ஏத்தவும் முடியாது. ஏழை பாழைங்க சாப்பிடற ஆகாரமாச்சே"[17] எனக் கோவிந்தன் தொழில் ரீதியாகக் கவலைப்படும் போது கூட அவரது மனித நேய உணர்வு விழிப்புடன் காணப்படுகிறது. உழைத்து விட்டு உற்சாகம் தேடிவரும் ஏழை எளியோர் கள்ளை ஒரு மதுபானமாகக் கருதுவர். ஆனால் கோவிந்தன் அதனையே அவர்கள் ஆகாரம் என எண்ணுவதுடன் அதன் விலையை நிருவாகச் சிக்கலை ஈடுகட்ட உயர்த்துவது என்ற எண்ணம் தவறானது எனக் கருதும் போது ஏழைகள் இடத்து அவர் கொண்டுள்ள வாஞ்சையோடு கூடிய மனிதநேயம் எண்ணிப் பார்க்கத்தக்கது.

கோவிந்துவின் நண்பர் மாசிலாமணி தாசில்தாரால் வரவழைக்கப்பட்டு, அலுவலகத்தைப் பார்வையிட வரும் மேலதிகாரியான பிரஞ்சு துரைக்கு மகிழ்ச்சியூட்டப் பெண் ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கூற, மாசிலாமணி அவ்வூரில் குடும்பச் சூழல் காரணமாக உடம்புத் தொழில் செய்து வந்த மனோன்மணியின் உதவியை நாட, அவளும் மறுத்து விட இறுதியாக இத்துன்பத்தில் இருந்து விடுதலை தர வல்லவர் கோவிந்தன் ஒருவர் தான் எனக் கருதி அவரை அணுகினார்.

மாசிலாமணியின் குறையைக் கேட்டறிந்த கோவிந்தன் அவரை அத்துன்பத்தில் இருந்து காப்பதாக வாக்களித்தாலும் மாசிலாமணி சரியானபடி முடிவு எடுக்கவில்லை எனக் கருதிய கோவிந்தன் அவரிடம் இவ்வாறு கூறினார்:

"நீங்க ஏற்கனவே ரெண்டு தப்புப் பண்ணீட்டிங்க ஒண்ணு. தாசில்தார் முகத்துக்கு நேராக அவன் சொன்ன காரியத்தைச் செய்ய மாட்டேன் என்று மறுத்திருக்கணும் ரெண்டாவது, மனோன்மணி வீட்டுக்கு இந்தக் கோரிக்கையை எடுத்துக்கிட்டு நீர் போயிருக்கவே கூடாது. சரி ஏதோ தப்புப் பண்ணீட்டீர். இனி பண்ணாதீர். நான் பார்த்துக்கறேன்.[18]

மாசிலாமணி முதுகெலும்போடு நிமிர்ந்து நின்று தாசில்தார் கோரிக்கையை மறுத்து இருக்க வேண்டும். இரண்டாவதாக அனுபவம் இல்லாதவர் அனுபவப்படாதயிடத்திற்குச் சென்று தன்னைத் தாழ்த்திக் கொண்டது என இரண்டு பிழைகளைச் செய்ததைச் சுட்டிக்காட்டி அவ்வாறு செய்திருக்கக் கூடாது எனக் கோவிந்தன் அறிவுறுத்துவது, இச்சமூகத்தில் வாய்மூடி, கைகட்டிச் சேவை செய்யும் இயலாமையில் உழலும் எண்ணற்ற மக்களுக்கான அறிவுரை.

ஒரு முறை அதிகாலையில் விழித்துக் கொண்ட கோவிந்தன் காலை உலா (நடைப்பயிற்சி) செய்யும் போது அவர் மனதில் இப்படியோர் எண்ணம் எழுந்தது "மனிதர்களுக்கு எவை எவைகளையெல்லாம் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது? ஒழுங்காய்ப் பல்கூட துலக்கத் தெரியாத மனிதர்கள், தம் உடம்பின் கெட்ட வாசனையை பிறர்மீது வீசக்கூடாது என்று கூட அறியாத மனிதர்களாய் இருக்கிறார்கள். பொது இடங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கூடத் தெரியாத மனிதர்கள்; அடுத்தவர் உட்காரும் இடத்தில் எச்சல் துப்புகிற மனிதர்கள்; பலரும் காண மல ஜலம் கழிக்கும் மனிதர்கள்; மூன்றாம் மனிதர் கேட்கச் சத்தம்

போட்டுப் பேசும் மனிதர்கள்; ஒருவரை ஒருவர் பகைத்து இழிவு செய்யும் மனிதர்கள்; மனைவிகளைத் துன்புறுத்தும் மனிதர்கள்"[19] என மனித சமூகத்தில் காணும் குறைபாடுயுடைய மனிதர்களின் திருத்தம் வேண்டிச் சிந்தித்துக் கொண்டே வருந்தியதைக் காணமுடிகிறது.

இன்றும் இத்தகைய மக்களை நம்மால் காண முடியும். ஆனால் யாரும் இது குறித்துக் கவலைப்பட்டதில்லை. ஆயின் கோவிந்தன் தன் மனத்தில் இத்தகையோரின் நலம் வேண்டி எண்ணுவது அவரின் மனிதநேயத்திற்கு எடுத்துக்காட்டு எனலாம்.

கோவிந்தனின் மனிதநேயச் சிந்தனைக்கு முத்தாய்ப்பாக விளங்குவது அவரின் பரிவு உணர்ச்சியே ஆகும். அவரது நண்பர் பள்ளியாசிரியர் வரதன் தன்னுடைய மூத்த பெண்கள் இருவருக்காகத் தனது சொத்தை வைத்துக் கடன் வாங்கியபோது, பிணைக் கையெழுத்து இட்டவர் கோவிந்தன். திருமணத்திற்குப் பிறகு வரதன் காலமாகிப் போகக் கடன் கொடுத்தசேட் வழக்கு மன்றம் சென்ற போது, அவனைத் தடுத்து அப்பணத்திற்குரிய வட்டியும் முதலும் தானே தருவதாகக் கூறினார். இந்நிகழ்ச்சி பற்றி வேதா கூறும்போது, மாமா ஒவ்வொரு மாதமும் வட்டியும்முதலுமாகக் கொடுத்து விடத்தான் நினைத்தார். அந்த நேரத்தில் தான் அவர் கள்ளுக்கடையை விட்டதும், நாடகம் போட்டதும், நட்டமானதும் மகளை இழந்ததும்......... சேட்டுதான் வக்கீல் நோட்டீஸ் விட்டிருக்கிறார். இந்தக் கடிதம் கண்டதும் குறித்திருக்கிற காலகெடுவுக்குள் அவருடைய பணத்தைத் திருப்பித் தரவேண்டும். இல்லையெனில் வரதனுக்குச் சொந்தமான மஞ்சள் காணியையும் அவர் வீட்டையும் ஜப்திக்குக் கொண்டு வருவதோடு மேலே ஆகும் பணத்தை மாமா கொடுக்க வேண்டியதாய் இருக்கும் என்றும் அந்த ஓலையில் கண்டிருந்தது. ஒருக்காலும் வரதனின் மனைவியும் திருமணம் ஆகாத இளம் பெண்களும் குடியிருக்கும் அந்த வீட்டை, அவர்களின் ஒரே நம்பிக்கையான அந்த மஞ்சள்காணியையும் அந்தச் சேட்டு விழுங்கிவிட சம்மதிப்பதில்லை என்று மனத்திற்குள் தீர்மானம் செய்து கொண்டார்".[20]

அதன்படி அவர் மனைவி தையல்நாயகியிடம் கலந்து பேசி தான் வாழும் வீட்டை வரதனின் கடனுக்காக ஈடு செய்து கொள்ளச் சொல்லி விட்டு சங்கரதாஸ் சுவாமிகள் கல்லறையை அடுத்து உருவாகிவரும் ஒரு புதுக்காலனியில் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் குடியேறினார்.

காலங்காலமாக பெரிய வீட்டில் வாழ்ந்து பழகி விட்ட கோவிந்தன் பிறர்பட்ட கடனுக்காக, துணையின்றி நிற்கும்

குடும்பத்திற்காக, திருமணமாகாத பெண்குழந்தைகளுக்காக, நிராதரவாக விட்டுச் செல்லப்பட்ட நண்பர் வரதனின் மனைவிக்காக தன் சுகத்தையும் விட்டுக் கடனை அடைத்து அக்குடும்பத்தை வாழ வைத்த பெரிய மனதுக்குச் சொந்தக்காரராய் விளங்கும் கோவிந்தன் எத்தனை மனிதநேயம் உடையவர் என்பதற்கு விளக்கமும் வேண்டுமோ.

கோவிந்தனின் நண்பராகிய இராமநாதன், 'காந்திக் கட்சின்னு சொல்லிக்கிறீர். ஒரு பக்கம் கள்ளுக்கடையும் நடத்திக்கிறீர். கள்ளுக்கடை மறியல் பண்ணின கட்சியில, கள்ளுக்கடை நடத்துற நீர் எப்படியிருக்கிறீர்? என்று கேட்ட சொற்கள் கோவிந்தனை மிகவும் சுட்டுவிட அன்றிலிருந்து கள்ளுக்கடைத் தொழிலை விட்டு விட முடிவு எடுத்தார்.

அன்று கோவிந்தனின் கடை ஏலத்திற்கு வந்தது. "கதர் வேஷ்டி, கதர் ஜிப்பா, கதர் போர்வையோடு வந்திருந்ததாக அப்பா சொன்னார். கடையின் எண்ணைச் சொல்லி அதிகாரி மாமாவைப் பார்த்தாராம்.மாமா சும்மா உட்கார்ந்திருந்தார். அதிகாரியே மாமாவைப் பார்த்து எண்ணைக் குறிப்பிட்டு ஏலத்தை நினைவுபடுத்தினார்.

ஏதோ முடிவோடு மாமா எழுந்து, 'மன்னிக்கணும்.... எனக்குக் கடை வேணாம்........ இனி நான் கடை எடுக்கப் போறதில்லை என்று சொல்லி விட்டு வெளியேறி விட்டாராம் 'பெரிய அதிகாரி அவரைக் கூப்பிட்டு 'தன் மீது ஏதேனும் அவருக்கு அதிருப்தி இருக்கக் கூடுமோ என்று கேட்டாராம். 'எனக்கு யார் மீதும் அதிருப்தியில்லை இனி, கள் சாராயக்கடை எடுத்துத் தொழில் நடத்துவதில்லை என்று முடிவுக்கு வந்து விட்டேன் என்பதாகச் சொல்லி விட்டாராம்.[21]

இதுபற்றி வேதா தன் மாமா கோவிந்தனை மீண்டும் கேட்ட போது மிக அழுத்தமாகவே அவர் விடை தருவது ஈண்டு நோக்கத்தக்கது. "ஏற்கனவேதான் சொல்லி இருக்கேனே. அதான் காரணம் நான் குடிக்கிறதில்லை. என் பரம்பரையில் யாரும் குடிச்சதில்லை. குடிக்கிறதை அகௌரவமாகக் கருதி வந்திருக்கிறோம். அப்படியிருக்கும் போது நானே கடை நடத்தி மற்றவங்களுக்குக் கள்ளு ஊத்துறது தப்பில்லையா?

நான் செய்ய விரும்பாததை மத்தவங்க செய்யத் துணை போறது தப்பில்லையா? காங்கிரஸ் காரராகவும் இருந்து கொண்டு கள்ளுக் கடையும் நடத்துறது தப்பு இல்லையா? என் மனசாட்சிக்கு அது தப்புண்ணு தோணுது. அதனால கடையை எடுக்கல்லை.

இப்போது மனசு நிம்மதியா இருக்கு. உலகத்திலே நரகம் இருக்கு. அது என்னென்னா நமக்குப் பிடிக்காததைச் செய்யறதுதான்[22]

கோவிந்தன் தொழில் ரீதியாகக் கள்ளுக்கடை வியாபரத்தைப் பாரம்பரியமாகச் செய்து வந்தாலும் அவர் குடிப்பதில்லை. குடிக்க யாரையும் வற்புறுத்தவில்லை. இயல்பாகவே அவர் மனதில் இத்தொழில் செய்வது என்பது உறுத்தலாகவே இருந்து வந்துள்ளது. ராமநாதனின் பேச்சு அவருக்கு இத்தொழிலிருந்து விடுதலையைத் தந்தது.

ஒரு தொழில், சமூகத்தைச் சீரழிக்கக் கூடியது என்பதைத் தன் மனம் உணர்ந்தவுடன் அதனைக் கை விட்டு, மனிதநேயத்திற்காக மானுடத்திற்காக அந்த இழப்பைத் தன் வாழ்க்கை முழுவதும் ஏற்கத் துணிந்த அந்தக் கொள்கை வீரனின் முடிவு பாராட்டுதற்குரியதன்றோ.

தையல்நாயகி

நல்ல மனைவி. வைணவ மரபிற் சொன்னால் சிறந்த தாயார். சைவ மரபிற் சொன்னால் வணக்கத்திற்குரிய அம்பிகை. தன் கணவனின் எண்ணப்படித் தன்னைச் சுருக்கியும் விரித்துக் கொள்ளும் மனோபாவம் உடையவள். கோவிந்தனின் நல்லமைச்சர். குடும்பத்தை நேசிப்பவள். கணவன் சோர்வடையும் போதெல்லாம் தோள் கொடுத்து அவன் துயர் போக்கியவள்.

வரதன் வாங்கிய கடன் தொடர்பாக, கோவிந்தன் முடிவைச் செய்துகொண்டு அவளிடம் ஆலோசனை கேட்டபோது, முகம் சுழிக்காமல் அவள் கோவிந்தன் எடுத்த முடிவிற்கு ஏற்பக் கூறிய வார்த்தைகள் ஈண்டு எண்ணத்தக்கது.

“நமக்குப் பிள்ளையா குட்டியா? ஒண்ணுமில்லே. எனக்கு நீங்களும் உங்களுக்கு நானும் தான். நமக்கு எதுக்கு இவ்வளவு பெரிய வீடு. இந்த வீட்டை சேட்டுக்குக் கொடுத்து ஈடு கட்டிடுங்களேன். நாம்ப முத்தியாலுபேட்டைப் பக்கமாகவோ கருவடிக்குப்பத்துக்கோ போய் ஒரு குடிசையை வாடகைக்கு எடுத்துக்கலாமே. நாம்ப கஷ்டப்படலாம். கஷ்டம் நமக்குப் பழகிடிச்சி. திடீர்னு அந்தச் சின்னஞ் சிறு வயசுப் பெண்ணுங்க எங்கே போகும்?”[23]

பிறர் துன்பத்தைத் துடைப்பதில் கணவன் காட்டும் ஆர்வத்திற்கு, சிறிதும் பழுது வந்திடாதபடி மனைவி என்ற வகையில் கணவன் எண்ணிய எண்ணியாங்கு செய்ய முன் வருவது அவளின் பரிவு உணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

கோவிந்தன் செல்வம் கொழிக்கும் கள்ளுக்கடை வியாபாரத்தை விட்டொழித்து விட்டு வீட்டில் இருந்த நேரம். வேலையின்றிச் சோம்பிக் கிடந்த காலம். கோவிந்தன் மனதில் கவலை படர்ந்த நேரம். இதனைக் கண்ட தையல்நாயகி தன் கணவனை ஆறுதல்படுத்தவும் உற்சாகப்படுத்தவும் கூறிய சொற்கள் வருமாறு; "கள்ளுக்கடையைத் தானே விட்டீங்க. வேறே எதையும் பண்ணிடலியே; எதுக்கு வீணே கவலைப் படறீங்க. குடும்பக் கவலையே உங்களுக்கு வேண்டாம் - அந்த பாரத்தை நான் உங்க மேல் சுமத்தவே மாட்டேன்! இருக்கற வருமானத்திலே குடும்பத்தை சந்தோஷமா நடத்தறதுக்கு என்னால் முடியும்"[24]

இங்கே வாழ்க்கையில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவைத் தையல்நாயகி உணர்ந்தபோதும் ஒரு நல்ல கொள்கைக்காகத் தன் கணவன் விட்டுக் கொடுத்த செல்வம் கொழிக்கும் தொழில் போய் விட்டதே என்ற கவலையின்றி, மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற துணிவுக்கு வரும் தையல்நாயகியின் மானுடச் சிந்தனை எத்தனை பெரியது.

வேலையின்றி இருந்த கோவிந்தன் வேறு வேலை என்ன செய்யலாம் என்ற யோசனையில் சோர்ந்து போய் இருந்த போது கோவிந்தனின் மனைவி ஆறுதல்படுத்திய விதம் எண்ணிப் பார்க்கத்தக்கது.

"ராஜா! என்ன துக்கம் உங்களுக்கு? ஏன் இப்படிச் சோர்ந்து போறீங்க. நமக்கு என்ன சொத்து, சுகம் இல்லையா? நாலு வீடுங்களும் நிலமும் இருக்கவே இருக்கு. உங்க மனசுல எது சரின்னு படுதோ அதைச் செஞ்சாப் போச்சு.

என்ன செய்யறது தையல்? காலம் முழுவதும் கள்ளுக்கடையிலேயே கழிச்சுட்டேன்....... எனக்கு வேறு என்ன தெரியும்?

"ஏன் பாடத் தெரியுமே?

அதை வச்சுக்கிட்டு என்ன பண்ணறது? ஏதோஅந்தக் காலத்திலே டிராமா அது இதுன்னு திரிஞ்சேன்.

அதான் இப்பவும் அதே டிராமாவுக்குப் போயிடறது. நாலு நல்ல பார்ட்டியாகக் கொண்டு வந்து நம்ம ஊரிலேயே ஸ்பெஷல் டிராமா போடறது"[25]

ஆலோசனை என்பது ஏதேனும் ஒரு பிரச்சனையில் உள்ளம் கலங்கி அறிவு பேதலித்து நிற்கும் போது ஒருவருக்குத் தேவைப்படும்

உதவியாகும். அவ்வகையில் கோவிந்தன் வேலையின்றிச் செய்வதறியாது திகைத்தபோது, தையல் நாயகி ஆறுதலாகச் சொன்ன அப்பரிவு வார்த்தை, கோவிந்தனுக்கு ஊக்கப் பொருளாக அமைந்ததென்றால் மிகையாகாது. அன்பு மனைவி சொன்ன நாடகக் கம்பெனி ஆரம்பித்தல் என்ற முடிவு இருவரும் கருத்தொருமித்து எடுத்த முடிவு ஆகும்.

தையல்நாயகிக்கு அதிகமான சகிப்புத்தன்மையுண்டு. தையல்நாயகி பற்றி வேதா வருணிக்கும் போது இப்படிச் சொல்லுவான்.

"மாமியிடம் ஏராளமான பொன், வைர நகைகள் இருந்தன. என்றாலும் நகைகள் அணிவதில்அவளுக்கு அவ்வளவு ஈடுபாடு இல்லாமல் இருந்தது. விஷேச காலங்களில் மாமி சர்வாலங்கார பூஷிணியாகச் சில சமயங்களில் இருக்க நேர்ந்ததுண்டு.

ஆனால் ஏழ்மைப்பட்ட உறவுக்காரப் பெண்களின் மனதில் அவ்வலங்காரம் லேசான அல்லது மறைமுகமான எரிச்சலைத் தூண்டி விடுகிறதென்பதால் நாளடைவில் அதையும் குறைத்துக் கொண்டாள்."[26]

பொதுவாகப் பெண்கள் ஆபரணப் பிரியர்கள் என்பார்கள். அதிலும் செல்வச் செழிப்பில் இருக்கும் தையல்நாயகி ஆபரணப் பற்றுள்ளவளாக இருப்பதில் வியப்பில்லை. ஆனால் தான் மட்டும் நகையணிந்து. பிறர் மனம் புண்பட நேரும் என்றால் அப்படியொரு ஆபரணம் தேவையில்லை; அதைக் குறைத்துக் கொள்ளலாம் என்ற முடிவு மனிதாபிமானத்தை வெளிப்படுத்துவதன்றோ.

கோவிந்தனும் தில்லைநாயகியும் வாழ்ந்த வாழ்க்கை சிறப்புறு வாழ்க்கையாகும். ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்தல் என்பது அவ்வாழ்க்கையின் சாரமாகும். இது பற்றி வேதா குறிப்பிடும் போது "அவர்கள் இல்லறம் இதுமாதிரி தான் நடந்தது. மாமா ஊசி என்றால் நூல் மாதிரி மாமி. ஊசி வழி நூல்போகும். கருத்து வேறுபாடுகள் நிறைய ஏற்பட்டன. படும் எல்லாம் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் மேல் உள்ள நம்பிக்கையில் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து வாழ்க்கையை நடத்திச் சென்றார்கள். மாமா சொல்வதில் நியாயம் இருக்கும். உலக அனுபவம் மிக்கவர், நல்லவர். வேறு மாதிரி நடந்து கொள்ள அறியாத மனிதர் என்று மாமி நினைப்பார். இவளுக்கு நம்மைத் தவிர வேறு யார்? நம் உலகம் இவள்அல்லவா! தன் சுகம் துக்கம் எல்லாம் நானென்று என்னைஅடைந்தவள் அல்லவா இவள்? இவள் சந்தோஷத்தைத் தவிர வேறு என்ன இலட்சியம் இருக்கப் போகிறது? என்று மாமா நினைப்பார்.[27]

மனித வாழ்க்கை அதிலும் இல்லற வாழ்க்கையில் இன்ப, துன்பங்கள் இயைந்து வருவது இயல்பு. கணவனின் கருத்தோடு மனைவி முரண்படலாம். ஆனால் ஒத்த முடிவை எடுப்பதில் விட்டுக் கொடுத்தல் என்பது இருபக்கமும் இருத்தல் வேண்டும். இதற்கு உள்ளப் பூர்வமான அன்பு அந்த அன்பின் வெளிப்பாடான மனிதநேயம் பூர்வாங்கமாக இருந்தால் அன்றி, கருத்து முரணில்இணைந்து போவது என்பது நடக்க முடியாது. அவ்வகையில் இவ்விருவர்தம் மனமும் மானுட நலம் கருதும் மனம் என்பதால் அங்கே மகிழ்ச்சி ஆட்சி செய்கிறது. அந்த மகிழ்ச்சியே மனிதநேய வெளிப்பாடாக அமைகிறது.

குப்புமுதலியார்

சிறிய பாத்திரம் என்றாலும் அரிய பாத்திரம். தியாகியாக வாழ்ந்தவர். கோவிந்தனின் மனதில் ஆழப்பதிந்தவர் என்பது முன்னர் சுட்டப்பட்டுள்ளது. கட்சிக் கூட்டம் நடத்த கோவிந்தனிடம் நன்கொடை கேட்டு வந்த போது எதிர்பார்த்த ஐம்பது ரூபாய்க்குப் பதிலாக அவர் நூறு ரூபாய் தர, முதலியார் ஐம்பது ரூபாயைத் திரும்பத் தந்து தனது நேர்மையைக் காட்டுகிறார்.

முதலியாரைப் பற்றிக் கோவிந்தன் மனத்திரையில் எண்ணிப் பார்க்கிறான். "பல ஞாபகங்கள் கிளறிக் கொண்டு வந்தன. 'நல்லார் ஒருவர்உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை' என்றார்களே அந்த மாதிரி நல்லார் இவரல்லவா என்று தோன்றியது மாமாவுக்கு. நாடு அடிமை இருட்டில் ஆழ்ந்து கிடக்கிறதே என்று விசனத்தில் ஆழ்ந்து விட்ட முதலியார்குடும்பம், அப்படியொன்றும் வெளிச்சத்தில் இல்லை. வறுமை பிடுங்கித் தின்றது. நோயாளி மனைவி இல்லறத்தைத் துயரஅனுபவமாக மாற்றிக் கொண்டிருந்தார். இரண்டு பெண்கள் கல்யாணத்துக்கு நின்றார்கள். மூத்தவள் கால் ஊனப்பட்டவள். இளம்பிள்ளை வாதம். இரண்டாவது பெண்ணுக்கு லேசான மனநோய், முதலியாரோ சுதந்திரத்தைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு எதிரில் உட்கார்ந்திருந்தார்.[28]

அந்நியர் கையில் முடங்கிக் கிடக்கும் தாய்நாட்டை மீட்பதே தன் இலக்காகக் கொண்ட தியாகி குப்புமுதலியார் போன்றோர் தங்கள் வீட்டின் நிலைபற்றி வருந்துவதில்லை. உள்ளம் எப்போதும் தேச விடுதலை குறித்துச் சிந்திக்கும் போது, அவலத்திற்கு உள்ளான இல்லம் பற்றிய சிந்தனை இத்தகையோர்க்கு முக்கியமாகப் படுவதில்லை என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு. கடமையில் நேர்மை, நட்பில் கண்ணியம், மனதிற் கட்டுப்பாடு என வாழ்க்கையை

அமைத்துக் கொண்டு மானுடம் வெல்ல, இல்லறத்தில் துறவறம் கொள்ளும் இவர்களின் மனிதநேய நோக்கு போற்றுதற்குரியது.

உத்ரா

உத்ரா என்ற உத்ராபதி ஓர் ஆலைத் தொழிலாளி. வேதாவின் நண்பன். இவனைப் பற்றி வேதா குறிப்பிடும் போது,

"உத்ராபதி இப்போது ஆலைத் தொழிலாளி......... எதைச் செய்யலாம் இதையா, அதையா என்கிற சிக்கல்கள் எல்லாம் அவனுக்கு வந்ததில்லை. அவன் வேலைக்கும் சம்பளத்துக்கும் அப்பாற்பட்ட எதையும் அவன் சிந்திப்பதில்லை பீடி குடிப்பான். ஒரு நாளைக்கு ஒரு கட்டுதான். அதைத் தாண்டி ஒரு பீடி கூட வாங்க மாட்டான். இரவுகளில் சாராயம் குடிப்பான். நூற்றைம்பது மில்லியும் ஒரு சோடாவும். அதைத் தாண்டிப் போவதில்லை........ ஓரளவு நல்ல சம்பளம் அவனுக்கு. அவன் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் ஒரு பொதுப்பார்வையில் நல்ல சம்பளம். மாதம் நூறு ரூபாய் அளவுக்கு எனக்கு உதவி செய்வான். இன்னொரு நூறு ரூபாய் அளவுக்கு மாமா வீட்டுக்குச் செய்தான்"[29] இவ்வாறு கூறுகிறான்.

சிறிய பாத்திரப் படைப்பு என்றாலும் உயரிய படைப்பு. சிக்கனமாய் வாழ்பவன் என்றாலும் கருமியில்லை. தேவை அறிந்து உதவிக் கரம் நீட்டுபவன். அதிலும் மென்மை உண்டு. தன் நண்பன் வேதாவிற்கு உதவியை நேரடியாகச் செய்யும் உத்ரா கோவிந்தனின் வயது, அனுபவம், பெருமை, வாழ்ந்த வாழ்க்கை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, அவருக்கு நேரடியாக உதவி செய்யாமல் தன் நண்பன் வழி உதவி செய்யும் போது, பிறர் மனம் நோகக் கூடாது என்பதில் அவன் காட்டும் கவனம், பரிவு மனிதநேயத்தால் அன்றோ!

தங்கையாக ஏற்றுக் கொண்ட கோகிலாவிற்கு இட்டிலிக்கடை வைத்துக் கொடுத்து வாழ்க்கைக்கு ஒளி ஊட்டிய இவனது பரந்த நெஞ்சம் மானுடத்தின் பாற்கொண்ட வாஞ்சையின் வெளிப்பாடன்றோ.

வேதா

வேதா என்ற வேத நாராயணன் கோவிந்தனின் மருமகன். இந்தப் பாத்திரத்தின் வாயிலாகத்தான் ஆசிரியர் கதையைக் கூறுகிறார். வேதாவின் வழியாகத்தான் இப்புதினத்தில் நடமாடும் ஒவ்வொரு மாந்தரைப் பற்றியும் நம்மால் அறிய முடிகிறது.

முடிவுரை

"நம் ஜனன உறவு நம் வசம் இல்லை - எனினும் பூமிப் பந்துக்குள் பிரவேசித்து விட்ட நாம், ஜன சமூகத்தின் இணைப்புக் கண்ணியாக நம்மை ஆக்கிக் கொள்வது தான், நம் மேன்மையோ என்று எனக்குத் தோன்றுகிறது. நம்மேல் வந்து கவிந்து கொண்ட வாழ்க்கைக்கு அர்த்தம் ஏற்படுத்துவது மானுடக் கடமை என்றே எனக்குத் தோன்றுகிறது.[30] என்று புதின ஆசிரியர் பிரபஞ்சனின் எண்ண வெளிப்பாடே நாம் கண்ட மகாநதி.

பிரபஞ்சனின் கோவிந்தன், மனிதன் எவ்வாறெல்லாம் இம்மானிட வாழ்க்கையை, மானுடத்திற்குப் பயன்படும்படியாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவரால் படைக்கப்பட்ட பாத்திரம். இல்லறத்தில் ஏற்படும் நெளிவு சுழிவுகளுக்கு இல்லறத் தலைவி என்ற நிலையில் ஒருவர் எப்படி யெல்லாம் தீர்வுகள் மேற்கொள்ள வேண்டும் என்று பிரபஞ்சன் எண்ணினாரோ அந்த எண்ணத்தின் வரைபடமே தையல்நாயகி.

சுதேசப் பற்றுக்கு ஒரு குப்பு முதலியாரைப் படைத்துக் காட்டியும், சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, செழுங்கிளை தாங்குதல் போன்ற அரிய மனிதநேயப் பண்புகளுக்குத் தையல் நாயகியையும், வார்த்தைகளால் காயப்படுத்தாமை (வீட்டை விட்டு வெளியேறி மீண்டும் மூன்று வயதுக் குழந்தையோடு வீடு புகுந்த கோகிலா விடயத்தில் கோவிந்தனின் அணுகு முறை) தவற்றைத் திருத்தும் போது அச்சமின்றிச் செயல்படுதல் (மாசிலாமணி விடயத்தில் கோவிந்தனின் அணுகுமுறை), பிறர்துன்பம் கண்டு இரங்கல் (வரதன் விடயத்தில் கோவிந்தன் காட்டிய அக்கறை), குற்றம் தவிர்த்து சுற்றம் ஓம்புதல் (பொதுநிலையில் சமூகக் குறைபாடுகள் கண்டு வெம்பினாலும் அதையும் தாண்டி நேசித்தல்), இப்படி மானுடக் கோட்பாடுகளுக்கு நிலைக்களனாய் விளங்கும் கோவிந்தனைப் படைத்தும் உத்ரா வேதா என்ற பாத்திரங்கள் காலம் அறிந்து உதவி செய்தல் என்ற கோட்பாட்டில் (கோகிலாவின் துயர் தீர்த்தல்) இவ்வாறாக, பிரபஞ்சன் தன் நூல் முழுதும் மானுடம் கருதிச் சொன்ன கருத்துகள் பல. இங்கே 'மகாநதி' பாத்திரங்கள் வழியாகப் பிரபஞ்சன் சொல்ல விரும்பிய மானுடக் கோட்பாட்டுக் கருத்துகளை இக்கட்டுரை வழி கண்டோம்.

இது போன்ற நூல்கள் ஆய்வு செய்யப்பட்டு, அப்படைப்பாளர்கள் மனிதநேயம் குறித்துச் சொன்ன விடயங்களை மக்கள் மன்றத்திற்குக் கொண்டு சென்றால் அது வேர் ஊன்றத்

துடிக்கும் பயங்கரவாதத்தை முறியடிக்கும்; பண்புள்ள இளைய தலைமுறை உருவாக வழி வகுக்கும்.

குறிப்புகள்

1. இலக்கியத் திறனாய்வு, ப. 217.
2. மேற்படி, ப. 212.
3. மேற்படி, ப. 212.
4. மேற்படி, ப. 212 - 213.
5. கம்பனில் மானுடம், ப. 43.
6. மேற்படி, ப. 44.
7. மேற்படி, ப. 44.
8. மேற்படி, ப. 47.
9. மேற்படி, ப. 48.
10. மேற்படி, ப. 48.
11. மகாநாதி, ப. 101.
12. மேற்படி, முன்னுரை ப. iii
13. மேற்படி, ப. 13.
14. மேற்படி, ப. 14.
15. மேற்படி, ப. 97-98.
16. மேற்படி, ப. 81.
17. மேற்படி, ப. 82.
18. மேற்படி, ப. 170.
19. மேற்படி, ப. 69.
20. மேற்படி, ப. 210-211.
21. மேற்படி, ப. 180.
22. மேற்படி, ப. 182.
23. மேற்படி, ப. 214.
24. மேற்படி, ப. 185.
25. மேற்படி, ப. 188.
26. மேற்படி, ப. 156.
27. மேற்படி, ப. 113.
28. மேற்படி, ப. 92.
29. மேற்படி, ப. 240-241.
30. மேற்படி, ப. 212.

******

"இருட்டில் மனிதர்கள்" நாவலில் மனிதநேயம்

அ. பூரணலதா
ஆய்வாளர்

சாந்தா ராமேஷ்வர் ராவ் அவர்களால் 1976ஆம் ஆண்டு எழுதப்பட்ட Children of God என்ற ஆங்கில நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பே இருட்டில் மனிதர்கள் என்ற புதினம். 1993ஆம் ஆண்டு ஆங்கிலத்திலிருந்து இந்நாவலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ஆர். சிவகுமார் ஆவார். 150 பக்கங்களைக் கொண்டதாக உள்ளது இப்புதினம். மர்க்காராவில் பிறந்த சாந்தா ராமேஷ்வர் ராவ், பாட்னா, லக்னௌ மற்றும் ஹைதராபாத்தில் கல்வி கற்றார். வித்யாரண்யா பள்ளியை நிறுவி, இயக்குநராகவும் இருக்கும் இவர் ஹைதராபாத்தில் வாழ்ந்து வருகிறார். இவர் குழந்தைகளுக்காக அதிகம் எழுதுகிறார். மேலும் கல்வி சம்பந்தமான புத்தகங்களையும் நிறைய எழுதியிருக்கிறார்.

மனிதநேயம்

பசியெடுத்தவனுக்கு இரக்கம் காட்டும் ஜீவகாருண்ய உணர்வும்

> "அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
> தன்நோய் போல் போற்றாக்கடை"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கைக் கடைப்பிடிப்பதும் மட்டும் மனிதநேயம் அல்ல.

மக்களை வருத்தும் கொடுமைகள், ஒடுக்கு முறைகள், அடிமைத்தனம், சுரண்டல், தீண்டாமை ஆகியவற்றிலிருந்து மீண்டு வெளிச்சத்தை நோக்கி வீறுடன் கிளர்ந்தெழச் செய்வதும் அவ்வாறு கிளர்ந்தெழும் போதெல்லாம் அதன்பால் பரிவுகாட்டி அன்பு செலுத்தித் துணை நிற்பதும் ஊக்குவிப்பதும் மனிதநேயமே என்ற கருத்தின் அடிப்படையில் கட்டுரை அமைகின்றது.

கதைச்சுருக்கம்

கோயில் ஊரான வேணுகோபாலபுரம் வசுமதி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. வேணுகோபாலபுரம் எந்த

மாநிலத்தில் உள்ளது என்ற குறிப்பு கதையில் கொடுக்கப்படவில்லை. வேணுகோபாலபுரத்தைச் சேர்ந்த துப்புரவுத் தொழில் செய்யும் லட்சுமியும் அவள் சமூகத்தினரும் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் உயர்சாதி மக்களின் இருப்பிடங்களி லிருந்து மிகத்தள்ளி வாழ்ந்து வருகிறார்கள். துப்புரவாளர் இனத்தில் பிறந்ததால், காலம் காலமாகக் கழிவறைகளைச் சுத்தம் செய்தல், மனிதக் கழிவுகளை அகற்றுதல் ஆகிய செயல்களைச் செய்யும் இவர்கள், கடைநிலை மக்களாகக் கருதப்படுகிறார்கள். லட்சுமி கல்வி கற்று நல்லாடை உடுத்தி, நாகரீகமாய், கௌரவமாய்க் கனவுகளோடு எல்லோரையும் போல் வாழ விரும்புகிறாள். ஆனால் கழிவை அள்ளவும், கஷ்டங்களைச் சுமக்கவும், அவமானங்களைச் சகித்துக் கொள்ளவுமே சமூகம் அவளுக்குக் கற்றுக் கொடுக்கிறது. அவளும் அவளது சமூகமும் தீண்டாமையையும், அடக்கு முறையையுமே சந்திக்கிறார்கள். லட்சுமியின் மகன் கிட்டு இவற்றிலிருந்து விடுபட விரும்புகிறான். சுதந்திரம் கிடைத்த வருடம்தான் லட்சுமியின் மகன் கிட்டு பிறக்கிறான். சுதந்திரம் கிடைத்துப் பல வருடங்கள் ஓடி விட்ட நிலையில், லட்சுமியின் மகனான இருபத்தைந்து வயது வாலிபன் கிட்டு கோயிலுக்குள் நுழைந்ததற்காக உயிருடன் தீ வைத்துக் கொளுத்தப்படுகிறான். லட்சுமியின் நினைவுகள் அவளின் இளமைப் பருவத்தை நோக்கிப் பின்னோக்கிச் செல்கிறது.

தாங்கள் பிறந்ததே மனிதக் கழிவுகளைச் சுமக்கவும் துப்புரவுப் பணி செய்யவும்தான் என்ற எண்ணத்திலேயே ஊறித் திளைத்தவர்களாக அவர்கள் வாழ்கிறார்கள். அம்மக்களுக்கு உயர்சாதியினர் முகத்தை நேருக்கு நேர் பார்த்துப் பேசும் வழக்கம் கிடையாது. வெளுத்த வெள்ளாடை, செருப்பு ஆகியவற்றை அவர்கள் அணியக்கூடாது. பெண்கள் கணுக்காலை மறைக்கும்படி தழையத் தழையச் சேலை அணியக்கூடாது. பின்னலிட்டுப் பூ வைத்தால் கல்லடியே பரிசாகக் கிடைக்கும். கோயிலுக்குள் நுழைய வேண்டும் என்று எண்ணுவதே மாபெரும் தவறு. உயர்சாதியினரால் மண்ணில் வீசப்படும் எச்சில் இலைகளே அவர்களின் விருந்து. துடைப்பம் மற்றும் இரும்புச் சட்டி ஆகியவையே அவர்களின் சொத்துக்கள் என்பது நாவலைப் படிப்பவர்கள் அறியவரும் கருத்துகளாகும்.

தீண்டத்தகாதவர்களின் காலனியில் புழுதியும் சிறு சிறு குட்டைகளாகத் தண்ணீரும் தேங்கியிருக்கும்.

பல தலைமுறைகளாக அனுபவித்த மௌனமான, எதிர்ப்பற்ற துன்பத்திலிருந்து பிறந்த சகிப்புத்தன்மை மட்டுமே அவர்கள் கண்களில் இருந்தது.

தீண்டத்தகாத வாழ்க்கையிலிருந்து விடுபடும் முயற்சியில் லட்சுமியின் சகோதரர்கள் போதனும் சித்தனும் வெளியேறுகிறார்கள். சித்தன் மதபோதகர்களிடம் அடைக்கலமாகிறான். போதன் பம்பாய் நகருக்கு ஓடி விடுகிறான். பியர் பாதிரியார் என்ற மனிதநேயம் மிக்க நபருடனும், காந்தியத் தொண்டர்களுடனும் சேர்ந்து லட்சுமியும் இவ்வாழ்க்கையிலிருந்து விடுபடப் போராடுகிறாள் அவர்களுடன் சேர்ந்து அவள் ஆலயப் பிரவேசமும் செய்கிறாள். ஆனால் சுதந்திரம் கிடைத்து இருபத்தைந்து வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் ஆலயத்திற்குள் நுழைந்ததற்காகக் கிட்டு கொடூரமாகக் கொல்லப் படுகிறான். கிட்டுவின் இளமை பூரித்த உடல் பூமிக்கடியில் ஈரமண்ணில் மண்வாசனையோடு புதைக்கப்படுகிறது. "சட்டங்கள் இயற்றப்படுகின்றன; மனிதர்களிடையே நிலவ வேண்டிய சகோதரத்துவம் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் சட்டங்கள் என்பவை வார்த்தைகள் அன்றி வேறென்ன? வார்த்தைகளால் மனிதர்களின் மனங்களை மாற்ற முடியுமா?" என்ற லட்சுமியின் எண்ண ஓட்டத்தோடு கதை நிறைவடைகிறது. இருட்டில் வாழும் இம்மனிதர்களே இப்புதினத்தில் எடுத்துக் காட்டப்படுகின்றனர்.

கதைச்சூழலும் கதைக்கருவும்

ஒரு படைப்பாளியின் படைப்பு, ஒரு கருதுகோளுக்கு அல்லது ஒரு கோட்பாட்டுக்கு (Theory) வலிந்து எழுதப்படுவதல்ல. எந்தப் படைப்பாளியாக இருந்தாலும் தன் சமகாலச் சூழலைச் சிந்திக்கிறான். தான் வாழுகின்ற சமுதாயத்தில் நிலவும் சமூகச் சீர்கேடுகளே பெரும்பாலும் கதையின் கருவாகிறது.

நம் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்து இருபத்தைந்து வருடங்கள் நிறைவடைந்து விட்ட காலகட்டத்தில் கதை துவங்குகிறது. நம் நாட்டிற்குச் சுதந்திரம் கிட்டிய வருடம் தான் லட்சுமியின் மகன் கிட்டு பிறக்கிறான்.

"கிட்டு பிறந்தும், நமக்குச் சுதந்திரம் வந்தும், நமது கொடி ஏற்றப்பட்டுக் கௌரவிக்கப்பட்டும், தீண்டத்தகாதவர்களுக்கும் கோயில் கதவுகள் திறக்கப்பட வேண்டுமென்று மகாத்மா காந்தி உண்ணாவிரதமிருந்தும் பல வருடங்கள் ஓடி விட்டன. ஆனால் தீண்டத்தகாதவனும் என் ஒரே மகனுமான கிட்டு, கோயிலில் நுழைய முயன்றதற்காகக் கொல்லப்பட்டு விட்டான்" (பக். 1-2) என்று லட்சுமி கூறுவதிலிருந்து கதைச் சூழலையும், காலச் சூழலையும் அறியலாம்.

"அவர்கள் கைகளில் கழிகளும் இரும்புக் கம்பிகளும் இருந்தன. ஆங்காரமாக ஊளையிட்டுக் கொண்டு அவர்கள், அவனை

அடிக்க ஆரம்பித்தார்கள். தன் மீது கருணை காட்டுமாறு கிட்டு கத்தினான். கும்பலுக்குக் கருணையில்லை. கோயில் முற்றத்திலிருந்த அரசமரத்தில் அவனைக் கட்டினார்கள். பிறகு கிட்டுவின் ஆடைகளுக்குத் தீ வைத்தார்கள். கிட்டுவின் மரண ஓலம் காற்றைக் கிழித்தது. 'வேண்டாம், வேண்டாம் விட்டு விடுங்கள்', அவன் கத்தி அழுத போது ஜுவாலைகள் அவனை விழுங்க ஆரம்பித்தன. அவன் கத்திப் புலம்பித் திமிறிக் கொண்டிருந்தான். —பிறகு அவன் சுருண்டு மரத்தோடு சரிந்தான்" (பக். 3-4) என்ற கூற்றைக் கேட்ட லட்சுமியின் இதயம் வேதனையில் துடிப்பதோடல்லாமல், அவை ஒவ்வொருவரின் இதயத்திலும் மனிதநேயத்தை ஊற்றெடுக்கச் செய்யும் வரிகளாக, சாதிவெறி என்ற கோரப்பிடியில் சிக்கியிருக்கும் மனித மனத்தின் உச்சகட்ட வக்கிரத்தை படம்பிடித்துக் காட்டுவனவாக அமைகின்றன.

கிட்டுவின் ஈமச்சடங்கு நடந்து கொண்டிருக்கும் போது லட்சுமியின் நினைவுகள், அவளின் இளமைப் பருவத்தை நோக்கிப் பின்னோக்கிச் செல்கிறது. லட்சுமியின் இளமைப்பருவமும் தனது இருபத்து ஐந்தாவது வயதில் சாதிவெறியர்களால் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டு அநியாயமாகக் கொல்லப்பட்ட, லட்சுமியின் மகன் கிட்டுவின் இளமைப்பருவமும் கதையின் சூழலாக அமைகின்றன.

பாத்திரப் படைப்பு

இருட்டில் மனிதர்கள் புதினத்தின் பாத்திரப் படைப்பை நான்கு வகையாகப் பகுத்துக் கொள்ளலாம்.

1. தீண்டாமையையும் அடக்குமுறையையும், அவமானங்களையும் சகித்து வாழ்ந்து கொண்டிருக்கும் லட்சுமியும் அவள் சமூகத்தினரும் முதல் வகையினர்.

2. உயர் சாதியினர் எனச் சொல்லிக் கொண்டு மனிதநேயம் என்பதே சிறிதும் இன்றி வாழும் வேணுகோபாலபுரத்து மக்கள் இரண்டாம் வகையினர்.

3. மதமாற்றம் என்ற உடன்படிக்கையின் அடிப்படையில் மக்களுக்கு அன்பையும் ஆதரவையும் காட்டும் மதபோதகர்கள் மூன்றாம் வகையினர்.

4. கிறிஸ்துவராகப் பிறந்து, கிறிஸ்துவர்களின் கடவுளை வணங்குகின்ற அதே வேளையில் வேற்று மதத்தினரிடம், மதங்களைப் பாராட்டாமல் பரிவுகாட்டி, மனிதநேயம் பாராட்டும் பியர் பாதிரியாரும், காந்தியவாதிகளான ஆசார்ய ஹரிஷ் சந்திரர் மற்றும் ராதா ஆகியோர் நான்காம் வகையினர்.

ஆசிரியரின் மனிதநேயம்

வாழ்க்கையில் பாதிக்கப்படுகிறவர்களையும் கொடுமைகளுக்கும் அநியாயங்களுக்கும் ஆளாகிறவர்களையும் கண்டு வேதனைப்படுகிற ஆசிரியரின் உள்ளத்தைப் பின்வரும் வரிகள் வெளிப்படுத்துகின்றன. "கிட்டு அடித்துக் கொல்லப்பட்டு, 'லட்சுமி'யும் 'மதானும்' (கணவர்) அழுது புலம்பிய சம்பவம் முதலாக இன்று வரை இது போன்ற கொடூரமான செயல்களுக்கு நாம் சாட்சிகளாயுள்ளோம். நாம் எங்கு சென்றாலும் மிருகத்தனமான நிகழ்வுகளும் நம்மைத் தொடர்கின்றன. காலம் துளியும் மாறவில்லை. இவர்களது கதை அல்லது கதைகள் நீடிக்கின்றன – முடிவில்லாப் பயணமாகவே!" (அறிமுக உரை)

ஆசிரியரின் நல்லெண்ணத்தையும் மனிதநேயத்தையும் வெளிப்படுத்தும் பாத்திரமாக பியர் பாதிரியார் படைக்கப் பட்டுள்ளார். இவரிடம் அன்பில் விழையும் மனிதநேயத்தைக் காண முடிகிறது.

"சகோதரனே, ஒரு தவறு பத்தாயிரம் முறை திரும்பத் திரும்பச் செய்யப்பட்டால் அது சரி என்று ஆகி விடாது. ஆயிரம் ஆண்டுகளாக ஒரு பொய் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டால் அது உண்மையாகி விடாது. ஆயிரம் ஆண்டுகளாக மனிதர்கள் தங்கள் சகோதரர்களையே தீண்டத்தகாதவர்கள் என்று அழைத்தால் அவர்கள் தீண்டத்தகாதவர்கள் அல்ல" (ப. 80) எனப் பாதிரியாரின் குரலாக ஒலிப்பது ஆசிரியரின் மனிதநேயக் குரலே ஆகும்.

காந்தண்ணா என்ற பாத்திரப்படைப்பின் வாயிலாக ஆசிரியர் சிறு சிறு கதைகளைக் கூறுகிறார். தீண்டத்தகாதவராகக் கருதப்படும் கனகன் என்ற முனிவர், கடவுளின் மீது கொண்ட நேசத்தால் கோயிலுக்குள் சென்று தெய்வத்தைக் காண முற்படுகிறார். ஆனால் கல்லாலும் தடியாலும் அடித்துக் கோயிலின் பின்புறம் துரத்தப்படுகிறார். அவர் அங்கு நின்று பாடியபடி இருக்கிறார். பூசாரிகள் முக்கியப் பூசையை நடத்தக் கர்ப்பக்கிரகத்துக்குள் நுழைந்தபோது அதிசயம் நடக்கிறது. தெய்வச் சிலையே திரும்பி முதுகைப் பூசாரிகள் பக்கம் வைத்துக் கோயிலின் பின்புறச் சந்தில் நின்று கடவுளைப் போற்றிப் பாடிக்கொண்டிருக்கும் கனகனைப் பின் சன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறதாக நாவலில் கூறப்படுகிறது. இந்நிகழ்ச்சி நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகத் தோன்றினாலும், இந்நிகழ்ச்சியைச் சொல்வதன் மூலம் தெய்வத்துக்குத் தன் மக்களிடம் உயர்வு, தாழ்வு கிடையாது என்ற கருத்தைக் கூறி மனிதநேயச் சிந்தனையை விதைக்கிறார் ஆசிரியர்.

சுதந்திரத்துக்கு முந்தைய காலகட்டமும் பிந்தைய காலகட்டமும்

"கிட்டு பிறந்தும், நமக்குச் சுதந்திரம் வந்தும், நமது கொடி ஏற்றப்பட்டுக் கௌரவிக்கப்பட்டும், தீண்டத்தகாதவர்களுக்கும் கோயில் கதவுகள் திறக்கப்பட வேண்டுமென்று மகாத்மா காந்தி உண்ணாவிரதமிருந்தும் பல வருடங்கள் ஓடி விட்டன. ஆனால் தீண்டத்தகாதவனும் என் ஒரே மகனுமான கிட்டு, கோயிலில் நுழைய முயன்றதற்காகக் கொல்லப்பட்டு விட்டான்" (ப. 1-2) என்ற கூற்றால் மனிதத்தன்மையற்ற தீண்டாமைக் கொடுமையால் மனிதநேயம் சிதறடிக்கப்பட்டு விட்டதை உணர முடிகிறது.

"நமக்குச் சுதந்திரம் வந்தபோது தலைவர்கள் சொன்னார்கள் 'சுதந்திர இந்தியாவில் எல்லா மக்களும் சமமாக நடத்தப்படுவார்கள் சாதிப் பிரிவினைகள் அகற்றப்படும். எந்த மனிதனும் தீண்டத் தகாதவனாக இருக்க மாட்டான், ஆனால் மனித மனங்களை நம்மால் மாற்ற முடியாது.

அரசியல்வாதிகள் முழங்கினார்கள் "ஒருவனைத் தீண்டத் தகாதவன் என்று அழைப்பதோ அப்படி அவனை நடத்துவதோ ஒரு குற்றமாகக் கருதப்படும். சகோதரத்துவமும் சமத்துவமுமே சுதந்திரத்தின் அர்த்தம்" (பக்கம். 2)

ஆனால் பல வருடங்களுக்கு முன் எல்லாருக்கும் திறந்து விடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கோயிலுக்குள் நுழைந்ததற்காகக் கிட்டு இப்போது கொல்லப்பட்டுக் கிடக்கிறான். கிட்டு இளைஞன், விளைவுகளைப் பற்றி யோசிக்காதவன். தன் தீண்டத்தகாத நிலையையும், வெளுத்த வெள்ளாடை, செருப்பு ஆகியவற்றைத் தீண்டத்தகாதவன் அணியக் கூடாது என்பதையும் மறந்து போய்க் கிட்டு சலவை செய்யப்பட்ட வெள்ளை ஆடையையும் செருப்பையும் அணிந்திருந்தான். அவர்கள் விடுத்த எச்சரிக்கைக்கு அவன் பயப்படாததால் அடித்துத் தீ வைத்துக் கொளுத்தப்படுகிறான்.

கிட்டு உயிரோடு சுவாசித்துக் கொண்டிருந்த போதே தீயின் நாக்குகள் அவனை விழுங்கிய கொடூரத்தைக் கூறுகின்ற ஆசிரியர், மனித மனங்களின் குரூரத்தை அம்பலப்படுத்தியுள்ளார். மேலும் கிட்டுவின் ஈமச்சடங்கின் போது பத்திரிகையாளர்கள் லட்சுமியைக் கேள்விகளால் துளைக்கின்றனர். கிட்டு லட்சுமியின் ஒரே மகனா? அவனுக்கு என்ன வயது? இறப்பதற்கு முன் ஏதாவது சொன்னானா? தீண்டாமை பற்றி லட்சுமியின் அபிப்பிராயம் என்ன? காந்தியச் சத்யாகிரகிகளுடன் சேர்ந்து லட்சுமி ஆலயப் பிரவேசத்திற்குப்

பாடுபட்டாளா? தீண்டாமையை அகற்ற லட்சுமி கூறும் வழிமுறைகள் என்ன? என்பன போன்ற கேள்விகளைக் கேட்கிறார்கள். கிட்டுவின் சாவு அரசியல் நிகழ்ச்சியாக்கப்படுகிறது. கிட்டுவின் எரிந்து போன உடலை முன் வைத்துச் சகோதரத்துவம், மனித கௌரவம், அரசியல் நிர்ணயச் சட்டம் ஆகியவை பற்றி நீண்ட சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. அரசாங்கத்தை எதிர்த்தும் ஆதரித்தும் பேச்சுக்கள் இருந்தன. "மனித மனங்கள் குரூரமானவையாக இருக்கும் போது எந்த அரசாங்கம் ஆண்டாலென்ன?" (பக்கம். 6) என்ற லட்சுமியின் வார்த்தைகள் மனிதநேயம் என்பது இயல்பாகவே மனிதனுக்குள் ஊற்றெடுக்க வேண்டும் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

மத மாற்றத்தின் அடிப்படையில் அன்புகாட்டல் – மனித நேயச் செயலாகுமா?

தீண்டத்தகாதவர்களோடு பழகி, அவர்களுக்குச் சாப்பாடும், உடையும், கல்வியும் கொடுத்து தங்களுடைய கடவுளை வணங்க வேண்டுமென்ற உறுதிமொழியை மட்டும் வாங்கும் கிறித்துவர்களோடு லட்சுமியின் சகோதரன் சித்தன் சேர்ந்து விடுகிறான்.

"சாப்பிடுவது என்றா நீ சொன்னாய்? நான் வயிறு நிறையச் சாப்பிட்டுப் பலநாட்கள் ஆகின்றன. உயர்சாதி ஆட்களின் சாபங்களையும், ஏச்சுக்களையும் அன்றி நாம் வேறெதைச் சாப்பிடுகிறோம்? எனக்கு எல்லா நேரத்திலும் பசி. ராத்திரியில் வயிறு சுருட்டிப் பிடிக்கிறது. கைகளால் தன் வயிற்றைத் தடவினான். 'தயவு செய்து என்னைத் தடுக்காதே. நான் போக வேண்டும்" (பக்கம். 44) என்று சித்தன் சொல்லும் போது, அவன் கிறித்துவனாக மதம் மாறி மனிதனாக வாழட்டும் என்ற மனித நேய எண்ணம் படிப்போர் மனத்தில் எழுவது இயல்பே.

உலகில் மனிதனே பிரதானம். மதமோ மதமில்லையோ, ஆத்திகமோ, நாத்திகமோ எதுவாக இருந்தாலும் அது மனிதனுக்கு என்ன செய்கிறது என்பதை வைத்து மதிப்பிட்டால், மதமாற்றத்தின் அடிப்படையில் மத போதகர்கள் அன்பும் கருணையும் காட்டுவதையும் மனிதநேயமாகவே கருதலாம். இந்து மதமோ, இஸ்லாமிய மதமோ, கிறித்துவ மதமோ எதுவாக இருந்தாலும் அன்பையும் அமைதியையுமே வலியுறுத்துகின்றன. எந்த மதத்தைச் சேர்ந்தவனாக ஒருவன் வாழ்கிறான் என்பதை விட மனிதனாக அவன் வாழ்கிறானா? என்ற கேள்விக்கு விடை கிடைத்தால் அதுவே மனிதநேயத்தின் வெற்றி எனலாம்.

உதாரணத்திற்குச் சில சூழல்களை இங்கு ஒப்பு நோக்கலாம்.

உயர்சாதிப் பெண்ணொருத்தி லட்சுமி, அவள் சகோதரர்கள் போதன், சித்தன், சகோதரி நாகி போன்றோரைத் திட்டும் சூழல்.

1. "கழிவுகளைச் சுத்தம் செய்யும் தீண்டத்தகாதவர்களே! உங்கள் நிழல் கூட அழுக்கானது. மற்றவர்களின் உணவைப் பார்த்து ஏங்குவதை எப்போது நிறுத்தப் போகிறீர்கள்? பேராசையால் விஷமாகிவிட்ட கண்களால் பார்த்துக் கொண்டே இருப்பதை எப்போது நிறுத்துவீர்கள்? உங்கள் கண்கள் வீங்கி நேத்திரக் குழியிலிருந்தே வெளியே விழுந்து விடுவது போல இருக்கின்றன!' தன் மகனின் கையிலிருந்த இனிப்பைப் பிடுங்கிப் புழுதியில் எறிந்து 'அதை எடுத்துத் தின்னுங்கள்' என்று சொல்லி விட்டுப் பையனின் கையைப் பிடித்துக் கூட்டிச் சென்றாள். அவள் சொன்னது எதையும் கேட்காமல் என் தம்பி, தங்கைகள் புழுதியில் கிடந்த இனிப்பை எடுத்து மாற்றி மாற்றி ஒவ்வொருவராகச் சப்ப ஆரம்பித்தார்கள்" (பக்கம். 19)

மனிதர்களின் அடிப்படைத் தேவையான உணவைப் பெறும் வகையில் அவலப்படும் சூழலாக,

2. "வேணுகோபாலபுரம் கோயிலில் மாதம் ஒரு முறை அமாவாசை இரவில் தீண்டத்தகாதவர்களுக்கு ஒரு பெரிய விருந்து கிடைத்தது. அந்த ஒரு நாளில் சிலமணி நேரங்களுக்கு எங்கள் பசிக் கொடுமை தணிக்கப்பட்டது. எங்கள் வயிறுகள் குளிர்ந்தன. உயர் சாதியினர் சாப்பிட்ட எச்சில் இலைகளும், கோயில் பாத்திரங் களிலிருந்து மீந்து போன உணவு வகைகளும் கோயிலின் பின்புறச் சந்தில் கூடியிருந்த நூற்றுக்கணக்கான துப்புரவாளர்களிடம் வீசப்பட்டன" (பக்கம் 20) என்பது அமைகிறது.

லட்சுமியின் சகோதரன் சித்தன் தானே விரும்பிக் கிறித்துவனான சூழலில் கூறப்பட்டவை:

3. "எங்களைப் பார்த்து வெறுத்து ஒதுக்காதவர்கள் கிறித்துவர்கள் மட்டுமே. கிறித்துவக் கடவுள் முன் எல்லா மனிதர்களும் சமம் என்று அவர்கள் சொன்னார்கள்" (பக்கம் 48)

4. "சித்தனுக்குப் புதிய பெயர்! ஜோசப் சித்தேஸ்வரன். அந்தப் பெயரின் பெருமையையும் நேர்த்தியையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்தேன். அவனுக்கென்று தனிப்பட்ட பெயர் கிடைத்து விட்டது, எங்களைப் போலல்லாமல். தீண்டத்தகாதவர்களை, போதன், சொக்கன், குந்தன், குருதன் என்று விளையாட்டுப் பெயர்களால் தான்

அழைப்பார்கள். ஒரு தனிப்பட்ட பெயர் ஒருவனுக்கு எப்படியோ தனித்தன்மையையும் முழுமையையும் கொடுக்கிறது" (பக்கம். 50)

5. "அவர்கள் மத்தியில் சித்தன் இருப்பதைப் பார்த்ததுமே அவன் தன்னுடைய தீண்டாமையைத் துறந்துவிட்டு முழுமை பெற்று விட்டது எனக்குத் தெரிந்தது. அவனுடைய வாயோரங்களில் இருந்த மஞ்சள் நிறக் கொப்புளங்கள் மறைந்து விட்டன; அவனுடைய கண்கள் சுத்தமாக இருந்தன. அரைக்காற்சட்டையும், மேல்சட்டையும், பழுப்பு கான்வாஸ் காலணிகளும் அணிந்திருந்தான்." (பக்கம். 50)

இச்சூழல்களில் மதங்களை மறந்து விட்டு நோக்குவோமாயின், சக மனிதர்களின் சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டு மனிதக்கழிவுகளை அள்ளுவதற்கும், எச்சில் இலைகளில் உணவைத் தேடும் இழிவுக்கும் துப்புரவுப் பணியாளர் சமூகத்தை ஆளாக்கி மிருகத்தைப் போல அடிமையாக நடத்தும் உயர்சாதியினரிடம் மனிதநேயம் என்பது மருந்துக்கும் இல்லை என்பது தெரிய வருகின்றது.

ஆனால் மனிதனை மனிதனாக மதித்து, அவன் மனிதனாக வாழ வழி செய்யும் மத போதகர்களின் செயல்களில் மனிதநேயத்தைத் தரிசிக்க முடிகிறது.

மனித வாழ்க்கையை மையப்படுத்தி அதன் வளர்ச்சிக்காகச் செயல்படுவதே மனிதநேயம். A DOCTRINE, ATTITUDE OR WAY OF LIFE CENTERED ON HUMAN INTERESTS OR VALUES[2] எனக் கூறப்படுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

மனிதநேயம் கொண்ட மகத்தான பாத்திரப் படைப்புகள்

பியர் பாதிரியார்

"மத போதகர் என்று அவரை எல்லாரும் முதலில் அழைத்தாலும், கிறித்துவராகப் பிறந்து, கிறித்துவர்களின் கடவுளை வணங்கினாலும் அவர் மற்ற கிறித்துவர்களிலிருந்து வேறுபட்டவர் என்பதை நாங்கள் சீக்கிரமே புரிந்து கொண்டோம்" (ப. 55)

"அவருடைய தோலின் நிறம் வேறுபட்டதென்றோ, அவர் ஒரு வெளிநாட்டவர் என்றோ எங்களுக்குத் தோன்றியதாக நினைவில்லை" (ப. 69) என்ற கூற்றுகள் பியர் பாதிரியார், தீண்டத் தகாதவர்களை மதமாற்றம் போன்ற எந்த நிர்ப்பந்தத்திற்கும் ஆளாக்கவில்லை என்பதை உணர்த்துவதாக அமைகின்றன.

"அன்று முதல் பாதிரியார் எங்கள் குடியிருப்பிலேயே வீடு கட்டிக் கொண்டு வசிக்க ஆரம்பித்தார். பிறகு நாங்கள் இதைப் பற்றிப் பேசிய போதெல்லாம் காந்தண்ணா சொல்வார், 'ஏன் ஆச்சரியப் படுகிறீர்கள்? கடவுள் கோயிலை விட்டுப் போய்த் தீண்டத்தகாதவர் களுடன் வாழ்ந்து துப்புரவுப் பணியையும் செய்த கதைகளை யெல்லாம் நீங்கள் கேட்டதில்லையா? பாதிரியாரைப் பார்த்து நாம் ஏன் அதிசயிக்க வேண்டும்? நம்முடன் வாழ வந்து விட்ட கடவுளாகக் கூட அவர் இருக்கலாம்" (பக்கம் 67) என்றும்

"கடவுள் தான் பியர் பாதிரியார் உருவத்தில் இருக்கிறார் என்பதை மட்டும் நாங்கள் எப்போதும் மறக்கவில்லை. ஏனென்றால் மனிதர்களைச் செய்வதைப் போலக் கடவுளை மாசுபடுத்தி விட முடியாது. பியர் பாதிரியார் எங்களில் ஒருவராகவே வாழ்ந்தார். நாங்கள் நோய்வாய்ப்பட்டபோது சிகிச்சை செய்தார். அவர் தன் பழைய தோல்பையில் மருந்துக் கலவைகளும், ஊசிகளும், மாத்திரைகளும், களிம்புகளும் வைத்திருந்தார். கொப்புளங்களும் சீழ்வடியும் புண்களும், குளிர் காய்ச்சலும் கொண்ட குழந்தைகளை அவரிடம் எடுத்துச் சென்றோம். அவர் மருந்து கொடுத்தார்'' (பக். 68) என்றும்

"எங்களோடு உட்கார்ந்து, எங்கள் உணவைப் பகிர்ந்து கொண்டவர். எங்கள் வாழ்வில் பங்கெடுத்துக் கொண்டு ஒன்றாயிருந்தவர்" (ப. 69) என்றும்

உள்ள இக்கூற்றுகள் எந்தவிதப் பலனும் எதிர்பார்க்காமல் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்து, அவர்களின் நன்மைக்காகப் பாடுபட்ட பியர் பாதிரியாரின் மனிதநேயத்திற்குச் சான்று பகர்வனவாய் அமைந்துள்ளன.

பியர் பாதிரியார் மனிதர்களை மதத்தின் கண்கொண்டு பார்க்காமல் மனத்தின் கண் கொண்டு பார்த்தார். "பியர் பாதிரியாரும் பேசினார். 'பூசாரிகளுக்கும் உயர்சாதிக்காரர்களுக்கும் மட்டுமே கடவுள் சொந்தமில்லை. அவரைச் சிறைப்படுத்தக்கூடாது; எல்லாரும் அவர் முகத்தைப் பார்க்க வேண்டும், எல்லாரும் அவர் குழலின் இசையைக் கேட்க வேண்டும்'. அவர் பேசி முடித்தவுடன் ஒரு சேற்று உருண்டை பறந்து வந்து அவர் முகத்தைத் தாக்கி அங்கியின் மீது தெறித்தது'' (பக்கம். 138) என்ற பகுதி வேற்று மதத்தினரின் கடவுளையும் கடவுளாகவே பாவிக்கும் அவரின் மதநல்லிணக்க உணர்வையும் , சகமனிதன் வாழ்வில் உயர்வடைவதற்காக

ஏளனங்களையும், துன்பங்களையும், அவமானங்களையும் சகித்துக் கொள்ளும் மனிதநேய உணர்வையும் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

தீண்டத்தகாதவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்து, அவர்களின் துயரங்களுக்காகத் துக்கப்பட்டு, அவர்களின் இன்னல் கண்டு, "இவையெல்லாம் மாற்றியே தீர வேண்டிய கொடுமைகள். உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் அவற்றை மாற்றலாம். நம்பிக்கை எல்லாவற்றையும் சாத்தியமாக்கும்" (பக்கம். 79) என்று நம்பிக்கை யூட்டுகின்ற பாதிரியார் மனிதநேயம் கொண்ட மகத்தான பாத்திரப்படைப்பு என்றால் மிகையல்ல.

ஆசார்ய ஹரிஷ்சந்திரர்

இவர் மனிதநேயத்தோடு செயல்படுகின்ற மற்றோர் பாத்திரப்படைப்பு, உயர் சாதியைச் சேர்ந்த பிராமணரான காந்தியவாதியான ஆசார்ய ஹரிஷ் சந்திரரும் அவருடைய நண்பர்களும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உரிமைக்குரல் கொடுக்கிறார்கள். அவர்கள் வேணுகோபாலபுரத்தின் சாக்கடை களையும், அவற்றின் மண்ணில் - பூமியின் புண்கள் போன்ற குடிசைகள் நிறைந்த மண்ணில் - அம்மணக் குழந்தைகளையும் காண்கிறார்கள். கோயில் விருந்து நடைபெறும் தினத்தன்று, கோயிலின் பின்புறம் தீண்டத்தகாதவர்களுக்கு மீதமான உணவு தூக்கி எறியப்படுவதைக் காண்கிறார்கள். மனிதக் கழிவைத் தலையில் சுமக்கும் மக்களைப் பார்க்கிறார்கள்.

"இந்தக் கொடுமைகள் நம் பெயருக்கு ஒரு களங்கம். நாட்டிற்கு அவமானம். இவற்றை ஒழிக்க வேண்டும்" (பக்கம். 79) என்ற ஹரீஷின் ஆத்திர வார்த்தைகள் அவரின் மனிதநேய உணர்வைக் காட்டுகிறது.

வார்த்தைகளோடு நின்று விடாமல் செயலில் இறங்குகிறார் ஹரீஷ். தீண்டத்தகாதவர்களுக்குப் படிப்பறிவு தருகிறார்.

"தீண்டத்தகாதவர்களாகிய நாங்கள் எப்படிக் கோயிலுக்குள் நுழைய முடியும்? நாங்கள் துப்புரவாளர்கள் இல்லையா? தீண்டத்தகாதவர்கள் இல்லையா? கடவுளால் கட்டளையிடப்பட்ட விஷயங்களை மகாத்மாவாக இருந்தாலும் மாற்ற முடியுமா?" (பக்கம். 81) என்று அவர்கள் கேட்கும் போது, காலங்காலமாக அவர்கள் மனதில் ஊறிவிட்ட அடிமைத்தனத்தை மாற்ற ஆவேசமும், உணர்ச்சியுமாக அவர் போராட வேண்டியிருக்கிறது.

"முட்டாள்களே, முட்டாள்களே எப்போது உங்களுக்கு விடியும்? நீங்கள் இப்படிக் கீழ்நிலைக்குப் போனதற்கு யார் காரணம்? உங்களைப் பிணைத்திருந்த சங்கிலிகள் நொறுங்கிக் கீழே விழுந்தாலும் மீண்டும் அவற்றை எடுத்து ரோஜா மாலைகளைப் போல அணிந்து கொள்கிறீர்கள். அவை இல்லாமல் நீங்கள் வாழ முடியாது போலிருக்கிறதே" (ப. 82) என்ற ஹரீஷின் வார்த்தைகளில் அவர், அவர்கள் மீது கொண்ட பரிவும் பாசமும் நேசமும் வெளிப்படுகிறது.

"நான் செய்யும் சேவைக்குத் தகுதியானவனாக இருக்க வேண்டுமென்றால் துப்புரவுப் பணியையும் நானே செய்ய வேண்டும்" (பக்கம். 83) என்கிறார்.

தீண்டத்தகாதவர்களுக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் மறுக்கப்படுகின்றது. ஒரு தவறை இன்னொரு தவறால் சரி செய்ய முடியாது. அநீதியை அநீதியால் அழிக்க முடியாது; பாவத்தைப் பாவத்தால் வெல்ல முடியாது. இந்த அநீதிகளையும் தவறுகளையும் உண்ணாநோன்பாலும் சகிப்புத்தன்மையாலும் - அவை மரணத்திலேயே முடிந்தாலும் கூட - மட்டுமே சரி செய்ய முடியும் என்ற கருத்துக் கொண்ட காந்தியவாதிகளான ஹரீஷ், கோவிந்தன், ராமகிருஷ்ணன் ஆகியோர் உண்ணாவிரதம் இருக்க முற்படுவதும் அதன் விளைவாய் அடியும் உதையும்படுவதும் அவர்களின் அப்பழுக்கற்ற மனிதநேயத்திற்குச் சான்றுகள்.

ஹரீஷின் தோழியான ராதா என்ற பெண்ணும் மனிதநேயத்துடன் செயல்படுபவளாகக் காட்டப்படுகிறாள். ஹரீஷின் செயல்களுக்குத் துணை நிற்கும் அவள் கைது செய்து சிறையிலடைக்கப்படுகிறாள்.

இறைவனின் இருப்பிடம்

கடவுளின் குழந்தைகள் என மகாத்மாவால் அழைக்கப்பட்ட மக்களுடன் தான் இறைவன் வாழ்ந்து கொண்ருக்கிறார் என்பதைக் காந்தண்ணா எனும் பாத்திரம் கூறும் கதையின் மூலம் விளக்குகிறார் ஆசிரியர். அக்கதையை எண்ணிப் பார்க்கும் லட்சுமி, தெய்வமான வேணுகோபாலன், தீண்டத்தகாதோருடன் இருக்கிறான். அவன் சிலை மட்டுமே கோயிலில் இருப்பதை உணராத அர்ச்சகர்கள், மந்திர உச்சாடனத்துடன் அச்சிலைக்குப் பூஜை செய்கிறார்கள் என்கிறாள். "நீ தான் பாவிகளைக் காப்பவன் நீதான் திக்கற்றவர்களின் துணை, ஏழைகளின் செல்வம், வலிமையற்றவர்களின் ஆற்றல். நற்குணம், இரக்கம், நீதி, பரிவு, அன்பு ஆகியவற்றின் ஊற்று. நீ யாரையும்

நிராகரிப்பதில்லை. மந்திரங்கள் தொடர மணிகள் ஒலிக்க அவர்கள் சிலையைப் பாலாலும், நீராலும் குளிப்பாட்டிப் பட்டாடை உடுத்துகிறார்கள்; அதை மலர்களாலும் ஆபரணங்களாலும் அலங்கரிக்கிறார்கள்; அதற்கு உணவு படைக்கிறார்கள்; பணம், தங்கம், வெள்ளி, முத்துக்கள், வைரங்கள் ஆகியவற்றைக் காணிக்கை யாக்குகிறார்கள். சமஸ்கிருத மந்திரங்களைச் சொல்லி இரவில் அதைத் தாலாட்டித் தூங்க வைக்கிறார்கள்." (ப. 150) என்று நினைக்கிறாள். அவர்களின் இதயம் அன்பையும் இரக்கத்தையும் சுரக்காத போது அர்ச்சனைகளும் வீண், அவர்கள் கற்ற வேதமும் வீணே. இறைவனின் இருப்பிடம் மனிதமனமே. ஆதலின் மனிதர்களை நேசிக்க வேண்டும் என்ற தன் அவாவையே லட்சுமியின் எண்ண ஓட்டமாக வெளிப்படுத்துகிறார் ஆசிரியர் எனலாம்.

நிறைவு

பிரதிபலன் எதிர்பார்க்காமல் தியாகம் செய்தல், அன்பு, கருணை, இரக்கம், பரிவு கொண்டு பிறர் துன்பங்களைப் போக்குதல் ஆகிய அனைத்துக் கூறுகளுமே மனிதநேயத்தின் பாற்படுகின்றன.

அதே வேளையில், எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் செய்யப்படினும் மனிதனை மனிதனாக வாழவைக்கும் மதபோதகர்களின் செயல்களும் இங்கு மனிதநேயத்தின்பால் வைக்கப்படுகின்றன.

மனிதநேயமற்ற செயலான கிட்டு உயிருடன் எரிக்கப்படுவது தொடங்கி, தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படும் மக்கள் சந்திக்கின்ற ஒவ்வொரு மனிதநேயமற்ற சூழலும் படிப்போரின் இதயத்தை உலுக்குவதுடன், மனிதநேயத்தை விதைக்கும் களனாகவும் அமைகின்றன.

குறிப்புகள்

1. குறள் 315, திருக்குறள், மணிவாசகர் நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2000.
2. WEBSTER'S Seventh New Collegiate Dictionary Page: 404.

******

சு. சமுத்திரம் நாவலில் மனிதநேயம் (மூட்டம்)

சு. கௌசல்யா
ஆய்வாளர்

பழங்காலத்தில் காப்பியங்கள் பெற்றிருந்த இடத்தைத் தற்காலத்தில் நாவல் இலக்கியம் பெற்றிருக்கின்றது. படிக்கத் தெரிந்த அனைத்துத் தரப்பு மக்களும் விரும்பி வாசிக்கும் விதமாக நாவல்கள் இன்றையக் காலக்கட்டத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நாவல்கள், இன்றைய சமுதாயம், சமுதாயச் சிக்கல், உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களிடையே நிலவுகிற பொய்மைகள், போலித்தனங்கள், அதிகார வர்க்கத்தின் பித்தலாட்டங்கள், மனிதநேயம், உரிமை, நேர்மை ஆகியவற்றிற்குக் குரல் கொடுக்கும் விதமாகவும், அன்றாடம் தோன்றுகின்ற சிக்கல்களைப் படம் பிடித்துக் காட்டும் விதமாகவும் அமைகின்றன. இவ்வகையில் சு. சமுத்திரம் நாவல்கள் மேற்கண்ட பண்புகளைக் காட்டும் விதமாகவே பெரும்பாலும் அமைந்திருக்கின்றன.

மனிதநேயம்:

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, 'மனிதநேயம்' என்பதற்கு "மனிதன் மனிதனை மதித்துச் செலுத்தும் அன்பு"[1] என விளக்கம் அளிக்கிறது.

மனித நேயம் என்பதை மனிதம் + நேயம் எனலாம். மனிதம் எனும் போது மனிதத்தன்மை என்பது மட்டுமல்லாமல், மற்றொருவருக்காக நாம் காட்டுகின்ற கருணையையும் அனுதாபத்தையும் கொள்ளலாம். நேயம் என்றால் அன்பு. உலக உயிர்கள் அனைத்தையும் - மனிதர்களை மட்டுமல்லாது பிற உயிரினங்களையும் தன்னில் ஒரு பகுதியாகவும் தானாகவும் காண்பது அன்பாகும்.

மானிடர் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துத் தம்மைப் போன்று பிறரையும் மதித்து நடத்தல் மட்டுமல்லாது குறுகிய உணர்வுகளைக் கடந்து, மனித மேம்பாட்டிற்கான காரியங்களைச் செய்வது மனிதநேயம். அதோடு மட்டுமல்லாது மொழி, இனம், சாதி, சமயம் எல்லாவற்றையும் கடந்து நிற்க வேண்டும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று மனிதநேயத்துடன் உலக சகோதரத்துவத்தின் முக்கியத்துவத்தைப் பாடிய முதல் கவிஞர்

கணியன் பூங்குன்றனார் எனலாம். பிற உயிர்களுக்குத் தொண்டு செய்வதை ஒரு வரமாக வேண்டிப் பாடினார் வள்ளலார். இவ்வாறு ஒவ்வொரு காலக்கட்டத்திலும் என்றுமுள மானிட சமுதாயத்தில் எல்லோராலும் எப்போதும் விரும்பப்படுகிற, வரவேற்கப்படுகிற இலக்காக மனிதநேயம் விளங்குகிறது.

பசியெடுத்தவனுக்கு இரக்கம் காட்டுவது மட்டுமல்ல மனிதநேயம். மக்கள் தம்மை வருத்தும் கொடுமைகள், ஒடுக்கு முறைகள், அடிமைத்தனம், சுரண்டல் ஆகியவற்றிலிருந்து மீண்டு வெளிச்சத்தை நோக்கி வீறுடன் கிளர்ந்தெழும் போதெல்லாம், அதன்பால் பரிவுகாட்டி, அன்பு பாவித்துத் துணை நிற்பது - ஊக்குவிப்பது மனிதநேயம்.[2]

சு. சமுத்திரமும் மனிதநேயமும்:

தன்காலத்தில் தன்கண் முன்னால் நடக்கிற அவலங்களை, அநீதிகளைக் கருப்பொருள் ஆக்குவதுதான் ஒரு சமூகப் பொறுப்புள்ள படைப்பாளியின் கடமையாக இருக்கும். அமுக்கப்படும் இயல்பான மனிதநேய உணர்வுகள் விடுபட்டுக் கிளம்பவே செய்யும். இவ்விதம் படைக்கப்படும் படைப்புகள் சுயவக்கிரங்களோ, சுய குழப்பங்களோ இல்லாமல் உண்மையான படைப்புகளாக விளங்கும். சு. சமுத்திரத்தின் படைப்புகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. மூட்டம் என்ற நாவலைப் பற்றி இரா. கதிரேசன் அவர்கள் கூறும் போது, "பத்திரிகையில் வந்த செய்திகள் நமக்கு அவை செய்திகள். சு. சமுத்திரத்திற்கோ அவற்றில் இலக்கியம் தட்டுப்பட்டிருக்கிறது. இதன் மூலம் மனித குலத்தின் மீது பாசமிக்க ஓர் உள்ளத்தை வாசகர்கள் கண்டு கொள்வார்கள்[3] என்கிறார். இதில் சு. சமுத்திரத்தின் மனிதநேயம் தெரிகிறது. சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டும் இவருடைய படைப்புகள் பல மனிதநேயத்துடன் சமூகச் சிக்கல்களை அணுகி அவற்றிற்குத் தீர்வு காண முயல்கின்றன. சான்றுகள் சில:

1. பாலைப்புறா - எயிட்ஸ் நோயாளிகள்
2. வாடாமல்லி - அலிகள்
3. தாழம்பூ - சேரி வாழ்க்கை
4. இல்லந்தோறும் இதயங்கள் - தொழுநோயாளிகள்
5. வேரில் பழுத்த பலா - துணிவுடன் அலுவலக அவலங்களை எதிர்த்தல்
6. மூட்டம் - மதப் போராட்டம்

'மூட்டம்' காட்டும் மனிதநேயம்:

ஒருமைப்பாடு, மதச்சார்பின்மைக்கான ஒரு சிறிய முயற்சி என்ற முத்திரையோடு வெளிவந்த நாவல் 'மூட்டம்'. இந்நாவல் பாபர் மசூதியை இடித்ததால் ஏற்பட்ட இந்து - முஸ்லீம் கலவரத்தை மையமாக வைத்து மனிதநேயத்தை வெளிப்படுத்தக் கூடிய விதமாக அமைந்துள்ளது.

சாதி, மதம் கடந்த பொதுமை நோக்குடையது மனிதநேயம் என்பதை இராமலிங்கம் - திவான் முகமது, முத்துக்குமார் - காதர் பாட்சா ஆகியோர் மூலமாக ஆசிரியர் காட்டுகிறார்.

மதம் கடந்த உறவு:

மசூதியின் மேற்கூரையைக் கட்டும் இந்துவான இராமலிங்கத்தை, மேற்பார்வை பார்க்கும் முஸ்லீமான திவான் முகமது, அவன் தனக்குத் தம்பியாகப் பிறக்கவில்லை என்றாலும் தன் மதத்தைச் சார்ந்தவன் இல்லை என்ற போதிலும், அவனைத் தன் உடன்பிறந்த தம்பியாகப் பாவிப்பதைக் காண முடிகிறது.[4] மதம், சாதி இவற்றைக் கடந்து, சகோதர மனப்பான்மையோடு அன்பு செலுத்தும் மனிதநேயத்தை இதில் காணலாம்.

துன்பத்தில் பங்கெடுத்தல்:

பாபர் மசூதி இடிக்கப்பட்ட செய்தியை முஸ்லீம் இளைஞர்கள் அனைவரிடமும் தெரிவித்தவுடன் முஸ்லீம் ஆண்கள் பெண்கள் மட்டுமல்லாது, இந்துப் பெண்களும் அரற்றுகின்றனர்; வருந்துகின்றனர்.

'பாழாப் போற பயலுக. மசூதி இருந்தா இருந்துட்டுப் போகட்டுமே, இவங்களுக்கு என்ன வந்துட்டு? இடிச்சவங்க கையில் கரையான் அரிக்க. வாயில் புத்து வர. மாரியாத்தா! இடிச்ச பயலுவள இடிஞ்சு போக வையி தாயி. அடக்கடவுளே........ இப்படியா ஒரு மசூதியை இடிப்பானுங்க?"[5] வேற்று மதத்தைச் சார்ந்தவங்களாக இருந்தாலும், இடித்தவர்கள் தங்கள் மதத்தைச் சார்ந்தவர்கள் என அறிந்தும், அவர்களைத் தண்டிக்கும்படி ஆண்டவனை வேண்டுவதில் இருந்து மனக்குமுறலில் இருந்து அப்பெண்களின் உடன் உறைவோரின் துன்பத்தைத் தனதாக்கும் மனிதநேயத்தைக் காணமுடிகிறது.

கல்லூரியில் ஆசிரியர் பணியிலிருக்கும் சம்சுதீன், மசூதி இடிக்கப்பட்ட வேதனையில் இருக்கும் போது, அவனுடன்

பணிபுரியும் மற்ற ஆசிரியர்கள், (இந்துக்கள்) அவன் காதலி உட்பட அனைவரும் அவனை எதிரியாக நினைத்து அவனின் மனவேதனை புரியாமல் அவனைக் கேலி செய்யும் விதமாக, "இதுவரைக்கும் வளையல் போட்டிருந்த எங்க ஆட்கள் ஒரு சேஞ்சுக்காக மண்வெட்டியையும், இரும்புக் கம்பியையும் எடுத்தது பொறுக்கலியா?"[6] எனக் கேட்கும் போது, சக ஆசிரியரான முத்துக்குமாரால் தாள முடியாமல்,

"அது என்ன சார் எங்க ஆட்கள்? நாம எல்லோரும் ஒரே ஆட்கள் தான்![7] என்று கூறுவதோடு சம்சுதீனுக்கு ஆதரவாகவும் இருக்கிறான்.

இங்குச் சக ஆசிரியர்கள் கேலி செய்யும் மனித நேயமற்ற செயலை விரும்பாமல், முத்துக்குமார் சம்சுதீனுக்கு ஆதரவு காட்டுவதிலிருந்து அவனுடைய மனிதநேயத்தைக் காண முடிகிறது.

ஒருவருக்கொருவர் துணைநிற்றல்:

ஊருக்குள் கலவரம் ஏற்பட்டு முஸ்லீம்கள், இந்துக்கள் வாழும் பகுதிக்குள் நுழைந்து, பெண்கள், ஆண்கள், குழந்தைகள் எனப் பாரபட்சமோ, இரக்கமோ இல்லாமல் அடிக்கின்றனர். இதைக் கண்ட முத்துக்குமார், "இதோ உங்ககிட்ட எங்களை ஒப்படைச்சிட்டோம், சிறுபான்மை பெரும்பான்மையைக் காக்க வேண்டியது முறை...... இதே மாரியம்மன் கோயிலுக்கு நான் 'வரி' கொடுக்கல. கோவில் விசேஷம் நடக்கும் போது டவுனுக்குப் போயிடுவேன். ஆனால் இந்தக் கோவில் விசேஷத்திற்கு அஜீஸ் பாய் நன்கொடை கொடுத்திருக்கிறார். நூருல்லா பாய் பத்துத் தேங்காய்களைத் தந்திருக்கிறார்"[8] என்கிறான்.

ஆசிரியர் இங்கு இயல்பிலேயே எந்த ஒரு மனிதனும் - எந்த ஒரு மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் - அவன் மற்ற உயிர்களிடம் அன்பு செலுத்தக் கூடியவனாகவே இருக்கிறான் என்பதையும் அன்பு எங்கே இருக்கிறதோ அங்கே சாதி, மதம், மொழி கடந்த மனிதநேயமும் இருக்கும் என்பதையும் காட்டுகிறார்.

இந்து, முஸ்லீம் போராட்டத்தில் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டாலும், இந்துக்கள் முஸ்லீம்களையும், முஸ்லீம்கள் இந்துக்களையும் காப்பதைப் பல இடங்களில் காண முடிகிறது. இப்போராட்டத்தில் காதர் பாட்சா, முத்துக்குமாரை அடித்துக் கொன்றுவிடும் எண்ணத்தோடு வரும் முஸ்லீம்களிடம் இருந்து அவனைக் காக்கும் விதமாக, "யாராவது இவனை வெட்டணுமின்னா

வெட்டுங்க! அப்படி வெட்டினால் அவன் தலையோட என் தலையும் சேர்ந்து தான் விழும்"[9] என்கிறார். இவ்விடத்தில் தன் உயிரைக் கூடப் பொருட்படுத்தாது ஒரு மனிதனைக் காக்க வேண்டும் என்ற மனிதநேயத்தைக் காண முடிகிறது.

தன்னலம் மறந்து பிறர்நலம் பேணல்:

கலவரத்தின் போது அடிபட்டுத், தப்பி ஓடிவந்த மாரியப்பன், அடைக்கலமாக அமீர் வீட்டை அடைகிறான். அமீரின் மகளான பாத்திமா அவனுக்கு முதலுதவி அளித்துக் காப்பாற்றி, இருக்க இடமும் உண்ண உணவும் கொடுத்து ஆதரிக்கிறாள். தண்ணீர், உணவு, பாதுகாப்பு எதுவும் கிடைக்காமல் அவதிப்படும் முஸ்லீம் மக்களைப் பார்த்து, அவர்களின் துன்பத்தைக் காணச் சகிக்காமல், வெளியே சென்றால் முஸ்லீம்கள் அடித்துக் கொன்று விடும் அபாயம் அறிந்தும் மாரியப்பன், தானே அடைக்கலமாக முஸ்லீமிடம் இருக்கிறோம் என்பதை மறந்து பாத்திமாவிடம், "இங்கே இருந்து தப்பிச்சு நான் உயிரோட இருக்கணும்னு ஆசைப்படறது மாதிரி பேசுறியே?......... அப்படிப்பட்ட எண்ணமே எனக்கு இல்ல!— இந்த ஊரையே இப்படி கைகால் வெட்டினது மாதிரி வெட்டிப் போட்ட பயல்கள்ல கைக்கு அகப்படறவன ஒரே வெட்டா வெட்டணு முன்னுதா நான் வெளியே போக நினைக்கேன்"[10] எனக் கூறுகிறான். முஸ்லீம் மக்கள் படும் துன்பத்தைக் காண முடியாமல், தன் உயிரையே துச்சமென மதிக்கும் மாரியப்பனின் மனிதநேயத்தை, பிற உயிர்களின் துன்பத்தைக் காணச்சகிக்காத உயர்ந்த பண்பை அறிய முடிகிறது.

அபிராமி என்ற இந்துப் பெண் கோயிலுக்குச் சென்று கொண்டிருக்கும் போது - தனியே சென்றவளை - முஸ்லீம் இளைஞர்கள் தாக்க முயல்கின்றனர். அப்போது முஸ்லீம் பெண்கள் பலர் அங்கே ஓடோடி வந்து அப்பெண்ணைக் காப்பாற்றியதோடு அல்லாமல், காரின் அருகிலிருக்கும் இந்து இளைஞர்களைப் பார்த்து, "நீங்கள்ளாம் ஆம்பிள்ளைகளா? ஒரு பெண்ணைத் தனியாய் அனுப்பிட்டு குத்துக்கல்லு மாதிரி நிக்கீங்களே? மனுசங்களாம் மனுசங்க!"[11] என ஏசி விட்டு, அவளைப் பாதுகாப்பாகக் காரில் ஏற்றி அனுப்புகின்றனர். இந்துக்களால் தங்களுடைய சொந்தங்களைக் கலவரத்தின் போது இழந்து நின்றிருக்கும் வேளையில் கூட, ஓர் இந்துப்பெண்ணைக் காப்பாற்றித் தங்களின் மனிதநேயத்தைக் காட்டும் விதத்தைக் காணலாம்.

மனிதநேய உணர்வின் வெளிப்பாடு:

கலவரம் உச்ச நிலையை அடைந்து, இந்து - முஸ்லீம் இரு தரப்பிலும் அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்ட போதிலும் இந்து

முஸ்லீமிடமும் முஸ்லீம் இந்துவிடமும் பல இடங்களில், பல விதங்களில் தங்களின் மனிதநேயத்தைக் காட்டுவதாகக் காண முடிகிறது.

முத்துக்குமாரின் தந்தை துரைசாமி, கலவரத்தால் ஒற்றுமையை இழந்த, இந்து முஸ்லீம்களைக் கண்டு, அழுது புலம்பிச் சாப்பிட மறுக்கிறார். அவரின் கையைப் பிடித்து அழுத முத்துக்குமார் அமீரைப் பார்த்து, "எங்கப்பா சர்க்கரை நோய்க்காரருன்னு உங்களுக்குத் தெரியுமே! வீட்டுல அவருக்குன்னு சப்பாத்தி செய்து வச்சிருக்கோம். சாப்பிடச் சொன்னால் எங்க ஊர்க்காரன் ஒருத்தன் பட்டினி கிடந்தால் கூட நான் சாப்பிட மாட்டேன்னு அடம் பிடிக்கார். அவர வீட்டுக்குக் கூட்டிப் போய் ஒரு சப்பாத்தியையாவது சாப்பிடச் சொல்லுங்க காக்கா"[12] எனும் போது 70 வயது முதியவரான துரைசாமியின் மனிதநேயம் வெளிப்படுகிறது.

போலீஸ் துப்பாக்கிச் சூடு நடத்தி, கலவரத்தை அடக்க, அதில் இந்து - முஸ்லீம் எனப் பாகுபாடு இன்றிப் பலரும் இறந்து கிடக்கின்றனர். அப்போது துரைசாமி தத்தித்தத்தி வந்து அமீர் மற்றும் முத்துக்குமாரின் சடலங்களைப் பார்த்து வாய் மட்டும் துடிக்க, செய்வது அறியாது நிற்கிறார். அருகில் அமீரின் உடல் மேல் கிடந்த அமீருடைய மனைவி சம்ரத் பேகத்தின் கையைத் தொட்டு ஆறுதல்படுத்த முயலுகிறார். அவளோ 'காக்கா! காக்கா!' என அவரின் கால்களைக் கட்டிக் கொண்டு அழுகிறாள்.[13] இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருபக்கம் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு இறந்தாலும், அந்த இரு இன மக்களிடையே - இரத்த பந்தமே இல்லாத மக்களிடையே - ஒரு அன்பு இருக்கத்தான் செய்கிறது. இங்குத் தன் கணவனை இழந்த சம்ரத் பேகம், அந்நிலையிலும் ஓர் இந்துவைத்தான் அழைத்து ஆறுதல் தேடுகிறாள். அதுபோல், தன் மகன் இறந்து கிடைப்பதைக் கூடப் பொருட்படுத்தாமல் தன்னுடைய தள்ளாத வயதிலும் மற்றொருவருக்கு ஆறுதல் கூறும் துரைசாமியின் மனிதநேயத்தைக் காண முடிகிறது.

பாத்திமா தன் தந்தை அமீரின் உடலின் மீது படுத்து அழுது கொண்டிருக்கும் போது, அங்கு வந்த மாரியப்பன், 'அமீர்பாய்! என்னைப் பெறாம பெற்ற அப்பனே!'[14] எனப் பெருங்குரலெடுத்து அழுகிறான். அதைக் கண்ட பாத்திமாவும் அவன் மேல் சாய்கிறாள். இங்கு ஆசிரியர், மொழி, மதம் கடந்த அன்பை - மனிதநேயத்தை - வெளிப்படுத்துகிறார்.

சு. சமுத்திரம் பார்வையில் மனிதநேயம்:

மேற்கூறிய நிகழ்வுகளிலிருந்து சு. சமுத்திரத்தின் இந்தப் படைப்பில்,

1. மனிதனுக்கு இயல்பிலேயே மனித நேயம் உண்டு.

2. ஆனால், பலர் சுயநலத்தின் பொருட்டும், மொழி, மதம், இனம் ஆகியவற்றில் அதிகப் பற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலும் மனிதநேயமற்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்.

3. எவ்விதத் துன்பங்களும் அவமானங்களும் ஏற்பட்டாலும் மனிதநேயப் பண்பிலிருந்து மனிதன் தன்னிலையை இழக்கக்கூடாது - மனித நேயமுடையவர்கள் இழக்கவும் மாட்டார்கள் என்ற தன் எண்ணத்தைக் காட்டுகிறார் ஆசிரியர்.

மதப்போராட்டத்திற்கு சு. சமுத்திரம் தரும் தீர்வு:

கலவரத்தைக் காணச் சகிக்காமல், காதர்பாட்சா தன் நண்பன் முத்துக்குமாரிடம் இந்தப் போராட்டத்தை அடக்க ஒரே வழி தான் இருக்கிறது என்றும், இந்துவும் முஸ்லீமும் திருமணம் செய்து கொண்டால் தான் இதற்கு முற்றுப்புள்ளி கிடைக்கும் என்று கூறுவதாக அமைத்திருக்கிறார். இதிலிருந்து மதக்கலவரத்தால் இரு மதத்தினரும் அடித்துக் கொண்டு இறப்பதைக் காண இயலாத ஆசிரியர் கலப்புத் திருமணத்தின் வழி மனிதநேய மலர்ச்சிக்கான தீர்வைச் சுட்டுகிறார்.

சாதி, மதம், மொழி இவற்றையெல்லாம் கடந்த மனிதநேயம் சமுதாயத்தில் இருக்கிறது; இருக்க வேண்டும் என்பதையும் ஆசிரியர் தன் படைப்பின் வழி வெளிப்படுத்துகிறார்.

குறிப்புகள்

1. க்ரியாவின் தமிழ் அகராதி - ப. 820.
2. தற்காலப் படைப்பிலக்கியத்தில் மத நல்லிணக்கமும் மனிதநேயமும், தி. தயானந்தன் பிரான்சிஸ், ப. 90.
3. முட்டம், சு. சமுத்திரம், அன்னம் (பி) லிட், சிவகங்கை, ப. 2.
4. மேலது - ப. 13.
5. மேலது - ப. 20, 21.
6. மேலது - ப. 45.
7. மேலது - ப. 72.
8. மேலது - ப. 73.
9. மேலது - பக். 85, 86.
10. மேலது - ப. 103.
11. மேலது - ப. 115.
12. மேலது - ப. 118.
13. மேலது - பக். 129, 130.
14. மேலது - ப. 130.

******

"நள்ளிரவில் சுதந்திரம்" காட்டும் மனிதநேயம்

முனைவர் தா. ரெங்கநாதன்
இணைப் பேராசிரியர்

மனிதநேயம் என்ற சொல் தற்காலத் தமிழில் அதிகமான பயன்பாட்டில் இருந்து வருகிறது. சங்க இலக்கியங்களில் மனித நேயம் என்ற சொல் பயன்பாட்டில் இல்லாதபோதும், அது தொடர்பானவற்றைச் சங்க இலக்கியங்களும், அற இலக்கியங்களும் வலியுறுத்தி வந்துள்ளன.

மனித நேயம் என்ற சொல் இத்தாலிய மொழியிலுள்ள humanista என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது. (Encyclopedia of Americana 1970. Vol. 14: P. 553). இக்கருத்து கிரேக்கர்களின் இலக்கியம் போலப் பழமையானது. இது உயிரினங்களில் மேன்மைமிக்க மனிதனுடன் இணைந்துள்ள உண்மையும் உரிமையுமாகும். பித்தகோரஸ் என்ற தத்துவ மேதை Man is a measure of all things என்று குறிப்பிட்டார். இந்தப் பழமையான பண்பாடு பைஸாந்தியம் வழியாகவும், அரபிக்கள் வழியாகவும் ஸ்பெயின் நாட்டில் பரவியது. இது மேற்கு நாடுகளின் தேவாலயங்கள் வழியாகவும் பரவியது. ஆனால் இது 12-ஆம் நூற்றாண்டில்தான் மேலைநாடுகளில் வேரூன்றியது. ஆனால் அதற்கும் முன்னரே இந்திய நாட்டுச் சமயங்கள் மனிதநேயத்தை முன்னிலைப்படுத்தியுள்ளன.

மனித நேயமும் அன்பும் ஒன்றா? மனிதநேயத்தில் அன்பும் உள்ளது. அன்பு மட்டுமே மனிதநேயமாகாது. தொடர்பற்ற மனிதர்கள் மீது காட்டப்படும் அன்பு, பரிவு, இரக்கம் மனிதநேயமாகிறது. Humanism, the attitude of the mind which attaches primary importance to man and to his faculties, affairs, temporal aspirations - and well being (Encylopaedia of Britanica, 1972. Vol. II, p. 825). அப்படியானால் நாய், பூனை, ஆடு, மாடுகள் மீது காட்டப்படுவது என்ன? அது என்ன நேயம்? இதற்கும் தொடர்பற்ற மனிதர்கள் மீது காட்டப்படும் நேயத்திற்கும் வேறுபாடு உள்ளதா? ஆம்.

நாய் மீது அல்லது பிற விலங்கினம் மீது அன்பு காட்டுவது சில பயன்களை எதிர்நோக்கியது. நாய் நன்றி காட்டும். வீட்டில் திருடனை நுழைய விடாது. பசு பால் தரும். ஆடு உணவாகப்

பயன்படுகிறது. ஆனால் தொடர்பற்ற மனிதர்களிடம் இதனை எதிர்பார்க்கவியலாது. காரின் முன் இருக்கையில் நாயைப் பத்திரமாக அழைத்துச் செல்லும் ஒருவர், தொடர்பற்ற மனிதரை அக்காரில் அழைத்துச் செல்வதில்லை. விபத்துக்குள்ளானவரைக் கூட அப்படியே போட்டு விட்டு மறைந்து விடும் வண்டியோட்டிகள்தான் அதிகரித்துக் கொண்டிருக்கின்றனர்.

கிரேக்க நாகரிகக் காலத்திலேயே மனிதநேயம் தத்துவமாக உருவாகியது. மார்க்கசு ஆரேலியசு (Marcus Aurelius) தமக்குத் துன்பம் செய்பவர் மீதும் அன்பு செலுத்தும்படி கூறியது, எபிகியூரியசு (Epicureus) மனிதர்களை மற்றவர்கட்கு உதவி செய்து வாழும்படி அறிவுறுத்தியதும் இக்கோட்பாட்டினடிப்படையிலாகும் (வாழ்வியல் களஞ்சியம், தொகுதி - 13, 1994: 591).

அறிவியல் வளர்ச்சியும் இக்கோட்பாட்டிற்கு உதவியது. மிகக் கடினமாகச் செய்யும் வேலைகள் எளிமையாக்கப்பட்டன. மருத்துவத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி கூட மனித இனத்தின் துன்பத்தைப் போக்கி மனித நேயத்திற்கு உதவியாக உள்ளது. இன்றையத் தினம் மனிதஇனம் மனிதநேயம் நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கிறது. செஞ்சிலுவைச் சங்கம் மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்டுதான் செயலாற்றி வருகிறது. மனிதநேயம் மிக்கோர் உலகில் அடிமைத்தனம் ஒழியவும், கறுப்பு - வெள்ளை இன வேறுபாடு ஒழியவும், தீண்டாமை மறையவும் பாடுபட்டு வருகின்றனர். இக்கட்டுரையில் நள்ளிரவில் சுதந்திரம் என்ற நூலில் காணும் மனிதநேயப் பண்புகளைக் காணலாம்.

நள்ளிரவில் சுதந்திரம் என்ற மூல நூல் ஆங்கிலத்தில் 1975இல் வெளிவந்தது. பின்னர் 1997 இல் புதிய பதிப்பு வெளியிடப்பட்டது. இது லேரி காலின்ஸ், டொமினிக் லேப்பியர் என்ற இரு ஆங்கில, பிரெஞ்சு எழுத்தாளர்களின் சிறந்த படைப்பு. எனவே, இது இந்திய சுதந்திரப் பொன்விழா கொண்டாட்டங்களின் போது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இதன் மொழிபெயர்ப்பாளர்கள் வி.என். ராகவன், மயிலை பாலு ஆகியோர்.

இந்நூல் விடுதலை பெற்ற இந்தியா உருவான பின்னும், உருவாவதற்கு முன்னும் நடந்த நிகழ்வுகளைக் கொண்டு முன்னுரை, முடிவுரை நீங்கலாக 20 தலைப்புகளைக் கொண்டுள்ளது. மவுண்ட் பேட்டன் வைஸ்ராயாக இருந்த போது விடுதலையை விரைவுபடுத்த ஆற்றிய பணிகள், அக்கால அரசியல், காந்தி, நேரு, ஜின்னா, வல்லபாய் படேல் போன்றோர்களை முன்னிறுத்தியுள்ளது. இந்நூல்

எழுதுவதற்காக இந்நூலாசிரியர்கள் மூன்றாண்டுகள் பணியாற்றியுள்ளார்கள். களப்பணி மூலம் முக்கியமானவர்களை நேரில் பேட்டி கண்டு, தொடர்புடைய இடங்களுக்கு நேரில் சென்றுள்ளனர். இந்நூலாசிரியர்கள் ஏறத்தாழ 500 பேரை நேரில் சந்தித்துத் தகவல் சேகரித்துள்ளார்கள். கைபர் கணவாய் முதல் சென்னையிலுள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டை, கல்கத்தாவின் குடிசைப்பகுதி முதல் சஸ்ஸெக்ஸ் கென்ட் ஆகியவற்றின் குக்கிராமங்கள் வரை பயணம் செய்துள்ளனர். இந்தியாவின் கடைசி வைஸ்ராயின் பேட்டி மட்டும் தட்டச்சில் 600 பக்கங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. விடுதலைக்குப் பின்னர் பிறந்தவர்களுக்கு விடுதலைப் போராட்ட கால இந்தியா பற்றியும் விடுதலைக்குப் பின்னர் நிகழ்ந்த நிகழ்வுகளையும் அறிந்து கொள்ள உதவும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு தலைவர்களும் மனிதநேயம் மிக்கவர்களாகவே காட்டப்பட்டுள்ளனர். இருப்பினும் பக்க வரையறை காரணமாக இந்தியாவின் கடைசி வைஸ்ராய் மவுண்ட் பேட்டனின் மனிதநேயமும் ஆங்கிலேயே நாட்டில் சட்டம் படித்து இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட காந்தியின் மனிதநேயமும் குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

மவுண்ட் பேட்டனின் மனிதநேயம்

மவுண்ட் பேட்டன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். கடமை தவறாத கப்பற்படைத் தளபதி. மிகவும் திறமை வாய்ந்தவர். மவுண்ட் பேட்டனின் மனஉறுதிக்கு எடுத்துக்காட்டாக, கெல்லி கப்பல் தலைவராக இருந்த போது நடைபெற்ற நிகழ்வைக் குறிப்பிடலாம். இக்கப்பல் எதிரிகளின் குண்டு வீச்சில் பழுது பட்ட போதும், கப்பலை விட்டுத் தப்பிச் செல்லாது, பணியாளர்களுடன் இருந்து அதனைக் கரைக்குக் கொண்டு வந்தார். ஓராண்டுக்குப் பின்னர் கெல்லி கப்பலின் வெடிபொருள் சேமிப்பு அறையில் குண்டு விழுந்து கடலுள் மூழ்கியது. அப்போதும் கப்பல் மூழ்கும் வரை அதிலேயே இருந்து, சக வீரர்களை மிதவைப் படகு மூலம் நீந்தச் செய்து தானும் நீந்தித் தப்பினார். (டொமினிக் லேப்பியர் - லேரி காலின்ஸ், 1997: 72).

கப்பல் தலைவரான மவுண்ட் பேட்டன், தான் மட்டும் தப்ப நினையாது, தனது பணியாளர்களைத் தப்பிச் செல்லவிட்டு இறுதியில் அவர்களுடன் சேர்ந்து நீந்தியது பிறர் மீது கொண்ட மனிதநேயப் பண்பைக் காட்டுகிறது. சாதாரணமாக, பிற கப்பல் தலைவர்களிடம் இப்பண்பை எதிர்பார்க்கவியலாது.

மவுண்ட் பேட்டனை ஆங்கில அரசு இந்தியாவுக்கு விடுதலை வழங்கும் பொறுப்புகளை அளித்து அனுப்பியது. ஏனென்றால் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு இந்தியாவுக்கு அதிகார மாற்றம் செய்யத் தூண்டியது. இதற்கு ஏற்றவர் மவுண்ட் பேட்டன் என்பதையும் ஆங்கில அரசு முடிவு செய்தது.

மவுண்ட் பேட்டன் தன் கொள்கைகளில் பிடிப்பும் எடுத்த செயல்களை முடிப்பதில் ஆர்வம் மிக்கவராகவும் இருந்தார். இந்தியாவுக்கு விடுதலையை விரைவில் அளிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அவர் பிளவு படாத இந்திய விடுதலையை விரும்பினார். அதற்காக எல்லாத் தலைவர்களிடமும் பேசினார். ஆனால், ஆங்கிலப் பழக்க வழக்கங்களில் ஊறித்திளைத்த ஜின்னா பாகிஸ்தான் கோரிக்கையை முன்வைத்தார். உடல் நலம் பாதிக்கப்பட்ட அவரைப் பல்வேறு வழிகளில் திசை திருப்பி பிரிவினையைக் கைவிடும்படி மவுண்ட் பேட்டன் கெஞ்சினார் எனக் கூறலாம். அடிமைப்படுத்தப்பட்ட இனத்தை ஆண்ட நாட்டுத் தலைவர் இந்தியாவின் ஒற்றுமையையும் விடுதலையையும் விரும்பி செயல்பட்டார் என்றால் அவர் மனிதநேயம் மிக்க மிகச் சிறந்த பண்பாளராக இருந்தது தெரியவருகிறது.

பிரிவினை என்ற ஜின்னாவின் பிடிவாதத்தை உடைக்க என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தந்திரம் செய்தேன்; என் கற்பனைக்கெட்டியவரை வேண்டுகோள் விடுத்தேன்; எதுவும் நடக்கவில்லை (டொமினிக் லேப்பியர் - லேரி காலின்ஸ், 1997: 161)

1947-இல் மவுண்ட் பேட்டனும், ஜின்னாவும் ஆறுமுறை சந்தித்துப் பேசினார்கள். அப்போது இந்தியாவை இரண்டாகப் பிரிக்க வேண்டும் எனக் கூறிக்கொண்டிருந்த ஜின்னா 'விரைவான அறுவைச் சிகிச்சை இல்லையென்றால் இந்தியா அழிந்துவிடும்' என்றார். அப்போது மவுண்ட்பேட்டன் பிரிவினை ஏற்பட்டால் ரத்தக்களரி உருவாகிவிடும் எனத் தன் கவலையைத் தெரிவித்தார். கடற்படைத் தளபதியாகச் சிறப்பாகப் பணியாற்றிய அனுபவம், எதையும் ஊகித்துணரும் ஆற்றலை அவருக்கு அளித்தது. அந்த ஆற்றலை மனிதநேயத்தோடு பயன்படுத்திய பாங்கு பாராட்டுக் குரியதாக அமைந்தது.

இறுதியில் மவுண்ட் பேட்டனின் எச்சரிக்கை பயனளிக்காமல் போனது. இந்தியா மத அடிப்படையில் துண்டாடப் பட்டது. அதனால் ஏற்பட்ட இந்து-முஸ்லிம் இடப்பெயர்ச்சி,

இடப்பெயர்ச்சி காரணமாக உருவான கலவரங்கள் ஆகியவற்றால் இலட்சக்கணக்கான மக்கள் ஆடு, மாடுகள் போல் கொல்லப் பட்டார்கள். மதக்கலவரங்களால் 2,00,000 மக்கள் கொல்லப் பட்டார்கள் என ஒரு செய்தியும் 5,00,000 மக்கள் கொல்லப் பட்டார்கள் என மற்றொரு செய்தியும் உள்ளன. (டொமினிக் லேப்பியர் - லேரி காலின்ஸ், 1997: 471).

இந்தியாவை ஒற்றுமையாக வைத்திருக்க, சுமார் இரண்டு மணி நேரம் ஜின்னாவிடம் மவுண்ட் பேட்டன் கெஞ்சினார்; புகழ்ந்து பேசினார்; விவாதம் செய்தார்; வேண்டிக் கொண்டார்; ஒற்றுமையாக இருந்தால் இந்தியா எதையெல்லாம் சாதிக்க முடியும் என்ற சித்திரத்தையே வார்த்தைகளால் தீட்டினார்.

இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த நாட்டின் வைஸ்ராய்க்கு, ஆளப்படும் நாடு எப்படியிருந்தால் என்ன? என்றுதான் எண்ணுவார்கள். இந்தியா துண்டாடப்பட்டால் போர்கள், கலகங்கள் போன்றவற்றால் பலம் குன்றும். இத்தகைய சூழலைத் தான் பிறநாடுகள் விரும்பும். எடுத்துக் காட்டாக நம்நாடு அணுகுண்டு சோதனை நடத்தியபோது பொருளாதாரத் தடைக்குள்ளானது இங்கு நினைவு கூரத்தக்கது. இவ்வாறான உலகச் சூழலில் மவுண்ட் பேட்டன், சாதிக்கக்கூடிய, பிளவுபடாத இந்தியா அமைய வேண்டும் எனப் பாடுபட்டது அவரது மிகச்சிறந்த மனிதநேயப் பண்பாக அமைந்து விட்டது. தொடர்பற்ற நாட்டின் மீதும், நாட்டு மக்கள் மீதும் மவுண்ட்பேட்டன் கொண்டிருந்த நேயத்திற்கு ஈடில்லை. அதனால்தான் இந்திய மக்கள் அவரை மாமனிதராக மதித்தனர்.

ஜின்னாவுக்குக் கடுமையான காசநோய் இருந்தது. இதனை யாருக்கும் தெரியாமல் மறைத்துக் கொண்டிருந்தார். மவுண்ட் பேட்டனின் அனைத்து நம்பிக்கைகளும் ஜின்னாவின் பிடிவாதம் என்ற பாறையில் மோதிச் சிதைந்தன. இந்தக் கணக்கின் போது ஜின்னாவின் சுகவீனம் பற்றிய உண்மை தெரியாமல் போனது. தெரிந்திருந்தால் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும் (டொமினிக் லேப்பியர் - லேரி காலின்ஸ், 1997: 182). 1948 செப்டம்பரில் ஜின்னா இறந்தார். இந்தக் காசநோய் பற்றி மவுண்ட் பேட்டனுக்குத் தெரிந்திருந்தால் விடுதலை அளிப்பதைத் தள்ளிப் போட்டிருப்பார் என்ற கருத்தும் உள்ளது. ஜின்னாவின் பிடிவாதத்தால்தான் இந்தியா துண்டாடப்பட்டது.

'பிரிவினை என்பது சுத்தப் பைத்தியக்காரத்தனம்' அவர்கள் மேற்கொண்ட முடிவுக்காக ஒரு நாள் கடுமையாக வருத்தப்

படுவார்கள்' என்று இங்கிலாந்து மன்னருக்கு அனுப்பிய செய்தியில் மவுண்ட்பேட்டன் குறிப்பிட்டார். அவரது எண்ணம் நூற்றுக்கு நூறு உண்மையென்பதைக் கடந்த கால நிகழ்வுகள் நிரூபித்துள்ளன. அவர் இந்தியாவுக்கு வந்த குறைந்த காலத்தில், சிறந்த முறையில் மக்களைப் புரிந்து செயல்களைச் செய்த மனிதநேயம் மிக்க நிருவாகியாக அமைந்திருந்தமை பாராட்டுக்குரியது.

1947 ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் பிரிவினை காரணமாக மக்கள் இடம் பெயர்ந்தனர். அப்போது இந்து-முஸ்லிம் இனக்கலவரத்தால் மக்கள் விலங்குகளைப் போல் கொல்லப் பட்டார்கள். காவல் துறையாலும், ராணுவத்தாலும் வெறிபிடித்து அலையும் கூட்டத்தை அடக்க முடியவில்லை. பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்த ரயில்கள் இந்துக்களின் பிணங்களையும், பாகிஸ்தானுக்குச் சென்ற ரயில்கள் முஸ்லிம் பிணங்களையும் கொண்டு சென்றன. இந்நிலையில் நமது புதிய ஆட்சியாளர்கள், ஓய்வுக்காகச் சிம்லாவுக்குச் சென்றிருந்த மவுண்ட் பேட்டனை வரவழைத்தனர். சில வாரங்களுக்கு முன்னர் ஆட்சியை ஒப்படைத்த அவரிடமே இந்த நாட்டை நீங்களே ஆள முடியுமா? என்று கேட்டார்கள் (டொமினிக் லேப்பியர் - லேரி காலின்ஸ், 1997: 436).

நிலைமை எல்லை மீறிப் போயிருந்த போதும் நிருவாகத்தில் முத்திரை பதித்த மவுண்ட் பேட்டன் முதலில் மறுத்தார். பின்னர் வற்புறுத்தலுக்கிணங்க ஏற்றுக் கொண்டார். பிரதமர், துணைப் பிரதமர் முன்னிலையிலேயே ஆணைகளைப் பிறப்பித்தார். விரைந்து செயல்கள் நடைபெற்றன.

இந்த அரசியல் கொந்தளிப்பைச் சமாளிக்கச் சில வாரங்கள் தேவைப்பட்டிருக்கும். ஆனால் ஒரே இரவில் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. 'மாட்டுவண்டி வேகத்திலிருந்து ஜெட் விமான வேகத்தை அது அடைந்தது' எனக் குழுவில் பங்கேற்ற இந்தியர் ஒருவர் குறிப்பிட்டார் (டொமினிக் லேப்பியர் - லேரி காலின்ஸ், 1997: 440).

'வெள்ளையனே வெளியேறு' என்று முழக்கமிட்ட இந்திய நாட்டில் நடைபெற்ற இனப்படுகொலைகளையும், கொந்தளிப்பையும் அடக்க வெள்ளையரான மவுண்ட் பேட்டன் நிருவாகத்தை ஏற்றுச் செயல்பட்டது மிக உயர்ந்த மனிதநேயம் வாய்ந்தது.

காந்தியின் மனிதநேயப் பண்புகள்

மகாத்மா காந்தி திவான் குடும்பத்தைச் சேர்ந்தவர். விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் இங்கிலாந்து சென்று சட்டம்

பயின்று பட்டம் பெற்றார். சட்டத்துறையில் பேச்சுத் திறனை நிரூபிக்க முடியாத காந்தி உறவினர் வழக்கு ஒன்றிற்காகத் தென்னாப்பிரிக்கா சென்றார். அது அவருக்குத் திருப்புமுனையாக அமைந்தது.

தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய பின்னர் இந்திய விடுதலைக்காக உழைத்தார். தான் கொண்ட கொள்கையில் தீவிரப் பற்று கொண்ட காந்தி பிளவுபடாத இந்தியாவை விரும்பினார். காரணம், பிளவு ஏற்பட்டால் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப் படுவார்கள் என்பதைக் காந்தி உணர்ந்தார். எனவேதான் காந்தி பிளவு படாத இந்தியா - மதபேதமற்ற இந்திய அமையவேண்டும் என்ற மனிதநேயச் சிந்தனையுடையவராயிருந்தார்.

டில்லியில் இருந்த அரசியல் தலைவர்களைவிட நவகாளியிலும் பின்னர் பீகாரிலும் கிராமம் கிராமமாக நடந்து சென்று மதக்கலவரத்தால் புண்பட்ட மக்களுக்கு மருந்திட்ட காந்தி, பிரிவினை உருவாக்கும் துயரங்கள் எப்படியிருக்கும் என்பதை மிகமிக அதிகமாகப் புரிந்து கொண்டிருந்தார் (டொமினிக் லேப்பியர் - லேரி காலின்ஸ், 1997: 156).

பிரிவினை என்ற நிலையை அறிந்தபோது, 'இது மிகவும் பயங்கரமானது; இது மிகவும் பயங்கரமானது' எனக் காந்தி கூறினார். ஏனென்றால் மக்களோடு மக்களாகக் கலந்து வாழ்ந்ததாலும், ஒவ்வொரு நாளும் பல்வேறு தரப்பட்ட மக்களைச் சந்தித்ததாலும் காந்திக்கு நாட்டின் நாடித்துடிப்பு நன்கு தெரிந்திருந்தது. எனவேதான் வருமுன் காக்க வேண்டும் என்ற கருத்துக்கிணங்க,

'ஒரு பகுதியை விரும்பும் ஜின்னாவிடம் முழு இந்தியாவையும் ஒப்படைத்து விடுங்கள்' என்று கூறினார் (டொமினிக் லேப்பியர் - லேரி காலின்ஸ், 1997: 144).

இது பிரிவினையால் மக்கள் அச்சத்திற்கும் அமைதி யின்மைக்கும் ஆளாகி உயிர்ப்பலியில் ஈடுபடாமலிருக்க வேண்டும் என்ற மனிதநேயத்தைக் காட்டுகிறது. மற்றொரு சூழலில்,

'எனது பிணத்தின் மீதுதான் இந்தியா துண்டாடப்படலாம். நான் உயிரோடு இருக்கும்வரை இந்தியாவைப் பிரிக்க ஒரு போதும் ஒப்புக் கொள்ள மாட்டேன்' என்றார்.

இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக மவுண்ட் பேட்டன் வரவேண்டும் என்ற காந்தியின் அழைப்பை ஏற்றுக் கொண்டவர், "நாம் அவரைச் சிறையில் அடைத்திருக்கிறோம்; புண்படுத்தி

யிருக்கிறோம்; அவமதித்திருக்கிறோம்; புறக்கணித்திருக்கிறோம். ஆனால் இதனைச் செய்யும் பெருந்தன்மை உணர்வு இன்னமும் அவரிடம் இருக்கிறதே என்று எண்ணினார். (டொமினிக் லேப்பியர் - லேரி காலின்ஸ், 1997: 262).

இதுதான் மனிதநேயத்தின் உச்சமாக அமைகிறது. தன்னை அவமதித்தவரை; தன்னை அடிமைப்படுத்தி ஆண்டவரை; சிறந்த நிருவாகத்தை அளிக்க வருமாறு வேண்டினார். வகுப்புக் கலவரங்களால் அகதிகளாக வந்த மக்களுடன் இருந்து கழிவறை அமைத்தல், துப்புரவு, தூய்மை பற்றி விளக்கிக் கூறினார். மருந்தகம் ஒன்றை ஏற்படுத்தினார். அவரால் இயன்ற அளவு நோயாளிகளுக்குப் பணிவிடை செய்தார். 77 வயதான காந்தி தனது உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் பணியாற்றியது மிக உயர்ந்த மனிதநேயமாக உள்ளது.

கல்கத்தாவிலுள்ள மக்கள் நவகாளியில் நடந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் காந்தியைப் பார்த்து 'இந்துக்களின் துரோகி' என ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அவர் பயணம் செய்த காரைக் கல்லால் அடித்தார்கள். அப்போது காந்தி காரிலிருந்து இறங்கித் தனியாகக் கல்மழைகளுக்கிடையே நடந்தார். அப்போது அவர், நீங்கள் என்னைக் காயப்படுத்த விரும்புகிறீர்கள். அதனால்தான் உங்கள் அருகே நான் வந்து கொண்டிருக்கிறேன் என்றார். காந்தி அவ்வாறு கூறியதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் உறைந்து போனார்கள். காந்தி நியாயத்தை எடுத்து வைத்தார். இவ்வாறு அமைதியான வழியில் தனது செயல்களை மேற்கொண்டார். அவரது அகிம்சை முறையும், உண்ணாவிரதமும் மக்களை நல்வழிப்படுத்தின. இது அவருக்குக் கிடைத்த வெற்றியாக அமைந்தது.

காந்தி டில்லியிலிருந்த முஸ்லிம் அகதிகளுக்கு ஆதரவாக இருந்தபோது, இந்துக்கள் கோபமடைந்து 'காந்தி மூர்தாயாத்' எனக் கத்தும் அளவுக்கு நிலைமை மோசமடைந்தது. இருப்பினும் காந்தி அன்பையும் அமைதியையும் ஏற்படுத்த முயன்றார். அந்தத் தள்ளாத வயதிலும் மக்களிடையே தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். இது காந்தியின் இன, மத வேறுபாடற்ற மனிதநேயப் பண்பை எடுத்துக் காட்டுகிறது.

பிரிவினையில் பஞ்சாப் மக்கள் இரத்த வெள்ளத்தில் மிதந்தபோது, அந்த வயதான தலைவர் இன்னமும் அதிசயம் நிகழ்த்திக் கொண்டிருந்தார். கல்கத்தா அமைதியாக இருந்தது. (டொமினிக் லேப்பியர் - லேரி காலின்ஸ், 1997: 423).

தனது 77 வயதிலும் கல்கத்தாவில் காந்தி தங்கியிருந்தமையால் அங்கு அமைதி நிலவியது. ஆங்கிலேயருக்கு எதிராக இயக்கம் நடத்திய காந்தி, தன் சொந்த நாட்டு மக்களுக்காக உண்ணாவிரதம் இருக்கத் தயாரானார். உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருந்த மூன்றாம் நாள் குண்டர்கள் பலர் வந்து மன்னிப்புக் கேட்டு உண்ணாவிரதத்தை முடிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். அவர்களிடம் முஸ்லிம்களைப் பாதுகாக்க உறுதிமொழி எடுத்துக் கொள்ளுமாறு காந்தி கூறினார்; உண்ணாவிரதத்தையும் முடித்தார்.

காந்தி பல சாதனைகளைப் படைத்துள்ளார். ஆனால் உண்மையிலேயே அற்புதம் நிறைந்த கல்கத்தாவில் கொடுமை நிகழாமல் அவர் கொண்ட வெற்றிக்குச் சுதந்திரம் கூட ஈடாகாது' என்று அவரின் பழைய நண்பர் ராஜகோபாலாச்சாரி குறிப்பிட்டார்.(டொமினிக் லேப்பியர் – லேரி காலின்ஸ், 1997: 430).

காவலர்களாலும், ராணுவத்தாலும் செய்ய முடியாத பணியைக் காந்தி தனது உண்ணாவிரதத்தால் சாதித்து மிகப் பெரிய கலவரத்தைத் தவிர்த்தார்.

காந்தியைக் கொலை செய்ய முயற்சி நடந்த பின்னரும் கூட பிர்லா மாளிகையில் காவலர்களை அனுமதிக்கக் காந்தி மறுத்தார். எவரையும் சோதனை போடக் கூடாது எனவும் கூறினார். கோயிலுக்குச் செல்பவர்களை யாரும் சோதனை செய்வதில்லை. அதுபோல் பிரார்த்தனைக்கு வருவோரையும் சோதனையிட வேண்டாம் எனக் கண்டிப்பாகக் கூறினார் இது தொடர்பில்லாத மனிதர்களிடம் காந்தி கொண்டிருந்த மனிதநேயத்தைப் பறைசாற்றுகிறது.

இவ்வாறு மனித நேயத்தில் ஊறித் திளைத்த மவுண்ட் பேட்டனும், காந்தியும் எந்த மக்களின் நாட்டிற்காகவும், அமைதிக்காவும் உழைத்தார்களோ அந்நாட்டினராலேயே கொலை செய்யப்பட்டார்கள். மரணம் கூட இருவேறு பண்பாட்டைக் கொண்ட இருவேறு துருவங்களாக வாழ்ந்த இரு தலைவர்களுக்கும் அமைந்தது போல் யாருக்கும் அமையவில்லை. 1979 ஆகஸ்ட் மாதம் விடுமுறையைக் குடும்பத்துடன் கழிப்பதற்காக அயர்லாந்திலுள்ள அரண்மனைக்குச் சென்றார் மவுண்ட் பேட்டன். அங்கு அவரது மோட்டார் படகில் காலை நேர சவாரிக்காகக் கடலில் சென்ற போது அயர்லாந்து புரட்சி ராணுவம் படகில் மறைத்து வைத்திருந்த குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.

மகாத்மா காந்தி 1948 சனவரி 30ஆம் நாள் மாலை 5 மணிக்கு பிர்லா மாளிகையின் பிரார்த்தனை மண்டபத்தின் அருகில் நாதுராம் கோட்சே என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். ஒரே மதத்தை மட்டும் கொண்ட நாட்டில் மவுண்ட் பேட்டனின் கொலைக்குப் பின்னரும் பயங்கரவாதம் தொடர்கிறது. ஆனால் பல்வேறு மதங்களைக் கொண்ட இந்தியாவில், மதக்கலவரங்கள் இருந்தபோதும் காந்தியைக் கொன்றவரும் கொலை செய்யப்பட்டவரின் மதத்தைச் சார்ந்தவரே. அகிம்சையின் நாயகன் வாழ்ந்த நாட்டில் உள்நாட்டுக் கலகங்கள் குறைந்தன. பிரிவினையால் ஏற்பட்ட எல்லை தாண்டிய பயங்கரவாதம் தொடர்கிறது.

மனிதநேயத்தில் தலைசிறந்தவர்கள் வாழ்ந்த நாடுகளில் இன்றும் மனிதநேயம் வாழ்கிறது.

******

இறையன்புவின் "ஆத்தங்கரை ஓரம்" நாவலில் மனிதநேயம்

சு. கௌசல்யா
ஆய்வாளர்

1997ஆம் ஆண்டு வெளிவந்த இந்நாவல் திருப்பூர்த் தமிழ்ச் சங்கப் பரிசு பெற்ற பெருமைக்குரியது. இந்நாவல் சிந்தூர் என்ற கிராமத்தின் அழகையும் அங்கே நிகழ்ந்த அவலங்களையும் சித்திரிக்கும் பாங்கில் அமைந்துள்ளது. இந்தக் கதையின் களம் தமிழ்நாடு அல்ல. கதை மாந்தர்களும் தமிழர்கள் அல்லர். பெயர் சுட்டப்படாத ஓர் ஆற்றில் பெரியதொரு அணை கட்டத் திட்டமிடுகிறது அரசாங்கம். இதனால் அங்கு வாழும் மக்களுக்கு எவ்விதப் பயனுமில்லை. சிந்தூர் கிராமத்தை அழிக்கின்ற நோக்கம் தவிர வேறு ஒரு பயனும் அவ்வணையால் அங்குள்ள பழங்குடியினருக்குக் கிடைக்கப் போவதில்லை. அந்த அணை கட்டுவதைத் தடுப்பதற்கு அவ்வூரில் வாழும் பழங்குடியினரும் அவ்வூருக்கு எவ்விதத் தொடர்பும் இல்லாத மற்றவர்களும் எவ்வாறு மனிதநேய அடிப்படையில் செயல்படுகிறார்கள் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

பாத்திரங்களின் வழி வெளிப்படும் மனிதநேயம்

இந்நாவலில் பழங்குடியினரிடையே மூத்தவரான கோவிந்த்பாய், அவருடைய மகன் சிமன், அணையைக் கட்டுவதற்கான பொறுப்பில் இருக்கும் அரசாங்க அதிகாரி சுதீர், சமூக சேவையைத் தன் உயிர்மூச்சாகக் கொண்டிருக்கும் ராதா படேங்கர், அவருக்குத் துணையாக இருக்கும் சந்தீப், நிதின் ஆகியோரின் நிலையிலிருந்து மனிதநேயம் வெளிப்படும் முறையை இங்குக் காணலாம்.

கோவிந்த் பாய்

சிந்தூரில் வாழும் பழங்குடியினரிடையே முதியவரான கோவிந்த் பாய், அவ்வூரில் ஓடுகின்ற நதியின் மீதும் அவ்வூரின் மீதும் அங்கு வாழும் மக்களின் மீதும் அன்பும் பாசமும் நிறைந்தவர். அவர் அந்நதியைக் கருணையின் தன்மையால் தாயாய், தெய்வமாய், பெண்ணாய், உயிராய்ப் பாவிக்கிறார். (ப.7)

இவருடைய ஒரே மகனான சிமன், அணை கட்டுவதைத் தடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதைக் கண்ட கோவிந்த் பாய், தன் மகனுக்குத் திருமணம் செய்யும் முயற்சியைக் கைவிடுகிறார். எந்த

ஒரு தகப்பனாரும் தன் மகனுக்குத் திருமணம் செய்து வைத்து அவர்களின் வாழ்க்கை அமைதியாகவும் சுகமாகவும் அமைய வேண்டும் என்றே ஆசைப்படுவர். ஆனால், மனைவியை இழந்த நிலையில் தானே தன் மகனைக் கஷ்டப்பட்டு வளர்த்து 'ஆசிரம'ப் பள்ளியில் படிக்க வைத்து அவனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்த பின்பு, ஒரு சராசரித் தந்தையாக இல்லாமல் தன் இன மக்களுக்காகப் போராடத் துணிந்துள்ள மகனை அவர் உற்சாகப்படுத்துகிறார். இதனை,

> 'சின்ன வயதிலேயே மனைவியை இழந்த பிறகு தன் வீட்டில் மறுபடியும் பெண் புழங்கி வீட்டு வேலைகளைப் பொறுப்புடன் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் தனிப்பட்ட முறையிலிருந்த ஆசைகள் எல்லாம் அடிபட்டுப் போய், சமுதாய முழுமைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவனை இந்த நேரத்தில் சொந்தக் கட்டுகளில் சிக்கிக் கொள்ள வைப்பது சிறந்ததாயிருக்க முடியாது என்று அவருக்குப் பட்டது'' (ப. 14) என்ற கூற்றிலிருந்து அப்பெரியவரின் மனிதநேய மனப்பான்மையை அறிய முடிகிறது.

நதிக்கரைக்கு அப்பால் அணை கட்டும் வேலை ஆரம்பித்து, தொடர்ந்து நடப்பது கண்டு, கோவிந்த் பாய் மிகவும் கவலையுடன் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருக்கிறார். அப்போது அவருடைய மகன் சிமன் அமர, கோவிந்த் பாய் அவனிடம்,

> ''ஒரு வகையிலே இந்த ஆலமரம் மாதிரிதான் நம்ப பரம்பரையும், இந்தக் கலாச்சாரம், இந்தப் பழக்க வழக்கம், கள்ளமில்லாமப் பழகற தன்மை எல்லாமே ஒரேயடியா பூமியில சீக்கிரம் சரிஞ்சி தானப் போயிடும் .... இன்னும் கொஞ்சம் காலம் போனா, 'சிந்தூர்னு ஒரு கிராமம் நதிக்கரையிலே இருந்தது; அங்க ஒரு கொலை கூட நடக்கல' அப்படினு சொன்னா யாரும் நம்பமாட்டாங்க. 'கூட்டிக்கிட்டுப் போய் காமிங்க'ன்னு சொன்னா, 'அந்த கிராமம் தண்ணீல மூழ்கிப் போயிடுச்சி'ன்னு பதில் வரும். கிராமம் மட்டுமா, இந்தப் பாரம்பரியம், பண்பாடு எல்லாமே மூழ்கிப் போயிடும், காணாமப் போயிடும். அதை நினைச்சா தான் கஷ்டமாயிருக்கு. உசிரு என்னப்பா உசிரு!'' (ப. 80) என்கிறார்.

தன் உயிரைக் காட்டிலும் தன்னுடைய சமுதாயத்தையும் அதனுடைய பாரம்பரியத்தையும் தன் உயிராகப் பாவிக்கும் கோவிந்த் பாயின் எண்ணம் அவருடைய மனிதநேய உணர்விற்குச் சான்றாகும்.

அணை கட்டுவதைத் தடுக்க, பலரும் பலவிதமான போராட்டங்களில் ஈடுபட்டிருக்கையில் அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்களாக, பழங்குடியினரைச் சேராத நிதின், சந்தீப் இருவரையும் கூறலாம். அணை கட்டும் போது நரபலி கொடுக்கும் வழக்கத்தின் காரணமாக, ஒப்பந்தக்காரர்கள் பழங்குடியினரைச் சேர்ந்த கோகுல் என்ற மனநிலை சரியில்லாதவனைப் பலி கொடுத்து விடுகின்றனர். இதையறிந்த நிதின் பழங்குடியினர் சிலரை அழைத்துக் கொண்டு அணைகட்டுமானப் பணி நடக்கும் அக்கரைக்குச் சென்று, அங்குள்ள கூலியாட்களை அடித்து, அவர்கள் இருக்கும் இடங்களைத் தீக்கிரையாக்குகின்றான். அதனால், போலீஸ் இதை தேசிய விரோதச் செயலாகக் கருதி, நிதின் மற்றும் பழங்குடியினர் பலரைக் கைது செய்கின்றனர். இதையறிந்த கோவிந்த் பாய், சந்தீப் இருவரும் வழக்கறிஞரை அழைத்துக் கொண்டு நிதினை ஜாமீனில் எடுக்கச் செல்கின்றனர். அப்போது, ஆசிரியர் கூற்றாகச் சொல்லப்பட்ட பின்வரும் கருத்து, கோவிந்த் பாய் மனிதநேயமிக்கவர் என்பதற்கு எடுத்துக்காட்டு ஆகிறது.

> "ஆதிவாசி இளைஞர்கள் அத்தனை பேரும் உள்ளேயிருந்தால் கூட பாயி வருத்தப்பட்டு இருக்க மாட்டார். ஆனால் தங்களுக்காகப் போராடும் இளைஞன், தங்கள் வாழ்க்கையோடு சிறிதும் தொடர்பு இல்லாத ஒருவன் இப்படிக் கஷ்டத்தை அனுபவிக்க அவரது மனது வலித்தது' (ப. 118).

கோவிந்த் பாய், தான் வாழும் சிந்தூர் கிராமத்தை அழிக்கின்ற நோக்கம் தவிர வேறு எந்த நல்ல நோக்கமும் இல்லாமல் நடைபெறும் கட்டுமான பணியின் காரணமாக நதியின் எதிர்க்கரையில் உள்ள அடர்ந்த காடுகள் அழிக்கப்பட்டுவிட்டதைக் கவலையோடு பார்த்துக் கொண்டிருக்கிறார். அப்போது காற்றின் ஈரப்பதத்தை உணர்ந்து, மழை பெய்தால் தன் கிராமமே அழிய இருப்பதைக் கண்டு மனம் வெதும்பி அவ்விடத்தை விட்டே அகலாமல் அமர்ந்திருக்கிறார். அப்போது பெருமழை பெய்து வெள்ளம் பெருகியது. சிந்தூர் கிராமமே மூழ்கும் அபாயம் ஏற்படுகிறது. ஆனாலும் கோவிந்த் பாய் அக்கிராமத்தை விட்டுச் செல்லாமல் அங்கேயே அமர்ந்து தன் உயிரை மாய்த்துக் கொள்கிறார். கோவிந்த் பாய், இயற்கையின் மீது நேசமும் தன் மக்களின் மீது பாசமும் தன் ஒரு மகனின் சமுதாய சேவையை வரவேற்கும் உயர்ந்த குணமும் கொண்ட மனிதநேயமிக்கவராகத் திகழ்கின்றார்.

சுதீர்

அணை கட்டுமானப் பணியை நடத்துவதற்கும் சிந்தூர் கிராமத்தில் இருக்கும் பழங்குடியினரைக் காலி செய்வதற்கும் தாலுகா அலுவலக உயர்பதவிக்கு மாற்றலாகி வந்தவர் சுதீர். இவர் நேர்மையாளர். இவர் அரசியலுக்கும் அரசாங்கத்திற்கும் கட்டுபடாமல் மக்கள் தொண்டே தன் மூச்சாக விளங்குபவர். இவர் பதவியேற்றவுடன் சிந்தூர் கிராமத்தைப் பற்றியும் அங்குள்ள மக்களை இடம் பெயரச் செய்தால், அவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கவுள்ள இடத்தைப் பற்றிய விவரங்களையும் அறிந்த பின்பு அரசாங்கம் அவர்களை ஏமாற்றியுள்ளதை அறிந்து கொதிப்படைகிறார். பின்பு அவர், பழங்குடி மக்களையும் கிராமத்தையும் காண விரும்புகிறார். இதையறிந்த அம்மக்கள், முன்பிருந்த அதிகாரிகளைப் போன்றே இவரும் இருப்பாரோ என அஞ்சிச் சந்திக்க யோசித்துக் கொண்டிருக்கையில், இவரைப் பற்றி சந்தீப்,

"போட்டி போட்டுக் கொண்டு எத்தனையோ பணக்காரர்கள் பெண் கொடுக்க முன்வந்த பொழுது ஒரு பைசா கூட வரதட்சணை வாங்காமல் சாதாரண குடும்பத்திலிருந்து கல்யாணம் பண்ணிக்கிட்டாரு. அதுமட்டுமல்ல! அவரோட மனைவியும் அவரு மாதிரியே உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்துக்கறவங்களாம்" (ப. 40) என்று கூறுவதிலிருந்து சுதீரின் நற்குணம் வெளிப்படுகிறது.

சுதீர், தான் பதவியேற்றவுடன் அணை கட்டுமானக் கோப்புகளைப் பார்த்து விட்டு சிந்தூர் கிராமத்திற்குச் செல்கிறார். அங்கே பழங்குடியினருக்குத் துணையாக இருக்கின்ற ராதா, சிமன் மற்றும் பழங்குடி மக்களிடையே பேசி விட்டு வந்து தன் மனைவி யூதிகாவிடம், அணைகட்டுவதனால் அங்கிருக்கின்ற மரங்களும் செடிகளும் பூக்களும் அழகான பறவைகளும் மூழ்கிப் போகப் போவதைக் கூறி வருந்துகிறார். அதோடு மட்டுமல்லாது அழகான இயற்கையைச் சிதைப்பது வருங்கால சந்ததிக்குச் செய்யும் துரோகமாகவும் கருதுகிறார். (ப. 55) இவ்வாறு, அவர் வருந்துவது இயற்கையின் மீது அவர் கொண்டுள்ள ஈடுபாட்டை உணர்த்துகிறது.

சிந்தூர் கிராம மக்களுக்கு அவர்கள் வாழுமிடத்திற்குப் பதிலாக, எந்த விதமான விவசாயமும் மேற்கொள்ள முடியாத, எதற்கும் பயன்படாத நிலம் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டது கண்டு சுதீர் மிகவும் வருத்தமடைகிறார். இதனை அரசாங்கத்திற்கு உணர்த்தும் விதமாக, சிந்தூர் மக்களின் நிலையையும் அணை கட்டுவதால் ஏற்படப் போகும் இழப்பையும் குறித்துத் தன்

மேலதிகாரிக்குக் கடிதம் எழுதுகிறார். அக்கடிதத்தில் முழு உண்மையையும் அரசாங்கத்தின் சூழ்ச்சியையும் தெள்ளத் தெளிவாக எழுதுகிறார். இக்கடிதம் தன் பதவிக்கும் வாழ்விற்கும் பெரும் கேடு விளைவிக்கும் என்று நன்கறிந்தும் கூட அப்பாவி மக்களின் நிலைகண்டு இரங்கும் அவரின் மனிதநேயத்தை உணரமுடிகிறது. சுதீர் இக்கடிதத்தை அனுப்பிய பிறகு அவருக்கு வேறு இடத்திற்குப் பணி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கடிதம் வந்தது. ஆனாலும் நியாயத்தின் பக்கம் தான் இருப்பதை உணர்ந்து அம்மக்களுக்குத் தன்னால் இயன்ற உதவியைச் செய்வதை நிறுத்தவில்லை. அவர் குடியிருந்த வீட்டின் மின்சாரத் தொடர்பு, தண்ணீர் மற்றும் அன்றாடத் தேவைகள் அனைத்தும் அவருடைய உயர் அதிகாரிகளால் துண்டிக்கப்பட்டது. அப்போதும் தன்நிலையில் இருந்து அவர் பின்வாங்கவில்லை. நகரப் பகுதியிலிருந்து பழங்குடியினர் வாழும் சிந்தூர் கிராமத்திற்கே சென்று மூன்று மாத விடுப்பில் அவர்களுடன் தங்கி, அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த அவர்களோடு தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டார். அனைவருக்கும் பக்கபலமாக இருக்கும் சுதீரின் உயர்குணத்தைச் சந்தீப் கூறும் பின்வரும் கூற்றில் உணர முடிகிறது.

> "தனியொரு மனிதனாய் நின்று யாரையும் முன் நிறுத்தாமல் சுதீர் பெற்றிருக்கும் வெற்றி மகத்தானது. தனக்கு என்ன வேண்டுமானாலும் நிகழலாம் என்கிற சூழலில் துணிச்சலுடன் போராடுவது சாதாரணமான காரியமல்ல; அரசு அதிகாரிகள் மத்தியில் தான் முற்றிலுமாகத் தனிமைப்பட்டுப் போகிற அபாயம் இருந்தாலும் அதைப் பற்றிய சிந்தனை எதுவுமில்லாமல் நியாயத்திற்காக வாதாட எத்தனை பேர் இருக்கிறார்கள்" (ப. 96).

சுதீர், ராதாவுடன் மாநிலத்திலுள்ள அனைத்துத் தொண்டு நிறுவனங்களுக்கும் சென்று, அணைகட்டுவதற்கு எதிராக அணி திரட்டி அதில் ஓரளவு வெற்றியும் அடைந்தார். அணை கட்டும் பணி கொஞ்சம் தாமதமும் அடைந்தது. அப்போது சுதீருக்கு மாநிலத்தை விட்டே செல்லும்படி மத்திய அரசு நிர்வாகத்திற்கு மாற்றப்பட்ட செய்தி வந்தது. இதைக் கண்ட சுதீர் மிகவும் வருத்தப்பட்டுக் கூறுவதிலிருந்து அவருடைய தொண்டுள்ளத்தையும் அவர்களுக்குத் தன்னால் முழுமையாக உதவி செய்ய முடியாத நிலைக்குத் தான் ஆளாகி விட்ட துன்பத்தையும் உணர முடிகிறது.

> "நான் இந்த ஊரை விட்டுப் போகும் பொழுது கனத்த இதயத்துடன் தான் போகிறேன். என் இதயம் இங்கேயே

> இருக்கும். இந்த அணை என் அலுவலக வாழ்க்கையை திசை திருப்பி விட்டு விட்டது என்பதைப் பற்றி நான் கவலைப் படவில்லை............. நான் நினைத்ததை முடிக்காமல் போகிற முதல் பணியாக இதுதான் இதுவரை நின்றிருக்கிறது. இதை முடித்து வைப்பதற்காக எப்பொழுதாவது இங்கு மறுபடியும் வருவேன் என்று தான் தோன்றுகிறது." (ப. 130)

இவ்வாறு வருத்தமாகக் கூறி விடைபெறும் சுதீர், ஓர் அரசாங்க அதிகாரியாக இருந்தும், சிறுபான்மை மக்களான, படிப்பறிவே இல்லாத பழங்குடியினருக்கு உதவி, அரசாங்கத்தின் செயலால் ஒரு கிராமமே அழியப் போகின்ற இழிநிலையைத் தன்னால் இயன்ற அளவு தடுத்து, தன் சுகத்தையும் பதவி உயர்வையும் பெரிதாக எண்ணாது செயற்படுவது வழி, அவருடைய மனிதநேயம் உணரப்படுகிறது.

ராதா படேங்கர்

டாட்டா இன்ஸ்டிடியூட்டில் சமுதாயப் பணி படித்து, சமுதாயச் சேவையைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டவர் ராதா படேங்கர். இவரின் கணவர் சுனில், திட்டக்குழுவின் உறுப்பினராக அரசுப் பணியில் இருப்பவர். ராதா, நாட்டின் எந்த மூலையில் மக்களுக்கு அநியாயம் நடக்கிறதோ, அங்குச் சென்று அவர்களுக்காகக் குரல் கொடுக்கும் இயல்புடையவர். ஆகையால் சிந்தூரில் கட்டப்பட இருக்கும் அணைக்கு மறுப்பாகவும் அரசாங்கத்திற்கு எதிராகவும் பல இடங்களில் பேசுகிறார். ராதாவின் இப்போக்கு கணவர் சுனிலுக்குப் பிடிக்காத காரணத்தால் அவளைக் கண்டிக்கிறார். அவளோ, தன்னால் அவர்களுக்கு உதவாமல் இருக்க முடியாது எனக் கூறித் தன் கணவனை விட்டுப் பிரிந்து, பழங்குடியினர் வாழும் சிந்தூருக்கே சென்று விடுகிறார். பழங்குடியினரின் ஆதரவற்ற நிலையையும் இயற்கை வளத்தையும் கண்ட ராதா, மாநிலத்திலிருக்கின்ற முக்கியத் தொண்டு நிறுவனங்களையும் சுற்றுப்புறச் சூழலில் அக்கறைக் கொண்டவர்களையும் அழைத்து, தன்னுடைய கருத்தை எளிமையாக ஆடம்பரம் இல்லாமல் தெளிவாக பின்வருமாறு கூறுகிறாள்.

> "அணை கட்டுவது என்பது உற்பத்தியைப் பெருக்கக் கூடியது என்பதில் நாங்கள் முரண்படவில்லை. ஒரு அணை எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும் என்பதும் பெரிய அணைகள் நம் நாட்டு நலனுக்கு எந்த அளவிற்கு உகந்தன என்பதும் தான் என்னுடைய கேள்விகளாக இருக்கின்றன.......... ஒவ்வொரு

> அணை கட்டப்படும் பொழுதும் எத்தனை ஆயிரக்கணக்கான ஹெக்டேர்களில் உள்ள இயற்கை வளங்கள் அழிக்கப் படுகின்றன? நம் அறிவிற்கே அகப்படாத எத்தனையோ தாவரங்களும் உயிரினங்களும் தண்ணீரில் மூழ்கி மறைந்து போகின்றன. ஒருஅணை பெரிய அளவிலே கட்டப்படும் பொழுது எந்த அளவிற்கு சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப் படுகிறது தெரியுமா?" *(ப. 22)*

என்று கூறுவதிலிருந்து இயற்கை வளம் அழியக் கூடாது என்பதில் அவர் கொண்டுள்ள அக்கறையை உணரமுடிகிறது. மேலும்,

> "இந்த இயற்கை வளங்களை யெல்லாம் பன்னெடுங் காலமாகப் பழங்குடி மக்கள் பாதுகாத்து வருகிறார்கள். தலைமுறை தலைமுறையாய் இயற்கை சீரழியாமல் அவற்றின் பலன்களை அவர்கள் நுகர்ந்து வருகிறார்கள். அவர்களை எல்லாம் புதிய இடத்திற்குக் குடியமர்த்தி அவர்களை ஒட்டு மொத்தமாக அந்நியப்படுத்துவது என்பது மனிதநேயத்திற்கு விரோதமானது" *(ப. 23)*

என்று பழங்குடியினருக்காக அவர் போராடுவது அவரின் சமூக உணர்வையும் மனிதநேயத்தையும் வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு ராதாவின் பேச்சு அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது. ஆங்காங்கே இருந்து பல தொண்டு நிறுவனங்கள் உதவ முன் வந்தன. இதை அறிந்த நீர்ப்பாசனத்துறை அமைச்சர் ராதாவை அழைத்துப் பேசுகிறார். அப்போது அணை எதிர்ப்புப் போராட்டத்திற்குத் தூண்டு கோலாக ராதா விளங்குவதாகக் கூறுகிறார். ஆனால் ராதாவோ, அது தவறான தகவல் என்றும் அவள் வருவதற்கு முன்பே பழங்குடியினர் எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள் என்றும் தான் அவர்களுக்கு ஒரு வடிகாலாக இருப்பதாகக் கூறுகிறாள். (ப. 61) இவளின் குணமறிந்த அமைச்சர் அவளை ராஜ்ய சபா எம்.பி. ஆக நியமிக்க இருப்பதாக ஆசை வார்த்தைகளைக் கூறுகிறார். அதைக் கேட்ட ராதா,

> "என்னை ராஜ்ய சபா எம்.பி. ஆக்கி என்னுடைய போராட்ட உணர்வுகளை மழுங்கடிச்சி அணைக்குச் சாதகமாக மாத்திடலாம்னு நினைக்கறீங்க. அப்படித்தானே. அது ஒருக்காலும் நடக்காது. இது முன்னமே தெரிஞ்சிருந்தா நான் உங்களை சந்திக்கவே வந்திருக்க மாட்டேன்." *(ப. 62)*

என்கிறார். கணவனையும் பிரிந்து, தனக்குக் கிடைக்கும் எம். பி. பதவியையும் நிராகரித்து, பழங்குடியினருக்காக அரசாங்கத்தையும் அரசியல்வாதிகளையும் எதிர்க்கத் துணிந்தது ராதாவின் மனிதநேயம்.

அணை கட்டும் வேலை பலத்த போலீஸ் பாதுகாப்போடு நடந்து கொண்டுதான் இருந்தது. ராதா பல போராட்டங்களை நடத்தினாள். தொண்டு நிறுவனங்கள், தேசம் முழுதும் கிளர்ச்சி செய்தன. பெரிய தியாகிகள் வெகுநாட்கள் உண்ணா விரதம் இருந்து மெலிந்து போனார்கள். அணை கட்டும் வேலையின் வேகம் குறையவில்லை. ராதாவும் தளராமல் கோர்ட்டில் வழக்குப் பதிவு செய்தாள். அதனை விசாரித்த நீதிபதியும் இவர்களுக்குச் சாதாகமான தீர்ப்பை வழங்கவில்லை. அப்போதும் ராதா சிமனின் உதவியோடு அமைதியான முறையில் ஒரு பேரணியை நடத்தினாள். அப்போது போலீஸாரால் இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சிறை சென்ற ராதாவை வெளியில் விட மறுத்து விட்டது போலீஸ்துறை. ஒரு குறிப்பிட்ட இன மக்களுக்காகத் தன் மணவாழ்க்கையை இழந்து, அவர்களுக்காகச் சிறை சென்ற ராதாவின் மனிதநேயம் போற்றற்குரியது.

சிமன்

பழங்குடியினரிடையே ஓரளவு படித்தவன்; கோவிந்த் பாயின் ஒரே மகன். தன் இன மக்கள் ஏமாற்றப்படுவதையும் நசுக்கப்படுவதையும் எதிர்ப்பவன். அணை கட்டும் பணியை எதிர்க்க முதன் முதலில் வித்திட்டவன். தன் காதலையும் தன் தந்தையையும் அணை எதிர்ப்புப் போராட்டத்தில் பறி கொடுத்தவன். ராதாவுடன் சேர்ந்து சின்னச் சின்னதாய்ப் பல போராட்டங்களில் ஈடுபட்டவன்; ராதாவின் வலதுகரமாக விளங்கியவன். ராதா, சிமனைப் பார்த்து,

> **“சிமன்! உன்னை மாதிரி விழிப்புணர்வு இருக்கிற இளைஞர்கள் எண்ணிக்கை மட்டும் நம்ப நாட்டில் அதிகமாயிட்டா, நம்மை யாராலும் ஏமாத்த முடியாது”** (ப. 33)

எனக் கூறுவதிலிருந்து பழங்குடி மக்களிடையே அவன் வேறுபட்டு நிற்பது புலனாகிறது.

இவர்கள் போராட்டம் பல நடத்தியும் அரசாங்கம் அணை கட்டும் பணியை நிறுத்தவில்லை. அதற்கென ஓர் அதிகாரியை அரசாங்கம் நிர்ணயித்துள்ளதை அறிந்து நிதின் ஆத்திரத்துடன் கூற, சிமனோ எவ்வித பதட்டமும் காட்டாமல், 'நாம்ப சந்திக்க இருக்கிற போராட்டத்துல இது ஒரு சின்ன திருப்பம்' (ப. 35) எனவும்,

> **“உணர்ச்சி வசப்படறதால எந்தத் தீர்வும் கிடைக்காது. புதுசா வந்திருக்கிற அதிகாரிகிட்டப் பேசிப் பார்ப்போம். இதுவரைக்கும் இந்தப் பிரச்சனைக்குத் தனியா யாரும்**

பொறுப்புனு இல்லாததாலதான் நாம்ப கஷ்டப்பட்டோம். எல்லாக் கதவையும் போய்த் தட்டினோம். திறக்காதாங்கற நப்பாசையால. இப்ப இந்தக் கதவைத்தான் தட்டணும்னு தெளிவாத் தெரிஞ்ச பிறகு தட்டிப் பாத்துடுவோம்." (ப. 35)

என்றும் கூறுவதிலிருந்து அவன் நிதானமாகச் சிந்தித்துச் செயல்படும் விதத்தை உணரமுடிகிறது.

சிமன், ராதாவின் உதவியோடு நடத்திய ஊர்வலம் தேசீய அளவில் மக்களது கவனத்தைக் கவர்ந்தது. இந்த ஊர்வலத்தால் கோவிந்த் பாய், சிமன் போன்றவர்கள் அகில இந்திய அளவில் பழங்குடியினருடைய தலைவர்களாக வெளிப்பட்டார்கள். சிமனுடைய பேட்டி தொலைக்காட்சி, பத்திரிகைகள் எல்லாவற்றிலும் வெளியானது. சிமன் அப்பகுதியிலிருக்கும் அத்தனை பழங்குடி மக்களையும் அணைக்கு எதிராக உசுப்பி விட்டு, யாரும் காலி பண்ணச் சம்மதிக்கக் கூடாது என்று அவர்களை ஒன்று திரட்டினான்.

சுதீரின் உதவியால் வழக்குப் பதிவு செய்து வந்த சிமனுக்கு நிதினின் மரணம் நம்ப முடியாததாக இருந்தது. ஆனாலும் தன் போராட்டத்தைக் கைவிடவில்லை. சுதீர் மாற்றலாகிச் சென்ற பின்பு ராதாவின் உதவியோடு போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தினான். ஆனால் அணை கட்டும் பணி மட்டும் நிற்க வில்லை. ராதாவும் சிமனும் அமைதியான முறையில் ஒரு பேரணி நடத்துகின்றனர். போலீஸ் அவர்கள் இருவரையும் கைது செய்து சிறையிலடைக்கின்றது. அப்போதும் மனதிடத்தோடு இருக்கும் சிமன், பல மாதங்களுக்குப் பின் வெளி வருகிறான். தன் தந்தையைக் காணச் சிந்தூருக்குச் செல்கிறான். அங்கே, மழை வெள்ளத்தின் காரணமாக தன் வீடு, தன் தந்தை, தன் கிராமம் எதையும் காணாது மலைத்து நிற்கிறான். ஆனாலும் தன் தந்தை தன்னுடனே, இந்த ஆற்றிலேயே இருப்பதாக எண்ணி, தன் பணியைத் தொடர்கிறான். தன் தந்தை இறந்த செய்திக்குப் பின்பும் தன் நிலை மாறாது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வேறிடத்தில் குடி பெயர்ந்திருக்கும் தன் இன மக்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்ய முன் வருகிறான்.

அருகிலிருக்கும் ஊர்களிலிருந்தும் தான் அறிந்த தொண்டு நிறுவனங்களிலிருந்தும் உணவு வரவழைத்து மக்களுக்கு அளித்தான். அந்தச் சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள நினைத்த அரசாங்கம், அதிகாரிகளின் மூலமாக உணவுப் பொருட்கள், தானியங்கள், உடைகளைக் கொடுத்து அனுப்பியது. அரைப் பட்டினியில் இருக்கும் அந்த நேரத்திலும் அவற்றை ஏற்க மறுத்து திருப்பி அனுப்பி விடுகிறான் சிமன்.

தன் இன மக்களுக்காக, தன் வாழ்க்கையையும் தன் தந்தையையும், உடன் உதவிய நண்பர்களையும், தன் கிராமத்தையும் இழந்த அந்தச் சூழ்நிலையிலும் அணை எதிர்ப்புப் போராட்டத்தில் சிறிதும் பின்வாங்காத அவனின் செயலால், அவனை ஒரு மனிதநேயமிக்க இளைஞனாகக் காண முடிகிறது.

சந்தீப்; நிதின்

சந்தீப், நிதின் இருவரும் நகரப் பகுதியிலிருந்து வந்தவர்கள். இவர்கள் பழங்குடியினர் அல்லர். என்றாலும் ராதாவுடன் அணை எதிர்ப்புப் போராட்டத்திற்குக் குரல் கொடுத்தவர்கள். தம் பெற்றோரை விட்டுப் பிரிந்து பழங்குடியினருக்காகப் போராட வந்த இவ்விரு இளைஞர்களில் சந்தீப் நிதானப் போக்குடையவன்; நிதினோ தீவிரவாத எண்ணமுடையவன்.

அணை கட்ட ஆரம்பிக்கும் முன்பு, கோகுல் நரபலி கொடுக்கப்பட்டதை யூகமாக அறிந்த நிதின், தன்னுடன் சில பழங்குடி இளைஞர்களை அழைத்துக் கொண்டு எதிர்க்கரைக்குச் சென்று அதிகாரிகள், கூலி ஆட்கள் அனைவரையும் அடித்ததோடு இல்லாமல் நெருப்பும் வைத்து விடுகிறான். சாத்வீகப் போக்குடைய சிமன், ராதா, சுதீர் இல்லாத நேரத்தில் கூலியாட்களுக்கும் கோகுல் மரணத்திற்கும் தொடர்பு இருக்காது என்பதைக் கூடப் புரிந்து கொள்ளாமல் நிதின் தாக்குதலை மேற்கொண்டான்.

சிந்தூர் பகுதியிலிருந்த சந்தீப், எதிர்க்கரையில் நடக்கும் வன்முறையைக் கண்டு பதறி, விரைந்து அவ்விடம் சென்று,

> "நம்ப இயக்கத்திற்கு எவ்வளவு கெட்ட பெயரை வாங்கித் தரக்கூடிய செயலை நீ செஞ்சிருக்கே தெரியுமா? அதுவும் ராதா பஹன், சிமன், சுதீர் சாப் யாருமே இல்லாத போது எவ்வளவு ஜாக்கிரதையோட இருக்கணும்? இப்படி விளையாட்டுத்தனமாக நீ செஞ்சது அவங்களுக்கு எவ்வளவு கெட்ட பேரை உண்டாக்கும்? இது மேல விசாரணை, கேஸூனு எவ்வளவு தூரம் நம்ப சக்தி விரயமாகுமோ, அதிலயும் அப்பாவிக் கூலிகளைப் போட்டு அடிச்சிட்டு வந்திருக்கீங்க. அவங்க என்ன பண்ணுவாங்க" (ப. 112).

என்கிறான். இதில் தாங்கள் மேற்கொண்டுள்ள பணி திசை திருப்பப் பட்டு விட்டதே என்ற ஆதங்கமும், அப்பாவிக் கூலியாட்களுக்கு ஏற்பட்டுள்ள கொடுமையைக் கண்டு இரங்கும் குணமும் தெரிகிறது.

போலீஸ், நிதின் மற்றும் பழங்குடி இளைஞர்கள் பலரையும் கைது செய்து, அடித்துத் துன்புறுத்திச் சிறையில் அடைத்தது. இயல்பிலே சேவை செய்யும் குணமுடைய நிதின், அவசர குணத்தால் செய்து விட்ட பிழையை எண்ணிப் பலவாறு வருந்துகிறான். தான் சிறையில் அடிபட்டுக் கிடக்கிற அந்நிலையிலும் இன்ஸ்பெக்டரை நோக்கி,

> "மிஸ்டர் நாபர், நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க. இவங்களையெல்லாம் கூட்டிக்கிட்டுப் போனது நான்தான். என்னைத் தண்டிக்க உங்களுக்கு உரிமை உண்டு............ என் மேல வழக்குப் பதிவு செய்யுங்கள். நான் எல்லா குற்றத்தையும் ஏத்துக்கத் தயார்" (ப. 116)

என்கிறான். தன்னால் பழங்குடி இளைஞர்கள் துன்பப்படுவதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

நிதினை வெளியில் கொண்டு வர வழக்கறிஞரை அழைத்துக் கொண்டு சந்தீப்பும் கோவிந்த் பாயும் செல்கின்றனர். எஸ். ஐ. இல்லாத காரணத்தால் அவர்களால் அவனை வெளிக்கொணர முடியாமல் திரும்புகின்றனர். மறுநாள் கோர்ட்டில் சந்திக்கச் செல்கின்றனர். அங்கும் அவனைக் காணவும் சந்திக்கவும் இயலாமல் காவல் துறைக்குச் செல்ல, அங்கு நிதின் தற்கொலை செய்து கொண்ட செய்தியைக் கேள்விப்பட்டு அதிர்கின்றனர். நிதினின் பெற்றோர்கள் வந்து விட, நிதினின் உடலைச் சிந்தூருக்கே எடுத்துச் சென்று இறுதிச் சடங்குகளைச் செய்ய விரும்புகின்றனர். தங்களுக்கு மகனாக இருந்ததைக் காட்டிலும் சிந்தூருக்குத் தான் பிரியமான பிள்ளையாக இருந்த நிதினை சிந்தூருக்கே சேர்த்து விட்ட அவனின் பெற்றோரின் வழி நிதினின் மனிதநேயம் புலப்படுகிறது.

சுதீர், ராதா ஆகியோர் இல்லாத நிலையில் சந்தீப் அந்தக் கிராம மக்களுக்கும் சிமனுக்கும் உதவியாகவும் உறுதுணையாகவும் இருந்து தன் வாழ்க்கையை அக்கிராம மக்களுக்கே அர்ப்பணித்து விடுகிறான்.

இவ்வாறு, சிந்தூர் கிராமத்திற்கு எந்த விதத் தொடர்பும் இல்லாத நிதின், சந்தீப் ஆகிய இருவரின் மனிதநேயம் சிறப்பாகச் சுட்டக் கூடியது.

முடிவுரை

படிப்பறிவோ வெளி உலகத் தொடர்போ இல்லாத பழங்குடியினர் வாழும் ஏதோ ஒரு மூலையிலிருக்கும் சிந்தூர் என்ற

கிராமம் அழியப் போவதைத் தடுக்கப் போராடும் இந்நாவலின் பாத்திரங்களின் வழியே,

1. இயற்கையின் மீது கொண்ட நேசம்.
2. அறிமுகமில்லாத மக்களின் அவலநிலையைக் கண்டு இரங்கும் செயல்.
3. தனக்கு எந்தத் துன்பம் வந்தாலும் அதைப் பொருட் படுத்தாது, ஆதரவற்ற மக்களுக்கு உதவும் மனப்பான்மை.
4. தன் வாழ்க்கையையே பிறருக்காகத் தியாகம் செய்யும் மனப்பான்மை.
5. தன்னலம் கருதாது பிறர் நலனுக்காக வாழும் தன்னலமின்மை.

ஆகியவற்றை மனிதநேயத்தை வெளிப்படுத்தும் கூறுகளாகக் காண முடிகிறது.

******

பாலகுமாரனின் 'நிலாவே வா' நாவலில் மனிதநேயம்

க.ப. வித்யாதரன்
ஆய்வாளர்

புதினம் என்பது வாழ்க்கை நிகழ்வுகளின் பதிவேடு எனலாம். வரலாற்றுப் புதினம், சமூகப் புதினம், தொன்மப் புதினம் எனப் பல வகையான புதினங்கள் இன்றைய நவீன இலக்கியங்களாகத் தமிழில் உலா வருகின்றன. படைப்பாளன் தன் வாழ்க்கை அனுபவங்களையும், பிறர் வாழ்க்கையில் கண்ட நிகழ்வுகளையும் வெளிப்படுத்தும் இலக்கியப் படைப்பு புதினமெனப் போற்றப்படுகிறது. இலக்கியச் செறிவு நிறைந்த புதினம், சித்தாந்தங்களை விளக்கி நிற்கும் புதினம், வணிகப் புதினம் என மூன்று நிலைகளில் புதினத்தை விமர்சிப்பர் திறனாய்வாளர்.

இற்றை நாளில் நந்தவனத்தில் பூத்த பூக்கள் போல் எத்தனையோ வண்ணவண்ணப் புதினங்கள் வெளிவரத்தான் செய்கின்றன. இத்துறை சார்ந்த எழுத்தாளர்கள் தங்கள் பங்களிப்பாகப் பல்வேறு பொருண்மைகளில் தங்கள் படைப்புகளைப் படைத்துள்ளதையும் காணமுடிகிறது. அவ்வகையில் பாலகுமாரன் ஐம்பதிற்கும் மேற்பட்ட புதினங்களைப் படைத்துள்ளார். இவற்றில் 'நிலாவே வா' என்ற புதினம் சமூகச் சிந்தனையோடு எழுந்த படைப்புகளில் ஒன்று. இது மனிதநேய அகல் விளக்காய் விளங்குகின்றது. இப்புதினம் காட்டும் மனிதநேயச் சிந்தனையை ஈண்டுக் காணலாம்.

கதைச்சுருக்கம்

சிறுவன் ராமு என்ற மூளை வளர்ச்சி அற்ற பையன் பிச்சைக்காரக் கிழவி (பிச்சம்மாள்)யால் பல கொடுமைகளுக்கிடையே வளர்க்கப்பட்டு வருகிறான். அக்கிழவி அவனைப் பிச்சை எடுக்கும் இயந்திரமாகப் பயன்படுத்தி வருகிறாள். அன்று தெப்பத் திருவிழா. ஊரே கூடி நிற்கிறது. அங்கு மாங்காய் மண்டைப் பையன் ராமு கிழவியால் பிச்சை எடுக்க விடப்படுகிறான். 'ஜூனியர் சண்டே' பத்திரிகை நிருபர் ரங்கராசன் அவனைப் பார்க்க நேரிடுகிறது. கிழவி தரும் துன்பத்தையும் அதனால் அந்தப் பையன் படும் பாட்டையும் பார்த்து ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் அவனுக்குக் கோபம்

வருகிறது. அந்தப் பையனை எப்படியாவது துன்பத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நிலையில் மாங்காய் மண்டைப் பையனைப் பற்றி **'மனித மிருகம்'** என்ற தலைப்பில் கட்டுரை எழுதுகிறான்.

கட்டுரை, வாசகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெறுகிறது. அக்கட்டுரை அமைச்சரின் பார்வை வரை செல்கிறது. அமைச்சரின் தூண்டுதலால் கிழவியிடமிருந்து ராமு காவல் துறையினரால் மீட்கப்படுகிறான். மருத்துவப் பரிசோதனைக்கும் அனுப்பப் படுகிறான். இவையெல்லாம் முடிந்த பிறகு ராமு மீண்டும் அனாதை யாகிறான். அவனைப் பொறுப்பெடுத்துக் காப்பாற்ற எந்த அதிகாரியும் முன் வரவில்லை.

ரங்கராசன் ராமுவின் எதிர்காலத்திற்காக "ஜூனியர் சண்டே" பத்திரிகையின் ஆசிரியரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் ஒரு கட்டுரை எழுதுகிறான். மக்கள் மன்றத்திலிருந்து எதிர்பார்த்த அளவிற்கும் மேலாக (இரண்டரை லட்ச ரூபாய்க்கு மேல்) நிதி குவிகிறது.

நிதியை வைத்துக் கொண்டு ராமுவிற்கு நல்ல மருத்துவம் தர ரங்கராசன் முயல்கிறான். மூளை வளர்ச்சியற்ற குழந்தைகளுக்கு ஓர் ஆசிரமம் வைத்து நடத்தும் நந்தினியின் உதவி கிடைக்கிறது. சிறுவனை இழந்த கிழவி, நந்தினியின் காப்பகத்திலிருந்து ராமுவைக் கவர்ந்து செல்கிறாள். அது மட்டுமின்றி ராமுவைத் தன்னிடமிருந்து பிரித்து விட்டதாக ரங்கராசன் மற்றும் நந்தினி மீது வழக்குத் தொடருகிறாள்.

பணத்தாசை கொண்ட இரண்டு வழக்கறிஞர்கள் இந்த வழக்கை நடத்த விரும்புகின்றனர். கிழவிக்குப் பணம் கிடைத்தால் அதில் பெரும்பங்கு தமக்குண்டு என எண்ணினர். ஆனால் தருமம் வென்றது. தன்னலமற்றுத் தொண்டாற்றிய ரங்கராசன் நீதிபதியால் பாராட்டப்பட்டான். நந்தினியின் பணி பாராட்டப்பட்டது. பின்னர் நந்தினியை மணந்து கொண்டு அவளின் ஆசிரமப் பணிக்குத் துணையாக விளங்குகிறான் ரங்கராசன்.

நேயம் ஒரு விளக்கம்

நேயம் என்பது நேசத்தைக் குறிக்கும். ஒன்றன் மீது அல்லது ஒருவரின் மீது நாம் செலுத்துகின்ற பரிவின் வெளிப்பாடே இங்கு நேசம் - நேயமெனப்படுகிறது.

HUMANITARIANISM என்ற சொல்லுக்கு விளக்கம் தரும்பொழுது A DOCTRINE, ATTITUDE OR WAY OF LIFE CENTERED ON HUMAN INTERESTS OR VALUES. [1] அதாவது மனித வாழ்க்கையை மையப்படுத்தி அதன் வளர்ச்சிக்காகச் செயல்படுவதே மனிதநேயம் என்கிறது (Webster's Seventh New Collegiate Dictionary G & C Merriam Company Publishers Spring Field - USA - 1971 - Page 404).

பரிவுக்கும் அப்பாற்பட்டு எடுத்துக் கொண்ட செயலில் ஈடுபாடுகாட்டி அச்செயலில் முன்னின்று அச்செயல் நிறைவடையும் பொருட்டுச் செயலாற்றுதல் மனிதநேயத்தின் பாற்படும்.

படைப்பாளரின் மனிதநேயச் சிந்தனை

எந்த ஒரு காரியத்தைச் செய்யும் போதும் அதில் முழுமையான, உண்மையான ஈடுபாடு இருக்க வேண்டும். அது செய்யும் காரியத்திற்கு வெற்றியைத் தருவதோடு மனிதநேய வெகுமதியையும் நல்கும் என்ற கருத்து விளங்க ஆசிரியர் ரங்கராசனும் அவனுடைய நண்பன் நசிகேத்தும் இச்சிறுவனைப் பற்றிப் பேசிக் கொள்ளும்பொழுது இவ்வாறு எழுதுகிறார். "ரங்கராஜ் இது பாதாள சாக்கடையோ, கஞ்சாப் பயிரோ இல்லை. போலி சாமியாருன்னு விசாரிச்சுட்டு எழுதிட்டா எழுதறதோட முடிஞ்சு போச்சு. கஞ்சாவை வெட்டி அழிச்சுட்டா முடிஞ்சுது. இது வேற விஷயம். கடைசி வரைக்கும் நம்ம கை இதுல இருக்கும். எவன் கேள்வி கேட்பினும் எப்ப கேள்வி கேட்டாலும் நாம பதில் சொல்லனும். என்னை மாதிரி இந்தக் குழந்தையும் அனாதைன்னு நினைச்சுதானே கட்டுரையில் பொங்கின. இப்ப நீயும் அனாதை இல்லை. அந்தப் பையனும் அனாதை இல்லை லைஃப் ஈஸ் ரிலேஷன்ஷிப், தொடர்பு கொள்ளலே வாழ்க்கை. தொடர்பைப் பலப்படுத்திக்கிறதே சினேகம்".[2] இந்த இடத்தில், ஆசிரியர் பத்திரிகையாளர் என்ற நிலையில் ஒரு பத்திரிகையாளனுக்குப் பொதுநலப் பொறுப்புடன் கூடிய மனிதநேயம் எந்த அளவு இருக்க வேண்டுமென்பதைத் துல்லியமாகக் காட்டியுள்ளார்.

தொழிலும் ஆத்மார்த்தமும்

இப்புதினத்தில் ஆசிரியர் நடைமுறை உண்மைகளைப் பற்றிப் பேசும் போது அது எத்தனை நிதர்சனமானது என்பதை இங்கே படம்பிடித்துக் காட்டுகிறார். "என்றைக்கு ஜூனியர் சண்டே ரிப்போர்டர் ஆனேனோ அன்று ஊர் வஞ்சனை முழுவதும் எனக்கு

வந்து விட்டது. யார் திருடன், எப்படிப்பட்ட திருடன், எவன் பொய்யன், எவ்வளவு தூரம் பொய்யன் என்று ஆட்களை அணுகும் போதே புலி பிடிக்கிற கவனமும், நிதானமும், மறைவும், பதுங்கலும், கம்பும், வேட்டைக்காரனாய் மாறிவிட்டது"[3] "..........உண்மையுடன் எவருமில்லை, எல்லாம் நடிப்பு, துக்கம், சந்தோஷம், பெருமிதம், பாராட்டு, எல்லாம் நடிப்பு, மரணம் பரியந்தமும் நடிப்பு. நீ துக்கப்படுவது போல் நடி. நான் தேற்றுவது போல் நடிக்கிறேன். நீ வெற்றி பெற்று சிரிப்பவன் போல் நடி, நான் பாராட்டுபவனாய் நடிக்கிறேன். மரண பரியந்தமும் நடிப்பு"[4].

மேற்சொன்ன பகுதியில் ரங்கராசன் மனத்தில் தோன்றும் எண்ண ஓட்டங்கள் வழியாக இச்சமுதாயம் எந்தளவு சீர்கெட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர். இது சார்பான மற்றொரு காட்சி "ஜூனியர் சண்டேயா...... பாகிரதி இரு .... இரு. நகருங்க நானே வரேன். வம்பு புடிச்சவனுங்க........ பெரிய டாக்டர் கண்டுக்கவே இல்லைன்ன எழுதுவானுங்க.......... சார் .... பையன் நார்மலா இருக்கான். சரியான டயட் இல்லை. அதனால கொஞ்சம் ப்ராப்ளம். ரெண்டு நாள் வச்சிருந்து அனுப்பிடுவோம்.......... எங்க அனுப்பறது...... போலீஸ் ஸ்டேஷனுக்கு........... ஏன் சந்தை மடமா அது......... ரிப்போர்ட் எழுதிக் குடுத்தீங்க........... வெளியே எடுத்தாந்துட்டோம்......... அப்புறம் யார் சுமக்கறது....... ரைட்டர் சுள்ளென்று பேசினார். ஜூனியர் சண்டேல விட்டுரு வளர்க்கட்டும்....... பெரிய பீத்தலா எழுதறாங்க இல்லை? டாக்டர் கெக்கலித்தார்"[5] மேற்சொன்னவற்றில் இரண்டு விதமான மனநிலை கொண்ட மனிதர்களைச் சிந்திக்கிறார் ஆசிரியர். முன்னதில் பொறுப்போடு விளங்கும் ரங்கராசன் வழியாகத் தானெடுத்துக் கொண்ட வேலையில் என்ன துயரங்கள், தடைகள் வந்தாலும் மனிதநேயம் கருதி அவற்றை ஏற்றுக் கொள்வதும், பின்னதில் நோயைக் குணப்படுத்த வேண்டிய மருத்துவர், உயிர்க்குப் பாதுகாப்புத் தர வேண்டிய காவலர் ஆகிய இருவருமே மனிதநேயமில்லாத காரணத்தால் கொச்சையாக விமர்சித்துக் கொள்வதும் அதன் வழி அவர்களின் பொறுப்பின்மையைக் காட்டுவதும் இங்குக் கருதத்தக்கது.

இக்கதையில் முதன்மைப் பாத்திரமாக விளங்கும் மாங்காய் மண்டைப் பையன் (ராமு) மூளை வளர்ச்சி அற்றவன் என்பது சொல்லப்பட்டிருந்தாலும் அவன் நிலை குறித்து ஆசிரியர் விளக்கும் போது ஒரு பரிவு தாண்டிய அருள் நோக்கு நம்மிடையே முகிழ்க்கிறது. அப்பையனைப் பற்றிச் சொல்லும் போது "இவனுக்கு மொழி தெரியவில்லை, சைகைகள் புரியவில்லை, தொடல் புரிகிறது.

கன்றுக்குட்டி சொறிந்து கொடுக்க கழுத்து நீட்டுமே அதுபோல, குதிரையைத் தடவத் தடவ அருகே வந்து உரசுமே அது போல, விரலால் தூக்க தோளுக்குத் தாவி கழுத்தில் அலகு உரசும் சிட்டுக் குருவி போல பாஷை தாண்டி கண் வழியே பேசாது தொடல், தொடல், தொடல் மட்டும் புரிந்தது அவனுக்கு."[6] என பையனின் நிலையை வர்ணித்து விட்டு மேலும் அவனைப் பற்றிக் கூறும் போது, "பிறக்கும் போதே துறவி, விருப்பு வெறுப்பற்ற துறவி சும்மா இருத்தல் என்பது சொல் அல்ல; செயல் அல்ல; இயல்பு இதற்கு. புத்தியுள்ள அத்தனை பேரும் மூளை மலத்தைக் கழுவிக்கழுவி அவஸ்த்தைப் பட்டுக் கொண்டிருக்க இது மலமேயல்லாமல் நிர்க்குணமாய் பிறந்திருக்கிறது. வியந்து வியந்து, பரக்கப் பரக்க, சகலமும் பார்த்து விட்டுப் போய்ச் சேரும்.... காதல் இல்லை, காமம் இல்லை; பொய் இல்லை; சொத்து ஆசை இல்லை; பெருமை இல்லை; பொய்யில்லை; அவமானமில்லை; சோறு தண்ணீர் போதும்''[7] எனச் சொல்வதிலிருந்து எந்த அளவிற்கு அந்த உயிர் நேசிக்கப்பட வேண்டுமென்பதை ஆசிரியர் தெள்ளத்தெளிவாகக் காட்டுகிறார்.

ரங்கராசன்

பாலகுமாரன் தன்னுடைய 'நிலவே வா' கதையின் நாயகனாக அறிமுகப்படுத்தும் ரங்கராசன் சமூக உணர்வுடையவன் என்பதை அவன் ஏற்றுக் கொண்ட பணியைப் பொறுத்து மட்டும் சொல்லாது அவன் உள்ளத்தில் சமூக உணர்வு, மனிதநேயம், மூடநம்பிக்கை எதிர்ப்பு போன்றன சிறு வயதிலேயே ஆழப் பதிந்திருந்தன என்பதைக் கீழ்வரும் விளக்கத்தின் வழி உணர வைக்கிறார்.

"ஆறு வயதில் அம்மா செத்துப் போய் விட்டாள். ஆஸ்டல் வீடாயிற்று. முற்றும் துறந்த ஒரு சுவாமிஜி எட்டு வயசு பையனுக்கு வழிகாட்டியானார். அவர் நம்பியதை இவன் தலையில் திணித்தார்...... அப்பா, எட்டு வயதுப் பையனுக்குக் காசியிலிருந்து பஞ்ச பாத்திர உத்திரணி வாங்கி வந்தார். அதை எஸ். எஸ்.எல்.சி படிக்கிற பொழுது காவிரியில் எறிந்து விட்டான்... விவேகானந்தா காலேஜ் ஆஸ்டல் கொஞ்சம் கண் திறந்தது. ஜர்னலிசம் படித்து ஜூனியர் சண்டேயில் சேர்ந்தான். லத்தி சார்ஜுக்கு நடுவே ஓடி, பேட்டியும், போட்டோவும் எடுத்தான். கொளுத்திக் கொண்டு சாகிறவனைப் படம் பிடித்தான். அசெம்பளி குழப்பத்தைக் கட்டுரையாக்கினான். எட்டுப் பேரை குத்திக்கொன்ற கொலையில் பாதி துப்பு அவனே துலக்கினான். லாரி காண்ட்ராக்ட் பேரத்தை அம்பலமாக்கினான். இருட்டின பிறகு காட்டு வழியே மலை ஏறி கஞ்சா பயிரை விடியலில் போட்டோ

எடுத்து ஸ்கூப் எழுதினான். கோயங்கா விருது வாங்கினான். இத்தனைப் பரபரப்புக்கும் நடுவே தனியனாய் நின்றான்"[8]

ஒரு மனிதன் தான் மேற்கொண்ட வேலைகளுக்கிடையில் இரண்டு விதமான அனுபவங்களைப் பெறுகிறான். ஒன்று பொது அனுபவம். மற்றொன்று தன் அனுபவம். முன்னது சமூகத்தைப் பற்றிய அறிவைத் தருகிறது. பின்னது அவ்வறிவின் துணைகொண்டு சமூகத்திற்குச் செய்ய வேண்டிய காரியத்தை அறியப் பயன்படுகிறது. இங்கே ரங்கராசன் பல்வேறு விதமான நிகழ்வுகளைக் கண்டவன். மனிதக் குடும்பங்கள் எப்படியெல்லாம் விபரீதமாக இருக்கின்றன என்பதை அறிந்தவன். ஆகவேதான் அந்த நீரோட்டத்தில் அவன் சேரவில்லை. தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டு சமூகத்திற்கு நன்மை செய்ய முயல்கிறான். அம்முயற்சியே இராமு என்ற மாங்காய் மண்டைச் சிறுவனின் விடுதலையாக அமைகிறது.

பிச்சம்மாள்

வயது முதிர்ந்த மூதாட்டியாகக் காட்டப்படும் இவள் வன்மத்தின் மொத்த உருவமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறாள். திருவிழாவில் பிச்சை கேட்கும் பையன் குளக்கரையில் தடுக்கி வீழ்ந்த பொழுது அவன் இடுப்பில் கட்டப்பட்ட கயிற்றைச் சுண்டி இழுத்ததோடு அல்லாமல் எட்டியும் உதைக்கிறாள். அப்போது அவள், "படிசோறு துன்ற அப்புறம் என்ன அம்மா"[9] எனக் கேட்டு விட்டு வலது கைப்பிரம்பால் சுள்சுள் என்று அவன் முகத்தில் அடித்தாள் என ஆசிரியர் கூறுவது அவளின் மனிதநேயமற்ற மனநிலையை உணர்த்துகிறது.

மேலும் அவளின் கொடுமை பற்றிச் சொல்லும் பொழுது ரங்கராசன் நேரில் கண்ட காட்சியாகக் கீழ்வரும் தகவலைத் தருகிறார் ஆசிரியர். "சின்ன மூங்கில் கூண்டில் அந்தப் பையனை பிச்சம்மாள் அடித்துத் திணித்துக்கொண்ருந்தாள். கழுத்தைப் பிடித்து அழுத்தி உள்ளே தள்ளி கதவு மூடினாள். சாவியை இடுப்பிலிருந்து எடுத்துக் கதவைப் பூட்டினாள்"[10]

ரங்கராசன் முயற்சியால் விடுதலை பெற்ற ராமுவைக் கிழவி விட்டபாடில்லை. எப்படியேனும் அவனை மீட்டு விட வேண்டுமென்று ஆனந்தி வீட்டிற்கு வருகிறாள். "எவடி அவ ஆனந்தி"[11] எனத் தெருவில் நின்று தொடை தட்டி அழைக்கிறாள். அதுமட்டுமில்லாது ரங்கராசனைப் பார்த்து "வாடா சாதிக் கெட்டவனே" [12] எனப் பேசுகிறாள் அவளுக்கு எண்ணம் முழுவதும்

பணத்தின் மேல் இருந்தது என்பதைப், 'பிச்சம்மாள் லட்சத்தில் குறியாயிருந்தாள்' என ஆசிரியர் சுட்டுவதிலிருந்து அறிய முடிகிறது.

வாழ்க்கையில் உயர்ந்த தத்துவங்களோடும் நிறைந்த பண்போடும் வாழுகின்ற மக்கள், சமூகத்தின் ஓர் அங்கமாக இருந்தாலும் பிறிதொரு பக்கம் பிச்சம்மாள் போன்ற மனநிலை உள்ளோரும் உண்டு, இவர்கள் சுயநலத்தின் எல்லையைத் தொட்டவர்கள் என்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். பிச்சம்மாள் பாத்திரத்தைப் படிப்போருக்கு ஆத்திரத்தையும், தார்மீகக் கோபத்தையும் எழுப்பும் என்றாலும் அது ராமுவிடத்து அளவற்ற அருளாகப் பாய்ந்து மனிதநேயத்திற்கு வித்திடுகிறது.

நந்தினி

இக்கதையில் மற்றொரு பாத்திரமான நந்தினி திருமணமாகித் தன் கணவன் பரசுராம ரெட்டியோடு மோட்டார் சைக்கிளில் செல்லும் போது ஏற்பட்ட விபத்தில் கணவனை இழந்தது மட்டுமில்லாமல் தானும் விபத்துக்குள்ளாகி அவளின் கருவும் அதிர்ச்சிக்குள்ளாகிறது. அதுமட்டுமின்றிக் கணவனை இழந்த கவலையில் தற்கொலைக்கு முயற்சித்ததாலும் கருவிலுள்ள குழந்தை பாதிக்கிறது. குழந்தை பிறந்த பொழுது அது மாங்காய் மண்டைக் குழந்தையாகப் பிறக்கிறது.

ராமுவை இவனது ஆசிரமத்தில் சேர்க்க வந்த பொழுது ரங்கராசன் இந்தத் தொழிலை விரும்பியா எடுத்தீர்கள் என்று கேட்ட பொழுது மேற்சொன்ன செய்தியைக் கூறி அதனால் இத்தொழிலில் தன்னை வலிந்து ஈடுபடுத்திக்கொண்டதாகச் சொல்கிறாள். இருப்பினும் காலப்போக்கில் அதுவே அவளது நெஞ்சத்தில் கருணையை ஏற்படுத்தித் தன் குழந்தையைப் போலுள்ள பிற குழந்தைகளுக்கும் தன்னாலான உதவியைச் செய்ய வேண்டுமென்ற அருள் உள்ளத்தைத் தூண்டியதன் காரணமாக அந்த ஆசிரமத்தைக் கட்டிக் காத்து வருவதாகக் கூறுகிறாள். அதைப்பற்றி அவள் சொல்லும் பொழுது,

"குழந்தை பெத்து - பெத்த ஒரு வருஷத்திற்குப் பிறகு இதனுடைய குறை தெரிஞ்சு - இதுக்குப் பள்ளிக்கூடம் தேடி சரியா இல்லாம நானே ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிச்சேன். அப்பா கரஸ்பான்டென்ட் - நான் ஹெட்மிஸ்ட்ரஸ் பதினாறு பேர் ஸ்டூடண்ட்ஸ் - வாழ்க்கை போறது - இப்படி மொள்ள_ மொள்ள" [13]

இவள் மனத்தில் உள்ள இரக்கச் சிந்தனையைப் பற்றிக் குறிப்பிடும் இடமாக ராமுவை இவளது பள்ளியில் சேர்க்க வரும்

பொழுது ரங்கராசனிடம் இப்படிக் கூறுகிறாள். "நான் பணக்காரி இல்லை. இன்னொரு குழந்தை எனக்குக் கஷ்டம் தான். ஆனாலும் அந்தக் கட்டுரை எனக்குக் கஷ்டமாக இருந்தது. பையனை கூட்டி வாங்கப் பார்க்கலாம் எனச் சொல்கிறாள்"[14]

பிறிதொரு இடத்தில் ராமுவைப் பற்றி ரங்கராசன் கட்டுரை எழுதும் போது நந்தினியை மனத்தில் வைத்து இவ்வாறு எழுதுகிறான். "ஒரு தாய் தோள் கொடுக்க வந்திருக்கிறாள். சோறு பிசைந்து ஊட்டிவிட தயாராய் இருக்கிறாள்"[15] என்று கட்டுரையை எழுதிச் செல்லுகிறான். இதில் நந்தினியின் தாயுள்ளத்தையும் அதன் வெளிப்பாடான மனிதநேயத்தையும் உணரமுடிகிறது.

வழக்கறிஞர்

சமூகத்தில் நீதியின் காவலர்களாக விளங்க வேண்டிய வழக்கறிஞர்கள் பாதிக்கப்பட்ட பாமர மக்களுக்குத் தக்கத் துணையாக இருந்து போராட வேண்டியவர்கள். ஆயினும், பணமே குறியாகவும், புறவழியில் அதனைப் பெற்று விட வேண்டும் என்ற எண்ணத்திலும் இப்புதினத்தில் வழக்கறிஞர்களாக உலாவரும் வரதாச்சாரி மற்றும் கிட்டானி ஆகிய இருவரும் மனிதநேயத்துக்கு உலை வைக்கும் மனித மிருகங்களாக விளங்குகின்றனர்.

பிச்சம்மாவுக்காக வரதாச்சாரியும், நந்தினி சார்பாகக் கிட்டானியும் வழக்காடத் தீர்மானிக்கின்றனர். இதில் நந்தினி சார்பாக வழக்காடும் கிட்டானி தன் பக்கத்தை வலிமையாக நியாயப்படுத்தாமல், வரதாச்சாரி வெற்றி பெறும்படி தன் வாதத்தை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று இருவரும் பேசிக் கொண்டு செயல்படுகின்றனர்.

இத்தகைய மனோநிலை உடைய மனிதர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது ஆசிரியர், "பணமும், புத்தியும், பொழுதும் உள்ள இரண்டு அறிஞர்கள், இன்றைய இந்தியாவின் அடிப்படையான அஸ்திவார துன்பங்கள் விளையாட சட்ட மைதானத்தில் இறங்கினார்கள். கை குலுக்கினார்கள். ராமு என்ற மூளை வளர்ச்சி இல்லாத மனசும், உடம்பும் நோயுற்ற, தாய் தகப்பனில்லாத ஒரு மாங்கலாய்ட் பையனைப் பந்தாக்கினார்கள். மூலைக்கு மூலை உதைத்தார்கள்."[16]

இவ்விடத்தில் பொதுமக்கள் பணமான இரண்டரை லட்சத்தை எப்படியாவது தன் வயப்படுத்திக் கொள்ள இவ்விரு வழக்கறிஞர்களும் முயன்றதைக் காணமுடிகிறது.

நீதியும், மனிதநேயமும்

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி ராமுவிற்கு நடந்த கொடுமை கண்டு நெஞ்சு குமுறுகிறார். அவர் மனம் சினத்தால் கொதிக்கிறது. காவல்துறை கொண்டு வந்து காட்டிய ராமுவிற்காகச் செய்யப்பட்டிருந்த மூங்கில் கூண்டைக் கண்டதும் நீதிபதி பதறி விட்டார். அதன் வெளிப்பாடாக, "தெய்வமே, இதில் இந்தப் பையன் அடைக்கப்பட்டானா, உண்மையா, இதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? என்று காவல்துறையை நீதிபதி அதட்டினார். இது கிரிமினல் வழக்கு, ஏன் சிவில் கோர்ட்டில் நடைபெறுகிறது? கிரிமினல் வழக்கு என்னவாயிற்று? யார் முதல் புகார் கொடுத்தது? ரங்கராசன் எங்கே? ஏன் போலீஸ் கேஸ் தொடரவில்லை? அட்டூழியம் ஐயா இது அராஜகம், நீதிபதி பலமுறை சீறினார்"[17]

இங்கே நீதிபதி நீதியின்பால் நின்று மனிதநேயத்தோடு ஆற்றிய கடமையை உணரமுடிகிறது. "மொத்தப் புத்தியும், படிப்பும் நெருப்பாய் வீசப்பட்ட பொழுது" அவற்றையெல்லாம் கவனமாகக் கேட்டுத் தீர்ப்பெழுதும் போது பத்திரிகை ஜூனியர் சண்டேயைப் பாராட்டியும், பிச்சம்மாள் தவறான வழக்குத் தொடுத்ததைக் கண்டித்தும், அவளுக்கு அந்தச் சிறுவனிடத்து எந்த உரிமையும் இல்லை என எச்சரித்தும் அது போல ரூபாய் இரண்டரை லட்சம் கோர்ட்டு கஜானாவில் சேர்க்கப்பட்டு மாதம் ரூபாய் இருநூற்று பத்து பையன் சம்பளத்திற்கென்று தரப்பட வேண்டும். அங்கயே தங்கி உணவு, உடைபெறும் பட்சத்தில் மேலும் முன்னூறு ரூபாய் தரப்படவேண்டும். பிரதி மாதம் ஐந்து தேதிக்குள் ரூபாய் ஐநூற்றுப் பத்து தரவேண்டும். இந்தச் செயலுக்குக் காரணமாக இருந்த ஜூனியர் சண்டே நிருபர் ரங்கராசனைக் கோர்ட்டு பாராட்டுகிறது என்ற வரிகளின் மூலம் நீதிபதியின் சிறப்பைச் சொன்னாலும் அது இந்நூலாசிரியரின் உளக்கருத்தாகவே கருதப்படுகிறது. அவ்வகையில் இந்நூலாசிரியர் பாலகுமாரன் மனிதநேயத்தின் பாற் கொண்ட பற்றினை அறிய முகிறது.

முடிப்பு

நோய்களில் கொடுமையானது மூளை வளர்ச்சி இல்லாத நிலையே. அத்தகையோர்க்குச் செய்யும் தொண்டே இறைத்தொண்டு அல்லது மனிதநேயம். தொடக்கம் முதல் இறுதி வரை ரங்கராஜன் ஆற்றிய கடமை மனிதநேயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. நந்தினி ஆற்றிய கடமை மனிதநேயப் பரிவிற்கு எடுத்துக்காட்டு. பிச்சம்மாள் போன்ற சமூக எத்தர்கள் மனிதநேய வளர்ச்சிக்குத் தடைக்கற்கள்.

பொருளாதார ஆசையில் புன்மையாக நடந்து கொண்ட படித்த வழக்கறிஞர் போன்றவர்கள் இச்சமூகத்தின் களைகள். கடமையுணர்வு கொண்ட நீதிபதியின் தீர்ப்பில் உள்ள கூர்மை வாய்மைக்கும் நேர்மைக்கும் மனிதநேயத்திற்கும் கிடைத்த வெற்றி. நீதிபதிகள் எந்த அளவிற்கு மாண்புடையவர்களாக இருக்க வேண்டுமென்பதற்கு நீதிபதி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

மொத்தத்தில் இப்புதினம் மனிதநேயத்தை ஆழமாக வலியுறுத்திப் படைக்கப்பட்டதென்பது வெள்ளிடைமலை.

குறிப்புகள்

1. WEB STER'S Seventh New Collegiate Dictionary, Page: 404.
2. *பாலகுமாரன், நிலாவே வா!, ப. 72.*
3. *மேலது, ப. 79.*
4. *மேலது, ப. 79-80.*
5. *மேலது, ப. 10-41.*
6. *மேலது, ப. 78.*
7. *மேலது, ப. 79.*
8. *மேலது, ப. 52-53.*
9. *மேலது, ப. 17.*
10. *மேலது, ப. 28, 29.*
11. *மேலது, ப. 108.*
12. *மேலது, ப. 109.*
13. *மேலது, ப. 63.*
14. *மேலது, ப. 65.*
15. *மேலது, ப. 67.*
16. *மேலது, ப. 119.*
17. *மேலது, ப. 120.*

******

சுபாஷ் சந்திரபோஸின் "பயிர் முகங்கள்" நாவலில் மனிதநேயம்

க. ஜெயந்தி
ஆய்வாளர்

சமூகச் சிக்கல்களைப் பதிவு செய்வதில் நாவல் இலக்கியம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. நாவலாசிரியர்களில், தாங்கள் வாழும், வாழ்ந்த இடம் சார்ந்த சமூக நிகழ்வுகளை முன்னிலைப்படுத்திப் படைப்பவர்கள் உள்ளனர். இவ்வகை நாவலாசிரியர்களில் ஒரு பிரிவினர் சமூகச் சிக்கலை வெளிச்சமிட்டுக் காட்டுவதோடு நின்றுவிடுகின்றனர். இதற்குச் சான்றாக சுப்ரபாரதிமணியனின் "பிணங்களின் முகங்கள்" நாவலைக் கூறலாம். இந்நாவலில் திருப்பூர்த் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்கள், பெண்கள் ஆகியோரின் சிக்கல்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மற்றோர் பிரிவினர் சமூகச் சிக்கலைக் கூறுவதோடு, அதற்குத் தீர்வும் கூறி, அதன் மூலம் மனித இனம் மேம்படுவதற்கான வழிமுறைகளையும் கூறுகின்றனர். இதற்குச் சான்றாகப் பாமாவின் "வன்மம்" நாவலைக் கூறலாம். இந்த நாவலில் இரண்டு சாதியினரிடையே நிகழும் வன்முறை நிகழ்ச்சிகளையும், அந்நிகழ்ச்சிகட்குக் காரணமான கூறுகளையும் விளக்கி, இறுதியில் ஒன்றுபட்டு வாழ்வதற்கான வழியையும் ஆசிரியர் கூறியுள்ளார். சுபாஷ் சந்திரபோஸின் நாவல்கள் இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவை.

> "வெளிவந்துள்ள 'மாவீரன் வாட்டாக்குடி இரணியன் சாம்பவானோடைச் சிவராமன் கண்ணந்தங்குடி வரலாறு', இப்போது வெளிவர உள்ள சிறுகதைத் தொகுப்புகள், புதினங்கள் ஆகியவற்றில் தம் வட்டார வாழ்வை இயன்றவரை பதிவு செய்வதே அவர் நோக்கம் அதில் அவருக்கு உணர்ச்சிகரமான ஈடுபாடு உள்ளது."[1]

என்பது இவர் படைப்புகள் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்தாகும். அவ்வகையில் இவரது "பயிர் முகங்கள்" என்ற நாவல் மனிதநேயத்தின் இன்றியமையாமையை உணர்த்தும் வகையில் படைக்கப்பட்டுள்ளது.

மனிதநேயம்

மனித அன்பு வெளிப்பாட்டின் உயரிய நிலை மனிதநேயமாகும். துன்பப்படும் உயிர்களைக் காணும் போதெல்லாம்

கலங்கி, அவ்வுயிர்களுக்கு உதவ முற்படுதல் இந்தப் பண்பின் சிறப்பாகும்.

> "பிறர் துன்பத்தைத் தன்னுடைய துன்பமாக ஏற்று அதை மாற்ற முயல்வதுதான் மனிதநேய நிலை"[2]

என்பது பொன்னம்பல அடிகளாரின் கருத்தாகும். சுபாஷ்சந்திரபோஸ் இத்தகைய கருத்தை அடியொற்றி, "பயிர்முகங்கள்" நாவலைப் படைத்துள்ளார்.

படைப்பாளரின் மனிதநேயம்

"பயிர் முகங்கள்" ஒரு படித்த, கிராமத்து இளைஞனைச் சுற்றிப் பின்னப்பட்ட கதையமைப்புடைய நாவலாகும். நாவலாசிரியர், நாவல் முழுவதும் கிராம மக்களின் மேம்பாடு குறித்து மனிதநேயத்தோடு சிந்தித்துள்ளார்.

நாடு முன்னேற மனிதநேயமிக்க சமூகம் உருவாகவேண்டும். இந்தப் பணியில் இளைஞர்களின் பங்கு இன்றியமையாதது என்று நாவலாசிரியர் இந்நாவலின் முன்னுரையில் கூறியுள்ளார். அந்தக்கருத்து வருமாறு:

> "மனித வாழ்வில் மாற்றங்களும் ஏற்றங்களும் விரும்பியோ விரும்பாமலோ நிகழலாம். எப்படி இருந்தாலும் மனித இனத்திற்கு என்று ஒரு பொதுவான பண்பு இருக்கின்றது. அதுவே மனிதநேயம். ஆனால் அறிவியல் என்ற வளர்ச்சியில் மனிதநேயத்தின் பக்க வேர்கள் எல்லாம் வெட்டி எடுக்கப் பெறுவதைப் போன்ற நிலை தெரிகின்றது. மனிதநேயத்தை மாய்க்கவரும் கொடிய செயல்களை மாய்க்க வேண்டும். இந்த மனிதநேயத்தை வளர்ப்பதற்கு இளைஞர்கள் முன்வர வேண்டும்" (முன்னுரை)

நாவலாசிரியர் விவசாயியாகவும் பரிணமித்தவர் என்பதால் விவசாயிகளின் சிக்கலையும் கிராம வாழ்வையும் மனிதநேயத்தோடு காட்டியுள்ளார். நாவல் முழுவதிலும் நாவலாசிரியர், வாசகருக்கு நேரடியாகக் கூறுவது போன்ற பகுதிகள் இடம்பெற்றுள்ளன. இப்பகுதிகளில் நாவலாசிரியர் கிராம மக்கள் மற்றும் கிராமத்தின் இன்றைய நிலை குறித்த தமது கருத்துகளைக் கூறியுள்ளார்.

படித்த இளைஞர்கள் பலர், தங்கள் கிராமத்து மக்கள் என்றும் பாராது சுயநலத்துடன் செயல்படுவதை நாவலாசிரியர் சுட்டிக்காட்டி இவ்விதம் தனது வருத்தத்தை வெளிப்படுத்துகிறார்.

"கிராமங்களுக்குப் பகையாக இருப்பவர்கள், கிராமத்தில் பிறந்தவர்கள்தான் என்பது வெட்ட வெளிச்சமாக இருந்தது. பேருந்தில் செக்கராக இருப்பவன் கிராமப்புற மக்களில் ஒருமாதிரியாக இருப்பவர்களை ஏற்றுவதில்லை. படித்துவிட்டு வேலையில் இருப்பவர்கள் ஊரைத் திரும்பிப் பார்ப்பதில்லை. கிராமப்புற மருத்துவமனைகளில் டாக்டராக வர யாரும் விரும்புவதே இல்லை. பணியில் சேர்ந்தாலும் விடுமுறை எடுத்தே காலத்தைக் கழித்து விடுகின்றார்கள். இப்போது நெல்கொள்முதல் நிலையத்தில் வேலை பார்க்கும் பையனும் கிராமத்தைச் சேர்ந்தவன்தான். வியாபாரிகள் பணந் தருகிறார்கள் என்று அவர்களிடம் ஒருமாதிரியாகவும் விவசாயிகளிடம் ஒருமாதிரியாகவும் நடந்து கொள்கின்றான்." (ப. 257)

கிராமத்து முன்னேற்றத்தில் அரசு பாராமுகமாக இருப்பதைக் கண்டு நாவலாசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

"கிராமங்களுக்கு ஒரு நல்ல அரசாங்கம் இருந்து செய்வதை விட ஒரு மோசமான ஊராட்சி மன்றத் தலைவர் நன்றாகச் செய்வார். அவர் எதுவும் செய்யாவிட்டால் ஊர்ப்பக்கம் நடமாட முடியாது. மழைக்காலம் வந்தவுடன் வடிகால் வாய்க்கால்களை எல்லாம் உள்ளூர் ஆட்களை வைத்துக் கொண்டு வெட்டி விடுவார். புறம்போக்கில் சவுக்குக் கன்றுகள் போட்டு வைப்பார். கோடையில் தண்ணீர்த் தட்டுப் பாடில்லாமல் இருக்க எல்லா ஏற்பாடுகளையும் பண்ணுவார். பலர் ஓரளவு வசதியோடு இருந்தால் சொந்தப் பணத்தைச் செலவு செய்துவிட்டுப் பிறகு வாங்கிக் கொள்வார்கள்.

மாறிமாறி ஆட்சியைப் பிடிக்கும் கட்சிகள் எவ்வளவுதான் வாக்குகளைப் பெற்று வந்தாலும் ஊராட்சி மன்றத் தேர்தல் என்னும்போது பயப்படுகிறார்கள். சொந்த நலனால் பல வருடங்களாகப் பல பொது நலன்கள் பாழாகிவிட்டன". (ப. 87)

இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துகள், அரசுத் திட்டங்கள் சரிவரச் செயல்பட சமூகச் சிந்தனையும் மனிதநேயமும் உள்ள மக்கள் தேவை என்ற நாவலாசிரியரின் எண்ணத்தை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன.

கிராமத்துப் பெண்களின் வேலைச்சுமை மற்றும் அதன் காரணமாக அவர்கள் அடையும் இன்னல்கள் முதலியவற்றை நாவலாசிரியர் விரிவாகக் கூறியுள்ளார்.

> "அவர்கள் செய்யக்கூடிய நடவு, களை எடுத்தல், அறுவடை செய்தல் என்ற எல்லாமே குனிந்து செய்யக்கூடிய வேலைகள். இதனால்தான் ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் விவசாய வேலை செய்யும் பெண்களின் முதுகு கூனிப் போய் விடுகின்றது". (ப. 76)

இவை கதை நிகழும் சூழ்நிலையை விளக்கும் வகையில், கதையோட்டத்தோடு தொடர்புடையதாக நாவலாசிரியரால் கூறப்பட்டுள்ள கருத்துகள் ஆகும். இக்கருத்துகள் வழி நாவலாசிரியரின் சமூக நோக்குடனான மனிதநேயத்தை உணர முடிகிறது.

படைப்பில் மனிதநேயம்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் முகங்களை, வாடிய பயிர்களின் முகமாக நாவலாசிரியர் சித்திரித்துள்ளார். விவசாயிகளின் சிக்கல்கள் இந்நாவலில் விவரிக்கப்பட்டுள்ளன.

> "சாகுபடி செய்யும் 'பயிர் முகங்கள்' தங்களைப் பார்த்துக் கொள்வதற்கு ஒரு கண்ணாடியாக அமைய வேண்டும் என்ற குறிக்கோளுடனேயே இப்புதினம் எழுதப்பெற்றுள்ளது" (முன்னுரை)

என்பது நாவலாசிரியரின் கூற்றாகும். நீரின்றி வாடிய பயிரையும் வறுமையால் வாடிய முகங்களையும் முதன்மைப்படுத்துமாறு நாவலின் தலைப்பு அமைக்கப்பட்டுள்ளமையும் மனிதநேயப் பார்வையில் அணுகத்தக்கது.

தலைமைப் பாத்திரத்தின் வழி மனிதநேயம் வெளிப்படும் சூழ்நிலைகள்

நகரத்தில் பணிபுரிவதில் சலிப்புற்று, தனது கிராமத்தில் விவசாயத் தொழிலைத் தொடர வரும் படித்த இளைஞனான மணி, அங்குச் சந்திக்கும் சிக்கல்கள் மற்றும் அதற்கு அவன் காணும் தீர்வுகள் - இவையே நாவலின் மையப்பொருள் ஆகும்.

கிராமத்தை நோக்கிப் பேருந்தில் வரும்போது கிராமத்தின் விளைச்சல் குறைந்த வயல்களும் நீரற்ற நீர்நிலைகளும் அவனை வருத்துகின்றன. "குளத்தைப் பார்க்கும்போது உடம்பிலுள்ள நீரெல்லாம் வற்றியதைப் போன்றிருந்தது (ப. 29), என்று தனது கவலையை வெளிப்படுத்துகிறான். விவசாயத் தொழிலில் பற்றுமிக்க சில குடும்பங்கள் மட்டும் இந்த இன்னல்களுக்கிடையிலும்

பயிர்செய்து வாழ்வதையும் அவர்கள் வறுமையில் உழல்வதையும் கண்டு மனிதநேயமிக்க அவனது உள்ளம் இந்தச் சிக்கல்களுக்கான தீர்வுகளைச் சிந்திக்கத் தொடங்குகிறது. கிராமத்தின் வளர்ச்சி வீட்டின் வளர்ச்சிக்கும் வித்திடும் என்று முடிவு செய்து கொண்டு, தந்தையின் எதிர்ப்பையும் மீறி மக்கள் நலனுக்காக உழைக்க முற்படுகிறான். எனினும் இடையிடையே தங்கள் நிலத்திலும் உழைத்து, தந்தைக்கு உதவி செய்கிறான்.

முதலில் நீர்நிலைகளைச் சீர்ப்படுத்தும் பணியைச் செய்யத் திட்டமிடுகிறான். அந்தப் பணியில் அவனுடன் கண்ணன், சேகர் என்ற இரண்டு நண்பர்களும் பிச்சை என்ற முதியவரும் உடன் வருகின்றனர். இவர்கள் பிறரை அழைத்தபோது,

> “கொளத்துத் தண்ணி கொண்டாந்து விடுறது நாம்ப. மீனு புடிக்குத் திங்கிறது பஞ்சாயத்து. அவனுவே போயி வெட்டிக் கொண்டாந்து பெருக்கட்டும்” *(ப. 61)*

என்று மனிதநேயமற்ற முறையில் விடை கிடைக்கிறது. எனினும் பணி தொடங்கியபிறகு பலர் தாமே வந்து கலந்து கொள்கின்றனர். மணியின் மனிதநேயப் பண்பு பலருக்கு மனிதநேயம் தோன்றக் காரணமாக அமைகிறது.

இந்தப்பணி வெற்றியடைந்தவுடன் காடு சீரமைப்புப் பணியைச் செய்ய வேண்டியதன் இன்றியமையாமையை உணர்கிறான் மணி.

> “பக்கத்து ஊர்களில் பெய்யும் மழையில் பாதிகூட இந்த ஊரில் பெய்யாததற்கு அடிப்படைக் காரணம் மரங்கள் நிறைய இல்லாததும் பூமி குளிர்ச்சியாக இல்லாததுமே என்று உணர்ந்து கொண்டான்.” *(ப. 116)*

வனத்துறை அலுவலக அதிகாரி மணியின் கோரிக்கையை ஏற்று மரக்கன்றுகள் அளித்ததோடு ஆழ்குழாய்க்கிணறு அமைக்கவும் உதவி செய்கிறார். இந்தப் பணியில் கிராம மக்கள் தாமாகக் கலந்து கொண்டு உற்சாகத்துடன் பணி புரிகின்றனர். மணி, தனது ஒவ்வொரு ஆக்கப் பணியையும் மக்கள் நலனை மனத்திற்கொண்டு, திட்டமிட்டு, காரண காரியங்களை ஆராய்ந்து செயல்படுத்த முற்படுகிறான். நீர்நிலைகளைச் சீரமைத்து, மரக்கன்றுகளை நட்ட பிறகு,

> “ஊரிலுள்ள முக்கால்வாசி பேர் விவசாயியாகவும் விவசாயக் கூலிகளாகவும் இருக்கிறார்கள். இந்தத் தொழில் பாதிக்கப்படும்போதும் இல்லாதபோதும் மிகவும்

> *வறுமைக்குள்ளாகின்றார்கள். இந்த நேரங்களில் உதவுவதற்காக, உபதொழில் ஒன்று தேவைப்படுகின்றது. ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பால் மாடு வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பது முதல் திட்டம்". (ப. 113)*

என்று சிந்தித்துச் செயல்படுகிறான். இதையடுத்துத் தொழுநோய் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும் மருத்துவம் பெறவும் சுகாதாரத் துறையினரை அணுகி ஏற்பாடு செய்கிறான்.

பயிருக்கான உரத்தில் கலப்படம் செய்யப்படுவதைக் கண்டு மணி இவ்விதம் வருந்துகிறான்.

> *"ஒரு பயிருக்கான பருவம் அவ்வளவு நுண்மையானது. உரம் போடுவதும் இதே போலத்தான். உரத்தின் விலையும் அதிகமாக இருக்கும். கலப்படமாகவும் இருக்கும். குறிப்பிட்ட நேரத்தில் போட்டுவிட வேண்டும் என்று வாங்கிப் போடுவார்கள். பயிரில் எந்த விதமான மாற்றமும் இருக்காது." (ப. 231)*

வட்டாட்சியரை அணுகி உடனடி நடவடிக்கை மேற்கொள்கிறான்.

ஊரில் உள்ள பள்ளியில் பத்தாவது வரை மட்டுமே வகுப்புகள் உள்ளன. மேற்படிப்பிற்கு வெளியூர் செல்ல வேண்டிய நிலை. இதன் விளைவாகப் பெண்பிள்ளைகள் பலர் படிப்பைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இந்தப் பெண்கள் மற்றும் விதவைகள், கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு ஏதேனும் தொழில் சார்ந்த பயிற்சி கொடுப்பது பற்றி மணி சிந்திக்கிறான். தையல் பயிற்சிப் பள்ளியை உருவாக்கத் திட்டமிடுகிறான். பயிற்சிப் பள்ளியைத் தொடங்கிய பிறகு, ஏழைப் பெண்கள் ஐம்பது பேருக்கு தையல் இயந்திரம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்கிறான். உயர்நிலைப் பள்ளியை மேனிலைப் பள்ளியாக்குவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கிறான்.

மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் அவற்றின் விளைவாக அவர்களுக்கு ஏற்பட்டுள்ள மற்றும் ஏற்படவுள்ள இன்னல்களையும் சிந்தித்து அந்தச்சிக்கல்களை மனிதநேயத்தோடு அணுகித் தீர்வு காணமுற்படுகிறான். மணியின் ஆக்கப் பணிகளைக் கண்ட கிராம மக்கள், அவனது மனிதநேயத்தால் தூண்டப்பட்டு அடுத்து அவன் மேற்கொண்ட ஆக்கப்பணிகளாகிய நெல் கொள்முதல் அதிகாரி மீதான நடவடிக்கை, நூலகம், நற்பணி மன்றம் தொடங்குதல் போன்ற பணிகளில் அவனுக்கு உறுதுணையாக நிற்கின்றனர்.

மணியின் ஆக்கப் பணிகளுக்கு ஊர்ப் பஞ்சாயத்தாரும் சில உறவினர்களும் இடையூறு செய்தபோதிலும் பொறுமையுடன் அவற்றை எதிர்கொண்டு மக்கட்தொண்டை மேற்கொள்கிறான்.

> "ஆயுதத்த நம்பியவன் எல்லாம் அதனாலேயே அழிஞ்சு இருக்குறான். பொதுத் தொண்டுக்குப் போறப்ப நிதானம் வேணும்" *(ப. 135)*

என்பது அவன் கூற்றாகும்.

மணி என்ற இந்தப் பாத்திரத்தின் ஒவ்வொரு நடவடிக்கையின் வாயிலாகவும் சமூக நோக்குடனான மனிதநேயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

துணைப்பாத்திரங்களில் மனிதநேயம் வெளிப்படும் சூழ்நிலைகள்

தலைமைப் பாத்திரமான மணியைச் சுற்றிச் சுழலும் பாத்திரங்களாகிய அவனது தாத்தா, சகோதரி செல்வி, தோழர்கள் கண்ணன், சேகர், பிச்சை மாமா, வனத்துறை அதிகாரி, இந்திரகுமார் முதலியோர் மனிதநேயமுள்ளவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

மணியின் தாத்தா மனிதர்கள் மீது மட்டுமன்றி கால்நடைகளிடமும் மிகுந்தஅன்பு கொண்டவராக இருக்கிறார்.

> "நம்ப வீட்டு வாய் இல்லாச் சீவனும் பச்சப் புள்ளயும் ஒண்ணு. புள்ளங்க மாரி அதுவோளும் நம்பள நம்பித்தான் இருக்குது" *(ப. 51)*

என்ற அவரது கூற்றின் வழி அவரது மனிதநேயம் வெளிப்படுகிறது.

பிச்சை மாமா வறுமையில் உழன்றபோதும் பொதுத்தொண்டு செய்வதில் முழுநிறைவு காண்பவராக இருக்கிறார்.

> "மணி, ஒரு நாளக்குக் கூலிக்குப் போகலேன்னா அடுப்புலே பூனக்குட்டிதான். இருந்தாலும் ஏதாச்சும் பொதுவுக்குச் செய்யலேன்னா மனசு என்னமோ போல இருக்கு மணி" *(ப. 151)*

என்ற அவர் கூற்று இதற்குச் சான்றாகும்.

மணியின் சகோதரி செல்வி ஓர் ஆசிரியர் பயிற்சி முடித்த பட்டதாரி. வேலையின்மை காரணமாக வீட்டில் முடங்காமல், தாய், தந்தையுடன் நடவு வேலை செய்து உதவி செய்கிறாள். மணியின் பணிகளிலும் தம்மாலியன்ற உதவிகளைச் செய்கிறாள்.

மணியின் தோழர்கள் கண்ணன், சேகர் இருவரும் மணியின் அனைத்து ஆக்கப் பணிகளிலும் அவனுக்கு உறுதுணையாக நிற்கின்றனர்.

வனத்துறை அதிகாரி, மணிக்கு முழு உதவி செய்து, கிராம முன்னேற்றத்தில் அதிகாரியாகத் தனக்குள்ள பங்கை நிறைவு செய்கிறார். அத்துடன் கிராமத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் அவர் கூறும் கருத்துகள், அவரது மனிதநேயம் வெளிப்படும் வகையில் உள்ளன.

> "கிராமங்களுக்கு ஒதவுறதுன்னா எனக்கு மனசு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கும்; ஆனா யாரும் வரலேங்குறாங்க; வருறவங்களும் சொந்தக் காரியத்துக்காகத்தான் வாராங்க." *(ப. 138)*

என்ற அவரது கூற்று இதற்குச் சான்றாகும்.

இந்திரகுமார் தொழில் காரணமாகக் கிராமத்தை விட்டு இடம் பெயர்ந்தவர். நல்ல நிலையில் உள்ள அவர், தனது கிராமத்திற்கு ஏதேனும் நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு மணியை அணுகுகிறார். கிராமத்தில் நூலகம் அமைப்பதற்கு உதவி செய்கிறார். மேலும் நூலகத்திற்கு ரூபாய் ஆயிரம் மதிப்புள்ள நூல்களை நன்கொடையாக அளிக்கிறார்.

இவர்கள் அனைவரும் மனிதநேயமுள்ளவர்களாக இருந்தபோதும் சிக்கல்களுக்குத் தீர்வு காண முற்படவில்லை.

> "நாட்டுலே நடக்குறதப் பேசிக்கிட்டு இருந்தா நாளுக்கணக்குலே பேசிக்கிட்டு இருக்கலாம். இப்ப உள்ள சூழலுக்கு நம்ப கிராமத்துக்கு நாம ஏதாச்சும் பண்ணி ஆகணும். இதப் பார்த்துட்டுப் பக்கத்துக் கிராமமும் செய்யும்" *(ப. 48)*

என்ற மணியின் கூற்றும், அதை அவன் செயல்படுத்திய விதமும் இவர்களின் மனிதநேயம் வெளிப்பட உந்துசக்தியாக இருந்தது. இவர்களின் மனிதநேய வெளிப்பாடு, இவர்களது கிராமத்தை முன்னேற்றி, பிற கிராமங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ வழி வகை செய்கிறது.

முடிவுரை

1. தன்னலம் கருதாது செய்யப்படும் நற்செயல்கள், அச்செயலைச் செய்தவரையும் உயர்த்தும். அவர் சார்ந்த சமூகத்தையும் உயர்த்தும்.

2. துன்புறுவோரின் துன்பத்தைத் துடைத்தல் முதன்மைப் பணியாகக் கொள்ளப்படவேண்டும். யாரேனும் அந்தப் பணியைத் தொடங்கும் வரை காத்திருத்தல் கூடாது. உடன் செயல்படவேண்டும்.

3. பொதுத்தொண்டில் ஈடுபடும்போது வரும் எதிர்ப்புகளையும் ஆதரவுகளையும் சமமாகக் கருதவேண்டும். உணர்ச்சி வயப்படுதல், பொறுமையிழத்தல் கூடாது.

4. நாடு முன்னேற மனிதநேயமிக்க சமூகம் உருவாக வேண்டும். மனிதநேயமிக்க சமூகத்தை உருவாக்குவதில் இளைஞர்கள் ஆர்வம் காட்ட வேண்டும்.

இத்தகைய மனிதநேயம் சார்ந்த கருத்து வெளிப்பாடுகளுக்குக் களனாகப் 'பயிர் முகங்கள்' நாவல் அமைகின்றது.

குறிப்புகள்

1. சுபாஷ் சந்திரபோஸ். ச., அக்கினிக் குழந்தைகள், அணிந்துரை, அறிவுப் பதிப்பகம், சென்னை, 2000, ப. 7.

2. சிறுவர் மணி, எண்ணமே உயர்வு (கட்டுரை), குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், 12 ஏப்ரல் 2003.

******

கி. ராஜநாராயணனின் 'ஜடாயு'வில் மனிதநேயம்

முனைவர் சூ. நிர்மலாதேவி
ஆராய்ச்சி உதவியாளர்

'கிரா.' என்றழைக்கப்படும் கி. ராஜநாராயணன் அவர்கள் "கரிசல் காட்டின் முன்னத்தி ஏர்" என்று போற்றப்படுகின்றவராவார். நீக்ரோ இனத்தவரின் 'கருப்பு இலக்கியம்' போல, 'கரிசல் இலக்கியம்' கண்ட முன்னோடியாக இவர் மதிக்கப்படுகின்றார்.[1] மழைக்கு மட்டுமே பள்ளிக் கூடத்தில் ஒதுங்கினேன். ஒதுங்கியவன் பள்ளிக் கூடத்தைப் பார்க்காமல் மழையை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்து விட்டேன்.[2] என்று தன்னைப் பற்றிக் கூறிக் கொள்ளும் கிரா., நாற்பது வயதுக்கு மேல்தான் எழுதத் தொடங்கினார். தற்போது எண்பது வயதை எட்டிப்பிடித்துள்ள இவர் சிறுகதைகள், நாவல், கடித இலக்கியம், நாட்டுப் புறப் படைப்புகள், வரலாறு, வட்டாரச் சொல் அகராதி என்று தமிழின் பல்வேறு இலக்கியத் தளங்களிலும் தடம் பதித்திருக்கின்றார். எந்தப் பட்டமும் பெறாத இவரைச் சிறப்புப் பேராசிரியராக்கிப் பெருமை சேர்த்துக் கொண்டுள்ளது புதுவைப் பல்கலைக் கழகம்.

கி.ராவின் சிறுகதைப் படைப்புகள்

'கதவு' என்ற சிறுகதை மூலம் தமிழ்ச் சிறுகதை உலகின் கதவை விசாலமாகத் திறந்து வைத்தவர் கி.ரா. கதவு, வேட்டி, கொத்தைப் பருத்தி, அப்பா பிள்ளை அம்மா பிள்ளை, பிஞ்சுகள் என்ற பல தொகுப்புகளாகத் தன் சிறுகதைகளை வெளியிட்டுள்ளார். 75 வயதில் கி.ராவின் பவள விழாவையொட்டி இவரது அனைத்துச் சிறுகதைகளையும் ஒரே தொகுப்பாக வெளியிட்டது அகரம் பதிப்பகம்.[3] தன் சொந்த மண்ணையும் மக்களையும் மிகவும் நேசித்து மண்ணின் மக்கள் பற்றிய சிறுகதைகளை அதிகமாக எழுதியுள்ளார். கிரா. 'இன்றைக்கும் எனக்குத் தெவிட்டவில்லை இந்த மண்'[4] என்றும் குறிப்பிடுகின்றார்.

கி.ராவின் கதைகளில் மனிதநேயம்

மண்ணின் மக்களையும் அவர்களின் வாழ்க்கைச் சூழலையும் வாழ்க்கைச் சிக்கல்களையும் தன் சிறுகதைகளில் படம்பிடித்துக் காட்டியுள்ள கி.ரா. தன் கதைகளுக்குக் கிடைத்த சில கருக்கள்

குறித்தும் 'கதைக்கு ஒரு கரு' என்ற கட்டுரையில் விளக்கிச் சொல்கின்றார்.[5] பல்வேறு விதமான கருக்களை வைத்துக் கதைகள் படைத்துள்ள கி.ராவின் சிறுகதைகளில் மனிதநேயக் கருத்துகள் முத்துப் பரல்களாக, மாணிக்கப் பரல்களாக ஆங்காங்கே சிதறிக் கிடப்பதைக் காண முடிகின்றது. இவருடைய படைப்புகளில் மனிதநேயத்தைக் கருவாகக் கொண்டு எழுதப்பட்டவைகளாக இரு சிறுகதைகளையும் இரு கட்டுரைகளையும் அடையாளம் காட்டலாம்.

சிறுகதைகள்

1. மனிதம்[6] — தாமரை, ஜூலை, 1960.
2. ஜடாயு[7] — தாமரை, ஜன, 1959.

கட்டுரைகள்

1. அண்ணாச்சி[8]
2. வியத்+நாம்[9]

} ஜூனியர் விகடன் 9-3-88 முதல் 7-9-88 வரை

இவற்றுள் கட்டுரைகள் இரண்டும் முறையே, ஆசிரியரின் நேரடி அனுபவமாகவும் பிறரின் சொந்த அனுபவத்தைக் கேட்டறிந்து எழுதப்பட்டவையாகவும் உள்ளன. சிறுகதைகள் இரண்டும் கி.ராவே குறிப்பிடுவது போல 1. கேள்விப்பட்டது. 2. பார்த்தது. 3. அனுபவித்தது. 4. கற்பனை என்ற 4 விதமான கதைக்கருக்களில்[10] எந்த வகையைச் சேர்ந்த கருக்கள் அவை என்பதற்கான சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை. 'கதைக்கு ஒரு கரு' என்ற கி.ரா.வின் கட்டுரையிலும் இவ்விரு சிறுகதைக்கருக்களும் எவ்விதத்தைச் சேர்ந்த கருக்கள் என்பதற்கான சான்றுகள் இல்லை. இவருடைய பிற எழுத்துகளிலும் இக்கதைக்கருக்கள் இவருக்குக் கிடைத்த முறை பற்றிய விளக்கங்கள் இல்லை.

இரு கதைகளும் இரு கட்டுரைகளும் 'ஆபத்து நேரத்தில் உதவுதல்' என்ற மனித நேயத்தின் அடிப்படையில் அமைந்தவை என்றாலும் இரு கட்டுரைகளும் நடந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவையாதலின் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. கட்டுரையின் பக்க அளவைக் கருத்திற் கொண்டு 'ஜடாயு' என்ற சிறுகதை மட்டும் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

'ஜடாயு' கதை அறிமுகம்

'ஜடாயு' என்ற சிறுகதை 'கதவு' என்ற சிறுகதைத் தொகுப்பிலுள்ள இறுதிச் சிறுகதையாக 13 பக்கங்களில்

அமைந்துள்ளது. கதவு சிறுகதைத் தொகுப்பின் முதற் பதிப்பு ஆகஸ்டு 1965ஆகும். அக்டோபர் 1978, ஜூன் 1981 ஆம் ஆண்டுகளில் 2, 3 ஆம் பதிப்புகளையும் இத்தொகுதி கண்டுள்ளது. இத்தொகுப்பிலுள்ள 'ஜடாயு' சிறுகதை ஜனவரி 1959ஆம் ஆண்டு வெளியானதெனக் குறிப்புக் காணப்படுகின்றது. இந்தியா குடியரசு நாடாகி 9 ஆண்டுகள் கழித்து இக்கதை எழுதப்பட்டுள்ளது. அக்காலக்கட்டத்தில் இந்திய, குறிப்பாகத் தமிழகக் கிராமச் சூழல், மக்கள் வாழ்க்கை முறை, அவர்களுக்கிருந்த சிக்கல்களை உணர்த்தும் காலக்கண்ணாடியாகக் கதை திகழ்கின்றது. 2 ஆண்டுகளுக்கு முன்னர், சென்னைத் தொலைக்காட்சியில் இக்கதை நாடகமாகவும் நடிக்கப்பெற்ற சிறப்புக் கொண்டது. கதவு சிறுகதைத் தொகுதி 1965ஆம் ஆண்டில் வெளியான நூல்களில் முதற் பரிசுக்குரியதெனத் தமிழ்நாடு அரசால் தேர்ந்தெடுக்கப்பெற்றதெனவும் தெரிகிறது.

'ஜடாயு' கதைச்சுருக்கம்

கோவில்பட்டியிலிருந்து 10 கல் தொலைவிலிருந்த ஒரு சிற்றூரிலிருந்து வீட்டுச் சாமான்கள் வாங்குவதற்காகத் தாத்தைய நாயக்கர் கோவில்பட்டிக்கு வந்தார். கோவில்பட்டி ஊரின் ஒதுக்குப்புறமுள்ள, தனக்குத் தெரிந்த ஒருவர் வீட்டில் சாமான்களை வைத்து விட்டு வெளித் திண்ணையில் படுத்துக் கொண்டார். தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த நாயக்கர் காதில் ஒரு பெண்ணின் அவலக் குரல் கேட்டது. 'யாரங்கே?' என்று ஓங்கிக் குரல் கொடுத்தார் தாத்தைய நாயக்கர். அதே நேரத்தில் ஓர் இளம் பெண்ணும் அவளைத் தொடர்ந்து 4 முரடர்களும் அவரருகே வந்தனர். நாயக்கரின் கால்களைக் கட்டிக் கொண்டு இளம் பெண் கதறினாள். கோவில்பட்டியிலிருந்து 4 கல் தொலைவிலிருந்த ஊரைச் சேர்ந்த தான், தன் கணவனுடன் கோபித்துக் கொண்டு கோவில்பட்டியை அடுத்துள்ள தன் தாய் வீட்டுக்குப் புறப்பட்டதாகவும் இருட்டி விட்டதால் கோவில்பட்டியிலிருந்த தெரிந்தவர் வீட்டில் தங்கலாம் என்று முடிவெடுத்தபோது அவர்கள் வீடு மாறி விட்டதால் தற்போது குடியிருக்கும் வீட்டை விசாரித்துக் கொண்டு அலைந்ததாகவும் அந்த வீடு தங்களுக்குத் தெரியும் என்று இந்த நால்வரும் அவளை அழைத்துச் சென்றதாகவும் ஊருக்கு ஒதுக்குப்புறமாகவே அழைத்துச் சென்ற அவர்கள் தன்னிடம் தகாத முறையில் நடக்க முயற்சிப்பதாக இளம் பெண் புகார் கூறினாள். தான் சொல்வதையும் சற்றுக் கேட்க வேண்டும் என்று நாயக்கரிடம் வேண்டிக் கொண்ட அந்நால்வரில் ஒருவரான சுருட்டைத் தலையுடைய ஒருவன் அக்காள் மகளாகிய அவள் தன் மனைவி என்றும் பகலெல்லாம் எலும்பு முறியப்

பாடுபட்டு இரவு வீடு வந்தால் அவள் வீட்டிலிருக்க மாட்டாள் என்றும் இரவெல்லாம் ஊர் சுற்றி விட்டுக் காலையில்தான் வருவாள் என்றும், அவளை இரவெல்லாம் தான் தேடி அலைய வேண்டும் என்றும் கட்டிய கணவன் இதனைச் சகிக்க முடியுமா? என்றும் முறையிட்டான். நாயக்கர் தங்கியிருந்த வீட்டுக்காரர் மற்றும் அக்கம்பக்கத்தார் திரண்டும், 'புருஷன், பெண்டாட்டி சண்டை' என்று விலகிச் சென்று விட்டனர். அப்பெண்ணைப் பற்றி இழுத்துக் கொண்டு அந்நால்வரும் சென்று விட்டனர். சிறிது நேரத்தில் மீண்டும் அப்பெண்ணின் அவலக் குரல் கேட்க, நாயக்கர் ஒரு முடிவுக்கு வந்தவராகத் திண்ணையிலிருந்து குதித்துக் குரல் வந்த திக்கை நோக்கி ஓடினார். ஊருக்கு ஒதுக்குப்புறமான ஒற்றைக்கண்பாலத்தடியில் அப்பெண்ணின் குரல் கேட்டது. 'வராதே வராதே' என்று கூறிக்கொண்டு மூன்று பேர் பாலத்தடியிலிருந்து வெளிப்பட்டனர். அப்பெண்ணைக் காப்பாற்றும் முயற்சியில் அவர்களுடன் ஏற்பட்ட போராட்டத்தில் நாயக்கர் தன் இன்னுயிரை இழந்தார்; அப்பெண்ணையும் காப்பாற்ற இயலவில்லை என்பது தான் கதை.

எது மனிதநேயம்

ஆபத்தில் சிக்கித் தவிக்கும் ஒரு மனித உயிரைக் காப்பாற்றத் துடிப்பது மனிதநேயம். ஒரு மனித உயிருக்கு அநியாயம் நடக்கும் பொழுது அந்த அநீதியை அழித்து அவ்வுயிரைக் காக்க விழைவது, விரைவது மனிதநேயம். உலகில் அநீதி பெருகும் போது ஆண்டவன் அவதாரமெடுப்பான் என்கிறது புராணம். ஒரு மனிதனுக்கு அநீதி நடக்கும் போது அதனை அடக்க, அழிக்க மற்றொரு மனிதன் புறப்படுவதும் அவதாரத்தை ஒத்த பெருஞ்செயலேயாகும். இரண்டுக்கும் முக்கிய வேறுபாடு ஒன்றும் உண்டு. தெய்வ அவதாரங்கள் நீதி x அநீதிப் போராட்டத்தில் தம் இன்னுயிரை இழப்பதில்லை. மனிதநேயத்துக்கு ஆட்பட்டுத் தொடரும் நீதி x அநீதிப் போராட்டத்தில் மனித அவதாரம் தன் உயிரை இழக்கிறது. இந்த வகையில் தெய்வ அவதாரத்திலும் மனிதநேயமுடைய மனித அவதாரம் ஒருபடி மேலானதாகவே ஆகி விடுகின்றது. இரத்த வகையாலோ பிறவகையாலோ எவ்வித உறவுமின்றி, முற்றிலும் அறிமுகமுமின்றி 'மனிதருக்கு மனிதர்' என்ற தொடர்பை மட்டுமே அடித்தளமாகக் கொண்டு, கைம்மாறு கருதாது ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம் காட்டும் அன்பு மனிதநேயமாகும். இந்த வகையில் நாயக்கருக்குப் போலம்மாள் எந்த வகையிலும் உறவுடையவள் அல்ல. முற்றிலும் அறிமுகமும் இல்லாதவள். அத்துடன் அவளைக் காப்பாற்றுவதால் நாயக்கருக்கு வீரப்பட்டயம்,

வெற்றிப்பட்டயத்தை யாரும் சூட்டப் போவதுமில்லை. நாயக்கர், போலம்மாள் படுந்துயரைப் பார்த்தார்; அவளின் நிர்க்கதியான நிலையை நினைத்தார்; கண்முன் நடக்கும் அநியாயத்தை அகற்ற எண்ணினார்; செயல்பட்டார். அவரின் எண்ணத்துக்கும் செயலுக்கும் தூண்டுதலாக அமைந்தது அவருக்குள்ளிருந்த மனிதநேய உணர்வு. அவர் படித்தவரில்லை; பணக்காரரில்லை; சாதாரண ஒரு விவசாயி. ஆனால் மனிதருக்கு வேண்டிய அடிப்படைப் பண்பான மனிதநேய உணர்வு ஊற்றுக்கண்ணாய் அவருள் ஊறித் திளைத்திருந்தது.

கதைக் கருவில் மனிதநேயம்

நான்கு ஆண்களுக்கிடையே மாட்டிச் சிக்கிக் கொண்டு விட்ட ஒரு பெண்ணின் மானத்தைக் காக்கப் போராடிய தாத்தைய நாயக்கரின் மனிதநேய உணர்வுதான் 'ஜடாயு' கதையின் கதைக் கருவாக அமைந்துள்ளது. இதனைச் சுற்றியே கதைச்சூழலும் கதைப்பாத்திரங்களும் அவர்களின் உரையாடல்களும் கதைப் பின்னலாக்கப்பட்டுள்ளன. முன்பின் அறிமுகமில்லாத, எவ்விதத் தொடர்புமில்லாத ஒரு பெண்ணுக்காக எங்கிருந்தோ வந்த நாயக்கர், எங்கோ போகப்போகின்ற நாயக்கர் வெட்டுண்டு பிணமான காட்சியைக் கதைச் சித்திரிப்பில் காணும் மனித உயிர்கள் மனிதநேயச் சிகரத்தைத் தரிசித்து மெய்சிலிர்க்கும் என்பதில் ஐயமில்லை.

கதைச் சூழலில் மனிதநேயம்

கதையில் முக்கியமான இரு வேறுபட்ட சூழல்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

ஒன்று: நேர்ப்பாத்திரமான போலம்மாள் தனக்கு நிகழும் அநீதியை விவரிக்கும் சூழல்.

இரண்டு: எதிர்ப்பாத்திரமான சுருட்டைத் தலையன் போலம்மாளைக் கட்டிக் கொண்டதால் தன்னுடைய வாழ்க்கை நரகமாகிப் போனதாகச் சொல்வது.

முன்பின் அறிமுகமில்லாத நாயக்கரும் ஊர் மக்களும் இவ்விருவேறு சூழலையும் விவரிக்கக் கேட்கின்றனர். ஊர் மக்கள் சுருட்டைத் தலையன் விவரித்த சூழலை மட்டும் கணக்கிலெடுத்துக் கொண்டு, 'பூ! புருஷன் - பெண்சாதி தகராறு' என்று நடக்கும் நிகழ்ச்சிக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டு வீட்டுக்குள் சென்று பூட்டிக் கொண்டு முடங்கித் தூங்கி விடுகின்றனர். 'ஒரு பெண், நான்கு ஆண்களுக்கிடையே என்ன சண்டை' என்று விசாரிக்க வந்ததோடு

அவர்களின் மனித நேய உணர்வு முற்றுப் பெற்று விடுகின்றது. திரும்ப வந்து திண்ணையில் படுத்த நாயக்கருக்கோ தூக்கம் வரவில்லை. திரும்ப ஒலித்த அப்பெண்ணின் அவலக் குரலைக் கேட்க நாயக்கர் மட்டுமே அவ்வூரில் விழித்திருந்தார். அதற்குக் காரணம் அவருள்ளிருந்த மனிதநேய உணர்வு. அப்பெண்ணைக் காப்பாற்றத் துடித்துக் கொண்டு குதித்தோடினார் நாயக்கர். விவரிக்கப்பட்ட இருவேறுபட்ட சூழல்களில் எது உண்மை என்பதை அறியவும் செயல்படவும் கூட மனிதநேய உணர்வு வேண்டும் என்பதைக் கதைச்சூழல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

கதைப்பாத்திரங்களில் மனிதநேயம்

மனிதநேயத்துக்கும் மனிதநேயமின்மைக்கும் இடையே ஓர் எல்லைக்கோடு உண்டு. மனிநேயமுடையவர் என்று எண்ணப் படுபவரே அடுத்த கணத்தில் மனிதநேயமற்றவர் என்று அறியப்பட நேரிடலாம். தொடர்வண்டியில் பயணிப்பவர், தன் உடன் பயணிப்பவர் அளித்த இனிப்பு ரொட்டி (பிஸ்கட்)யை வாங்கி உண்ணும் போது அதைத் தந்தவரை மனிதநேயமுடையவராகத்தான் கருதுவார். அதில் மயக்க மருந்து கலந்துள்ளது என்பதைத்தன் மயக்கம் தெளிந்து உடமை இழந்து தவிக்கும் போது உணருவார். உண்ணத்தந்தவர் மனிதநேயமற்றவர் என்பதையும் அறிவார். தீயவரால் தீய நோக்கோடு செய்யப்படுகின்ற மனிதநேயமுடைய நற்செயல்களும் தீய பலன்களையே தருகின்றன. போலம்மாளுக்கு நேர்ந்த அனுபவமும் இத்தகையதுதான்.

தெரிந்தவர் வீடுதேடி அலைந்த தன்னை அத்தெரிந்தவர் வீடு தம் வீட்டுப்பக்கம்தான் என்றும் தாங்கள் அங்கேதான் போய்க் கொண்டிருப்பதாகவும் கூறிச் சோர்வடைந்த தனக்குப் பலகாரங்கள் வாங்கிக் கொடுத்த அவர்களை மனிதநேயமுடையவர்களாக எண்ணுகிறாள். 'அண்ணன்மார்களே' என்றும் அழைக்கிறாள். ஆனால் கணவனால் அடிக்கப்பட்ட அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்றுவது போல அவள் முதுகைத் தடவிச் சரசமாடத் தொடங்கியபோது அவள் விழித்துக் கொள்கிறாள். மனிதநேய உணர்வுடன் அவர்கள் தன்னை அழைத்துச் செல்லவில்லை என்பதைப் புரிந்து கொள்கிறாள். மனிதநேயம் சிறிதுமற்றவர்கள் அவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டு விழிப்படைகிறாள். தன்னைக் காத்துக்கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடுகிறாள்.

இவர்களுக்கிடையே நடக்கும் சச்சரவை அறிந்த தெருவோடு போன சிலர் என்ன ஏது என்று விசாரிக்கின்றனர். போலம்மாளின்

அருகில் நின்றவர்கள் 'புருஷன் - பெண்சாதி தகராறு' (பக். 126) என்று கூற 'பூ இவ்வளவு தானா' (பக். 126) என்று நகர்ந்து விடுகின்றனர். ஏதோ நடக்கிறது, என்னவென்று அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாகவே ஊர் மக்களின் விசாரிப்பு அமைகிறது. 'மனிதநேயமுடைய விசாரிப்பு' என்ற அளவில் இதனை அடையாளம் காணலாம்.

போலம்மாளின் அபயக்குரல் கேட்டவுடன், 'யாரங்கே' என்று குரல் கொடுத்த நாயக்கரை வீட்டுச் சொந்தக்காரர் கதவைத் திறவாமல் ஜன்னலை மட்டும் திறந்து பார்த்து, 'யோவ் நாயக்கரே! உமக்கென்ன பைத்தியமா? பேசாமல் வந்து படும். ஊருக்குள்ளே நூறு நடக்கும். எவன் எப்படிப் போனால் நமக்கென்ன? நம்மபாடு உண்டு நாம் உண்டு என்று இருக்கணும். எதுக்கு விருதாவாய்ப் போட்டுத் தூக்கத்தைக் கெடுத்துக் கொள்கிறீர்? பேசாமல் வந்து படும்' (பக். 123).

என்று கூறுவதில் சிறிதும் மனிதநேயம் இல்லை என்றாலும், தாத்தைய நாயக்கர் தனக்குத் தெரிந்தவர், தன் வீட்டுத் திண்ணையில் வந்து படுத்திருப்பவர், அவர் ஊரில் நடக்கும் ஏதாவது சிக்கலில் மாட்டிக் கொண்டு விடக்கூடாதே என்ற நல்லெண்ணத்தில், எச்சரிக்கை உணர்வில் கொடுத்த குரல் என்ற அளவில் வீட்டுச் சொந்தக்காரர் சுந்தரஞ்செட்டியாருக்கிருந்த மனிதநேய உணர்வு ஓர் எல்லைகட்டி நிற்பதை அறிய முடிகிறது.

கைகள் இரண்டும் துண்டாடப்பட்டு இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த தாத்தைய நாயக்கரைக் கண்டு திடுக்கிட்டுக் கூக்குரலிட்ட அவ்வழியே வந்த வயோதிகப் பெண்மணி நாயக்கரின் பிணத்தைப் பார்த்து, 'பாவம் யார் பெற்ற பிள்ளையோ!' எந்தப் பாவி செய்த வேலையோ!' (பக். 133) என்று கண்கலங்கிக் கூறுவது இரக்கத்தின் பாற்பட்டு எழுந்த மனிதநேய உணர்வால் உதிர்த்த வார்த்தைகளாகும். மனித நேயச் செயலுக்குக் கிடைத்த முதல் அங்கீகார மொழியாகவும் இது அமைவதைக் கதை படிப்பவர் உணர முடியும்.

தாத்தைய நாயக்கரும் மனிதநேயமும்

'அப்பாவி' என்று பொருள்படும் 'அப்புராணி நாயக்கர்' என்றழைக்கப்படும் தாத்தைய நாயக்கர் ஒரு விவசாயி. அறுபது வயதுக் கிழவர் என்று யாராலும் சொல்ல முடியாது. ஆஜானுபாகுவான உடல், யானைத் துதிக்கை போன்ற நீண்ட கைகள். பத்து மைல் தொலைவிலுள்ள கோவில்பட்டிக்குப் போய்த் தன்

குடும்பத்துக்குத் தேவையான சாமான்களைத் தலைச்சுமையிலேயே கொண்டு வரக் கூடியவர். தான் உண்டு தன் பாடு உண்டு என்று இருப்பவர். கோபம் வந்து யாரும் பார்த்ததில்லை. சதா சிரித்த முகமும் சீதேவியுமாக இருப்பவர்' (பக். 121).

இத்தகைய புற, அகத் தோற்றத்துடன் சித்திரிக்கப்படும் ஒரு மனிதரிடமிருந்து வெளிப்பட்ட மனிதநேய உணர்வையும் மனிதநேயச் செயல்களையும் பின்னிப் பின்னியே கதை நகர்கிறது. இறுதியில், 'மனிதநேயத்தின் இலக்கணம் தாத்தைய நாயக்கர்' என்பதற்கான சிறுகதை இலக்கியமாக, 'ஜடாயு' திகழ்கிறது. மனிதநேயத்தின் படிப்படியான பரிணாம வளர்ச்சியைத் தாத்தைய நாயக்கரின் பாத்திரப்படைப்பில் தரிசிக்க முடிகிறது.

'அடப்பாவிகளா நீங்கள் அக்கா தங்கையோடு பிறக்கவில்லையா? உங்களுக்கு இது அடுக்குமா? ஐயோ இதைக் கேட்பார் இங்கு யாருமில்லையா?" (பக். 122)

என்று எழுந்த அபயக்குரல் கேட்ட நாயக்கர், குபீரெனப் பாய்ந்து தெருவில் இறங்கி நின்று, 'டேய் யாரங்கே' என்று குரல் கொடுத்ததில், அநீதியைத் தட்டிக் கேட்கும் துணிச்சலும் செயல்திறனும் மனிதநேய உணர்வுடையவருக்கே சாத்தியப்படும் என்பது புலப்படுத்தப்படுகின்றது.

இரவு நேரத்தில் தன்னைக் காப்பாற்றுமாறு கூறிக் கதறி அழுது, தன் கால்களைக் கட்டிக் கொண்ட பெண்ணை ஒரு குழந்தையைத் தூக்குவது போல் தூக்கி நிறுத்தி,

'தாயே! பயப்படாதே! நான் இருக்கும் வரை உனக்கு ஒரு கெடுதலும் வராது. என்ன நடந்தது சொல்லு' (பக். 123) என்று நாயக்கர் கேட்பதில் அவருள்ளிருந்த மனிநேய உணர்வானது தாய்மையுணர்வு, பொறுப்புணர்வு, பொறுமையுணர்வு ஆகிய மும்முகங்களுடன் வெளிப்பட்டதை உணர முடிகின்றது.

நடந்ததை உள்ளவாறு சொன்ன போலம்மாளைத் தொடர்ந்து எதிராளி சுருட்டைத் தலையனும் அவன் நண்பர்களும் உரைத்த பொய்மொழிகளால் எது உண்மைச்சூழல் என்பதை அறிந்து கொள்வதில் குழப்பமடைந்த நாயக்கர் சோர்ந்து போய்த் திண்ணையில் அமர்ந்து விட்டாலும், அவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட அப்பெண்ணின் குரலைத் திரும்பக் கேட்டவுடன் அவளை அவர்கள் என்னதான் செய்கிறார்கள் என்று பார்க்க வேண்டும் என்று பதட்டத்துடன், படப்படப்புடன் ஓடிய நாயக்கரின்

உள்ளே இருந்து அவரை இயக்கியது மனிதநேய உணர்வாகும். ஊரே கூடியிருந்தும் காப்பாற்ற இயலாத ஒரு பெண்ணைத் தனியொருவராகக் கையில் எவ்வித ஆயுதமுமின்றி, நீண்ட வீச்சரிவாள் சகிதமாயிருந்த எதிராளிகளைத் தன் உடல் வலிமையால் மட்டும் எதிர்த்து விடமுடியும் என்று எண்ணி நாயக்கர் களமிறங்கவில்லை. நடக்கும் அநியாயத்தைக் காணச் சகியாத மனம், ஆபத்திலிருக்கும் பெண்ணைக் காப்பாற்றியே தீர வேண்டும் என்ற உந்துதல், தன் உயிரையும் பொருட்படுத்தாத உள்ளம் அனைத்துக்கும் காரணமாய் அமைந்து அவரைச் செயல்படுத்தியது அவருள்ளிருந்த மனிதநேய உணர்வாகும்.

சுருட்டைத் தலையனின் ஆட்கள் பாய்ந்து வந்து வளைத்துக் கொண்டதையும் அதில் ஒருவனிடம் நீண்ட வீச்சரிவாள் இருந்ததையும் அது நிலவின் ஒளிபட்டு மின்னியதையும் அறிந்து கொண்ட நாயக்கர் தமது முடிவைப் பற்றித் தெரிந்து கொண்டார். 'அவர் ஓடித் தப்பித்து இருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. 'அம்மா போய் விடு இங்கிருந்து' என்று சப்தம் கொடுத்தார். 'போ உடனே ஓடு' என்று கத்தினார்' (பக். 130).

கதையின் 4 பக்கங்களில் (128-131) நாயக்கர் அப்பெண்ணைக் காப்பாற்றப் போராடிய போராட்டங்களே விவரிக்கப் பெற்றுள்ளன.

1. கையில் கிடைத்தவனைச் சுழற்றி வீசித் தரையில் மோதுதல்.

2. மற்றொருவனைக் குப்புறத்தள்ளி இடுப்பில் ஒரு காலை வைத்து முறித்தல்.

3. இரண்டு புஜங்கள் வெட்டுண்ட இடங்களிலிருந்தும் பீச்சாங்குழல் வைத்து அடிக்கிற மாதிரி 'சர்ர்' என்று இரத்தம் பீறிட்டுப் பாய்ந்த நிலையிலும் பாய்ந்து முட்ட வருதல் (பக். 131).

என்று அவரின் தொடர் போராட்டங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

தன் உயிரைப் பற்றி எண்ணாது, தன் உயிரைக் காப்பாற்ற ஓடி ஒளியாது, நேருக்கு நேர் நின்று நான்கு எதிரிகளை மடக்கிச் சண்டையிட்ட நாயக்கர், அப்பெண்ணைக் காக்க நடந்த போராட்டத்தில் தோல்வி அடைந்தபின் தன் உயிருக்காக அல்ல; தன்னால் அப்பெண்ணுக்கு உதவ இயலாமல் ஆகிவிட்டதே என்று தான் வருந்தி மனம் நோகிறார்.

'ஐயோ, தாயே! உனக்கு நான் உதவ முடியாமல் போய்விட்டதே. இவர்களைக் கொன்று உன்னை மீட்க வல்லமை

இல்லாமல் போய்விட்டதே! ...... என்று விம்மி அந்தச் சரள் தரையில் முகத்தைப் பல தடவை பலமாக மோதிக் கொண்டார் தாத்தைய நாயக்கர்' (பக். 131)

ஒரு பெண் மானபங்கப்படுவதைக் காணச் சகியாது காக்கப் போராடிய தாத்தைய நாயக்கருக்கு ஒற்றைக்கொரு மகள் இருந்தாள் என்பதையும் கதை குறிப்பிடுகின்றது. அதிவேகமாகச் செத்துக் கொண்டே வந்த நாயக்கருக்குத் தன் சொந்த மகள் வெங்கடம்மாளின் முகம் நினைவுக்கு வந்ததாகக் கதை குறிப்பிடுகின்றது. (பக். 132). ஒரு மனிதரின் குடும்பப் பின்னணியும் அவர் மனிதநேயச் செயலைச் செய்வதற்கு அடிப்படைக் காரணமாகலாம் என்பது இதன் மூலம் பெறப்படுகின்றது.

ஜடாயு – தாத்தைய நாயக்கர் – ஒப்பீடு

கதாசிரியர் கி.ரா. அவர்கள் தன் கதைக்கு 'ஜடாயு' என்று பெயர் சூட்டியுள்ளது தாத்தைய நாயக்கரை ஜடாயுவாக உருவகித்து அவர் கண்டதால் என்பது கதையைப் படிப்பவருக்குத் தெற்றெனப் புலனாகும் உண்மையாகும். 1. உருவத் தோற்றம் 2. தொடர்புடைய பெண்களின் நிலை 3. செயல்திறன் ஆகியவற்றால் கம்பராமாயணத்தில் வரும் ஜடாயுவுடன் தாத்தைய நாயக்கர் ஒத்துப் போகிறார்.

சீதா பிராட்டியை இராவணனிடமிருந்து மீட்கப் போராடிய கழுகரசன் ஜடாயுவின் இரு பெருஞ் சிறகுகளையும் சந்திரகாசமெனும் தெய்வ வாளால் இராவணன் வெட்டி வீழ்த்தினான். அதே போன்று போலம்மாளைக் கொடியவர்களின் பிடியிலிருந்து மீட்கப் போராடிய தாத்தைய நாயக்கரின் இரு கரங்களும் வெட்டப்படுகின்றன. சிறகிழந்த தோற்றத்திலிருந்த ஜடாயு கரங்களிழந்த நிலையிலிருந்த தாத்தைய நாயக்கருக்கு உருவகமாகியுள்ளது. இவ்வாறு உடல் தோற்றத்தால் ஜடாயு உருவக அமைப்பு பொருத்தமானதாகக் கதையில் அமைந்துள்ளது.

மாற்றானின் மனைவி சீதை. அதே போன்று ஜடாயு கதையில் வரும் பெண்ணும் பிறன் மனைவி. இந்த வகையில் கம்பராமாயண ஜடாயுவால் காக்கப்போராடிய பெண்ணான சீதை - ஜடாயு கதையில் வரும் தாத்தைய நாயக்கரால் காப்பாற்றப் போராடிய பெண்ணான போலம்மாள் ஆகிய இரு பெண்களின் நிலையிலும் ஒற்றுமை காணப்படுகின்றது.

இராவணனிடமிருந்து சீதையை மீட்கப்போராடிய ஜடாயுவின் செயல்திறனோடு தாத்தைய நாயக்கரின் செயல்திறனும்

ஒத்ததாக உள்ளது. தன் இரு சிறகுகளாலும் அலகாலும் கால் நகங்களாலும் இராவணனுடன் போராடுகிறது ஜடாயு![11] கையில் கிட்டிய கற்களைக் கொண்டும் தன் கைகளைக் கொண்டும் உடல் வலிமை கொண்டும் யாரையோ உதவிக்கு அழைப்பதுபோல் உத்திகள் செய்தும் போராடுகிறார் நாயக்கர்.

தனியொருவரை எதிர்த்த ஜடாயுவினும் நான்கு எதிரிகளை எதிர்த்த நாயக்கரின் செயல்திறன் மேம்பட்டதெனத் தெரிகிறது. அத்துடன் ஜடாயு தசரதனின் நண்பன். எனவே தசரத ராமனின் மனைவியாகிய சீதையை மீட்க உயிரையும் பொருட்படுத்தாது போராடுகிறது ஜடாயு. ஆனால் தாத்தைய நாயக்கருக்கு எவ்வகையிலும் தொடர்பில்லாதவள் போலம்மாள். இந்த வகையில் ஜடாயுவை விடவும் ஒருபடி மேலேயே தாத்தைய நாயக்கரும் அவர் கொண்ட மனிதநேயச் செயல் திறனும் நின்று சிறக்கின்றன எனலாம்.

வன்முறைப் போராட்டம் மனிதநேயச் செயலாகுமா?

கற்பழிப்பு என்பது பெண்ணுக்கு எதிராகத் தொடுக்கப்படும் வன்முறைச் செயலாகும். நாட்டு மக்கள் தொகையில் 48 சதவீதம் பெண்கள் பாதுகாப்பின்றிக் கற்பழிப்புக்கு ஆளாகின்றனர் எனத் தெரிகின்றது.[12] வழக்காகப் பதிவான நிகழ்வுகளிலிருந்து (1983 - 808, 1984 - 927, 1985 - 808, 1986 - 750, 1987 - 726, 1988 - 730) ஆண்டுக்கு சுமார் 800 கற்பழிப்புகள் நிகழ்கின்றன என்றும் தெரிய வருகின்றது.[13] நகர்ப்புறங்களோடு ஒப்பிடும்போது கிராமப்புறங்களில் நிகழும் இத்தகு நிகழ்வுகள் பதிவாவதில்லை என்றும் தெரிகிறது.

கற்பழிப்பென்பது ஆண் - பெண் தொடர்பான அந்தரங்க நிகழ்வாதலின், காப்பாற்ற முனைபவர் அத்தகு கொடுமைக்கு அப்பெண் ஆளாகின்றாரா என்பதை முதற்கண் கணித்தறிய வேண்டியவராகிறார். அடுத்து அச்சூழலிருந்து தன்னால் அவளைக் காக்க இயலுமா என்று சிந்திக்க வேண்டியுள்ளது. உயிரையும் பொருட்படுத்தாது நடக்கும் அப்போராட்டத்தில் உயிரையும் இழந்து தோல்வியைத் தழுவவும் நேரிடலாம். அனைத்திற்கும் துணிந்தே அவர் செயல்பட வேண்டியுள்ளது.

தாத்தைய நாயக்கரும் இத்தகு நிலைகளுக்கெல்லாம் உட்பட்டே களத்தில் இறங்குகிறார். கற்பழிப்பென்ற வன்முறையை அடக்கக் கற்களை எடுத்துப் போராடும் வன்முறையில்தான் அவர் ஈடுபடுகிறார். தேஙகாய்ப் பருமனுள்ள கற்களை எடுத்து அவர் எறிந்ததில் ஓர் ஆள் அடிபட்டு வீழ்கிறான். அவனுடைய கைகளைப் பிடித்துச் சுழற்றி வீசித் தரையில் அடிக்கிறார் நாயக்கர். ஒரு வேல்

கம்பு மட்டும் தன் கையில் இருந்திருந்தால் நான்கு எதிரிகளையும் களத்தில் வென்று அழித்திருக்க முடியும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், 'தன் வீட்டின் அரங்கு வீட்டிற்குள் தெற்கு மூலையில் சாத்தி வைக்கப்பட்டிருந்த கனமான வேல்கம்பு அவருடைய ஞாபகத்துக்கு வந்தது' (பக். 132). இவ்வாறு ஒரு பெண்ணைக் காக்க நினைத்து நான்கு உயிர்களை அழிக்கத் துணிந்த நாயக்கரின் செயல் மனித நேயச் செயலாகுமா என்ற வினா எழுகிறது.

உலகில்,

நீதி X அநீதி

நன்மை X தீமை

நல்லவர் X தீயவர்

இடையே எப்போதும் தொடர்ந்து போராட்டம்

நடந்து கொண்டிருக்கிறது. இப்போராட்டம் நின்று போனால் உலக இயக்கமும் நின்று விடக்கூடும். இவற்றுக்கிடையே உள்ள சமன்பாடு நீங்கி அநீதியும் தீமையும் தீயவர்களும் பெருகும் போது தெய்வ அவதாரங்கள் நிகழ்ந்து, அதிகமாய்ப் போன அநீதி குறைக்கப்பட்டுச் சமன்நிலை உருவாக்கப்படும் என்பது புராண வரலாறு. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எது அநீதி, எது தீமை, எவர் தீயவர் என்பதில் கருத்து வேறுபாடு காணப்பட்டு வந்துள்ளது. ஒரு காலக்கட்டத்தில் அநீதி என்பது மற்றோர் காலக்கட்டத்தில் நீதி எனவும் கருதப்பட்டிருக்கிறது. ஆயினும் இருவேறுபட்ட நீதி அநீதி என்ற கூறுகள் இருந்து கொண்டுதான் வந்துள்ளன. அநீதியை அழிக்க அவதாரமெடுத்து வந்த இராமரும் பஞ்ச பாண்டவர்களும் களத்தில் இறங்கி, அம்பெடுத்தும் வாளெடுத்தும் போராடியது சரியென்றால் அவர்கள் செய்தது மனிதகுலத்தை வாழ்விக்கச் செய்த மனிதநேயச் செயலென்றால் தாத்தைய நாயக்கரும் கல்லெடுத்துப் போராடியதும் அப்பெண்ணைக் காக்கத் தன் உயிரையே ஈந்ததும் மனிதநேயச் செயல்தான் என அமைதி காணலாம்.

கதையின் வெற்றி – மனிதநேயத்தின் வெற்றி

ஒரு தனி மனிதனுள் முகிழ்த்த மனிதநேய உணர்வை வெளிக் காட்டுதலைக் கதைக்கருவாகக் கொண்ட இக்கதை தன் நோக்கத்தில் வெற்றி பெற்றுள்ளது. கதையைப் படிப்பவர் ஒவ்வொருவரும் தாத்தைய நாயக்கரின் நிலையில் தாம் இருந்தால் இவ்வாறு செய்திருப்போமா என்று கதை சிந்திக்க வைக்கிறது. தாமும் இவரைப்

போல் இருக்க வேண்டும் என்ற மன உந்துதலையும் அளிக்கிறது. கதையில் தாத்தைய நாயக்கர் மரணத்தைச் சந்திக்கும் இறுதிக்கட்டத்தில் மனிதநேய உணர்வின் முழு தரிசனத்தையும் கதை படிப்பவர் கண்டு மெய்சிலிர்க்காமல் இருக்க இயலாது. மனிதநேய உணர்வின் வீச்சாகத் திகழ்ந்த தாத்தைய நாயக்கரின் கரங்களில் வீழ்ந்த அரிவாள் வீச்சு, மனிதநேய உணர்வுடைய ஒவ்வொருவர் உள்ளத்திலும் வீழ்ந்த வீச்சாக மாறி உணர்வூட்டுகிறது. இவ்வகையில் இக்கதையின் வெற்றி மனிதநேயத்தின் வெற்றியாக அமைந்து சிறப்பூட்டுகிறது என உறுதியாகக் கூறலாம்.

குறிப்புகள்

1. கி. ராஜநாராயணன் கதைகள், பதிப்புரை.
2. மேற்படி, ஆசிரியர் உரையில்
3. 1998இல் வெளியிடப்பட்ட கி. ராஜநாராயணன் கதைகள் என்ற நூலில் 72 சிறுகதைகள் தொகுப்பாக இடம் பெற்றுள்ளன.
4. வேட்டி, கி. ராஜநாராயணன், பக். 115.
5. மேற்படி, பக். 124-133.
6. கதவு (சிறுகதைத் தொகுதி) கி. ராஜநாராயணன், பக். 112-120.
7. மேற்படி, பக். 121-133.
8. கரிசல் காட்டுக் கடுதாசி, (இரண்டாம் பாகம்), கி. ராஜநாராயணன், பக். 120-158.
9. வேட்டி, கி.ரா, பக். 134-138.
10. மேற்படி, பக். 126.
11. கம்பராமாயணம், ஆரண்ய காண்டம் உரையுடன், ஜடாயு உயிர் நீத்த படலப் பாடல்கள்.
12. பெண்களும் குற்றங்களும், சி.அ. அய்யப்பன், (மொழிபெயர்ப்புப் பட்டய ஆய்வேடு) பக். 6.
13. மேற்படி, பக். 19.

******

(அ)ஹிம்சை - சிறுகதைத் தொகுப்பில் மனிதநேயம்

க. ஜெயந்தி
ஆய்வாளர்

'(அ)ஹிம்சை', இலக்கியச் சிந்தனை தேர்வு செய்த, கி.பி. 1994ஆம் ஆண்டின் சிறந்த சிறுகதைகள் பன்னிரண்டின் தொகுப்பாகும். இந்தச் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள பாரதிபாலனின் 'மாறுதடம்", ப்ரியா கல்யாணராமனின் "பஞ்சு மனம்", காவேரியின் "நைந்த ஆடையும் நாற்சந்தியும்", கே.பி. நீலமணியின் "நீருக்கு நிறமில்லை", விமலாதித்த மாமல்லனின் "உயிர்த்தெழுதல்", சோ. தர்மனின் "(அ)ஹிம்சை" ஆகிய சிறுகதைகள் இங்கு ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் சிறுகதைகளில், இயந்திரமயமான இன்றைய வாழ்க்கை முறையில் மனிதநேயம் குறைந்து வரும் நிலையையும் மனிதநேயத்தின் இன்றியமையாமையையும் இந்தப் படைப்பாளிகள் சுட்டியுள்ளனர். சோ. தர்மனின் "(அ)ஹிம்சை" சிறந்த சிறுகதையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள காரணத்தால் சிறுகதைத் தொகுப்பின் தலைப்பாக இடப்பட்டுள்ளது.

மனிதநேயம்

> 'மனிதனை மனிதன்
> மதிக்கும் மானுட நேயம்"[1]

என்பது மனிதநேயம் குறித்த தமிழன்பனின் கருத்தாகும். இந்த நேயம் பிற உயிர்களையும் தன்னுயிர் போல நேசிக்கச் செய்யும். இந்த ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ள சிறுகதைகளில் குறுகிய மனப்பான்மையைக் களைய வேண்டியதன் இன்றியமையாமை, பிற உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி வாழ்வதால் ஏற்படும் மன நிறைவு ஆகிய மனிதநேயத்தை வளர்க்கக் கூடிய கருத்துகள் இடம் பெற்றுள்ளன.

குறுகிய மனப்பான்மையைக் களைதல்

இன்று, அமைதியான வாழ்க்கை வாழவேண்டும் என்பதைவிட வசதியான வாழ்க்கை வாழவேண்டும் என்ற எண்ணமே பெரும்பாலான மக்களிடையே காணப்படுகிறது. இதன் விளைவாக

நம் நாடு, நம் மக்கள் என்று எண்ணும் பரந்த மனப்பான்மை மாறி, தன் வீடு, தன் நலம் என்று எண்ணும் குறுகிய மனப்பான்மை மக்களிடையே தோன்றிவிட்டது. சக மனிதர்களுக்கும் உயிர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே குறைந்ததற்கு அவர்களின் இந்தக் குறுகிய மனப்பான்மை காரணமாக உள்ளது. இந்நிலை மாறி, மக்களிடையே மனிதநேயம் மலரவேண்டும் என்ற நோக்கில் மேற்கூறிய சிறுகதைகள் அமைந்துள்ளன. இச்சிறுகதைகளின் வழி மனிதநேயத்தை வளர்ப்பதற்குரிய நான்கு வழிமுறைகளைப் பெறமுடிகிறது. அவையாவன:

1. முதியோரைப் பேணுதல்.
2. இயன்றவிடத்தெல்லாம் பிறருக்குத் தம்மாலியன்ற உதவி புரிதல்.
3. தீண்டாமையை ஒழித்தல்.
4. பிற உயிர்களிடத்துப் பரிவு காட்டுதல்.

1. முதியோரைப் பேணுதல்:

முதியோரின் மனம் புண்படாதவண்ணம், அவர்களது அனுபவ அறிவிற்குத் தலைவணங்க வேண்டியது இளைய தலைமுறையினரின் கடனாகும். “மாறுதடம்” கதையில் வரும் நாயகன் ஒரு வேலையில்லாத பட்டதாரி. தீண்டாமைக் கொடுமையால் அவதிப்படும் இனத்தைச் சேர்ந்தவன். அவனது கிராமத்து முதியவர் ஒருவர், படித்து, உயர்ந்த இளைஞர்களால் தன் இனத்திற்கு விடுதலை கிடைக்கும் என்று கனவு காண்பவர். முத்துக்காளை என்ற இளைஞன் படித்து, உயர்ந்த வேலையில் இருப்பவன். முதியவர், கதாநாயகனை முத்துக்காளையிடம் சென்று உதவி கேட்குமாறும் அவன் தன் கிராமத்து மக்களை - மக்களின் மேம்பாட்டை விரும்புபவன் என்றும் கூறி நம்பிக்கையுடன் அனுப்பி வைக்கிறார். சென்னையில் முத்துக்காளையின் அலட்சியப் போக்கையும் வாழ்க்கை முறை மாற்றத்தையும் கண்டு மனம் நொந்து திரும்பும் கதாநாயகன், முதியவர் மீது கோபப்படவில்லை. அதற்கு மாறாக, அவர் கொண்ட நம்பிக்கை பொய்த்துவிட்டதே என்று கலங்குகிறான்.

> **“கண்களில் கனவு கசிய என்னைப் பார்ப்பார். நான் என்ன சொல்லப் போகிறேன்? முத்துக்காளை ரொம்ப உசத்தியா இருக்கார் என்று சொல்லலாமா? சொல்ல முடியுமா? தேடாத இடமெல்லாம் தேடி, தொடாத இடமெல்லாம் தொட்டு உயரத்தைப் பிடித்திருக்கிறது. முன் ஏறியவன், பின்னால் வருகிறவன் கையை உதறிவிட்டு தான் பிடித்த கொம்பு பலம்**

என்று விலகி, உன்பாடு உன்னோடு, என் கைக்கு கிடைத்தது என் கணக்கு, பசித்தவன் பசித்தே இருக்கட்டும். ஊர் தள்ளி, உயரம் என்று எதற்குள்ளோ தன்னைத் தள்ளிக்கிறாப்லே இருக்கு ....! இதுதான் உயர்வா? இதை உயர்வு என்று சொல்ல முடியுமா? (பக். 29–30)

என்று புலம்புகிறான். எனினும் முதியவரைக் கண்டவுடன் அவரது நம்பிக்கையைத் தகர்க்க விரும்பாது முத்துக்காளை வேலைக்கு ஏற்பாடு செய்வதாக வாக்களித்ததாகக் கூறுகிறான்.

"பண்ணிப் போடுவானப்பா.......... அவன் நல்ல மாதிரி. உனக்கு மட்டுமல்ல. நம்ம பசங்க எல்லாத்துக்குமே பண்ணுவான். ஒருத்தன் உசந்திட்டாப் போதும்யா....... ஒவ்வொருத்தனா மேலே ஏத்தி விட்டுடலாம்." (ப. 30)

என்ற முதியவரின் மகிழ்ச்சியைக் கண்டு மகிழ்கிறான். உண்மையைக் கூறியிருந்தால் முதியவரின் கனவுகள் அனைத்தும் தரைமட்டமாகியிருந்திருக்கும். அதை அவரால் தாங்க முடியாது. வாழும் சிறிது காலம் வரையாவது அவர், அந்தக் கனவுடன் வாழட்டும் என்று எண்ணியே கதாநாயகன் உண்மையை மறைத்து விடுகிறான்.

"நீருக்கு நிறமில்லை" சிறுகதையில் வரும் நாயகி சந்திரிகா, தான் ஏழ்மை நிலையில் இருந்தபோது, தனக்கு ஆதரவளித்த தாயம்மா என்ற முதியவளிடம், உயர்ந்த நிலை அடைந்தபிறகும் அன்பு பாராட்டி உதவி செய்கிறாள். மாடு முட்டிய காரணத்தால் தாயம்மா காயமடைந்தபோது, "தாயம்மாளின் மகள்" என்று மருத்துவமனையில் கையெழுத்திடுகிறாள். தாயம்மா இறந்தவுடன், அவளது இறுதிச் சடங்கையும், தானே முன் நின்று நடத்துகிறாள்.

மேற்கூறிய இரண்டு சிறுகதைகளிலும், உறவு முறை சாராத முதியவர்களிடத்தும் மனிதநேயத்துடன் நடந்து கொள்ளுதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இன்றையச் சூழ்நிலையில் குடும்ப உறவுகளிலும் மனிதநேயம் குறைந்து வரும் நிலை காணப்படுகிறது என்பதற்குப் பெருகிவரும் முதியோர், ஆதரவற்றோர் இல்லங்கள் சான்றாக விளங்குகின்றன. பெற்றோர்களின் உழைப்பு, வருமானம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு, அவர்களை மதிப்புள்ளவர்களாகவும் மதிப்பற்றவர்களாகவும் எண்ணும் மனநிலை பரவலாகக் காணப்படுவது இதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

"பஞ்சு மனம்" சிறுகதையில் வரும் பஞ்சாபகேசன் தன் மகனிடம், தன் பெண்ணின் திருமணத்தின் பொருட்டுப் பொருளுதவி கேட்கச் செல்கிறார். பேருந்தில் செல்லும் போது,

"கடவுளே, ராமலிங்கம் இன்று மிகவும் கருணை யுள்ளவனாகவும், தனவானாகவும் இருக்க அருள் புரிய வேண்டுகிறேன்" (ப. 32)

என்று அவர் வேண்டுவதன் மூலம், அவரது மகன் ராமலிங்கத்தின் மனிதநேயமற்ற தன்மையைக் கோடிட்டுக் காட்டிவிடுகிறார். கடைசித் துண்டு நிலத்தையும் விற்று மகனைப் படிக்க வைத்தபோதும், சகோதரிகளின் திருமணத்திற்குப் பொருளுதவி செய்ய மறுத்து, அலட்சியப்படுத்திய மகனைத் தலைமுழுக முடிவுசெய்கிறார். பதறியபடி காலில் விழுந்த மகனிடம் அவர் கூறும் விளக்கம், சுயநலம் கொண்ட பிள்ளையாக இருந்தாலும் கூட, அவனும் அவனைச் சார்ந்த மனைவி மக்களும், நன்றாக இருக்க வேண்டும் என்ற மனிதநேயமிக்க அவரது எண்ணம் வெளிப்படும் வகையில் உள்ளது.

"ராமலிங்கம், இந்த என்னோட முடிவு பணத்துக்காக எழுந்தது இல்லடா. நாள் பூரா நீ இப்படி அலட்சியப்படுத்துட்டி யேன்னு உன்னைச் சபிக்கிறேனே.......... அதுக்காகடா. டேய், நீ நெஜமா நல்லவன் இல்லடா. உன்னைச் சபிக்க எனக்கு உரிமை உண்டில்லையா? அது வேண்டாம்டா. சமயத்துல உன் மனைவியையும் குழந்தையையும்கூட அவங்கதான் உன் நடத்தைக்குக் காரணம்னு சபிக்கறேன்டா. நாசமாய் போகட்டும்னு திட்டறேன். பொங்கித் தவிக்கிறேன். எதுக்கும் உதவாம எதுக்கு இருக்கணும். செத்து ஒழின்னு நினைச்சுக்கறேன். எனக்குப் பயமா இருக்குடா ராமலிங்கம். எங்கே என் சாபம் பலிச்சிடுமோன்னு அச்சமா இருக்கு. என்னோட வயிற்றெரிச்சல் பலிச்சு, அந்தப் பாவமும் எனக்கு வேண்டாம்னுதான் உன்னை விலக்கறேன். என் மகன்ங்கற அந்தஸ்திலேர்ந்து அகற்றிடறேன். அப்புறம் நீ யாரோ...... நான் எவரோ. உன் மனைவியையும், உன்னையும், குழந்தையையும் நான் சபிக்க மாட்டேன். சபிக்க வேண்டாம். சபிச்சாலும் பலிக்காது. விட்டுறுடா." (ப. 41)

என்பது அவர் கூற்றாக வரும் பகுதியாகும்.

வயதான ஓர் இந்தியன், அந்நிய மண்ணில் மகன், மருமகளின் ஆதரவு கிடைக்காத சூழலில் வாழும் நிலையைக் கூறுகிறது "நைந்த ஆடையும் நாற்சந்தியும்" என்ற சிறுகதை. முதுமையின் விளைவால் ஏற்பட்ட மறதி காரணமாக அவர் செய்யும் தவறுகள்கூட மகனாலும் மருமகளாலும் மன்னிக்கமுடியாத மாபெரும் குற்றங்களாகக் கருதப்படுகின்றன.

"மனுசன் ஒரு நா சாவியை மறப்பான். இன்னொரு நா கோட்டை மறப்பான். ஜலதோஷம் பிடிச்சினு கிளவனுக்கு நா சிசுருசை செய்ய வேண்டும். ஐய்ய, என்ன பொளப்பு, இந்த கிளட்டு மனுசனை வெச்சிகினு........" (ப. 43)

என்பது மருமகளின் கோபமான வார்த்தைகள். வேலைக்குச் செல்லும் மகனும் மருமகளும் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள ஒரு நம்பிக்கையான ஆள் தேவை என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே தன்னைக் கிராமத்திலிருந்து அழைத்து வந்துள்ளனர் என்பதை எண்ணி மிகுந்த மன உளைச்சல் கொள்கிறார். சாவியை வீட்டினுள்ளேயே மறந்து வைத்துவிட்ட காரணத்தால் ஏற்பட்ட வருத்தம், அவமானம் ஆகியவை மனதை அழுத்த, அவருக்கு நேர்ந்த அந்த நிகழ்வால், தங்கள் மானமே பறிபோனதாக மகனும் மருமகளும் கூச்சலிட்டபோது மனமுடைந்து போகிறார். தொலைதூர தேசத்தில் அனாதைபோல இருக்க வேண்டி வந்ததை எண்ணிப் புலம்புகிறார்.

"வெளியிலிருந்து வாசல் கதவை இழுத்தபோது, அது 'கிளக்' என்ற ஒலியைக் கிளப்பிப் பூட்டிக்கொண்டது. அம்மாடி, பிழைத்தோம்! ஒவ்வொரு முறை வாசல் கதவு தன்மட்டில் இழுத்துப் பூட்டிக் கொள்ளும்போதும் வேலாயுதத்திற்கு ஒருமுறை உயிர் போய் திரும்பி வரும். லண்டன் மாநகரம் வந்த புதிதில் நிறைய முறை தடுமாறி, குழப்பமுற்று, சாவியை மறந்துபோய், பிறகு வீட்டிற்குள் போக முடியாமல், வெளியே எங்கெல்லாமோ அலைந்து கடைசியில் வீட்டின் முன்னால் ஆறுமுகத்திற்காக வனஜாவிற்காக கால் கடுக்கக் காத்திருப்பார்." (ப. 44)

என்ற வரிகள் அவரது நிலையை நமக்கு உணர்த்துகின்றன. ஆயினும் மகன், மருமகள், பேரப்பிள்ளைகள் மீது அவர் கொண்ட அன்பு மாறவில்லை. தம்மாலியன்ற உதவிகளைச் செய்து வருகிறார். தன்னை இவ்விதம் கீழ்த்தரமாக நடத்திவிட்டு, வெளிநாட்டினரிடம் தங்கள் தாய்மண்ணின் பெருமை குறித்து மகனும் மருமகளும் பெருமையாகப் பேசுவதைக் கேட்டு,

"வெளிப்பூச்சுக்கு ரொம்ப அலங்காரமாகப் பேசிப்பாங்க, புருஷனும், பெண்ஜாதியும். என்ன ஆஷாடபூதித்தனம். எப்போதாவது அண்டை வீட்டில், அக்கம் பக்கத்திலிருக்கும் வெள்ளைக்காரர்களுடன் அபூர்வமாகப் பேச நேர்ந்தால், இருவரும் பீற்றிக் கொள்வார்கள்.'எங்கள் நாட்டில் வயதான பெற்றோர்களை நாங்கள் கண்ணும் கருத்துமாய் பார்த்துக்

> கொள்வோம். அது எங்கள் தர்மம், கடமை. மேற்கு தேசங்களில் 'ஓல்ட் ஏஜ் ஹோம்' என்ற இடத்தில் வயதானவர்களை இரக்கமின்றி இடித்துத் தள்ளி விடுகிறார்கள். என்ன கொடூரம்! எங்களால் அப்படியொரு நிலைமையை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது' என்று மார்தட்டிப் பேசுவாங்க" (ப. 44)

என்று வருந்துகிறார். தன் நிலையை வெளியில் கூற முற்பட்டால் தன் மகனின் மானம் மட்டுமல்ல, நாட்டின் மானமே போய்விடும் என்ற காரணத்தால் கசப்பை விழுங்கி வாழ்கிறார்.

மேற்கூறிய இரண்டு சிறுகதைகளிலும் பெற்றோர்களிடமே நேயமற்று நடக்கும் மகன்கள் சித்திரிக்கப்பட்டுள்ளனர். உறவு முறைகளில் காட்டப்படுவது மனிதநேயமாகாது; அது இயல்பான ஒன்று என்ற கருத்து, இதன் மூலம் தகர்க்கப்படுகிறது.

2. இயன்றவிடத்தெல்லாம் பிறருக்குத் தம்மாலியன்ற உதவி புரிதல்

இவ்விதம் உதவிபுரிவர்கள் குறைந்துவரும் காரணத்தால், இவர்களின் செயல்கள் செய்திகளாகின்றன.

"மாறுதடம்" சிறுகதையில் வரும் முதியவர், தன் இன மக்களின் மேம்பாடு குறித்துக் கனவு காண்பவர். முத்துக்காளை என்ற படித்த, முன்னேறிய இளைஞன், சிறுவனாக இருந்தபோது தன்னிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டு இருந்ததை நினைத்து, கிராமத்தின் வேலையில்லா இளைஞர்களுக்கு அவன் உதவி புரிவான் என்று நம்புகிறார். அந்த நம்பிக்கையில் முத்துக்காளையின் சென்னை முகவரியைத் தன்னிடம் எப்போதும் வைத்திருக்கிறார். படித்த, வேலையில்லாது இருக்கும் இளைஞன் ஒருவனைக் கண்டவுடன் அந்த முகவரியை அவனிடம் கொடுத்து,

> "என் பேரைச் சொன்னாப் போதும், அப்படியே உசிரை விடுவான். போன சித்திரைக்கே வருவான் வருவான்னு எதிர்பார்த்தேன். காணோம். பெரிய உத்தியோகஸ்தனா யிட்டா அப்படித்தான் சட்டுனு கிளம்ப முடியுமா? நீ போய் பாருய்யா. உனக்கு உத்தியோகத்துக்கு எதுனா வழி காட்டுவான்' (ப. 22)

என்று நம்பிக்கை ஊட்டுகிறார். இவரது இந்த நம்பிக்கை, செய்கை, இவர் மீது அந்த இளைஞனுக்கு மிகுந்த மரியாதை ஏற்பட வழிவகுக்கிறது.

"நீருக்கு நிறமில்லை" என்ற சிறுகதையில் வரும் சந்திரிகா, வறுமையில் உழன்றபோது தனக்கு அடைக்கலமளித்த தாயம்மா மற்றும் தெருவாசிகளுக்கு, தன் நிலை உயர்ந்தபோது தம்மாலியன்ற உதவிகளையெல்லாம் செய்கிறாள். தண்ணீர் இன்றித் தவித்த தெருவாசிகளுக்குத் தண்ணீர் ஏற்பாடு, தெருவிளக்கு அமைத்தல் போன்ற உதவிகளைச் செய்கிறாள்.

> "சந்திரிகாவிடம் தெருவிற்கே உசிரு. எப்போதும் கையில் பணம் புரண்டு கொண்டிருக்கும். யார் வந்து கேட்டாலும் கடனோ....... இனாமோ.......... இல்லை என்னாமல் அஞ்சோ பத்தோ சிரித்துக்கொண்டே கொடுப்பாள். கடனாயிருந்தாலும் அதை அவர்களாகத் திருப்பித் தராதவரை கேட்கமாட்டாள். அவளிடம் கடனோ, கைமாத்தோ வாங்காதவர்கள் அந்தத் தெருவில் யாருமில்லை. அந்த அளவுக்கு சந்திரிகா தன் அன்பால் அனைவரையும் கவர்ந்திருந்தாள். ஒரு தேர்தலில் நின்றால் ஓட்டுப்போட்டு, ஜெயிக்க வைத்துக் காட்டுமளவிற்கு சுற்று வட்டாரத்திலும் சந்திரிகா தன் அன்பைப் பரவ விட்டிருந்தாள்." (ப. 66)

என்ற கூற்றுவழி மனிதநேயமிக்கவர்கள் பெறும் மதிப்பு உணர்த்தப்பட்டுள்ளது.

3. தீண்டாமையை ஒழித்தல்

காலங்காலமாக மக்களிடையே காணப்படும் தீண்டாமை, மனிதன், மனிதனாக வாழ்வதற்கு - மனிதநேயமுடையவனாக வாழ்வதற்குப் பெருந்தடையாக விளங்குகிறது. மக்கள், அந்தச் சிக்கலில் இருந்து மீள்வதற்கு, படித்த இளைஞர்களை நம்புகின்றனர். "மாறுதடம்" சிறுகதையில், ஆசிரியர் இந்தச் சிக்கல் காரணமாக மன உளைச்சல் அடைந்துள்ள கிராம மக்களைக் காட்டியுள்ளார். அதன்வழி தீண்டாமை ஒழிய வேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்தியுள்ளார். இந்தச் சிறுகதையில் வரும் இளைஞரின், முதியவரின் எண்ண ஓட்டத்தின் வழி ஆசிரியர் இக்கருத்தை வலியுறுத்துகிறார்.

> "இன்னாருக்குத்தான் என்றில்லை. கூப்பிட்ட குரலுக்கு ஓடவேண்டியதுதான். கை நீட்டிய திசை நோக்கி நடக்க வேண்டியதுதான். உத்தரவுப்படி உழைத்து நிமிர வேண்டியதுதான். கொடுக்கிற கூலியைக் குனிந்து வாங்கிக் கைகூப்ப வேண்டியதுதான். ஒரு மரக்காலோ, இரண்டு மரக்காலோ ஐய்யாக்கமார்க தருவதுதான். கூடுதல் குறைச்சல்

> என்று குரல் கொடுக்க முடியாது. பழகி விட்டது. காலங்காலமாக கைகட்டி நின்றே பழகி விட்டது. குடியானவர்கள் குரல் கேட்டதும் தலைப்பாகையை அவிழ்த்து இடுப்பில் கட்டி நிற்பது என்பது பழகிவிட்டது. இது அவர்கள் மண். இதை உழுது, விதைத்து உருப்படியாக்க வேண்டியது தன் கடமை. அவர்கள் போடுவதுதான் எனக்கு உரம் என்பது வேதமாய் படிந்து விட்டது. எதையும் ஏன் என்று கேட்கத் தோன்றவில்லை" *(ப. 21)*

என்பது இளைஞனின் எண்ண ஓட்டமாகும். ஆனால் முதியவரின் கனவு எதிர்கால மேம்பாடு குறித்ததாக இருக்கிறது. தீண்டாமை ஒழிவதற்கான வழிவகை குறித்ததாக அந்தக் கனவு இருக்கிறது.

> "பழசு எப்படியோ? இனி பிறகாவது காலனிப் புழுதி தாண்டி நாலு மனுஷ மக்களோடு சகசமாய் இருக்க வேண்டும். வெளுப்பு உடுத்தி வீதியில் நிமிர்ந்து நடக்க வேண்டும்." *(ப. 23)*

என்பது முதியவரின் எண்ணம். கிராமத்தைத் தாண்டி வெளி நகரங்களுக்கும் சென்று வந்த இளைஞனுக்கு முதியவரின் கனவைக் கலைக்க விருப்பமில்லை. மேலும் வேலை கிடைக்காத விரக்தி, முன்னேறியவர்களின் அலட்சியப் போக்கு ஆகியவை அவனுக்கு முதியவரின் கனவு வெறும் கனவாக மட்டுமே இருக்கப் போகிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

இந்தச் சிறுகதை மூலம் தீண்டாமை என்பது தீராத ஒரு சிக்கலாக மனிதநேயமிக்க சமுதாயம் உருவாகத் தடையாக விளங்குவதை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

4. பிற உயிர்களிடத்தும் பரிவு காட்டுதல்

மனிதர்களிடத்து மட்டுமன்றி பிற உயிர்களிடத்தும் பரிவு காட்டுதல் வேண்டும் என்ற மனிதநேயச் சிந்தனை, "நீருக்கு நிறமில்லை", "உயிர்த்தெழுதல்", "(அ)ஹிம்சை" ஆகிய சிறுகதைகளில் சிந்திக்கப்பட்டுள்ளது.

"நீருக்கு நிறமில்லை" சிறுகதையில் வரும் தாயம்மா என்ற முதியவள், பொட்டல் காட்டில் மேய்ந்து கொண்டிருக்கும் கைவிடப்பட்ட மாடுகளுக்கு நீண்ட தொலைவிலிருந்து நீர் சுமந்து சென்று தொட்டியில் ஊற்றும் பணியைத் தன் தலையாய பணியாகச் செய்கிறார். மாடு முட்டிக் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில்

இருந்த நேரத்திலும், "பாவம், மாடுங்க .... தண்ணீ......... தண்ணீன்னு" (ப. 88) என்று புலம்புகிறார்.

"உயிர்த்தெழுதல்" சிறுகதையில் வரும் சிறுவன், உணர்வற்ற நிலையில் இருக்கும் தனது செல்லப் பறவையைப் பறக்கச் செய்வதற்கு இறுதிவரை போராடுகிறான். வீட்டில் உள்ளவர்களின் எதிர்ப்பு களையும் மீறி, கையில் பறவையை ஏந்தியவண்ணம் மனம் கலங்கி அலைகிறான். உறவுக்காரச் சிறுவன் பறவை கிடைத்த நேரத்தை வைத்துக் கணினி மூலம் ஜாதகம் தயாரித்து, ஜாதகத்தின்படி பறவை இறந்து விட்டது என்று கூற, அவன் சொல் கேட்டு பறவையை வீட்டில் அனுமதிக்க வீட்டில் உள்ளோர் அனைவரும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். மனோதத்துவ மருத்துவர் ஒருவரை அணுகிப் பறவைக்கு மருத்துவம் செய்கிறான். பறவையைக் கையிலேந்தியபடி வீட்டிற்குச் செல்வதற்கும் அஞ்சி, வெளியில் சுற்றுகிறான். பறவைக்கும் தனக்குமான பாசப்பிணைப்பை எண்ணி, எங்கே அதை இழந்து விடுவோமோ என்று எண்ணிக் கலங்குகிறான்.

> "எப்போது இதை முதன் முதலாகப் பார்த்தோம். காலநதியின் கட்டற்ற ஓட்டத்தில் கரைந்து விட்டிருந்தது அந்தத் தருணம். சிறு வயது முதலே அதைத் தன்னுடையதாகவே பாவிக்கத் தலைப்பட்டிருந்தான். அதுவும் தன்னைப் போலவே கும்பலில் கரைய மறுத்துத் தனித்திருந்ததனால்கூட இருக்கலாம். அதனுடன் உண்டான பிணைப்பு ஆண்டவன் தனக்கு அளிக்கத் தவறிவிட்ட அபூர்வ சக்தியை அதன் உயிர்ப்பில் அடையாளம் கண்டு ஆனந்திக்க ஆசைபட்டே அதைத் தூக்கிக் கொண்டு திரிவதாகத் தோன்றியது.

என்ற கூற்று அவனது மனக்கலக்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. அடுத்து, ஒரு சாமியாரிடம் சென்று காட்டுகிறான். வீட்டிற்குத் திரும்பிய அவன், தன் கையிலிருந்து பறவையைப் பிடுங்கிப் பெரியவர்கள் தெருவில் வீசியபோது உள்ளம் துடிதுடிக்க,

> "ஐயோ தரையில் மோதி இப்போதுதான் அது உண்மையிலேயே இறக்கப் போகிறது. பதறியபடிப் படிகளில் இறங்கித் தெருவுக்காய் ஓடினான் நரசிம்மன்.
> கொலைகாரப் பாவிகளா.......... தெய்வமே இது என்ன சோதனை, கசக்கி வீசிய கந்தல் துணி போலத் தக்கையாய் அது தார் ரோடை நோக்கி வந்து கொண்டிருந்தது. இந்த நான்கு மீட்டர் இடைவெளிக்கு மட்டும் எனக்கு பறக்கும் சக்தியைக் கொடுக்கமாட்டாயா இறைவா. என் இதயம்

தெருவில் சிதறி இறக்கும் காட்சியைக் காண்பதற்காகத்தான் இத்துணைக் காலமும் உயிரோடு என்னை உலவ விட்டார்கள். கடவுளே காப்பாற்று" (ப. 176)

என்று பதறுகிறான். தரையில் விழாமல் பறவை பறக்க முற்பட்டது கண்டு, அவன் அடைந்த மகிழ்ச்சியை

'ஸ்தம்பித்து நின்றிருந்தான் நரசிம்மன். கண்களில் ஊற்றெடுத்த கண்ணீர் நரசிம்மனின் கன்னங்களில் நன்றி கூறிக்கொண்டு வழிந்தபடி இருந்தது." (ப. 177)

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

(அ)ஹிம்சை சிறுகதையில் வரும் அய்யா, காட்டிற்குச் சென்று ஆடுகளை மேய்ப்பவர். காட்டுப்பாதையில் கிடைத்த மைனா அவரது முதல் செல்லப் பறவை. ஒருநாள் மைனா காணாமல் போக, பெரும் பரபரப்பு அடைந்து அங்குமிங்கும் தேடியலைந்து கண்டுபிடித்த பின்பே நிம்மதி அடைகிறார். அய்யா கொடுத்த சேவு தொண்டையில் சிக்கி மைனா இறந்த போது வீட்டில் உள்ள அனைவரும் அழுகின்றனர். அதன் பிறகு எந்தச் செல்லப் பிராணியையும் சேர்ப்பதில்லை என்ற மனைவியின் கட்டளையை மீறிக் கிளிக்குஞ்சு ஒன்றைக் கொண்டு வருகிறார். கிளியைக் கண்டவுடன் மனைவியின் மனம் மாறுகிறது. பிள்ளையைப் போலப் பாதுகாத்து வளர்க்கின்றனர். கிளியை விலைபேச வந்த கிளி சோதிடனிடம்,

"பெத்த புள்ளய எவனாவது வெலைக்கு விப்பானா? அது மாதிரி இதுவும் ஒரு புள்ளடா. நான் இத கிளியா வளக்கலேடா, இது எம் புள்ளடா" (ப. 198)

என்று கூறி விரட்டுகிறார். அதன் பிறகு கிளியைப் பாதுகாப்பதாக எண்ணி வீட்டிற்குள்ளேயே வைத்திருக்கிறார். கதவில் சிக்குண்டு கிளி இறந்து போக, வீட்டில் அனைவரும் அதிர்ச்சியால் மனமுடைந்து அழுகின்றனர். உரிய மரியாதையுடன் அடக்கம் செய்கின்றனர்.

"செம்பு நிறைய ஆட்டுப்பால் பீச்சி மண்வெட்டியை எடுத்துக் கொண்டு போய் குழி தோண்டி பால் ஊற்றி புதைத்துவிட்டு வந்தார். இப்போதெல்லாம் அய்யா யாருடனும் பேசுவதில்லை. சரியாக ஆடு கூட மேய்க்கப் போவதில்லை. ராத்திரியில் தூங்கும்போது தன்னாலயே பேசுவதும், அலறி ஓடுவதும், கூப்பாடு போட்டுக் கத்துவதும் அதிகரித்துக் கொண்டே வந்தது. தவளையைக் கல்லெறிந்த சிறுவனை

> அடியாய் அடித்து விட்டார். அடிக்கடி சொல்லிக் கொண்டார். "இனிமேப்பட எந்த உசுப்பிராணியும் நமக்கு வேண்டாம்." (ப. 199)

என்று வரும் கூற்று அவரது மனநிலையைக் காட்டுவதாக உள்ளது. எனினும் இறுதியில் அவர் ஒரு நாய்க்குட்டியுடன் வந்து நிற்கிறார்.

இந்தச் சிறுகதையில் வரும் அய்யா, அம்மா, மகன் என மூன்று பாத்திரங்களும் பிற உயிர்களிடத்து அன்பு காட்டுபவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

முடிவுரை

குறுகிய மனப்பான்மை மனிதநேயமிக்க சமுதாயம் உருவாகுவதற்குத் தடைக்கல்லாக இருக்கிறது. தீண்டாமை போன்ற சமூகச் சிக்கல் வேரூன்றுவதற்கு இது காரணமாக விளங்குகிறது. குடும்ப உறவுகளிடையிலும் மனிதநேயமற்ற தன்மை தோன்ற இது வழிவகுக்கிறது.

இவ்வாறு (அ)ஹிம்சை சிறுகதைத் தொகுப்பின் மூலம், சிறுகதை ஆசிரியர்கள் மனிதநேயம் உள்ளவர்களையும் மனிதநேயமற்றவர்களையும் இனம் காட்டி, அதன்வழி மனிதநேயமிக்க சமுதாயம் தோன்றுவது குறித்த தமது சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

குறிப்புகள்

1. தயானந்தன் பிரான்சிஸ், *தற்காலப் படைப்பிலக்கியத்தில் மத நல்லிலக்கணமும் மனிதநேயமும், மனிதனைத் தேட மார்க்கம் என்ன?* தமிழன்பன், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1994, சென்னை, ப. 4.

******

'கல்கி' சிறுகதைகளில் மனிதநேயம் (கணையாழியின் கனவு)

த. பிரகலாதன்
ஆய்வாளர்

'Humain' - எனும் பழைய பிரெஞ்சு மொழிச் சொல்லிருந்து 'Human' என்ற ஆங்கிலச்சொல் தோன்றியது. 'Hūmānus எனும் லத்தீன் சொல்லிலிருந்து 'Humain' தோன்றியது. பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு தான் humanism, humanity, humanitarian போன்ற சொற்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன.[1] 'Humanism' என்ற ஆங்கிலச்சொல்லுக்கு இணையாக 'மனிதநேயம்' குறிக்கப்படுகிறது. தமிழ்மொழியில், 'மனிதநேயம்' எனும் சொல் அண்மைக் காலத்தில் பயன்பட்டு வருகின்றது. 15, 16ஆம் நூற்றாண்டுகளில் 'Humanism' ஓர் இயக்கமாகவே கருதப்பட்டது. அக்காலங்களில் மனிதர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்டனர். மதத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் தரப்பட்டது. மனிதனுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. அதனால் இலக்கியங்களில் மனிதனின் பண்புகள் புகழ்ந்துரைக்கப்பட்டன. ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் நாடகத்தில் மனிதனைப் பற்றிப் புகழ்ந்து கூறப்படுகின்றது.

> "What a piece of work is a man! how noble in reason! how infinite in faculty! inform in moving how express and admirable! in action, how like an angel! is apprehension, how like a god! the beauty of the world! the paragan of animals"[2]

(மனிதன் என்பவன் எவ்வளவு அற்புதமான படைப்பு; சிந்திக்கும் திறனில் உயர்ந்தவன்; திறமை வாய்ந்தவன்; எவ்வளவு அற்புதமாக வெளிப்படுத்தக்கூடியவன்; தேவதைபோல் செயல்படுபவன்; புரிந்து கொள்வதில் கடவுளுக்கு ஒத்தவன்; என்னே அழகு இவ்வுலகம்; விலங்குகளை விடச் சிறப்புமிக்கவன்.)

"மனிதனுக்குரிய குணங்கள் (தர்மபுத்தி, கருணை, ஒத்துப்போதல்) மனிதநேயம்" - என்று A practical Hindi English, Dictionary விளக்கம் தருகிறது.[3]

> "அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
> தன்நோய்போல் போற்றாக் கடை"

பிற உயிர்க்கு உற்ற துன்பத்தைத் தனக்கு நேர்ந்த துன்பம் போலக்கொண்டு காக்காது போனால் ஆறறிவு பெற்றதனால் என்ன பயன் உண்டு' என்று வள்ளுவர் கூறுவது மனிதநேயப் பண்பின் விளக்கமாகவே அமைகிறது.[4]

கலிபோர்னியா பல்கலைக்கழக மருத்துவத்துறைப் பேராசிரியர் டாக்டர் கென்னத் பிரிடியர், பிறர்க்கு உதவி செய்யும் போது நோயை எதிர்க்கின்ற தன்மை கொண்ட செல்கள் (Cells of the Immune system) முழு சக்தியோடு இயங்குகிறது. அதனால் உடம்பில் நோய் வருவதில்லை என்பதை ஆராய்ச்சி மூலம் நிரூபித்துள்ளார். மனிதநேயப் பண்புகளுள் ஒன்றான பிறருக்கு உதவுதலை 'alquism' என ஆங்கிலத்தில் வழங்குவர்[5] சமூகத்திற்கு மட்டுமல்ல; தனிமனித வளர்ச்சிக்கும் 'மனிதநேயம்' உதவுகிறது.

சாதி, மதம், அரசியல், ஆட்சி இவற்றால் சர்வதேச மனிதம் சரிந்து கொண்டிருந்த போது மனிதநேயம் உணரப்பட்டது. அன்பை விதைப்பதும், மனிதர்களை மதிப்பதும் உலகத்தின் தேவை ஆயிற்று. உருவத்தால் மனிதனாகி உள்ளத்தால் விலங்காகித் திரியும் மக்களின் மேல் பற்றுக்கொண்ட இலக்கியவாதிகள் தங்கள் படைப்புகளில் மனிதநேயத்தைப் புகுத்தி வருகின்றனர். 'கல்கி'யும் தனது படைப்புகளில் மனிதநேயத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

'கல்கி' – கணையாழியின் கனவு

'ரா. கிருஷ்ணமூர்த்தி' 'கல்கி' என்ற புனைபெயரில் புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் முதலிய பல்வேறு துறை சார்ந்த படைப்புகளால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை மகிழ்வித்தார். இவரைத் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் தந்தை என்பர்.[6] மக்கள் விரும்பிப் படிக்கும் வகையில் பத்துச் சிறுகதைத் தொகுப்புகள் வழங்கி அவ்விலக்கிய வகையை வளர்த்தார். மனிதநேயக் கருத்துகளையும் புகுத்தினார். அவருடைய சிறுகதைத் தொகுதிகளில் 'கணையாழியின் கனவு' சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் மனிதநேயக்கருத்துகள் இங்கு ஆராயப்படுகின்றன.

பசியால் வாடும் மக்களைக் கண்டு வருந்துவதும் மக்களைத் துன்புறுத்தும் சாஸ்திரக் கொடுமைகளை ஒழிக்க முற்படுவதும் ஆபத்தில் உடனடியாக உதவுவதும் கணவனை இழந்த பெண்கள் ஏற்றம் பெறுதற்கு உதவுவதும் அடிமையுடன் நடத்தப்பட்ட மக்களிடம் விடுதலை வேட்கையை எழுப்புவதும் கிராம மேம்பாட்டுக்கு உதவுவதுமான மனிதநேயப் பண்புகளைக் கல்கியின் சிறுகதைகளில் காணமுடிகிறது.

'மக்களைத் துன்பப்படுத்தும் சாஸ்திரக் கொடுமைகளை ஒழிக்க நினைக்கும் மனிதநேயம்

அந்தணர் குடும்பங்களில் விதவைகளுக்கு மொட்டையடித்து, முக்காடிட்டு மூலையில் அமர்த்தி ஒதுக்கி வைக்கும் வழக்கம் இருந்தது. விதவைகளை அமங்கலப் பொருளாகக் கருதினர். இருபாலரில் ஒரு பாலார்க்கே இழைக்கப்பட்ட இந்த அநியாயம் பலர் மனத்தை உறுத்தியது. சமூகத்தில் சாஸ்திரம், சம்பிரதாயங்களால் இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு மனம் வருந்தும் மனிதநேயப் பண்பை, 'கேதாரியின் தாயார்' என்ற சிறுகதையில் காணமுடிகிறது.

"சாஸ்தி ரங்கள் பலபல கற்பராம்
சவுரி யங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்"[7]

என்று பாரதியார் கூறுவதை 'கேதாரி' பாத்திரம் மூலம் காட்டுகிறார்.

கேதாரியின் அம்மாவை அவரது அப்பா விட்டுச் சென்று 18 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் கேதாரியின் தந்தை இறந்ததைக் கேள்விப்பட்டு அவரது அம்மாவை மொட்டை அடித்து வெள்ளைப் புடவை உடுத்தியிருப்பதைப் பார்த்தான். உடனே கேதாரி,

> "சங்கரா அது என்ன சாஸ்திரமடா? அநாதையாய் விட்டுப்போய்ப் பதினெட்டு வருஷம் திரும்பிப் பாராமலிருந்து புருஷன் செத்ததற்காகத் தலையை மொட்டியடிக்கச் சொல்லும் சாஸ்திரம் அதைக் கொண்டு வாடா! தீயில் போட்டுக் கொளுத்துவோம்".[8]

> "பிராமண ஸ்திரீகள், புருஷனை இழந்தால் தலையை மொட்டையடிக்கும் வழக்கத்தை ஒழிக்க ஒரு பெரிய கிளர்ச்சியை நடத்தப் போகிறேன். இந்தத் தனி கௌரவம் நம்முடைய சாதிக்கு வேண்டாம்."

என்று கூறுவதிலிருந்து மனிதர்களுக்குத் துன்பத்தைத் தரும் சாஸ்திரக் கொடுமைகளை ஒழிக்க நினைக்கும் 'மனிதநேயப்பண்பு' புலனாகிறது.

பசியால் வாடும் மக்களை நினைத்துப் பார்க்கும் மனிதநேயம்

சமூகத்தில் மக்கள் பசியுடன் துடிப்பதைக் கண்டு துடிக்கின்ற மனிதநேய உள்ளங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதைக்

காணமுடிகிறது. கல்கி 'வைரமோதிரம்' எனும் கதையில் 'வத்சவ்' எனும் பாத்திரம் மூலம் இதனைக் கூறுவதைக் காண முடிகிறது.

மாஜி திவான் ஒருவர் வீட்டில் விருந்து நடக்கிறது. ஐந்து முக்கியப் பிரமுகர்களுடன் சிற்றுண்டி நடந்து கொண்டிருக்கிறது. பல வீடுகளில் பசியால் குழந்தைகள் வாடிக்கொண்டிருக்கின்றனர். விலையுயர்ந்த பிஸ்கட்டுகளை உண்டு கொண்டிருப்பவர்கள் இதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

> "இந்தச் சென்னைப் பட்டணத்தில் இன்றைய தினம் இரவு உணவுக்கு என்ன செய்வோம் என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் ஏழைகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். குடிப்பதற்குப் பால் இல்லாமல் ஒட்டி உலரும் குழந்தைகள் எத்தனையோ இருக்கின்றன. நாமோ இங்கே ஒவ்வொன்றும் இரண்டு அணா விலையுள்ள சீமை பிஸ்கோத்துகளில் தலைக்கு நாலைந்து தின்னுகிறோம்."[9]

என்று 'வத்சவ்' கதாபாத்திரம் மூலம் பசியால் வாடும் மக்களை நினைத்துப் பார்க்க வேண்டும் என்பதையும் இது போன்ற விருந்துகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதையும் பசியால் வாடும் குழந்தைகளுக்கு உணவு தரப்பட வேண்டும் என்பதையும் கூறுகிறார்.

கணவனை இழந்த பெண்கள் முன்னேற்றத்தில் – மனிதநேயம்

> "மாலையிட்ட மணவாளன் இறந்து விட்டால்
> மங்கை நல்லாள் என்ன செய்வாள்? அவளை நீங்கள்
> ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம்
> அணுவளவும் அடையாமல் சாகச் செய்தீர்"[10]

என்று பாரதிதாசன் கைம்பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கூறுவார். அக்காலத்தில் சிறுவயதிலேயே பெண்களுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டது. கணவனை இழந்த பெண்ணின் வாழ்க்கை துன்ப நிலையிலே அமைந்திருந்தது. சமூகத்தில் அவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். அப்பெண்கள் சமூகத்தில் அந்தஸ்துடன் வாழ முடியும் என்பதைக் 'கடிதமும் கண்ணீரும்' எனும் சிறுகதையில், 'அன்னப்பூரணி' பாத்திரம் மூலம் எடுத்துரைக்கிறார். ஆறுவயதில் அன்னப்பூரணிக்கு திருமணம். ஒன்பது வயதில் கைம்பெண் ஆகிறார்.

> "அந்தத் துர்பாக்கியமே பெண்குலத்தின் நற்பாக்கியம் ஆயிற்று. பிற்காலத்தில் அவர் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து,

முயற்சியுடன் படித்து கடைசியாக பி.ஏ; எல்.டி பட்டமும் பெற்றார். அது முதல் இளம்பிராயத்தில் கணவனை இழந்தவர்கள், கணவன்மார்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள், அநாதைப் பெண்கள் முதலியோருக்குத் தொண்டு செய்வதிலேயே தமது வாணாளைச் செலவிட்டு வந்தார்".[11]

தமக்கு ஏற்பட்ட துன்பம் இன்னொருவருக்கு வரக்கூடாது என்பதை உணர்ந்து, 'தேவி வித்யாலயம்' நிறுவித் தொண்டு செய்து வந்தார். துன்பத்தை எண்ணுவதோடு மட்டும் நின்று விடாமல் செயலில் காட்ட வேண்டும் என்ற மனித நேயத்தைக் காண முடிகிறது. திருமணம் செய்ய முன்வந்த இளைஞரின் கடிதத்தைக் கல்வியறிவு இன்மையால் படிக்க இயலாமல் போகின்றது. அதனால் பெண்கள் கண்டிப்பாகக் கல்வியறிவு பெற்றுத் திகழ வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறார்.

விடுதலை உணர்வை எழுப்பும் – மனிதநேயம்

ஆங்கிலேயர்கள் இந்திய மக்களை அடிமை கொண்டு ஆட்சி நடத்தினர். ஆங்கிலேயரின் அடக்குமுறை அதிகரித்தது,

"நாமிருக்கும் நாடுநமது என்ப தறிந்தோம் – இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம் – இந்தப்
பூமியில் எவர்க்கும்இனி அடிமை செய்யோம்"[12]

என்ற பாரதியின் வரிகளுக்கு ஏற்ப, கல்கி தனது சிறுகதையில் விடுதலை உணர்வை ஊட்டும் எண்ணத்துடன் அடிமைப்பட்டுக்கிடந்த மக்களைத் தட்டியெழுப்பும் நோக்கத்தில், அடிமைத்தனத்தை உடைத்தெறியும் மனிதநேய எண்ணத்தில் சில நிகழ்ச்சிகளைப் புகுத்தியுள்ளார்.

"அந்த இயக்கத்தை 'உப்பு சத்தியாகிரகம்' என்றார்கள். அதை ஆரம்பித்த மகாபுருஷரை ஒரு வாரத்திற்கு முன்புதான் கைது செய்து சிறைக்கு அனுப்பியிருந்தார்கள். சென்ற இரண்டு மூன்று தினங்களாகச் சென்னையிலும் அப்பேரியக்கத்தின் எதிரொலி கேட்டுக் கொண்டிருந்தது."[13]

"அன்றைய சாயங்காலம் வெளியான ஆங்கிலோ இந்தியப் பத்திரிகை, 'சென்னையில் பிரிட்டீஷ் ராஜ்யம் நடக்கிறதா? இல்லையா? என்ற ஒரு கேள்வி கேட்டிருந்தது. எனவே மறுநாள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்குச் சர்வாதிகாரம் அளிக்கப்பட்டது.[14]

-சிரஞ்சீவிக்கதை' மூலம் மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டி, அடக்குமுறையுடன் கூடிய ஆட்சி அகற்றப்பட ஊக்குவிப்பதிலும் மனிதநேயமே புலப்படுகின்றது.

கிராம மேம்பாட்டில் மனிதநேயம்

'கணையாழி' – இது கதையில் வரும் ஊர். இந்த ஊரில் படித்த இளைஞர்கள் பலர் இருந்தும் வேலை தன்னைத் தேடி வரட்டும் என்று நினைப்பவர்கள். ஊர் முழுவதும் குப்பையும் நாற்றமும் தான். ஊர் மக்களில் பலர் மதுவில் நாட்டம் கொண்டவர்கள். இந்த நிலையை ஊரிலுள்ள இளைஞர்கள் நினைத்தால் மாற்றம் செய்ய முடியும் என்பதைச் 'சகுந்தலை' என்ற பாத்திரம் மூலம் நிரூபித்துக் காட்டுகிறார்.

> "இந்த நண்பர்கள் எல்லோரும் மனம் வைத்தால் காரியம் ஒரு நிமிஷத்தில் நடந்து விடுகிறது. சாந்தி நிகேதனுக்கு அருகாமையில் வந்து பாருங்கள். படித்தவர்களாய் உள்ளவர்கள் கொஞ்ச நாளைக்குச் செய்து காட்டினால் மற்றவர்கள் அப்புறம் கிராமத்தைச் சுத்தமாய் வைத்துக் கொண்டிருக்கத் தாங்களே கற்றுக் கொண்டு விடுவார்கள்.[15]

என்றாள் சகுந்தலை. இவளின் பேச்சுக்குப் பலன் கிடைத்தது. கிராமப்புற இளைஞர்கள் தாங்களாகவே முன் வந்து கிராமத்தைச் சுத்தம் செய்யத் தொடங்கினார்கள்.

மேலும் சகுந்தலை மதுவின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்கவும், பெண்களின் துன்பத்தைத் துடைக்கவும் முயற்சி செய்கிறாள்.

> இப்படி எத்தனை பெண்கள் கஷ்டப்படுகிறார்களோ? பாழும் கள்ளுக்குடியை ஒழிப்பதற்கு வழியொன்றும் இல்லையா? இந்த ஊரில் பெரிய மனிதர்கள் எல்லோரும் கூடத் தென்னை மரங்களைக் கள்ளுக்கு விடுகிறார்களாமே? என்ன அநியாயம்? என்றாள்.[16]

கிராமத்து இளைஞர்கள் மதுவொழிப்பில் ஈடுபட்டார்கள் பலன் கிடைத்தது. சுற்றுப்புறத்தூய்மையும், மதுவொழிப்பும் கிராம மேம்பாட்டுக்கு அடிப்படை என்பதை உணரச் செய்ததிலிருந்து கல்கியின் மனிதநேயப்பண்பைக் காணமுடிகிறது.

ஆபத்துக் காலத்தில் – 'மனிதநேயம்'

விரைந்து செல்லும் உலகத்தில் மக்கள் விபத்தில் சிக்கிக் கொண்டவர்களைக் கண்டு அனுதாபப்பட்டுக்கொண்டே, 'அய்யோ

பாவம்' என்று வார்த்தைகளை உதிர்த்து விட்டு விரைவாகத் தங்களுடைய வேலைகளுக்குச் சென்று விடுகின்றனர். விபத்தில் சிக்கிக் கொண்டவர்களை யாரென்று பார்க்காது உடனடியாக உதவ வேண்டும் என்னும் மனிதநேயப் பண்பை, 'பவானி பி.ஏ.பி.எல்' சிறுகதையில் இடம் பெறச் செய்கிறார்.

> தள்ளாடிக் கொண்டே ஒரு வாலிபன் கீழே விழுந்தான்.
>
> "பிரணதார்த்தி அவனுடைய மார்பையும் நெற்றியையும் தொட்டுப் பார்த்தான். 'உயிர் இருக்கிறது 105, டிகிரிக்குக் குறையாத சுரம்' என்றார். இப்போது இவனைப் பங்களாவுக்குத் தூக்கிக் கொண்டே போவோம்" [17]

அவனைத் தூக்கும் போது வேஷ்டி சிறிது விலக, அவன் காலில் இருந்த இரும்புக்காப்பு தெரிந்தது. சேஷாத்திரி வியப்பும் வேதனையும் பொருந்திய குரலில், 'இவன் கைதி. கைதிகளுக்குத்தான் காலில் இந்த மாதிரி இரும்புக்காப்பு இருக்கும். கோயம்புத்தூர் சிறையிலிருந்து சமீபத்தில் தப்பியோடிய கைதிகளில் இவனொருவனாக இருக்க வேண்டும் என்றார்.

> 'எது எப்படியாவது இருக்கட்டும், பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். இவனை இப்படி அநாதையாய்ச் சாகவிடுதல் மகா பாவம். பிடியுங்கள் சேஷாத்திரி" என்றார்.
>
> 'இரவெல்லாம் கண்விழித்துச் சிகிச்சை செய்தார். தலையிலே ஈரக்களிமண்ணை வைத்துக் கட்டினார். முதலிலே குளுகோஸ், அப்புறம் பார்லி கஞ்சி, அப்புறம் பழரசம் - இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக ஆகாரம் கொடுத்து வந்தார்."[18]

இதில் உயிருக்குப் போராடும் எந்த மனிதருக்கும் உதவ வேண்டும் என்ற மனிதநேயப் பண்பைக் காண முடிகிறது. கைதி ஒருவருக்கு உதவலாமா? அது குற்றமாகுமே என்று எண்ணலாம். எந்த நிலையிலும் முதலில் உயிரைக் காப்பாற்ற வேண்டியது என்பதே மேலோங்கி நிற்க வேண்டும் என்பதை இக்கதை மூலம் கல்கி எடுத்துக்காட்டுகிறார்.

நிறைவுரை

'கணையாழியின் கனவு' சிறுகதைத் தொகுப்பிலுள்ள சிறுகதைகள் மூலம்,

1. சாஸ்திர சம்பிரதாயங்களால் மனிதனுக்குத் துன்பம் இழைக்கப்பட்டால் அவற்றை ஒழிக்க நினைத்தல்;

2. பசியால் வாடும் மக்களை வசதி படைத்தவர்கள் நினைத்துப் பார்த்தல், அவர்கள் பசியைப் போக்குதல்;

3. ஆதரவற்ற கைம்பெண்கள் முன்னேற்றத்திற்கு உதவுதல்;

4. மக்களை இன்னொரு மக்கள் கூட்டம் அடிமைப்படுத்தும்போது அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்களுக்குச் சுதந்திர உணர்வைத் தூண்டுதல்;

5. கிராம மேம்பாட்டுக்கு இளைஞர்களை ஊக்குவித்துச் சமூகப் பணியில் ஈடுபடச்செய்தல்;

6. உயிருக்குப் போராடும் மனிதனுக்கு எந்த நிலையிலும் உதவி செய்தல்.

ஆகிய மனிதநேயக் கருத்துகள் கணையாழியின் கனவு சிறுகதைத் தொகுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்புகள்

1. Bloomsbury Dictionary of word orgins, p. 289.
2. Hamlet, Act II Scene ii p. 883.
3. A Practical Hindi English Dictionary, p. 577.
4. திருக்குறள், 315
5. இன்று ஒரு தகவல், பாகம். 8.
6. தமிழ் இலக்கிய வரலாறு, ப. 340.
7. பாரதியார் கவிதைகள், ப. 243.
8. கேதாரியின் தாயார், ப. 64
9. வைரமேதிரம், ப. 324
10. பாரதிதாசன் கவிதைகள், ப. 101.
11. கடிதமும் கண்ணீரும், ப. 299.
12. பாரதியார் கவிதைகள், சுதந்திர பள்ளு, பாடல் எண். 5
13. சிரஞ்சீவிக்கதை, ப. 104.
14. சிரஞ்சீவிக்கதை, ப. 105.
15. கணையாழியின் கனவு, ப. 36.
16. கணையாழியின் கனவு, ப. 39
17. பவானி பி.ஏ.பி.எல்., ப. 262.
18. " " ப. 264.

******

"ந. பிச்சமூர்த்தியின் தேர்ந்தெடுத்த கதைகள்" காட்டும் மனிதநேயம்

இரா. மாலதி
ஆய்வாளர்

"ந. பிச்சமூர்த்தியின் தேர்ந்தெடுத்த கதைகள்" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட 1) விஞ்ஞானத்துக்குப் பலி, 2) அடகு, 3) அரைப் பைத்தியம், 4) கபோதி, 5) காவல், 6) நிழலாட்டம் ஆகிய கதைகளிலிருந்து ஆசிரியர் மனிதநேயத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதைக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

சூழ்நிலையின் பொருட்டு மனம், மாறும் இயல்புடையது. அவ்வியல்பை அடக்கி ஆண்டவன் மனித நிலைக்குச் சற்று அப்பாற்பட்டவன் ஆகிறான். சமுதாயத்தில் அல்லவை செய்யாது, தன்னால் பிறர் பாதிப்படையாது இருக்க வேண்டும் என்ற எண்ணமும் செயல்களும் இயல்பான போக்குடைய மனிதனை மனிதநேயமுடையவனாகக் காட்டுகின்றன.

சில சிக்கல்களைக் குடும்பத்திலோ, பொதுவாழ்விலோ தவிர்க்க இயலாமல், அல்லது தவிர்க்க விரும்பாமல் அதை ஏற்றுக் கொண்டு வாழும் மனநிலையும் மனிதநேயத்தின் பாற்பட்டதாகக் கொள்ளலாம்.

ஆசிரியரின் மனிதநேயம்

ந. பிச்சமூர்த்தியின் கதைகளில் வாழ்க்கை உயிரோட்டம் கொண்டதாகக் காணப்படுகிறது. இவர் கதைகளில் வரும் நிகழ்வுகள் நாம் காண்பதற்கும் கற்றுக் கொள்வதற்கும் நம் பார்வைகளைத் திருத்திக் கொள்வதற்கும் வழிவகுப்பதாக அமைந்துள்ளன. சமுதாயச் சிந்தனையும் பற்றும் கொண்ட ந. பிச்சமூர்த்தி மனிதன் எவ்வாறு வாழக் கூடாது என்பதையும் பாத்திரங்கள் வழி வெளிப் படுத்துகின்றார்.

ஒருவனுடைய இரக்க உணர்வை அவனைச் சுற்றி உள்ளவர்கள் தங்கள் தேவைக்குப் பயன்படுத்திக் கொண்டு சுயநலத்தோடு வாழ்பவர்களைச் சுட்டியுள்ளமை, வறுமைக் கோட்டிற்கு மிகக் கீழே இருக்கும் மக்களின் குடும்பச் சிக்கல்களில் காட்டும் அக்கறை, அறிவியல் வளர்ச்சியினால் உலகிற்கு வரும்

கேட்டை நினைத்து வருந்தி, அதன் தீமைகளை எடுத்துரைக்கும் நன்மை ஆகியவை ஆசிரியரின் மனிதநேயச் சிந்தனைகளாக இக்கதைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மனிதநேயக் கூறுகளான நல்லெண்ணம், நற்சொல், நற்செயல் ஆகியவற்றுக்கிடையே தோன்றும் இடைவெளி சூழ்நிலையால் அவரவர்க்கு ஏற்றாற்போல் மாறுபடுகின்றது என்பதை உணர்த்தி, யாரையும் தவறான பார்வையில் பார்க்காது, சூழ்நிலையால் ஏற்படும் உணர்வுக்கு மதிப்பளிக்கும் மனிதநேயம் மிக்கவராக ஆசிரியர் காணப்படுகிறார்.

இவர்தம் சமுதாயச் சிந்தனைகள், சமுதாயப் பற்று இவற்றின் காரணமாகத் தோன்றும் மக்கள் மேல் கொண்ட அக்கறையும், கரிசனமும் மனிதநேயமாகக் கதைகளில் வெளிப்படுவதை அறியலாம்.

தூய்மையான எண்ணங்கள், பிறருக்குத் துன்பம் தராதிருத்தல், தீமை விளைவிக்கும் செயற்கையை ஒதுக்கி இயற்கையோடு ஒத்து வாழ்தல், மனநிலை பாதிக்கப்பட்ட சிறுவனிடத்துக் காட்டும் இரக்கம், தன் குடும்பச் சுமையிலும் பார்வையற்ற சிறுமியைக் காப்பாற்ற நினைக்கும் பரிவு, பிறருக்கு உதவுதல் ஆகிய மனிதநேயச் சிந்தனைகள் இவர்தம் கதைகளின் வழி பெறப்படுகின்றன.

விஞ்ஞானத்தின் அதீத வளர்ச்சியினால் ஏற்படும் அழிவை நினைத்து வருந்துதல்

இயற்கையோடு ஒத்துவாழ்தலினால் மக்கள் தன்னிறைவும், நிம்மதியும் கொண்டு வாழலாம். விஞ்ஞானத்தின் அதீத வளர்ச்சியினால் அழிவுதான் ஏற்படும் என்பதை 'விஞ்ஞானத்துக்குப் பலி' என்ற கதையில் விசுவநாத அடவியார் எம்.எல்.ஏ. மற்றும் ஸயன்ஸில் டாக்டர் பட்டம் பெற்ற சேதுராவ் ஆகியோரிடையே நடைபெறும் உரையாடல்கள் விளக்குகின்றன.

"உண்மையில், ராயர்வாள் யுத்தத்துக்காகக் கொலைக்காற்று, ஆகாயவிமானம், விஷவாசனை, டார்ப்விடோ இவைகளை ஸயன்ஸ் பண்டிதர்கள் கண்டு பிடித்ததிலிருந்து எனக்குக் கோபம். வரவர ஹிம்சை செய்வதற்கும் பொழுதுபோக்குக்கும் ஈஸ்வரன் கொடுத்த உயர்ந்த மூளையை மேல்நாட்டுப் பண்டிதர்கள் செலவழிப்பதைப் பார்த்தால், அடுத்த யுத்தத்தில் மனிதன் பூண்டற்று போவான் என்றே தோன்றுகிறது. இந்த விஷபுத்தி நமது இந்தியருக்குள்ளும் பரவி வருவது எனக்கு சகிக்கவில்லை. எதற்காக நமது ஜனங்கள் வெடிகுண்டும் துப்பாக்கியும் பழகிக் கொள்ள வேண்டும்? இதெல்லாம் நமக்கு வேண்டாம்" (ப.1) என்று அடவியார்வாள் என்ற

பாத்திரம் மூலம் அறிவியலின் எல்லையற்ற வளர்ச்சியினால் மனிதனுக்குக் கேடு விளையுமே என்ற ஆதங்கமும், தாய்நாட்டின் மேல் கொண்ட பற்றும் ஆசிரியரின் மனிதநேயமாக வெளிப்படுகின்றன. மேலும்,

"அடவியார்வாள், பொதுஜனங்களுக்கு எந்தவிதத்திலும் ஹிம்சை செய்யக் கூடிய கருவிகளையோ, சக்திகளையோ நமது தேசத்தில் கண்டுபிடிப்பதோ, பரவச் செய்வதோ தண்டனைக்குரிய செய்கை என்று ஒரு சட்டம் தயாரித்திருக்கிறேன்." (ப.1) என்ற கூற்று சிக்கலுக்குத் தீர்வு கூறும் வகையில் அமைந்துள்ளமை, ஆசிரியர் மக்கள் வாழ்வின் மேல் கொண்ட அக்கறையைப் புலப்படுத்துகிறது.

குடிப் பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து வருந்துதல்

சமுதாயத்தில் குடியினால் விளையும் பாதிப்புகளை உணர்த்தும் ஆசிரியர் 'அடகு' என்ற கதையில் பன்றி வளர்க்கும் தோட்டியின் குடும்பச் சிக்கலை உள்ளம் கலங்கக் காட்டுகின்றார்.

தோட்டி குப்பமுத்துவிடம் கடன் வாங்கியதற்காகத் தோட்டி பிரமன் மனைவி கருப்பியையும், மகனையும் அடகு வைத்தான். குடிக்கு அடிமையான பிரம்மனால் மூன்று மாதத்திற்கான அடகை ஆறுமாதமாகியும் மீட்க முடியவில்லை. அதனால் பல சிக்கல்களுக்கு உள்ளான கருப்பியும் அவள் மகனும் படும் வேதனை ஆசிரியரால் காட்டப்படுகிறது.

தான் குடித்து அழிவது மட்டுமின்றிப் பிறரையும் உடன் சேர்த்து மகிழும் இச்சமுதாயத்தில் வறுமைக் கோட்டிற்கு மிகக் கீழே இருக்கும் மக்கள்படும் துன்பத்தை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

"ஏன் அண்ணே! நாய் மாதிரி சுருட்டிக்கிட்டு படுத்துக் கிடக்கறே!

என்ன பண்ணணும்?

புதுக்கடை ஒண்ணு இன்னிக்கு வக்கறான். அங்கே புட்டி ஓரணா இன்னிக்கு நாங்க போறோம். ஒன்னையும் பார்ப்போமுன்னு வந்தோம்.

கருப்பி, மகன் எல்லாம் மறந்து போயிற்று. பிரமன் நண்பர்களுடன் புதுக்கடைக்கு கிளம்பிவிட்டான். அதற்குப் பிறகு அவன் கையில் மிச்சமிருந்தது ரூபாய் இரண்டு" (ப. 30) என்பதன் வாயிலாகப் பிறர் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல் தீயவழிக்கு இழுப்பதும், தன் குடும்பத்தைப் பற்றிய எண்ணமில்லாமல் மனத்தைத்

தீயவழியில் செல்ல விடுவதும் ஆகிய மனிதநேயமற்ற செயலைச் சுட்டிக் காட்டி ஆசிரியர் தன் மனவருத்தத்தை வெளிப்படுத்துகிறார்.

தீபாவளி அன்று தன்னையும் தன் மகனையும் மீட்டுக் கொண்டு போவான் என்று காத்திருந்த கருப்பி, பிரமன் வராது ஏமாற்றிவிட்டானே என்ற துக்கத்தோடு இருந்தாள். தனக்கும் தன் மகனுக்கும் புதுத்துணி கிடைக்கவில்லையே என்ற கவலையுடனும் இருந்தாள்.

“தீபாவளிக்கு எண்ணெய் தேய்த்து முழுகும் நேரம் வந்தது. குப்பமுத்து, அவன் மனைவி, குழந்தைகள் எல்லோரும் எண்ணெய் தேய்த்து முழுகினார்கள். புதுசு உடுத்தார்கள். சீனு வெடிகூடச் சுட்டார்கள்.

கருப்பியும் அவள் மகனும் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்” (ப. 31) என்பதன் வாயிலாக அடகுப் பொருளாக இருந்த இரண்டு உயிர்களைப் பற்றிய எண்ணத்தை அறவே ஒழித்து சுயநலத்தோடு வாழும் குப்பமுத்துவின் மனிதநேயமற்ற செயல், கருப்பி, அவள் மகன் மனத்தைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது என்பதை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

ஒருவன் தனது குடிப்பழக்கத்தினால் தானும் அழிந்து, தன்னைச் சார்ந்தவர்களுக்கும் துன்பத்தை விளைவித்து விடுகிறார் என்பதைச் சுட்டியுள்ளதன் வாயிலாகக் குடிப்பழக்கத்தினால் விளையும் கேடுகளை ஆசிரியர் வருத்தத்தோடு சித்திரித்துள்ளமை தெரிய வருகிறது.

மனநிலை பாதிக்கப்பட்டோர் மீது இரக்கம் காட்டுதல்

பொதுவாக மனநிலை பாதிக்கப்பட்டவர் தெருவில் நடமாடினால் எல்லோரின் பேச்சுக்கும் கேலிக்கும் இரக்கத்திற்கும் உள்ளாவர். அப்படிப்பட்டவரிடம் அனைவரும் அன்பு காட்டுவது மிக அரிதாகும். இத்தகையோரிடத்து அன்பு காட்டுவோர் இச்சமுதாயத்தில் உள்ளனர் என்பதை ந. பிச்சமூர்த்தி “அரைப் பைத்தியம்” என்ற கதை வாயிலாகத் தெரியப்படுத்துகிறார். தற்கூற்றாக அமைந்துள்ள இக்கதையில் ஆசிரியர் மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு சிறுவனிடம் காட்டும் மனிதநேயம் வெளிப்பட்டு நிற்கிறது.

“அவன் ஒரு பழக்கடை வாசலில் உட்கார்ந்து தன் கையிலிருந்த படத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். கிட்டத்தில் போய் தம்பி! என்ன வேண்டும்? என்றேன். ‘அம்மா’ என்று சொன்னது எனக்குக் கொஞ்சம் திகைப்பைத்தான் தந்தது.

ஏனென்றால் அவன் திருஷ்டியே அரைப் பைத்தியத்தினுடையது. இருந்தாலும் அவன் மீது எனக்கு ஏற்பட்ட அன்பு மட்டும் குறையவில்லை." (ப. 47) என்பதன் வாயிலாகத் தன்கண் முன்னாலேயே தன் தாய் கொல்லப்பட்டதைப் பார்த்து அதிர்ச்சியில் மனநிலை பாதிப்படைந்த சிறுவனிடம் காட்டும் இரக்கம், அன்பு இவை ஆசிரியரின் மனிதநேயத்தை வெளிப்படுத்தும் விதமாக அமைத்துள்ளன.

அச்சிறுவனிடம் அக்கடைத் தெருவில் உள்ள கடைக்காரர்கள் அனைவரும் அன்பு கொண்டிருந்தனர்.

"அவன் பாட்டுக்குப் பக்கத்திலிருந்த தகரக் கடைக்காரனிடம், அண்ணே! இந்தப் படத்து ஓரத்தைக் கத்திரிச்சிப்பிடு. கோணலும் மாணலுமாய் இருக்கு என்று படத்தை நீட்டினான். கடைக்காரன் அலுப்புதட்டாமல் படத்தைக் கத்தரித்துத் தந்தது என் வியப்பை அதிகரித்தது. அதற்குப் பிறகு அந்த பக்கத்து வழியாய் ஆயிரத்தெட்டு தடவை போயிருக்கிறேன். அவனிடம் கடைக்காரர்கள் காட்டும் அன்பையும் பார்த்திருக்கிறேன். வெகு உருக்கமானது. ஒரு பொழுதாவது ஒருவராவது அவனைக் கடிந்ததில்லை. தங்கள் வீட்டுப் பையனைப் போல் பாவித்தாரேயன்றி வேறல்ல. (ப.47) என்பதன் வாயிலாகத் தான் கொண்டிருக்கும் மனிதநேயம் பிறரிடம் இருப்பதாக எண்ணும் உயர்ந்த குணம் கடைக்காரர்கள் பாத்திரங்கள் வழி ஆசிரியர் உணர்த்துவதாய் அமைந்துள்ளது.

பார்வையற்றவர் மீது பரிவு காட்டுதல்

தங்கள் வறுமையின் காரணமாக எழும் இயலாமையினால் தோன்றும் வார்த்தைகள் கேட்பதற்கு எதிர்மறையாகத் தோன்றினாலும் அவர்கள் அடிமனத்தில் தங்கியிருப்பது உண்மையான அன்பும் பரிவும் ஆகும் என்பதைக் 'கபோதி' என்ற கதையில் ஆசிரியர் பாத்திரங்கள் வழி வெளிப்படுத்துகிறார்.

கடைச் சம்பளம் பத்து ரூபாயும், வீட்டு வாடகை மூன்று ரூபாயும் வருமானமாகக் கொண்டு வாழும் சிவநாதசர்மா பார்வையற்ற ஒரு பெண்ணைப் பாதுகாத்து வருகிறார். தன் பொருளாதார நிலையின் காரணமாக அப்பெண்ணை அநாதை ஆசிரமத்தில் சேர்க்கப்போவதாகப் புலம்புகிறார்.

"இப்போ எல்லாம் வரவர ஒவ்வொரு மாசமும் அந்தப் பெண்ணின் சாப்பாட்டுச் செலவுக்குக் கூட வசூல் ஆகறதில்லே. நானோ வெறும் தரித்திரன். நீங்க குடுக்கறேளே மாசம் மூணு ரூபாய் வாடகை, அதையும் என் கடைச் சம்பளம் பத்து ரூபாயையும்

வச்சுண்டு காலத்தைக் கடத்தறேன். ஒடம்பாலே நானும் என் ஆம்படையாளும் இந்தப் பொண்ணுக்காக ஒழைக்கலாம். மேலே என்ன பண்ணமுடியும்?

அப்பொ என்ன முடிவு?

எங்கேயோ ஒரு அநாதாச்சரமம் மாளவியாஜி ஏற்படுத்தி இருக்கிறாராம். அவாளுக்கு எழுதிப் போட்டிருக்கிறேன். (ப. 81) என்பதன் வாயிலாகத் தாய் தகப்பன் இல்லாது தன் பாட்டியோடு சர்மா வீட்டிற்குக் குடிவந்த பார்வையற்ற பெண்ணை, பாட்டி உயிர் துறந்ததும் தானே பாதுகாத்து வந்த சர்மா மனித நேயம் கொண்டவராயிருப்பினும் அவரின் பொருளாதாரச் சூழலின் காரணமாக ஏற்படும் அவரின் வருத்தத்தை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

அநாதை ஆசிரமத்திலிருந்து அப்பெண்ணை அழைத்துப்போக ஆள் வந்ததும், அவர் கூடப் போகிறாயா? என்று சர்மா கேட்க, ஒரு நிமிடம் யோசனைக்குப்பின் போறேன் மாமா! என்கிறாள்.

“மரத்தின் ஆணிவேரை அறுத்தது போன்ற ஓர் உணர்ச்சி பிறந்தது. அந்த வார்த்தையின் விளைவாய் சர்மா மன நெகிழ்ச்சியை மறைக்க முயன்றார்” (ப.8) என்பதன் வழியாகத் தன் பொருளாதாரக் குறையையும் மீறி வெளிப்படும் மனிதநேயத்தைச் சர்மா பாத்திரத்தின் வழி ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

கதையின் இறுதியில்,

“என்ன குழந்தே! அவாள் எழுந்திருந்தூட்டாளேபோக, நீ போறயோ?

போறேன் மாமா என்று எழுந்திருந்தாள். திரும்பக் குனிந்து பாவாடையை எடுத்தாள். இரண்டு துளி கண்ணீர் தரையில் விழுந்தது.

அதை நான்கு பேரும் பார்த்து விட்டார்கள்

சேட்ஜீ! அந்த கடுதாசைக் கிழிச்சூடச் சொல்லுங்கோ. நான் அனுப்பலே.

நான் கிளம்பிட்டேன் மாமா என்றாள் குழந்தை கண்ணைத் துடைத்துக் கொண்டு. குழந்தே! உன் வாய் போறேன்னு சொல்றது. மனசு சொல்லலல்லே என்று சொல்லிக் கொண்டே கடுதாசைக் கிழித்தெறிந்தார் சர்மா’ (ப. 84) என்பதன் வாயிலாக அப்பெண்ணின் விருப்பமில்லாது அனுப்பிவைக்கும் எண்ணத்தை கைவிட்டு, அதைச்

செயல்படுத்திக் காட்டிய பரிவு கொண்ட பாத்திரமாக சர்மா காட்டப்பட்டுள்ளார்.

விதவைப் பெண்நிலை குறித்துச் சிந்தித்தல்

பெண்களுக்கு இந்தச் சமுதாயத்தில் முழுப்பாதுகாப்பு இல்லை என்பது உண்மையாக இருப்பினும் இளம் விதவைப் பெண்களுக்குச் சிறிதும் பாதுகாப்பின்மையே காணப்படுகின்றது. 'காவல்' என்ற கதையில் ஒன்பது வயது மகனுக்குத் தாயும், விதவையுமான செங்கமலத்தைச் சமுதாயம் பார்க்கும் நேயமற்ற பார்வையும் செயல்களும் காட்டப்படுகின்றன.

கிளப்பு வேலைக்கு சென்ற செங்கமலத்தை அவள் மகன் நரியன் காவல்காத்துக் கொண்டேவந்தான். இவள் வேலை செய்யும் இடத்தில் கிளப் முதலாளி அவளிடம் அதிக அக்கறை எடுத்துக் கொண்டது, இலை நறுக்கும் மலையாளியின் வம்பிழுக்கும் செயல், கிளப்பில் வேலை செய்யும் குஞ்சானின் பேச்சு இவற்றின் மூலம் விதவைப் பெண்ணின் மீது கீழ்த்தரமான எண்ணங்கள் கொண்டவர்களை அடையாளம் காட்டி ஆசிரியர் உணர வைக்கின்றார். இதன் வாயிலாக, நன்மையையும் தீமையையும் பகுத்தறிந்து பிரித்துச் சமுதாயத்திற்குக் காட்டும் நேயம் எழுத்தாளருக்கு உண்டு என்ற உண்மை இங்கு உணரப்படுகிறது.

சுயநலம் உடையோர் குறித்து வருந்துதல்

நிழலாட்டம் என்ற கதையில் வாடகைக்குக் குடியிருக்கும் ஒருவனின் மனசஞ்சலம் பற்றிப் பேசப்படுகிறது. தன்னுடைய செயல்கள் பிறரைப் பாதிக்காவண்ணம் கவனமாக நடந்து கொண்டாலும் பிறருடைய செயல்கள் எளிதாகத் தம்மைப் பாதிக்கும்போது, தான் ஏமாறுகிறோமோ என்ற எண்ணம் எழுவது இயற்கை. இக்கதை தற்கூற்று முறையில் அமைந்துள்ளது. "எனக்கு நல்ல சுபாவம் என்றுதான் நான் நெடுநாளாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் இப்பொழுது அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் நல்லது என்பதே நிலையற்றதாக இடம், பொருள், ஏவலுக்கு ஒப்பப் புரளக் கூடியதாகத் தோன்றுகிறது." (ப. 179) என்று கதையின் தொடக்கத்திலேயே கூறுவதன் வாயிலாக அவரின் பாதிப்படைந்த மனம் புலப்படுத்தப்படுகிறது.

பொது இடத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற பொதுநல எண்ணமில்லாமல் இருக்கும் சொந்த வீட்டுக்காரர்களின் சுயநலத்தை ஆசிரியர் பாத்திரங்களின் உரையாடல் மூலம் வெளிப்படுத்துகிறார்.

"நீர் ரெண்டு ஒண்ணுக்குக் கணக்கு பார்ப்பீங்க. அதான் ஆள் வல்லே. சாலவம் நிக்குது. உடனே ஏதாவது சாக்கடைக்கு செய்யுங்க. இல்லாட்டி சுவர் போயிடும். நானும் போக வேண்டியது தான். வாடகையிலேதானே நீங்களும் நானும் பொழைச்சாகணும்" (ப. 183) என்பதன் வாயிலாகத் தனக்கு வரும் பணத்தைக் கணக்கிடும் மக்கள், தங்களால் பிறருக்கு நேர்ந்த துன்பத்தைப் போக்குவதற்குப் பணம் செலவழிக்க மனமில்லாது இருப்பவர்களாகப் பாத்திரங்கள் வழி வெளிப்படுத்துகிறார்.

பிறரின் சுயநலப் போக்கைக் கண்டு மனம் வருந்தினாலும் பக்கத்துக் குடிசைகளின் சொந்தக்காரரான வெள்ளைச்சாமியின் குழந்தைக்கு உதவும் மனம் படைத்த பாத்திரத்தை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்,

"அவர் குழந்தைக்கு ஒருநாள் இரவு மூச்சுத் திணறிய போது நான் தான் ஆஸ்பத்திரிக்குப் போய் வேண்டிய வைத்தியத்திற்கு ஏற்பாடு பண்ணினேன்" (ப. 183) என்பதன் வழி உதவுவதற்குத் தடைபடாத மனம் கொண்டோரின் இயல்பைக் காட்டுகின்றார்.

ந. பிச்சமூர்த்தியின் தேர்ந்த கதைகள் என்ற நூலில் அமைந்துள்ள கதைகளில் பெரும்பான்மை சமுதாயச் சிக்கல்களைக் கருவாகக் கொண்டிருக்கின்றன. இருப்பினும் கதை நிகழ்ச்சிகளிலிருந்தே மனிதநேயம் வெளிப்படும் வகையில் அமைந்துள்ளன. இயற்கை, தத்துவம், அழகு, கற்பனை இவை கதைகளில் பரவலாகக் காணப்படுகின்றன. வாழ்க்கையை வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்ற கருத்தே அவர் கதைகளில் அறிவுரையாகப் பெறப்படுகின்றது. இவரின் கதைகள் வாழ்க்கையின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தைக் காண வைக்கின்றன.

விஞ்ஞானம் தவறான பாதையில் இட்டுச் செல்லும் நிலையைக் கண்டிக்கின்றார். மனித குலத்தின் நலனையும், இயற்கையின் பாதுகாப்பையும் மனத்தில் கொண்ட அவரின் உயர் எண்ணம் வெளிப்படுகின்றது.

குடிப்பழக்கத்தினால் சமுதாயத்தில் தனிமனிதன் அடையும் கீழ்நிலையும் அவனின் குடும்பமும் வளரும் குழந்தைகளும் அடையும் பாதிப்பையும் ஆசிரியர் எடுத்துக்காட்டி இவை ஒழிக்கத்தக்கவை என்று குறிப்பால் உணர்த்தியுள்ளார்.

மனநிலை பாதிக்கப்பட்ட சிறுவனை வெறுத்து ஒதுக்காது, அவனிடத்து அன்பு செலுத்துதல் வேண்டும்; அவன் மற்ற மனிதர்களோடு சேர்ந்து வாழவேண்டியவன் என்பதை அனைவருக்கும் அறிவுறுத்தும் விதமாக ஆசிரியர் கூறியுள்ளார்.

பார்வையற்ற பெண்ணை, பொருளாதார வசதி குறைந்திருப்பினும், பகுத்துண்டு வாழ்ந்து கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் தன் வாழ்நாள் முழுதும் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் உயர்ந்த குணம் ஆசிரியரால் காட்டப்படுகிறது.

வயிற்றுப் பிழைப்பிற்காக வேலைக்குச் செல்லும் விதவைப் பெண்கள் ஆண்களின் நேயமற்ற பார்வைக்கு ஆளாகும் அவலநிலை கடியப்படவேண்டியதாகும் என ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

"இரக்கம், பலஹீனங்களை நம்பித்தான் சுயநலம் தழைக்கிறது" (ப. 186) என்ற கருத்தில் உடன்படும் ஆசிரியர் சுயநலத்தோடு வாழும் மக்களைக் கண்டு வருத்தம் அடைகின்றார்.

இவ்விதமாக ந. பிச்சமூர்த்தியின் தேர்ந்தெடுத்த கதைகள் என்ற நூலில் உள்ள கதைகளிலிருந்து ஆசிரியரின் சமுதாயச் சிந்தனை சார்ந்த மனிதநேயம் வெளிப்பட்டுள்ளது.

******

"ந. பிச்சமூர்த்தி கதைகளில் மனிதநேயம்"

இரா. மாலதி
ஆய்வாளர்

இக்கால இயந்திர வாழ்க்கையில் மக்கள் தங்கள் மன இறுக்கங்களைத் தளர்த்திக் கொள்ள ஏதாவது ஒரு வழி தேவைப்படுகிறது. அதற்கு இலக்கியங்கள் கை கொடுக்கின்றன. அறக்கருத்துகளைக் கொண்டு படைக்கப்பட்ட இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கைக்கு நல்ல வழிகாட்டிகளாக அமைகின்றன. மேலும் மனிதனைச் சிந்திக்க வைத்து, தவறுகளை மாற்ற வைத்து, எண்ணங்களைச் சிதற விடாமல் செய்து செயல்களைச் சுத்தமாக்குகின்றன. அவ்வகையில் அமையும் ந. பிச்சமூர்த்தியின் கதைகளும் சமுதாய நிலைகளை எடுத்துக் கூறும் தரமான இலக்கிய வரிசையில் இடம் பெற்றிருப்பது சிறப்பாகும்.

ந. பிச்சமூர்த்தி (1900 - 1976) தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் ஒரு முன்னோடியாகப் புகழப்படுகிறார். இவரது படைப்புகளில் சமூகக் கூறுகளின் ஒரு சிறு நிகழ்வு அல்லது ஒரு கருத்து கதையாக உருப்பெற்று இருக்கின்றது.

மனிதநேயம்

"தன்னைச் சார்ந்தோரிடத்தும், சுற்றத்தாரிடத்தும் மனிதன் காட்டுகின்ற பரிவும்,பாசமும் அன்பு ஆகும். தன்னைச் சார்ந்தோரிடம் மட்டும் அல்லாது உலக மாந்தர் அனைவரிடத்தும் காட்டுகின்ற பரந்து பட்ட அன்பிற்கு அறம் என்று பெயர். இத்தகைய அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டதே மனிதநேயம் என்பர்"[1]

மனிதநேயத்திற்கு இணையான மற்றொரு சொல் உயிரிரக்கம். "மனிதன் மனிதனை மதித்துச் செலுத்தும் அன்பான மனிதநேயத்தினின்றும் உயர்ந்த நிலையினதாக உயிரிரக்கம் அமைகின்றது" என்பர்.[2] மனிதன், இடத்திற்கு ஏற்றவாறும் சூழலுக்கு ஏற்றவாறும் தன் குணத்தையும் செயல்களையும் மாற்றிக் கொள்ளும் இயல்புடையவன். மனநிலைக்கு ஏற்றவாறு மாறும் மனிதனை, முற்றிலும் நேயம் அற்றவன் என்றும் முழுமையாக நேயம் பெற்றவன் என்றும் உறுதி அளிக்க முடியாது. நல்லவை செய்தல், அல்லவை செய்யாதிருத்தல் என்ற செயல்களும் எண்ணங்களும் ஒருவனை மனிதநேயம் கொண்டவனாகக் காட்டுகின்றன.

இக்கட்டுரையில் ஐந்தறிவு விலங்குகளின் மேல்காட்டும் பரிவு, பிற குழந்தைகளிடம் காட்டும் ஈடுபாடு, இரக்கம், பலன் எதிர்பாராத தியாகம் மற்றும் ஆசிரியர் சமுதாயத்தின் மேல்கொண்ட பற்றின் காரணமாக, தனி மனிதன் சமுதாயத்தில் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கண்டு பிற பாத்திரங்கள் வெளிப்படுத்தும் அனுதாபம், வேதனை ஆகியவை மனிதநேயமாகக் கொள்ளப்படுகின்றன.

ஆசிரியரின் மனிதநேயம்

ந. பிச்சமூர்த்தி சமூகச் சிந்தனை, உலகளாவிய பார்வை, இயற்கை ஈடுபாடு, தத்துவக் கொள்கை இவற்றில் அதிகத் தோய்வு பெற்றவர். உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர். 'என் கதைகள்' என்ற உரையில் "எனக்கு எப்பொழுதும் உணர்ச்சி தான் முக்கியம். தர்க்கரீதியான அறிவுக்கு இரண்டாவது இடம்தான் தருவேன்" (தொகுதி 1, ப. X) என்று கூறுகிறார். அவருடைய கதைகளிலும் கவிதைகளிலும் பரந்துபட்ட எண்ணமும் தொலை நோக்குப் பார்வையும் வெளிப்படுகின்றன . சமுதாயத்தில் உள்ள தவறுகளைச் சாடி, அதற்குத் தீர்வும் கூற முயன்றிருப்பது, அவரது சமுதாயப் பற்றைக் காட்டுகிறது. அச்சமுதாயப் பற்றே மக்களின் மேல் கொண்டுள்ள மனிதநேயமாக வெளிப்படுகிறது. 1963 சனவரியில் 'எழுத்து'வில் வந்த விமர்சனக் கட்டுரையில் சி. கனகசபாபதி, ந. பிச்சமூர்த்தியைப் பற்றிக் கூறும் போது, "பாரதி, அடிமை இந்தியச் சகோதரனையும் ஆசியச் சீமைச் சொந்தக்காரனையும் பார்த்துச் சுதந்திரச் சங்கை ஊதினான். பாரதியைக் காட்டிலும் பிச்சமூர்த்தி மனிதாபிமானச் சங்கை எடுத்து ஊரும், உலகும் கேட்க ஊதி முழக்குகிறார்"[3] என்று சுட்டியுள்ளார்.

பிற உயிரின் மேல் குழந்தை கொண்ட அன்பு

பொதுவாக, குழந்தைகள் வளர்ப்புப் பிராணிகளிடம் அதிக அன்பும் அக்கறையும் வைத்திருப்பார்கள். எனினும் அக்குணம் குழந்தைக்குக் குழந்தை மாறுபட்டும் காணப்படும். அன்பு வெளிப்படும் நிலையும் சூழலைப் பொறுத்து ஆழமாகவோ, மேலோட்டமாகவோ அமைகின்றது.

'மீனி' என்ற கதையில், காந்திமதிப் பாட்டியின் வீட்டில் அடைக்கலம் புகுந்து, உரிமையோடு இடம் எடுத்துக் கொண்ட பூனையின் மீது சூரி, கௌரி ஆகிய பேரக் குழந்தைகள் கொண்ட வேறுபட்ட அன்பு காட்டப்படுகிறது.

பூனைக் குட்டியின் குறும்பினால் அடுப்படிச் சாமான்கள் உருண்டு, பாத்திரத்தில் இருந்த பாலும் குறைந்து போனதால்

பாட்டியிடமிருந்து சூரிக்கு இரண்டடி, கௌரிக்கு நான்கடி கிடைத்தது. தனது சார்பாக, பலகாரத்திற்குக் காவல் இருந்த கௌரி தூங்கியதாலும் பூனையாலும் தனக்கு அடிவிழுந்ததை நினைத்து சூரி அவர்களிடம் மனவெறுப்புக் கொள்கிறான். ஆனால் கௌரி, தான் அடிவாங்கும் போது வீட்டு விட்டத்தின் மீது இருந்து மியா, மியா என்று பூனைக்குட்டி குரல் கொடுத்த விதம் தன்னைப் பார்த்து இரங்குவதாக நினைத்து 'மீனி' என்ற அன்புப் பெயர் சூட்டிப் பழக ஆரம்பித்தாள்.

"ஒரு நாள் சமையல் அடுப்பிற்குள் மீனி தூங்கிக் கொண்டிருந்தது. காந்திமதிப் பாட்டி அதைப் பார்க்கவில்லை. 'இந்தாடா காபி' என்று காபியை வைத்து விட்டு காசித் தும்பைப் பூ பறித்து வரச் சென்றாள். சூரி மசிக்கூடு, நோட் புஸ்தகங்கள் இவைகளை ஒழுங்கு படுத்தி விட்டு வருமுன் காபியில் பாதிக்கு மேல் காணாமல் போய்விட்டது. சூரிக்கு வந்த ஆத்திரத்திற்கு அளவே இல்லை. அங்கிருந்த சுடுதண்ணீரை எடுத்துப் பூனையின் மேல் கொட்டினாள். மியாவூ வென்று நீளமாக அழுதுகொண்டே அது ஓடி விட்டது. இதைப் பார்த்திருந்த கௌரிக்குக் கண்ணில் ஜலம் வந்தது. தன் மீது சுடுதண்ணீர் விழுந்த எரிச்சல் உண்டாயிற்று." (தொகுதி 1, ப. 62) என்பதன் வழியாக, கௌரி என்ற குழந்தைப் பாத்திரம் பூனையின் வலியைத் தன்வலியாக எண்ணும் அன்பும் நேயமும் கொண்டுள்ளமை காட்டப்பட்டுள்ளது.

பின் விளைவுகளை அறிய இயலாத குழந்தைகள், பழிவாங்கும் எண்ணத்துடன் இருந்தாலும் அறியாமல் செய்த செயலின் விளைவு கண்டு அஞ்சி மனம் வருந்தி, இறுதியில் அடிமனத்தில் உள்ள அன்பு, இரக்கம், அனுதாபம் இவைகளை வெளிப்படுத்துவர் என்ற நிலையைக் கதையின் பிற்பகுதியில் சூரியின் பாத்திரத்தின் வாயிலாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

"என்றைய தினம் மீனியின் சாக்கிட்டு தனக்கு அடி விழுந்ததோ, அது முதல் அதை எப்படியாவது தொலைத்து விட வேண்டுமென்று அவன் நினைத்தான். அதற்குக் குறுக்கே நின்றாள் கௌரி. தவிர அவனைப் பார்த்ததும் மீனி தாவிப்பாய்ந்து ஓடி விடுவதும், கௌரியைக் கண்டால் கொஞ்சிக் குலாவுவதும் அவனுக்குப் பிடிக்கவில்லை" (தொகுதி -1, ப. 64) என்பதன் வாயிலாகச் சில நிகழ்ச்சிகள் குழந்தைகளின் மனத்தைப் பாதிக்கின்ற வகையில் அமைகின்றன என்பதை ஆசிரியர் காட்டுகின்றார். மேலும்,

"சூரிக்கு மீனியைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணமல்ல. பள்ளிக்கூடத்து வாத்தியார் ரூல் கழியால் தலையில் லேசாகத்

தட்டுகிறாரே அதைப் போல் மீனிக்கு இரண்டு தட்டுப் போட்டால் அது வழிக்கு வந்து விடும் என்ற யோசனை. மெதுவாக கௌரிக்குத் தெரியாமல் அவளுக்குப் பின்போய் நின்று ஓர் அடி போட்டான். அது இவ்வளவு பலமாய் விழும் என்று அவனே எதிர்பார்க்கவில்லை. அடி அவனை அறியாமலேயே பலமாய் விழுந்து விட்டது—— சூரிக்கு குலை நடுங்கிற்று....... கௌரி அழுவதைப் பார்த்து சூரிக்கு என்றும் அறியாதவாறு கண்ணீர் ததும்பிற்று. அண்ணனும் தங்கையும் ஒருவரை ஒருவர் பார்த்துத் தேம்பித் தேம்பி அழுதார்கள். பின் சூரி வைத்தியம் செய்ய முயன்றான்" (தொகுதி -1, ப. 67), என்பதன் வாயிலாகக் குழந்தைகள் பூப்போன்ற மென்மையான மனம் கொண்ட, உயிர் இரக்கப் பண்பு உடையவர்கள் என்பதையும் துன்பத்தில் குழந்தை மனங்கள் ஒன்றுபடக் கூடியன என்பதையும் ஆசிரியர் காட்டுகின்றார்.

வறுமையிலும் மனிதநேய வெளிப்பாடு

தான் வறுமையில் வாடினாலும், தன் குழந்தையின் மருத்துவத்திற்குக் கூடப் பணம் இல்லாத போதும் தன்னை விட வறுமையில் வாடும் பிறரின் மேல் இரக்கமும் உதவும் குணமும் கொண்டவர்கள் இச்சமுதாயத்தில் இருக்கிறார்கள் என்பதைக் காபூலிக் குழந்தைகள் என்ற கதையில் காட்டுகின்றார் ஆசிரியர். பிச்சை கேட்டு வந்த காபூலிப் பிச்சைக்காரிகள் தங்கள் குழந்தைகளைத் தையற்கடைக்குள் இறக்கி விட 'போ! போ' என்று சொல்லிக் கொண்டிருந்த தையற்காரன் குழந்தையின் செயல்கண்டு மனம் இரங்குகின்றான்.

"தையற்காரன் தலையைச் சொறிந்து கொண்டே ஆறவைத்த காபியை ருசி பார்த்துச் சாப்பிடத் தொடங்கினான். அதற்குள் அந்தக் குழந்தை கடை முழுதும் தத்தித்தத்தி நடக்க ஆரம்பித்தது. மூலையிலிருந்து துணித்துண்டை இழுத்தது. கத்தரிக்கோலைத் தூக்கிற்று. நூல்கண்டை பிரித்து விட்டு சிரித்தது. தையற்காரனுடைய திகைப்பு, ஏழ்மை, ஆத்திரம் அவ்வளவும் எங்கோ பறந்து போயிற்று. குழந்தைக்கு கொஞ்சம் காபி கொடுத்தான்" (தொகுதி 1 ப. 80) என்பதன் வாயிலாகப் பத்து வயதிலிருந்து ஆறுமாதம் வரையுள்ள தன் ஆறுகுழந்தைகளுக்குச் சோறுபோட அரைரூபாய் கூட இல்லாமலிருக்கும் தையற்காரன் மற்றொரு குழந்தையிடம் கொள்ளும் இரக்கம் வெளிப்படுகிறது. மேலும் வறுமையில் வாழும் மக்களுக்குப் பணம் இன்றியமையாத் தேவையாக இருந்தாலும் மனிதநேயத்திற்கு முதலிடம் தருகின்றார் என்பது இக்கதையின் வழி வெளிப்பட்டுள்ளமையை அறியலாம்.

விட்டுக்கொடுக்கும் நேயம்

பொருளாதாரத் தட்டுப்பாட்டில் இருக்கும் தையல்காரன் தன் நிலை மறந்து குழந்தைகளோடு விளையாடுகிறான். சிறிது நேரத்தில் கண்ணாடி டம்ளர் ஒன்று குழந்தையின் விளையாட்டால் உடைந்து சுக்குநூறாயிற்று. சத்தத்தைக் கேட்ட பிச்சைக்காரிகள் கண்ணாடி உடைந்து கிடந்ததைப் பார்த்து விட்டு, "பைஸா வேண்டாம் மஹராஜ். கஷ்டம் வந்துச்சு' என்று (தொகுதி 1, ப. 81) இந்நிகழ்ச்சிக்குத் தாங்களே காரணம் என்று சொல்லாமல் சொல்லி தங்கள் மன வருத்தத்தை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் தையல்காரனோ "குழந்தை என்னத்தைக் கண்டுது? நான் கவனிக்கவில்லை'. என்று பிசகை தன் மீதேற்றிக் கொண்டு பெட்டியிலிருந்து காலணா எடுத்துக் கொடுத்தனுப்பினான். (தொ. 1, ப. 81) என்று ஆசிரியர் கூறுகிறார். பிற குழந்தைகளைப் போற்றும் குணமும், தீதும் நன்றும் பிறர்தர வாரா என்ற மனப்பான்மையும் ஈத்துவக்கும் செயலும் கொண்டவனாகத் தையல்காரனை ஆசிரியர் படைத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேலும் பிறரிடம் இரந்துண்ணும் நிலை உடையவர்களுக்கும் பிறரின் துன்பம் உணரும் மனப்பாங்கு உள்ளது என்பதும் வெளிப்பட்டுள்ளமையைக் காணலாம்.

கடமையும் தியாகமும்

பொதுவாக, சமுதாய அமைப்பில் குடும்பத்தலைவன் தம் குடும்பத்தை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவது தலையாய கடமையாகப் போற்றப்படுகிறது. அக்கடமையுணர்வு கடமையோடு மட்டுமல்லாமல் உள்ளார்ந்த தியாக உணர்வோடு வெளிப்படுவதைக் காபூலிக் குழந்தைகள் கதையில் காண முடிகிறது. 'பிள்ளை குட்டி நல்லாயிருக்கணும்' (ப. 81) என்று காபூலி பிச்சைக்காரிகள் வாழ்த்தியது தையல்காரனை அமைதி இழக்கச் செய்தது. தன் குழந்தைக்கு மருத்துவச் செலவிற்கு மனைவி காசு கேட்க, இல்லை என்று கூறி அனுப்பி விட்டதை எண்ணுகிறான். கடையை விட்டுக் கிளம்பிப் போகிறான். அவன் மனைவி பிரெஞ்சு துரைசாணிகளிடம் காசு கேட்டு வாங்கி மருந்து வாங்கிக் குழந்தைக்கு கொடுத்து விடுகிறாள். இதை அறியாத தையல்காரன் தன் கையிலிருந்த பொன்தாயத்தை விற்று மூன்று ரூபாய் எடுத்துப் போகிறான். அவளோ குழந்தைக்கு மருந்து கொடுக்கப்பட்டு விட்டதைத் தெரிவிக்கிறாள். திரும்பி வரும் வழியில் அந்தத் துரைசாணி மருத்துவமனைக்குச் சென்று குழந்தையின் உடல்நலம் விசாரித்து வருகிறாள். கடைக்குள் நுழைந்த உடன் கடையிலிருந்த நண்பன் தையல்காரனின் மாறுதலை கவனித்து

"ஆமாம் உன் தங்க தாயத்து ஒரு நிமிஷத்திற்குள் என்ன ஆய்விட்டது?" (தொகுதி 1, ப. 81) என்று கேட்க, நடந்ததைக் கூறுகிறான்.

"என்னவோ தோணித்து, அந்த துரைசாணி ஆஸ்பத்திரிக்குப் போய் அவளைப் பார்த்து குழந்தையின் நிலையைப் பற்றிக் கேட்டேன். பயம் வேண்டாம் என்று ஆறுதல் சொன்னாள். 'பணம்'? அந்த ஆஸ்பத்திரி வாசலிலே மேரியாத்தா சிலை இருக்குதல்லவா? அங்கே ஒரு உண்டி இருக்கு. அதற்குள் போட்டு விட்டேன் என்று நிறுத்தி மௌனமானான் தையல்காரன்" என்பதன் வாயிலாக வறுமையிலும் பணத்தைத் தனக்கென (தொகுதி 1, ப. 82) வைத்துக் கொள்ளாது தானம் கொடுத்து விடும் பாங்கு உணரப்படுகிறது.

பலன் எதிர்பாராத தியாகம்

தியாகம் என்றாலே பொருளாலும் செயலாலும் தனக்கெனப் பலன் எதிர்பாராமல் இருத்தல் எனலாம். 'முத்தம்மன்' என்ற கதையில் தன் உயிரை விடப் பெரிதாக நினைக்கும் தன் மகவின் உயிரைக் கூடத் தன் ராணியின் மேல் கொண்ட விசுவாசத்தாலும் தன் ராணியின் வாரிசு துலங்க வேண்டும் என்ற நோக்கத்தாலும் இழக்கத் துணிந்த தாதியின் பாத்திரம் தியாகத்தின் உருவாகப் படைக்கப்பட்டுள்ளது. அரசக் குழந்தை தாதியிடம் இருப்பது தாயாதிகளுக்குத் தெரியவர அதை அழிக்கப் புறப்படுகின்றனர்.

'என்ன செய்வதென்று அவளுக்குப் புரியவில்லை. அதற்கான யோசனை செய்யக் கூடிய அவகாசம் கூடக் கிடைக்கவில்லை. ஏனெனில் உருவிய கத்தியுடன் ஐம்பது பேர் தெருக்கோடியில் வருகிறார்கள் என்ற செய்தியை வீடு கூட்டிப் பதைபதைத்துத் தாதியிடம் வந்து சொன்னாள். முத்தாம்பா ஒரு வினாடி யோசித்தாள். மறுவினாடிக்குள் அரசக் குழந்தையின் தலையிலிருந்த பொன் தொப்பியையும், கழுத்திலிருந்த முத்தாரத்தையும் கழட்டித் தன் குழந்தைக்குப் போட்டாள். பிறகு இரண்டு குழந்தைகளையும் எடுத்து மார்புடன் அணைத்துப் பால் கொடுத்தாள்." (தொகுதி 1, ப. 145) என்பதன் வாயிலாக அச்சூழலில் எடுக்கப்பட்ட அவளின் முடிவில் மன நிறைவோடு சேர்ந்த தியாகமே இங்கு நேயமாகக் கொள்ளப்படுகிறது.

தியாக உள்ளத்தின் உச்ச நிலையாக, "தன் குழந்தை உயிர் போனது பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் சூது வெளிப்பட்டு அவர்கள் திரும்பவும் மறு குழந்தையிடம் வந்துவிட்டால் மோசமல்லவா என்று தத்தளித்துக் கொண்டிருக்கும் பொழுது நல்ல வேளையாக இவர்கள் வந்தார்கள்" (தொகுதி 1, ப. 146) என்று

சூழ்நிலை மாற்றம் காட்டப்பட்டுத் தாதியின் உறுதியான தியாக உள்ளம் வெளிப்பட நிற்கிறது. அவற்றோடு அரசகுலத்திற்கு முத்தாம்பாள் காட்டிய விசுவாசமே அவளது உறுதியான உயர்ந்த மனிதநேய எண்ணமாக வெளிப்பட்டுள்ளதை இங்கு அறியமுடிகிறது.

பிறர் துயர் துடைக்கும் மனிதநேயம்

"நெருக்கடி" என்ற கதையில் குடும்பச் சூழல் காரணமாகத் தன் பொறுப்பிலிருந்து தவறும் மனிதனுக்கு அரசாங்கம் கொடுக்கும் தண்டனையை மாற்ற உதவும் பாத்திரம் காட்டப்பட்டுள்ளது. சவுக்கு பயிரிட்ட கணக்கைக் காட்டி நவீன முறையில் பயிரிட்டுத் தண்டனையை இல்லாமல் செய்வதற்குச் சரவணமுத்துவின் வீட்டிற்கு அருகில் உள்ள பணக்காரர் உதவுகிறார்.

"என்ன அசட்டுத்தனம் ஐயா! இந்த மாதிரி கஷ்டம் என்று முன்பே சொல்லியிருக்கலாகாதா? நான் சொல்வதைக் கேட்டு வையுங்கள். ஓர் அப்பீலை தயார் செய்து மேலே அனுப்புங்கள். நான் சொல்கிறபடி எழுதிப்போடுங்கள் என்று சொல்லிவிட்டு அப்பீல் செய்ய வேண்டிய விதத்தைப் பற்றி பங்களாக்காரர் விளக்கிக் கூறினார்[13] (தொகுதி 2, ப. 308) என்பதன் வாயிலாகச் சிக்கலில் மாட்டிக் கொண்ட ஒரு மனிதனைச் சட்டத்தின் உதவியோடு காப்பாற்ற எண்ணும் உள்ளம் வெளிப்படுவதை அறிய முடிகிறது.

சமுதாயத்தில் ஏழையின் தனிமனிதப் பிரச்சினைகளைக் களையப் பணம் கொண்டோருக்கும் மனம் உண்டு, மனிதநேயம் உண்டு என்ற நிலையை ஆசிரியர் காட்டுகின்றார். "கவலைப் படாதேயும். நான் செலவழித்துச் செய்து விடுகிறேன். பயிரைக் காட்டவேண்டியது என் பொறுப்பு" 14 (தொகுதி 2, ப. 308) என்று அமையும் வரிகளில் அவரது மனிதநேயம் வெளிப்படுகின்றது.

மனிதநேயத்தோடு உறைந்த கடமை உணர்வு

கடமையை ஆற்றும் அதிகாரியாக இருந்தாலும் அவர்களுக்குள் இரக்க உணர்வும் மனிதநேயமும் உள்ளது என்பதை இன்ஸ்பெக்டர் பாத்திரம் மூலம் ஆசிரியர் காட்டுகின்றார். நல்லது செய்ய இயலவில்லை என்றாலும் அல்லது செய்யாது அமைதியாய் இருத்தலும் மனிதநேயமே என்று இப்பாத்திரம் வழி விளங்கிக் கொள்ள முடிகின்றது. "இதென்ன செப்பிடு வித்தை! கட்டாந்தரையில் இரண்டு மாதத்திற்குள் பயிர் ஏற்றி விட்டீரே! அதோடு எனக்கும் ஆபத்தைக் கொண்டு வந்து விட்டீரே! 'பக்கத்து பங்களாக்காரர் நான் பிழைக்கச் செய்த வழி' என்று சரவணமுத்து முழுவிவரத்தையும் கூறினார்.

இன்ஸ்பெக்டரின் வியப்பு, திடீரென்று, வேறு திக்கு நோக்கித் திரும்பிற்று. ஒழுங்கு நடவடிக்கைக்கு உண்மையை அம்பலப்படுத்திப் பதில் எழுதி அனுப்ப வேண்டியது அவசியந்தானா என்ற கேள்வி மனத்தில் பிறந்தது. குழந்தைகளோ தமக்கில்லை. உத்தியோகத் துறையில் ஓய்வு பெறும் கால எல்லைகூட நெருங்கிக் கொண்டிருந்தது. ஸ்தலத்தில் பார்வையிட்டதில் ஏதோ மாறாட்டம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று சமாதானம் கூறினால் ஒய்வெடுத்துக் கொள்ளும்படி மேல் அதிகாரி கட்டாயப்படுத்துவதைத் தவிர எதுவும் நிகழ்ந்து விடாது என்று குருட்டுத்தனமாக இன்ஸ்பெக்டர் எண்ணினார்.

"சரவணமுத்து! பங்களாக்காரர் விளக்கேற்றி வைத்தார் என்று சொன்னீரல்லவா? நான், விளக்குக்கு எண்ணையாக இருந்து விட்டுப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டே தம் வீட்டிற்கு கிளம்பினார்" (தொகுதி - 2, ப. 310) என்பதன் வாயிலாகப் பிறர் நன்மைக்காக, தான் விட்டுக் கொடுத்து, தன் பணிக்குப் பாதிப்பு வந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்று தன்னை ஆற்றிக் கொண்டு, மனநிறைவோடு செல்லும் உயரிய மனம் அவ்வதிகாரியின் வழி காட்டப்பட்டுள்ளதை அறியலாம். "மனிதாபிமானம், அன்பு, தியாகம் ஆகிய பண்புகளாலேயே மனிதன் தெய்வநிலைக்கு உயர்ந்து போகிறான் என்பது ந. பிச்சமூர்த்தியின் கருத்து. ஒவ்வொரு தனிமனிதனின் மனமும் அருள் பழுத்த கனியாகுமானால் சமுதாய அமைதி தானே விளையும் என்று கருதுகிறார்.[4] என்று மா இராமலிங்கம் ஆசிரியர் பற்றிக் கூறியுள்ளார்.

முடிவுரை

மனிதநேயமே மனிதனையும், சமுதாயத்தையும் நிலையாக வாழ வைக்கும் என்ற கருத்து ந. பிச்சமூர்த்தியின் கதைகளில் காணப்படுகிறது.இரண்டுதொகுதிகளாக வெளிவந்துள்ள எண்பத்தேழு கதைகளில் சமுதாயநிலை, இயற்கை, தத்துவம், அழகு, கற்பனை இவை பரவலாகக் காணப்படுகின்றன. கதை நிகழ்ச்சிகளிலிருந்தே மனிதநேயம் வெளிப்படும் வகையில் அமைந்துள்ளது. உலர்ந்த மரம் எப்படித் தளிர்ந்தது வளராதோ அதுபோல மனிதநேயமற்றவன் வாழ்க்கை சிறக்காது. ஆதலால் மற்றவர்களிடமும் மற்றவற்றிடமும் அன்பு காட்டுவதே வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்குரிய வழியாகும். அவ்வகையில் பிற உயிர்கள் மேல் கொண்டுள்ள அன்பு, குழந்தைகளின் களங்கமில்லா மனம் , வறுமைக் குழந்தைகள் மேல் கொள்ளும் பரிவு, தானத்தின் அருமை, பலனை எதிர்பாராத உயிர்த்தியாகம், விசுவாசம், தனிமனிதச்

சிக்கலைத் தீர்த்து வைக்கும் பணம் படைத்தவரின் மனம், பதவியில் இருக்கும் அதிகாரியின் பிறர் நலம்நாடும் குணம் இவைகள் ந. பிச்சமூர்த்தியின் கதைகளில் வெளிப்பட்டிருப்பதை அறியலாம்.

குறிப்புகள்

1 புரட்சிப் பாவேந்தர் மாந்தநேயம், (பதி.), வேலூர் செந்தமிழ்கோ, அறிவுக்கனல் வெளியிடு, வேலூர், *1992., ப. 193.*

2 *சங்கத் தமிழியல், ச. சிவகாமி, மாதவி பதிப்பகம், சென்னை, 1999, ப70.*

3. *மேற்கோள், ந. பிச்சமூர்த்தி ஆய்வடங்கல், க. மீனாகுமாரி, பிரியா பதிப்பகம், மதுரை, 1982, ப.171.*

4 *ந. பிச்சமூர்த்தி ஆய்வடங்கல், க. மீனாகுமாரி, பிரியா பதிப்பகம், மதுரை, 1982, ப. 156.*

******

'விருந்தாளி' சிறுகதையில் மனிதநேயம்

ஆ. கார்த்திகேயன்
ஆய்வாளர்

அ. முத்துலிங்கம் அவர்கள் எழுதி காலச்சுவடு பதிப்பகத்தாரால் டிசம்பர் 2001இல் முதல் பதிப்பாய் வெளியிடப் பட்ட "மகாராஜாவின் ரயில் வண்டி" என்னும் சிறுகதைத் தொகுப்பிலிருந்து விருந்தாளி என்ற சிறுகதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்விற்கான படைப்பில் வெளிப்படையாகக் காணும் மனிதநேயத்தைக் கதைச் சுருக்கமே சொல்லி விடும். கதாபாத்திரத்திரங் களின் மூலமும் சிலவிடங்களில் வேறு விதமாகவும் தன் மனிதநேயத்தை வெளிப்படுத்திய ஆசிரியரின் மனிதநேயத்தையும் ஆராய வேண்டும்.

படைப்பு, படைப்பாளன் இதைத் தாண்டி வாசகன் என்று ஒருவன் இருக்கிறான். அவனும் மனிதன் தான். ஆய்வுக்காக வாசித்தாலும் பொழுது போக்கிற்காக வாசித்தாலும் அவன் மனிதன் தான். அவனிடமும் சதை, இரத்தம் அத்துடன் மனிதநேயமும் இருக்கலாம்.

இந்த ஆசிரியர் இந்த இடங்களில் மனிதநேயக் கருத்துகளைக் கூறியுள்ளார்; இந்த இடங்களில் மனிதநேய மாண்பாளராக விளங்குகின்றார்; இவரின் கதாபாத்திரங்கள் மனிதநேய இழையால் நெசவு செய்யப்பட்டுள்ளது என்று காணுவதோடு நில்லாமல் வாசகனை இந்த இந்த இடங்களில் மனிதநேய உணர்வு ஆட்கொள்ளும்படி எழுத்து அமைந்துள்ளது என்பதையும் வெளிப்படுத்த வேண்டியுள்ளது. அங்ஙனம் இக்கதையில் காணும் கருத்துகளை உள்வாங்கிக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

படைப்பாளன் தன் கற்பனைக் குதிரையைத் தட்டி எழுப்பியவுடன், முட்டி மோதிப் பாயும் கற்பனைக் காட்டாற்று வெள்ளத்தில் பயிர் செய்த படைப்புகள் ஒருவகை. தன் சொந்த அனுபவங்களையே அங்கும் இங்கும் சில செதுக்கல்; பூசல் வேலைப்பாடுகளுடன் படைப்பது இன்னொரு வகை. இக்கதை இரண்டாம் வகையைச் சேர்ந்தது.

கதைச்சுருக்கம்

பைபிளில் உள்ள ஆதியாகமம் : 18 இல் வரும் சில வசனங்களை எடுத்தியம்பி விட்டுச் சிறுகதை ஆரம்பிக்கிறது. ஜெர்மன் கம்பெனி ஒன்று ஓர் ஆப்பிரிக்கக் கிராமம் வழியே ஒரு பெரிய ரோடு போட்டது. அதை அரசாங்கத் தரப்பில் மேற்பார்வையிடுவதற்காக இந்தக் கதையின் ஆசிரியர் நியமிக்கப்படுகிறார். மழைக்காலம் தவிர்த்து மற்றக் காலங்களில் இரவும் பகலுமாக நடக்கும் வேலையைக் கவனிக்க அந்தக் கிராமத்திலேயே தங்குகிறார்.

ஆசிரியருக்குச் சனூசி என்ற வேலைக்காரனும், கமாறா என்ற சமையல்காரனும் ஒரு வாகன ஓட்டி மற்றும் மூன்று காவல்காரர்கள், தோட்டக்காரன் என ஏகப்பட்ட வேலையாட்கள் உள்ளனர். அவரை ஊர்மக்களும் நன்கு கவனித்துக் கொள்கிறார்கள்.

ஒரு நாள் ஆசிரியரின் வீட்டிற்கு, காலிலிருந்து தலைவரை புழுதியுடன், தலைமயிர், சிறுதாடி எல்லாம் செம்மண் நிறமாக மாறியிருக்க, எங்கோ நெடுந்தூரத்திலிருந்து வந்ததற்கு அடையாளமாக ஓட்டை விழுந்த காலணிகளை அணிந்து கொண்டு ஒரு விருந்தாளி வந்தார்.

ஆப்பிரிக்க மரங்களை வெட்டி ஏற்றுமதி செய்யும் அவரின் வியாபாரம் படுதோல்வியில் முடிந்து விட்டதால் தற்போது பக்கத்து நாடான லைபீரியாவிற்குச் சென்று பிழைக்கலாம் என்பது அவரின் நம்பிக்கை. லைபீரியாவுக்குச் செல்ல விசா இல்லாததால் கள்ள வழியில் போவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். கடைசி பஸ் தவறிவிட்டது. ஒரு நாள் தங்கிப் போவதற்காக ஆசிரியர் வீட்டுக்கு வந்திருந்தார்.

வந்திருந்த விருந்தாளி ஆசிரியருக்கு முன்பின் தெரியாதவர். எந்த வகையிலும் தொடர்பு இல்லாதவர். ஆனால் வந்த விருந்தாளியை ஆசிரியரும் ஆசிரியரின் வேலைக்காரரும், சமையல்காரரும் கவனித்த விதம் மனிதநேயத்தை உணர வைக்கிறது.

கதையின் ஊடே ஆப்பிரிக்கச் சிறார்கள், தண்ணீருக்காகவும் விறகுக்காகவும் அலையும் ஆப்பிரிக்கப் பெண்கள், நீண்ட வெண்தாடியுடைய ஐரிஸ் பாதிரியார் வந்து போகின்றனர்.

கதை நிகழ்ச்சிகளில் மனிதநேயம்

“அந்தக் கிராமத்தின் அரைவாசி ஜனத்தொகை என் ஒருவனைப் பராமரிப்பதையே முக்கியத் தொழிலாக ஏற்றுக் கொண்டிருந்தது”.[1]

தமிழ்நாட்டுக் கிராமமோ, ஆப்பிரிக்கக் கிராமமோ புதிதாக ஒருவர் வந்துவிட்டால் ஊர் சேர்ந்து உபசரிக்கும் என்ற செய்தி மனிதநேயம் வறண்டுபோன தொண்டைகளைச் சற்றே ஈரப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஈரமென்றதும் நினைவிற்கு வரும் புள்ளி விவரம் ஆப்பிரிக்கப் பெண்களின் தினப்படி உழைப்பில் 60% தண்ணீர் சேகரிக்கவும் விறகு சேகரிக்கவும் செலவாகிறது என்பதே!

"இந்த ஊர்ப் பெண்கள் நிமிர்ந்த நடையுடன் காலையிலும் மாலையிலும், தண்ணீருக்கும் விறகுக்குமாக அலைவதைக் காணலாம்."[2]

இந்த வரிகள் புள்ளி விவரத்திற்கு நேரடிச் சாட்சியாக இருப்பதோடு அல்லாமல் அந்தக் கருப்பு நங்கைகளுக்குத் தண்ணீர் சுமந்து செல்லும் சேவகனாய் மாறும் நேயத்தை இளவாசகர் களிடையே ஏற்படுத்துவதாக உள்ளது.

ஆசிரியரின் வீட்டிற்குள் தயங்கித் தயங்கி நுழையும் சிறுவர்கள், நிலைக்கண்ணாடிக்கு மங்கும் சக்தியும் உயிர்க்கும் சக்தியும் இருப்பதாக நம்பும் சிறுவர்கள், தங்கள் பிம்பங்களை இளித்த பற்களோடு சரிபார்த்துக் கொள்ளத் துடிப்பவர்கள். இந்தியர்களைக் காணும்போது இந்தியமான் எனக் கூக்குரலிட்டுக் கையசைக்கும் இச்சிறுவர்கள் அல்லது பாலகர்களுக்குப் பள்ளிக்கூடத்தில்,

"ஆசிரியர்கள் இங்கே கடுமையான தண்டனைகளை வழங்கினாலும் இந்தப் பாலகர்கள் எப்போதும் மலர்ந்த முகத்துடனேயே இருப்பார்கள்"[3] என்பது மனத்தைச் சற்றே வாட வைக்கிறது. ஆப்பிரிக்க காட்டின் குக்கிராமச் சிறுவர்களின் மேல் கதை படிப்பவர்களுக்கு ஏற்படும் இந்த உணர்வுக்குப் பெயர் மனிதநேயம் எனலாம்.

ஒரு நாள் ஆசிரியர் "சும்மா ஜீப்பில் வரும் போது பெரிய டிரம் ஒன்றில் தண்ணீர் பிடித்து வந்து இந்தக் கிராம மக்களுக்கு"[4] தருகிறார். "அந்தத் தண்ணீரைப் பங்கு போடுவதில் பெரும் போர் நிகழ்ந்தது. இரண்டு பெண்கள் தலை மயிரைப் பிடித்துக் கொண்டு வீதியிலே புரண்டு வன விலங்குகள் போல அடித்துக் கொண்டார்கள். அதற்குப் பிறகு இலவசமாகப் புண்ணியம் சம்பாதிக்கும் காரியத்தை நான் நிறுத்திவிட்டேன்"[5] என்கிறார் கதாசிரியர்.

எதன் பொருட்டு ஒரு செயல் நிகழ்த்தப்படுகின்றதோ, அந்த நிகழ்வின் போது மட்டுமே அவ்விரண்டின் தொடர்பைப் பற்றிப் பேசலாம், அன்றிப் பொதுமையாக்க முடியாது. காரணம்

அடுத்த கணமே இரண்டிற்குமான தொடர்பு நேரெதிராகவும் மாறிப் போய் விடலாம். நிஜமாக பாவம் அந்தப் பெண்கள். புரட்சிக்காக அல்ல, தண்ணீருக்காக நிமிர்ந்த நடையுடன் காலையும் மாலையும் அலையும் இப்பெண்களின் இருப்பிடம் தேடித் தண்ணீர் வந்த போதும் அதை அனுபவிக்க முடியாமல் போனது.

சும்மாதானே போகிறோம் கொஞ்சம் சுமந்து கொண்டு போகலாமே என்று தண்ணீர் கொண்டு வந்தவரின் மனிதநேயம், தண்ணீரைப் பங்கிடும் போதும் அவர்களுக்கிடையில் நடந்த மிருகச் சண்டையைக் கண்டு இப்படிப்பட்ட புண்ணியம் வேண்டாம் எனத் தண்ணீர் கொண்டு வருவதை நிறுத்துகின்றாரே அதுவும் மனிதநேயத்தின் பாற்பட்டது தான்.

"அவருடைய பெயர் ஜெகன். சிலோனை விட்டுப் புறப்பட்டுக் கப்பலில் சேர்ந்த போது அவருக்கு வயது இருபது. அதற்குப் பிறகு வந்த இனக்கலவரங்களால் அவர் திரும்பிப் போவதற்கு வாய்ப்பே கிடைக்கவில்லை. அவருக்கு இருந்த ஒரே ஒரு சகோதரரும் தகப்பனாரும் போரில் இறந்து விட்டார்கள். தாயைத் தேடும் முயற்சியில் தோற்றுவிட்டார். தாயார் இருக்கிறாரா இல்லையா என்பது கூட அவருக்குத் தெரியாது."[6] இது தான் விருந்தாளி பற்றின விருத்தாந்தம்.

எப்போதோ! முப்பாட்டனுக்கும் முன்பாய் சிலோன் போன நம்மவர்கள் இப்போது எந்தநாடும் சொந்தமில்லாமல் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடிகள் அனாதைகளாய் உலகெங்கும் அலைகின்றனவே என்ற உண்மையை நினைவூட்டி வருத்தும் வரிகள்.

"இப்பொழுது பக்கத்து நாடான லைபீரியாவில் இருக்கும் ஒரு நண்பரைத் தேடிப் போய்க் கொண்டிருக்கிறார். அங்கே போய் ஏதாவது பிஸினஸ் செய்து முன்னுக்கு வந்துவிடலாம் என்ற நம்பிக்கை. நல்ல தொடர்புகள் கிடைத்தால் ஒரு சில வருடங்களில் லட்சங்கள் சம்பாதித்து விடலாம் என்றார்"[7] என்ற வரிகள் விருந்தாளி லைபீரியாவிலாவது நல்ல படியாக வாழட்டும் என்று கதை படிப்பவரை முணுமுணுக்கவைக்கிறது. இந்த முணுமுணுப்பில் ஒளிந்து கொண்டிருப்பது கூட மனிதநேயம் தான்.

"முந்தி பிந்தி எனக்கு விருந்தாளிகள் வந்தது கிடையாது."[8]

என்ற ஆசிரியரின் மகிழ்ச்சியில் பூரித்த வரிகளும்,

"சொல்லும் வேலைகளைக் காட்டிலும் சொல்லாத வேலைகளைச் செய்வதிலே விசேஷ பிரியம்"[9] காட்டும் வேலைக்காரனான

"சனூரசிக்கு அன்று என்ன செய்வதென்றே தெரியவில்லை. இங்கு ஓடினான். அங்கு ஓடினான். ஒரு விருந்தாளியைச் சமாளித்த முன் அனுபவம் இல்லாததால் இன்னது செய்ய வேண்டும் அல்லது செய்யாமல் விடவேண்டும் என்பது தெரியாமல்"[10] தடுமாறும் சனூரசியின் செயல்களும்,

விருந்து சங்ககாலத்தில் மட்டுமல்ல; இதோ இந்தச் சமகாலத்திலும், 'எங்கிருந்தோ வந்த, முன்பின் தெரியாத எங்கோ பயணப்படும் இந்த வழிப்போக்கனுக்கு விருந்து படைப்பதில் ஆர்வம் காட்டும் ஆசிரியனிடமும் ஆப்பிரிக்க வேலைக்காரனிடமும் காண முடிகிறது.

பத்து மணிக்கு நின்று விடும் ஜெனரேட்டர் அன்று இரவு ஒரு மணி வரை விருந்தினர் பொருட்டு வேலை செய்தது.

"அந்த ஆப்பிரிக்கக் காட்டில் ஒரு நடு நிசியில், மின் விளக்குகள் எரியும் ஒரேயொரு தனி வீட்டில் எங்கள் இருவருக்காகவும் காரு குறிச்சி இன்னொரு முறை கரகரப்பிரியாவை வாசித்தார். அந்த வாசிப்பு முன்பு வாசித்ததிலும் பார்க்க இன்னும் மெருகு கூடியிருந்தது. அவர் கண்களில் பெரிய உருண்டையாக நீர் ஒன்று திரண்டு பட்டென்று விழுந்தது."[11]

காரு குறிச்சி அருணாசலப்பிள்ளை பேர் போன நாதசுவர வித்வான். இந்துஸ்தானியில் காப்பிதாட் எனப்படும் கரகரப்பிரியாவை அவர் வாசிக்கக் கேட்க வேண்டுமே! கேட்கும் போதே கருணை பிறக்கும். ஆம் இந்த ராகம் கேட்போரைக் கருணையில் முகிழ்க்க வைக்கும் ராகம். எந்த வேளையிலும் பாடப்படும் ராகம். கருணைக்குக் காலம் உண்டோ? வார்த்தைகளால் காட்சி அமைத்து, வாசகனை அங்கே நிறுத்தி, உணர்வுக்கேற்ற ராகம் பூட்டி, நேயப்பயிர் செய்விக்கிறார் கதை ஆசிரியர்.

"பிறகு, பேச்சு இலக்கியத்துக்குத் திரும்பியது. ஓர் உருதுக் கவிதையை நான் சொன்னேன்.

நீ அங்கே
நான் இங்கே
பெண்ணே!
இரவு நகர்கிறது வீணாக.

இந்தக் கவிதையை வெகுவாக ரசித்தவர் திடீரென்று மௌனமாகி விட்டார். இவருடைய கடல் பிரயாணங்களில், தாய்லாந்திலோ, துருக்கியிலோ ஒரு பெண்ணின் ஞாபகம் வந்திருக்கலாம். மழைக்கால மேகம்போல அவருடைய முகம் கறுத்துவிட்டது."[12]

விருந்தினரை வரவேற்கும் பொழுது முகம் மாறுபட்டால் வருகை புரிந்திருக்கும் விருந்தாளி மோப்பக் குழையும் அனிச்சமாய் ஆகிவிடுவார். இங்கே வந்திருந்த விருந்தாளியின் முகம் திடீரென்று கருக்க, தான் ஏதோ தேவையில்லாத நினைவுகளை ஞாபகப்படுத்தி அவரைப் புண்படுத்தி விட்டோமோ என்று விருந்து கொடுப்பவர் மோப்பக் குழையும் அனிச்சமாய்ப் போகிறார்.

கதை படிப்பவருக்கும் கொஞ்சமும் தொடர்பில்லாத யாரோ ஒரு பெண்ணும், எங்கேயோ ஒரு ஆணும் இரவு நகர்ந்து கொண்டிருக்கையில் பிரிந்து கிடக்கிறார்கள் என்ற செய்தி மனத்தை இளக்குகின்றது இதுவும் மனிதநேயம் தான்.

"சமயல்காரன் கமாறாவுக்குப் பெருஞ்சீரகத்திற்கும், பெருங்காயத்திற்கும் தான் வித்தியாசம் தெரியும். கடுகிற்கும், மிளகிற்கும் உள்ள வேறுபாடு என்ன செய்தும் அவனுக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட வேலைக்காரன் கமாறாவுக்கு அன்று என்ன நடந்ததோ, எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை. அபாரமாகச் சமைத்திருந்தான். சுடச்சுட அப்பம் சுட்டு அடுக்கியிருந்தான். வெந்தயக் குழம்பு அளவான வெந்தயம் போடப்பட்டு மிளகாய்ச் சிவப்பில் நல்ல மணம் வீசியது. ஆப்பிரிக்க முறைப்படி வைத்த இறைச்சிக்கறி துண்டு துண்டாக எண்ணெயில் மிதந்தது. சாம்பாரின் மகிமையைக் கூற இயலாது. அளந்தெடுத்துக் கலந்தது போல உறைப்பும் புளிப்பும் உப்புச் சுவையும் கூடித் தன்னிகரற்று விளங்கியது."[13]

பதினைந்து வருடங்களாக இப்படிப்பட்ட உணவை உண்டதில்லை எனக் கண்களில் சுரந்த நீரைக் கூடப் பொருட்படுத்தாமல் உண்பதிலேயே கருத்தாக இருந்தார் விருந்தாளி. இவ்வாறு "அவர் புசிப்பதைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்."[14] இது கதை ஆரம்பிப்பதற்கு முன்னால் சொல்லப்பட்ட பைபிளில் உள்ள நிகழ்ச்சியான - தன் குழந்தைகளுக்கெல்லாம் செய்ய வேண்டிய மங்கலச் சடங்குகளைச் செய்து அனுப்பித் தன் மனைவியுடன் தனியாக வசித்துக் கொண்டிருந்த ஆப்ரகாம் வீட்டிற்கு வருகை தந்த மூன்று புருஷர்களுக்கு ஆப்ரகாம் "வெண்ணையையும் பாலையும் சமைப்பித்த கன்றையும் எடுத்து வந்து அவர்கள் முன்பாக வைத்து அவர்கள் அருகே நின்று கொண்டிருந்தான்; அவர்கள் புசித்தார்கள்."[15] என்பதோடு ஒப்பு நோக்க வைக்கிறது. மேலும் வள்ளுவனின் விருந்தோம்பல் கருத்துகளில் ஒன்றான விருந்தினர் உண்ட பின்னர் மீதமிருந்த உணவையே விருந்து படைப்போன் இன்பமாய் உண்பான் என்பதையும் இங்கே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளலாம்.

"அன்று என் மனம் அளவில்லாத சந்தோஷத்தில் மிதந்தது"[16] என்ற ஆசிரியரின் கூற்றை ஆப்ரகாமின் கூற்றாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

மனம் சந்தோஷமாக இருக்கும் பொழுது தோட்டத்துக் கம்பளிப்புழு கூட அழகாய்த் தெரியும். அப்படி இருக்கையில், தனக்குப் பிடித்தமான விலை உயர்ந்த ஒயின் அதுவும் விருந்தாளியுடன் குடிக்கும் போது எப்படி இருக்கும்.

"அதைத் திறந்து நானும் நண்பரும் பருகினோம். ஓர் இசையின் உச்சம் போலக் கவிதையின் தொடக்கம் போல அது இருந்தது. ஊற்றுப்போல நாக்கிலே பட்டு ஒரு காற்றுப் போல மறைந்தது. அது கொடுத்த சுவை மாத்திரம் நாக்கிலேயே தங்கியது; நாசியிலேயே நின்றது."[17]

மறுநாள் காலை ஆசிரியர் எழுந்ததும் கடிகாரத்தைப் பார்க்கிறார். மணி ஒன்பது. எட்டு மணி பஸ்சிற்கே விருந்தாளியை அனுப்பி வைக்க வேண்டுமே இப்படித் தூங்கி விட்டோமே என மனம் நொந்து கொள்ளும் போதும் அதற்காக விருந்தாளியிடம் வருத்தம் தெரிவிக்கும்போதும் விருந்தாளி புறப்படும் பொழுதும் பஸ் கட்டணத்திற்குக் காசு இருக்குமோ, தெரியவில்லையே அதைக் கேட்பதற்குக் கூச்சமாக இருக்கிறதே என்ற ஆசிரியரின் கூற்றின் போதும் சிறிது தூரம் சென்ற விருந்தாளி எதையோ நினைத்துக் கொண்டது போலத் திடீரெனத் திரும்பி வருகையில் ஆசிரியர் மனம் பதைத்து, தான் நினைத்தது சரி என்று தோன்ற பஸ் கட்டணத்தை அவர் கேட்காமலேயே கொடுத்திருக்கலாமே என மனம் வேதனைப்பட்டு நொந்து கொண்ட உணர்வுகளுக்குப் பெயர் மனிதநேயம்.

தன் உலகத்து உடைமைகளை எல்லாம் ஒரு முதுகுப்பையில் தூக்கி வந்த விருந்தாளி சொல்லிவிட்டுப் போன கடைசி வார்த்தை "சாகும் வரை இந்த விருந்தை மறக்க மாட்டேன்"[17] என்பதே. ஆப்ரகாமிடம் வந்த மூன்று புருஷர்கள் அவருக்கு மகவு உண்டாகும் என ஆசீர்வாதச் செய்தி சொல்லிவிட்டுப் போனது போல் இது அமைகிறது.

"நான் பின்னும் ஐந்து ஆண்டுகள் ஆப்பிரிக்காவில் வசித்தேன். அந்த வருடங்களில் என்னைத் தேடி ஒரு விருந்தாளி கூட வந்ததில்லை"[18] என ஆசிரியர் சோகமாய்ச் சொல்லுவது விருந்தில்லா உணவு மருந்துதான் என்பதை வலியுறுத்திச் சொல்கிறது. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பானுக்கு ஏமாற்றம் விளைந்ததை உணர முடிகிறது.

முடிவுரை

"இனி எந்த சமயத்திலும் இல்லறத்தார்க்குப் பொதுவாய அறம் ஆதலின் விருந்தெதிர் கோடலைத் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் என்று விதந்தார். இவ்விருந்தினர் நல்கூர்ந்தவராய் வரும் புதியவர் என்றறிக"[19]. என்கிற சிலப்பதிகாரப் புகார்க் காண்ட உரை வரிகள் தொன்று தொட்டு இல்லறத்தாரின் கடமையாக இருந்து வருகின்ற அறமாகிய விருந்து கோடலைப் பற்றியது. விருந்தைப் பற்றிஆய்வு செய்கையில் சங்க இலக்கியத்தில் தலைவன் தலைவியுடன் ஊடலில் இருக்கும் பொழுது யாரேனும் விருந்தினர் வரமாட்டாரா, அதன் பொருட்டு ஊடல் தீராதா என விருந்தினரை எதிர்பார்க்கும் தலைவனின் நினைவு வருகிறது. விருந்து என்றால் முன்பின் தெரிந்ததும் ஏதேனும் தொடர்புடையதும் அன்று, விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே என்ற தொல்காப்பியரின் வரியில் இருந்து விருந்து என்ற சொல்லிற்கு, புதியது என்று பொருள் கொள்ளலாம்.

சங்க காலத்திலும் சரி, சமகாலத்திலும் சரி, தமிழ்நாடோ ஆப்பிரிக்கக் காடோ முன்பின் தெரியாத, எங்கிருந்தோ, எங்கோ பயணப்பட்டுக் கொண்டிருக்கும் வழிபோக்கருக்கு விருந்து வைப்பதில் மனிதநேயம் முக்கியக் காரணமாய் இருக்கிறது என்பதை இக்கதை வெளிப்படுத்துகிறது.

குறிப்புகள்

1. மகாராஜாவின் ரயில் வண்டி, காலச்சுவடு பதிப்பகம், ப. 46
2. மேலது - ப. 47
3. மேலது - ப. 47
4. மேலது - ப. 47
5. மேலது - ப. 47
6. மேலது - ப. 49
7. மேலது - ப. 49
8. மேலது - ப. 49
9. மேலது - ப. 49
10. மேலது - ப. 49
11. மேலது - ப. 50-51
12. மேலது - ப. 51
13. மேலது - ப. 51 - 52
14. மேலது - ப. 52
15. மேலது - ப. 52
16. மேலது - ப. 52
17. மேலது - ப. 54
18. மேலது - ப. 54
19. சிலப்பதிகாரம் (புகார்க் காண்டம்) விளக்க உரை, பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார், சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் வருடம் 1972 பக்கம்:

******

கணினி மொழியியலாய்வில் மனிதநேயம்

முனைவர் கு. சுப்பையா பிள்ளை
முதுநிலை ஆராய்ச்சியாளர்

மானிடப் பிறவி நேர்மறைப் பண்புகளையும் எதிர்மறைப் பண்புகளையும் ஒருங்கே கலந்து பெற்ற பிறவி. அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது எனத் தொடங்கி ஒவ்வொரு நிலையையும் மனத்தில் ஆழப்பதிய வைக்கிறார் தமிழ் மூதாட்டி. தனியொருவருக்கு ஏற்படும் துன்பத்தைக்கண்டு வருந்தும் மனநிலையையும் மகிழும் மனநிலையையும் பிறருக்கு எவ்வாறு துன்பம் கொடுக்கலாம் என வழிமுறைகளைத் தேடும் மனநிலையையும் (Motive hunting of motiveless malignity) தனக்கு மறுக்கப்பட்ட மகிழ்ச்சி பிறருக்கும் மறுக்கப்படவேண்டும் என்ற பண்பு நிலைகளையும் கலந்திருக்கப் பெற்றவன் மனிதன். இப்பண்புநிலைகள் ஏன் ஒரு மனிதனிடம் தோன்றுகின்றன என்பது குறித்து அறிய உளவியல் ஆய்வு தேவைப்படுகிறது. இந்தப் பண்புநிலைகளைக் கடந்து ஒருவித மனப்பக்குவத்தைப் பெற்று அருள் நிலையை அடையும்போதுதான் யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனக்கூறும் திருமந்திரக் கருத்தும் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே எனக்கூறும் தாயுமானவர் கருத்தும் வாடிய பயிரைக்கண்ட போதெலாம் வாடினேன் என்ற வள்ளலார் மனநிலையும் மனிதனால் அறிந்து கொள்ளப்பட்டு அவனை நெகிழவைக்கிறது. இத்தொடர்கள் உயர்திணை, அஃறிணை எனப் பகுத்துப்பாராமல் ஒட்டுமொத்தமான மனித நேயத்தை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. இவை உணர்த்தும் மனிதநேயப் பண்புகளுக்கு ஒத்த பண்பைக் கணினியியலில் **User friendly (System)** என்ற தொடர் வெளிப்படுத்துகிறது. தக்கார் தகவிலார் என்றும் தொடர்புடையவர் தொடர்பற்றவர் என்றும் வேறுபாடு கருதாது கணினியைப் பயன்படுத்துவோர் அனைவரும் எளிமையான வழிமுறைகளைப் பின்பற்றிப் பயன் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் இத்தொடர் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மனிதநேயம் என்ற சொல்லுக்கு நிகரான ஆங்கிலச் சொல்லாக Humanism என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. என்சைக்கிளோப்பிடியா பிரிடானிக்கா, The attitude of mind which attaches primary importance to man and his faculties affairs, temporal aspiration and


well being என விளக்கமளிக்கிறது. Encyclopaedia Britanicca (1972 : Vol : 11. p.825)

ஒரு துறை பிறதுறையோடு கோட்பாட்டுப் பரிமாற்றம் செய்து கொள்ளும் நிலையில் பல்துறைத் தொடர்புடைய ஆராய்ச்சி ஆக்கம் பெறுகின்றது. இந்நிலையில் தொழிநுட்ப வளர்ச்சியின் அடிப்படையில் ஐந்தாம் தலைமுறையில் தவழ்ந்து கொண்டிருக்கும் மின்னணு இயந்திரமான கணினி எல்லாத்துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு எங்கும் எதிலும் கணினி என நம் வாழ்வில் ஓர் அங்கமாக இருந்து வருகிறது. கணிதம் தொடர்பான செயலாக்கங்களுக்காக (Process) வடிவமைக்கப்பட்ட கணினியை மனிதமொழியான இயற்கை மொழியை ஆராய்ச்சி செய்வதில் பயன்படுத்தலாயினர். கணினியியலில், செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) என்ற பிரிவில் ஆய்வு செய்பவர்களும், மொழியியலாளர்களும் (Linguists) இவ்வாராய்ச்சியில் அதிக ஆர்வம் காட்டினர். இதன்விளைாகக் கணினி மொழியியல்/இயற்கை மொழியாய்வு (Computational Linguistics / Natural Language Processing - NLP) என்ற பயனாக்க மொழியியல் பிரிவு வளரத் தொடங்கியது.

கணினியியலில் அமைப்பு (System) என்ற சொல் பொருள் மயக்கத்துடன் சூழலுக்குத் தக்கவாறு இரு நிலைகளில் பயன்படுத்தப்படுகின்றது. இச்சொல் திட அமைப்பான (Concrete System) வன்பொருளையும் (Hardware), நுண் அமைப்பான (Abstract System) மென்பொருளையும் (Software) உணர்த்தும் வகையில் பயன்படுத்தப்படுகின்றது. வன்பொருளை உணர்த்தும் நிலையில் கணினியையும் (Computer) அதனைச் சார்ந்த துணைக்கருவிகள் (Peripherals) அனைத்தையும் குறிப்பிடுகின்றது. எனவே, இச்சொல் வன்பொருள் பொறியியல் தொழில் நுட்பத்தைச் (Hardware Engineering Technology) சார்ந்தது எனலாம். நுண் அமைப்பான மென்பொருளை 1. இயந்திர மென்பொருள் (System software) 2. பயன்பாட்டு மென்பொருள் (Application Software) என இருவகையாகப் பகுக்கலாம். இயந்திர மென்பொருள் கணினி உற்பத்தியாளர்களால் (Computer Manufacturer) வடிவமைக்கப்பட்டு, கணினியைப் பயன்படுத்த ஏதுவாக அமையும் தொழில்நுட்ப உத்திகளையும் (Technique) பணித்தளத்தையும் (Platform) உள்ளடக்கி இருக்கும்.

பயன்பாட்டு மென்பொருள் எனப்படுவது கணினியைப் பயன்படுத்துவோர், தங்கள் தேவைக்கேற்ப வடிவமைக்கப்படும்

வழியமைப்பைக் (Program) குறிப்பிடுவதாகும். சான்றாக, அலுவலக ஊதியம் வழங்கல் தொடர்பான மென்பொருள் (Payroll software), நூலகங்களில் புத்தகங்கள் கொடுக்கல், வாங்கல் தொடர்பான தானியக்க மென்பொருள் (Library Automation Software), கணினி மொழியியலில் ஒரு வினையடியை உள்ளீடு செய்து அவ்வினையடியின் பல்வேறு இலக்கணத் திரிவுகளைப் (Conjugation) பெற வடிவமைக்கப்பட்ட மென்பொருள் (Conjugation software) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதுவரை விளக்கப்பட்ட அமைப்பு தொடர்பான செய்திகளைக் கீழ்க்கண்ட கிளைப்படம் தெளிவுபடுத்தும்.



வன்பொருள் மற்றும் இயந்திர மென்பொருள் அமைப்புகள் முழுமையாகப் பொறியியல் புலப் (Engineering) பிரிவுகளைச் சார்ந்தவை. ஆனால் பயன்பாட்டு மென்பொருள் அவ்வாறு முழுமையாகப் பொறியியல் புலத்தைச் சாராது. பயன்பாட்டு மென்பொருள் வடிவமைப்பு எனக் குறிப்பிடுகையில் அது கோப்பாக (Directory) உருவாக்கம், உள்ளீடு (input), தரவுமைய வடிவமைப்பு (Database design), தரவுமைய மேலாண்மை (Data base management), வழியமைப்பு வடிவமைத்தல் (Programming), வெளியீடு (Output) என்ற பல நிலைகளை உள்ளடக்கி இருக்கும். இக்கட்டுரை வழியமைப்பின் மேன்மையைக் குறிப்பிடும் User friendly (System) என்ற தொடர் உணர்த்தும் மனிதநேயப் பண்பை விளக்க முற்படுகிறது.

கணினியியலில் User என்ற சொல் 'பயனாளர்' (மணவை முஸ்தபா 1999 : 704) என்றும் 'பயனீட்டாளர்' (சுஜாதா 1998 :179) என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மணவை முஸ்தபா, சிக்கலைத் தீர்த்தல் அல்லது தகவல் கையாளலுக்குக் கணினியைப் பயன்படுத்துவோர் அல்லது சொந்தமாகக் கணினி வைத்திருப்பவர் கணினி அமைப்பின் பணிகள் தேவைப்படுவோர் எனக்கூறுகிறார் (மணவை முஸ்தபா 1998 : 704) User என்ற சொல்லை உணர்த்தும் பிறிதொரு சொல் end user (Spencer 1994 : 107).

மணவை முஸ்தபா, User friendly (System) என்ற தொடர் 'பயனாளரின் தோழமையான' (அமைப்பு) எனப்பொருள் கொள்ளப்பட்டு எளிதாகப் பயன்படுத்துவதற்கேற்ப வடிவமைக்கப் பட்ட மென்பொருள் / வன்பொருள் குறித்துப் பயன்படுத்தும் சொல். சிக்கலான நடைமுறைகளைப் பயனாளரின் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியதில்லை. பட்டறிவு இல்லாதவர்களும் பயன்படுத்த மிக எளிது எனக் கூறுகிறார் (மணவை முஸ்தபா 1999 : 705).

சோண், User friendly describes Computer hardware or software that is easy to use. User friendly Hardware is simple to setup and run. Software that is user friendly is easy to learn and has good manual and on screen help எனக் கூறுகிறார் (Chon etal 1995 : 151). ஸ்பென்சர் The term applied to software and or hardware that has been designed to be easily used without the user having to remeber Complex procedures. Very easy for the inexperienced person to use எனக் குறிப்பிடுகிறார் (Spencer 1994 : 303).

இந்த விளக்கங்களிலிருந்து User friendly system என்ற தொடர் வன்பொருள் தொழில் நுட்பத்திலும் மென்பொருள் தொழில்நுட்பத்திலும் பயன்படுத்தப்படும் மனிதநேயத்தை உணர்த்தும் தொடராகக் கொள்ளலாம். நீரோட்டம் போன்ற வன், மென்பொருள் அமைப்புகளை உருவாக்கிக் கணினியைப் பயன்படுத்தும் பயனாளர் (End user) எந்தச் சிக்கலையும் சந்திக்காமல் பணியைத் தொடர்வதற்கான அமைப்பை உருவாக்கவேண்டும். பிற வழியமைப்பாளர்கள் (Programmer) குறிப்பிட்ட வழியமைப்பில் பின்பற்றப்பட்டுள்ள உத்திகளைக் காணவும் இவ்வுத்திகளைவிட மேலான உத்திகளைப் பயன்படுத்தி வழியமைப்பிற்கு மெருகு (Program Sophistication) சேர்க்கவும் செய்யலாம்.

கணினி தரவுகளின் (Data) அடிப்படையில் செயலாக்கம் செய்து, தகவலை (Information) வெளியீடாகத் தருகிறது. தரவு 1. எண்தரவு (Numeric Data), 2. எழுத்துத்தரவு (Character type data) என இருவகைப்படும். எவ்வகையான தரவாக இருந்தாலும் அத்தரவுகளின் அடிப்படையில் தகவலைப் பயன்படுத்துவோர்க்கு வழங்க, கணினிக்கும் மனிதனுக்குமிடையே இயங்க ஓர் இடை இணைப்புத் (interface) தேவை. வில்கின்சன், தகவல் அமைப்பு (Information system) பயனாளரோடு தகவல் பரிமாற்றம் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே பயனாளருக்கும் கணினிக்கும் இடையே ஓர் இடை இணைப்புத் தேவைப்படுகிறது. இந்த இடை இணைப்பை மனிதனுக்கும் இயந்திரத்திற்கும் இடையே உள்ள இடை இணைப்பு (Man machine interface / human computer interface) என்பர் (Wilkinson 1987 : 291).

இந்த இடை இணைப்பு ஒரு வழியமைப்பாக இருக்கும் நிலையில் அதனை வடிவமைக்கக் (Design) குறிப்பிட்ட கணினி மொழியில் (Computer Language) புலமை தேவை. தற்சமயம் பயன்பாட்டிலிருக்கும் உயர்நிலைக் கணினி வழியமைப்பு மொழி (High level Computer Programming Language) இயந்திர மொழி (Machine Language) எனப்படும் கீழ்நிலை மொழியையும் (Low level Language) இதனைத் தொடர்ந்து குறியீட்டு மொழியையும் (Assembly Language) கடந்து பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. சான்றாக, BASIC, COBOL, PASCAL, C.C++ போன்ற மொழிகளைக் குறிப்பிடலாம். மனித மொழியான இயற்கை மொழி (Natural Language) ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அமைப்பு இருப்பதுபோல், கணினி மொழிகள் ஒவ்வொன்றிற்கும் அம்மொழிக்கே உரித்தான முதன்மைச் சொற்கள் (Reserved words) தொடரமைப்பு விதிகள் (Syntactic rules) உண்டு. எந்த மொழியில் வழியமைப்பு வடிவமைக்க வேண்டுமென்றாலும் அம்மொழியின் அமைப்புகளை நன்கு அறிந்திருக்க வேண்டுவது மிகவும் தேவையானது. மென்பொருள் பொறியியல் (Software Engineering) வழியமைப்பு வடிவமைக்கப் பயன்படும் கருவிகளையும் (Tool) உத்திகளையும் (Technique) உள்ளடக்கியது. வில்கின்சன், உள்ளீடாகக் கொடுக்கும் தரவுகளுக்கு உயிரோட்டம் கொடுப்பது வழியமைப்பு. இது தரவுகளின் அடிப்படையில் பயன்படுத்துவோர் எதிர்பார்க்கும் வடிவில் தகவலைத் தரவேண்டும். அவ்வாறு தகவலை வழங்காத நிலையில் வெறும் தரவுகளால் எந்தப்பயனுமில்லை என வழியமைப்பின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறார் (Wilkinson 1987 : 225).

ஒரு வழியமைப்பு, பயனாளரின் தோழமையான அமைப்பாக அமைய எடுத்துக்கொண்ட ஆய்வின் பொருள்குறித்து மயக்கமற வரையறை (Defining the Problem) செய்ய வேண்டும். தீர்வுகாண உதவும் உத்திகளை எந்தெந்த நிலைகளில் பயன்படுத்தவேண்டும் (Outline the Solution) என ஒரு முன்வரைவுத் திட்டமிட வேண்டும். வழியமைப்புப் படிப்படியாக எவ்வாறு செயலாக்கம் செய்யவேண்டும் என்பது குறித்த வழிமுறை வரைவுகளை (Algorithm) வடிவமைக்க வேண்டும். இவ்வழிமுறைகள் நேர்த்தியாகவும் துல்லியமாகவும் இருந்தால்தான் வெளியிடும் தகவலும் நேர்த்தியாக இருக்கும். எனவே இந்நிலைகளில் நன்கு ஆய்வு செய்த பின்னரே வழியமைப்பை வடிவமைக்க முயலவேண்டும். இந்த வழிமுறைகளைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்படும் வழியமைப்புகளில் ஆவணப்படுத்தல் (Documentation) மிக இன்றியமையாத பண்பாகும். ஆவணப்படுத்தலைப் பயனாளர் நிலையில் ஆவணப்படுத்தல் (User level Documentation) என்றும் தொழில்நுட்ப நிலையில் ஆவணப்படுத்தல் (Technical documentation) என்றும் வகைப்படுத்தலாம் (Schneider 1996 : 226). இந்த இரு ஆவணப்படுத்தும் உத்திகளும் பயனாளரின் தோழமையான அமைப்பை உருவாக்க உதவும். ஆவணப்படுத்தலின் முக்கிய நோக்கம் கருத்துப் பரிமாற்றமாகும். இக்கருத்துப் பரிமாற்றம் ஆய்வாளருக்கும் பயனாளருக்கும் இடையேயும் ஆய்வாளருக்கும் வழியமைப்பாளருக்கும், இடையேயும் நடைபெறும் (Davis *1986 : 206*).

பயனாளர் நிலையில் ஆவணப்படுத்தல் (User level documentation)

வழியமைப்பை வடிவமைக்கத் தெரியாதவர்கள் கூடப் பயன்படுத்த ஏதுவாக வடிவமைக்கப்படும் வழியமைப்பு எப்படி இருக்க வேண்டுமென்றும் அதில் பயனாளரின் தோழமையான பண்புகள் எவ்வாறு மனித நேயத்தோடு விளக்கப்படவேண்டும் என்றும் காண்போம். குறிப்பிட்ட நோக்கத்தில் வடிவமைக்கப்பட்ட வழியமைப்பு என்னென்ன பணிகளைச் செய்யும் வல்லமையுடையது என்பதைப் படிப்படியாக ஆவணப்படுத்த வேண்டும். அவ்வாறு ஆவணப்படுத்தும் நிலையில் பயனாளர் அவ்விளக்கங்களைப் படித்துப் புரிந்து கொள்வர். சான்றாக, உள்ளீடு செய்த வினையடி எழுவாயான, மூவிட மாற்றுப்பெயர்களை (Pronouns) ஏற்கும்போது எவ்வாறு முக்காலத்திற்குரிய தனிச் சொற்றொடர்களைப் (Simple sentence) படிப்படியாக உருவாக்குகின்றது என்பதைக் குறிப்பிட வேண்டும் (சுப்பையா பிள்ளை 1998 : 11).

வழியமைப்பு செயலாக்கம் செய்யத் தரவுகள் தேவை என்றும் தரவுகளின் அடிப்படையில் தான் தகவல் பெறப்படும் என்றும் கண்டோம். குறிப்பிட்ட ஒரு வழியமைப்பின் செயலாக்கத்திற்கு எவ்வகையான தரவுகள் உள்ளீடு செய்ய வேண்டும் என்பதை ஆவணப்படுத்துகையில் குறிப்பிடவேண்டும். அவ்வாறு குறிப்பிடும் நிலையில் வழியமைப்புத் தோழமையான அமைப்பாக அமையும். சான்றாக, இராகவ ஐயங்கார் ஏற்படுத்திய 12 வகை வினைவகைகளையும் ஒழிபுகளையும் தனித்தனியாக ஏற்றுக்கொண்டு செயலாக்கம் செய்யும் வழியமைப்புகளை வடிவமைக்க வேண்டும்.

கணினியின் இயக்கம்



என்ற அமைப்பில் இருக்கும். எந்த வகையான தரவுகளை உள்ளீடு செய்ய வேண்டும் என்றும் செயலாக்கம் எவ்வாறு செய்யவேண்டுமென்றும் பெறப்படும் வெளியீடு எப்படி இருக்கவேண்டுமென்றும் ஆவணப்படுத்த வேண்டும். செய் என்ற வினை வகைப்பாட்டை ஏற்றுக் கொள்ள, வடிவமைக்கப்பட்ட வழியமைப்பின் செயலாக்கத்திற்கு பார் - வகைப்பாட்டைச் சார்ந்த வினையடிகளை உள்ளீடு செய்யக்கூடாது.

எந்தெந்தக் கட்டளைகளைப் பயன்படுத்திச் செயலாக்கம் செய்யவேண்டும் என்பதை ஆவணப்படுத்த வேண்டும். நிரல்படுத்தப்பட்ட இக்கட்டளை படிப்படியாகச் செயலாக்கம் செய்யப் பணித்து, வெளியீட்டைத் திரைப்படியாகவோ (Soft Copy) அல்லது அச்சுப்படியாகவோ (Card Copy) வெளியிடச் செய்யும்.

வழியமைப்பில் தேவையான பகுதிகளில் கணினிக்கும் பயனாளருக்குமிடையே ஒருவகை உரையாடல் உறவை (interaction) ஏற்படுத்தும் வண்ணம் அமைத்துக்கொள்ள வேண்டும். கணினி வினா கேட்பது போலவும் அவ்வினாவுக்குப் பயன்படுத்துவோர் பதிலளிப்பது போலவும் அமைத்தால், அது பயனாளருக்குத் தோழமையான அணுக்கத்தை ஏற்படுத்தும். உரையாடல் அமைப்பைக் கொண்ட வழியமைப்பு பயனாளரிடம் தரவுகளை உள்ளீடு செய்யக் கேட்கும். அவ்வாறு உள்ளீடு செய்யும் நிலையில் அடுத்தடுத்து என்னென்ன செய்யவேண்டும் என்பதைப் படிப்படியாக விளக்கவேண்டும் என்பர் (Crumblish 1995 : 96).

எல்லாச் செயல்பாடுகளுக்கும் குறிப்பிட்ட ஓர் எல்லை உண்டு. அதுபோல் எல்லா வழியமைப்பிற்கும் அவ்வழியமைப்பிற்கே உரித்தான செயல்திறன் மற்றும் எல்லையைத் (Performance capabilities and limitation) தெளிவாகக் குறிப்பிடவேண்டும். சான்றாக, செய்யென்எச்ச (Infinitive) வினைத் திரிபை மட்டுமே தகவலாக வெளியிட வடிவமைக்கப்பட்ட வழியமைப்பின் பகுதியில் (Module) பிற இலக்கணத்திரிபுகளைத் தகவலாகப் பெற இயலாது. வழியமைப்பை அதில் குறிப்பிட்டுள்ள எல்லையைக் கடந்து பயன்படுத்துவதில் எந்தப் பயனும் இருக்காது. ஒருக்கால் எல்லையைக் கடந்து பயன்படுத்தும் நிலையில் ஒழுங்கற்ற தகவலைக்கூட வெளியிடலாம்.

தொழில்நுட்ப நிலையில் ஆவணப்படுத்தல் (Technical documentation)

முறையாக வழியமைப்பை வடிவமைப்பதில் நல்ல புலமை பெற்றவர்களால் மட்டுமே கையாளப்படும் வழிமுறைகளை உள்ளடக்கிய நிலையைத் தொழில்நுட்ப நிலையில் ஆவணப்படுத்தல் எனலாம். சான்றாக, வழியமைப்பின் குறிப்பிட்ட பகுதியில் ஏதேனும் மாற்றம் செய்யவேண்டுமாயின் அம்மாற்றத்தைத் தனியாகவோ அல்லது ஏற்கெனவே வடிவமைக்கப்பட்ட வழியமைப்பின் உரியபகுதியில் எந்த நிலையில் இணைக்கவேண்டும் என்பதையோ ஆவணப்படுத்த வேண்டும். அவ்வாறு ஆவணப்படுத்தும் நிலையில் குறிப்பிட்ட பகுதியில் எளிதாகப் புதிய வழியமைப்புப் பகுதியை இணைக்கவோ அல்லது துணை வழியமைப்பாக (Sub Program) வடிவமைத்து, முதன்மை வழியமைப்பில் (Main Program) இணைக்கவோ முடியும். ஏற்கெனவே வடிவமைக்கப்பட்ட வழியமைப்புடன் இணைத்து மெருகேற்றலாம். குறிப்பிட்ட ஒரு வழியமைப்பைப் பல பகுதிகளாகப் (Modules) பகுக்கும் நிலையில் பல ஒழுங்குமுறைப் பகுதிகளைப் (Procedural Compound) பெறலாம். எனவே ஒவ்வொரு பகுதிக்கும் விளக்கக் குறிப்பை (Comment) இடையிடையே இடையீடு செய்யவேண்டும்.

வழியமைப்பு சிறந்த கருவியாகவும் பயனாளனின் தோழமையான அமைப்பாகவும் பயன்படவேண்டுமாயின், பயனாளரின் நிலையில் ஆவணப்படுத்தலும் தொழில் நுட்ப நிலையில் ஆவணப்படுத்தலும் மிகவும் இன்றியமையாதன. மேன்மையான ஆளுமையுள்ள வழியமைப்பை வடிவமைத்தாலும் அந்த வழியமைப்பு என்னென்ன தரவுகளை ஏற்றுக்கொள்ளும், என்னென்ன செயலாக்கங்களைச் செய்யும் என்ற பொதுநிலை

விளக்கங்களை ஆவணப்படுத்தவில்லையெனில் அவ்வழியமைப்பு பயனாளரின் தோழமையான அமைப்பாக அமையாது. User friendly (System) என்ற தொடருக்கு எதிர் மறையான தொடராக User hostile (System) என்ற தொடரும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இத்தொடர் வழியமைப்பின் தோழமையற்ற பண்புகளையும் மனிதநேயமற்ற நிலையையும் வெளிப்படுத்தும்.

******

வழியமைப்பாளரின் மனிதநேயம்

முனைவர் கு. சுப்பையா பிள்ளை
முதுநிலை ஆய்ச்சியாளர்

கணிதம் தொடர்பான அறிவியல் பாடங்களின் செயலாக்கத்திற்குப் (Process) பெரிதும் பயன்படுத்தப்பட்டு வரும் கணினியை மொழியாய்வில் பயன்படுத்தலாம் என்ற எண்ணம் கணினி அறிவியலில் குறிப்பாகச் செயற்கை நுண்ணறிவுப் (Artificial Intelligence) பிரிவைச் சார்ந்தவர்களிடம் தோன்றியது. இதன் விளைவாகக் கணினி மொழியியல் / இயற்கை மொழியாய்வு (Computational Linguistics / Natural Language Processing - NLP) என்ற ஒரு பயனாக்க மொழியியல் (Applied Linguistics) பிரிவு வளரத் தொடங்கியது. இயற்கை மொழிக் கூறுகளான ஒலி (Phone) யில் தொடங்கிப் பொருண்மையியல் (Semantics) ஈறாக எல்லா மொழியாய்வுப் பிரிவுகளிலும் கணினியைப் பயன்படுத்துகின்றனர். இயற்கை மொழியாய்வுக்காக வடிவமைக்கப்படும் வழியமைப்புகளை (Program) இயற்கை மொழியாய்வு அமைப்புகள் (Natural Language Processing System - NLPS) என்பர். (Bharathi 1995:4) இக்கட்டுரை இயற்கை மொழியாய்வு மேற்கொள்ள விரும்பும் கணினி மொழியியலாளர்கள் தாங்கள் பயன்படுத்தும் உத்திகளைப் (Techniques) பிறர் இடர்ப்பாடின்றிப் புரிந்து கொள்ளும் வகையில் எவ்வாறு மனிதநேய உணர்வோடு தெரிவு செய்கின்றனர் என்பதை விளக்கும் நோக்கமாகக் கொண்டு, குறிப்பாகத் தரவுகளைப் (Data) பதிவு செய்தல் (Recording), வழியமைப்பு வடிவமைத்தல் ஆகிய இருநிலைகளில் காணப்படும் வழியமைப்பாளரின் மனிதநேய உணர்வுகள் குறித்து விளக்குகிறது. தொடர்புடையவர் தொடர்பற்றவர் எனவேறுபாடு கருதாது கணினியைப் பயன்படுத்தும் அனைவரும் எளிமையான வழிமுறைகளைப் பின்பற்றிப் பயன்பெறவேண்டும் என்ற நோக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் எவ்வாறு உத்திகள் கையாளப்பட வேண்டுமென்பதை இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

தரவு (Data)

கணினி தரவுகளின் அடிப்படையில் செயலாக்கம் செய்து தகவலை (Information) வெளியீடாகத் (Input) தரும் ஒரு மின்னணு இயந்திரம். எனவே, இதனை மின்னணுத் தரவு செயலாக்க இயந்திரம்

(Electronics Data Processing Machine - EDPM) என்கிறோம். தரவுகள் மதிப்பளவுகளாக (Quantities) இருக்கின்றன. கணினி இவற்றை ஈரிலக்க எண்களாக (Binary Digits) மாற்றி நினைவகத்தில் (Memory) திரட்டி வைத்துக் கொண்டு அவற்றின் அடிப்படையில் செயலாக்கம் செய்து, உரிய தகவலை, நேர்த்தியான வெளியீடாக வழங்குகிறது (Kenning 1983: 56). தரவுகளின் வகைகள், ஆராய்ச்சி மேற்கொள்ளவிருக்கும் தலைப்பைப் பொறுத்திருக்கும். எவ்வகையான ஆராய்ச்சியாக இருந்தாலும், அவ்வாராய்ச்சிக்குரிய தரவுகளைக் கீழ்க்கண்டவாறு இருவகைப்படுத்தலாம்.

1. எண்தரவு (Numeric Data)
2. எழுத்துத்தரவு (Alphanumeric Data)

எண் தரவுகள் எண்களாலானவை (Numbers) எழுத்துத்தரவுகள் அகர எழுத்துகளாலோ (Alphabets) அல்லது அகர எழுத்துகளுடன் எண் எழுத்துக்களாலோ ஆனவை (Kumar 1988: 39). எழுத்துத்தரவை உரைத்தரவு (Textual Data) என்றும் கூறலாம்.

இயற்கை மொழியாய்வு மேற்கொள்ளும் கணினி மொழியியலாளர்கள், தங்கள் ஆய்வுக்குத் தேவையான தரவுகளைப் பல்வேறு எழுத்து மற்றும் பேச்சு ஊடகங்களிலிருந்து திரட்டுகின்றனர். மொழியியல் துறை சார்ந்த தரவுகள் பெரும்பாலும் உரைத்தரவுகளாக இருப்பதால் இவற்றை எழுத்துத்தரவு வகையில் வகைப்படுத்தலாம். கணினி அறிவியலில் எழுத்துக் கோர்வைச் செயல்பாடுகள் (String functions) என்ற பல செயல்பாடுகள் உள்ளன. இவற்றை உயர்நிலை மொழிகளில் (High level Languages) காணலாம் (Davis. 1969: 283).

கணினியின் செயலாக்கத்திற்குத் தேவையான தரவுகள் மூலத்தரவுகளிலிருந்து (Raw Data) பிரித்தெடுக்கும் நிலையில் அவை வகைப்பாடு செய்த தரவுகளாக (Classified Data) மாறுகின்றன. வகைப்பாடு செய்த தரவுகளைக் கணினியில் உள்ளீடு (Input) செய்து திரட்டக் கோப்புகள் உருவாக்கப்படுகின்றன. இக்கோப்புகள் தகவலை மீட்டுப் பெற (Information Retrieval) உறுதுணையாக இருக்கின்றன. தரவுகள் நேர்த்தியாக இருந்தால் செயலாக்கத்திற்குப் பின் பெறப்படும் தகவல் நேர்த்தியாக இருக்கும் என்பது பொதுக்கருத்து. வகைப்பாடு செய்த தரவுகள் ஒத்த பண்புடையவையாக இருக்கின்றன. இவற்றைக் கணினியில் உள்ளீடு செய்ய வசதியாகக் கோப்பை உருவாக்க (File Creation) பெயர்த் தெரிவு செய்ய வேண்டும். எட்டு எழுத்துகளுக்கு மிகாமல் வரும் பெயரை, கோப்புப் பெயராகக் கணினி ஏற்றுக்

கொள்ளும். எனவே, சுருக்கமாகவும் கோப்புகளில் எவ்வகையான தரவுகளை உள்ளீடு செய்ய நினைக்கிறோமோ அத்தரவுகளின் தன்மையை வெளிப்படுத்தும் வண்ணம் ஒரு பெயரைத் தெரிவு செய்தால், யார் வேண்டுமானாலும் அக்கோப்பை அணுகி அதில் உள்ளீடு செய்திருக்கின்ற தரவுகளைக் காணவோ அல்லது படி எடுத்துத் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் ஆய்வுக்கு மீண்டும் பயன்படுத்தவோ ஏதுவாக இருக்கும். சான்றாக Ceyvinai என்ற பெயரைத் தெரிவு செய்து அதில் 'செய்வினை' வகைப்பாட்டைச் சார்ந்த வினையடிகளை உள்ளீடு செய்வதைக் கூறலாம். கணினியியலில் தரவுகளைப் பிறர் அணுகா வண்ணம் தொடர்பற்ற பெயர்களைப் பயன்படுத்தி மறைத்து வைக்கும் நிலை இருந்து வருகிறது. இத்தன்மையை விடுத்து யார் வேண்டுமானாலும் அணுகிப் பயன் பெறும் வண்ணம் வடிவமைக்கும் உத்தி மனிதநேயத்தின் பாற்பட்டது. கோப்புக்கு ஏற்புடைய பெயர் சூட்டும் இந்த உத்தியைப் புற ஆவணப்படுத்தல் (External Documentaion) எனலாம்.

ஏற்புடைய பெயர் சூட்டிக் கோப்பை உருவாக்கிய பின்னரே தரவுகளை உள்ளீடு செய்ய முடியும். எனவே, அடுத்த நிலையாகக் கோப்பின் அமைப்பு முறையில் கருத்தூன்றுவர். கோப்பு, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பதிவேடுகளால் (Record) ஆனது. பதிவேடு புலங்களாலானது (Field). தரவுகளைப் புலங்களில் உள்ளீடு செய்வதைப் பதிவு செய்தல் (Recording) என்பர். பதிவேட்டிலுள்ள புலங்களில் தரவுகளை உள்ளீடுசெய்து ஒவ்வொரு பதிவேடாக நிறைவு செய்யும் நிலையில் கோப்பு, தரவுதளமாக (Database) மாறுகிறது. எனவே, கோப்பு, தரவுதளம் என்ற சொற்கள் ஒரே பொருளை உணர்த்தும் சொற்களாகக் கொள்ளலாம். கோப்புகளில் உள்ள பதிவேட்டுப் புலங்களுக்குப் பெயர்த் (Field name) தெரிவு செய்வது இரண்டாம் கட்டப்பணியாகும். கோப்புகளை உருவாக்கிப் பெயர்சூட்டிப் பின்னர் பதிவேட்டிலுள்ள புலங்களுக்குப் பெயர் சூட்டுவது உள்ளடக்கிய நிலையைத் தரவுமைய வடிவமைப்பு (Database Design) என்பர் (Simpson. 1986: 53).

தரவுகளின் தன்மைக்கேற்பக் கோப்புப் பெயர் தெரிவு செய்ததுபோல பதிவேட்டின் புலங்களில் உள்ளீடு செய்யவிருக்கும் தரவுகளின் தன்மைக்கேற்ப, புலங்களுக்குப் பெயர்த் தெரிவு செய்ய வேண்டும். சான்றாக, RT, TM, PT என்ற சுருக்கப் பெயர்களைத் தெரிவுசெய்தால் இவை முறையே வேர்ச்சொல் (Root - RT), காலஇடைநிலை (Tensemarker - TM), மாற்று பெயர் விகுதி (Pronominal Termination - PT) போன்ற மொழிக்கூறுகளை உள்ளீடு

செய்யும் புலங்கள் என அறிந்து கொள்ளலாம். சான்றாக, கீழ்க்கண்ட பதிவேட்டின் அமைப்பைக் காணலாம்.

Structure of Data base: D: ceyvinai.dbf

Number of data records: 0

Data of Last update: 17.10.03

Field	Field name	Type	Width	Dec.
1	RT	Character	9	
2	TM	Character	6	
3	PT	Character	7	
	Total		24	

RT [redacted]

TM [redacted]

PT [redacted]

கோப்பின் பெயரைப் பார்த்து அதில் உள்ளீடு செய்திருக்கும் தரவுகள் குறிப்பிட்ட வகைத்தரவுகள் என உணர முடிவதுபோல, பதிவேட்டுப்புலத்தின் சுருக்கப் பெயர்களிலிருந்து இப்புலங்களில் எவ்வகையான தரவுகள் உள்ளீடு செய்யப்பட்டிருக்கின்றன என உணர முடியும். இவ்வாறு உணரும் தன்மையில் சுருக்கப் பெயர்களைப் பயன்படுத்துவதை அக ஆவணப்படுத்தல் (Internal documentation) எனலாம்.

மறைமுகமான, தொடர்பற்ற சுருக்கப் பெயர்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக நேர்முகமான தொடர்புள்ள சுருக்கப் பெயர்களைத் தெரிவு செய்து எல்லோரும் பயன் பெறும் நோக்கத்தில் வடிவமைப்பது மனிதநேயத்தின் பாற்பட்டது.

உயர்நிலை மொழிகள் (High Level Languages)

மின்னணு இயந்திரமான கணினிக்குத் தெரிந்த ஒரே மொழி இயந்திர மொழி (Machine Language). இம்மொழியைக் கீழ்நிலை மொழி (Low Level Language) என்றும் கூறுவர். இது ஈரிலக்க எண்களாலானது என்பதால் எல்லோராலும் கற்றுக் கொள்வது கடினம் எனக் கணினி பொறியியலாளர்கள் உணர்ந்ததன் விளைவாகக்

கணினியையும் அதனைப் பயன்படுத்த விரும்புபவர்களுக்குமிடையே ஒரு பாலமாக அமையும் எளிய முறை கணினி வழியமைப்பு மொழிகளை வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர் (Butler 1985: 10) இம்முயற்சியின் வெளிப்பாடாக உயர்நிலைக் கணினி வழியமைப்பு மொழிகள் (High Level Computers Programming Languages) தோன்றலாயின. கணினியைப் பயன்படுத்த மனிதனால் உருவாக்கப்பட்ட இந்த உயர்நிலை மொழிகள் பெரும்பாலும் ஆங்கிலச் சொற்களாலானவை. இம்மொழிகளைப் பொதுநிலை மொழிகள் (General Languages) என்றும் செயற்கை மொழிகள் (Artificial Language) என்றும் மனிதனின் பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்ட மொழிகள் (Constructed Language) என்றும் கூறுவர் (Harris 1985: 3.) இவை மனிதனால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பக் கருவிகளோடு தகவல் பரிமாறிக் கொள்ள வடிவமைக்கப்பட்ட மொழிகளாகும்.

கணினியியலில் உள்ளீடாகக் (input) கொடுத்த தரவுகளுக்கும் எதிர்பார்த்த வடிவில் வெளியீடாகப் பெறும் தகவலுக்கும் இடையே பல்வேறு செயல்பாடுகள் நிகழ்கின்றன. இச்செயல்பாடுகளை நிகழ்த்துவது செயலாக்கப் பகுதியை உறைவிடமாகக் கொண்ட வழியமைப்புகள். கணினியியலில் வழியமைப்பு உருவாக்கம் என்பது மிகவும் இன்றியமையாத பகுதியாகும். வல்லமையான (Robust) வழியமைப்பை வடிவமைப்பது மிகவும் கடினமான பணி என கிரிஸ்மேன் குறிப்பிடுகிறார். (Grishman: 1986: 7) வழியமைப்பு மற்றும் வழியமைப்புத் தொகுதியை (Packages), மென்பொருள், (Software) என்கிறோம். இம்மென் பொருள்களை இருவகையாகப் பகுக்கலாம்.

1. இயந்திர மென்பொருள் (System Software)
2. பயன்பாட்டு மென்பொருள் (Application Software) .

இயந்திர மென்பொருள்கள் கணினியைத் தயாரிப்பவர்களால் வடிவமைக்கப்பட்டவை. இம்மென்பொருளின் அமைப்புக் குறித்து விரிவாகத் தெரிந்திருக்க வேண்டியதில்லை. ஆனால், பயன்பாட்டு மென்பொருளின் அமைப்புக் குறித்து அறிந்திருக்க வேண்டியது மிகவும் தேவையாகிறது. கணினியைப் பயன்படுத்துவோர் தங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்படும் வழியமைப்புகள் பயன்பாட்டு மென்பொருள் எனலாம். இம்மென்பொருளை வடிவமைப்பவர்கள் வழியமைப்பாளர்கள் (Programmer).

மனிதமொழியான இயற்கை மொழிகளுக்கு அம்மொழி களுக்கே உரித்தான இலக்கண அமைப்பு இருப்பது போன்று

வழியமைப்பை உருவாக்கப் பயன்படுத்தப்படும் உயர்நிலை மொழிகளுக்கும் அம்மொழிகளுக்கே உரித்தான இலக்கண அமைப்பு இருக்கின்றது. இயற்கை மொழியில் சொல்மயக்கம் (Lexical Ambiguity), தொடர் மயக்கம் (Structural Ambiguity) இருந்தால் பொருள்புலப்பாட்டில் சிக்கல் தோன்றுவது போன்று உயர்நிலை மொழிகளில் வடிவமைக்கப்படும் வழியமைப்புகள் மயக்கமறப் பயன்படுத்தும் மொழிக்கே உரித்தான இலக்கண விதிமுறைகளைப் பின்பற்றி வடிவமைக்கப்பட வேண்டும். வழியமைப்பாளர்கள் தாங்கள் மேற்கொண்டுவரும் பணிக்கு ஏற்றவாறு வழியமைப்புகளை உருவாக்கி அவற்றைச் செயலாக்கம் செய்யப் பணித்து நேர்த்தி, துல்லியம் போன்ற பண்புகளைக் கொண்ட விடைகளை வேகமாகப் பெற்றுப் பயனடைகின்றனர் (Ahmad: 1985: 22).

கணினியியலில் வழியமைப்பு வடிவமைத்தல் ஆற்றோட்டம் போன்றதொரு செயலோட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிலை இருந்தாலும் மறைமுகமாகச் செயல்படும் நிலையும் இருந்துவருவதைக் காணலாம். எனவேதான் உயர்தரமான (High Quality) வழியமைப்புகளை எவ்வாறு வடிவமைக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்வதில் அதிக முனைப்புக் காட்டுவர். ஒரு குறிப்பிட்ட வழியமைப்பு, செயலாக்கம் செய்து எதிர்பார்க்கும் வெளியீட்டைத் தகவலாகத் தரும் வல்லமையைப் பெற்றிருந்தாலும் வழியமைப்புத் தருக்க நெறிமுறைகளைப் பின்பற்றாமல் உருவாக்கப்பட்டிருந்தால் அது நல்லதொரு வழியமைப்பாகக் கருதப்பட மாட்டாது. எனவே, வழியமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடும் கணினி மொழியியலாளர்கள் வழியமைப்புத் தருக்க நெறிமுறைகளைப் பின்பற்றிக் கணினியின் நினைவகக் கொள்திறனை வீணாக்காமல் சிக்கனமாக நளினமான வழியமைப்பை உருவாக்க வேண்டும்.

புதிது புதிதாகப் பல உயர்நிலை மொழிகள் வெளிவந்து கொண்டிருக்கையில் இம்மொழிகளில் ஆளுமையுள்ள மொழியைத் தெரிவு செய்து, பயன்படுத்தி வழியமைப்பை உருவாக்குவதில் அதிக ஆர்வம் காட்டுவர். எனவே, குறிப்பிட்ட வினாவுக்குத் தீர்வுகாண வினா குறித்த வரையறை (Defining the Problem), செயல்திட்ட அமைப்பு (Outline the solution), வழிமுறை வரைவு (Algorithm), குறியீட்டாக்கல் (Coding), பிழைதிருத்தம் (Debugging), சோதித்தல் (Testing and Validation), ஆவணப்படுத்தல் (Documentation), பராமரித்தல் (Maintanance) போன்ற பல துணைநிலைகளை உள்ளடக்கிய வழியமைப்பு வடிவமைப்பதில் அதிகக் கவனம்

செலுத்துவர். ஒரு வழியமைப்பு வடிவமைப்பதற்குத் தொடங்குவதற்கு முன்னர் வினாவை நன்றாகப் புரிந்து கொண்டு அவ்வினாவைச் சிறு சிறு பகுதிகளாகப் பகுத்து அச்சிறு சிறு பகுதிகளுக்குத் தீர்வு கண்ட பின்னர், ஒட்டுமொத்தமான வழியமைப்பைச் செயலாக்கம் செய்யப் பணிப்பர் (Lewis 1989: 173).

உயர்நிலை மொழிகளின் எழுத்துக் குழுக்களை (Character Set) நோக்குமிடத்து அவற்றை,

1. அகர எழுத்துகள் (Alphabets)
2. எண் எழுத்துகள் (Numbers)
3. சிறப்பு எழுத்துகள் (Special Characters) என வகைப்படுத்தலாம்.

அகர எழுத்துகள். A-Z வரையிலான பெரிய மற்றும் சிறிய எழுத்துகளாலானவை. எண் எழுத்துகள் 0-9 வரையிலான 10 எழுத்துகளாலானவை. சிறப்பு எழுத்துகள் கணித இயக்கி (Arithmetic Operator), தொடர்பு இயக்கி (Relational Operator) மற்றும் பிற எழுத்துகளை உள்ளடக்கியவை.

கணினியின் செயலாக்கத்திற்கென வடிவமைக்கப்படும் வழியமைப்புகள் உயர்நிலை மொழிகளைப் பயன்படுத்தி வடிவமைக்கப்படுகின்றன. இவ்வழியமைப்பு வழுவற்றதாகவும் நேர்த்தியாகவும் இருக்க வேண்டும். பயன்படுத்தும் உயர்நிலை மொழியின் இலக்கண விதிமுறைகளுக்குட்பட்டு இருந்தால்தான் வழியமைப்பு, செயலாக்கம் செய்து உரிய தகவலைக் கணினியிலிருந்து பெறமுடியும். வழியமைப்பு ஆணைத் தொடர்கள் (Statement) மாறி (Variable), மாறிலி (Constant), இயக்கி (Operator) போன்ற மொழிக் கூறுகளைப் பயன்படுத்தி வடிவமைக்கப்படுகின்றன.

மாறி (Variable)

வழியமைப்பாளர் வடிவமைக்கும் வழியமைப்புகளில் பயன்படுத்தப்படும் எண்களையோ அல்லது எழுத்துகளையோ அல்லது எழுத்துகளாலான எழுத்துக்கோர்வைகளையோ(String) குறிப்பிடும் ஒரு குறியீட்டுப் பெயர் (Symbolic Name) மாறியாகும். இருவகையான மாறிகள் உள்ளன.

1. எண்மாறி (Numeric variable)
2. எழுத்து மாறி (String variable).

எழுத்து மாறி எழுத்து மதிப்பைப் பெற்றுவரும். இயற்கை

மொழியாய்வில் பயன்படுத்தும் மாறிகள் எழுத்துமாறிகளாக இருப்பதால் எழுத்து மாறியின் அமைப்பு விதிகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அமைப்பு விதிகள் உயர்நிலை மொழிக்கு மொழி மாறுபட்டுக் காணப்படும். சான்றாக வழியமைப்புகளில் முக்கியச் சொற்களையும் (Reserved Words) கட்டளைச் சொற்களையும் (Commands) மாறிகளாகப் பயன்படுத்தக் கூடாது. Noun$ = "puttakam" எனக் குறிப்பிடுகையில் Noun$, புத்தகம் என்ற மதிப்பைக் குறிப்பிடும். எனவே இதனை, மாறி பெயர் என்றும் இனக்குறியீடு என்றும் குறிப்பிடுவர். புத்தகம் என்ற மதிப்பைக் கொடுக்காத நிலையில் Noun$ இன் மதிப்பு சுழியாக (பூச்சியமாக) இருக்கும்.

இயற்கை மொழியாய்வு உரைத்தரவுகளில் மேற்கொள்வதால் எழுத்து மாறிகள் பெரிதும் பயன்படுத்தக் காணலாம். வழியமைப்பு வடிவமைப்பின் போதும் எழுத்துமாறிகளைத் தெரிவு செய்யும் போதும் அவை ஏற்றுக் கொள்ளும் மதிப்பை உணர்த்தும் வண்ணம் தெரிவு செய்ய வேண்டும். சான்றாக,

```
10    REM    CONCATENATION OF  TWO STRINGS
20    PRO$   = "avan"
30    VRII$  = "patikkiRaan"
40    SEN$   = PRO$ + "      " + VRII$
50    PRINT SEN$
60    END
```

avan patikkiRaan

PRO$, VRII$, SEN$ என்ற எழுத்து மாறிகள் முறையே மாற்றுப் பெயர் (Pronoun) வினைச்சொல் தொகுதியின் 11ஆம் வகையைச் சார்ந்த வினை, சொற்றொடர் (Sentence) என்பதைக் குறிப்பனவாக இடம் பெற்றுள்ளன. இவ்வாறு தொடர்புடைய எழுத்துமாறிகளைப் பயன்படுத்தாமல் வேறுவடிவிலான எழுத்து மாறிகளைப் பயன்படுத்தலாம் என்ற நிலை இருந்தாலும் அது பயன்படுத்துவோருக்குத் தெளிவற்றதொரு நிலையை ஏற்படுத்தும். இவ்வாறு தெளிவற்ற ஒரு நிலையைத் தவிர்த்துத் தெளிவாக எளிதில் புரிந்து கொள்ள வசதியான எழுத்து மாறிகளைப் பயன்படுத்துவதை மனிதநேயப்பண்பாகக் கொள்ளலாம். வழியமைப்பின் உட்பகுதியில்

பயன்படுத்தும் எழுத்து மாறிகள் அக ஆவணப்படுத்தலைச் சார்ந்தவை.

வழியமைப்பாளர்கள் எதையும் மறைக்காமல் யார் வேண்டுமானாலும் வழியமைப்பைத் திரைப்படியாகவோ (Soft Copy) அல்லது அச்சுப்படியாகவோ (Hard Copy) எடுத்து, அதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மாறிகளையும் அம்மாறிகள் உணர்த்தும் மதிப்பையும் எளிதில் புரிந்து கொள்ள வசதியாக வழியமைப்பை வடிவமைக்க வேண்டும். அவ்வாறு வடிவமைக்கும் நிலையில் வழியமைப்பாளர் பெற்ற மனமகிழ்வை வழியமைப்பைப் பயன்படுத்துபவர்களும் பெறுவர். இது மனிதநேயத்தை வெளிப்படுத்துவதாக அமையும். வழியமைப்புகளில் காணப்படும் ஊடாட்டம் (Interaction) பயனாளரின் (User) தோழமையான அமைப்பை (User Friendly System) உருவாக்கும்.

******

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

இலக்கிய இதழ்கள்	110.00
இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் - தொகுதி 3	60.00
தமிழில் பிற துறைக் கோட்பாட்டாய்வுகள்	25.00
வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை	25.00
இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி	35.00
தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின் தமிழ்த் தொண்டும் மொழியல்பங்களிப்பும்	40.00
பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும்	80.00
தமிமெனப்படுவது	115.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியில்	105.00
வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பெடுகளும்	70.00
தொல்லியல் நோக்கில் சங்ககாலம்	45.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி. 500 வரை)	45.00
உலகத் தமிழிலக்கி வரலாறு (கி.பி. 501 - கி.பி. 900)	70.00
பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்	35.00
திருமணம் செல்வக்கேசவராய முதலியார்	30.00
அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார்	55.00
சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார்	40.00
மூதறிஞர் மு. இராகவையங்கார்	40.00
ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு	30.00
தணிகையமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை	50.00
அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா	50.00
ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாராத்தார்	45.00
விவிலியத் தமிழ்	40.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி - 1	80.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி - 2	85.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி - 3	95.00
திராவிட மொழி இலக்கியங்கள்	180.00
நாவல்கலையியல்	50.00
சங்கரநமச்சிவாயர்	60.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	40.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி	60.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00
தமிழ்க் கடல் இராய. சொக்கலிங்கம்	30.00

532. தமிழிலக்கியத்தில் மனிதநேயம் 115.00